பெரியபுராணம் உரை

VOL-5

சிவபரஜ

இல்லையன்ஸ்

கல்கி:- உண்மையில் இந்தப் புத்தக வெளியீட்டை ஓர் வியாபார விஷயமாகச் சொல்வதற்கே இல்லை. அல்லயன்ஸார் தமிழ்நாட்டுக்குச் செய்துகொண்டிருக்கும் ஓர் அரும் பெரும் தொண்டு என்றுதான் சொல்ல வேண்டும்... தமிழ் நாட்டில் மறுமலர்ச்சி இயக்கம் புத்தக பைண்டுத் தொழிலுக்குக்கூட ஏற்பட்டிருக்கிற தென்பதற்கு அல்லயன்ஸ் புத்தங்கள் அத்தாட்சி.

SUNDAY TIMES:- The Alliance Co., that enterprising publisher of Madras deserves the thanks of all book lovers for service to the language.

சக்தி:- தமிழிலக்கிய நவமலர்ச்சியின் கொழுந்து அல்லயன்ஸாரின் நூல்கள். இது உபசாரமல்ல, உண்மை.

பாரத மணி:- தமிழ் நாட்டில் இது வரையில் இத்தகைய நூல்கள் வெளி வந்ததில்லை. புத்தகங்களின் அமைப்பு மிகவும் சிறந்து விளங்குகின்றது. தமிழுலகம் நவயுகத்தில் முன்னேற்றமடைவதற்குரிய வழிகளில் உழைத்து மாசற்ற சேவை செய்து வருகின்றனர் அல்லயன்ஸ் கம்பெனியார்.

ஈழகேசரி:- தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஊக்கம் குன்றாது உழைத்து வரும் அல்லயன்ஸ் கம்பெனியாரை ஒவ்வொரு தமிழனும் பாராட்ட வேண்டும்.

ஹநுமான்:- எவ்வளவோ பொருள்களைச் சந்ததியின் ஞாபகத்திற்காக வைத்து விட்டுப் போகிறோம். இன்றைய தமிழ் முன்னேற்றத்தின் அறிகுறியாக அல்லயன்ஸ் புத்தகங்களைச் சந்ததிகளிடம் நாம் பெருமையுடன் விட்டுச் செல்லலாம்.

ஸ்ரீ ராமகிருஷ்ண விஜயம்:- நமது நாட்டு மக்களுக்குக் கலைப் பயிற்சியையும் ஞான உணர்ச்சியையும் ஊட்டுவதில் முனைந்து ஈடுபட்டுள்ள நமது அல்லயன்ஸ் கம்பெனியார், மிகுந்த ஊக்கத்துடன் சிறந்த புத்தகங்களைச் சுத்தமாகவும், அழகாகவும் பதிப்பித்துக் கொண்டிருப்பது பாராட்டத் தக்கது.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-600 004.

'வாகீச கலாநிதி' கி. வா. ஜ. அவர்கள் எழுதிய

பெரிய புராண விளக்கம்

இந்நூல் சுமார் இருபது பகுதிகளுக்கு மேல் வெளிவர உள்ளது. தமிழன்பர்கள் எப்போதும் அளிப்பது போல் இப்புத்தகத்திற்கும் தக்க ஊக்கம் தர வேண்டுகிறோம்.

முதற் பகுதியில்:- சேக்கிழார் வரலாறு, பாயிரம், திருமலைச் சிறப்பு, திருநாட்டுச் சிறப்பு, திருநகரச் சிறப்பு, திருக்கூட்டச் சிறப்பு ஆகியவையும்;

இரண்டாவது பகுதியில்:- தடுத்தாட் கொண்ட புராணமும் (இது சுந்தரமூர்த்தி நாயனார் புராணம்);

மூன்றாவது பகுதியில்:- தில்லைவாழ் அந்தணர் புராணம், திருநீலகண்ட நாயனார் புராணம், இயற்பகை நாயனார் புராணம், இளையான்குடி மாற நாயனார் புராணம், மெய்ப்பொருள் நாயனார் புராணம், விறன்மிண்ட நாயனார் புராணம், அமர்நீதி நாயனார் புராணம், எறிபத்த நாயனார் புராணமும்;

நான்காவது பகுதியில்:- ஏனாதி நாயனார் புராணம், கண்ணப்ப நாயனார் புராணம், குங்குலியக்கலய நாயனார் புராணம், மானக்கஞ்சாற நாயனார் புராணமும்;

ஐந்தாவது பகுதியில்:- அரிவாட்டாய நாயனார் புராணம், ஆனாய நாயனார் புராணம், மூர்த்தி நாயனார் புராணம், முருக நாயனார் புராணம், உருத்திர பசுபதி நாயனார் புராணம், திருநாளைப் போவார் நாயனார் புராணம், திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம், சண்டேசுர நாயனார் புராணமும்;

ஆறு, ஏழாம் பகுதிகளில்:- திருநாவுக்கரசு நாயனார் புராணம் அடங்கியுள்ளன.

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை-600 004

பெரிய புராண விளக்கம்

பகுதி - 5

கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபால் பெட்டி எண் 617
மயிலாப்பூர் :: சென்னை-600 004

BIBLIOGRAPHICAL DAT

1.	Title of the Book	:	Periya Purana Vilakkam Vol. - 5
2.	Author	:	Ki. Va. Jagannathan, M.A.
3.	Language	:	Tamil
4.	Date of Publication	:	December, 1989
5.	Copy Right Holder	:	Author
6.	Paper used	:	10.9 kg. D/Cr. white printing
7.	Size of the Book	:	18-5 cms × 12,5 cms
8.	Printing point used	:	10 Point
9.	Number of pages	:	564 pages
10.	Number of Copies	:	1,100 Copies
11.	Artist	:	Muthu
12.	Printer	:	Kalainila Achagam Madras
13.	Binding	:	Card Board Binding
14.	Price	:	Rs. 48-00
15.	Publisher (with full address)	:	The Alliance Company 244, R. K. Mutt Road Post Box No. 617 Mylapore, Madras-600 004 Phone : 71314
16.	Subject		Appreciative Commentary of "Periya Puranam"

நூற்றாண்டை நோக்கி ......

"தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ. வி. குப்புசாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்."

—மகாத்மா காந்தி

"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழிபெயர்ப்புகளையும், இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டு வரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகிறேன்."

—மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர்

"Books published by Alliance Company are highly Popular Books."

—Rt. Hon'ble V. S. Srinivasa Sastri

"தமிழில் அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டுகிறேன்."

—சக்கரவர்த்தி ராஜகோபாலாச்சாரியார்

"அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்புகிறேன்."

—சத்தியமூர்த்தி

"மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ்நாட்டுக்குப் பலவழிகளிலும் பயன் விளைத்து வருவது கண்கூடு. நாட்டு நலங்கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக."

—திரு. வி. க.

பொருளடக்கம்

1. அரிவாட்டாய நாயனார் புராணம் ... 5
2. ஆனாய நாயனார் புராணம் ... 32
3. மூர்த்தி நாயனார் புராணம் ... 83
4. முருக நாயனார் புராணம் ... 144
5. உருத்திர பசுபதி நாயனார் புராணம் ... 166
6. திருநாளைப் போவார் நாயனார் புராணம் ... 180
7. திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்... 230
8. சண்டேசுர நாயனார் புராணம் ... 453
9. சிறப்புப் பெயர் முதலியவற்றின் அகராதி ... 550

அரிவாட்டாய நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 3-ஆவதாக விளங்கும் இலைமலிந்த சருக்கத்தில் ஆறாவதாக அமைந்திருப்பது அரிவாட்டாய நாயனார் புராணம். அதில் வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'ஓடி வரும் நீர் நிறைந்து பொன்னைக் கொழிக்கும் காவிரியாறு பாயும் சோழ நாட்டில் விளங்கும் மக்கள் இனிது வாழும் ஓர் ஊர், அரும்புகள் வண்டுகளோடு சுற்றி ரீங்காரம் செய்ய யாவரும் விருப்பத்தை அடையும் மெல்லிய கணுக்களை உடையவையாகி இவைகளை விட்டு உயரமாக வளரும் கரும்புச் செடிகள் தேனைச் சொரியும் கணமங்கலம் என்பது.'

பாடல் வருமாறு:

> "வரும்பு னற்பொன்னி நாட்டொரு வாழ்பதி
> சுரும்பு வண்டொடு சூழ்ந்து முரன்றிட
> விரும்பு மென்கண் உடையவாய் விட்டுநீள்
> கரும்பு தேன்சொரி யும்கண மங்கலம்."

வரும்-ஓடி வரும். புனல்-நீர் நிறைந்து. பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரியாறு பாயும்; "பொன்னி பொன் கொழிக்கும்." என வருவதைக் காண்க. நாட்டு-சோழ நாட்டில் விளங்கும். ஒரு வாழ்பதி-மக்கள் இனிது வாழும் ஓர் ஊர். சுரும்பு-சுரும்பு என்னும் வண்டுகள்;

ஒருமை பன்மை மயக்கம். வண்டொடு-வண்டுகளோடு; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்து-சுற்றிவந்து. முரன்றிட-ரீங்காரம் செய்ய. விரும்பு-யாவரும் விருப்பத்தை அடையும். மென்-மென்மையான. கண்-கணுக்களை; ஒருமை பன்மை மயக்கம். உடையவாய்-பெற்றவையாகி. விட்டு-இவைகளைப் பரவ விட்டு. நீள்-உயரமாக வளரும். கரும்பு-கரும்புச் செடிகள்; ஒருமை பன்மை மயக்கம். தேன் சொரியும்-தேனைப் பொழியும். கணமங்கலம்-கணமங்கலம் என்பது.

பிறகு வரும் 2-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சம்பா நெற் பயிர்கள் நிரம்பி வளரும் வயல்களில் களைகளாக எடுத்து எறிந்த செந்தாமரை மலர்களைத் தங்களுக்கு முன்னால் சங்குப் பூச்சிகள் உமிழும் முத்துக்களைப் பொழிய அந்த வயல்களில் பணி புரிய வந்திருக்கும் உழவர்கள் தங்களுடைய கைகளின் மேல் எடுத்துக் கொண்டு காட்சி அளிப்பார்கள்; அவர்கள் நிலை பெற்று விளங்கும் பதுமநிதியைப்போல இருப்பார்கள்.' பாடல் வருமாறு:

> **" செந்நெல் ஆர்வயல் கட்டசெந் தாமரை**
> **முன்னர் நந்துமிழ் முத்தம் சொரிந்திடத்**
> **துன்னு மள்ளர்கைம் மேற்கொண்டு தோன்றுவார்**
> **மன்னு பங்கய மாநிதி போன்றுளார்."**

செந்நெல்-சம்பா நெற்பயிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்-நிரம்பி வளரும். வயல்-வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். கட்ட-களைகளாகப் பறித்து எறிந்த. செந்தாமரை-செந்தாமரை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். முன்னர்-தங்களுக்கு முன்னால். நந்து-சங்குப்பூச்சிகள்; ஒருமை பன்மை மயக்கம். உமிழ்-உமிழும். முத்தம்-முத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். சொரிந்திட-பொழிய. த் : சந்தி. துன்னு-அந்த வயல்களில் பணிபுரிய வந்திருக்கும். மள்ளர்-உழவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கைம்மேல்-தங்களுடைய கைகளின் மேல். கை: ஒருமை பன்மை மயக்கம். கொண்டு-எடுத்துக் கொண்டு. தோன்றுவார்-காட்சி

அளிப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம். மன்னு-நிலை பெற்று விளங்கும். பங்கயமாநிதி-பெருமையைப் பெற்ற பதுமநிதியை. சங்கநிதி, பதும நிதி என்ற இரண்டும் குபேர னிடத்தில் உள்ளவை. போன்று-போல. உளார்-அந்த உழவர் கள் இருப்பார்கள்; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை.

பிறகு வரும் 3-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களோடு நெடுங்காலமாக விளங்கும் ஊராகிய அந்தக் கணமங்கலத்தில் வண்டுகள் ரீங்காரம் செய்யும் கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்னும் ஐந்து பகுதிகளைப் பெற்ற கூந்தல்களை உடையவர்களாகிய பெண்களினுடைய முகங்களிலும், கழுத்துக்களின் மேலும் கயல் மீன்கள் துள்ளிப் பாயும் வயல்களுக்குப் பக்கத்தில் உள்ள குளங்களில் நீளமாக இருக்கும் தழைகளைப் பெற்ற நீலோற்பல மலர்கள் இருக்கும்.' பாடல் வருமாறு:

" வளத்தில் நீடும் பதிஅதன் கண்வரி
உளர்த்தும் ஐம்பால் உடையோர் முகத்தினும்
களத்தின் மீதும் கயல்பாய் வயலயல்
குளத்தும் நீளும் குழையுடை நீலங்கள்."

வளத்தில்-நீர்வளம், நிலவளம், செல்வவளம், நன்மக் கள் வளம் முதலிய வளங்களோடு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். நீடும்-நெடுங்காலமாக விளங்கும். பதி-ஊரா கிய. அதன்கண்-அந்தக் கணமங்கலத்தில். வரி-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். உளர்த்தும்-ரீங்காரம் செய்யும். ஐம்பால்-கொண்டை, குழல், பனிச்சை, முடி, சுருள் என்னும் ஐந்து பகுதிகளைப் பெற்ற கூந்தல்களை; ஒருமை பன்மை மயக்கம். பால்: ஒருமை பன்மை மயக்கம். உடையோர்-உடையவர்களாகிய பெண்மணிகளினுடைய; ஒருமைபன்மை மயக்கம். முகத்தினும்-வதனங்களிலும்; ஒருமைபன்மை மயக் கம். களத்தின்-கழுத்துக்களின்; ஒருமை பன்மை மயக்கம். மீதும்-மேலும். கயல்-கயல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பாய்-துள்ளிப் பாயும். வயல்-வயல்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அயல்-பக்கத்தில் உள்ள. குளத்தும்-குளங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். நீளும்-நீளமாக இருக்கும். குழை-மகளிர்களின் வதனங்களுக்கு அருகில் உள்ள காதுகளில் குழைகள்; ஒருமை பன்மை மயக்கம். உடை-பெற்ற. நீலங்கள்-மகளிரின் முகங்களில் நீலோற்பல மலர்களைப் போன்ற கண்கள்: இருக்கும். குளங்களில் தழைகளை உடைய நீலோற்பல மலர்கள் வளர்ந்திருக்கும். இது பெண்களின் முகங்களுக்கும் குளங்களுக்கும் சிலேடை. கயல்-கயல் மீனைப் போன்ற கண்கள்; ஒருமை பன்மை மயக்கம். உவம ஆகுபெயர். குழை-காதில் அணியும் குழைகள்; ஒருமை பன்மை மயக்கம். தழைகள்: ஒருமை பன்மை மயக்கம். நீலங்கள்-நீலோற்பல மலர்களைப் போன்ற கண்கள்; உவமஆகு பெயர். இவை பெண்களிடம் உள்ளவை. மற்றொரு பொருள் நீலோற்பல மலர்கள்; இவை குளத்தில் உள்ளவை.

பிறகு வரும் 4-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தப் பல குடும்பங்கள் வாழும் ஊராகிய கணமங்கலத்தில் தரும வழிக்கு ஏற்ற பெருமையைப் பெற்ற இல்லற வாழ்க்கையில் இருந்து வாழ்ந்தார்; தொகுதியாக அமைந்த பெரிய செல்வத்தைப் பெற்ற பழைய நிலையில் ஓங்கியுள்ள மிகுதியாக அமைந்த செல்வத்தைப் பெற்ற வேளாளர்களினுடைய தலைமைப் பதவியில் உள்ளவர் (அரிவாட்டாய நாயனார்.)' பாடல் வருமாறு:

" அக்கு லப்பதி தன்னில் அறநெறித்
தக்க மாமனை வாழ்க்கையில் தங்கினார்
தொக்க மாநிதித் தொன்மையில் ஓங்கிய
மிக்க செல்வத்து வேளாண் தலைமையார்."

அக்குலப்பதி தன்னில்—அந்தப் பல குடும்பங்கள் வாழும் ஊராகிய கணமங்கலத்தில். தன்: அசைநிலை. குல: ஒருமை பன்மை மயக்கம். அறநெறி-தருமவழிக்கு. த்: சந்தி. தக்க-ஏற்ற. மா-பெருமையைப் பெற்ற. மனை வாழ்க்கையில்-இல்

லற வாழ்க்கையில். தங்கினார்-இருந்து வாழ்ந்தார். தொக்க-தொகுதியாக அமைந்த. மா-பெரிய. நிதி-செல்வத்தைப் பெற்ற. த்: சந்தி. தொன்மையில்-பழைய நிலையில். ஓங்கிய-ஓங்கியுள்ள.மிக்க-மிகுதியாக அமைந்த. செல்வத்து-செல்வத்தைப் பெற்ற. வேளாண்-வேளாளர்களினுடைய; திணை மயக்கம். தலைமையார்-தலைமைப் பதவியில் உள்ளவர் (அரிவாட்டாய நாயனார்.)

பிறகு வரும் 5-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் தலைவர் தாயனார் என்று கூறும் திருநாமத்தைத் தாங்கியிருப்பவர்; நீண்ட காலம் தொடர்ந்து தேடியும் தெளிவு இல்லாத மாயனாராகிய திருமாலார் நிலத்தைத் தோண்டியும் தெரிந்து கொள்ளாத அந்தப் பரிசுத்தமான அன்றலர்ந்த செந்தாமரை மலர்களைப் போன்ற சிவபெருமானுடைய திருவடிகளைத் தொடர்ந்து பற்றிக் கொண்டு இருப்பவர்.' பாடல் வருமாறு:

"தாய னார்எனும் நாமம் தரித்துளார்;
சேய காலம் தொடர்ந்தும் தெளிவிலா
மாய னார்மண் கிளைத்தறி யாதஅத்
தூய நாண்மலர்ப் பாதம் தொடர்ந்துளார்."

தாயனார் எனும்-தாயனார் என்று கூறும். எனும்: இடைக்குறை. நாமம்-திருநாமத்தை. தரித்துளார்-தாங்கி இருப்பவர். உளார்:இடைக்குறை.சேயகாலம்-நீண்ட காலம். தொடர்ந்தும்-தொடர்ந்து தேடியும். தெளிவு-தெளிதல். இலா-இல்லாத; இடைக்குறை. மாயனார்-திருமாலார். மண்-நிலத்தை. கிளைத்து-தோண்டியும். அறியாத-தெரிந்து கொள்ளாத. அத்தூய-அந்தப் பரிசுத்தமாக உள்ள. நாள்-அன்றலர்ந்த. மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாதம்-சிவபெருமானுடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். தொடர்ந்துளார்-தொடர்ந்து பற்றிக் கொண்டிருப்பவர். உளார்; இடைக்குறை.

அடுத்து உள்ள 6-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'மின்னலைப்போல மின்னுகின்ற சிவந்த சடா பாரத்தைத் தம்முடைய தலையின் மேற்பெற்ற அந்தணராகிய சிவபெருமானாருக்கு உரியவை ஆகும் என்று எண்ணி சம்பா நெற்களைக் குத்திய அரிசிகளால் ஆன இனிய சுவைபெற்ற திருவமுதோடு சிவந்த நிறத்தைக் கொண்ட கீரையையும், மாமரத்தில் இருக்கும் பசுமையான தளிர்களோடு கூடிய மாவடுக்களையும் கொண்டு வந்து அவற்றை எந்த நாளிலும் திருவமுதாக வைத்து நிவேதனம் செய்வார் அந்தத் தாயனார்.' பாடல் வருமாறு:

"மின்னு செஞ்சடை வேதியர்க் காம்என்று
செந்நெல் இன்னமு தோடுசெங் கீரையும்
மன்னு பைந்துணர் மாவடு வும்கொணர்ந்
தன்ன என்றும் அமுதுசெய் விப்பரால்."

மின்னு-மின்னலைப் போல மின்னுகின்ற. செஞ்சடை-சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற. வேதியர்க்கு-அந்தணராகிய சிவபெருமானாருக்கு. ஆம்-உரியவை ஆகும். என்று-என்று எண்ணி. செந்நெல்-சம்பா நெற்களைக் குத்திய அரிசிகளால் ஆன. நெல்: ஒருமை பன்மை மயக்கம்; ஆகு பெயர். இன்-இனிய சுவையைப் பெற்ற. அமுதோடு-திருவமுதோடு. செங் கீரையும்-சிவந்த நிறத்தைக் கொண்ட கீரையையும். மன்னு-மாமரத்தில் இருக்கும். பைம்-பசுமையாகிய. துணர்-தளிர்களோடு கூடிய; ஒருமை பன்மை மயக்கம். துணர்-காய்க் கொத்துமாம். மாவடுவும்-மாவடுக்களையும்; ஒருமை பன்மை மயக்கம். கொணர்ந்து-தாயனார் கொண்டு வந்து. அன்ன-அவற்றை. என்றும்-எந்த நாளி லும். அமுது செய்விப்பர்-திருவமுது செய்யுமாறு

செய்வார்; நிவேதனம் செய்வார் என்பது கருத்து. ஆல்: ஈற்றசை நிலை.

சிவபெருமானுடைய சடாபாரத்துக்கு மின்னலை உவமையாகச் சொல்லும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. சிவபெருமானாரை வேதியர் என்று குறிப்பிடும் இடங்களையும் முன்பே ஓரிடத்தில் காட்டினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

பிறகு வரும் 7-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இத்தகைய நல்ல நிலை துன்பத்தைத் தரும் வறுமை தம்மை வந்து அடைந்தாலும் தம்முடைய திருவுள்ளத்திலிருந்து அகலாத செயலைச் செய்வதில் மகிழ்ச்சியை அடைந்து இட்டு வர, பழையவை ஆகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களுக்கும் முதல்வராகிய சிவபெருமானார் அந்தத் தாயனாரிடத்தில் அமைந்திருந்த செல்வத்தை அவர் தெரிந்து கொள்ளாதபடி போகச் செய்தருளினார்.' பாடல் வருமாறு:

"இந்த நன்னிலை இன்னல்வந் தெய்தினும்
சிந்தை நீங்காச் செயலின் உவந்திட
முந்தை வேத முதல்வர் அவர்வழி
வந்த செல்வம் அறியாமை மாற்றினார்."

இந்த-இத்தகைய. நல்-நல்ல. நிலை-தாம் ஆற்றி வரும் நிலை. என்றது சோற்றையும் கீரையையும் மாவடுவையும் சிவபெருமானுக்கு நிவேதனம் செய்வதை. இன்னல்-துன்பத்தைத் தரும் வறுமை; ஆகுபெயர். வந்து எய்தினும்-தம்மை வந்து அடைந்தாலும். சிந்தை-தம்முடைய திருவுள்ளத்திலிருந்து நீங்கா-அகலாத. ச்: சந்தி. செயலின் - அதைச் செய்வதில். உவந்து-மகிழ்ச்சியை அடைந்து. இட-நிவேதனம் செய்து வர. முந்தை-பழையவை ஆகிய. வேத-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களுக்கும்; ஒருமை

பன்மை மயக்கம். முதல்வர்-முதல்வராகிய சிவபெருமானார். அவர்வழி-அந்தத் தாயனாரிடத்தில். வந்த-அமைந்திருந்த. செல்வம்-செல்வத்தை. அறியாமை-அந்த நாயனார் தெரிந்து கொள்ளாதபடி. மாற்றினார்-போகச் செய்தருளி னார்.

சிவபெருமானாரை வேத முதல்வர் என்று குறிப்பிடும் இடங்களை முன்பே வேறோரிடத்தில் கூறினோம். ஆண்டுக் கண்டுணர்க.

அடுத்து வரும் 8-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்மிடம் அமைந்திருந்த செல்வம் யானை நோயால் வெறுமையாக்கப்பட்ட விளாம்பழம் என்ன ஆகுமோ அத்தகைய நிலை தமக்கு உண்டாகி அழிந்து போகவும் பக்தியினால் பிரதிமையைப் போன்ற உமாதேவியைத் தம் வாம பாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் சிவபெருமா னாருக்குத் தாம் முன்னால் செய்து பழகிய அந்தக் கேடு இல்லாத செயலிலிருந்து தாயனார் அகல்வதை இல்லாத வராக விளங்கினார்.' பாடல் வருமாறு:

"மேவு செல்வம் களிறுண் விளங்கனி
ஆவ தாகி அழியவும் அன்பினால்
பாவை பங்கர்க்கு முன்பு பயின்றஅத்
தாவில் செய்கை தவிர்ந்திலர் தாயனார்."

மேவு-தம்மிடம் அமைந்திருந்த. செல்வம்-நிதியம். களிறு-யானை நோயால்; ஆகுபெயர். உண்-வெறுமை யாக்கப்பட்ட. விளங்கனி-விளாம்பழம். ஆவது-அடைகிற நிலை. ஆகி-தமக்கு உண்டாகி. அழியவும்-அழிந்து போக வும். அன்பினால்-பக்தியினால். பாவை-பிரதிமையைப் போன்ற உமாதேவியை. பங்கர்க்கு-தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் சிவபெருமானா ருக்கு. முன்பு-வறுமை தம்மை அடைவதற்கு முன்னால். பயின்ற-செய்து பழகிய. அத்தா-அந்தக் கெடுதல். இல்— இல்லாத; கடைக்குறை. செய்கை—செயலிலிருந்து.

என்றது சோற்றையும் கீரையையும் மாவடுவையும் சிவ பெருமானுக்கு நிவேதனம் செய்ததை. தாயனார் தவிர்ந்திலர்—தாயனார் தவிர்வது இல்லாதவர் ஆனார்; தவிர்க்க வில்லை என்பது கருத்து.

பெண்களுக்குப் பாவையை உவமை கூறும் இடங் களை முன்பே ஓரிடத்தில் காட்டினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

களிறுண் விளாங்கனி: ''கரியுண் விரிவின்கனிபோல்.'' (திருமந்திரம், 2593) என்று திருமூலர் பாடியருளியதைக் காண்க.

பிறகு உள்ள 9-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'துன்பத்தைத் தரும் வறுமை தமக்கு உண்டாகத் தாயனார் பிறருடைய வயல்களில் கூலிக்கு நெற்கதிர் களை அறுத்து உண்மையாகத் தொடர்ந்து வந்த பக்தியினால் தாம் பெற்ற கூலி நெற்களில் நல்லவையாக இருக்கும் சம்பா நெற்களைக் குத்திக் கிடைத்த அரிசி களையும் கீரையையும் நாயனாராகிய சிவபெருமானாருக்கு விரைவில் இனிய சுவையைப் பெற்ற திருவமுதாகப் படைத்துக் கொண்டு நடந்து வரலானார்.' பாடல் வருமாறு:

'' அல்லல் நல்குர வாயிடக் கூலிக்கு
நெல்அ றுத்துமெய்ந் நீடிய அன்பினால்
நல்ல செந்நெலிற் பெற்றன நாயனார்க்
கொல்லை இன்னமு தாக்கொண் டொழுகுவார்.''

அல்லல்-துன்பத்தைத் தரும். நல்குரவு-வறுமை. ஆயிட-தமக்கு உண்டாக. க்: சந்தி. கூலிக்கு-கூலியைப் பெறும் பொருட்டு. நெல்-பிறருடைய வயல்களில் நெற்கதிர்களை; ஆகுபெயர்; ஒருமை பன்மை மயக்கம். அறுத்து-அறுத்து நெல்லைக் கூலியாகப் பெற்றுக் கொண்டு வந்து. மெய்-உண் மையாக. ந்:சந்தி. நீடிய-தொடர்ந்து வந்த. அன்பினால்-பக்தியினால். நல்ல-நல்லவையாகிய. செந்நெலில்-சம்பாநெற்

களில்; ஒருமை பன்மை மயக்கம். நெலில்: இடைக்குறை. பெற்றன-தாம் கூலியாகப் பெற்ற சம்பா நெற்களைக் குத்திய அரிசிகளைக் கொண்டு. நாயனார்க்கு-தலைவராகிய சிவபெருமானாருக்கு. ஒல்லை-விரைவில். இன்னமுதா-இனிய சுவையைப் பெற்ற திருவமுதாக. க்: சந்தி. கொண்டு-படைத்துக் கொண்டு. ஒழுகுவார்-அந்தத் தாயனார் நடந்து வரலாயினார்.

பின்பு வரும் 10-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'உயர்ந்த நெல்வகையாகிய சாலி என்னும் நெற்பயிர்களின் கதிர்களைப் பிறருடைய வயல்களைத் தேடிச் சென்று அந்த வயல்களில் அறுத்த நெற்கதிர்களுக்குள் தாயனார் தாம் பெற்றுக் கொள்ளும் கூலி நெற்கள் எல்லாவற்றையும் அரிசிகளாகக் குத்தி அவற்றைத் திருவமுதாகச் சமைக்கச் செய்து சிவபெருமானாருக்குப் படைத்துக் கொண்டு கருமையான குறுவை நெற்கதிர்களை அரிந்ததனால் தாம் பெற்ற கூலியாகிய குறுவை நெற்களைக் குத்தி அரிசிகளாக்கிச் சமைக்கச் செய்து அந்தச் சோற்றைப் பெற்றுக்கொண்டு உண்டு வருகின்ற காலத்தில் திருமாலுக்கும் பிரமதேவனுக்கும் பன்றியுரு எடுத்தும் அன்னப் பறவை வடிவெடுத்தும் முறையே நிலத்தைத் தோண்டிப் பார்த்தும், மேலே பறந்து பார்த்தும் திருவடிகளையும் திருமுடியையும் பார்ப்பதற்கு அரியவராகிய சிவபெருமானார் அந்த நிலையையும் போக்கியருளுவாரானார்.' பாடல் வருமாறு:

" சாலி தேடி அறுத்தவை தாம்பெறும்
கூலி எல்லாம் திருஅமு தாக்கொண்டு
நீல நெல்லரி கூலிகொண் டுண்ணும்நாள்
மால யற்கரி யார்அது மாற்றுவார். "

சாலி-உயர்ந்த நெல்வகையாகிய சாலி என்னும் நெற்பயிர்களின் கதிர்களை; ஒருமை பன்மை மயக்கம்; ஆகு பெயர். தேடி-பிறருடைய வயல்களைத் தேடிச்சென்று. அறுத்தவை-அந்த வயல்களில் அறுத்த நெற்கதிர்களுக்குள். தாம்-

தாயனார் தாம். பெறும்-பெற்றுக் கொள்ளும். கூலி-கூலி நெற்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றையும் அரிசிகளாகக் குத்தி. திரு அமுதா-அவற்றைத் திருவமுதாகச் சமைக்கச் செய்து. க்: சந்தி. கொண்டு-சிவபெருமானாருக்குப் படைத்துக் கொண்டு. நீலநெல்-கருமையான குறுவை நெற்கதிர்களை; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். அரி கூலி-அரிந்ததனால் தாம் பெற்ற கூலியாகிய குறுவை நெற்களைக் குத்தி அரிசிகளாக்கிச் சமைக்கச் செய்து. கொண்டு-அந்தச் சோற்றைப் பெற்றுக்கொண்டு. உண்ணும்-உண்டு வரும். நாள்-காலத்தில். மால்-திருமாலுக்கும். அயற்கு-பிரம தேவனுக்கும். அரியார்-பன்றி உரு எடுத்தும், அன்னப் பறவையின் வடிவை எடுத்தும் முறையே நிலத்தைத் தோண்டிப் பார்த்தும் மேலே பறந்து பார்த்தும் திருவடிகளையும் திருமுடியையும் பார்ப்பதற்கு அரியவராகிய சிவபெருமானார். அது-அந்த நிலையை. மாற்றுவார்-போக்கியருளுவாரானார்.

அடுத்து வரும் 11-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தாயனார் தாம் போன பிறருடைய வயல்கள் யாவும் ஒவ்வொரு நாளும் தம்முன்னாலே பார்க்கும் வண்ணம் சிவப்பான நிறத்தைக் கொண்ட நீளமான கதிர்களைக் கொண்ட சம்பா நெற் பயிர்களாகச் சிவபெருமானார் உண்டாக்கத் தம் திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து பெருமையை உடையவராகிய அந்த நாயனார் தாம் சம்பா நெற்கதிர்களை அறுத்ததனால் கிடைத்த கூலியாகிய சம்பா நெற்களைப் பெற்றுக் கொண்டு தம்முடைய திருமாளிகைக்கு வந்து "இது அடியேன் முற்பிறவியில் புரிந்த புண்ணியச் செயல்களின் பயன்" என எண்ணி அந்த நெற்களை அரிசியாக்கிச் சமைக்கச் செய்து நிரம்ப அந்தச் சோற்றைச் சிவபெருமானாருக்குத் திருவமுது செய்யுமாறு புரிவார் ஆயினார்.' பாடல் வருமாறு:

"நண்ணிய வயல்கள் எல்லாம் நாடொறும் முன்னங் காண
வண்ணவார் கதிர்ச்செஞ் சாலி ஆக்கிட மகிழ்ந்து சிந்தை

அண்ணலார் அறுத்த கூலி கொண் 'டிஃ தடியேன் செய்த
புண்ணியம்' என்று போத அமுதுசெய் விப்பார் ஆனார்."

நண்ணிய-தாயனார் தாம் சென்ற. வயல்கள்-பிறருடைய வயல்கள். எல்லாம்-யாவும். நாடொறும்-ஒவ்வொரு நாளும். முன்னம்-தம்முடைய கண்முன்னால். காண-பார்க்கும் வண்ணம். வண்ண-சிவப்பு நிறத்தைக் கொண்ட. வார்-நீளமான. கதிர்-கதிர்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. செஞ்சாலி-சம்பா நெற்பயிர்களாக; ஒருமை பன்மை மயக்கம். ஆக்கிட-உண்டாக்க. சிந்தை மகிழ்ந்து-அவற்றைப் பார்த்துத் தம் திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து. அண்ணலார்-பெருமையை உடையவராகிய அந்தத் தாயனார். அறுத்த-தாம் சம்பா நெற்கதிர்களை அறுத்ததனால் கிடைத்த. கூலி-கூலியாகிய சம்பா நெற்களை; ஒருமை பன்மை மயக்கம். கொண்டு-பெற்றுக் கொண்டு. இஃது — இது. அடியேன் செய்த-அடியேன் முன் பிறவியில் புரிந்த. புண்ணியம்-புண்ணியச் செயல்களின் பயன்; ஆகு பெயர். என்று-என எண்ணி. போத-நிரம்ப. அமுது-அந்த நெற்களைக்குத்தி அரிசிகளாக்கி அவற்றைச் சமைக்கச் செய்த திருவமுதை. செய்விப்பார்-சிவபெருமானாருக்குத் திருவமுது செய்யுமாறு புரிபவர். ஆனார்-ஆயினார்.

பிறகு வரும் 12-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'ஒவ்வொரு நாளும் தாயனார் தாம் உண்ணுவதற்கு உணவு இல்லாமையால் தம்முடைய திருமாளிகையின் பின்னால் உள்ள தோட்டத்துக்குள் நுழைந்து வருந்துதல் இல்லாத பக்தியோடு இலைகளைப் பறித்துக் கொண்டு வந்து தம்முடைய பத்தினியினுடைய கைகளில் அவற்றை அளித்து அவள் அவற்றை வாங்கிக் கொண்டு சமைக்கும் பாத்திரத்தில் வைத்துச் சமைத்துத் தம்முடைய கணவருக்குப் பரிமாற அவற்றைப் பெருமையையும் தகுதியையும் பெற்றவராகிய தாயனார் உண்டு தங்களுடைய புரியும் கடமை தவறாது

வாறு திருப்பணிகளைப் புரிந்து கொண்டு வரும் காலத்தில்.'

பாடல் வருமாறு:

" வைகலும் உணவிலாமை மனைப் படப்பை யினிற் புக்கு
நைகரம் இல்லா அன்பின் நங்கைகை அடகு கொய்து
பெய்கலத் தமைத்து வைக்கப் பெருந்தகை அருந்தித் தங்கள்
செய்கடன்முட்டா வண்ணம் திருப்பணி செய்யும் நாளில்."

இந்தப் பாடல் குளகம். வைகலும் - ஒவ்வொரு நாளும். உணவு—தாயனார் தாம் உண்ணுவதற்கு உணவு. இலாமை—இல்லாமையால்; இடைக்குறை. மனை—தம்முடைய திருமாளிகையின் பின்னால் உள்ள. படப்பையினில்—தோட்டத்துக்குள். புக்கு—நுழைந்து. நைகரம்—வருந்துதல்; 'குறைதல்' எனலும் ஆம். இல்லா—இல்லாத. அன்பின்—பக்தியோடு. அடகு—இலைகளை; ஒருமை பன்மை மயக்கம். கொய்து—பறித்துக் கொண்டு வந்து. நங்கை—தம்முடைய பத்தினியினுடைய. கை—கைகளில் அவற்றை அளித்து; ஒருமை பன்மை மயக்கம். பெய்—அவள் அவற்றை வாங்கிக் கொண்டு சமைக்கும். கலத்து—பாத்திரத்தில். அமைத்து—வைத்துச் சமைத்து. வைக்க—தம்முடைய கணவருக்குப் பரிமாற. ப்:சந்தி. பெருந்தகை—பெருமையையும் தகுதியையும் பெற்றவராகிய தாயனார். அருந்தி—அவற்றை உண்டு. த்: சந்தி. தங்கள்—தங்களுடைய. செய்—புரியும். கடன்—கடமை. முட்டாவண்ணம்—தவறாதவாறு. திருப்பணி—திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்யும்—புரிந்து கொண்டுவரும். நாளில்—காலத்தில்.

பிறகு வரும் 13-வது பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய திருமாளிகையின் பின்பக்கத்தில் உள்ள இலைகள் இல்லாமற் போக வடக்குத் திசையில் உயரமான வானத்தில் உள்ள நட்சத்திரமாகிய அருந்ததியைப் போன்றவராகிய தாயனாருடைய பத்தினியார் குளிர்ந்த

நீரைத் தம்முடைய கணவருக்கு ஊற்ற அதைக் குடித்து விட்டுப் பக்தராகிய அந்தத் தாயனாரும் தாம் செய்ய வேண்டிய தொழிலுக்குரிய செயல்களைச் செய்து நிறைவேற்றி அவற்றைச் செய்து கொண்டு வாழும் காலத்தில் ஒருதினம் மிகுதியான சிறப்பைப் பெற்ற முதல்வராகிய சிவபெருமானாருடைய திருத்தொண்டராகிய அந்தத் தாயனாருக்கு அவருடைய அந்தத் திருமாளிகையில் நடந்ததைப் பாடப் பாக்கியத்தை அடியேன் அடைந்தேன்." பாடல் வருமாறு:

"மனைமருங் கடகு மாள வடநெடு வான மீனே
அனையவர் தண்ணீர் வார்க்க அமுதுசெய் தன்ப
னாரும்
வினைசெயல் முடித்துச் செல்ல மேவுநாள் ஒருநாள் மிக்க
முனைவனார் தொண்டர்க் கங்கு நிகழ்ந்தது மொழியப்
பெற்றேன்."

இது சேக்கிழார் கூற்று. மனை—தம்முடைய திருமாளிகையின். மருங்கு—பின்பக்கத்தில் இருந்து. அடகு—இலைகள்; ஒருமை பன்மை மயக்கம். மாள—யாவும் தீர்ந்து இல்லாமற் போக. வட—வடக்குத் திசையில். நெடு—உயரமான. வான—வானத்தில் உள்ள. மீனே—நட்சத்திரமாகிய அருந்ததியையே. அனையவர்—போன்றவராகிய தாயனாருடைய பத்தினியார். தண்ணீர்—குளிர்ச்சியான நீரை. வார்க்க—தம்முடைய கணவருக்கு ஊற்ற. அமுதுசெய்து—அதைக் குடித்து விட்டு. அன்பனாரும்—பக்தனாராகிய தாயனாரும். வினை—தாம் செய்ய வேண்டிய தொழிலுக்கு உரிய செயல்—செயல்களை. முடித்து—செய்து நிறைவேற்றி. ச் : சந்தி. செல்ல—அவற்றைச் செய்து கொண்டு போக. மேவும்—வாழும். நாள்—காலத்தில். ஒருநாள்—ஒருதினம். மிக்க—மிகுதியான சிறப்பைப் பெற்ற. முனைவனார்—முதல்வராகிய சிவபெருமானாருடைய. தொண்டர்க்கு—திருத்தொண்டராகிய அந்தத் தாயனாருக்கு. அங்கு.

—அவருடைய அந்தத் திருமாளிகையில். நிகழ்ந்தது— நடந்ததை. மொழிய-பாட. ப்: சந்தி. பெற்றேன் - பாக்கிய த்தை அடியேன் அடைந்தேன்.

கற்புடைய மகளிருக்கு அருந்ததி உவமை: "அவர் தங்கள் மனைவியாரும் அருந்ததிக் கற்பின் மிக்கார்." என்று சேக்கிழாரும், "அருந்ததி அனையாளே." (வனம் புகு படலம், 8), "சீலம் இன்னதென் றருந்ததிக் கருளிய திருவே." (சித்திர கூடப் படலம், 11), "அருந்ததி எனத் தகைய சீதை." (பிலம் நீங்கு படலம், 50), "அருந்ததிக் கற்பின் என்னை யாளுடை நாயகன் தேவியை." (நிந்தனைப் படலம், 62), "அருந்ததி உரைத்தி." (சூடாமணிப் படலம், 6), "அருந்ததி அனைய நங்கை அவ்வழி இருந்தாள்." (இலங்கை காண் படலம், 25), "அருந்ததிக் கற்பினாளுக் கழிவுண்டோ." (மாயா சீதைப் படலம், 96), "அருந்ததி யன்ன நங்கை." (மீட்சிப் படலம், 55) என்று கம்பர் பாடியவற்றையும், "மைதிலி கற்புக் கந்த அருந்ததி கற்பு நாணும்.", "என் கற்பும் அவ் வருந்ததி கற்பும் ஒன்றானது." (அசுவமேத யாகப் படலம், 170, 297) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும், "அருந்ததி அகற்றிய ஆசில் கற்பினாய்." (**சீவக சிந்தாமணி**, 327) என்று திருத்தக்க தேவரும், "பெருநல் வானத்து வடவயின் விளங்கும், சிறுமீன் புரையும் கற்பின் நறுநுதல், வளைக்கை மகடூஉ." (**பெரும்பாணாற்றுப்படை**, 302-4) என்று உருத்திரங்கண்ணனாரும், "அருந்ததி அனைய கற்பின்." (**ஐங்குறுநூறு**, 452), "வடமீன்போல் தொழுதேத்த வயங்கிய கற்பினாள்." (**கலித்தொகை**, 2: 21), "வடமீன் புரையும் கற்பின் மடமொழி அரிவை." (**புறநானூறு**, 122: 8-9), "தீதிலா வடமீனின் திறமிவள் திறமென்று, மாதரார் தொழுதேத்த வயங்கிய பெருங்குணத்துக் காதலாள்.", "வடமீன் கற்பின் மனையுறை மகளிர்." (**சிலப்பதிகாரம்**, 1. 28-30,

229) என்று வேறு புலவர்களும் பாடியவற்றைக் காண்க.

பிறகு வரும் 14-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'முன்பு செய்ததைப் போல எல்லாத் தேவர்களுக்கும் முதல்தேவராகிய சிவபெருமானாரை அமுது செய்தருளுமாறு செய்யத் தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழும் பக்தியைப் போல விளங்கும் பரிசுத்தமான சம்பா நெற்களைக் குத்திய அரிசிகளையும், மாவடுக்களையும், மென்மையான கீரையையும் துன்பம் போகும் திருவுள்ளத்தைப் பெற்ற திருத்தொண்டராகிய தாயனார் ஒரு கூடையில் வைத்துக் கொண்டு சுமந்து கொண்டு செல்ல அந்தத் தாயனாருக்குப் பின்னால் செல்லும் அவருடைய பத்தினியார் பசுமாடு பெற்றுத் தந்த ஐந்து பொருள்களாகிய பஞ்சகவ்வியத்தைத் தம்முடைய வலக்கையில் ஏந்திக் கொண்டு போனார்.' பாடல் வருமாறு:

"முன்புபோல் முதல்வனாரை அமுதுசெய் விக்க மூளும்
அன்புபோல் தூய செந்நெல் அரிசிமா வடுமென் கீரை
துன்புபோம் மனத்துத் தொண்டர் கூடையிற் சுமந்து போகப்
பின்புபோம் மனைவி யார்ஆன் பெற்றஅஞ் செய்திச் சென்றார்."

முன்பு போல்-முன்புதாம் செய்ததைப்போல. முதல்வனாரை-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய சிவபெருமானாரை. அமுது செய்விக்க-அமுது செய்தருளுமாறு புரிவதற்கு. மூளும்-தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழும். அன்பு போல்-பக்தியைப் போல விளங்கும். தூய-பரிசுத்தமாகிய. செந்நெல்-சம்பா நெற்களை; ஒருமை பன்மை மயக்கம். அரிசி-குத்திய அரிசிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். மாவடு-மாவடுக்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையாக உள்ள. கீரை-கீரையையும். துன்பு-துன்பம். போம்-அகன்று போகும். மனத்து-திருவுள்ளத்தைப் பெற்ற.

த்: சந்தி. தொண்டர்-திருத்தொண்டராகிய அந்தத் தாயனார். கூடையில்-ஒரு கூடையில் வைத்துக்கொண்டு. சுமந்து-தம்முடைய தலையின் மேல் சுமந்து கொண்டு. போக-செல்ல. ப்: சந்தி. பின்பு-அவருக்குப் பின்னால். போம்-செல்லும். மனைவியார்-அவருடைய பத்தினியார். ஆன்-பசுமாடு. பெற்ற-பெற்றுத் தந்த. அஞ்சு-கோஜலம், கோமயம், பால், தயிர், வெண்ணெய் என்ற ஐந்தையும். ஏந்தி-தம்முடைய வலக்கையில் ஏந்திக்கொண்டு. ச்: சந்தி. சென்றார்-போனார்.

பிறகு வரும் 15-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு தாயனாரும் அவருடைய பத்தினியாரும் செல்லுகின்ற சமயத்தில் வாட்டத்தை அடைந்து தம்முடைய கால்கள் தளர்ச்சியை அடைந்து தவறிப் போய் விருப்பம் மருவிய அந்தப் பெண்மணியார் வருத்தத்தை அடைந்து தரையில் விழுபவர் பஞ்சகவ்வியத்தை வைத்திருந்த மட்கலமாகிய கலயத்தை மூடும் தம்முடைய கையினால் விருப்பத்தோடு பொத்தியும் அவை முழுவதும் தரைப்பிளப்பில் சிந்திப் போனதைப் பார்த்துப் பூதங்களின் தலைவராகிய சிவபெருமானாருடைய திருத்தொண்டராகிய தாயனார், "இனிமேல் அங்கே செல்வது ஏன்?" என எண்ணி." பாடல் வருமாறு:

"போதரா நின்றபோது புலர்ந்து கால் தளர்ந்து தப்பி
மாதரார் வருந்தி வீழ்வார் மட்கலம் மூடு கையால்
காதலால் அணைத்தும் எல்லாம் கமரிடைச் சிந்தக் கண்டு
பூதநா யகர்தம் தொண்டர், 'போவதங் கினிஏன்?' என்று."

இந்தப் பாடல் குளகம். போதரா நின்ற-அவ்வாறு தாயனாரும் அவருடைய பத்தினியாரும் செல்லுகின்ற. போது-சமயத்தில். கால்-தம்முடைய கால்கள்; ஒருமை பன்மை மயக்கம். தளர்ந்து-தளர்ச்சியை அடைந்து. தப்பி-தவறிப்போய் மாதரார்-விருப்பம் மருவிய அந்தப் பெண்மணியார். வருந்தி-வருத்தத்தை அடைந்து. வீழ்வார்-தரையில் விழுபவர். மட்கலம்-பஞ்சகவ்வியத்தை வைத்திருந்த மட்கலமாகிய கல

யத்தை. மூடு-மூடியிருக்கும். கையால்-தம்முடைய வலக்கை யினால். காதலால்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். அணைத் தும்-அந்தக் கலயத்தின் வாயைப் பொத்திய பிறகும். எல் லாம்-அவ்வ முழுவதும். கமரிடை-தரைப்பிளப்பில். ச்: சந்தி. சிந்த-சிந்திப் போவதை; வினையாலணையும் பெயர். க்: சந்தி. கண்டு-பார்த்து. பூத-பூதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகர்தம்-தலைவராகிய சிவபெருமானாரு டைய. தம்: அசைநிலை. சிவபெருமானார் பூதநாயகர் என்ப தைப் புலப்படுத்தும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறி னோம்; ஆண்டுக் கண்டுணர்க. தொண்டர்-திருத் தொண்ட ராகிய தாயனார். அங்கு-அந்த இடத்திற்கு; என்றது சிவ பெருமானுடைய சந்நிதிக்கு என்பதை. போவது-செல்வது. இனி-இனிமேல். ஏன்-எதற்காக. என்று-என எண்ணி.

அடுத்து வரும் 16-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு நல்லதாகிய சிவந்த கீரையும் பரிசுத்தமாகிய மாவடுக்களும் அரிசிகளும் தரைப்பிளப்பில் விழ, ''துன்பங்க ளைப் போக்கியருளி அடியேனை ஆட்கொள்ள வல்லவரா கிய சிவபெருமானார் திருவமுது புரிந்தருளும் அந்தப் பாக்கி யத்தை வரம்பு இல்லாத தீவினைகளை உடையவனாகிய அடியேன் இந்த இடத்தில் அடையப் பெறவில்லை'' என்று வருந்தி விரைவில் ஓர் அரிவாளை வைத்துத் தம்முடைய கழுத்தை அறுத்துக் கொள்ளலானார் அந்தத் தாயனார்.' பாடல் வருமாறு:

''நல்ல செங் கீரை தூயமாவடு அரிசி சிந்த
'அல்லல்தீர்த் தாள வல்லார் அமுதுசெய் தருளும் அப்பே
றெல்லையில் தீமை யேன்இங் கெய்திடப் பெற்றிலேன்' என்
றொல்லையில் அரிவாள் பூட்டி ஊட்டியை அரிய லுற்றார்.''

நல்ல-அவ்வாறு நல்லதாகிய. செம்-சிவந்த. கீரை-கீரை யும். தூய-பரிசுத்தமாகிய. மாவடு-மாவடுக்களும்; ஒருமை பன்மை மயக்கம். அரிசி-அரிசிகளும்; ஒருமை பன்மை மயக்கம். சிந்த-அந்தத் தரைப் பிளப்பில் விழ. அல்லல்-துன்

பங்களை; ஒருமை பன்மை மயக்கம். தீர்த்து-போக்கியருளி. ஆள்-அடியேனை ஆட்கொள்ள. வல்லார்-வல்லவராகிய சிவபெருமானார். அமுது செய்தருளும்-திருவமுது செய் தருளும். அப்பேறு-அந்தப் பாக்கியத்தை. எல்லை-வரம்பு. இல்-இல்லாத; கடைக்குறை. தீமையேன்-தீவினைகளைச் செய்த அடியேன். தீமை: ஒருமை பன்மை மயக்கம். இங்கு-இந்தத் தரைப்பிளப்பில். எய்திட-அடைய. ப்:சந்தி. பெற்றிலேன்-பெறவில்லை. என்று-என வருந்தி. ஒல்லையில்-விரைவில். அரிவாள்-ஓர் அரிவாளை. பூட்டி-வைத்து. ஊட்டியை-தம்முடைய கழுத்தை. அரியலுற்றார்-அந்தத் தாயனார் அறுத்துக் கொள்ளலானார்.

பிறகு உள்ள 17-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' ''அடியேனை ஆட்கொள்ளும் ஐயராகிய சிவபெருமானார் இந்தத் தரைப்பிளப்பில் திருவமுது செய்திலாரோ?'' என்று வருந்தித் தம்முடைய கழுத்தில் வைத்த அரிவாளைப் பிடித்துக் கொண்டு குற்றம் அறுமாறு கலந்திருக்கும் பக்தியைக் காண்பித்த வழியில் உள்ளே உள்ள பெருநரம்பு அறும் வண்ணம் தம்முடைய கழுத்தினோடு விழுங்குவதற்கு உரிய இடமாகிய முடிச்சையும் அறுத்து நின்று கொண்டிருந்த தாயனார் தமக்கு வந்த இந்த மனிதப் பிறவியை அறுப்பவரைப்போல விளங்கினார்.' பாடல் வருமாறு:

'' 'ஆட்கொள்ளும் ஐயர் தாம்இங் கமுதுசெய் திலர்கொல்'
என்னாப்
பூட்டிய அரிவாள் பற்றிப் புரையற விரவும் அன்பு
காட்டிய நெறியின் உள்ளந் தண்டறக் கழுத்தி னோடே
ஊட்டியும் அரியா நின்றார், உறுபிறப் பரிவார் ஒத்தார்.''

ஆட்கொள்ளும்-அடியேனை ஆட்கொள்ளும். ஐயர்தாம்-ஐயராகிய சிவபெருமானார். தாம்: அசைநிலை. சிவபெருமானாரை ஐயர் என்று குறிப்பிடும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. இங்கு-இந்தத் தரைப்

பிளப்பில். அமுது செயதிலர் கொல்-அமுது செய்திலரோ. என்னா-என்று வருந்தி. ப்: சந்தி. பூட்டிய-தம்முடைய கழுத்தில் வைத்த. அரிவாள்- அரிவாளை. பற்றி-பிடித்துக் கொண்டு. ப்: சந்தி. புரை-குற்றம். அற- அறுமாறு. விரவும்-கலந்திருக்கும். அன்பு-பக்தியை. காட்டிய-தோற்றச் செய்த. நெறியின்- வழியில். உள்ளம் தண்டு-கழுத்துக்கு உள்ளே உள்ள பெரு நரம்பு. அற-அறும்வண்ணம். க்: சந்தி. கழுத்தினோடு-தம்முடைய கழுத்தோடு. ஏ: அசை நிலை. ஊட்டியும்-உணவை விழுங்குவதற்கு உரிய இடமாகிய முடிச்சையும். அரியா-அறுத்துவிட்டு. நின்றார்-நின் கொண்டிருந்தவராகிய தாயனார். உறு-தமக்கு வந்த. பிறப்பு-இந்த மனிதப் பிறவியை. அரிவார்-அறுப்பவரை. ஒத்தார்-போல விளங்கினார்.

பின்பு வரும் 18-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'ஒரு குற்றமும் அற்ற திருவுள்ளத்தைப் பெற்ற பக்தராகிய அந்தத் தாயனார் தம்முடைய கழுத்தை அறுத்துக் கொள்வதற்காக அந்தக் கழுத்தில் வைத்த அரிவாளைப் பிடித்திருக்கும் குற்றம் இல்லாத வண்மையை உடைய தாயனாருடைய கையைத் தடுப்பதற்குச் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் ஐயராகிய நடராஜப் பெருமானார் பக்கத்தில் வீசிய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருக்கரங்களும், மாவடுக்களைக் கடிக்கும், 'விடேல், விடேல்' என்ற சத்தமும் அந்தத் தரைப்பிளப்பிலிருந்தும் ஒன்றாகவே எழுந்து புலனாயின.' பாடல் வருமாறு:

"மாசறு சிந்தை அன்பர் கழுத்தரி அரிவாள் பற்றும்
ஆசில்வண் கையை மாற்ற அம்பலத் தாடும் ஐயர்
வீசிய செய்ய கையும் மாவடு, 'விடேல், விடேல்' என்
னோசையும் கமரில் நின்றும் ஒக்கவே எழுந்த அன்றே."

மாசு-ஒரு குற்றமும். அறு-அற்று. சிந்தை-திருவுள்ளத்தைப்பெற்ற. அன்பர்-பக்தராகிய அந்தத் தாயனார். கழுத்து

-தம்முடைய கழுத்தை. அரி-அறுத்துக் கொள்வதற்காக. அரிவாள்-தம்முடைய கழுத்தில் வைத்த அந்த அரிவாளை. பற்றும்-பிடித்திருக்கும். ஆசு-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. வண்-வண்மையை உடைய. கையை-தாயனாருடைய திருக்கரத்தை. மாற்ற-தடுப்பதற்கு. அம்பலத்து-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் ஆடும்-திருநடனம் புரிந்தருளும். ஐயர்-ஐயராகிய நடராஜப் பெருமானார். வீசிய-பக்கத்தில் வீசிய. செய்ய-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த. கையும்-திருக்கரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். மாவடு-மாவடுக்களைக் கடிக்கும்; ஒருமை பன்மை மயக்கம். விடேல், விடேல் என்-விடேல், விடேல் என்னும். ஓசையும்-சத்தமும். கமரில் நின்றும்-அந்தத் தரைப் பிளப்பிலிருந்தும். ஒக்கவே-ஒன்றாகவே. எழுந்த-எழுந்து புலனாயின. அன்று, ஏ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

பிறகு உள்ள 19-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நடராஜப் பெருமானாருடைய அழகிய திருக்கரம் போய் அரிவாளைப் பிடித்திருக்கும் தாயனாருடைய உறுதியான திருக்கரத்தைப் பிடித்துக் கொண்ட சமயத்தில் அந்த இடத்தில் அச்சத்தோடு இடையூறு அகன்று போக, கொடிய தீவினைகளாகிய பாவங்கள் அவரைவிட்டு அகன்று பெருக்கமாகவே மகிழ்ச்சி நெடுநேரம் இருக்கத் தம்முடைய தலைவனாகிய நடராஜப் பெருமான் தம்மை விரும்பி வழங்கிய திருவருளோடு சேர்ந்த பெரிய கருணையை அறிந்து அந்தத் தாயனார் தம்முடைய திருக்கரங்களை அஞ்சலியாகக் குவித்து நின்று கொண்டு.' பாடல் வருமாறு:

" திருக்கைசென் றரிவாள் பற்றும் திண்கையைப் பிடித்த போது
வெருக்கொடங் கூறு நீங்க வெவ்வினை விட்டு நீங்கிப்
பெருக்கவே மகிழ்ச்சி நீடத் தம்பிரான் பேணித் தந்த
அருட்பெருங் கருணை நோக்கி அஞ்சலி கூப்பி நின்று."

இந்தப் பாடல் குளகம். திருக்கை-நடராஜப் பெருமானா ருடைய அழகிய திருக்கரம், சென்று-வீசிக்கொண்டு போய். அரிவாள்-அரிவாளை . பற்றும்-பிடித்துக் கொண்டிருக்கும். திண்-தாயனாருடைய உறுதியாகிய. கையை-திருக்கரத்தை. ப்: சந்தி. பிடித்த-பிடித்துக் கொண்ட. போது-சமயத்தில். வெருக்கொடு-அச்சத்தோடு. அங்கு-அந்த இடத்தில். ஊறு- இடையூறு நீங்க-அகன்று போக. வெவ்வினை-கொடிய தீவினைகளாகிய பாவங்கள்; ஒருமை பன்மை மயக்கம். விட்டு-அந்தத் தாயனாரைவிட்டு. நீங்கி-அகன்று. ப்: சந்தி. பெருக்கவே-பெருக்கமாகவே; மிகுதியாகவே. மகிழ்ச்சி- உவகை. நீட-நெடுநேரம் இருக்க. த்: சந்தி. தம்-தம்முடைய. பிரான்-தலைவனாகிய நடராஜப் பெருமான். பேணி-விரும்பி. த்:சந்தி. தந்த-வழங்கிய. அருள்-திருவருளோடு சேர்ந்த. பெரும்-பெரிய. கருணை-கருணையை. நோக்கி-அறிந்து. அஞ்சலி-அந்தத் தாயனார் தம்முடைய திருக்கரங்களை அஞ்சலியாக. கூப்பி-குவித்து. நின்று-நின்று கொண்டு.

பின்பு உள்ள 20-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தாயனார் நடராஜப் பெருமானாரை நோக்கி, ''அடி யேனுடைய அறிவு இல்லாமையைப் பார்த்த பிறகும் அடியே னுடைய அடிமைத் தன்மையை விரும்பி தரையின் மேல் உள்ள பிளப்பில் எழுந்தருளி வந்து இந்த இடத்தில் திருவ முது செய்தருளிய பரமனே உனக்கு வணக்கம்; உடுக்கையைப் போன்ற இடுப்பைப் பெற்ற பார்வதி தேவி, வாம பாகத்தில் இருப்பவரான பரிசுத்தமான நல்ல சோதியே உனக்கு வணக் கம்; விபூதியைப் பூசிக்கொண்ட பவளத்தைப் போன்ற திரு மேனியையும், புரிகளை உடைய சடாபாரத்தையும் பெற்ற பழையவனே, உனக்கு வணக்கம்.'' என்று துதித்தார்.' பாடல் வருமாறு :

'' 'அடியனேன் அறிவி லாமை கண்டும்என் அடிமை
வேண்டிப்
படிமிசைக் கமரில் வந்திங் கமுதுசெய் பரனே, போற்றி!

துடியிடை பாக மான தூயநற் சோதி போற்றி!
பொடிஅணி பவள மேனிப் புரிசடைப் புராண போற்றி!' '

அடியனேன்-நாயனார் நடராஜப்பெருமானாரை நோக்கி 'அடியேனுடைய.' அறிவு இலாமை-அறிவு இல்லாமையை. இலாமை: இடைக்குறை. கண்டும்-பார்த்த பிறகும். என்-அடியேனுடைய. அடிமை-அடிமைத் தன்மையை. வேண்டி-விரும்பி ப்: சந்தி. படிமிசை-தரையின் மேல் உள்ள. க்:சந்தி. கமரில்-பிளப்பில். வந்து-எழுந்தருளிவந்து. இங்கு-இந்த இடத்தில். அமுது செய்-திருவமுது செய்தருளிய. பரனே-யாவருக்கும் மேலானவனே. போற்றி-உனக்கு வணக்கம். துடியிடை-உடுக்குப்போன்ற இடுப்பைப் பெற்ற பார்வதி தேவி; அன்மொழித் தொகை. பாகமான-வாமபாகத்தில் இருப்பவரான; திணை மயக்கம். தூய-பரிசுத்தமான. நல்-நல்ல. சோதி-சோதியே. சிவபெருமானைச் சோதியே என்று குறிக்கும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. போற்றி-உனக்கு வணக்கம். பொடி-விபூதியை. அணி-பூசிக்கொண்ட. பவள-பவளத்தைப் போன்ற. மேனி-திருமேனியையும். சிவ பெருமானுடைய திருமேனி பவளம் போல விளங்குவதைப் புலப்படுத்தும் இடங்களை முன்பே ஓரிடத்தில் காட்டினோம்; ஆண்டுக் கண்டுணர்க. ப்: சந்தி. புரி-புரிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். சடை-சடாபாரத்தையும் பெற்ற. ப்: சந்தி. புராண-பழையவனே. சிவபெருமானைப் புராணன் என்று குறிப்பதையும் வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. போற்றி-உனக்கு வணக்கம்.

பெண்களின் இடுப்புக்கு உடுக்கு உவமை: "துடியிடை அகலல்குல் தூமொழியை.", "துடிபடும் இடை யுடை மடவரல்.", "துடியிடையாளை ஓர் பாகமாக." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "துடியனைய இடை மடவாள் பங்கா.", "துடிகொண்ட இடைமடவாள் பாகம்

கொண்டு.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''துடியேரிடு கிடைத் தூய்மொழியார்.'' என்று மாணிக்க வாசகரும், ''துடியிடையாள் தன்னோடும் தோணியில் வீற்றிருந்த பிரான்.'' என்று சேக்கிழாரும், ''துடிகொள் நுண்ணிடைச் சுரி குழல் துளங்கையிற் றிளங் கொடி.'' என்று திருமங்கை ஆழ்வாரும், ''துடிகொள் இடை மடத்தோழீ.'', ''துடி நேரிடையும்.'' என்று நம்மாழ்வாரும், ''துடிநடுவன்ன துளங்கிய நுசுப்பின்.'' (பெருங்கதை, 2. 15:66) என்ற கொங்கு வேளிரும், ''துடியிடைப்பணை முலைத் தோகையன்னவர்.'' (நகரப் படலம், 37), ''துடிபுக்காவிடைத் திருமகள்.'' (வரைக் காட்சிப் படலம், 12), ''கொம்பர்கள் குயிலாய் உன் துடிபுரை இடை நாணித் துவள்வனஅவைகாணாய்.'' (வனம் புகு படலம், 16), துடியினேரிடை தோன்றவளா மெனின்.'' (அயோமுகிப் படலம்,23), ''துடியிடை அடையாளத்தின் தொடரவை தொடர்தி என்னா.'' (உருக்காட்டு படலம்,38), என்று கம்பர் பாடியவற்றையும் காண்க.

அடுத்து உள்ள 21-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'என அந்தத் தாயனார் வணக்கங்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய இடபவாகனத்தின் மேல் எழுந்தருள் பவராகிக் காட்சி அளித்து, ''நீ செய்த செயல் நன்றாக இருக்கிறது; நீ நல்ல நெற்றியைப் பெற்ற உன்னுடைய பத்தினியோடு சேர வந்து எல்லாக் காலத்திலும் நம்முடைய சிவலோகத்தில் வாழ்வாயாக'' என்று கூற அந்தத் தாயனார் அவருடனே செல்ல சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் ஐயராகிய நடராஜப் பெருமானார் தம்முடைய இளம்பருவத்தைப் பெற்ற இடபவாகனத்தை ஓட்டிக் கொண்டு சிதம்பரத்திற்கு எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

''என்றவர் போற்றி செய்ய இடபவா கனராய்த் தோன்றி
'நன்றுநீ புரிந்த செய்கை; நன்னுத லுடனே கூட

என்றும்நம் உலகில் வாழ்வாய்' என்றவர் உடனே நண்ண
மன்றுளே ஆடும் ஐயர் மழவிடை உகைத்துச் சென்றார்.''

என்று-என. அவர்-அந்தத் தாயனார். போற்றி-வணக்கங் களை; ஒருமை பன்மை மயக்கம். செய்ய-திருவாய் மலர்ந் தருளிச் செய்ய. இடபவாகனராய்-இடபவாகனத்தின் மேல் எழுந்தருள்பவராகி. த்:சந்தி. தோன்றி-காட்சி அளித்து. நீ புரிந்த-நீ செய்த. செய்கை-செயல். நன்று-நன்றாக இருக்கிறது. நல்-நல்ல. நுதலுடன்-நெற்றியைப் பெற்ற உன்னுடைய பத்தினியோடு. நன்னுதல் : அன் மொழித் தொகை. கூட-சேரவந்து. என்றும்-எல்லாக் காலத் திலும். நம்-நம்முடைய. உலகில்-சிவலோகத்தில். வாழ்வாய்-வாழ்வாயாக. என்று-எனக் கூற; எச்சத்திரிபு. அவர்-அந்தத் தாயனார். உடன்-அந்தப் பெருமானோடு. ஏ: அசை நிலை. நண்ண-செல்ல. மன்றுள்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில். ஏ: அசைநிலை. ஆடும்-திருநடனம் புரிந்தருளும். ஐயர்-ஐயராகிய நடராஜப் பெருமானார். மழ-இளம்பருவத்தைப் பெற்ற. விடை-இடப வாகனத்தை. உகைத்து-அதன் மேல் ஏறி ஓட்டிக் கொண்டு. ச்: சந்தி. சென்றார்-சிதம்பரத்திற்கு எழுந்தருளினார்.

அடுத்து உள்ள 22-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அன்பைப் பெற்ற திருவுள்ளத்தைக் கொண்ட பக்தராகிய தாயனார், ''பரம் பொருளாகி விளங்கியிருக்கிற பெருமையைப் பெற்றவராகிய சிவபெருமானார் திருவமுது செய்யும் பாக்கியத்தை அடியேன் அடையவில்லை'' என எண்ணி மாமரத்தில் காய்த்த கோடுகளை உடைய வடுக்களைக் கடிக்கும் சத்தம் 'விடேல் விடேல்' என்று கேட்பதற்கு முன்னால் தம்முடைய வன்மையான கழுத்தில் அரிவாளை வைத்து அறுத்துக் கொண்டமையால் அவர் 'அரிவாட்டாய நாயனார்' என்ற பரிசுத்தமான திருநாமத்தைப் பெற்றவர் ஆனார்.' பாடல் வருமாறு:

"பரிவுறு சிந்தை அன்பர் பரம்பொருள் ஆகி உள்ள.
பெரியவர் அமுது செய்யப் பெற்றிலேன் என்று மாவின்
வரிவடு விடேல்என் னாமுன் வன்கழுத் தரிவாள் பூட்டி
அரிதலால், 'அரிவாட் டாயர்' ஆயினார் தூய நாமம்."

பரிவு-அன்பை; 'வருத்தத்தை' எனலும் ஆம். உறு-பெற்ற. சிந்தை-திருவுள்ளத்தைக் கொண்ட. அன்பர்-பக்தராகிய தாயனார். பரம்பொருள்-எல்லோருக்கும் மேலான வஸ்து. ஆகிஉள்ள-ஆக விளங்கிக் கொண்டிருக்கிற. பெரியவர்-பெருமையைப் பெற்றவராகிய சிவபெருமானார். அமுது செய்ய-திருவமுது செய்யும். ப்: சந்தி. பெற்றிலேன்-பாக்கியத்தை அடியேன் அடையவில்லை. இலேன்: இடைக்குறை. என்று-என எண்ணி. மாவின்-மாமரத்தில் காயத்த. வரி-கோடுகளைப் பெற்ற; விடேல்-கடிக்கும் ஓசை விடேல் விடேல். எனா-என்று கேட்பதற்கு; இடைக்குறை. முன்-முன்னால். வன்-தம்முடைய வன்மையான. கழுத்து-கழுத்தில். அரிவாள்-அரிவாளை. பூட்டி-வைத்து. அரிதலால்-அறுத்துக் கொண்டமையால். தூய-பரிசுத்தமாகிய. நாமம்-தம்முடைய திரு நாமம். அரிவாட்டாயர்-அரிவாட்டாய நாயனார் என. ஆயினார்-ஆனார்.

அடுத்து வரும் 23-ஆம் பாடல் இந்த அரிவாட்டாய நாயனார் புராணத்தில் இறுதியாக உள்ள செய்யுள். அதன் கருத்து வருமாறு:

'தம்முடைய முன்னால் உள்ள இடம் தரைப் பிளப்பேயாக இருக்க எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய மகாதேவர் திருவமுது செய்யும் பொருட்டுத் தாம் சுமந்து வந்த சம்பா நெற்களைக் குத்திய அரிசிகள் தரையில் விழ, தம்முடைய காதுகளில் விழுமாறு மாவடுக்களைக் கடிக்கும், 'விடேல், விடேல்' என்னும் சத்தத்தை அந்த நிலையில் கேட்ட திருத்தொண்டராகிய அரிவாட்டாய நாயனாருடைய இரண்டு திருவடிகளையும் வணங்கி வாழ்த்துக்களைக் கூறி, நிலை பெற்ற புகழோடு விளங்கும் ஆனாய நாயனார் புரிந்த

திருத்தொண்டினை அடியேன் அடியேனுடைய அறிவுக்குத் தெரிந்த வண்ணம் பாடத் தொடங்கினேன்.' பாடல் வருமாறு:

'' முன்னிலை கமரே ஆக முதல்வனார் அமுது செய்யச்
செங்நெலின் அரிசி சிந்தச் செவியுற வடுவின் ஓசை
அந்நிலை கேட்ட தொண்டர் அடியிணை தொழுது வாழ்த்தி
மன்னும்ஆ னாயர் செய்கை அறிந்தவா வழுத்த லுற்றேன்.''

இது மேல் வரும் ஆனாய நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகச் சேக்கிழார் பாடியருளியது. முன் நிலை-தமக்கு முன்னால் உள்ள இடம். கமர்-தரைப் பிளப்பு. ஏ: அசை நிலை. ஆக-ஆக இருக்க. முதல்வனார்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய மகா தேவர். அமுது செய்ய-திருவமுது செய்யும் பொருட்டு. ச்:சந்தி. செந்நெலின் -தாம் சுமந்து கொண்டு வந்த சம்பா நெற்களை; ஒருமை பன்மை மயக்கம். நெலின்:இடைக்குறை. அரிசி-குத்திய அரிசிகள்; ஒருமை பன்மை மயக்கம். சிந்த-தரையில் விழ. ச்: சந்தி. செவி-தம்முடைய காதுகளில்; ஒருமை பன்மை மயக்கம். உற-விழுமாறு. வடுவின்-மாவடுக்களைக் கடிக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ஓசை-விடேல் விடேல் என்னும் சத்தத்தை. அந்நிலை-அந்த நிலையில். கேட்ட தொண்டர் -கேட்ட திருத்தொண்டராகிய அரிவாட்டாய நாயனாருடைய. அடியிணை-இரண்டு திருவடிகளையும். அடி:ஒருமை பன்மை மயக்கம். தொழுது-வணங்கி. வாழ்த்தி-வாழ்த்துக் களைக் கூறிவிட்டு. மன்னும்-நிலைபெற்ற புகழோடு விளங்கும். ஆனாயர்-ஆனாய நாயனார். செய்கை-புரிந்த திருத்தொண்டினை. அறிந்தவா-அடியேனுடைய அறிவுக்குத் தெரிந்த வண்ணம். வழுத்தலுற்றேன்-பாடத் தொடங்கினேன்.

ஆனாய நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் மூன்றாவதாக உள்ள இலை மலிந்த சருக்கத்தில் ஏழாவதாக விளங்குவது ஆனாய நாயனார் புராணம். அதில்வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'பக்கத்தில் நறுமணம் கமழ்ந்து விளங்கும் மலர்கள் மலர்ந்த பலவகை மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழி லுக்கு மேல் வானத்தில் உள்ள சந்திரன் வந்து ஏறித் தவழ வும், வயல்களில் அரிந்து கொண்டு வந்த நெற்கதிர்களைப் பரப்பியிருக்கும் பண்ணையின் எல்லையில் வண்டுகள் வந்து மொய்க்கவும், கொண்டு வந்து இட்டவையாகிய நெற்கதிர்களை அடுக்கிய போர்களின் மேல் மேகங்கள் அவை உயரமாக இருப்பதனால் களைப்பை அடைந்து ஏறவுமாக அமைந்து நெடுங்காலமாக விளங்கும் நீர்வளம்' நிலவளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலியவற்றைப் பெற்றுத் திகழ்வது மேல்மழ நாடு என்று கூறப்படும் நதி ஓடும் நாடு.' பாடல் வருமாறு:

"மாடு விரைப்பொலி சோலையின் வான்மதி வந்தேறச்
சூடு பரப்பிய பண்ணை வரம்பு சுரும்பேற
ஈடு பெருக்கிய போர்களின் மேகம் இளைத்தேற
நீடு வளத்தது மேல்மழ நாடெனும் நீர்நாடு."

மாடு-பக்கத்தில். விரை-நறுமணம். ப:சந்தி. பொலி-கமழ்ந்து விளங்கும். சோலையின்-மலர்கள் மலர்ந்த பலவகை மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலுக்கு மேல். அந்த மரங்களாவன: வாகை மரம், வேங்கை மரம், மகிழ மரம், கடம்ப மரம், பூவரச மரம், விளா மரம், வில்வ மரம், பவள மல்லிகை மரம், வேப்ப மரம் முதலியவை. வான்-வானத்தில் உள்ள. மதி-சந்திரன். வந்து ஏற-வந்து ஏறித் தவழவும். ச்: சந்தி. சூடு-வயல்களிலிருந்து அரிந்து கொண்டு வந்த நெற் கதிர்களை; ஒருமை பன்மை மயக்கம். பரப்பிய-பரப்பியுள்ள. பண்ணை-பண்ணையினுடைய. வரம்பு-எல்லையில். சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். ஏற-வந்து மொய்க்கவும். ஈடு-கொண்டுவந்து இட்டவைகளாகிய நெற்கதிர்களை; ஒருமை பன்மை மயக்கம். பெருக்கிய-பெருக அடுக்கிய. போர்களின்-போர்களின் மேல். மேகம்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். இளைத்து-அவை உயரமாக இருப்பதனால் களைப்பை அடைந்து. ஏற-ஏறவுமாக அமைந்து. நீடு-நெடுங் காலமாக விளங்கும். வளத்தது-நீர்வளம், நிலவளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்றுத் திகழ்வது. மேல்மழநாடு எனும்-மேல்மழ நாடு என்று கூறப் படும். எனும்: இடைக்குறை. நீர்நாடு-ஆற்றின் நீர் ஓடும்நாடு.

பிறகு வரும் 2-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'ஆடையில் உள்ள கொய்ச்சங்களின் அடியில் பெண் குறிகளைப் பெற்ற உழவர் குலப் பெண்களாகிய பள்ளிகள் எண்ணெய் தடவிய கூந்தல்களாகிய மையைப் போன்ற கருமையான இடங்களில் சார்ந்து துயில் கொள்பவை மென்மையான சிறகுகளைக் கொண்ட வண்டுகள்; நறுமணம் கமழும் தாமரை மலர்களில் உறங்குபவை நீளமான கயல் மீன்கள்; மலர்கள் மிகுதியாக மலர்ந்த தேமாமரங்கள் வளர்ந்து நிற்கும் பூஞ்சோலையில் அந்த மரங்களினுடைய நறுமணத்தையும் குளிர்ச்சியையும் உடைய நிழலில் தூங்குபவை கருமையான நிறத்தைக் கொண்ட எருமை மாடுகள்.'

பாடல் வருமாறு:

"நீவி நிதம்ப உழத்தியர் நெய்க்குழல் மைச்சூழல்
மேவி உறங்குவ மென்சிறை வண்டு; விரைக்கஞ்சப்
பூவில் உறங்குவ நீள்கயல்; பூமலி தேமாவின்
காவின் நறும்குளிர் நீழல் உறங்குவ கார்மேதி."

நீவி-தங்களுடைய ஆடைகளில் உள்ள கொய்சகங்களின் அடியில்; ஒருமை பன்மை மயக்கம். நிதம்ப-பெண் குறிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். உழத்தியர்-உழவர் குலப் பெண்களாகிய பள்ளிகளுடைய. நெய்-எண்ணெய் தடவிய. க்: சந்தி. குழல்-கூந்தல்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். மை-மையைப் போன்ற கருமையான. ச்:சந்தி. சூழல்-இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மேவி-சார்ந்து-உறங்குவ - துயில் கொள்பவை. மென் - மென்மையான. சிறை-சிறகுகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். விரை-நறு மணம் கமழும். க்;சந்தி. கஞ்சப்பூவில்-தாமரை மலர்களில்; ஒருமை பன்மை மயக்கம். உறங்குவ-துயில்பவை. நீள்-நீள மான. கயல்-கயல் மீன்கள்;ஒருமை பன்மை மயக்கம். பூ-மலர் கள்; ஒருமை பன்மை மயக்கம். மலி-மிகுதியாக மலர்ந்த. தேமாவின்-தேமா மரங்கள் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். தேமா-இனிய பழங்கள் பழுக்கும் மாமரம். இதிலிருந்து வேறுபட்டது புளிமா. காவின்-பூஞ்சோலையில். நறும்-நறுமணத்தையும். குளிர்-குளிர்ச்சியையும் உடைய. நீழல்-நிழலில். உறங்குவ-துயில் கொள்பவை. கார்-கருமை யான நிறத்தைக் கொண்ட. மேதி-எருமை மாடுகள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 3-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வலிமையான நிலையைப் பெற்ற உழவர்கள் மாடுகளை ஏரில் பூட்டி ஓட்டச் சுற்றி எழுந்த கரும்பு ஆலையில் இணைக்கப் பெற்ற மரங்கள் பல தடவைகள் வந்து எழுப்பு கின்ற சத்தம் பலகாலும் உண்டாக்கிய பேரொலியினால் அன்னப்பறவைகள் தன்னிடத்தில் தங்குகின்ற குளிர்ச்சியைப் பெற்ற துறைகளைக் கொண்ட வாவியாகிய அதன் பக்கத்

தில் கருப்பஞ்சாற்றைக் காய்ச்சுகின்ற புகையினால் மேகங் களை உண்டாக்குபவை கரும்பு ஆலைகள்.' பாடல் வருமாறு:

" வன்னிலை மள்ளர் உகைப்ப எழுந்த மரச்சோலைப்
பன்முறை வந்தெழும் ஓசை பயின்ற முழக்கத்தால்
அன்னம் மருங்குறை தண்டுறை வாவியதன் பாலைக்
கன்னல் அடும்புகை யால்முகில் செய்வ கருப்பாலை."

வல்-வலிமையான. நிலை-நிலையைப் பெற்ற. நிலை-வயலில் தளராமல் நிற்கும் நிலை. மள்ளர்-உழவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். உகைப்ப-மாடுகளை ஏர்களில் பூட்டி ஓட்ட. எழுந்த-சுற்றி எழுந்த. மரச்சோலை-கரும்பு ஆலையில் இணைக்கப் பெற்ற மரங்கள். பன்-பல. முறை-தடவைகள்; ஒருமை பன்மை மயக்கம். வந்து எழும்-வந்து எழுப்பும். ஓசை-சத்தம். பயின்ற-பலகாலும் உண்டாக்கிய. முழக்கத்தால்-பேரொலியினால். அன்னம்-அன்னப் பறவை கள்; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-தன்னிடத்தில். உறை-தங்கும். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. துறை-துறைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். வாவி-வாவியாகிய; அதன்பால்-அதற்குப் பக்கத்தில். ஐ:சாரியை. க்:சந்தி. கன் னல்-கருப்பஞ்சாற்றை; ஆகுபெயர். அடும்-காய்ச்சும். புகை யால்-புகையினால். முகில்-மேகங்களை; ஒருமை பன்மை மயக் கம். செய்வ-உண்டாக்குபவை. புகை மிகுதியாக வானத்தில் சென்று மேகங்களைப் போலத் தோற்றும் என்பது கருத்து. கருப்பாலை-கரும்பு ஆலைகள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 4-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'பொங்கி வருகின்ற பெரிய ஆற்றில் நீளமாக வீசும் அலைகள் ஒதுக்கித் தள்ளிய நீரில் வாழும் சங்குப் பூச்சிகள் பரிசுத்தமான இலைகளைக் கொண்ட வாழை மரங்களின் மேல் தொடர்ந்து சென்று தாங்கள் தங்கியுள்ள பசுமையான இலைகள் நெருங்கிய கொடியின் வழியே தவழ்ந்து ஏறிச் சென்று பசுமையான கமுக மரத்தின் உச்சியின் மேல் முத்துக்

களை அந்த மரத்தின் பாளையைப் போல உதிர்ப்பவையாக இருக்கும்.' பாடல் வருமாறு:

"பொங்கிய மாநதி நீடலை உந்து புனற்சங்கம்
துங்க இலைக்கத விப்புதல்மீது தொடங்கிப் போய்த்
தங்கிய பாசடை சூழ்கொடியூடு தவழ்ந்தேறிப்
பைங்கமு கின்தலை முத்தம் உதிர்க்குவ பாளையென."

பொங்கிய-பொங்கி வருகின்ற. மா-பெரிய. நதி-ஆற்றில் நீடு-நீளமாக வீசும். அலை-அலைகள். உந்து-ஒதுக்கித் தள்ளிய. புனல்-நீரில் வாழும். சங்கம்-சங்குப் பூச்சிகள்; ஒருமை பன்மை மயக்கம். துங்க-பரிசுத்தமான. இலை-இலைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கதவிப்புதல்—வாழை மரங்களின். புதல்-பல மரங்கள் சேர்ந்த தொகுதி. மீது-மேல். தொடங்கி-பற்றிக்கொண்டு தொடர்ந்து.ப்:சந்தி. போய்-சென்று. த்:சந்தி. தங்கிய-தாங்கள் தங்கியுள்ள. பாசடை-பசுமையான இலைகள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-நெருங்கிய. கொடியூடு-கொடியின் வழியே. தவழ்ந்து ஏறி-தவழ்ந்து ஏறிச் சென்று. ப்:சந்தி. பைம்-பசுமையான கமுகின்-பாக்கு மரத்தின். தலை-உச்சியின் மேல். முத்தம்—முத்துக்களை;ஒருமை பன்மை மயக்கம்.பாளை-அந்தப் பாக்கு மரத்தின் பாளை. என-என்று சொல்லுமாறு; இடைக்குறை. உதிர்க்குவ-உதிர்ப்பவையாக இருக்கும்; சங்குப் பூச்சிகள் கமுகமரத்தின் மேல் ஏறி முத்துக்களை உதிர்க்கும் என்பது கருத்து.

பிறகு வரும் 5-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அல்லி மலர்கள் மலர்ந்த வயல்களுக்குப் பக்கத்தில் மிகவும் இளமையான பசுமாடு கன்றுக்குட்டியைப் பெற்றவுடன் சிறுசெடிகளைத் தன்னுடைய காலின் உதையால் கலக்குகின்ற இளைய கன்றுக்குட்டி முல்லை நிலத்தில் மடப்பத்தைப் பெற்ற சாதியாகிய மான்குட்டியோடு குதித்துக் கொண்டு ஓடுகின்றதும், நிரம்பிய வளத்தை

உடையதும் ஆக விளங்குவதாகிய முல்லை நிலம் சூழ்ந்த இடம் ஒரு பக்கத்தில் விளங்கும்." பாடல் வருமாறு;

" அல்லி மலர்ப்பழ னத்தயல் நாகிள ஆன்ஈனும்
ஒல்லை முழுப்பை உகைப்பின் உழக்கு குழக்கன்று
கொல்லை மடக்குல மான்மறி யோடு குதித்தோடும்
மல்கு வளத்தது முல்லை உடுத்த மருங்கோர்பால்."

அல்லிமலர்-அல்லிமலர்கள் மலர்ந்த; 'சுகஇதழ்களை உடைய மலர்கள் மலர்ந்த' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பழனத்து-வயல்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அயல்-பக்கத்தில். நாகுஇள-மிகவும் இளமையான. ஆன்-பசுமாடு. ஈனும் ஒல்லை-கன்றுக்குட்டியைப் பெற்றவுடன். முழுப்பை-சிறு செடிகளை; ஒருமை பன்மை மயக்கம். உகைப்பின்-தன்னுடைய காலின் உதையால். உழக்கு-கலக்குகின்ற. குழக்கன்று-இளைய கன்றுக்குட்டி. கொல்லை-முல்லை நிலத்தில்; 'தினைக் கொல்லையில்' எனலும் ஆம். மடக்குல-மடப் பத்தைப் பெற்ற சாதியாகிய. மான்-மானினுடைய. மறியோடு-குட்டியோடு. குதித்து-குதித்துக் கொண்டு. ஓடும்-ஓடுவதும்; வினையாலணையும் பெயர். மல்கு-நிரம் பிய. வளத்தது-வளத்தை உடையதும் ஆக விளங்குவது மாகிய. முல்லை-முல்லைநிலம்; காடும் காட்டைச் சார்ந்த இடங்களும். உடுத்த-சூழ்ந்த. மருங்கு-இடம். ஓர்பால்-ஒரு பக்கத்தில் விளங்கும்.

பிறகு வரும் 6-வது பாடலின் கருத்து வருமாறு:

"கார் காலத்தில் மலரும் முல்லைக் கொடியில் மலர்ந்த குளிர்ச்சியைப் பெற்ற பற்களைப் போன்ற வெண்மை யான அரும்புகளை அடைந்து மொய்க்கும் வண்டுகள் தேன் மலர்கின்ற கருங்குவளை மலர்களின் மேல் தாவிப் பாய்வதற்கு இருப்பவையாக விளங்கும். விசாலமான நெற்பயிர்கள் வளர்ந்திருக்கும் வயல்களில் துள்ளி எழும்

கயல் மீன்கள் பாய, காசா மரத்தின் நீல நிறத்தைப் பெற்ற நறுமணம் கமழும் கிளையில் தங்கிய வலிமையான சிறகுகளைப் பெற்ற நாரைகள் இருப்பவையாக விளங்கும்.' பாடல் வருமாறு:

'' கண்மலர் காவிகள் பாய இருப்பன கார்முல்லைத்
தண்ணகை வெண்முகை மேவு சுரும்பு; தடஞ்சாலிப்
பண்ணை எழும்கயல் பாய இருப்பன காயாவின்
வண்ண நறுஞ்சினை மேவிய வன்சிறை வண்டானம்.''

கார்-கார் காலத்தில் மலரும். முல்லை-முல்லைக் கொடியில் மலர்ந்த. த்: சந்தி. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. நகை-பற்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். வெண்-வெண்மையான. முகை-அரும்புகளை; ஒருமை பன்மை மயக்கம். மேவு-அடைந்து மொய்க்கும். சுரும்பு-வண்டுகள். கள்-தேன். மலர்-மலர்கின்ற. காவிகள்-கருங்குவளை மலர்களின் மேல். பாய-தாவிப் பாய்வதற்கு. இருப்பன-இருப்பவையாக விளங்கும். தடம்-விசாலமான. சாலி-நெற்பயிர்கள் வளர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப் :சந்தி. பண்ணை-வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். எழும்-துள்ளி எழும். கயல்-கயல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். பாய-பாய்ந்து கொண்டிருக்க. காயாவின்-காசா மரத்தின். வண்ண-நீலநிறத்தைப் பெற்ற. நறும்-நறுமணம் கமழும் மலர்கள் மலரும். சினை-கிளையில். மேவிய-தங்கிய. வன்-வன்மையைப் பெற்ற. சிறை-சிறைகளை உடைய; ஒருமை பன்மை மயக்கம். வண்டானம்-நாரைகள்; ஒருமை பன்மை மயக்கம். இருப்பன-இருப்பவையாக விளங்கும்.

பிறகு உள்ள 7-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மரக்கிளைகளில் வண்டுகள் மலர்களில் உள்ள தேனை நாடி வெளியில் அலையும் பூம்பொழில்களின் மேல் வானத்தில் செல்லும் வெப்பமான கிரணங்களை வீசும் சூரியன் தங்குமாறு விளக்கத்தைப் பெற்றுள்ள நல்ல

மேல் மழ நாடு ஆகும். அந்த இடத்தில் உள்ள அந்த நாடு மண்ணுலகத்தில் விளங்தும் அருமையான அணிகல மாகத் திகழ அந்த மேல்மழநாட்டுக்கே ஒப்பற்ற மங்கல மாக அமைந்தது திருமங்கலம் ஆகிய மக்கள் இனிது வாழும் பழைய ஊர்.' பாடல் வருமாறு:

" பொங்கரில் வண்டு புறம்பலை சோலைகள் மேல்ஓடும்
வெங்கதிர் தங்க விளங்கிய மேல்மழ நன்னாடாம்
அங்கது மண்ணின் அரும்கல மாக அதற்கேஓர்
மங்கலம் ஆனது மங்கலம் ஆகிய வாழ்மூதூர்."

பொங்கரில்-மரக்கிளைகளில்; ஒருமை பன்மை மயக்கம். வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். புறம்பு -மலர்களில் உள்ள தேனை நாடி வெளியில். அலை-அலைந்து திரியும். சோலைகளின் மேல்-பூம்பொழில்களின் மேல். ஓடும்-வானத்தில் செல்லும். வெம்-வெப்பமான கதிர்-கிரணங்களை வீசும் சூரியன்; ஒருமை பன்மை மயக்கம். தங்க-தங்குமாறு. விளங்கிய-விளக்கத்தைப் பெற்றுள்ள. மேல்மழ நல்நாடுஆம்-நல்லமேல்மழ நாடு ஆகும். அங்கு-அந்தச் சோழ நாட்டில் உள்ள. அது-அந்த நாடு. மண்ணின்-இந்த மண்ணுலகத்தில் விளங்கும். அரும்கலமாக -அருமையான அணிகலமாகத் திகழ. அதற்கே-அந்த மேல் மழ நாட்டுக்கே. ஓர்-ஒப்பற்ற. மங்கலம் ஆனது-மங்கல மாக அமைந்தது. மங்கலம்ஆகிய-திருமங்கலம் ஆகிய வாழ்-மக்கள் இனிது வாழும். மூதூர்-பழைய ஊர்.

அடுத்து உள்ள 8-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நிகர் இல்லாத பெருமையைப் பெற்றிருக்கும் குடும்பங்கள் நெடுங்காலமாக வாழ்ந்த பான்மையோடு குறையாமல் தப்புதல் இல்லாத நீர்வளம், நிலவளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெருகும் வண்ணம் செய்து முப்பத்திரண்டு வகையான தருமங்களைச் செய்யும் சான்றாண்மையோடும் சொல்லுவதற்கு உயர்ச்சியை அடைந்த சிறப்புக்களால் நிறைந்து விளங்குவது

சீர்த்தி பொருந்தியிருக்கும் அந்தத் திருமங்கலம் என்னும் ஊரில் நிலைபெற்று விளங்கிய இடையர்களினுடைய சாதியில் திருவவதாரம் புரிந்தருளியவர் ஆனாய நாயனார்.' பாடல் வருமாறு:

'' ஒப்பில் பெரும்குடி நீடிய தன்மையில் ஓவாமே
தப்பில் வளங்கள் பெருக்கி அறம்புரி சால்போடும்
செப்ப உயர்ந்த சிறப்பின் மலிந்தது சீர்மேவும்
அப்பதி மன்னிய ஆயர் குலத்தவர் ஆனாயர்.''

ஒப்பு-நிகர். இல்-இல்லாத; கடைக்குறை. பெரும்-பெருமையைப் பெற்றிருக்கும். குடி-குடும்பங்கள்; 'குடிமக்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். நீடிய-நெடுங்காலமாக வாழ்ந்த. தன்மையில்-பான்மையோடு; உருபு மயக்கம். ஓவாமே - குறையாமல். தப்பு - தப்புதல். இல் - இல்லாத; கடைக்குறை. வளங்கள் - நீர்வளம், நிலவளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களை. பெருக்கி-பெருகும் வண்ணம் செய்து. அறம்-முப்பத்திரண்டு தருமங்களை; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. புரி - செய்யும். சால்போடும் - சான்றாண்மையோடும். செப்ப - கூறுவதற்கு. உயர்ந்த - உயர்ச்சியை அடைந்த. உயர்ச்சி-மேம்பாடு. சிறப்பின் - சிறப்புக்களால்; ஒருமை பன்மை மயக்கம். மலிந்து-நிறைந்து விளங்குவது. சீர்-சீர்த்தி. மேவும்-பொருந்தி இருக்கும். அப்பதி-அந்தத் திருமங்கலம் என்னும் ஊரில். மன்னிய-நிலை பெற்று விளங்கிய. ஆயர்-இடையர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலத்தவர்-சாதியில் திருவவதாரம் செய்தருளியவர். ஆனாயர்-ஆனாய நாயனார்.

பிறகு வரும் 9-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த ஆனாய நாயனார் இடையர்களினுடைய சாதியை விளக்கத்தை அடையும் வண்ணம் திருமங்கலத்திற்கு வந்து திருவவதாரம் செய்தருளினார்; பரிசுத்தமாக

உள்ள ஒளியை வீசும் விபூதியை விரும்பிப் பூசிக் கொள்ளும் திருத்தொண்டினைப் பெற்றவர்; தம்முடைய திருவாக்கிலும் திருமேனியிலும் புகழ்வதற்குரிய திருவுள்ளத்திலும், தாம் புரிந்து வரும் தொழிலினிடத்திலும், பேய்களோடு சேர்ந்து திருநடனம் புரிந்தருளும் தலைவனாகிய நடராஜப் பெருமானுடைய திருவடிகளை அல்லாமல் வேறு எதையும் விரும்பாதவர் அந்த நாயனார்.' பாடல் வருமாறு:

" ஆயர் குலத்தை விளக்கிட வந்துத யம்செய்தார்;
தூய சுடர்த்திரு நீறு விரும்பு தொழும்புள்ளார்;
வாயினின் மெய்யின் வழுத்து மனத்தின் வினைப்பாலிற்
பேயுடன் ஆடு பிரானடி அல்லது பேணாதார்."

ஆயர்-அந்த ஆனாய நாயனார் இடையர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலத்தை-சாதியை. விளக்கிட-விளக்கத்தை அடையும் வண்ணம். வந்து-திருமங்கலத்துக்கு வந்து. உதயம் செய்தார்-திருவவதாரம் செய்தருளினார். தூய-பரிசுத்தமாக உள்ள. சுடர்-ஒளியை வீசும். த்: சந்தி. திருநீறு-விபூதியை. விரும்பு-விரும்பிப் பூசிக் கொள்ளும். தொழும்பு-திருத்தொண்டினை. உள்ளார் - பெற்றிருக்கிறவர். வாயினின்-தம்முடைய திருவாக்கிலும். மெய்யின்-திருமேனியிலும். வழுத்து-புகழ்வதற்குரிய. மனத்தின்-திருவுள்ளத்திலும் வினைப்பாலில்-தாம் புரிந்தருளும் தொழிலினிடத்திலும். பேயுடன்-பேய்களோடு; ஒருமை பன்மை மயக்கம். ஆடு-திரு நடனம் புரிந்தருளும். பிரான்-தலைவனாகிய நடராஜப் பெருமானுடைய. அடி - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அல்லது-அல்லாமல். பேணாதார்-வேறு எதையும் விரும்பாதவர் அந்த நாயனார்.

விபூதி தூயது: "தூவண நீறகலம் பொலிய.", "சுத்தமதாவது நீறு." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "தூய வெண்ணீறு துதைந்தெழு துளங்கொளி வயிரத் தொப்பனே." என்று மாணிக்கவாசகரும், "பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்.", "பூதியாகிய புனித நீறாடி.", "தூய

வெண்ணீறு துதைந்த பொன்மேனியும்.", "தூய நீறு தங்கள் திருமுடியில் வாங்கித் தொழுதணிந்து." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பேயுடன் ஆடு பிரான்: "பேயாயின பாடப் பெருநடமாடிய பெருமான்.", "பேயடைந்த காடிடமாப் பேணுவது.", "பேய்கள் பாட....பிணமிடு சுடுகாட்டில்...நடமாடும் வித்தகனார்." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "பேயறாக்காட்டில் ஆடும் பிஞ்ஞகன்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "கழுதொடு காட்டிடை நாடகம் ஆடி." என்று மாணிக்கவாசகரும், "கழுது தன் பிள்ளையைக் காளியென்று பெயரிட்டுச் சீருடைத்தா வளர்த்து...புறங்காட்டில் ஆடும் அப்பன்.", "பேய்கள் குறுநரி சென்றணங்காடு காட்டிற் பிட்டடித்துப் புறங்காட்டில் இட்ட பிணத்தினைப்பேரப் புரட்டி ஆங்கே அட்டமே பாய நின்றாடும் எங்கள் அப்பன்.", "கொள்ளிவாய்ப் பேய் சூழ்ந்து துணங்கையிட்டோடி ஆடித் தழலுள் எரியும் பிணத்தை வாங்கித்தான் தடிதின்றணங்காடு காட்டிற் கழல்ஒலி ஓசைச் சிலம்பொலிப்ப... ஆடும் அப்பன்.", "பேய்க்கணம் சூழச்சூழ ஆடும் அரவுப் புயங்கன்.", "பேய் கொட்ட முழவம் கூளி பாடக் குழகன் ஆடுமே.", "பேய் சென்று விரல் சுட்டி...பல பேய் இரிந்தோடப் பித்த வேடம் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே.", "அழல்கட் பேய் கூளிக் கணங்கள் குழலோடியம்பக் குழகன் ஆடுமே.", "சிறுபேய் சிரமப்படு காட்டின் ....அழகன் ஆடுமே.", "பேய்கள் கூடிப் பிணங்கள் மாந்தி அணங்கும் பெருங்காட்டில் மாயன் ஆட.", "பேயுமாய் இடு வெண்டலையும்...எழுந்த பெருங்காட்டில்...பறையும் கறங்கப் பரமன் ஆடுமே.", "பிறங்கற்பேய் ... எயிற்றுப் பேய்... இசை பாட மிண்டிமிளிர்ந்த சடைகள் தாழ விமலன் ஆடுமே." என்று காரைக்கால் அம்மையாரும், "கழுதுக்குறை விடம் போல் கண்டன் ஆடும் கடியரங்கே." என்று சேரமான் பெருமாள் நாயனாரும், "பேய்ச்சுற்றம் வந்திசை பாடப்

பிணமிடு காட்டயலே தீச்சுற்ற வந்து நின்றாடல்.'' என்று கபிலதேவ நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

'பிறகு வரும் 10-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த ஆனாய நாயனார் பசுமாடுகளின் வரிசையோடு கூட அகலமாக உள்ள முல்லை நிலமாகிய காட்டுக்கு அந்தப் பசு மாடுகளை அழைத்துக் கொண்டு போய் ஏறிக் காட்டில் வாழும் கெட்ட விலங்குகளால் உண்டாகும் நோய்களைப் போக்கி எந்த இடத்திலும் பரிசுத்தமும் நறுமணமும் மென்மையும் உள்ள புற்களை மேய்ந்து தாங்கள் விருப்பத்தைப் பெற்ற பரிசுத்தமான நீரைக் குடித்து குறைவு இல்லாத பசு மாடுகளின் குறைவு இல்லாதவையாகிய கூட்டம் பலவாக வளரும் வண்ணம் பாதுகாத்துக் கொண்டு இருக்கிறவர் அந்த நாயனார்.' பாடல் வருமாறு:

'' ஆனிரை கூட அகன்புற விற்கொடு சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்தெங்கும்
தூநறு மென்புல் அருந்தி விரும்பிய தூநீர்உண்
டூனமில் ஆயம் உலப்பில பல்க அளித்துள்ளார்.''

ஆன் நிரை-அந்த ஆனாய நாயனார் பசுமாடுகளின் வரிசை. ஆன்: ஒருமை பன்மை மயக்கம். கூட-தம்மோடு கூட வர. அகன்-அகலமான. புறவில்-முல்லை நிலமாகிய காட்டிற்கு; உருபு மயக்கம். கொடு-அழைத்துக் கொண்டு. சென்று-போய் ஏறி-மேடுகளில் ஏறி. க்: சந்தி. கான்-காட்டில். உறை-வாழும். தீய-கெட்ட. விலங்கு-மிருகங்களால்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: சிங்கம், புலி, வேங்கைப் புலி, ஓநாய், நரி முதலியவை. உறு-உண்டாகும். நோய்கள்-புண்களை. கடிந்து-மருந்துகளைக் கொண்டு போக்கி. எங்கும்-எவ்விடத்திலும். தூ-பரிசுத்தமும். நறு-நறுமணமும். மென்-மென்மையும் கொண்ட. புல்-புற்களை; ஒருமை பன்மை மயக்கம். அருந்தி-அந்தப் பசு மாடுகள் மேய்ந்து. விரும்பிய-தாங்கள் விழைந்த. தூ-தூய்மையான. நீர்-நீரை. உண்டு-குடித்து. ஊனம்-குறைவு. இல்-இல்லாத; கடைக்

குறை. உலப்பில-குறைவு' இல்லாதவையாகிய. ஆயம்-பசு மாடுகளின் கூட்டம். பல்க-பலவாகப் பெருகி வளரும் வண்ணம். அளித்துள்ளார்-பாதுகாத்துக் கொண்டு இருக்கிறவர் அந்த நாயனார்.

பிறகு உள்ள 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு ஆனாய நாயனார் செய்து வந்தமையால் கன்றுக் குட்டிகளோடு பால் கறப்பதை மறந்த பசுமாடுகளும், பால் கறப்பவையாகிய பசுமாடுகளும், பொலிவற்ற தலைகளைப் பெற்ற மென்மையான கருப்பத்தை உடைய பசுமாடுகளோடு சேர்ந்துள்ள ஈன்றணிமையான பசுமாடுகளும், வெற்றியை உடைய காளை மாடுகளின் கூட்டத்தோடும் ஒவ்வொரு இனமும் வேறு வேறாகப் பொருந்தி நிரம்பியிருக்கிற இடங்களோடு பல மந்தைகளும் அந்த ஊரில் இருக்கும்.' பாடல் வருமாறு:

"கன்றொடு பால்மறை நாகு கறப்பன பாலாவும்
புன்றலை மென்சினை ஆனொடு நீடு புனிற்றாவும்
வென்றி விடைக்குல மோடும் இனந்தோறும் வெவ்வேறே
துன்றி நிறைந்துள சூழலுடன் பல தோழங்கள்."

கன்றொடு-அவ்வாறு ஆனாய நாயனார் செய்து வந்தமையால் கன்றுக்குட்டிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். பால்மறை-பால் கறப்பதை மறந்த. நாகு-கிழப்பசுமாடுகளும். கறப்பன பால் ஆவும்-பாலை கறப்பவையாகிய பசுமாடுகளும். புன்-பொலிவற்ற. தலை-தலைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையான. சினை-கருப்பத்தைக் கொண்ட. ஆனொடு-பசுமாடுகளோடு; ஒருமை பன்மை மயக்கம். நீடு-சேர்ந்துள்ள. புனிற்றாவும்-ஈன்றணிமையான பசுமாடுகளும்; ஒருமை பன்மை மயக்கம். வென்றி-வெற்றியைப் பெற்ற. விடை-காளைமாடுகளின்; ஒருமை பன்மை மயக்கம். குலமோடும்-கூட்டத்தோடும். இனம்தோறும்-ஒவ்வோர் இனமும். வெவ்வேறு-வேறு வேறாக. ஏ: அசைநிலை. துன்றி-பொருந்தி; 'சேர்ந்து'

எனலும் ஆம். நிறைந்துள-நிரம்பியிருக்கிற. உள:இடைக் குறை. சூழலுடன்-இடங்களோடு; ஒருமை பன்மை மயக்கம். பல தோழங்கள்-பல மந்தைகளும் அந்த ஊரில் இருக்கும்.

அடுத்து வரும் 12-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பசுமாடுகளினுடைய வரிசையான கூட்டம் அவ்வாறு பலவாகப் பெருகும் வண்ணம் அந்தக் கூட்டத்தைப் பாது காத்து எல்லாக் காலத்திலும் பசுமாடுகளை மேய்க்கும் இடையர்கள் தாம் இடும் கட்டளைகளைச் செய்ய இடையர்களினுடைய குடும்பங்களை விரும்பிப் பாதுகாக்கும், காவலராகிய அந்த ஆனாய நாயனார் தம்முடைய தலை வனாகிய நடராஜப் பெருமானுடைய திருவடிகளுக்குப் பக்தியைப் பெற்ற சங்கீதத்தில் அமைந்த துளைகளைக் கொண்ட இசைக்கருவியாகிய புல்லாங்குழலை வாசித்தலை மேற்கொண்டார்.' பாடல் வருமாறு:

" ஆவின் நிரைக்குலம் அப்படி பல்க அளித்தென்றும்
கோவலர் ஏவல் புரிந்திட ஆயர் குலம்பேணும்
காவலர் தம்பெரு மான்அடி அன்புறு கானத்தின்
மேவு துளைக்கரு விக்குழல் வாசனை மேற்கொண்டார்."

ஆவின்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசையாகிய. க்:சந்தி. குலம்-கூட்டம். அப்படி-அவ்வாறு. பல்க-பலவாகப் பெருகும் வண்ணம். அளித்து-அந்தக் கூட்டத்தைப் பாதுகாத்து. என்றும்-எல்லாக் காலத்திலும். கோவலர்-பசுமாடுகளை மேய்க்கும் இடை யர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏவல்-தாம் இடும் கட்டளைகளை; ஒருமை பன்மை மயக்கம். புரிந்திட-செய்து நிறைவேற்ற. ஆயர்-இடையர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம் குலம்-குடும்பங்களை; ஒருமை பன்மை மயக்கம். பேணும்-விரும்பிப் பாதுகாக்கும். காவலர்-மன்ன ராகிய அந்த ஆனாய நாயனார். தம்-தம்முடைய. பெருமான்-தலைவராகிய நடராஜப் பெருமானுடைய. அடி-திருவடிகளின்பால்; ஒருமை பன்மை மயக்கம். அன்பு-

பத்தியை. உறு-பெற்ற. கானத்தின்-சங்கீதத்தில். மேவு-அமைந்த. துளை-துளைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கருவி-இசைக் கருவியாகிய. க்:சந்தி. குழல்-புல்லாங்குழலை. வாசனை-வாசித்தலை; ஊதுவதை மேற் கொண்டார்-தாம்மேற்கொண்டு விளங்கினார்.

பிறகு வரும் 13-ஆம் பாடலின் கருத்து வருமாறு: 'பழமையாக உள்ள காந்தருவவேதமாகிய சாத்திரத் தின் இலக்கணத்தின்படி அந்தச் சாத்திரம் கூறிய முறையில், இருபது விரல்களின் நீளத்தில் ஒரு கணுவும் சுற்றிலும் நாலரை விரல்களின் நீளம் உள்ளதாய் வளர்ந்த மூங்கிலை அதன் நுனியிலிருந்து எட்டு விரல்களின் நீளத் தில் அறுத்து மெட்டுக்களை அமைக்க வேண்டிய இடங் களில் துளைத்த துளைகளை வரிசையாக அமைத்துக் காற்றை முதலில் ஊதும் துளையை முடிவு இல்லாத தாளங்களின் நடு நடுவில் ஒவ்வோர் அங்குலக் கணக்கு களில் அமையச் செய்து.' பாடல் வருமாறு:

"முந்தைமறை நூல்மரபின் மொழிந்தமுறை எழுந்தவேய்
அந்தம்முதல் நாலிரண்டில் அரிந்துநரம் புறுதானம்
வந்ததுளை நிரையாக்கி வாயுமுதல் வழங்குதுளை
அந்தமில்சீர் இடையீட்டின் அங்குலிஎண் களின்
அமைத்து."

இந்தப் பாடல் குளகம். முந்தை-பழமையாக உள்ள. மறை-காந்தருவ வேதமாகிய. நூல்-சாத் திரத்தின். மரபின்-இலக்கணத்தின்படி. மொழிந்த-அந்தச் சாத்திரம் கூறிய. முன்ற-முறையில். எழுந்த-இருபது விரல்களின் நீளத்தில் ஒரு கணுவும் சுற்றிலும் நாலரை விரல்களின் நீளம் உள்ளதாய் வளர்ந்த. வேய்-மூங்கிலை. அந்தம்முதல்-அதனுடைய நுனியிலிருந்து. நாலிரண்டில்-எட்டு விரல்களின் நீளத்தில். அரிந்து-அறுத்து. நரம்பு-மெட்டுக்களை; ஒருமை பன்மை மயக்கம். உறு-அமைக்க வேண்டிய. தானம்-இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம்.

வந்த-துளைத்த. துளை-துளைகளை; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசையாக. ஆக்கி-அமைத்து. வாயு-காற்றை. முதல்-முதலில். வழங்கு-வாயை வைத்து ஊதும். துளை-புல்லாங்குழலின் ஓரத்தில் உள்ள துளையை. அந்தம்-முடிவு. இல்-இல்லாத; கடைக்குறை. சீர்-தாளங்களின், ஒருமை பன்மை மயக்கம். இடையீட்டின்-நடுநடுவில். அங்குலி-ஒவ்வோர் அங்குலமாக உள்ள. எண்களின்-கணக்குகளில். அமைத்து-அமையச் செய்து.

பிறகு வரும் 14-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த ஆனாய நாயனார் தாம் தம்முடைய திருக்கரங்களில் ஊதுவதற்காக எடுத்துக் கொண்ட புல்லாங்குழலாகிய இசைக் கருவியில் அடியேங்களுடைய தலைவனாகிய நடராஜப் பெருமானுக்கு உரிய ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்களைக் கொண்ட பஞ்சாட்சரத்தைத் தொடர்ச்சியாக உள்ள முறையில் ச, ரி, க, ம, பத, நிச என்னும் ஏழு சுவரங்களைச் சுருதியோடு இணையுமாறு அமைத்துப் புல்லாங்குழலை வாசித்து அப்படி வாசித்த புல்லாங்குழலின் கீத நாதத்தால், தடுக்கப் பெற்ற அசையும் உயிர்களாகிய சரங்கள், அசையாத உயிர்களாகிய அசரங்கள் ஆகிய எல்லாம் உருக்கத்தை அடைந்து செயலிழந்து நிற்குமாறு உண்டாகும் தம்முடைய கருணையினால் பாடும் கானமாகிய அமுதத்தைச் செவிகளுக்கு ஊட்டி வரும் செயலை நடத்திக் கொண்டு போகிறவராகிய அந்த நாயனார் அவ்விடத்தில் ஒரு தினம்.' பாடல் வருமாறு:

"எடுத்தகுழற் கருவியினில் எம்பிரான் எழுத்தஞ்சும்
தொடுத்தமுறை ஏழிசையின் சுருதிபெற வாசித்துத்
தடுத்தசரா சரங்கள்எலாம் தங்கவரும் தம்கருணை
அடுத்தஇசை அமுதளித்துச் செல்கின்றார்
அங்கொருநாள்."

இந்தப் பாடலும் குளகம். எடுத்த-அந்த ஆனாய நாயனார் தாம் தம்முடைய திருக்கரங்களில் ஊதுவதற்காக

எடுத்துக் கொண்ட. குழல் - புல்லாங்குழலாகிய. கருவி யினில்-இசைக் கருவியில். எம்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் ஆனாய நாயனாரையும் சேர்த்துச் சொன்னது. பிரான்-தலைவனாகிய நடராஜப் பெருமானுக்கு உரிய. எழுத்து அஞ்சும்-ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்களைக் கொண்ட பஞ்சாட்சரத்தை. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். தொடுத்த-தொடர்ச்சியாக உள்ள. முறை-முறையில். ஏழிசையின் - ச, ரி, க, ம, பத, நிச என்னும் ஏழு சுவரங்களை. இசை: ஒருமை பன்மை மயக்கம். சுருதி பெற-சுருதியோடு இணையுமாறு அமைத்து. வாசித்து-புல்லாங்குழலை ஊதி. த்:சந்தி. தடுத்த-அவ்வாறு ஊதிய புல்லாங்குழலின் கீத நாதத்தால் தடுக்கப் பெற்ற. சராசரங்கள்-அசையும் உயிர்களாகிய மனிதர்கள், விலங்குகள், பறவைகள், நீர் வாழ் பிராணிகள் முதலியவையும், அசையாத உயிர்களாகிய மரங்களும், செடிகளும் கொடிகளும். சரம்: ஒருமை பன்மை மயக்கம். எலாம்-யாவும்; இடைக்குறை. தங்க-உருக்கத்தை அடைந்து செயலிழந்து நிற்குமாறு. வரும்-தம்மிடத்தில் உண்டாகும். தம்-தம் முடைய. கருணை-கருணையினால். அடுத்த-பாடிய. இசை-கானமாகிய. அமுது - அமுதத்தை. அளித்து - செவிகளுக்கு ஊட்டி. ச்: சந்தி. செல்கின்றார்-வரும் செயலை நடத்திக் கொண்டு போகிறவராகிய அந்த நாயனார். அங்கு-அந்த இடத்தில். ஒரு நாள்-ஒரு தினம்.

பிறகு உள்ள 15-ம் பாடலின் கருத்து வருமாறு:

'நறுமணம் கமழும் மலர்களைக் கட்டிய மாலை பொங்கி எழ ஆனாய நாயனார் தம்முடைய தலைமயிரைக் கோதி வலப்பக்கம் உயரமாக முடித்த ஒளியைப் பெற்ற கொண்டையில் நெருங்கியுள்ள கண்ணியையும் தொடுத்த மாலையும் சொருகிக் கொண்டு பசுமையான இலைகளைக் கொண்ட மென்மையான கொடியாகிய வடத்தில் அமையுமாறு நறு விளங்காய்களை அணிந்து கொண்டு தங்கக் காசுகளைக்

கோவையாகக் கோர்த்து அமைத்த மயிர்க்கயிற்றை அந்த வடத்திற்குப் பக்கத்தில் கருமையான சுருள் சுருளான மயிரின் வெளியைக் கட்டி.' பாடல் வருமாறு:

'' வாசமலர்ப் பிணைபொங்க மயிர்நுழுதி மருங்குயர்ந்த
தேசுடைய சிகழிகையிற் செறிகண்ணித் தொடைசெருகிப்
பாசிலைமென் கொடியின்வடம் பயிலநறு விலிபுனைந்து
காசுடைய நாணதற்கயலே கருஞ்சுருளின் புறம்கட்டி.''

இந்தப் பாடலும் குளகம். வாச-நறுமணம் கமழும். மலர்-மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பிணை-கட்டிய மாலை. பொங்க-பொங்கி எழ. மயிர்-ஆனாய நாயனார் தம்முடைய தலைமயிரை. நுழுதி-கோதி. மருங்கு-வலப்பக்கத்தில். உயர்ந்த-உயரமாக முடித்த. தேசுடைய-ஒளியைப் பெற்ற. சிகழிகையில்-கொண்டையில். செறி-நெருங்கியுள்ள கண்ணியையும். தொடை-தொடுத்த மாலையையும். செருகி-சொருகிக் கொண்டு. ப்: சந்தி. பாசிலை-பசுமையான இலைகளைக் கொண்ட. இலை: ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையான. கொடியின்-கொடியாகிய. வடம்-வடத்தில். பயில-அமையுமாறு. நறுவிலி-நறுவிலிக் காய்களை; ஒருமை பன்மை மயக்கம். புனைந்து-அணிந்து கொண்டு. காசுடைய நாண்-தங்கக் காசுகளைக் கோவையாகக் கோர்த்து அமைத்த மயிர்க்கயிற்றை. காசு: ஒருமை பன்மை மயக்கம். அதற்கு-அந்த வடத்திற்கு. அயல்-பக்கத்தில். ஏ:அசை நிலை. கரும்-கருமையான. சுருளின்-சுருள் சுருளான தலைமயிரின். புறம் கட்டி-வெளிப் பக்கத்தைக் கட்டி.

பிறகு வரும் 16-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஆனாய நாயனார் வெண்காளிதட் செடியினுடைய இலைகளைச் சுருட்டிக் கட்டிய சுருளில் பசுமையான இதழ்களைப் பெற்ற நறுமணம் கமழும் செங்காளிதட் செடியில் மலர்ந்த குளிர்ச்சியைப் பெற்ற அழகைக் கொண்ட மலர்களை அணிந்த தாழ்ந்த செவிகளினுடைய பிரகாசம் விளங்க

உறுதியைப் பெற்ற அழகை உடைய தம்முடைய நுதலின் மேல் பூசிய விபூதியினுடைய பிரகாசம் பார்த்தவர்களினுடைய கண்களைக் கவருமாறு நிரம்பி குறையாத அழகு திகழுமாறு தம்முடைய நெற்றியின் மேல் இட்டுக்கொண்டு.' பாடல் வருமாறு:

"வெண்கோடல் இலைச்சுருளிற் பைந்தோட்டு
விரைத்தோன்றித்
தண்கோல மலர்புனைந்த வடிகாதின் ஒளிதயங்கத்
திண்கோல நெற்றியின்மேல் திருநீற்றின் ஒளிகண்டோர்
கண்கோடல் நிறைந்தாராக் கவின்விளங்க
மிசைஅணிந்து."

இந்தப் பாடலும் குளகம். வெண்கோடல்-ஆனாய நாயனார் வெண்காளிதட் செடியினுடைய. இலை-இலைகளை; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சுருளில்-சுருட்டிக் கட்டிய சுருளில். பைந்தோட்டு-பசுமையான இதழ்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். விரைத்தோன்றி-நறுமணம் கமழும் செங்காந்தட் செடியில் மலர்ந்த. த்:சந்தி. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. கோல-அழகைக் கொண்ட. மலர்-மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். புனைந்த-அணிந்த. வடி-தாழ்ந்த காதின்-செவிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஒளி-பிரகாசம். தயங்க-விளங்க. த்: சந்தி. திண்-உறுதியைப் பெற்ற. கோல-அழகை உடைய. நெற்றியின் மேல்-தம்முடைய நுதலின் மேல் பூசிய. திருநீற்றின்-விபூதியினுடைய. ஒளி-பிரகாசம். கண்டோர்-பார்த்தவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். கண்-கண்களை; ஒருமை பன்மை மயக்கம். கோடல்-கவர்தல். நிறைந்து-நிரம்பி. ஆரா-குறையாத. க்: சந்தி. கவின்-அழகு. விளங்க-திகழுமாறு. மிசை-தம்முடைய நெற்றியின் மேல். அணிந்து-இட்டுக் கொண்டு.

அடுத்து வரும் 17-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நிரம்பிய விபூதியைப் பூசிக்கொண்ட தம்முடைய மார்பில் வரிசையாகிய முல்லை அரும்புகளை அணிந்து கொண்டு

நெருங்கியுள்ளதாக அணிந்த வடம் தொங்க திரண்ட தோள்களில் பூமாலைகளில் முரன்ற வண்டுகள் இசையைப் பாடவும், அந்த ஆனாய நாயனார் தம்முடைய இடுப்பில் கட்டியுள்ள மரவுரிக்கு வெளியில் தழைகளால் செய்யப் பெற்ற அழகு மிகுதியாக உள்ள முன்தானையைக் கொண்ட மலர் வேலைக்ளைச் செய்திருக்கும் பட்டாடை விளங்கி அசைந்து கொண்டிருக்க.' பாடல் வருமாறு:

'' நிறைந்தநீ றணிமார்பின் நிரைமுல்லை முகைசுருக்கிச்
செறிந்தபுனை வடம்தாழத் திரள்தோளின் புடை அலங்கல்
அறைந்தசுரும் பிசைஅரும்ப அரைஉடுத்த மரவுரியின்
புறந்தழையின் மலிதானைப் பூம்பட்டுப் பொலிந்தசைய.''

இந்தப் பாடல் குளகம். நிறைந்த-நிரம்பிய. நீறு-விபூதியை. அணி-பூசிக்கொண்ட. மார்பின்-தம்முடைய திருமார்பில். நிரை-வரிசையாகிய. முல்லைமுகை-முல்லை அரும்புகளை; ஒருமை பன்மை மயக்கம். சுருக்கி-அணிந்து கொண்டு. ச்:சந்தி. செறிந்த-நெருங்கியுள்ளதாக;வினையாலணையும் பெயர். புனை-அணிந்த. வடம்தாழ - வடம் தொங்க. த்:சந்தி. திரள்-திரட்சியைப் பெற்ற. தோளின் புடை-தோள்களில்; ஒருமை பன்மை மயக்கம். அலங்கல்-பூமாலைகளில்; ஒருமை பன்மை மயக்கம். அறைந்த-முரன்ற. சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். இசை-சங்கீதத்தை. அரும்ப-பாடவும். அரை-அந்த ஆனாய நாயனார் தம்முடைய இடுப்பில். உடுத்த-கட்டியுள்ள. மரவுரியின்-மரவுரிக்கு. மரவுரி-மரப்பட்டையால் செய்த ஆடை. புறம்-வெளியில். தழையின்-தழைகளால்; ஒருமை பன்மை மயக்கம். மலி-அழகு மிகுதியாக உள்ள. தானை-முன்தானையைக் கொண்ட. ப்:சந்தி. பூம்பட்டு-மலர் வேலைளைச் செய்திருக்கும் பட்டாடை. ப்:சந்தி. பொலிந்து-விளங்கி. அசைய-அசைந்து கொண்டிருக்க.

பிறகு வரும் 18-ஆம் கவியின் உரை வருமாறு:

'ஆனாய நாயனார் தம்முடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளில் செருப்புக்களும், செந்தாமரை மலரைப் போலச் சிவந்த தம்முடைய திருக்கரத்தில் வெண்மையான தடியும், பொருந்தும் சங்கீதத்தை எழுப்பும் மூங்கிலால் அமைந்திருக்கும் பாட்டை, ஊதும் புல்லாங்குழலும் மிகுதியாகத் திகழ தங்களுடைய தொழில்களைப் புரியும் காவல் காத்தலைச் செய்யும் வன்மையைப் பெற்ற இடையர்களும், கன்றுக் குட்டிகளை உடைய பசுமாடுகளின் வரிசை தம்மைச் சுற்றி வர, மலர்கள் மலர்ந்த மாலையை அணிந்தவரும், பசுமாடுகளை மேய்ப்பவரும் ஆகிய அந்த நாயனார் பசுமாடுகளினுடைய வரிசையைப் பாதுகாக்கும் பொருட்டுத் தம்முடைய திருமாளிகைக்கு வெளியில் வந்தருளினார்.' பாடல் வருமாறு:

''சேவடியில் தொடுதோலும் செங்கையினில் வெண்கோலும்
மேவும்இசை வேய்ங்குழலும் மிகவிளங்க வினைசெய்யும்
காவல்புரி வல்லாயர் கன்றுடைஆன் நிரைசூழப்
பூவலர்தார்க் கோவலனார் நிரைகாக்கப் புறம்போந்தார்.''

சேவடியில்-ஆனாய நாயனார் தம்முடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளில். அடி: ஒருமை பன்மை மயக்கம். தொடுதோலும்-செருப்புக்களும்; ஒருமை பன்மை மயக்கம். செங்கையினில்-செந்தாமரை மலரைப் போலச் சிவந்த தம்முடைய திருக்கரத்தில். வெண்-வெண்மை நிறத்தைக் கொண்ட. கோலும்-தடியும். மேவும்-அமைந்திருக்கும். இசை-பாட்டை ஊதும். வேய்-மூங்கிலால் செய்யப் பெற்ற. ங்:சந்தி. குழலும்-புல்லாங்குழலும். மிக-மிகுதியாக. விளங்க-திகழ. வினை-தங்களுக்குரிய தொழில்களை; ஒருமை பன்மை மயக்கம். செய்யும்-புரியும். காவல்-காவல் காத்தலை. புரி-செய்யும். வல்-வலிமையைப் பெற்ற. ஆயர்-இடையர்களும்; ஒருமை பன்மை மயக்கம். கன்று-கன்றுக்குட்டிகளை; ஒருமை பன்மை மயக்கம்.

உடை-உடைய. ஆன்-பசுமாடுகளின்; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசை. சூழ-தம்மைச் சுற்றி வர. ப்: சந்தி. பூ-மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அலர்-மலர்ந்த. தார்-மாலையை அணிந்தவரும்; திணை மயக்கம். க்: சந்தி. கோவலனார்-பசுமாடுகளை மேய்ப்பவரும் ஆகிய அந்த நாயனார். நிரை-பசுமாடுகளினுடைய வரிசையை. காக்க-பாதுகாக்கும் பொருட்டு. ப்:சந்தி. புறம்-தம்முடைய திரு மாளிகைக்கு வெளியில். போந்தார்-வந்தருளினார்.

பிறகு வரும் 19-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நீல நிறத்தையும் பெருமையையும் பெற்ற மயில் கூவவும், வரிசையான கொடிகளில் மொய்க்கும் வண்டுகள் முல்லைப் பண்ணினை இசைக்கவும், அழகைப் பெற்ற வெண்மையான அரும்புகளையும் அழகையும் பெற்ற முல்லைக் கொடி, இந்திர கோபப்பூச்சிகளும் முறையே பற்களையும் வாயில் உள்ள இதழ்களையும் காண்பிக்க, அசையும் மின்னுகின்ற மின்னலைப் போன்ற இடுப்பைச் சுற்றியுள்ள மாலையை அணிந்த கொங்கைகள் அசையுமாறு இந்தப் பூமியாகிய நீளமான நடன சபையில் நடனம் புரியும் பொருட்டு கார் காலம் என்னும் பருவமாகிய நல்ல பெண்மணி வந்தாள்.'

பாடல் வருமாறு:

"நீலமா மஞ்ஞை ஏங்க நிரைக் கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முல்லை கோபம்வாய் முறுவல் காட்ட
ஆலுமின் இடைசூழ் மாலைப் பயோதரம் அசைய வந்தாள்
ஞாலநீ டரங்கில் ஆடக் காரெனும் பருவ நல்லாள்."

நீல-நீல நிறத்தையும். மா-பெருமையையும் பெற்ற. மஞ்ஞை-மயில். ஏங்க-கூவ. நிரை-வரிசையாகப் படர்ந்த. க்:சந்தி. கொடி-பூங்கொடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. புறவம்-மொய்க்கும் வண்டுகள் முல்லைப் பண்ணினை. பாட-இசைக்கவும். க்:சந்தி. கோல-அழகைப்

பெற்ற வெண்-வெண்மையான. முகை-அரும்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். ஏர்-அழகையும் பெற்ற. முல்லை-முல்லைக் கொடியும். கோபம் - இந்திர கோபப் பூச்சிகளும். முறுவல்-பற்களையும்; ஒருமை பன்மை மயக்கம். வாய்-வாயில் உள்ள அதரங்களையும்; ஆகுபெயர்; எதிர் நிரனிறை. காட்ட-காண்பிக்க. ஆலும்-அசையும். மின்-மின்னலைப் போன்ற. இடை-இடுப்பை. சூழ்-சுற்றியுள்ள. மாலை-மலர் மாலையை அணிந்த. ப்:சந்தி. பயோதரம்-கொங்கைகள்; ஒருமை பன்மை மயக்கம். அசைய-அசையு மாறு. ஞாலம்-இந்தப் பூமியாகிய. நீடு-நீளமாக உள்ள. ஆடரங்கில்-நடனசபையில். ஆட-நடனம் புரியும் பொருட்டு. க்: சந்தி. கார்-கார் காலம். எனும்-என்னும்; இடைக்குறை. பருவ-பருவமாகிய. நல்லாள் வந்தாள்-நல்ல பெண்மணி வந்து சேர்ந்தாள்.

பிறகு வரும் 20-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'எல்லாப் பக்கங்களிலும் பசுமாடுகளின் வரிசையைப் பரவி மேயுமாறு செய்வதற்காகத் தம்முடைய திருக்கரத்தில் எடுத்துக் கொண்ட தடியை உடைய இடையராகிய ஆனாய நாயனாருடைய பக்கத்தில் வணங்கி அடையக் குளிர்ச்சியைப் பெற்ற முல்லை நிலத்திற்கு எழுந்தருளும் தலைவராகிய அந்த நாயனார் அந்தப் பக்கத்தில் தாழ்வாக உள்ள கிளையில் மலர்ந்த மலர்களின் பக்கத்தை அடைந்து அந்த மலர்களில் இருந்த தேனைக் குடித்து, செம்மையும் அருமையும் குளிர்ச்சியும் உள்ள வண்டுகள் சுழலும் செழுமையைப் பெற்ற ஒரு கொன்றை மரத்தின் பக்கத்தை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

"எம்மருங்கும் நிரைபரப்ப எடுத்தகோல் உடைப்பொதுவர்
தம்மருங்கு தொழுதணையத் தண்புறவில் வருந்தலைவர்

அம்மருங்கு தாழ்ந்தசினை அலர்மருங்கு மதுஉண்டு
செம்மருந்தண் சுரும்புசூழல் செழுங்கொன்றை
மருங்கணைந்தார்.''

எம்மருங்கும்-எல்லாப் பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். நிரை-பசுமாடுகளின் வரிசையை. பரப்ப-பரவி மேயுமாறு செய்வதற்காக. எடுத்த-தம்முடைய திருக்கரத்தில் எடுத்துக் கொண்ட. கோல்-தடியை. உடை-உடைய. ப்:சந்தி. பொதுவர்தம்-இடையராகிய ஆனாய நாயனாருடைய. தம்:அசை நிலை. மருங்கு-பக்கத்தில். தொழுது -சிவபெருமானை வணங்கி. அணைய-அடைவதற்காக. த்:சந்தி. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. புறவில்-முல்லை நிலத்திற்கு; உருபு மயக்கம். வரும்-எழுந்தருளும். தலைவர்-தலைவராகிய அந்த நாயனார். அம்மருங்கு-அந்தப்பக்கத்தில். தாழ்ந்த-தாழ்வாக இருந்த. சினை-கிளையில் மலர்ந்து அலர்-மலர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-பக்கத்தை அடைந்து. மது-அந்த மலர்களில் இருந்த தேனை உண்டு-குடித்து. செம்-செம்மையையும். அரும்-அருமையையும். தண்-குளிர்ச்சியையும் பெற்ற. சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். சூழல்-சூழலும். செழும்-செழுமையைப் பெற்ற. கொன்றை-ஒரு கொன்றை மரத்தின் மருங்கு - பக்கத்தை. அணைந்தார்-அந்த நாயனார் அடைந்தார்.

பிறகு வரும் 21-ஆம் பாடலின் கருத்து வருமாறு;

'அவ்வாறு போய் அடைந்த ஆனாய நாயனார் கட்டி அமைத்த நறுமணம் கமழும் மலர்மாலை என்று கூறுமாறு நறுமணத்தைப் பெற்ற மலர்களினுடைய கொத்துக்களைத் தொங்க விட்டுத் தம்முடைய தலையில் தாழ்ந்த சடாபாரத்தைக் கொண்ட நடராஜப் பெருமானாரைப் போல வளர்ந்து நின்ற நல்ல மணத்தைப் பெற்ற மலர்கள் மலர்ந்திருக்கும் ஒரு கொன்றை மரத்தைத் தம்முடைய எதிரில் பார்த்து

நின்று கொண்டு உருக்கத்தை அடைந்து ஒருமைப் பாட்டை அடைந்த தம்முடைய திருவுள்ளத்தில் உண்டாகிய பக்தியைத் தம்மை ஆளாக உடையவராகிய அந்த நடராஜப் பெருமானாரிடத்தில் மடையைப் போலப் பக்தியை வெளிப் படுத்திக் கொண்டு விளங்கினார்.' பாடல் வருமாறு:

" சென்றணைந்த ஆனாயர் செய்தவிரைத் தாமமென
மன்றல்மலர்த் துணர்தூக்கி மருங்குதாழ் சடையார்போல்
நின்றநறும் கொன்றையினை நேர்நோக்கி நின்றுருகி
ஒன்றியசிந் தையில்அன்பை உடையவர்பால்
மடைதிறந்தார்."

சென்று-அவ்வாறுபோய். அணைந்த-அடைந்த. ஆனாயர்-ஆனாய நாயனார். செய்த-கட்டி அமைத்த. விரை-நறுமணம் மமும். த்:சந்தி. தாமம்-மலர் மாலை. என-என்று கூறுமாறு; இடைக்குறை. மன்றல் - நறுமணத்தைப் பெற்ற. மலர்-மலர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. துணர்-கொத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். தூக்கி-தொங்க விட்டு. மருங்கு - தம்முடைய தலையில். தாழ்-தாழ்ந்த. சடையார் போல்-சடாபாரத்தைக் கொண்ட நடராஜப் பெருமானாரைப் போல. நின்ற-வளர்ந்து நின்ற. நறும்-நல்ல மணத்தைப் பெற்ற மலர்கள் மலர்ந்திருக்கும். கொன்றையினை-ஒரு கொன்றை மரத்தை. நேர்-தமக்கு எதிரில். நோக்கி-பார்த்து. நின்று-நின்று கொண்டு. உருகி-உருக்கத்தை அடைந்து. ஒன்றிய-ஒருமைப் பாட்டை அடைந்த. சிந்தையில்-தம்முடைய திருவுள்ளத்தில் உண்டாகிய. அன்பை-பக்தியை. உடையவர் பால்-தம்மை ஆளாக உடையவராகிய அந்த நடராஜப் பெருமானாரிடத்தில். மடை-கடல் மடை திறந்தாற் போல். திறந்தார்-பக்தியை வெளிப்படுத்திக் கொண்டு விளங்கினார். "கடல்மடை திறந்தனைய அன்பர் அன்புக் கெளிமை" என வருவதைக் காண்க.

அடுத்து உள்ள 22-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பக்தி நீர் ஊற்றைப் போல ஊறி மேலே பொங்கி எழும் அமுதத்தைப் போன்ற இசையை எழுப்பும் புல்லாங்குழலின் இனிய நாதத்தால் வன்மையைப் பெற்ற பூதங்களின் சேனையை ஆளுபவராகிய நடராஜப் பெருமானாருக்குரிய ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை உச்சரித்து அந்தப் பெருமானாரைத் துதித்து விட்டுத் தாம் முன் நாட்களில் ஊதி வருகின்ற அளவோடு முறைப்படியே எல்லா உயிர்களும் தங்களுடைய எலும்புகள் தங்களுடைய உடம்புகளினூடு கரைந்து உருகச் செய்யும் இனிய இசையை ஊதும் மூங்கிலாற் செய்யப் பெற்ற இசைக் கருவிகளாகிய புல்லாங்குழல்களில்.' பாடல் வருமாறு:

"அன்பூறி மிசைப்பொங்கும் அமுதஇசைக் குழலொலியால்
வன்பூதப் படையாளி எழுத்தைந்தும் வழுத்தித்தாம்
முன்பூதி வருமளவின் முறைமையே எவ்வுயிரும்
என்பூடு கரைந்துருக்கும் இன்னிசை வேய்ங்
கருவிகளில்."

இந்தப் பாடல் குளகம். அன்பு-பக்தி. ஊறி-நீர் ஊற்றைப் போல ஊறி. மிசை-மேலே. பொங்கும்-பொங்கி எழும். அமுத-அமுதத்தைப் போன்ற. இசை-இசையை எழுப்பும். "கானாமுதம் படைத்த காட்சி மிக விந்தையடா." என்று பாரதியார் பாடுவதைக் காண்க. க்: சந்தி. குழல்-புல்லாங் குழலை ஊதும். ஒலியால்-இனிய நாதத்தால். வன்-வலி மையைப் பெற்ற. பூத-பூதங்களின்; ஒருமை பன்மை மயக்கம் படை-சேனையை. ஆளி-ஆளுபவராகிய நடராஜப் பெருமா மானாருக்கு உரிய. சிவபெருமான் பூதங்களோடு இருப்பவர் என்ற கருத்தைப் புலப்படுத்தும் இடங்களை வேறோரிடத் தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. எழுத்து ஐந்தும்-ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ் சாட்சரத்தை. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். வழுத்தி-உச்சரித்து அந்தப் பெருமானாரைத் துதித்துவிட்டு. த்: சந்தி தாம் முன்பு-தாம் முன்னை நாட்களில் ஊதி வரும்-புல்லாங்

குழலை ஊதி வரும். அளவில்-அளவோடு; உருபு மயக்கம் முறைமையே-முறைப்படியே. எவ்வுயிரும் - எல்லா உயிர் களும்; ஒருமை பன்மை மயக்கம். என்பு-எலும்புகள்; ஒருமை பன்மை மயக்கம். ஊடு - தங்களுடைய உடம்புகளினூடு. கரைந்து உருக்கும்-கரைந்து உருகச் செய்யும். இன்-இனிய. இசை-இசையை ஊதும். வேய்-மூங்கிலாற் செய்யப் பெற்ற. ங்: சந்தி. கருவிகளில்-இசைக் கருவிகளாகிய புல்லாங்குழல் களில்.

பிறகு உள்ள 23-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஆனாய நாயனார் புல்லாங்குழலில் உள்ள ஒவ்வொரு துளைக்கு வெளியிலும் ஒவ்வொரு விரல் அளவாக ஏழு விரல் களின் அளவு இடையில் இடம் விடப்பட்டுள்ள முத்திரைத் துளையோடு எட்டுத் துளைகளைப் பெற்ற இனிய இசையை ஊதும் புல்லாங்குழலைத் தம்முடைய திருக்கரத்தில் எடுத் துக் கொண்டு மரத்திலிருந்து தொங்கும் மலர்களில் கோடு களைப் பெற்ற வண்டுகள் மகரந்தப் பொடிகளைப் பற்றிக் கொண்டு உண்பவற்றைப் போலச் சுற்றியுள்ள நான்கு பக்கங் களிலும் ரீங்காரம் செய்து இசை எழுமாறு நின்று கொண்டு பரிசுத்தமான பெருமையைப் பெற்ற வாய் வைத்து ஊதும் தனியான துளையில் அடியேங்களுடைய தலைவராகிய அந்த நாயனார் தம்முடைய பவளங்களைப் போன்ற உதடுகளை வைத்து அந்தப் புல்லாங்குழலை ஊத.' பாடல் வருமாறு:

"ஏழுவிரல் இடையிட்ட இன்னிசைவங் கியம்எடுத்துத்
தாழுமலர் வரிவண்டு தாதுபிடிப் பனபோலச்
சூழுமுரன் றெழநின்று தூயபெரும் தனித்துளையில்
வாழியநம் தோன்றலார் மணிஅதரம் வைத்தூத.''

இந்தப் பாடலும் குளகம். ஏழு விரல்-ஆனாய நாயனார் புல்லாங்குழலில் உள்ள ஒவ்வொரு துளைக்கு வெளியிலும் ஒவ்வொரு விரலின் அளவாக ஏழு விரல்களின் அளவு. விரல்: ஒருமை பன்மை மயக்கம். இடையிட்ட-இடையில் இடம் விடப்பட்டுள்ள முத்திரைத் துளையோடு எட்டுத்

துளைகளைப் பெற்ற. இன்-இனிய. இசை-இசையை ஊதும். வங்கியம்-புல்லாங்குழலை. வங்கியம்-'வம்சம்' என்ற வட சொல்லின் திரிபு. வங்கியம்-மூங்கிலால் செய்யப் பெற்ற புல்லாங்குழல்;ஆகு பெயர். வங்கியம்-மூங்கில். எடுத்து-தம்முடைய திருக்கரத்தில் எடுத்துக் கொண்டு. த்: சந்தி. தாழும்-மரத்திலிருந்து தொங்கும். மலர்-மலர்களில்; ஒருமை பன்மை மயக்கம். வரி-கோடுகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். தாது-மகரந்தப் பொடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பிடிப்பன போல-பற்றிக் கொண்டு உண்பவற்றைப் போல. ச்: சந்தி. சூழும்-சுற்றியுள்ள நான்கு பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். முரன்று-ரீங்காரம் செய்து. எழ-இசை எழுமாறு. நின்று-நின்று கொண்டு. தூய-பரிசுத்தமான. பெரும்-பெருமையைப் பெற்றிருக்கும். தனி-வாயை வைத்து ஊதும் தனியான. த்: சந்தி. துளையில்-புல்லாங்குழலின் ஓரத்தில் உள்ள துளையில். வாழிய:அசை நிலை. நம்-அடியேங்களுடைய; என்றது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துச் சொன்னது. தோன்றலார்-தலைவராகிய அந்த நாயனார். மணி-பவளங்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். அதரம்-உதடுகளை; ஒருமை பன்மை மயக்கம். வைத்து ஊத-வைத்து அந்தப் புல்லாங்குழலை ஊத.

வண்டுகள் தாதை உண்ணுதல்: ''கொங்குண் வண்டே கரியாக வந்தான்.'' என்று திருமங்கையாழ்வாரும், ''செம்பொறிவண்டே....அரும் பூங் கோதைப் பூந்தாதுண்டு.'' (பெருங்கதை, 3.1:174-8) என்று கொங்கு வேளிரும், ''தாதுரிஞ்சி உண்ணும் வண்டினம்.'' (சீவக சிந்தாமணி, 2305) என்று திருத்தக்கதேவரும், ''கொங்குகவர் நீலச் செங்கட் சேவல்.'' (சிறுபாணாற்றுப்படை, 184) என்று நல்லூர் நத்தத்தனாரும், ''தாதுண்தும்பி போது முரன்றாங்கு.'' (மதுரைக் காஞ்சி, 655) என்று மாங்குடி மருதனாரும், ''தாதுண்வண

டினும் பலரே.'', ''தாதுண் பறவை.'', ''தாதுண் வெறுக்கையவாகி, இவள், போதவிழ் முச்சி ஊதும் வண்டே.'', ''தாதார்ந்து களிச்சுரும்பரற்றும்.'' (ஐங்குறுநூறு, 67, 82, 93, 416), ''கொங்குண் வண்டிற் பெயர்ந்து.'' (மேற்படி 226) என வேறு புலவர்களும் பாடியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 24-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'வளைவாய்க்கு அடுத்த எட்டாவது துளையே முதலாக உள்ள எல்லாத் துளைகளையும் முறையாக அவற்றுக்கு உரிய இடங்களை ஆனாய நாயனார் சோதனை செய்து பார்த்து விட்டுத் தம்முடைய திருவாயை வைத்த துளையின் ஆராய்ச்சியை இராக சோதனையை உணர்த்துவதற்காக விரல்களை முறையே செலுத்தி ஒத்திருக்கும் நிலையை அறிந்து கொண்ட பிறகு சட்ஜம், இடபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பவற்றை முறையாகும் அந்தப் பான்மையில் ஆரோகணம், அவரோகணம் என்னும் ஓசைகளில் ஆனாய நாயனார் அமைத்தார்.' பாடல் வருமாறு:

'' முத்திரையே முதல்அனைத்தும் முறைத்தானம் சோதித்து
வைத்ததுளை ஆராய்ச்சி வக்கரனை வழிபோக்கி
ஒத்தநிலை உணர்ந்ததற்பின் ஒன்றுமுதற் படிமுறையாம்
அத்தகைமை ஆரோசை அமரோசை களின்அமைத்தார்.''

முத்திரையே-வளை வாய்க்கு அடுத்த எட்டாவது துளையே. முதல்-முதலாக உள்ள. அனைத்தும்-எல்லாத் துளைகளையும். முறை-முறையாக. த்: சந்தி. தானம்-அவற்றுக்கு உரிய இடங்களை; ஒருமை பன்மை மயக்கம். சோதித்து-சோதனை செய்து பார்த்து விட்டு. வைத்த-தம்முடைய திருவாயை வைத்து ஊதிய. துளை-துளையின். ஆராய்ச்சி-ஆராய்ச்சியை. வக்கரனை வழிபோக்கி-இராக சோதனையை உணர்வதற்காக விரல்களை முறையே செலுத்தி. ஒத்த-ஒத்திருக்கும். நிலை-நிலையை. உணர்ந்ததற்பின்-அறிந்து கொண்ட பிறகு. ஒன்று முதற்படி முறை

யாம்-சட்ஜம், ரிஷபம், காந்தாரம், மத்திமம், பஞ்சமம், தைவதம், நிஷாதம் என்பவற்றை முறையாகும். என்பவற்றை-என்ற சுரங்களை. அத்தகைமை-அந்தப் பான்மையில். ஆரோசை-ஆரோகணம். அமரோசைகளின்-அவரோகணம் என்னும் ஓசைகளில். அமைத்தார்-ஆனாய நாயனார் அமையும் வண்ணம் புரிந்தார்.

பிறகு வரும் 25-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஆனாய நாயனார் சுரங்கள் மாறிவரும் முதற்பண் ஆகிய குறிஞ்சிப் பண்ணினை அமைத்த பிறகு வளரும் முல்லைப் பண்ணை உண்டாக்கி ஏறியுள்ள பாலை யாழுக்கு அமைந்த தாரம், உழை என்னும் இரண்டும் சம்பந்தப்படுமாறு விடுகின்ற இடத்தை கங்கை ஆறு தங்கும் சடாபாரத்தைப் பெற்ற திருமுடியாராகிய நடராஜப் பெருமானாருக்கு உரிய ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தின் இசை பெருகி எழ சங்கீத சாத்திரத்தில் கூறப்பட்ட இனிகுரலோடும் கொடிப்பாலை என்னும் பண்ணில் நிற்கச் செய்து.' பாடல் வருமாறு;

'' மாறுமுதற் பண்ணின்பின் வளர்முல்லைப் பண்ஆக்கி
ஏறியதா ரமும்உழையும் கிழமைகொள இடும்தானம்
ஆறுலவும் சடைமுடியார் அஞ்செழுத்தின் இசைபெருகக்
கூறியபட் டடைக்குரலாம் கொடிப்பாலை யினில்
நிறுத்தி. ''

இந்தப் பாடல் குளகம். மாறு-ஆனாய நாயனார் மாறி வரும். முதற்பண்ணின்பின்-முதற்பண் ஆகிய குறிஞ்சிப் பண்ணை அமைத்த பிறகு. வளர்-வளரும். முல்லைப்பண்-முல்லைப் பண்ணினை. ஆக்கி-அமைத்து. ஏறிய-உயர்ந்த ஓசையாக உள்ள. தாரமும் உழையும்-தாரம், உழை என்னும் இரண்டும். கிழமைகொள-சம்பந்தப் படுமாறு. கொள:இடைக்குறை. இடும்-வரும். தானம்-இடத்தை. ஆறு-கங்கையாறு. உலவும்-தங்கும். சடை-சடாபாரத்தைப்

பெற்ற. முடியார்-திருமுடியை உடையவராகிய நடராஜப் பெருமானாருக்கு உரிய. அஞ்சு எழுத்தின்-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தி னுடைய. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். இசை பெருக-இசை பெருகி எழ. க்:சந்தி. கூறிய-சங்கீத சாத்தி ரத்தில் சொல்லப்பட்ட. பட்டடைக்குரலாம் கொடிப்பாலை யினில்-இனி குரலாகும் கொடிப்பாலை என்னும் பண்ணில். இருத்தி-இருக்கச் செய்து.

பிறகு வரும் 26-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அமைந்த இசைக்கு உரிய பண், பண்ணி யல், திறம், திறத்திறம் என்னும் நான்கிலும் ஆனாய நாயனார் தாம் ஊதும் கொடிப்பாலை என்னும் பண்ணுக்கு அமைந்த கூறுபாடாகிய இசையை எடுத்து மேவிய துளைகளில் பற்றுபவற்றையும் விடுப்பவை ஆகும் விரல் களினுடைய வரிசையில் சிவந்த பிரகாசம் புல்லாங்குழலில் பெரிதும் விளங்க திருவாளனாகிய நடராஜப் பெருமானுக்கு உரிய ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தைப் பரிசுத்தமாகிய இசையினுடைய கிளைகளாக மேற்கொள்ளும் துறைகளாகிய ஆயத்தம், எடுப்பு, உக்கிரம், சஞ்சாரம், இடாயம் என்னும் ஐந்து துறைகளில் முறையை விளையச் செய்தார்.' பாடல் வருமாறு:

"ஆயஇசைப் புகல்நான்கின் அமைந்தபுகல் வகைஎடுத்து
மேயதுளை பற்றுவன விடுப்பனவாம் விரல்நிரையிற்
சேயஒளி இடையலையத் திருவாளன் எழுத்தஞ்சும்
தூயஇசைக் கிளைகொள்ளும் துறையஞ்சின் முறை
விளைத்தார்."

ஆய-அவ்வாறு அமைந்த. இசை-இசைக்கு உரிய. ப்:சந்தி. புகல்-பண், பண்ணியல், திறம், திறத்திறம் நான்கின்-என்னும் நான்கிலும். அமைந்த-ஆனாய நாயனார் தாம் ஊதும் கொடிப்பாலை என்னும் பண்ணுக்கு அமைந்த.

புகல்வகை எடுத்து-கூறுபாடாகிய இசையை எடுத்து. மேய-மேவிய. துளை-துளைகளில்; ஒருமை பன்மை மயக்கம். பற்றுவன-பற்றும் துளைகளையும். விடுப்பன-விடுக்கும் துளைகள். ஆம்-ஆகும். விரல்-விரல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரையில்-வரிசையில். சேய-சிவந்த. ஒளி-பிரகாசம். இடை அலைய-புல்லாங்குழலில் பெரிதும் விளங்க. த்:சந்தி. திருவாளன்-திருவாளனாகிய நடராஜப் பெருமானுக்கு உரிய. எழுத்து அஞ்சும்-ந, ம, சி, வா, ய என்னும் எழுத்துக்கள் ஐந்தும் அடங்கிய பஞ்சாட்சரத்தை. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். தூய பரிசுத்தமாகிய. இசைக்கிளை-இசையினுடைய கிளைகளாக. கிளை: ஒருமை பன்மை மயக்கம். கொள்ளும்-மேற்கொள்ளும். துறை-துறைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். அஞ்சின்-ஆயத்தம், எடுப்பு, உக்கிரம், சஞ்சாரம், இடாயம் என்னும் ஐந்து துறைகளில். முறை-முறையை. விளைத்தார்-விளையச் செய்தார்.

திருவாளன்: ''திருவாளன் திருநீறு திலகவதியார் அளிப்ப.'' என்று சேக்கிழார் வேறோரிடத்தில் பாடியருளி யதையும் காண்க.

பிறகு உள்ள 27-ம் பாடலின் கருத்து வருமாறு:

'மந்தரஸ்தாயியிலும் மத்திமஸ்தாயியிலும் தாரஸ்தாயி யிலும் வரையறுத்த முறையினால் சுவரஸ்தானத்துக்கு உரிய துளைகளை மெலிவு உண்டாகச் செய்தும், சமமாக வைத்துக் கொண்டும், வலிவை அடையச் செய்தும் அந்தரத் தில் விரல்களின் தொழில்களை அளவு உண்டாகுமாறு அசைத்து இயங்கச் செய்து ஆனாய நாயனார் அழகைப் பெற்ற சிவந்த கோவைப் பழங்களைப் போன்ற உதடுகளைப் பெற்ற தம்முடைய திருவாயும் துளையினு டைய வாயும் தொடர்பைப் பெற.' பாடல் வருமாறு:

''மந்தரத்தும் மத்திமத்தும் தாரத்தும் வரன்முறையால்
தந்திரிகள் மெலிவித்தும் சமம்கொண்டும் வலிவித்தும்

அந்தரத்து விரல்தொழில்கள் அளவுபெற அசைத்தியக்கிச்
சுந்தரச்செம் கனிவாயும் துளைவாயும் தொடக்குண்ண.''

இந்தப் பாடல் குளகம். மந்தரத்தும்-மந்தரஸ்தாயியிலும். மத்திமத்தும்-மத்திமஸ்தாயியிலும். தாரத்தும்-தாரஸ்தாயியிலும். வரன்முறையால்-வரையறுத்த முறையினால். தந்திரிகள்-சுவரஸ்தானத்துக்கு உரிய துளைகளை. மெலிவித்தும்-மெலிவு உண்டாகச் செய்தும். சமம்-சமமாக. கொண்டும்-வைத்துக் கொண்டும். வலிவித்தும்-வலியை அடையச் செய்தும். அந்தரத்து-அந்தரத்தில். விரல்-விரல்களின்; ஒருமை பன்மை மயக்கம். தொழில்கள்-தொழில்களை. அளவு பெற-அளவு உண்டாகுமாறு. அசைத்து இயக்கி-அசைத்து இயங்கச் செய்தும். ச்:சந்தி. சுந்தர-ஆனாய நாயனார் அழகைப் பெற்ற. ச்:சந்தி. செம்-சிவந்த. கனி-கோவைப் பழங்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். வாயும்-உதடுகளைப் பெற்ற தம்முடைய வாயும். துளைவாயும்-துளையினுடைய வாயும். தொடக்கு உண்ண-தொடர்பினைப் பெற.

பிறகு உள்ள 28-ஆம் பாடலின் கருத்து வருமாறு;

'ஆனாய நாயனார் தாம் நினைத்த சங்கீத சாத்திரத்தில் கூறப்பெற்ற பெருவண்ணம், இடைவண்ணம், வனப்பு என்று வரையறுக்கப் பெறும் வண்ணங்களைப் பெற்ற இசையின் வகைகள் எல்லாவற்றையும் மிக இனிமையான கீதநாதத்தில் சேர்ந்த தாளமும், இராகமும் தூக்கினுடைய நடையின் முதலில் உள்ள கதியில் பண் அமையுமாறு எழுகின்ற இனிய கானத்தின் நாதத்தை எல்லா இடங்களிலும் பரவுமாறு புரிந்தார்.' பாடல் வருமாறு:

'' எண்ணிய நூற்பெருவண்ணம் இடைவண்ணம்
வனப்பென்னும்
வண்ணஇசை வகைஎல்லாம் மாதுரிய நாதத்தில்
நண்ணியபா ணியும்இயலும் தூக்குநடை முதற்கதியில்
பண்ணமைய எழும்ஓசை எம்மருங்கும் பரப்பினார்.''

எண்ணிய-ஆனாய நாயனார் தாம் நினைத்த. நூல்-சங்கீத சாத்திரத்தில் கூறப்பெற்ற. பெருவண்ணம்-பெரிய வண்ணம். இடை வண்ணம்-நடுவில் இருக்கும் வண்ணம். வனப்பு என்னும்-வனப்பு என்று வரையறுக்கப் பெறும். வண்ண-வண்ணங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். இசை-இசையின். வகை-வகைகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றையும். மாதுரிய-மிகவும் இனிமையாக உள்ள. நாதத்தில்-கீத நாதத்தில். நண்ணிய-சேர்ந்த. பாணியும்-தாளமும். இயலும்-இராகமும். தூக்கு-தூக்கினுடைய. நடை-நடையின். முதல்-முதலில் உள்ள. கதியில்-கதியினில். பண் அமைய-பண் அமையுமாறு. எழும்ஓசை-எழும் இனிய கானத்தின் நாதத்தை. எம்மருங்கு-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். பரப்பினார்-அந்த நாயனார் பரவுமாறு புரிந்தார்.

அடுத்து வரும் 29-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'வள்ளலாராகிய ஆனாய நாயனார் ஊதும் அழகிய துளைகள் அமைந்த மூங்கிலாற் செய்யப் பெற்ற புல்லாங் குழலில் உள்ளே தங்கும் பாடல் ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரமாக வைத்து அந்தப் புல்லாங்குழலிலிருந்து வழிந்து எழும் மிகவும் இனிமையான கீதநாதமாகிய வெள்ளம் நிரம்பி எந்த வகையான உயிர்களுக்கும் வானத்தின் மேல் தேவர்களுக்கு உரிய கற்பக மரத்தில் மலர்ந்திருக்கும் மலர்களில் விளைந்த தேனைத் தெளிவாக உள்ள அமுதத்தோடு கலந்து காதுகளில் வார்ப்பதைப் போலத் தேங்குமாறு புரிய.' பாடல் வருமாறு:

" வள்ளலார் வாசிக்கும் மணித்துளைவாய் வேய்ங்குழலின்
உள்ளுறைஅஞ் செழுத்தாக ஒழுகிஎழு மதுரஒலி
வெள்ளம்நிறைந் தெவ்வுயிர்க்கும் மேலமரர் தருவிளை தேன்
தெள்ளமுதின் உடன்கலந்து செவிவார்ப்ப தெனத்தேக்க."

இந்தப் பாடல் குளகம். வள்ளலார்-வள்ளலாராகிய

ஆனாய நாயனார். வாசிக்கும்-ஊதும். மணி-அழகைப் பெற்ற. த்:சந்தி. துளை-துளைகள்; ஒருமை பன்மை மயக்கம். வாய்-அமைந்த. வேய்-மூங்கிலாற் செய்யப் பெற்ற. ங்:சந்தி. குழலின்-புல்லாங்குழலில். உள்-உள்ளே. உறை-தங்கும் பாடல். அஞ்சு எழுத்து ஆக-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரமாக வைத்து. ஒழுகி-அந்தப் புல்லாங்குழலிலிருந்து வழிந்து. எழு-எழும். மதுர-மிகவும் இனிமையான. ஒலிவெள்ளம்-கீத நாதமாகிய வெள்ளம். நிறைந்து-நிரம்பி. எவ்வுயிர்க்கும்-எந்த வகையான உயிர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மேல்-வானத்தின் மேல். அமரர்-தேவர்களுக்கு உரிய; ஒருமை பன்மை மயக்கம். தரு-கற்பக மரத்தில் மலர்ந்திருக்கும் மலர்களில்: ஆகுபெயர். விளை-விளைந்த. தேன்-தேனை. தெள்-தெளிவாக உள்ள. அமுதின் உடன்-அமுதத்தோடு. கலந்துசெவி-கலந்து காதுகளில். செவி: ஒருமை பன்மை மயக்கம். வார்ப்பது என-வார்ப்பது என்று கூறுமாறு. என: இடைக்குறை. த்:சந்தி. தேக்க-தேங்குமாறு புரிய.

பிறகு வரும் 30-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பசுமாடுகளினுடைய வரிசைகள் அறுகம்புற்களை மேய்ந்து அசைபோடாமல் தம்முடைய பக்கத்தை அடைந்து செயலிழந்து நிற்கவும்; பாலின் நுரையைத் தங்களுடைய வாய்களைத் தங்களுடைய தாய்ப் பசுமாடுகளினுடைய முலைகளைப் பாலைக் குடிப்பதற்காகத் தங்களுடைய வாய்களினால் கவ்விக் கொள்ளும் இளமையை உடைய கன்றுக் குட்டிகளின் கூட்டமும், தங்களுடைய உணவாகிய புற்களை மேய்வதை மறந்து விட, விசாலமான கொம்புகளைப் பெற்ற காளை மாடுகளினுடைய கூட்டமும், மான் முதலாகும் காட்டில் வாழும் மிருகங்களும் தங்களுடைய உடம்புகளில் உள்ள மயிர்களை அரும்புகளைப் போலச் சிலிர்த்துக் கொண்டு ஆனாய நாயனாரிடம் வந்து சேர.' பாடல் வருமாறு:

"ஆனிரைகள் அறுகருந்தி அசைவிடா தணைந்தயரப்
பானுரைவாய்த் தாய்முலையிற் பற்றும்இளங் கன்றினமும்
தானுணவு மறந்தொழியத் தடமருப்பின் விடைக்குலமும்
மான்முதலாம் கான்விலங்கும் மயிர்முகிழ்த்து
வந்தணைய."

இந்தப் பாடலும் குளகம். ஆன்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரைகள்-வரிசைகள். அறுகு-அறுகம் புற்களை; ஒருமை பன்மை மயக்கம். அருந்தி-மேய்ந்து. அசைவிடாது-அசை போடாமல். அணைந்து - தம்முடைய பக்கத்தை அடைந்து. அயர-செயல் இழந்து நிற்க. ப்: சந்தி. பால்-பாலின். நுரை-நுரையை. வாய்-தங்களுடைய வாய்களை; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தாய்-தங்களுடைய தாய்ப் பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். முலையில்-முலைகளை; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். பற்றும்-கவ்விக் கொள்ளும். இளம்-இளமைப் பருவத்தைப் பெற்ற. கன்று-கன்றுக் குட்டிகளின்; ஒருமை பன்மை மயக்கம். இனமும்-கூட்டமும். தான்: அசை நிலை. உணவு-தங்களுடைய உணவாகிய புற்களை; ஒருமை பன்மை மயக்கம். மறந்து ஒழிய-மேய்வதை மறந்து விட. த்:சந்தி. தட-விசாலமான; பெரிய. மருப்பின்-கொம்புகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். விடை-காளை மாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குலமும்-கூட்டமும். மான் முதலாம்-மான் முதலாகும். கான்-காட்டில் வாழும். விலங்கும்-மிருகங்களும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: சிங்கம், புலி, வேங்கைப் புலி, யானை, ஓநாய், நரி, கரடி, செந்நாய், காட்டெருமை மாடு, காட்டுப்பசு முதலியவை. மயிர்-தங்களுடைய உடம்புகளில் உள்ள மயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். முகிழ்த்து-அரும்புகளைப் போலச் சிலிர்த்துக் கொண்டு. வந்து-ஆனாய நாயனாரிடம் வந்து. அணைய-சேர.

அடுத்து உள்ள 31-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கூத்தாடும் மயில்களினுடைய கூட்டங்களும் ஆனாய நாயனார் புல்லாங்குழலை ஊதும் அந்த இடத்திற்கு வந்து அசைவதையும் மறந்து போய் அவருடைய பக்கத்தை அடையவும், தங்களுடைய காதுகளினூடு இசை நிரம்பிய உள்ளங்களோடு பறவைகளினுடைய கூட்டமும் அவருடைய பக்கத்தில் தரையில் படுத்துக் கொண்டு உணர்ச்சி அகல, அந்தப் பக்கங்களில் தங்களுடைய தொழில்களைச் செய்து கொண்டு இருக்கும் கூட்டமாகக் கூடியுள்ள வலிமையைப் பெற்ற பசுமாடுகளை மேய்க்கும் இடையர்களும் தாங்கள் புரியும் தொழில்களைக் குறையாக விட்டுவிட்டு அந்த இடத்தில் நின்று கொண்டிருந்தார்கள்.' பாடல் வருமாறு:

"ஆடும்மயில் இனங்களும்அங் கசைவயர்ந்து மருங்கணுக
ஊடுசெவி இசைநிறைந்த உள்ளமொடு புள்ளினமும்
மாடுபடிந் துணர்வொழிய மருங்குதொழில் புரிந்தொழுகும்
கூடியவன் கோவலரும் குறைவினையின் துறைநின்றார்."

ஆடும்-கூத்தாடும். மயில் மயில்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இனங்களும்-கூட்டங்களும். அங்கு-ஆனாய நாயனார் புல்லாங்குழலை ஊதும் அந்த இடத்திற்கு வந்து. அசைவு-அசைவதையும். அயர்ந்து-மறந்து போய். மருங்கு-அவருடைய பக்கத்தை. அணுக-அடையவும். ஊடு செவி-தங்களுடைய காதுகளினூடு. செவி: ஒருமை பன்மை மயக்கம். இசை நிறைந்த-இசை நிரம்பிய. உள்ளமொடு-உள்ளங்களோடு; ஒருமை பன்மை மயக்கம். புள்-பறவைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இனமும்-கூட்டமும். அவைகளாவன: காகம், கிளி, பருந்து, கழுகு, தூக்கணாங் குருவி, சிட்டுக்குருவி, கொக்கு, நாரை, மைனா முதலியவை. மாடு-அந்த நாயனாருடைய பக்கத்தில். படிந்து-தரையில் படுத்துக் கொண்டு. உணர்வு - உணர்ச்சி. ஒழிய - அகல. மருங்கு - அந்தப் பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். தொழில் - தங்களுடைய தொழில்களை; ஒருமை பன்மை மயக்கம். புரிந்து ஒழுகும்-செய்து கொண்டிருக்கும். கூடிய-

கூட்டமாகக் கூடியுள்ள. வன்-வலிமையைப் பெற்ற. கோவல ரும்-பசுமாடுகளை மேய்க்கும் இடையர்களும்; ஒருமை பன்மை மயக்கம். குறைவினையின் துறை-தாங்கள் புரியும் தொழில்களைக் குறையாக விட்டுவிட்டு அந்த இடத்தில். நின்றார்-நின்று கொண்டிருந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 32-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பாம்புகள் வாழும் உலகங்களில் இருப்பவர்கள் மேவி யுள்ள பிலங்களின் வழியே வந்து சேர்ந்தார்கள்; மாணிக்கங் கள் இருக்கும் மலையில் வாழும் சூரமகளிர் அந்த ஆனாய நாயனாருடைய பக்கத்திற்கு வந்து மயக்கத்தை அடைந்த வர்களாகி நிறைய இருந்தார்கள்; குறைதல் இல்லாத திரு மேனிகளில் பிரகாசம் வீசும் வித்தியாதரர்களும், சாரணர் களும், கின்னரர்களும், தேவர்களும் அழகிய வானத்தில் அயர்ச்சியை அடைந்து விமானங்களின் மேல் ஏறிக் கொண்டு வந்து சேர்ந்தார்கள்.' பாடல் வருமாறு:

''பணிபுவனங் களில்உள்ளார் பயில்பிலங்கள்
வழியணைந்தார்;
மணிவரைவாழ் அரமகளிர் மருங்குமயங் கினர்மலிந்தார்;
தணிவில்ஒளி விஞ்சையர்கள் சாரணர்கின் னரர்அமரர்
அணிவிசும்பில் அயர்வெய்தி விமானங்கள் மிசை
அணைந்தார்.''

பணி-பாம்புகள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். புவனங்களில்-நாகலோகங்களில். உள்ளார்-இருப்பவர்கள். ஒருமை பன்மை மயக்கம். பயில்-மேவியுள்ள. பிலங்கள்வழி-பிலங்களின் வழியே. பிலம்-முழை. அணைந்தார்-வந்து சேர்ந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். மணி-மாணிக்கங்கள் இருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வரைவாழ்-மலையில் வாழும். அரமகளிர்-சூரரமகளிர். மருங்கு-அந்த ஆனாய நாயனாருக்குப் பக்கத்திற்கு வந்து. மயங்கினர்-மயக்கத்தை அடைந்தவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம்; முற்றெச்சம்.

மலிந்தார்-நிறைய இருந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். தணிவு-குறைதல். இல்-இல்லாத; கடைக்குறை. ஒளி-தங்களுடைய திருமேனிகளில் பிரகாசம் வீசும். விஞ்சையர்கள்-வித்தியாதரர்களும். சாரணர் - சாரணர்களும்; ஒருமை பன்மை மயக்கம். கின்னரர்-கின்னரர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அமரர்-தேவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அணி-அழகிய. விசும்பில்-வானத்தில். அயர்வு-அயர்ச்சியை. எய்தி-அடைந்து. விமானங்கள் மிசை-விமானங்களின் மேல் ஏறிக் கொண்டு வந்து. அணைந்தார்-வந்து சேர்ந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 33-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தேவலோகத்துப் பெண்மணிகள் கற்பக மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில்களின் பக்கத்திலிருந்து தங்களுடைய கைகளாகிய செந்தாமரை மலர்களால் பாலை உண்ணச் செய்யும் கோவைப் பழங்களைப் போன்ற வாய்களைப் பெற்ற மென்மையான கிளிகளோடு நறுமணம் பரவிய தங்கள் கூந்தல்கள் அவிழ்ந்து அலைய விமானங்களில் விரைவோடு ஏறிக் கொண்டு எங்கும் பரவிய ஆனாய நாயனார் ஊதும் குழலிலிருந்து வரும் ச, ரி, க, ம, ப, த, நி, என்னும் ஏழு சுவரங்களைப் பெற்ற சங்கீதமாகிய அமுதத்தைத் தங்களுடைய காதுகளால் கேட்டுக் குடித்தார்கள்.' பாடல் வருமாறு:

**"சுரமகளிற் கற்பகப்பூஞ் சோலைகளின் மருங்கிருந்து
கரமலரின் அமுதூட்டும் கனிவாய்மென் கிள்ளையுடன்
விரவுநறும் குழல்அலைய விமானங்கள் விரைந்தேறிப்
பரவியஏ ழிசைஅமுதம் செவிமடுத்துப் பருகினார்."**

சுரமகளிர்-தேவலோகத்துப் பெண்மணிகள். கற்பக-கற்பக மரங்கள் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். பூஞ்சோலைகளின்-பூம்பொழில்களின். மருங்கிருந்து-பக்கத்திலிருந்து. கர-தங்களுடைய கைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். மலரின்-செந்தாமரை மலர்களால்; ஒருமை பன்மை

மயக்கம். அமுது-பாலை. ஊட்டும்-குடிக்கச் செய்யும். கனி-கோவைப் பழங்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். வாய்-வாய்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையான. கிள்ளையுடன்-கிளிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். விரவுநறும்-நறுமணம் பரவிய. குழல்-தங்களுடைய கூந்தல்கள்; ஒருமை பன்மை மயக்கம். அலைய-அவிழ்ந்து புரள. விமானங்கள்-விமானங்களில். விரைந்து-வேகத்தை அடைந்து. ஏறி-ஏறிக் கொண்டு. ப்: சந்தி. பரவிய-எங்கும் பரவிய. ஏழிசை-ஆனாய நாயனார் ஊதும் புல்லாங்குழலிலிருந்து வரும் ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுவரங்களைப்பெற்ற சங்கீதமாகிய. அமுதம்-அமுதத்தை. செவி-தங்களுடைய காதுகளால்; ஒருமை பன்மை மயக்கம். மடுத்து-கேட்டு. ப்:சந்தி. பருகினார்-குடித்தார்கள்; ஒருமை பன்மைமயக்கம். "செவிவாயாக நெஞ்சுகளனாகக் கேட்டவை கேட்டவை." (40) என்று நன்னூலில் வருவதைக் காண்க.

பிறகு உள்ள 34-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பிறரைத் துன்புறுத்துபவர்களும், பிறரால் துன்பத்தை அடைந்து மெலிவை அடைபவர்களும் தங்களுடைய உணர்ச்சி ஒன்றாக அமைய ஆனாய நாயனார் புல்லாங்குழலில் ஊதும் கீதநாதத்தை விரும்புவதனால் மிகுதியான வாயில் வெண்மையான பற்களைக் கொண்ட பாம்பு, அந்தக் கீதநாதத்தைக் கேட்க வந்த மயிலின் மேல் மயங்கி விழும்; நடுங்காத நிலையைப் பெற்ற சிங்கமும் விசாலமான யானையும் ஒருங்கே அந்தக் கீதநாதத்தைக் கேட்கும் பொருட்டு வந்து சேரும்; புற்களைத் தன்னுடைய வாயில் கொண்ட மானும் புலியினுடைய வாய்க்குப் பக்கத்தில் வந்து சேரும்.' பாடல் வருமாறு:

"நலிவாரும் மெலிவாரும் உணர்வொன்றாய் நயத்தலினால்
மலிவாய்வெள் ளெயிற்றரவம் மயில்மீது மருண்டுவிழும்;
சலியாத நிலைஅரியும் தடங்கரியும் உடன்சாரும்;
புலிவாயின் மருங்கணையும் புல்வாய புல்வாயும்."

இது ஒன்றனோடு ஒன்று பகையாக உள்ள உயிர்கள் அந்தப் பகைமையை மறந்து ஆனாய நாயனார் ஊதிய புல்லாங்குழலின் கீதநாதத்தில் மயங்கி நிற்பதைக் குறிக்கிறது. நலிவாரும்-பிறரைத் துன்புறுத்துபவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். மெலிவாரும்-பிறரால் துன்பத்தை அடைந்து மெலிவை அடைபவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். உணர்வு-தங்களுடைய உணர்ச்சி.ஒன்றாய்-ஒன்றாக அமைய. நயத்தலினால்-ஆனாய நாயனார் புல்லாங்குழலில் ஊதும் கீத நாதத்தை விரும்புவதனால். மலி-மிகுதியான. வாய்-வாயில். வெண் - வெண்மையான. எயிற்று-பற்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். அரவம்-பாம்பு. மயில் மீது-அந்தக் கீத நாதத்தைக் கேட்பதற்காக வந்த மயிலின் மேல். மருண்டு விழும்-மயங்கி விழும். சலியாத-நடுங்காத. நிலை-நிலையைப் பெற்ற. அரியும்-சிங்கமும். தடம்-விசாலமான உடம்பை உடைய. கரியும்-அந்தக் கீதநாதத்தைக் கேட்கும் பொருட்டு வந்த யானையும். உடன்சாரும்-சேர்ந்து நிற்கும்.புல்வாய-புற்களைத் தன்னுடைய வாயில் கொண்ட. புல்: ஒருமை பன்மை மயக்கம். புல்வாயும்-மானும். அது தன் வாயில் கொண்ட புற்களை மெல்லாமல் நின்று கீத நாதத்தைக் கேட்கும். புலிவாயில்-அந்தக் கீத நாதத்தைக் கேட்க வந்த புலியினுடைய வாய்க்கு; உருபு மயக்கம். மருங்கு-பக்கத்தில். அணையும்-வந்து சேரும்.

விலங்குகளும் இசையைக் கேட்டு மயங்கும் என்பதை, ''காட்டில் விலங்கறியும் கைக்குழந்தை தானறியும், பாட்டின் சுவையதனைப் பாம்பறியும் என்றுரைப்பார்.'' என்று பாரதியார் பாடுவதனாலும் அறியலாம்.

பிறகு வரும் 35-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஆனாய நாயனார் புல்லாங்குழலை ஊதும் இடத்தில் வீசிய காற்று வேகத்தைப் பெற்று வீசுவது இல்லாமல் நிற்கும்; அந்த இடத்தில் வளர்ந்து நிற்கும் பல வகை மரங்களில் மலர்கள் மலர்ந்திருக்கும் கிளைகள் அசையா; கருமையான

மலையிலிருந்து குதித்து விழும் அருவிகளும் காட்டாறுகளும் ஒலித்துக்கொண்டு ஓடா; பெரிய மேகங்களின் கூட்டங்கள் பக்கத்தில் ஓடுவது இல்லாமல் இருக்க மழையைப் பொழியா; கருமையான வானத்தில் மேகங்கள் முழக்கத்தைச் செய்யா; ஏழு கடல்களும் தங்களிடத்தில் தளும்பா.' பாடல் வருமாறு:

''மருவியகால் விசைத்தசையா; மரங்கள்மலர்ச் சினைசலியா;
கருவரைவீழ் அருவிகளும் கான்யாறும் சலித்தோடா;
பெருமுகிலின் குலங்கள்புடை பெயர்வொழியப் புனல்சோரா;
இருவிசும்பி னிடைமுழங்கா; எழுகடலும் இடைதுளும்பா.'

மருவிய-ஆனாய நாயனார் புல்லாங்குழலை ஊதும் இடத்தில் வீசிய. கால்-காற்று. விசைத்து-வேகத்தைப் பெற்று. அசையா-வீசுவது இல்லாமல் தம்பித்து நின்று விடும். மரங்கள்-அந்த இடத்தில் வளர்ந்து நிற்கும் பலவகையான மரங்களில். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், தென்னை மரம், பனை மரம், கடம்ப மரம், மகிழ மரம், பலவகை வாழை மரங்கள், புளிய மரம், பலா மரம், மா மரம், வில்வ மரம்,விளா மரம், தமால மரம்,மருத மரம், பூவரச மரம், அரச மரம், ஆல மரம், நெட்டிலிங்க மரம், அசோக மரம் முதலியவை. மலர்-மலர்கள் மலர்ந் திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சினை-கிளைகள்; ஒருமை பன்மை மயக்கம். சலியா-அசையாமல் இருக்கும். கரு-கருமையான. வரை-மலையிலிருந்து. வீழ்-குதித்து விழும். அருவிகளும் கான்யாறும்-அருவிகளும் காட்டாறும். சலித்து-ஒலித்து. ஓடா-ஓடாமல் நின்று விடும். பெரு-பெரிய. முகிலின்-மேகங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலங்கள்-கூட்டங்கள். புடை-பக்கத்தில். பெயர்-ஓடுவது. ஒழிய-நீங்க. ப்:சந்தி. புனல்-மழை நீரை. சோரா -பொழியாமல் நின்று விடும். இரு-கருமையான.விசும்பினிடை -வானத்தில். முழங்கா-அந்த மேகங்கள் முழக்கத்தைச்

செய்யாமல் இருக்கும். எழு கடலும்-உப்புக் கடல், கருப்பஞ் சாற்றுக் கடல், கள்ளுக் கடல், நெய்க் கடல், தயிர்க் கடல், பாற் கடல், நன்னீர் கடல் என்னும் ஏழு கடல்களும். கடல்: ஒருமை பன்மை மயக்கம். இடை-தங்களிடத்தில். துளும்பா-தளும்பாமல் அமைதியாக இருக்கும்.

பிறகு உள்ள 36-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வண்டுகள் மொய்க்கும் நறுமணத்தை மிகுதியாக வீசும் கொன்றை மலர் மாலையை அணிந்த தலையில் சடாபாரத்தைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானாருடைய திருவடிகளை வணங்கும் திருத்தொண்டராகிய ஆனாய நாயனார் தம்முடைய சிவந்த அதரங்களைக் கொண்ட திருவாயின்மேல் வைத்த அழகிய புல்லாங்குழலை ஊதுவதால் உண்டான கீத நாதம் தங்களை உருகுமாறு செய்ய, இவ்வண்ணம் நிற்பவையாகிய அசரங்களும், நடப்பனவாகிய சரங்களும் அந்த நாயனார் ஊதிய சங்கீதத்தின்மயமாகித் தங்களுடைய உடம்புகளில் தங்கியிருக்கும் கண்கள், காதுகள், தோல், மூக்கு, நாக்கு என்னும் ஐந்து இந்திரியங்களும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக் கரணங்களும் அமைந்த ஒன்றாக ஆகிவிட்டன.' பாடல் வருமாறு:

''இவ்வாறு நிற்பனவும் சரிப்பனவும் இசைமயமாய்
மெய்வாழும் புலன்கரணம் மேவியஒன் றாயினவால்,
மொய்வாச நறுங்கொன்றை முடிச்சடையார் அடித்தொண்டர்
செவ்வாயின் மிசைவைத்த திருக்குழல்வா சனைஉருக்க.''

இதில் உள்ள பின் இரண்டு அடிகளின் பொருளை முதலில் கொள்ள வேண்டும். மொய்-வண்டுகள் மொய்க்கும். வாச நறும்-நறுமணத்தை மிகுதியாக வீசும். கொன்றை-கொன்றை மலர் மாலையை அணிந்த. முடி-தலையில். ச்: சந்தி. சடையார்-சடாபாரத்தைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானாருடைய. அடி-திருவடிகளை வணங்கும்

ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தொண்டர்-திருத் தொண்டராகிய ஆனாய நாயனார். செவ் - தம்முடைய சிவந்த. வாயின் மிசை வைத்த-அதரங்களைக் கொண்ட திருவாயின் மேல் வைத்து ஊதிய. திரு-அழகிய. க்:சந்தி. குழல்-புல்லாங்குழலை. வாசனை-ஊதுவதால் உண்டான கீத நாதம்; ஆகுபெயர். உருக்க-தங்களை உருகுமாறு செய்ய. இவ்வாறு-இந்த வண்ணம். நிற்பனவும்-நிற்பவை யாகிய அசரங்களும்; அவை மரம், செடி, கொடி என்பவை. சரிப்பனவும்-நடப்பவை ஆகிய சரங்களும்; அவை மனிதர் கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, கடல் வாழ் பிராணி கள், புழுக்கள், பூச்சிகள், பாம்புகள், தவளைகள், தேரைகள் முதலியவை. இசைமயமாய்-அந்த நாயனார் ஊதிய சங் கீதத்தின் மயமாகி. மெய்-தங்களுடைய உடம்புகளில்;ஒருமை பன்மை மயக்கம். வாழும்-தங்கியிருக்கும். புலன்-கண்கள், காதுகள், தோல், மூக்கு, நாக்கு என்னும் ஐந்து இந்திரியங் களும்; ஒருமை பன்மை மயக்கம். கரணம்-மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அந்தக்கரணங்களும்; ஒருமை பன்மை மயக்கம். மேவிய-அமைந்த; பொருந்திய ஒன்று ஆயின-ஒன்றாக ஆகி விட்டன. ஆல்: அசை நிலை.

பிறகு வரும் 37-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'உண்மையான பக்தராகிய ஆனாய நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் இருந்த பக்தியினால் உண்டான இசையை ஊதும் புல்லாங்குழலின் கீத நாதம் இந்தப் பூ மண்டலத் திலும் நிறையச் செய்து, வானுலகத்தைத் தன்னுடைய வச மாக ஆக்கி, பொய்யான பக்திக்கு எட்டமாட்டாத சிதம் பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பொன்னம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் ஐயனாகிய நடராஜப் பெருமா னுடைய அழகிய திருக்காதுகளின் பக்கத்தை அடையுமாறு பெருகி முழங்கியது.' பாடல் வருமாறு:

"மெய்யன்பர் மனத்தன்பின் விளைந்தஇசைக் குழலோசை
வையந்தன் னையும்நிறைத்து வானந்தன் வயமாக்கிப்

பொய்யன்புக் கெட்டாத பொற்பொதுவில் நடம்புரியும்
ஐயன்றன் திருச்செவியின் அருகணையப் பெருகியதால்.''

மெய்-உண்மையான. அன்பர்-பக்தராகிய ஆனாய நாயனார். மனத்து-தம்முடைய திருவுள்ளத்தில் இருந்த. அன்பின் - பக்தியினால். விளைந்த - உண்டான. இசை- இசையை ஊதும். க்: சந்தி. குழல்-புல்லாங்குழலின். ஓசை-கீத நாதம். வையந்தன்னையும்-இந்தப் பூமண்டலத்திலும்; உருபு மயக்கம். தன்: அசை நிலை. நிறைத்து-நிறையச் செய்து. வானம்-தேவலோகத்தை. தன்-தன்னுடைய வயம். ஆக்கி-வசமாகச் செய்து. ப்:சந்தி. பொய்-பொய்யான. அன்புக்கு-போலிப் பக்திக்கு. எட்டாத-எட்ட முடியாத. பொற்பொதுவில் - சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பொன்னம்பலத்தில். நடம்-திருநடனம். புரியும்-புரிந்தருளும் ஐயன்தன்-ஐயனாகிய நடராஜப் பெருமானுடைய. தன்; அசை நிலை. சிவபெருமானை ஐயன் என்று குறிப்பிடும் இடங்களை வேறோரிடத்தில் காட்டினோம்;ஆண்டுக் கண்டுணர்க. திரு-அழகிய. ச்:சந்தி. செவியின் -திருக்காதுகளின்; ஒருமை பன்மை மயக்கம். அருகு-பக்கத்தை. அணைய-அடையுமாறு. ப்: சந்தி. பெருகியது-பெருகி முழங்கியது. ஆல்: ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 38-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஆனாய நாயனார் ஊதிய புல்லாங்குழலின் கீத நாதத்தைச் செவிமடுத்தருளி திருவருளும் கருணையும் தானே ஆகிய திருவுள்ளத்தைப் பெற்ற தவத்தைப் புரிந்த பூங்கொடியைப் போன்றவளாகிய சிவகாம சுந்தரியோடு கானத்தின் முதற் காரணராக விளங்குபவரும், நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவரும் ஆகிய நடராஜப் பெருமானார் இடபவாகனத்தை ஓட்டிக்கொண்டு வானத்தின் வழியே பிறைச் சந்திரன் தங்கும் சடாபாரம் தொங்க எழுந்தருளி அந்த நாயனார் இருந்த இடத்துக்கு வந்தார்.' பாடல் வருமாறு:

"ஆனாயர் குழலோசை கேட்டருளி அருட்கருணை
தானாய திருவுள்ளம் உடையதவ வல்லியுடன்
கானாதி காரணராம் கண்ணுதலார் விடைஉகைத்து
வானாறு வந்தணைந்தார் மதிநாறும் சடைதாழ.''

ஆனாயர்-ஆனாய நாயனார். குழல் ஓசை-ஊதிய புல்லாங்குழலின் கீத நாதத்தை. கேட்டருளி-செவிமடுத்தருளி. அருள்-திருவருளும். கருணை - கருணையும். தான் ஆய-தானே ஆகிய. திருவுள்ளம் - திருவுள்ளத்தை. உடைய-பெற்ற. தவ-சிவபெருமானுடைய வாம பாகத்தில் எழுந்தருளியிருப்பதற்காகத் தவத்தைப் புரிந்த. வல்லியுடன்-பூங்கொடியைப் போன்ற சிவகாம சுந்தரியோடு. அருள் தான் ஆயவள்: "அருளது சத்தியாகும் அரன்றனக்கு.'' என வருவதைக் காண்க. கான-சங்கீதத்தின். ஆதி காரணராம்-முதற் காரணராக விளங்குபவரும். கண்ணுதலார்- தம்முடையநெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவரும் ஆகியநடராஜப் பெருமானார். விடை-இடபவாகனத்தை. உகைத்து-ஓட்டிக் கொண்டு. வான் ஆறு-வானத்தின் வழியாக. மதி-பிறைச்சந்திரன். நாறும்-தங்கும். சடை-தம்முடைய தலையில் உள்ள சடாபாரம். தாழ-தொங்க. வந்து-எழுந்தருளி. அணைந்தார்-அந்த ஆனாய நாயனார் இருந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார்.

பிறகு உள்ள 39-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'திசைகள் எல்லாவற்றிலும் சிவகணத் தலைவர்கள் தேவர்களுக்கு முன்னால் நெருக்கமாக இருந்து வானத்தின் மேல் செறிந்து எழுந்தருளி வரும் சமயத்தில் வேறு சப்தங்கள் கலவாமல் ஆனாய நாயனார் யாவரும் தலைகள் அசைக்குமாறு எழும் புல்லாங்குழலின் கீத நாதத்தில் ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தால் தம்மைப் புகழ்ந்து ஊதும் இசையை விழைந்து நடராஜப் பெருமானார் எழுந்தருளி வந்து

அந்த நாயனாருக்கு எதிரில் நின்று காட்சி அளித்தார்."
பாடல் வருமாறு:

"திசைமுழுதும் கணநாதர் தேவர்கட்கு முன்நெருங்கி
மிசைமிடைந்து வரும்பொழுது வேற்றொலிகள் விரவாமே
அசையஎழும் குழல்நாதத் தஞ்செழுத்தால் தமைப்பரவும்
இசைவிரும்பும் கூத்தனார் எழுந்தருளி எதிர்நின்றார்."

திசை-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத் திசைகள்; ஒருமை பன்மை மயக்கம். முழுதும்-முழுவதிலும். கணநாதர்-சிவகணத் தலைவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தேவர்கட்கு-தேவர்களுக்கு. முன்-முன்னால். நெருங்கி-நெருக்கமாக இருந்து. மிசை-வானத்தின் மேல். மிடைந்து-செறிந்து. வரும்-எழுந்தருளி வரும். பொழுது-சமயத்தில். வேற்றொலிகள்-வேறு சப்தங்கள். விரவாமே-கலவாமல். அசைய-ஆனாய நாயனார் யாவரும் தங்களுடைய தலைகளை அசைக்குமாறு. எழும் குழல்-எழும் புல்லாங்குழலின். நாதத்து-கீத நாதத்தில். அஞ்செழுத்தால்-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தால். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். தமை-தம்மை; என்றது நடராஜப் பெருமானாரை. ப்:சந்தி. பரவும்-புகழ்ந்து ஊதும். இசை-இசையை. விரும்பும்-விழைந்து கேட்டருளும். கூத்தனார்-நடராஜப் பெருமானார். எழுந்தருளி-எழுந்தருளி வந்து. எதிர்-அந்த நாயனாருக்கு எதிரில். நின்றார்-நின்று காட்சி அளித்தருளினார்.

பிறகு வரும் 40-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு;

'தமக்கு முன்னால் நின்ற இளமையைப் பெற்ற இடப வாகனத்தின் மீது எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய நடராஜப் பெருமானார் எல்லாக் காலத்திலும் செம்மைப் பண்பில் நிலைத்து நின்ற திருவுள்ளத்தைப் பெற்ற பெரியவராகிய ஆனாய நாயனார் ஊதும் அழகிய புல்லாங்

குழலின் வாசிப்பைக் கேட்டருள, "இப்படி நின்று கொண்டிருக்கும் நிலையோடே எம்மிடம் நீ வந்து சேருவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அந்த நாயனாரும் அவ்வாறு நின்று கொண்டிருந்த நிலையை மாற்றுவாராய் ஐயராகிய நடராஜப் பெருமானாருக்கு அழகிய பக்கத்தை அடைந்தார்.' பாடல் வருமாறு:

"முன்நின்ற மழவிடைமேல் முதல்வனார் எப்பொழுதும்
செந்நின்ற மனப்பெரியோர் திருக்குழல்வா சனைகேட்க
'இந்நின்ற நிலையேநம் பாலணைவாய்' எனஅவரும்
அந்நின்ற நிலைபெயர்ப்பார் ஐயர்திரு மருங்கணைந்
தார்."

முன் நின்ற-தமக்கு முன்னால் நின்ற. மழ-இளமையைப் பெற்ற. விடைமேல்-இடப வாகனத்தின் மீது. முதல்வனார்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய நடராஜப் பெருமானார். எப்பொழுதும்-எல்லாக் காலத்திலும். செந்நின்ற-செம்மைப் பண்பில் நிலைத்து நின்ற. செம்மை-நேர்மை. மன-திருவுள்ளத்தைப் பெற்ற. ப்: சந்தி. பெரியோர்-பெருமையை உடையவராகிய ஆனாய நாயனார். திரு-அழகிய. க்:சந்தி. குழல்-ஊதும் புல்லாங்குழலின். வாசனை-வாசிப்பை. கேட்க-கேட்டருள. இந்நின்ற-இப்படி நின்று கொண்டிருந்த. நிலையே-நிலையோடே. நம்பால்-எம்மிடம். அணைவாய் நீ வந்து சேருவாயாக. என-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய; இடைக்குறை. அவரும்-அந்த நாயனாரும். அந் நின்ற-அவ்வாறு நின்று கொண்டிருந்த. நிலை-நிலையை. பெயர்ப்பார்-மாற்றுவாராகி; முற்றெச்சம். ஐயர்-ஐயராகிய நடராஜப் பெருமானாருக்கு. திரு-அழகிய. மருங்கு-பக்கத்தை. அணைந்தார்-அடைந்தார். சிவலோகப் பதவியை அடைந்தார் என்பது கருத்து.

மழவிடை: "மழமால் விடை மிக ஏறி.", "மழவிடையது உடையீரே." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "மழலை ஏற்று மணாளன்." என்று சுந்தர

மூர்த்தி நாயனாரும், "மழவிடை யானே." என்று மாணிக்க வாசகரும், "மழவிடையாற்கு வழிவழி ஆளாய்." என்று சேந்தனாரும், "மழவிடை மேல் எழுந்தருளி வந்ததொரு செயலாலே." என்று சேக்கிழாரும், "மழவிடையோன் பங்கில் உறையும் குயில்." (பிராட்டி களம் காண் படலம், 5) என்று கம்பரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 41-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தேவலோகத்தில் வாழும் தேவர்கள் கற்பக மரத்தில் மலர்ந்த மலர்களின் மழையைச் சொரிய அந்த மழை செறிந்து தரையின் மேல் திகழ, கணக்கு இல்லாத அருமையாக உள்ள முனிவர்களுடைய கூட்டம் வேத மந்திரங்களைக் கூறித் துதிக்க தலைவராகிய ஆனாய நாயனார் புல்லாங் குழலாகிய இசைக் கருவியைப் பக்கத்தில் ஊதி இசையைப் பாடி அவ்விடத்தில் நடராஜப் பெருமானோடு எழுந்தருளப் புண்ணியனார் ஆகிய அந்தப் பெருமானார் எழுந்தருளிச் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பொன்னம் பலத்திற்குள் நுழைந்தார்.' பாடல் வருமாறு:

"விண்ணவர்கள் மலர்மாரி மிடைந்துலகம் மிசைவிளங்க
எண்ணிலரு முனிவர்குழாம் இருக்குமொழி எடுத்தேத்த
அண்ணலார் குழற்கருவி அருகிசைத்தங் குடன்செல்லப்
புண்ணியனார் எழுந்தருளிப் பொற்பொதுவி
னிடைப்புக்கார்."

விண்ணவர்கள்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள். மலர்-கற்பக மரத்தில் மலர்ந்த மலர்களின்; ஒருமை பன்மை மயக்கம். மாரி-மழையைச் சொரிய. மிடைந்து-அந்த மழை செறிந்து. உலகம் மிசை-தரையின் மேல். விளங்க-திகழ. எண்-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. அரு-அருமையாக உள்ள. முனிவர்-முனிவர்களின்; ஒருமை பன்மை மயக்கம். குழாம்-கூட்டம். இருக்கு மொழி வேத மந்திரங்களை; ஒருமை பன்மை மயக்கம். எடுத்து-எடுத்துக் கூறி. ஏத்த-துதிக்க. அண்ணலார் - தலைவராகிய

ஆனாய நாயனார். 'பெருமையைப் பெற்றவர்' எனலும் ஆம். குழல்-புல்லாங்குழலாகிய. கருவி-இசைக் கருவியை. அருகு-பக்கத்தில். இசைத்து-ஊதி இசையை வாசித்து. அங்கு-அந்த இடத்தில். உடன் - நடராஜப் பெருமானாரோடு. செல்ல-எழுந்தருள. ப்: சந்தி. புண்ணியனார் - புண்ணியனார் ஆகிய அந்தப் பெருமானார். சிவபெருமானைப் புண்ணியர் என்று குறிக்கும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. எழுந்தருளி - எழுந்தருளிச் சென்று. ப்: சந்தி. பொற்பொதுவினிடை - சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பொன்னம்பலத் திற்குள். ப்:சந்தி. புக்கார்-நுழைந்தார்.

இந்தப் புராணத்தின் இறுதியில் உள்ள 42-ஆம் பாடல் சுந்தர மூர்த்தி நாயனார் துதியாக விளங்குகிறது. சேக்கிழார் ஒவ்வொரு சருக்கத்தின் இறுதியிலும் சுந்தரமூர்த்தி நாயனாருடைய துதியைப் பாடியருளுவது வழக்கம். இந்தப் பாடலின் கருத்து வருமாறு:

'தீய செயல்களைக் கொண்ட தீவினைகளாகிய பாவங்களைச் செய்யும் நிலைக்கு நாம் வரமாட்டோம்; சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் கொண்ட நடராஜப் பெருமானாரை அவருடைய திருச்செவிகளில் அணிந்து கொண்டசங்கக் குழைகள் வீசும் ஒளியையுடைய நிலா இருட்டை அடியோடு போக்கப் பரவை நாச்சியார் கொண்ட ஊடலைப் போக்கும்பொருட்டு அவருடைய திருமாளிகைக்கு இரண்டு தடவைகள் எழுந்தருளுமாறு அவரைத் தூதராக ஏவிக் கொள்பவராகும் சுந்தர மூர்த்தி நாயனார் அடியேங்களைத் தம்முடைய தொண்டர்களாக ஏற்றுக் கொண்டு அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் உரிமையைப் பெறுவார்.' பாடல் வருமாறு:

''தீதுகொள் வினைக்கு வாரோம்; செஞ்சடைக் கூத்தர் தம்மைக்

காதுகொள் குழைகள் வீசும் கதிர்நில விருள்கால் சீக்க

மாதுகொள் புலவி நீக்க மனையிடை இருகால் செல்லத்
தூதுகொள் பவராம் நம்மைத் தொழும்புகொண் டுரிமை
கொள்வார்.''

தீது-தீய செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். கொள்-கொண்ட. வினைக்கு-தீவினைகளாகிய பாவங்களைச் செய்யும் நிலைக்கு; ஒருமை பன்மை மயக்கம். வாரோம்-நாம் வரமாட்டோம்; இது சேக்கிழார் கூறியது. செம்-சிவந்த. சடை-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் கொண்ட. க்:சந்தி. கூத்தர் தம்மை-நடராஜப் பெருமானாரை. தம்: அசைநிலை. க்:சந்தி. காது-தம்முடைய திருச்செவிகளில்; ஒருமை பன்மை மயக்கம். கொள்-அணிந்து கொண்ட. குழைகள்-சங்கக் குழைகள். வீசும் கதிர்-வீசும் ஒளியாகிய. நிலவு-நிலா. இருள்-இருட்டை. கால்சீக்க-அடியோடு போக்க. மாது-விருப்பம் மருவியவராகிய பரவை நாச்சியார். கொள்-மேற்கொண்ட. புலவி-ஊடலை. நீக்க-போக்கும் பொருட்டு. மனையிடை-அவருடைய திருமாளிகைக்கு; உருபு மயக்கம். இரு-இரண்டு. கால்-தடவைகள்; ஒருமை பன்மை மயக்கம். செல்ல-எழுந்தருளுமாறு. த்:சந்தி. தூது-அவரைத் தூதராக; திணை மயக்கம். கொள்பவராம்-தூதராக ஏவிக் கொள்பவராகும் சுந்தர மூர்த்தி நாயனார். நம்மை-அடியேங்களை. இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துச் சொன்னது. த்:சந்தி. தொழும்பு-தொண்டர்களாக; திணை மயக்கம். கொண்டு-ஏற்றுக் கொண்டு. உரிமை-அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் உரிமையை, கொள்வார்-பெறுவார்.

மூர்த்தி நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 4-ஆவதாக விளங்கும் மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் முதலாவதாக உள்ளது மூர்த்தி நாயனார் புராணம். அதில் வரும் முதல் பாடலின் கருத்து வருமாறு:

'சீர்த்தி நிலைபெற்று விளங்கும் செல்வத்தைப் பெற்ற குடும்பங்கள் நிறையப் பெற்று சிறப்பினால் ஓங்கி நிற்கும் மேகங்கள் தவழும் உச்சிகளைக் கொண்ட ஒளியை வீசும் பெரிய மாணிக்கங்களைப் பதித்த மாடங்கள் விளங்கும் திருத்தலம் அன்பு நிலை பெற்றுத் திகழும் திருவுள்ளங் களைப் பெற்றவர்களும் பலவாகிய நல்ல துறைகளில் மனிதர்கள் வாழ்த்தும் இந்தப் பூ மண்டலத்தில் நிலை பெற்றுப் பொலியும் பழமையான புகழை பூண்டு விளங்கு வது பாண்டி நாடு.' பாடல் வருமாறு:

"சீர்மன்னு செல்வக் குடிமல்கு சிறப்பின் ஓங்கும்
கார்மன்னு சென்னிக் கதிர்மாமணி மாட வைப்பு
நார்மன்னு சிந்தைப் பலநற்றுறை மாந்தர் போற்றும்
பார்மன்னு தொன்மைப் புகழ்பூண்டது பாண்டி நாடு."

சீர்-சீர்த்தி. மன்னு-நிலைபெற்று விளங்கும். செல்வ-செல்வத்தைப் பெற்ற. க்:சந்தி. குடி-குடும்பங்கள்; 'குடி மக்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். மங்கு-

நிறையப் பெற்று. சிறப்பின்-சிறப்பினால். ஓங்கும்-ஓங்கி நிற்கும். கார்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மன்னு -நிலைபெற்றுத் தவழும். சென்னி-உச்சிகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கதிர்-ஒளியை வீசும். மா-பெரிய. மணி - மாணிக்கங்களைப் பதித்த; ஒருமை பன்மை மயக்கம். மாட-மாடங்கள் விளங்கும்; ஒருமை பன்மை மயக்கம். வைப்பு-திருத்தலம். நார்-அன்பு. மன்னு -நிலைபெற்றுத் திகழும். சிந்தை - திருவுள்ளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பல-பல வாகிய. நல்-நல்ல. துறை-துறைகளில்; ஒருமை பன்மை மயக்கம். மாந்தர்-மனிதர்கள். போற்றும்-வாழ்த்தும். பார் இந்தப் பூ மண்டலத்தில். மன்னு-நிலை பெற்றுப் பொலியும். தொன்மை-பழமையாகிய. ப்:சந்தி. புகழ்- புகழை. பூண்டது-பூண்டு விளங்குவது. பாண்டி நாடு-பாண்டிய மன்னர் ஆட்சி புரியும் நாடு.

அடுத்து வரும் 2-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஒசியும் தளிர்களைப் பெற்ற பூங்கொடிகளைப் போன்ற இடுப்புக்களையும், காதுகளையும் நீண்டு விளங்கும் விசாலமான கண்களையும், மூங்கில்களையும் தாழ வைக்கும் தோள்களைக் கொண்ட பெண்மணிகள் பண் களைப் போலப் பேசும் இனிய சொற்களையும், கோவைப் பழங்களைப் போலச் சிவந்த வாய்களையும் உடையவர் களாக விளங்குவார்கள்; நீண்ட கரைகளையும், மண்ணை அலைகளாகிய கைகளால் எற்றித் தள்ளும் குளிர்ச்சியைப் பெற்ற தாம்பிரபர்ணியாறு பாய்ந்து சங்கமமாகும் சமுத் திரத்திலும் நல்ல தன்மையைப் பெற்ற முத்துக்கள் உண்டாகும்.' பாடல் வருமாறு:

"சாயும்தளிர் வல்லி மருங்குல் நெடும்த டங்கண்
வேயும்படு தோளியர் பண்படும் இன்சொற் செய்ய
வாயும்படும்; நீள்கரை மண்பொரும் தண்பொ ருந்தம்
பாயும்கட லும்படும், நீர்மை பணித்த முத்தம்."

சாயும்-ஒசியும். தளிர்-தளிர்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வல்லி-பூங்கொடிகளைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். மருங்குல்-இடுப்புக்களையும்; ஒருமை பன்மை மயக்கம். நெடும்-காதுகளின் அளவு நீண்டு விளங்கும். தடம்-விசாலமான. கண்-விழிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். வேயும்-மூங்கில்களையும்; ஒருமை பன்மை மயக்கம். படு-தாழ வைக்கும். தோளியர்-தோள்களைக் கொண்ட பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். பண்-பண்களைப் போலப் பேசும். இன்-இனிய சுவையைக் கொண்ட. சொல்-வார்த்தைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். செய்ய-கோவைப் பழங்களைப் போலச் சிவந்த. வாயும்-வாய்களையும்; ஒருமை பன்மை மயக்கம். படும்-உடையவர்களாக விளங்குவார்கள்; திணை மயக்கம். நீள்-நீளமான. கரை-கரைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். மண்-மண்ணை. பொரும்-அலைகளாகிய கைகளால் ஏற்றித் தள்ளும். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. பொருந்தம்-தாமிர பர்ணி ஆறு. பாயும்-பாய்ந்து சங்கமம் ஆகும். கடலும்-சமுத் திரத்திலும். நீர்மை பணித்த-நல்ல தன்மையைப் பெற்ற. முத்தும்-முத்துக்கள்; ஒருமை பன்மை மயக்கம். படும்-உண்டாகும்.

பெண்களின் இடுப்புக்குப் பூங்கொடியை உவமையாகச் சொல்லும் இடங்களை முன்பே ஓரிடத்தில் காட்டினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

பெண்களின் தோளுக்கு மூங்கில் உவமை. ''காம்பன தோளியொடும்.'', ''வேயுறு தோளி பங்கன்.'', ''வேய்கொள்தோளிதான் வெள்கிட.'', ''வேயி னார் பணைத் தோளியோ டாடலை வேண்டினாய்.'', ''வேயனைய தோருமையொர் பாகமதுவாக.'', ''காம் பினை வென்றமென் தோளிபாகம் கலந்தான்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''காம்பாடு தோள்

உமையாள்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''வேயன தோளி மலை மகளை.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''பேரமைத் தோளி காதலன் வாழ்க.'' என்று மாணிக்க வாசகரும், ''வேயன தோளி விரையுறு மென்மலர் ஏய குழலி.'' என்று திருமூலரும், ''மென்றோட்கு டைந்து வெயில் நிலை நின்ற குன்றவேய்களும்.'', ''இரும்பணைத் தோள் வேய்.'', ''வேயும்...மென்தோளும்.'', ''காய்பொத்து தோளிணையை.'', ''நாகிளவேய்த் தோளினாள்.'', ''பணைப்பெருந்தோட் செந்துவர்வாய்ப் பெண்.'' என்று சேரமான் பெருமாள் நாயனாரும், ''வேயார் தோளி மெல் லியல் கூறனை.'' என்று நக்கீர தேவ நாயனாரும், ''அமையார் மென்தோள் மெலிவித்து.'', ''இளவேய்த் தோள் மெலிய.'' என்று கபிலதேவ நாயனாரும், ''அமை நாண் மென்றோள் உமையாள் கொழுந.'' என்று பட்டி னத்துப் பிள்ளையாரும், ''காம்பனைய மென்றோட்கவின்.'' என்று நம்பியாண்டார் நம்பியும், ''காம்பின் நேர் வரும் தோளியர்.'', ''வேயனைய தோளியார் பால் நின்று மீண்ட ருளி.'', ''கழையார் தோளி கமலவதி.'' என்று சேக்கிழாரும், ''பணைத்தோள் இள ஆய்ச்சி.'', ''வேயத்தடந் தோளி.'' என்று பெரியாழ்வாரும், ''வேயன தோள் விசிறி.'' என்று திருமங்கை ஆழ்வாரும், ''வெய்யின் மலிபுரை தோளி பின்னைக்கு மணாளனை.'', ''வேயிருந்தடந்தோளினார்.'', ''வேய்மருதோளிணை மெலியுமாலோ.'' என்று நம்மாழ்வாரும், ''கடிகை வேய் நலம் கழிக்கும் மென்றோள்.'', ''கண் திரள் வேய்த் தோட் காஞ்சன மாலையை.'', ''வாங்கமைப் பணைத் தோள் வாசவ தத்தையை.'', ''வேய்த்தோள் வாளரித் தடங் கண் வாலிழை மாதர்.'', ''புனவளைத் தோளி.'', ''ஆய் நல மகளிர் வேய் நலம் பழித்த தோள்.'', ''வரிவளைப் பணைத் தோள் வண்ண மகளிர்.'', ''அவ்வளைப் பணைத்தோள் அதிநாகரிகையை.'', ''அங்கலும் பணைத் தோள் மங்

கல மகடூஉ.'', ''நறு நுதற் பணைத் தோள் நங்கையை.'', ''ஆடமைத் தோளியோ டகன்றனன்.'', ''பணைத்தோள் வாசவ தத்தையை.'', ''வள்ளியம் பணைத்தோள்...வாசவ தத்தையும்.'', ''அமைபடு பணைத்தோள்.'', ''ஆடமைத் தோளி அலமரல் நோக்கி.'', ''காம்பொசிந்தன்ன நலம் கிளர் தடந்தோள்.'', ''வரி வளைப்பணைத் தோள்.'', ''கதிர் வளைப் பணைத் தோட் கனங் குழைக் காஇின்... கோமகள்.'', ''பணைத் தோள் மகளிர்க்கு.'', ''ஆய்வளைப் பணைத் தோள் தேவி.'', ''ஆடமைத் தோளியை அணிந்து.'' (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், ''வேயொத்த தோளினாரும்.'' (நீர் விளையாட்டுப் படலம், 6), ''வெதிர்பொருதோளினாள் ஒருத்தி.'', ''பணை முலை நிகர்த்தமென்றோள்.'' (உண்டாட்டுப் படலம், 49, 60), ''அமைத்திரள்கொள் தோளியரும்.'' (கோலம் காண் படலம், 29), ''பண்ணெனும் சொல்லினார் தம் தோளெனும் பணைத்த வேயும்.'' (கைகேசி சூழ் வினைப் படலம், 84), ''தோள்புரை இளவேயின் தொகுதிகள்.'', ''வல்லை உற்ற வேய்...கன்னியர் தோளெனப் பொலிந்த.'' (வனம்புகு படலம், 17,42), ''வேய்கொள் தோளி ஒருத்தி.'' (பள்ளி யடைப் படலம், 41), ''வேயிடை தோளினாளும்.'', ''காம் பறியும் தோளினாளை.'' (சூர்ப்பணகைப் படலம்,65, 139), ''தடிக்கு முலை வேயிளந் தோட் சேயரிக்கண் வென்றி மாதர்.'', ''வேய்வயின் மென்றோள் கொண்டாள்.'', (மாரீசன் வதைப் படலம், 4,67), ''தாரை என்றமிழ்தில் தோன்றிய வேயிடைத் தோளினாள்.'' (வாலி வதைப் படலம்,13), ''திணிவேய் மென்றோள் ... மாதர்.'' (கிட் கிந்தைப் படலம், 77), ''காம்பு கண்டாலும் ... தோள் நினைந்து.'' (நாட விட்ட படலம், 44), ''பணைத்தோள் வீங்குதேரங்குவார்.'', ''பொறையினால் உலகம் போலும் வேயெனத்தகைய தோளி.'' (கும்பகருணன் வதைப் படலம், 30) என்று கம்பர் பாடியவற்றையும், ''அமைத்

தோள்... செய்ய மங்கையன்னாளே,'' (சீதை வனம் புகு படலம், 21) என்று உத்தரகாண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

பெண்மணிகளின் வார்த்தைகளுக்குப் பண்கள் உவமை: ''பண்ணமரும் மென்மொழியார்.'', ''பண்ணின் நல்ல மொழியார்.'', ''பண்ணமரும் மென்மொழியினாளை.'', ''பண் மொய்த்த இன்மொழியாள்.'', ''பண்ணினேர் மொழி மங்கைமார்.'', ''பண்ணின் மொழியார்.'', ''பண்ணிலாவிய மொழி உமைபங்கன்.'', ''பண்ணினேர் மொழியாளை ஓர் பாகனார்.'', ''பண்தடவு சொல்லின் மலை வல்லி உமை பங்கன்.'', ''பண்தலை மழலை செய்யாமென மொழி உமை,'' என்றுதிருஞான சம்பந்த மூர்த்திநாயனாரும், ''பண்ணின் இன்மொழியாளை ஓர் பாகமா.'', ''பண்ணினேர் மொழியாள் உமை பங்கரோ.'', ''பண்ணினேர் மொழியாள் பலி இட்ட இப்பெண்ணை.'', ''பண் மலிந்த மொழியவரும்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''பண்ணிசையார் மொழியார் பலர் பாட.'', ''பண்ணார் மொழிப் பாவையர் ஆடும் துறையூர்.'', ''பண்ணேர் மொழியாளை ஓர் பங்குடையார்.'', ''பண்மயத்த மொழிப்பரவை.'', ''பண்ணின் நேர்மொழி மங்கை பங்கினன்.''. ''பண்ணியல் மென் மொழியார்.'', என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''பண்ணினேர் மொழியாள் பங்க.'', ''பண்ணமர்ந்த மொழி மங்கை பங்கா.'' என்று மாணிக்க வாசகரும், ''பண்கவரும் சொல்லார் பல்லாண்டேத்த.'', ''பண்ணாரும் இன்சொல்.'' என்று சேரமான் பெருமாள் நாயனாரும், ''பண்ணமரும் மொழிப் பரவையார்.'', என்று சேக்கிழாரும், ''பண்ணேர் மொழியாளது'' என்று பெரியாழ்வாரும், ''பண்ணுலாவு மென் மொழிப் படைத்தடங்கணாள்.'', ''பண்ணினை வென்ற இன்சொல் மங்கை.'' என்று திருமழிசை ஆழ்வாரும், ''பண்ணேர் மொழி ஆய்ச்சியர்.'', ''பண்ணினன்ன மென்மொழியாள்'', ''பண்ணின் இன்மொழியார்.''

"பண்ணுலாம் மென்மொழிப் பாவைமார்." என்று திருமங்கையாழ்வாரும், "பண்ணுறும் இன்சொற் பதுமா நங்கை." (**பெருங்கதை**) என்று கொங்கு வேளிரும், "பண்கொண்ட சொல்லார் தொழ." (**சீவக சிந்தாமணி**) என்று திருத்தக்க தேவரும், "பண்கள்வாய் மிழற்றும் இன் சொற் கடைசியர்.", (நாட்டுப் படலம், 10), "பண்மலர் பவளச் செவ்வாய்." (வரைக்காட்சிப் படலம், 33), "பணிதரு கிளவி ... மாதர்." (பூக்கொய் படலம், 5), "பண்ணெனும் சொல்லினார்." (கைகேகி சூழ்வினைப் படலம், 84), "பண்தரு கிளவியாள்." (திருவடி தொழுத படலம், 42), "பண்களாற் கிளவி செய்து." (மாயா சனகப் படலம்,5), "பண்கள் புக்கலம்பு நாவை." (இராவணன் சோகப் படலம், 41) என்று கம்பர் பாடியவற்றையும், "பண்ணார் மொழியாள் அவள் வயிற்றில் ... பிறந்தாள் பெரிய சூர்ப்பனகை.", (இராவணன் பிறப்புப் படலம், 15), "பண் பிறந்த சொல் மடவார்." (சீதை வனம் புகு படலம், 65) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

அடுத்து வரும் 3-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மலர்களில் மொய்த்தலைப் பெற்ற வண்டுகள் செறிந்த இடத்தில் ரீங்காரம் செய்த சந்தன மரங்கள் மையைப் போலத் தங்களுடைய அடர்த்தியால் இருட்டை இருக்கும்படி செய்த பூம்பொழில் பொதிய மலை வழங்க வந்து வீசிய மந்தமாகத் தன்னுடைய உருவத்தைக் கொண்ட தென்றற் காற்றையும் அளிக்கும்; இந்த உலகத்தை அளந்த மேம்பாட்டைத் தெய்வத் தன்மையைப் பெற்று விளங்கும் செந்தமிழும் பக்குவமான நறுமணத்தை உண்டாக்கும் குளிர்ச்சியான இன்பத்தை வழங்கும்.' பாடல் வருமாறு:

"மொய்வைத்த வண்டின் செறிசூழல் முரன்ற சந்தின்
மைவைத்த சோலை மலயம்தர வந்த மந்த
மெய்வைத்த காலும் தரும்; ஞாலம் அளந்த மேன்மைத்
தெய்வத் தமிழும் தரும்செவ்வி மணம்செய் ஈரம்."

மொய்-மலர்களில் மொய்த்தலை. வைத்த-பெற்ற. வண்டின்-வண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். செறி-செறிந்த. சூழல்-இடத்தில். முரன்ற-ரீங்காரம் செய்த. சந்தின்-சந்தன மரங்களின்; ஒருமை பன்மை மயக்கம். மை-தங்களுடைய அடர்த்தியால் மையைப் போல இருட்டை. வைத்த-இருக்குமாறு செய்த. சோலை-பூம்பொழில். மலயம்-பொதிய மலை. தர-வழங்க. வந்த-வந்து வீசிய. மந்தம்-மந்தமாக. மெய்-தன்னுடைய உருவத்தை. வைத்த-கொண்ட. காலும் - தென்றற் காற்றையும். தரும்-அளிக்கும். பூம்பொழில் தென்றற் காற்றைத் தரும் என்க. ஞாலம்-இந்த உலகத்தை. அளந்த மேன்மை-அளந்த மேம்பாட்டை. த்: சந்தி. தெய்வத் தமிழும்-தெய்வத் தன்மையைப் பெற்ற செந்தமிழ் மொழியும். செவ்வி-பக்குவமான. மணம் செய்-நறுமணத்தை உண்டாக்கும். ஈரம்-குளிர்ச்சியான இன்பத்தை. தரும்-வழங்கும்.

''வானம் அளந்த தனைத்தும் அளந்திடும் வண்மொழி வாழியவே.'' என்று பாரதியார் பாடுவதைக் காண்க. செந்தமிழ் மொழி குளிர்ச்சியான இன்பத்தைத் தரும் என்பதை, 'தண்டமிழ்' என்று தமிழைக் குறிப்பதனாலும் அறியலாம்.

பிறகு உள்ள 4-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'சுற்றியிருக்கும் இதழ்களைப் பெற்ற தாமரை மலராகவும், அந்த இதழ்களின் மேல் எழுந்தருளியிருக்கும் திருமகள் தாழ்வு இல்லாமல் என்றைக்கும் ஒப்பற்ற நிலையில் வாழும் இடமாகவும், அந்த இளம் பெண்ணாகிய திருமகளைப் போன்ற பெண்மணிகள் யாழை மீட்டினாற் போலப் பேசும் வார்த்தைகளில் புல்லாங்குழலின் கானமும், அவர்களுடைய கூந்தல்களில் வண்டுகளும் தங்கி வாழ்வதாகவும் விளங்கும் பெரிய சிவத்தலம் மதுராபுரி என்று சொல்லப் பெற்ற ஊர் ஆகும்.' பாடல் வருமாறு:

"சூழும் இதழ்ப்பங்கய மாகஅத் தோட்டின் மேலாள்
தாழ்வின்றி என்றும் தனிவாழ்வதத் தையல் ஒப்பார்
யாழின் மொழியிற் குழலின் னிசை யும்சுரும்பும்
வாழும் நகரம் மதுராபுரி என்ப தாகும்."

சூழும்-சுற்றியிருக்கும். இதழ்-இதழ்களைப் பெற்ற. ப்:சந்தி. பங்கயமாக-தாமரை மலராகவும். அத்தோட்டின்-அந்த இதழ்களின்; ஒருமை பன்மை மயக்கம். மேலாள்-மேல் எழுந்தருளியிருக்கும் திருமகள். தாழ்வு இன்றி-தாழ்வு இல்லாமல். என்றும்-என்றைக்கும். தனி-ஒப்பற்ற நிலையில். வாழ்வது-வாழும் இடமாகவும். அத்தையல்-அந்த இளம் பெண்ணாகிய திருமகளை. ஒப்பார்-போன்ற பெண்மணிகள். யாழின்-யாழை மீட்டினாற் போல. மொழியில்-பேசும் வார்த்தைகளில்; ஒருமை பன்மை மயக்கம். குழல்-புல்லாங் குழலின். இன்இசையும்-இனிய கானமும். சுரும்பும்-அவர் களுடைய கூந்தல்களில் வண்டுகளும்; ஒருமை பன்மை மயக்கம். வாழும்-வாழ்வதாகவும் விளங்கும். நகரம்-பெரிய சிவத் தலம். மதுராபுரி-மதுரை மாநகரம். என்பது ஆகும் —என்று சொல்லப் பெற்ற ஊர் ஆகும்.

மதுராபுரி தாமரை மலராகவும், என்றும் திருமகள் வாழும் இடமாகவும், இனிய வார்த்தைகளைப் பேசும் பெண்மணிகள் வாழும் இடமாகவும், விளங்கும் என்றபடி, நகரத்திற்குத் தாமரை மலரை உவமானமாகக் கூறுவதை, "மாயோன் கொப்பூழ் மலர்ந்த தாமரைப் பூவொடு புரையும் சீருர் பூவின், இதழகத் தனைய தெருவம் இதழகத், தரும் பொகுட்டனைத்தே அண்ணல் கோயில்." (பரிபாடல் திரட்டு, 7:1-4), "நீன்ற உருவின் நெடியோன் கொப்பூழ், நான்முக ஒருவற் பயந்த பல்விதழ்த், தாமரைப் பொருட்டிற் காண்வரத் தோன்றிச், சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின்." (பெரும்பாணாற்றுப்படை, 402-6), "கோயில் கொட்டையாகத் தாமரைப், பூவொடு பொலியும் பொலிவுற்றாகி." (பெருங்கதை, 3.3:108-9), "பொய்கை

"பார்க் களம் புறவிதழ் புலவு பாட்டடை புல்லிதழ், ஐய சொல்களி றசவிதழ் அரசர் அல்லிதன் மக்களா, மையில் கொட்டை அம் மன்னனா மலர்ந்த தாமரை வரிசையாற், பைய உண்டபின் கொட்டை மேற் பவித்திரத் தும்பி பறந் ததே.'' (சீவக சிந்தாமணி, 2311) என்பவற்றால் அறியலாம்.

பிறகு வரும் 5-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'தகுதி வாய்ந்த இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்கள் நிலை பெற்றுத் தங்கிய அழகிய இடங்களைப் பெற்ற பழைய நகரமாகிய அந்த மதுராபுரியில் நூல்களைக் கற்கும் இடத்திலும் செய்யுட்கள் மிகுதியாக அரங்கேறும் கல்விச் சங்கங்கள் இருக்கின்றன; வலிமையைப் பெற்ற தலைகளை உடைய எருமை மாடுகள் பாயுமாறு தடாகங் களிலும் நீர் நிரம்பியிருக்கிறது; அந்த எருமை மாடுகளின் பால் பரவிய முலைகள் படியும் காட்சிகள் தடாகங்களிலும் இருக்கின்றன; தேன் நிரம்பிய தாமரை மலர்கள் பரவிய எந்த இடத்திலும், சேல் மீன்கள் துள்ளிப் பாயும் தடாகங் களிலும் வயல்களிலும் சங்குப் பூச்சிகள் இருக்கின்றன.'' பாடல் வருமாறு:

'' சால்பாய மும்மைத் தமிழ்தங்கிய அங்கண் மூதூர்
நூல்பாய் இடத்தும்உள; நோன்றலை மேதி பாயப்
பால்பாய் முலைதோய மதுப்பங்கயம் பாய எங்கும்
சேல்பாய் தடத்தும் உள, செய்யுள்மிக் கேறுசங்கம்.''

சால்பாய-தகுதி வாய்ந்த. மும்மைத் தமிழ்-இயல் இசை நாடகம் என்னும் மூன்று தமிழ்கள்; தமிழ்: ஒருமை பன்மை மயக்கம். தங்கிய-நிலை பெற்றுத் தங்கிய. அம்-அழகிய. கண் - இடங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மூதூர்-பழைய நகரமாகிய அந்த மதுராபுரியில். நூல்-நூல் களை; ஒருமை பன்மை மயக்கம். பாய்-கற்கும். இடத்தும்-இடத்திலும். செய்யுள்-செய்யுட்கள்; ஒருமை பன்மை மயக்கம். மிக்கு-மிகுதியாக. ஏறு-அரங்கேறும். சங்கம்-கல்விச் சங்கங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உள-இருக்கின் றன

நோன்-வலிமையைப் பெற்ற. தலை-தலைகளை உடைய; ஒருமை பன்மை மயக்கம். மேதி-எருமை மாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். பாய-பாயுமாறு. தடத்தும்-தடாகங்களிலும். உள-நீர் நிரம்பியிருக்கிறது; பன்மை ஒருமை மயக்கம். பால் பாய்-அந்த எருமை மாடுகளின் பால். பாய-பரவிய. முலை-முலைகள்; ஒருமை பன்மை மயக்கம். தோய்-படியும். தடத்தும் உள-தடாகங்களிலும் காட்சிகள் இருக்கின்றன. மது- தேன் நிரம்பிய. ப்: சந்தி. பங்கயம்-தாமரை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பாய-பரவிய. எங்கும்-எந்த இடத்திலும். சேல்-சேல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். பாய்-துள்ளிப் பாயும். தடத்தும்-தடாகங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். செய்யுள்-வயல்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். மிக்கு-மிகுதியாக. ஏறு-ஏறி வருகின்ற. சங்கம் - சங்குப் பூச்சிகள்; ஒருமை பன்மை மயக்கம். உள-இருக்கின்றன.

பிறகு வரும் 6-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தென்றற் காற்று வீசி வந்து அசைக்கும் பந்தல்களைக் கொண்ட மாடங்களின் முற்றங்களில் பந்துகளை ஆடிய மங்கைமார்களுடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த கைகள் தாங்கும் அரைத்த சந்தனத்தைப் பூசிய கொங்கைகளின் மேல் விளங்குபவை முத்துக்கள் சேர்ந்து அமைந்த கோவைகள்; தொங்கும் குழைகளை அணிந்த ஒளி வீசும் முகங்களாகிய பொலிவைப் பெற்ற செந்தாமரை மலர்களின் மேல் அமைவன முத்துக்களைப் போலத் தோற்றும் வேர்வையின் கோவை.' பாடல் வருமாறு:

"மந்தாநிலம் வந்தசை பந்தரின் மாட முன்றில்
பந்தாடிய மங்கையர் பங்கயச் செங்கை தாங்கும்
சந்தார்முலை மேலன, தாழ்குழை வாள்முகப் பொற்
செந்தாமரை மேலன, நித்திலம் சேர்ந்த கோவை."

மந்த-மெல்ல வீசும். அநிலம்-தென்றற் காற்று. வந்து-வீசிக் கொண்டு வந்து. அசை-அசைக்கும். பந்தரின்-பந்தல்

களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மாடம்-மாடங் களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். முன்றில்-முற்றங் களில்; ஒருமை பன்மை மயக்கம். முன்றில் இல் முன்; பின் முன்னாகத் தொக்க தொகை. பந்து-பந்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். ஆடிய-வைத்துக் கொண்டு விளையாடிய. மங்கையர்-மங்கைப் பருவத்தைக் கொண்ட பெண்மணி களுடைய. பங்கய-செந்தாமரை மலர்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. செம்-சிவந்த. கை-கைகள்; ஒருமை பன்மை மயக்கம். தாங்கும்-தாங்கிக் கொண்டிருக்கும். சந்து-அரைத்த சந்தனத்தை. ஆர்-பூசிய. முலை-கொங்கை களின்; ஒருமை பன்மை மயக்கம். மேலன-மேல் விளங்கு பவை. நித்திலம்-முத்துக்கள்; ஒருமை பன்மை மயக்கம். சேர்ந்த-சேர்ந்து அமைந்த. கோவை-கோவைகள்; ஒருமை பன்மை மயக்கம். தாழ்-தொங்கும். குழை-குழைகளை அணிந்த காதுகளையும்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகு பெயர். வாள்-ஒளியை வீசும். முக-வதனங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பொன்-பொலிவைப் பெற்ற. செந்தாமரை-செந்தாமரை மலர்களின்; ஒருமை பன்மை மயக்கம். மேலன-மேல் அமைந்துள்ளவை. நித்திலம்-முத் துக்களைப் போலத் தோற்றும்; ஒருமை பன்மை மயக்கம். சேர்ந்த கோவை-சேர்ந்துள்ள வேர்வையின் கோவை.

மகளிர் பந்துகளைக் கொண்டு விளையாடுதல்: "கழல் மங்கு பந்தொடம்மானை முற்றில் கற்றவர் சிற்றிடைக் கன்னிமார்கள்.", "கன்னியர் ஆடல் கலந்து மிக்க கந்துக வாடை.", "பந்தணையும் விரலார்.", "பந் தார் விரல் உமையாளொரு பங்கா.", "பந் தண் விரலாள் பாகமாக.", "பந்தியலங்கை மங்கையொர் பங்கன்.", "பந்தணவும்விரலாள் ஒரு பாகம் அமர்ந்தருளி.", "நொம்பைந்து புடைத்தொல்கும் நூபுரம் சேர் மெல்லடியார்.", "பந்தணவு மெல் விரலால் பங்கன்.", "பந்தார் விரல் மடவாள் பாகமா.", "பந்து சேர் விரலாள்

பவளத்துவர் வாயினாள்.", "பந்தமரும் விரல் மங்கை நல்லாள்.", "பந்தணை மெல் விரலாளொடும்.", "பந்தணவும் விரலாளுடனாவதும் பாங்கதுவே.", "பந்தணை விரலாள் பாண்டிமாதேவி." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "பந்தணவு மெல்விரலாள் பாகனாமே.", "பந்தணவு மெல்விரலாள் பாகன் தன்னை.", "பந்தாடும் மெல் விரலாள் பாகன் கண்டாய்.", "பந்தணவு மெல்விரலாள் பாகத்தானை." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "பந்தணவும் விரலாள் பரவை.", "பந்தாரும் விரலாள் ஒரு பாகம் அமர்ந்தவனே.", "பந்தணை விரற் பாவை தன்னை ஒரு பாகம் வைத்தவனை.", "பந்தணவும் விரலாள் பாவையொடும்முடனே.", "பந்தும் கிளியும் பயிலும் பாவை." என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "பந்தணை விரலாபங்க.", "பந்தணை மெல்விரலாட்கருளும் பரிசு.", (**திருவாசம்**, 453, 591) என்று மாணிக்க வாசகரும், "பந்தணை கையாய்." என்று சேரமான் பெருமாள் நாயனாரும், "பந்து கழல்கள் மறந்து." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "பந்தார் விரலியர்வேள்.", "பந்தார் அணிவிரற் பங்கயச் செங்கை...வல்லியை." என்று நம்பியாண்டார் நம்பியும், "பந்தணை மெல்விரலாளும் பரமரும்." என்று சேக்கிழாரும், "பந்தார் விரலி உன் மைத்துனன் பேர் பாட." என்று ஆண்டாளும், "பந்தணைந்த மெல்விரலாள் பாவை.", "பந்திருக்கும் மெல் விரலாள் பாவை.", "பந்தோடு கழல் மருவாள்.", "பந்தார் விரலாள் பாஞ்சாலி.". "பந்தார் மெல்விரல் நல்வளைத் தேரளி.", "பந்தணைந்த மெல் விரலாள் சீதை.", "பந்து பறித்துத் துகில் பற்றி." என்று திருமங்கையாழ்வாரும், "பந்தெறி பூமியுட்பாணி பெயர்ப்புழி.", "பளிக்கறைப் பூமியும பந்தெறிகளத்தும்.", "பந்தும் பாவையும்.", "மணிநில மருங்கிற் பந்தொடு மறவி.", "பந்தும் கழங்கும் பட்டுறிக் கிடப்ப.", "பந்து புனைந்துருட்டுதல்.", "பந்தாட்டியலோர் தந்தமில் உவப்ப

வும்." (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், "பந்தெறிந்திளையர் ஆடு பூமியே.", "வைத்த பந்தெடுத்தலும்.", "பந்து புடை பாணியென.", "பூம்பந்தாடும் அவளைக் காண்மின்.", "கைத்தலங்கடுத்தடித்த பந்து.", "பால் நெடும் தீஞ்சொலாளோர் பாவை பந்தாடுகின்றாள்.", "பந்தட்ட விரலினார்.", (சீவகசிந்தாமணி, 150, 151, 806, 925. 1101, 1951, 2648) என்று திருத்தக்க தேவரும், "பந்தும் கழங்கும் பலகளவு கொண்டோடி." (பரிபாடல், 10, 107) என்று கருப்பிள்ளைப் பூதனாரும், "வரிப்புனை பந்தொடு பாலை தூங்க." (திருமுருகாற்றுப்படை, 68) என்று நக்கீரரும், "பந்தும் பாவையும்.", "பந்தும் பாவையும் பசுவரிப்புட்டிலும்.", "பந்தொடு பாவைகள் தூங்கி.", "வரியணி பந்தும்.", "வரிப்பந்து கொண்டொணத்தாய்." என்று வேறு பல புலவர்களும், "பந்தினை இளையவர் பயிலிடம்." (நாட்டுப் படலம், 18), "பந்துகள் மடந்தையர் பயிற்றுவார்." (நகரப் படலம், 45), "பந்தணி விரலினாள் ஒருத்தி." (உண்டாட்டுப் படலம், 34), "கந்துகமெனக் கடிதெழுந்தெதிர் கலந்தான்." (மகுட பங்கப் படலம், 17)என்று கம்பர் பாடியவற்றையும், "பந்தாடி அங்கை நொந்தார்.", "பந்தாடித்தலை விண்டோட.", "பந்தாடும் மங்கையர் செங்கையற் பார்வையிற்பட்டு.", "பந்தாடலிற் கழங்காடலில்.", "பந்தாடியே மிதித்து." என்று அருணகிரிநாதரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 7-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'உண்மையான பொருளாகும் செந்தமிழ் நூல்களில் திகழும் உண்மையும் செம்மையும் கொண்ட பொருளையும் வழங்கியருளுபவராகிய திருவால வாயுடையார் திருக்கோயில் கொண்டிருக்கும் திருவாலவாயாகிய மதுரை மாநகரத்தில் அடியேங்களுடைய பிறப்பைப் போக்கியருளுபவராகிய சோமசுந்தர பெருமானார் ஒரு புலவராக வீற்றிருந்தருளிய தமிழ்ச் சங்கம் இருந்து விளங்கியது என்று கூறினால் அந்தப்

பழைய சிவத்தலமாகிய மதுராபுரி அந்தர் மத்திய பாதல மாகிய மூன்று "உலகங்களைக் காட்டிலும் மிகுதியான சிறப் பைப் பெற்றதல்லவா?' பாடல் வருமாறு:

''மும்மைப் புவனங்களின் மிக்கதன் றேஅம் மூதூர்?
மெய்ம்மைப் பொருளாம் தமிழ்நூலின் விளங்கு வாய்மைச்
செம்மைப் பொருளும் தருவார்திரு வால வாயில்
எம்மைப் பவம்தீர்ப் பவர்சங்கம் இருந்த தென்றால்.''

மெய்ம்மை-உண்மையான. ப்:சந்தி. பொருள்ஆம்-பொருளாகும். தமிழ்நூலின்-செந்தமிழ் நூல்களில்; ஒருமை பன்மை மயக்கம். விளங்கு-திகழும். வாய்மை-உண்மை யையும். ச்:சந்தி. செம்மை-செம்மையையும் கொண்ட. ப்:சந்தி. பொருளும்-பொருளையும். தருவார்-வழங்கியருளுபவராகிய திருவால வாயுடையார் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருவால வாயில்-திருவாலவாயாகிய மதுரை மாநகரத்தில் எம்மை-அடியேங் களுடைய; உருபு மயக்கம். இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துச் சொன்னது. ப்: சந்தி. பவம்-இந்த மனிதப் பிறப்பை. தீர்ப்பவர்-போக்கியருளுபவராகிய சோமசுந்தரப் பெருமானார் ஒரு புலவராக வீற்றிருந்தருளிய. சங்கம்-தமிழ்ச் சங்கம். இருந்தது-இருந்து விளங்கியது. என் றால்-என்று கூறினால். அம்மூதூர்-அந்தப் பழைய சிவத்தல மாகிய மதுராபுரி, மும்மைப் புவனங்களின்-அந்தர் மத்திய பாதலமாகிய மூன்று உலகங்களைக் காட்டிலும். மிக்கது-மிகுதியான சிறப்பைப் பெற்றது. அன்றே-அல்லவா?

பவம் தீர்ப்பவர்: ''பிறப்பென்னை அறுக்க வல்லார்.'', ''பிறவி கேடென்றிவையுடைத்தாய வாழ்க்கை ஒழிய...தூங் கானை மாடம் தொழுமின்களே.'', ''சாதல் பிறத்தல் இவை பிரிய ... தூங்கானை மாடம் தொழுமின்களே.'', ''பிணிபிறவி கேடன்றிவை உடைத்தாய வாழ்க்கை ஒழிய... தூங்கானை மாடம் தொழுமின்களே.'', ''பிணியும் பிறப் பறுப்பான் பெருமான்.'', ''பிறவி அறுப்பீர்காள், அறவனா

ரூரை, மறவா தேத்துமின்.'', ''பிறப்பார் பிறப்புச் செறப் பாதியந்தம் செலச் செய்யும் தேசன்.'', ''ஊனுடைப் பிற வியை அறுக்க உன்னுவீர், ... கருக்குடிச் சோனுயர் கோயிலை வணங்கி வைகலும் ... வாழ்த்தி வாழ்மினே.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பிறப்பறுத்துய்ய வேண்டில், பணியுடைத் தொழில்கள் பூண்டு பத்தர்கள் பற்றி னாலே.'', ''கோர்த்தினிப் பிறவா வண்ணம் பிதற்றுமின் பேதை பங்கன், பார்த்தனுக்கருள்கள் செய்த பாசுபதத் திறமே.'', ''அருபிறப்பை அனுப்பிக்கும் அதிகை யூரன்.'', ''நீப்பறிய பல்பிறவி நீக்கும் வண்ணம் நினைந்திருந்தேன்.'', ''கருமருவு வல்வினை நோய் அகற்றினான்.'' என்று திரு நாவுக்கரசு நாயனாரும், ''பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்.'', ''சாதலும் தவிர்த்தெனை வகுத்துத் தன் அருள் தந்த எம் தலைவனை.'', ''இனிப்போய்ப் பிறவாமைப் பெருமை பெற்றேன்.'', ''என் பிறவி வேர் அறுக்கும் கரும்பினை.'', ''பிறவிப் படுகடற் பரப்புத் தவிர்ப்பானை.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க.'', ''மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி.'', ''பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்.'', ''மீட்டிங்கு வந்து வினைப் பிறவி சாராமே ... கட்டழிக்க வல்லானே.'', ''அல்லற் பிறவி அறுப்பானே.'', ''எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து.'' ''யானேதும் பிறப்பஞ்சேன்.'', ''திண்ணந்தான் பிறவாமற் காத்தாட் கொண்டாய்.'', ''மீட்டேயும் பிறவாமற் காத் தாட்கொண்டான்.'', ''என் பிறவி நாசனே.'', ''ஆர்த்த பிற வித் துயர் கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்.'', ''எங்கள் பிறப் பறுத்திட்டெந்தரமும் ஆட்கொண்டு.'', ''இப்பிறவி யாட் கொண்டினிப் பிறவாமே காத்து.'', ''பிறப்பறுத்தாண்டு கொண்ட கூத்தனை.'', ''மரணம் பிறப்பென் றிவை யிரண்டின் மயக்கறுத்த கருணைக் கடல்.'', ''பெருந்துறை

மேய பிரான் என் பிறவிக் கருவேரறுத்த பின்.", "பிறப் பறுத்த அத்தன்.", "மாயப்பிறப்பறுத் தாண்டான்.", "என்றும் பிறந்திறந் தாழாமே ஆண்டு கொண்டான்.", "துஞ்சலி பிறப்பறுப்பான்.", "எங்கள் பிறப்பறுந்திட்டெந் தரமும் ஆட்கொள்வான்.", "இப்பிறப்பறுத் தெனை ஆண்டருள் புரியும் எம்பெருமான்.", "எனைப் பிறப்பறுக் கும் எம்மருந்தோ.", "பிறவிப் பிணிக்கோர் மருந்தே.", "பிறவிப் பிணிக்கோர் மருந்தே.", "என் பிறப்பறுத்த இணையிலியை.", "பிறவிதனை அறமாற்றி.", "பிறவி வேர் அறுத்தென் குடி முழுதாண்ட பிஞ்ஞகா.", "பிறப்பே இறப்பொடு மயக்காம் தொடக் கெலாம் அறுத்தநற் சோதீ.", "மண்ணார்ந்த, பிறப் பறுத்திட்டாள்வாய்.", "என் பாலைப் பிறப்பறுத்து.", "இப்பிறவிதனைத் தூரும் பரிசு துரிசறுத்து.", "பிறவி என்னுமிக் கடலை நீந்தத் தன் பேரருள் தந்தருளினான்.", "பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்.", "பித்தென்னை ஏற்று பிறப்பறுக்கும்.", "மண்களில் வந்து பிறந்திடுமாறு மறந்திடும்." என்று மாணிக்க வாசகரும், "பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்கு." என்று சேந்தனா ரும், "முன்பிட் பிறவி முடிவது தானே.", "பேணிற் பிறவா உலகருள் செய்திடும்.", "பிறப்பை அறுக்கும் பெருந்தவம் நல்கும்.", "பிறப்பறியார்...பிறப்பினை நீக்கும் பெருமை பெற்றாரே.", "பிறவாநெறி தந்த பேரருளாளன்.", "வாரா வழி தந்த மா நந்தி.", "ஈனப் பிறவியில் இட்டது மீட்டு.", "ஈசனை உங்கும் சிறப்பொடு சேரும் சங்கதி பின்னைப் பிறப்பொன்றிலாமையும் பேருல காமே.", "பெருமலம் நீங்கிப் பிறவாமை சுத்தமே.", "பல் பிறப் பும் வாட்டி.", "ஒழிந்தேன் பிறவி." என்று திருமூலரும், "ஒழித்தேன் பிறவியை." என்று சேரமான் பெருமான் நாயனாரும், "இல்லை பிறவிக் கடல் ஏறல்... உடையானைச் சாராதார் தாம்.", "மன்னும் பிறப்பற்

றுக்கும் மாமருந்து." என்று கபிலதேவ நாயனாரும், "பிறவி பிறந்தொழிமின் பெற்றும், குழையணிந்த கோளரவக் கூற்றுதைத்தான் தன்னை." என்று பரணதேவ நாயனாரும்.", "வருந்தேன் இறந்தும் பிறந்தும்... மாமருதிற் பெருந் தேன் முகந்து கொண்டுண்டு பிறிதொன்றில் ஆசையின்றி இருந்தேன்.", "உற்பவம் துடைத்தல் நிற்பிடித் தல்லது பிறி தொரு நெறியின் இல்லை.", "பிறவாத வண்ணம் அறிந் தேன் அரங்கவேள் அம்பிற்-செறிந்த, பொருத வட்ட விற் பிழைத்துப் போந்தேன் புராணன், மருதவட்டந் தன் னுள்ளே வந்து.", "தொண்டர் கருவிடைப் புகாமற் காத்தருள் புரியும் திருவிடை மருத.", "இப்பிறப்பில் வந்த ணையார் ... இடை மருதன்னடி யாரடி சார்ந்தவரே.", "பிறவிக் கடல் கடப்பிப்பவர் ... ஏகம்பர்." என்று பட்டி னத்துப் பிள்ளையாரும், "பலம் அறுத்தாள்வதற் கோதில்லை நட்டம் பயில்கின்றதே.", "ஒண்சுடரைப் பிறவி வீடுவதாக நினைய வல்லோர்." என்று நம்பியாண் டார் நம்பியும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 8-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தப் பொலிவை பெற்ற சிவத்தலமாகிய மதுரை மாநகரத்தில் வாழும் வணிகர்களினுடைய சாதியில் அமைந்த பழமையோடு சொல்லத் தக்க சீர்த்தியைப் பெற்ற வணிகர் களின் குடும்பம் முற்பிறவியில் புரிந்த தவத்தின் பயனாகத் திருவவதாரம் செய்தருளியவர் எந்த வகையான பற்றுக் களையும் அறுத்து எறிந்து இடபவாகனத்தை ஓட்டிக் கொண்டு அதன் மேல் ஏறி வருபவராகிய சுந்தரேசப் பெரு மானாருடைய திருவடிகளை உண்மையான பற்றுக்கோடு என்று எண்ணி அவற்றைப் பற்றிக் கொண்டு கைவிடாத விருப்பத்தில் மிக்க சிறப்பைப் பெற்றவர் அந்த மூர்த்தி நாய னார்.' பாடல் வருமாறு:

"அப்பொற் பதிவாழ் வணிகக்குலத் தான்ற தொன்மைச்
செப்பத் தருசீர்க் குடிசெய்தவம் செய்ய வந்தார்

எப்பற் றினையும் அறுத்தே றுகைத் தேறுவார்தாள்
மெய்ப்பற் றெனப்பற்றி விடாத விருப்பின் மிக்கார்.''

அப்பொன்-அந்தப் பொலிவைப் பெற்ற. பதி-சிவத்தல மாகிய மதுரை மாநகரத்தில். வாழ்-வாழும். வணிக-வணி கர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குலத்து-சாதியில். ஆன்ற-அமைந்த. தொன்மை - பழமையோடு. ச்: சந்தி. செப்பத்தகு - சொல்லத்தக்க. சீர்-சீர்த்தியைப் பெற்ற. க்: சந்தி. குடி-வணிகர்களின் குடும்பம். செய்-முற் பிறவியில் புரிந்த. தவம் செய்ய - தவத்தின் பயனாகச் செம்மை பெற. வந்தார்-திருவவதாரம் செய்தருளியவர். எப்பற்றினையும்-எந்த வகையான பற்றுக்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அவை அகங்கார மமகாரங்கள். அறுத்து-அறுத்து எறிந்து. ஏறு-இடபவாகனத்தை. உகைத்து-ஓட்டிக் கொண்டு. ஏறுவார்-அதன் மேல் ஏறி எழுந்தருளுபவராகிய சுந்தரேசப் பெருமானாருடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். மெய்ப்பற்று-உண்மையான பற்றுக்கோடு. என-என்று எண்ணி; இடைக்குறை. ப்: சந்தி. பற்றி-அவற் றைப் பற்றிக் கொண்டு. விடாத-கைவிடாத. விருப்பின்-விருப்பத்தில். மிக்கார்-மிக்க சிறப்பைப் பெற்றவர் அந்த மூர்த்தி நாயனார்.

'' பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு''

என்று திருக்குறளில் வருவதைக் காண்க.

பிறகு வரும் 9-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஒவ்வொரு நாளும் பெரியதாக இருக்கும் காதலும் நயப்பும் அடையும் விருப்பத்தால் தம்முடைய உறவினர் களும் துணைவர்களும் முதலாகிய கெடுதல் இல்லாத பதவி கள் யாவும் தம்மை ஆளாகக் கொள்ளும் பெருமானாகிய சோமசுந்தரப் பெருமானாருடைய திருவடிகளாகிய செந் தாமரை மலர்களை அல்லாமல் வேறு எதையும் இல்லாதவர்

தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழும் பெருகிய பக்தி என்னும் திருவுருவத்தைப் பெற்றவர் மூர்த்தி நாயனார்." பாடல் வருமாறு:

''நாளும்பெரும் காதல் நயப்புறும் வேட்கை யாலே
கேளும் துணையும் முதற்கேடில் பதங்கள் எல்லாம்
ஆளும்பெரு மான்அடித் தாமரை அல்ல தில்லார்
மூளும்பெரு கன்பெனும் மூர்த்தியார் மூர்த்தி யார்தாம்.''

நாளும்-ஒவ்வொரு நாளும். பெரும்-பெரியதாக இருக்கும். காதல்-காதலும். நயப்பு-நயப்பும். உறும்-அடையும். வேட்கையால்-விருப்பத்தால். ஏ: அசை நிலை. கேளும்—உறவினர்களும்; ஒருமை பன்மை மயக்கம். துணையும்—துணைவர்களும்; திணை மயக்கம். முதல்-முதலாகிய. கேடு-கெடுதல். இல்-இல்லாத; கடைக்குறை. பதங்கள்-பதவிகள். எல்லாம்-யாவும். ஆளும்-தம்மை ஆளாகக் கொள்ளும். பெருமான்-பெருமகனாகிய சோமசுந்தரப் பெருமானாருடைய. அடி-திருவடிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தாமரை-செந்தாமரை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். அல்லது-அல்லாமல். இல்லார்—வேறு எதையும் இல்லாதவர். மூளும்-மூண்டு எழும். பெருகு—தம்முடைய திருவுள்ளத்தில் பெருகிய. அன்பு-பக்தி. எனும்—என்னும்; இடைக்குறை. மூர்த்தியார் - திருவுருவத்தைப் பெற்றவர். மூர்த்தியார்-அந்த மூர்த்தி நாயனார். தாம்: ஈற்றசை நிலை.

அன்பெனும் மூர்த்தியார்: ''அவனுடைய வடிவெல்லாம் நம் பக்கல் அன்பு.'' எனப் பெரிய புராணத்தில் வருவதைக் காண்க.

அடுத்து வரும் 10-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்திக் காலத்தில் உதயமாகும் பிறைச் சந்திரனைத் தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தின் மேல் அணியும் திருவாலவாய் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கும் அடியேனுடைய தந்தையைப் போன்ற சோமசுந்

தரப் பெருமானுக்கு அணிவதற்குரிய சந்தனக் காப்பு இடையில் என்றைக்கும் தவறாமல் அந்தச் சந்தனக் காப்பை வழங்கும் செய்கையில் நிலைத்து நின்று அடியவர்கள் மகிழும் வண்ணம் அந்த மூர்த்தி நாயனார் தம்முடைய திருவுள்ளத்திற்கு இனியது ஆகிய திருப்பணியைப் புரிந்து கொண்டு வரும் காலத்தில்.' பாடல் வருமாறு:

" அந்திப் பிறைசெஞ் சடைமேல் அணி ஆலவாயில்
எந்தைக் கணிசந் தனக்காப்பிடை என்றும் முட்டா
அந்தச் செயலின் நிலைநின் றடியார் உவப்பச்
சிந்தைக் கினிதாய திருப்பணி செய்யும் நாளில்."

இந்தப் பாடல் குளகம். அந்தி-அந்தி நேரத்தில் உதயமாகும். ப்:சந்தி. பிறை-பிறைச் சந்திரனை. செஞ்சடைமேல்-தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தின் மீது. அணி-அணிந்து கொண்டிருக்கும். ஆலவாயில்-மதுரை மாநகரத்தில் விளங்கும் திருவாலவாய் என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும். எந்தைக்கு-அடியேனுடைய தந்தையைப் போன்ற சோமசுந்தரப் பெருமானுக்கு.' இது சேக்கிழார் தம்மைச் சொல்லிக் கொண்டது. சிவபெருமானார் தந்தையாரைப் போன்றவர் என்பதைப் புலப்படுத்தும் இடங்களை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக்கண்டுணர்க. அணி - அணிவதற்குரிய. சந்தனக்காப்பு - சந்தனக்காப்பை. இடை-இடையில். என்றும்-என்றைக்கும். முட்டா-தவறாத. அந்தச் செயலின்- அந்தச் சந்தனக் காப்பை வழங்கும் செய்கையில். நிலைநின்று-நிலைத்து நின்று. அடியார்-அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். உவப்ப-மகிழும் வண்ணம். ச்:சந்தி. சிந்தைக்கு-அந்த மூர்த்தி நாயனார் தம்முடைய திருவுளத்திற்கு. இனிது-இனியது. ஆய-ஆகிய. திருப்பணி -சந்தனக் காப்பை வழங்கும் அந்தத் திருப்பணியை. செய்யும் -புரிந்து கொண்டு வரும். நாளில்-காலத்தில்.

பிறகு உள்ள 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'காடுகளும் காவலும் சுற்றியிருக்கும் வடுக்கரு நாட்

டில் வாழ்பவர்களை ஆட்சி புரிந்து பாதுகாப்பைச் செய்யும் பெருமையைப் பெற்ற சேனைகளைக் கொண்ட அரசன் வலிமையைப் பெற்று மாநிலத்தைத் தன்னுடையதாகக் கவர்ந்து கொள்பவனாகி யானை, குதிரை, ஆயுதங்களை ஏந்திய காலாட்படை வீரர்கள், உறுதியான தேர் முதலிய சேனையாகிய சமுத்திரத்தையும் தன்னுடன் கூட்டிக் கொண்டு தெற்குத் திசையை நோக்கிப் படையெடுத்து வந்தான்.' பாடல் வருமாறு:

"கானக் கடிசூழ் வடுகக்கரு நாடர் காவல்
மானப் படைமன்னன் வலிந்து நிலம்கொள் வானாய்
யானைக் குதிரைக் கருவிப்படை வீரர் திண்டேர்
சேனைக் கடலும் கொடுதென்றிசை நோக்கி வந்தான்."

கான-காடுகளும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கடி-காவலும். சூழ்-சுற்றியிருக்கும். வடுகக்கருநாடர்-ஆந்திர தேசத்தை அடுத்த கருநாடக நாட்டில் வாழ்பவர் களை; ஒருமை பன்மை மயக்கம். காவல்-ஆட்சி புரிந்து பாதுகாவலைச் செய்யும். மான-பெருமையைப் பெற்ற. ப்:சந்தி. படை-சேனைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மன்னன்-அரசன். வலிந்து-வலிமையை அடைந்து. நிலம்-மாநிலத்தை.கொள்வானாய்-கவர்ந்து கொள்பவனாகி. யானை-யானையும். க்:சந்தி. குதிரை-குதிரையும். க்:சந்தி. கருவி-வாள், வேல், ஈட்டி, வில், அம்பு முதலிய போர்க் கருவிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். படைவீரர்-காலாட் படை வீரர்களும்; ஒருமை பன்மை மயக்கம். திண்-உறுதியான. தேர்-இரதமும் முதலிய. சேனைக்கடலும் -சேனையாகிய சமுத்திரத்தையும். கொடு-தன்னுடன் கூட்டிக் கொண்டு. தென்றிசை நோக்கி - தெற்குத்திசையை நோக்கி. வந்தான்-படையெடுத்து வந்தான்.

பிறகு வரும் 12-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு வந்து சேர்ந்த பெரியதாக இருக்கும் சேனையை தரை மறையும் வண்ணம் பரவலாக இருக்கு மாறு செய்து சந்தன மரங்கள் வளர்ந்து ஓங்கி நிற்கும் பொதிய மலையைத் தன்னகத்தே கொண்ட தமிழ்நாடாகிய

பாண்டி நாட்டைத் தனக்கு உடைய அரசனாகிய பாண்டிய வேந்தனுடைய வீரம் அழியுமாறு யுத்தம் புரிந்து வெற்றியை அடைந்து தன்னுடைய ஆக்ஞையை எங்கும் செல்லுமாறு புரியும் வழியினால் நறுமணம் கமழும் மலர்கள் மலர்ந்த மரங்கள் வளர்ந்து நிற்கும் பூஞ்சோலை சுற்றியிருக்கும் மதுராபுரியை ஆட்சி புரிந்து பாதுகாக்கும் தொழிலை மேற் கொண்டான்.' பாடல் வருமாறு:

'' வந்துற்ற பெரும்படை மண்புதை யப்பரப்பிச்
சந்தப்பொதி யில்தமிழ் நாடுடை மன்னன் வீரம்
சிந்தச்செரு வென்றுதன் ஆணை செலுத்து மாற்றால்
கந்தப்பொழில் சூழ்மது ராபுரி காவல் கொண்டான்.''

வந்து உற்ற-அவ்வாறு வந்து சேர்ந்த. பெரும்-பெரியதாக இருக்கும். படை-சேனையை. மண்-தரை. புதைய-மறையும் வண்ணம். ப்:சந்தி. பரப்பி-பரவலாக இருக்குமாறு செய்து. ச்:சந்தி. சந்த-சந்தன மலர்கள் வளர்ந்து ஓங்கி நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பொதியில்-பொதிய மலையைத் தன்னகத்தே கொண்ட. தமிழ் நாடு-தமிழ் நாடாகிய பாண்டி நாட்டை. உடை-தனக்கு உடைய. மன்னன்-அரசனாகிய பாண்டி வேந்தனுடைய. வீரம்சிந்த-வீரம் அழியுமாறு. ச்:சந்தி. செரு-யுத்தம் புரிந்து. வென்று-வெற்றியை அடைந்து தன்-தன்னுடைய. ஆணை-ஆக்ஞையை. செலுத்தும்-எங்கும் செல்லுமாறு புரியும். ஆற்றால்-வழியினால். கந்த-நறுமணம் கமழும் மலர்கள் மலர்ந்த மரங்கள் வளர்ந்து நிற்கும். ப்:சந்தி. பொழில்-பூஞ்சோலை. சூழ்-சுற்றியிருக்கும். மதுராபுரி-மதுரை மா நகரத்தை. காவல்-ஆட்சி புரிந்து பாதுகாக்கும் தொழிலை. கொண்டான்-மேற் கொண்டான்.

அடுத்து வரும் 13-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அந்தக் கருநாடக அரசன் தன்னுடைய வலிமையாகிய ஆண்மையினால் வளப்பத்தைக் கொண்ட தமிழ்நாடாகிய பாண்டி நாட்டில் மேலும் வளங்கள் உண்டாகுமாறு செய்து நில்லாமையாகிய நிலை பொருந்திய இல்லாமையால்.

உயர்ந்த மேருமலையாகிய வில்லை ஏந்திய சோமசுந்தரப் பெருமானுக்கு அடிமையாக உள்ள திறம் பொருந்திய விபூதி யினுடைய சார்பு நடவாமல் அருகந்தராகிய சமணர்களின் பக்கத்தில் தன்னுடைய உள்ளத்தைத் தங்குமாறு செய் தான்.' பாடல் வருமாறு:

"வல்லாண் மையின் வண்டமிழ் நாடு வளம்படுத்தி
நில்லாநிலை ஒன்றிய இன்மையின் நீண்ட மேரு
வில்லான்அடி மைத்திறம் மேவிய நீற்றின் சார்பு
செல்லாதரு கந்தர் திறத்தினிற் சிந்தை தாழ்ந்தான்."

வல்-அந்தக் கருநாடக அரசன் தன்னுடைய வலிமை யாகிய. ஆண்மையின்-ஆண்மையினால்; ஆண்மை-வீரம். வண்-வளப்பத்தைக் கொண்ட. தமிழ்நாடு-தமிழ்நாடாகிய பாண்டி நாட்டில்.வளம்படுத்தி-மேலும் வளங்கள் உண்டாகு மாறு செய்து. வளம்: ஒருமை பன்மை மயக்கம். நில்லா-நிலைத்து நில்லாத. நிலை-நிலைமை. ஒன்றிய-பொருந்திய. இன்மையின்-இல்லாமையினால். நீண்ட-உயர்ந்த. மேரு-மேரு மலையாகிய. வில்லான்-வில்லை ஏந்திய சோமசுந்தரக் கடவுளுக்கு. அடிமைத்திறம்-அடிமையாக உள்ள திறமை. மேவிய-பொருந்திய. நீற்றின்-விபூதியினுடைய.சார்பு-சம்பந் தம். செல்லாது-நடவாமல். அருகந்தர்-அருகத் பரமேஷ்டியை வணங்கும் சமணர்களின்; ஒருமை பன்மை மயக்கம். திறத் தினில்-பக்கத்தில். சிந்தை-தன்னுடைய உள்ளத்தை. தாழ்ந் தான்-தங்குமாறு செய்தான்.

பிறகு உள்ள 14-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு அந்தக் கருநாடக மன்னன் தான் தன் னுடைய உள்ளத்தைத் தங்குமாறு செய்திருக்கும் சமணர்க ளாகிய இழிந்த குணங்களையும் செயல்களையும் உடையவர் களுடைய தவத்தை உண்மை என்று எண்ணி அவர்களைச் சார்ந்து அவர்கள் வலையில் விழும் கொடியவனாகிய அந்த மன்னன் அது அல்லாமலும் கொடியதாகிய முற்பிறவியில் செய்து இந்தப் பிறப்பில் வந்து சூழ்ந்த தீவினையால் பாம்பு

களையும் ஒளியை வீசும் பிறைச் சந்திரனோடும் தங்கும் சடா பாரத்தைத் தன்னுடைய தலையின் மேற்கொண்டவனாகிய சோமசுந்தரப் பெருமானுடைய அடியவர்களுக்கும் கொடுமையைப் புரிவானானான்.' பாடல் வருமாறு:

"தாழும்சமண் கையர் தவத்தைமெய் என்று சார்ந்து
வீழும்கொடி யோன்அது வன்றியும் வெய்ய முன்னைச்
சூழும்வினை யால்அர வம்சுடர்த் திங்களோடும்
வாழும்சடை யான்அடி யாரையும் வன்மை செய்வான்."

தாழும்-அவ்வாறு அந்தக் கருநாடக மன்னன் தான் தன்னுடைய உள்ளத்தைத் தங்குமாறு செய்திருக்கும். சமண்-சமணர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். கையர்- இழிந்த குணங்களையும் செயல்களையும் உடையவர்களுடைய; ஒருமை பன்மைமயக்கம். தவத்தை மெய்-தவத்தை உண்மை. என்று - என்று எண்ணி. சார்ந்து-அவர்களைச் சார்ந்து வீழும்-அவர்களுடைய வலையில் விழும். கொடியோன்-கொடியவனாகிய அந்த மன்னன். அது அன்றியும்-அது அல்லாமலும். வெய்ய-கொடியதாகிய. முன்னை-முற்பிறவியில் செய்து இந்தப் பிறவியில். ச்:சந்தி. சூழும்-வந்து சேரும். வினையால் - தீய வினையால். அரவம் - பாம்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். சுடர்-நிலாவை வீசும். த்:சந்தி. திங்களோடும் - பிறைச் சந்திரனோடும். வாழும்-தங்கும். சடையான்-சடாபாரத்தைத் தன்னுடைய தலையின் மேற் கொண்டவனாகிய சோமசுந்தரப் பெருமானுடைய. அடியாரையும்-அடியவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். வன்மை - கொடுமையை. செய்வான்-புரிவானானான்.

அடுத்து வரும் 15-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'செவ்வந்தி வானத்தைப் போலச் சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் கொண்டவரும், இடப வாகனத்தில் ஏறி ஓட்டுபவரும், மதுரை மாநகரத்தில் உள்ள ஆலயமாகிய திருவால வாய்க்குள் மூன்று கண்களை

உடையவரும், பரனாரும் ஆகிய சோம சுந்தரனாருடைய திருத் தொண்டராகிய மூர்த்தி நாயனாரைக் கருமையான கல்லை ஒத்த உள்ளத்தை உடைய வஞ்சகனாகிய அந்த மன்னன் கொடிய சமணர்களாகிய பெரிய இறுமாப்பு உடையவர்களுக்கு உடந்தையாக இருந்து பிறர் இகழும் செயல்களைப் புரிய நினைத்து.' பாடல் வருமாறு:

'செக்கர்ச்சடை யார்விடை யார்திரு வால வாயுள்
முக்கட்பர னார்திருத் தொண்டரை மூர்த்தி யாரை
மைக்கற்புரை நெஞ்சுடை வஞ்சகன் வெஞ்ச மண்பேர்
எக்கர்க்குட னாக இகழ்ந் தன செய்ய எண்ணி.''

இந்தப் பாடல் குளகம். செக்கர்-செவ்வந்தி வானத்தைப் போலச் சிவந்த. ச்: சந்தி. சடையார்-சடாபாரத்தைத் தம் முடைய தலையின்மேற் கொண்டவரும். விடையார்-இடப வாகனத்தின் மேல் ஏறி ஓட்டுபவரும். திருவால வாயுள்-மதுரை மாநகரத்தில் உள்ள ஆலயமாகிய திருவால வாய்க் குள். முக்கண்-மூன்று கண்களை உடையவரும். கண்: ஒருமை பன்மை மயக்கம். பரனார்-பரனாருமாகிய சோமசுந்தரனா ருடைய. திருத்தொண்டரை-திருத்தொண்டராகிய. மூர்த்தி யாரை-மூர்த்தி நாயனாரை. மை-கருமையான. க்:சந்தி. கற்புரை-கருங்கல்லை ஒத்த. நெஞ்சு-உள்ளத்தை. உடை -உடைய. வஞ்சகன்-வஞ்சகனாகிய அந்த மன்னன். வெம்-கொடுமை யாகிய. சமண்-சமணர்களாகிய; திணை மயக்கம். பேர்-பெரிய. எக்கர்க்கு-இறுமாப்பை உடையவர் களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். உடனாக-உடந்தையாக இருந்து. இகழ்ந்தன-சான்றோர் இகழும் செயல்களை. செய்ய-புரிய. எண்ணி-நினைத்து.

அடுத்து உள்ள 16-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'வஞ்சகனாகிய அந்த மன்னன் முடிவு இல்லாதனவாகும் துன்பங்களைப் புரியவும் பக்தராகிய அந்த மூர்த்தி நாயனார் பழங்காலத்தில் தோன்றிய முறைப்படி திருப்பணிகளைச் செய்யத் தவறாதவராகிப் புரிந்து வந்தார்; தம் தம்முடைய

பெருமைக்கு அளவுகோலாகிய சார்பினில் நிலைத்து நிற்கும் அடியேங்களுடைய பெருமையைப் பெற்ற மக்களை யார் தடுப்பதற்கு வல்லமை பெற்றவர்?' பாடல் வருமாறு:

'' அந்தம் இலவாம்மிறை செய்யவும் அன்பனார் தாம்
முந்தைம்முறை மைப்பணி முட்டலர் செய்து வந்தார்;
தந்தம் பெருமைக் களவாகிய சார்பில் நிற்கும்
எந்தம் பெருமக் களையாவர் தடுக்க வல்லார்?''

அந்தம்-வஞ்சகனாகிய அந்த மன்னன் முடிவு. இல்-இல்லாதவை. ஆம்-ஆகும். மிறை-துன்பங்களை; ஒருமை பன்மை மயக்கம். செய்யவும்-புரியவும். அன்பனார்-பக்தராகிய அந்த மூர்த்தி நாயனார். தாம் முந்தை-தாம் பழங்காலத்திலிருந்து வரும். ம்: சந்தி. முறைமை-முறைப்படி. ப்:சந்தி. பணி-திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். முட்டலர்-செய்யத் தவறாதவராகி; முற்றெச்சம். செய்து வந்தார்-புரிந்து கொண்டு வாழ்ந்து வந்தார். தம் தம்-தம்முடைய. பெருமைக்கு அளவாகிய-பெருமைக்கு அளவுகோலாகிய. சார்பில்-சார்பினில். நிற்கும்-நிலைத்து நிற்கும். எந்தம்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துச் சொன்னது. தம்: அசைநிலை. பெரு மக்களை-பெருமையைப் பெற்ற மக்களை. யாவர்-யார். தடுக்க-அவர்கள் புரியும் திருப்பணிகளைத் தடுப்பதற்கு. வல்லார்-வல்லமையைப் பெற்றவர். யாரும் இல்லை என்பது கருத்து

பின்பு உள்ள 17-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கொடுங்கோல் அரசாட்சியைப் புரியும் அந்த வஞ்சனையுள்ள மன்னன் சான்றோர்கள் இகழும் செயல்களாகிய வலிமையைப் பெற்ற காரியங்கள் ஒரு வரம்பும் இல்லாதவற்றைப் புரிய ஒதுக்கித் தள்ளும் செயல்களைச் செய்தல் இல்லாதவராகிய அந்த மூர்த்தி நாயனார் சந்தனக் காப்பைத் தேடிச் சென்று அதை வாங்கிக் கொள்ளும் துறைகளையும் அடைத்து விட்டான்;

தெளிவாக இருக்கும் கங்கையாற்றின் நீரைத் தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தைப் பெற்ற சோமசுந்தரனாருடைய பக்தராகிய அந்தநாயனாரும் தம்முடைய திருவுள்ளத்தில் வருத்தத்தை அடைந்து.' பாடல் வருமாறு:

"எள்ளும் செயல் வன்மைகள் எல்லை யில்லாத செய்யத்
தள்ளும் செயல் இல்லவர் சந்தனக் காப்புத் தேடிக்
கொள்ளும் துறை யும்அடைத் தான்கொடுங் கோன்மை செய்வான்;
தெள்ளும்புனல் வேணியர்க் கன்பரும் சிந்தை நொந்து."

இந்தப் பாடல் குளகம். கொடும் கோன்மை-கொடுங் கோல் அரசாட்சியை. செய்வான்-புரிபவனாகிய அந்த வஞ்சனை உள்ள மன்னன். எள்ளும்-சான்றோர்கள் இகழும். செயல்-செயல்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். வன்மைகள்-வலிமையைப் பெற்ற செயல்கள். எல்லை-ஒரு வரம்பும். இல்லாத-இல்லாதவற்றை. செய்ய-புரிய. த்:சந்தி. தள்ளும்-ஒதுக்கித் தள்ளும். செயல்-காரியங்களைச் செய்தல். இல்லவர்-இல்லாதவராகிய அந்த மூர்த்தி நாயனார். சந்தனக் காப்பு-சந்தனக் காப்பை. த்:சந்தி. தேடி-தேடிச் சென்று. க்:சந்தி. கொள்ளும்-அதை வாங்கிக் கொள்ளும். துறையும் - துறைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். அடைத்தான்-அடைத்து விட்டான். தெள்ளும்-தெளிவாக இருக்கும். புனல்-கங்கையாற்றின் நீரை. வேணியர்க்கு-தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தைப் பெற்றவராகிய சோமசுந்தரப் பெருமானாருடைய; உருபு மயக்கம். அன்பரும்-பக்தராகிய அந்த நாயனாரும். சிந்தை-தம்முடைய திருவுள்ளத்தில். நொந்து-வருத்தத்தை அடைந்து.

பிறகு வரும் 18-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'புல்லியவையாகிய செயல்களைச் செய்யவல்ல சமணர்களாகிய இழிந்தவர்களோடு தன்னுடைய பொழுதைப் போக்கி வரும் வலிமையையும் கொடுமையையும் பெற்ற

பாதகனாகிய அந்த மன்னன் இறந்து போக, "உண்மையான வேதங்களில் கூறப் பெற்ற நன்மையாகிய விபூதியாகிய உயர்ச்சியைப் பெற்ற நல்ல வழியைத் தாங்கும் மேம்பாட்டையும் நல்ல இயல்புகளையும் பெற்றவராகிய உலகை ஆட்சி புரியும் வேந்தரைச் சார்ந்து வாழ்வது என்றைக்கோ?" என்று எண்ணி அந்த மூர்த்தி நாயனார் சார்ந்து இருப்பார்.' பாடல் வருமாறு:

"'புன்மைச் செயல்வல் அமண்குண் டரிற்போது போக்கும்
வன்மைக் கொடும்பா தகன்மாய்ந்திட வாய்மை வேத
நன்மைத் திருநீற் றுயர்நன்னெறி தாங்கும் மேன்மைத்
தன்மைப் புவிமன் னரைச் சார்வ தென்'றென்று
சார்வார்."

புன்மை-புல்லிய தன்மையைப் பெற்ற. ச்:சந்தி. செயல்-செயல்களைச் செய்ய; ஒருமை பன்மை மயக்கம். வல்-வல்ல. அமண்-சமணர்களாகிய; திணை மயக்கம். குண்டரில்-இழிந்தவர்களோடு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். போது-தன்னுடைய பொழுதை. போக்கும்-கழித்து வரும். வன்மை-வலிமையையும், கொடும்-கொடுமையையும் பெற்ற. பாதகன்-பாதகனாகிய அந்த மன்னன். பாதகன்-பாதகங்களாகிய செயல்களைச் செய்பவன். மாய்ந்திட-இறந்து போக. வாய்மை-உண்மையாகிய. வேத-வேதங்களில் கூறப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். நன்மை - நன்மையாகிய. திருநீற்று-விபூதி என்னும். உயர் - உயர்ச்சியைப் பெற்ற. உயர்: முதல் நிலைத் தொழிற் பெயர். நல் - நல்ல. நெறி-வழியை. தாங்கும்-தாங்கியிருக்கும். மேன்மை-மேம்பாட்டையும். த்:சந்தி. தன்மை-நல்ல இயல்புகளையும் பெற்றவராகிய; திணை மயக்கம். தன்மை: ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புவி-இந்த உலகத்தை. மன்னரை- ஆட்சி புரியும் வேந்தரை. ச்:சந்தி. சார்வது-சார்ந்து வாழ்வது. என்று-என்றைக்கோ. என்று-என எண்ணி. சார்வார்-சார்ந்து இருப்பார் மூர்த்தி நாயனார்.

பிறகு உள்ள 19-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கோபிப்பதை அடைந்த பகையை மேற்கொண்டு முள்ளைப் போன்றவனாகிய அந்த மன்னன் ஆட்சி செய்து பாதுகாக்கவும் போய் ஆராய்ச்சி செய்த சுழற்சியோடு பகலின் எல்லை முழுவதும் தேடியும் பொருத்தமாக அமைந்த நல்ல அரைத்த சந்தனத்தை எந்தக் கடையிலும் வாங்கமுடியாமல் தம்முடைய திருவுள்ளம் சோர்வை அடைய அந்த மூர்த்தி நாயனார் தம்முடைய தலைவனாகிய சோமசுந்தரன் எழுந்தருளியிருக்கும் ஆலயத்துக்கு வந்து சேர்ந்தார் மூர்த்தி நாயனார்.' பாடல் வருமாறு:

"காய்வுற்ற செற்றம்கொடு கண்டகன் காப்பவும்சென்
றாய்வுற்ற கொட்பிற் பகல்எல்லை அடங்கநாடி
ஏய்வுற்ற நற்சந் தனம்எங்கும் பெறாதுசிந்தை
சாய்வுற்றிட வந்தனர் தம்பிரான் கோயில்தன்னில்."

காய்வு-கோபிப்பதை. உற்ற-அடைந்த. செற்றம்—பகையை. கொடு-மேற் கொண்டு. கண்டகன் - முள்ளைப் போன்றவனாகிய அந்த மன்னன். காப்பவும்-ஆட்சி செய்து நாட்டைப் பாதுகாக்கவும் சென்று-போய். ஆய்வுற்ற-தாம் ஆராய்ச்சி செய்த. கொட்பின்-சுழன்று திரிந்ததோடு. பகல்-பகல் நேரத்தின். எல்லைஅடங்க-எல்லை முழுவதும். நாடி—தேடிப் பார்த்தும். ஏய்வுற்ற-பொருத்தமாக அமைந்த. நல்-நல்ல. சந்தனம்-அரைத்த சந்தனத்தை. எங்கும்-எந்தக் கடையிலும். பெறாது-வாங்க முடியாமல். சிந்தை-தம்முடைய திருவுள்ளம். சாய்வுற்றிட-சோர்வை அடைய. தம்—தம்முடைய. பிரான்-தலைவனாகிய சோமசுந்தரன் எழுந்தருளியிருக்கும். கோயில் தன்னில்-ஆலயத்துக்கு; உருபு மயக்கம். தன்: அசை நிலை. வந்தனர்-மூர்த்தி நாயனார் வந்து சேர்ந்தார்.

பிறகு வரும் 20-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மூர்த்தி நாயனார், "சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தரு

ளுபவராகிய நடராஜப் பெருமானார் அணிந்து கொள்ளும் நல்ல அழகிய திருமேனியில் பூசும் சந்தனம் இன்றைக்குக் கிடைக்காமல் போகும் இயல்பு உண்டானாலும் தேய்க்கும் அடியேனுடைய கை தவறாது என்று எண்ணி வட்டமாக விளங்கும் ஒரு கருங்கற் பாறையின் மேல் வைத்து மணிக் கட்டுகளும், வெளித் தோலும், நரம்புகளும், எலும்புகளும் கரைந்து தேயுமாறு தம்முடையமுழங்கையைத் தேய்த்தார்."

பாடல் வருமாறு:

"நட்டம்புரி வார்அணி நற்றிரு மெய்ப்பூச் சின்று
முட்டும்பரி சாயினும் தேய்க்குங்கை முட்டா தென்று
வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேயத்தார்
கட்டும்புறந் தோல்நரம் பென்பு கரைந்து தேய."

நட்டம்-அந்த மூர்த்தி நாயனார் சிதம்பரத்தில் உள்ள திருச்சிற்றம்பலத்தில் திருநடனம். புரிவார்-புரிந்தருளுபவ ராகிய நடராஜப் பெருமானார். அணி-அணிந்து கொள்ளும். நல்-நல்ல. திரு-அழகிய. மெய்-தம்முடைய திருமேனியில். ப்:சந்தி. பூச்சு-பூசிக் கொள்ளும் சந்தனம். இன்று-இன் றைக்கு. முட்டும்-கிடைக்காமல் போகும். பரிசு-இயல்பு. ஆயினும்-உண்டானாலும். தேய்க்கும் கை-தேய்க்கும் அடியேனுடைய கை. முட்டாது-தவறாது. என்று-என எண்ணி. வட்டம்-வட்டமாக. திகழ்-விளங்கும். பாறையின்-ஒரு கருங்கற் பாறையின் மேல். வைத்துக் கட்டும்-வைத்து மணிக் கட்டுகளும்; ஒருமை பன்மை மயக்கம். புறந்தோல்-வெளித் தோலும். நரம்பு-நரம்புகளும்; ஒருமை பன்மை மயக்கம். என்பு-எலும்புகளும்; ஒருமை பன்மை மயக்கம். கரைந்து தேய-கரைந்து தேயுமாறு. முழங்கை தேய்த்தார்-தம்முடைய முழங்கையைத் தேய்த்தார்.

பிறகு வரும் 21-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்த மூர்த்தி நாயனார் கருங்கற் பாறையின் மேல் வைத்துத் தேய்த்த அவருடைய முழங்கையிலிருந்து இரத்தம் வழிந்து போகும் பரந்த இடம் எங்கும் எலும்புகள்

வெளிப்பட்டு மூளை சேரும் விதத்தைப் பார்த்து அவருடைய தலைவராகிய நடராஜப் பெருமானார் பொறுக்கவில்லை; அந்த இரவில் மகிழ்ச்சியை அடைந்து அந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த ஓர் அசரீரி வாக்கு எழுந்து கேட்டது.' பாடல் வருமாறு:

" கல்லின்புறம் தேய்த்த முழங்கை கலுழ்ந்து சோரி
செல்லும்பரப் பெங்கணும் என்பு திறந்த மூளை
புல்லும்படி கண்டு பொறுத்திலர் தம்பி ரானார்;
அல்லின்கண் எழுந்த துவந்தருள் செய்த வாக்கு.''

கல்லின்-அவ்வாறு அந்த மூர்த்தி நாயனார் கருங்கற் பாறையின். புறம்-மேல். தேய்த்த-வைத்துத் தேய்த்த. முழங்கை-அவருடைய முழங்கையிலிருந்து. சோரி-இரத்தம். செல்லும்-வழிந்து ஓடும். பரப்பு-பரந்த இடம். எங்கணும்-எங்கும். என்பு-எலும்புகள்; ஒருமை பன்மை மயக்கம். திறந்த மூளை-வெளிப்பட்ட மூளை. புல்லும்-சேரும். படி-விதத்தை. கண்டு-பார்த்தருளி. தம்-அவருடைய. பிரானார்-தலைவராகிய நடராஜப் பெருமானார். பொறுத்திலர்-பொறுக்கவில்லை. அல்லின் கண்-அந்த இராத்திரி வேளையில். உவந்து-மகிழ்ச்சியை அடைந்து. அருள்செய்த-அந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த. வாக்கு-ஓர் அசரீரி வாக்கு. எழுந்தது-எழுந்து கேட்டது.

பிறகு உள்ள 22-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' ''எம்மிடம் கொண்ட பக்தியின் துணிவினால் இந்தக் காரியத்தைப் புரியாதே; ஐயனே, நின்னிடம் வலிமையான துன்பங்களை உண்டாகும்படி செய்தவனாகிய அந்த மன்னன் கவர்ந்து கொண்ட நாடு முழுவதையும் நீ பெற்றுக் கொண்டு முன்பு துன்பங்கள் உண்டானவை முழுவதையும் போக்கி விட்டு நாட்டை அரசாட்சி செய்து பாதுகாத்துப் பிறகு நின்னுடைய திருட்பணிகளைப் புரிந்து விட்டுப் பிறகு நம்முடைய பெருமையைப் பெற்ற சிவலோகத்தை அடை

வாயாக'' என்று நடராஜப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.' பாடல் வருமாறு:

' '' அன்பின்துணி வால்இது செய்திடல், ஐய, உன்பால்
வன்புன்கண் விளைத்தவன் கொண்டமண் எல்லாம் கொண்டு
முன்பின்னல் புகுந்த முற்றவும் நீத்துக் காத்துப்
பின்புன்பணி செய்துநம் பேருல கெய்து' கென்ன.''

இந்தப் பாடல் குளகம். அன்பின்-எம்மிடம் கொண்ட பக்தியின். துணிவால் - துணிவினால். இது-இவ்வாறு உன்னுடைய முழங்கையைக் கருங்கற் பாறையின் மேல் வைத்துத் தேய்க்கும் இந்தக் காரியத்தை. செய்திடல்-புரியாதே. ஐய-ஐயனே. உன்பால்-நின்னிடத்தில். வன்-வலிமையான. புன்கண் - துன்பங்களை; ஒருமை பன்மை மயக்கம். விளைத்தவன்-உண்டாகுமாறு செய்தவனாகிய அந்த மன்னன். கொண்ட - வலியக் கவர்ந்து கொண்ட. மண்-நாடு. எல்லாம்-முழுவதையும். கொண்டு நீ பெற்றுக் கொண்டு. முன்பு-முன்னால். இன்னல்-துன்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். புகுந்தன-உண்டானவை. முற்றவும்-முழுவதையும். நீத்து-போக்கிவிட்டு. க்: சந்தி. காத்து-நாட்டை அரசாட்சி செய்து பாதுகாத்து. ப்: சந்தி. பின்பு-பிறகு. உன்-நின்னுடைய. பணி - திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்து புரிந்து விட்டுப் பிறகு. நம்-எம்முடைய. பேருலகு-பெருமையைப்பெற்ற சிவலோகத்தை. எய்துக-நீ அடைவாயாக. என்ன-என்று நடராஜப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. எய்து கென்ன-எய்துக என்ன; தொகுத்தல் விகாரம்.

பிறகு வரும் 23-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இவ்வாறு எழுந்த அசரீரி வாக்கைக் கேட்டு எழுந்து நின்று கொண்டு அச்சத்தை அடைந்து முன்னால் தாம் புரிந்த வண்ணம் ஒழிந்து போகப் பாறையில் தேய்த்ததனால் உண்டான தோய்ந்த புண்ணினால் உண்டாகிய துன்பம்

அகன்று கையின் திறமை நிரம்பியுள்ள வாசனைத் திரவியங்கள் எல்லாவற்றையும் கலந்து வைத்து மொய்த்த அழகிய வர்ணம் திகழும் பிரகாசத்தை அடைந்தார் அந்த மூர்த்தி நாயனார்'. பாடல் வருமாறு:

'' இவ்வண்ணம் எழுந்தது கேட்டெழுந் தஞ்சி முன்பு
செய்வண்ணம் ஒழிந்திடத் தேய்ந்த புண்ஊறு தீர்ந்து
கைவண்ணம் நிரம்பின வாசமெல் லாம்க லந்து
மொய்வண்ண விளங்கொளி எய்தினர் மூர்த்தி யார்தாம்.''

இவ்வண்ணம் - இவ்வாறு. எழுந்தது - எழுந்த அசரீரி வாக்கை. கேட்டு-கேட்டு விட்டு. எழுந்து - எழுந்து நின்று கொண்டு. அஞ்சி-அச்சத்தை அடைந்து. முன்பு-முன்னால். செய்-தாம் புரிந்த. வண்ணம் ஒழிந்திட-வண்ணம் ஒழிந்து போக. த்: சந்தி. தேய்ந்த-கருங்கற் பாறையில் தம்முடைய முழங்கையைத் தேய்த்ததனால் உண்டான தேய்ந்த. புண்-புண்ணினால் உண்டாகிய. ஊறு-துன்பம். தீர்ந்து-அகன்று. கை-கையின். வண்ணம்-திறமை. நிரம்பின-நிரம்பியுள்ள. வாசம்-வாசனைத் திரவியங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றையும். கலந்து-கலந்து வைத்து. மொய்-மொய்த்த. வண்ண-அழகிய வர்ணம். விளங்கு-திகழும். ஒளி-பிரகாசத்தை; 'புகழை' எனலும் ஆம். எய்தினர்-அடைந்தார். மூர்த்தியார்-அந்த மூர்த்தி நாயனார். தாம்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 24 ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த நாளில் இராத்திரி வேளையில் சமணர்களாகிய அடைக்கலத்தானத்தைச் சேர்ந்து தன்னுடைய வாழ்க்கையை நடத்தும் அரசனாகிய யுத்தம் புரியும் படுகக் கருநாடர்களினுடைய அரசனுடைய வாழ்நாட்களும் முடிந்து விட்டது; சங்கரனாகிய சிவபெருமானுடைய சார்பு இல்லாதவர்களுக்கு மின்னல் ஆகும் என்று சொல்லுமாறு இருந்த உடம்பு நிலையாத தன்மை வெற்றியைப் பெற.' பாடல் வருமாறு:

" அந்நாள்இர வின்கண் அமண்புகல் சார்ந்து வாழும்
மன்னாகிய போர்வடு கக்கரு நாடர் மன்னன்
தன்நாளும் முடிந்தது, சங்கரன் சார்பி லோர்க்கு
மின்னாமென நீடிய மெய்ந்நிலை யாமை வெல்ல."

அந்நாள்-அந்த நாளில். இரவின் கண்-இரவு வேளையில். அமண்-சமணர்களாகிய; திணை மயக்கம். புகல்-அடைக் கலத் தானத்தை. சார்ந்து-சேர்ந்து கொண்டு. வாழும்-தன்னுடைய வாழ்க்கையை நடத்தும். மன் ஆகிய-அரசனாக உள்ள. போர்-யுத்தம் புரியும். வடுகக் கருநாடர் - வடுகக் கருநாடர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மன்னன் தன்-அரசனுடைய; தன்: அசை நிலை. நாளும்-வாழ்நாட்களும்; ஒருமை பன்மை மயக்கம். சங்கரன்-சங்கரனாகிய சிவ பெருமானுடைய. சங்கரன் - சுகத்தைச் செய்கிறவன். சார்பு-சார்ந்து வாழும் நிலை. இலோர்க்கு-இல்லாத மக்களுக்கு; இடைக் குறை; ஒருமை பன்மை மயக்கம். மின்-மின்னல். ஆம்-ஆகும். என-என்று கூறுமாறு; இடைக்குறை. நீடிய-இருந்த. மெய்-உடம்பு. ந்:சந்தி. நிலையாமை-நிலையாத தன்மை. வெல்ல-வெற்றியைப் பெற. முடிந்தது-முடிந்து விட்டன; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 25-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இவ்வண்ணம் இந்தப் பூமண்டலத்தில் மிகவும் உயர்ச்சியை அடைந்த நல்ல சான்றோர்கள் உண்மை வாழும் உலகத்துக்கு வேகமாகச் சென்று அடைபவர்களையே போல் அவ்வண்ணம் அரனாராகிய சிவபெருமானாருடைய அடியவர்களை அலைத்துத் துன்புறுத்திய கெட்டவனாகிய அந்த வடுகக் கருநாடக மன்னன் கொடுமையான இடத்தைக் கொண்ட நரகத்தில் விழும் பொருட்டு வேமாகச் சென்று இறந்து போனான்.' பாடல் வருமாறு:

" இவ்வா றுலகத்தின் இறப்ப உயர்ந்த நல்லோர்
மெய்வாழ் உலகத்து விரைந்தணை வார்க ளேபோல்

அவ்வா றரனார் அடியாரை அலைத்த தீயோன்
வெவ்வாய் நிரயத் திடைவீழ விரைந்து வீந்தான்.''

இவ்வாறு-இவ்வண்ணம். உலகத்தின்-இந்தப் பூமண்டலத்தில். இறப்ப-மிகவும். உயர்ந்த-உயர்ச்சியை அடைந்த. நல்லோர்-நல்லவர்களாகிய சான்றோர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மெய்-உண்மை. வாழ்-வாழும். உலகத்து-உலகத்துக்கு. விரைந்து-வேகமாகச் சென்று. அணைவார்களே போல்-அடைபவர்களையே போல. அவ்வாறு-அவ்வண்ணம். அரனார்-ஹரனாராகிய சிவபெருமானாருடைய. அரன்-சங்காரம் செய்தருளுகிறவன். அடியாரை - அடியவர்களை; ஒருமை பன்மை மயக்கம். அலைத்த-துன்புறுத்திய. தீயோன்-கெட்டவனாகிய அந்த வடுகக் கருநாடக மன்னன். வெவ்-கொடுமையாகிய. வாய்-இடத்தைக் கொண்ட. நிரயத் திடை-நரகத்தில். வீழ-விழும் பொருட்டு. விரைந்து-வேகமாகச் சென்று. வீந்தான்-இறந்து போனான்.

பிறகு உள்ள 26-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னுடைய வாழ்நாள்கள் முழுவதும் குற்றங்களையே செய்து வந்த அந்த மூர்க்கனாகிய வடுகக் கருநாடர் மன்னன் இறந்த சமயத்தில் எழுதும் பூங்கொடியைப் போல்பவர்களாகிய பெண்மணிகள் அடங்க ஏங்கி வருந்தும் உறவினர்கள் யாவரும் வாட்டத்தை அடைந்தார்கள்; அவனைப் போன்ற பின்மாலை நேரமும் விடிந்தது; சிவந்த கிரணங்களை வீசும் சூரியன் ஆகாயத்தின் மேல் உதயமானான்.' பாடல் வருமாறு:

''முழுதும்பழு தேபுரி மூர்க்கன் உலந்த போதின்
எழுதும்கொடி போல்பவர் உட்பட ஏங்கு சுற்றம்
முழுதும்புலர் வுற்றது; மற்றவன் அன்ன மாலைப்
பொழுதும்புலர் வுற்றது, செங்கதிர் மீது போத.''

முழுதும்-தன்னுடைய வாழ்நாள்கள் முழுவதும். பழுதே-குற்றங்களையே; ஒருமை பன்மை மயக்கம். புரி-செய்து வந்த.

மூர்க்கன்-மூர்க்கனாகிய அந்த வடுகக் கருநாடர் மன்னன். உலந்த - இறந்து போன. போதின்-சமயத்தில். எழுதும்_வரையும். கொடி - பூங்கொடிகளை; ஒருமை பன்மை மயக்கம். போல்பவர்-போல விளங்குபவர்களாகிய பெண் மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். உட்பட-உள்ளிட்டு. ஏங்கு-ஏக்கத்தை அடைந்து வருந்தும். சுற்றம்-உறவினர்கள்; திணை மயக்கம். முழுதும்-யாவரும். புலர்வுற்றது-வாட்டத்தை அடைந்தார்கள்; திணை மயக்கம். மற்று: அசை நிலை. அவன்-அந்த மன்னனை. அன்ன-போன்ற கருமை யான. மாலைப்பொழுதும்-பின் மாலை நேரமும். செங்கதிர்-சிவந்த கிரணங்களை வீசும் சூரியன். மீது-வானத்தின் மேல். போத-உதயமாக. புலர்வுற்றது-விடிந்து விட்டது.

பெண்ணுக்குப் பூங்கொடியை உவமையாகக் கூறும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க.

பிறகு வரும் 27-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தச் சமயத்தில் அந்த இடத்தில் அந்த வடுகக் கருநாடர் மன்னனுடைய மந்திரிகள் ஒன்று கூடித் தங்களுடைய கைகளினால் வேறாகக் கொண்ட அருமையான ஈமக் கடனை காலை வேளையில் நிறைவேற்றிவிட்டு, கூர்மையான வேலாயுதத்தை ஏந்தியவனாகிய அந்த மன்னனுடைய குடும் பத்தில் புதல்வர்களும் இல்லாமையால் தாங்கள் புரியத் தக்க வேறான செயல் வகையைச் சிந்தித்து ஆராய்பவர்கள் ஆனார்கள்.' பாடல் வருமாறு:

" அவ்வேலையில் அங்கண் அமைச்சர்கள் கூடித் தங்கள்
கைவேறுகொள் ஈம அருங்கடன் காலை முற்றி
வைவேலவன் தன்குல மைந்தரும் இன்மை யாலே
செய்வேறுவி னைத்திறம் சிந்தனை செய்து தேர்வார்."

அவ்வேலையில்-அந்தச் சமயத்தில். அங்கண் - அந்த இடத்தில். அமைச்சர்கள் - அந்த வடுகக் கரு

நாடர் மன்னனுடைய மந்திரிகள். கூடி - ஒன்று கூடி. த்: சந்தி. தங்கள் - தங்களுடைய. கை- கைகளினால்; ஒருமை பன்மை மயக்கம். வேறு-வேறாகக் கொள்-கொண்ட. சம அரும்கடன்-அருமையான சமக் கடனை. காலை-காலை நேரத்தில். முற்றி-செய்து நிறை வேற்றி விட்டு. வை-கூர்மையான. வேலவன் தன்-வேலா யுதத்தை ஏந்தியவனாகிய அந்த மன்னனுடைய. தன்: அசை நிலை. குல-குடும்பத்தில். மைந்தரும்-புதல்வர்களும்; ஒருமை பன்மை மயக்கம். இன்மையால்-இல்லாமற் போனமையால். ஏ: அசைநிலை. செய்-தாங்கள் புரிவதற்குரிய. வேறு-வேறா கிய. வினைத்திறம்-செயல்வகையை. சிந்தனை செய்து-சிந் தித்து. தேர்வார்-ஆராய்பவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 28-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மந்திரிகள், ''நாட்டில் வாழும் மக்கள் தாழ்ந்து போகும் செயல் இல்லாமல் ஓர் அரசன் அந்த நாட்டை அரசாட்சி புரிந்து பாதுகாக்க வேண்டும்; உணவுப் பொருள் களும், குடி மக்களும் முதலாக உள்ளவற்றைக் கொள்ளுதலை உடையது ஆனாலும் தன்னைச் சுற்றியிருக்கும் சேனையைப் பெற்ற ஓர் அரசனுடைய இரண்டு தோள்களின் வலிமை யினால் பாதுகாக்கும் காவல் இல்லாமல் இந்த உலகத்தில் வாழும் மக்கள் நல்வாழ்வு வாழும் தன்மையை உடையவர் கள் அல்லர்.'' என்று கூறினார்கள்.' பாடல் வருமாறு:

'' 'தாழும்செயல் இன்றொரு மன்னவன் தாங்க வேண்டும்;
கூழும்குடி யும்முத லாயின கொள்கைத் தேனும்
சூழும்படை மன்னவன் தோளிணைக் காவல் இன்றி
வாழும்தகைத் தன்றிந்த வையகம்' என்று சொன்னார்.''

தாழும்-அந்த மந்திரிகள், 'நாட்டில் வாழும் மக்கள் தாழ்வை அடைந்து வருந்தும். செயல்-செய்கை. இன்று- இல்லாமல். ஒரு மன்னவன்-ஓர் அரசன். தாங்க வேண்டும்- அந்த நாட்டை அரசாட்சி புரிந்து பாதுகாக்க வேண்டும்.

கூழும்- உணவுப் பொருள்களும்; ஒருமை பன்மை மயக்கம். குடியும்-குடி மக்களும்; ஒருமை பன்மை மயக்கம். முதலாயின-முதலாக உள்ளவற்றை. கொள்கைத் தேனும்-கொள்ளுதலை உடையதானாலும். சூழும்-தன்னைச் சுற்றியிருக்கும். படை-சேனையைப் பெற்ற. மன்னவன்-ஓர் அரசனுடைய. தோள் இணை-இரண்டு தோள்களின் வலிமையினால். தோள்: ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. காவல்-பாதுகாக்கும் காவல். இன்றி-இல்லாமல். இந்த வையகம்-இந்த உலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். வாழும்-நல்வாழ்வு வாழும். தகைத்து-தன்மையை உடையவர்கள்; திணை மயக்கம். அன்று-அல்லர்; திணை மயக்கம். என்று-என. சொன்னார்-கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 29-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு: 'பல வகைகளாக உள்ள உயர்வுகள் யாவற்றையும் பரிபாவனம் புரிந்து இந்த உலகத்தில் வாழும் மக்களை அரசாட்சி செய்து பாதுகாக்கும் மன்னனுடைய உயரமான வெண்கொற்றக் குடையின் கீழ் அந்த மக்கள் தங்கள் தங்களுக்குரிய வழிகளில் நடந்து தங்கள் வாழ்க்கையை நடத்தும் அரசரைப் பெறுதல் இல்லாமல் தங்கியிருக்கும் இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்களை நினைக்கும் போது இனிய உயிர் இல்லாமல் வாழும் உடம்பை நிகர்க்கும்.'' என்று அந்த மந்திரிகள் கூறுவார்களானார்கள்.' பாடல் வருமாறு:

'' பன்முறை உயிர்கள் எல்லாம் பாலித்து ஞாலம் காப்பான்
தன்னெடும் குடைக்கீழ்த் தத்தம் நெறிகளில் சரித்து வாழும்
மன்னரை இன்றி வைகும் மண்ணுல கெண்ணும் காலை
இன்னுயிர் இன்றி வாழும் யாக்கையை ஒக்கும்.' என்பார்.''

பல்-பல, முறை-வகைகளாக உள்ள; ஒருமை பன்மை மயக்கம். உயிர்கள் எல்லாம்-உயிர்கள் எல்லாவற்றையும்; அவையாவன மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, கடல் வாழ் பிராணிகள், மரம், செடி, கொடி முதலியவை.

பாலித்து-பரிபாலனம் புரிந்து. ஞாலம்-இந்த உலகத்தில் வாழும் மக்களை; இட ஆகு பெயர். காப்பான்-அரசாட்சி செய்து பாதுகாக்கும் மன்னனுடைய. தன்: அசை நிலை. நெடும்-உயரமான. குடைக்கீழ்-வெண் கொற்றக் குடையின் கீழ். த்: சந்தி. தத்தம்-தங்கள் தங்களுக்கு உரிய. நெறிகளில்-வழிகளில். சரித்து-நடந்து. வாழும்-தங்கள் வாழ்க்கையை நடத்தி வரும். மன்னரை-அரசரை. இன்றி-பெறுதல் இல்லாமல். வைகும் மண்ணுலகு-இந்த மண்ணுல கத்தில் வாழும் மக்களை; இட ஆகு பெயர். எண்ணும்-நினைக்கும். காலை-போது. இன்-இனிய. உயிர் இன்றி-உயிர் இல்லாமல். வாழும் யாக்கையை-வாழும் உடம்பை. ஒக்கும்-போல இருக்கும். என்பார்-என்று அந்த மந்திரிகள் கூறுவாரானார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 30-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இவ்வாறு பலவற்றையும் அந்த மந்திரிகள் எண்ணிப் பார்த்து, "இந்த நாட்டில் இனிமேல் நாட்டைப் பாதுகாக்கும் மன்னர் இல்லை; நாம் புரியத்தக்கவிதம் இதுதான்" என்று தெளிவை அடைபவர்களாகி, சிறப்பினால் மிக்கு விளங்கும் மையைப் போலக் கருமையாகவும், மலையைப் போலப் பெரியதாகவும் தோன்றும் ஒரு யானையினுடைய கண்களைக் கட்டி விட்டு அனுப்பினால் அந்தத் துதிக்கையை உடைய மலையைப் போன்ற யானை தன்னுடைய துதிக்கையினால் எடுத்துத் தன் மேல் வைத்துக் கொண்டவர் இந்த மண்ணுல கத்தில் வாழும் மக்களை அரசாட்சி புரிந்து பாதுகாக்கும் காவலை மேற்கொள்வார்" எனக் கூறி.' பாடல் வருமாறு:

"'இவ்வகை பலவும் எண்ணி, 'இங்கினி அரசர் இல்லை;
செய்வகை இதுவே.' என்று தெளிபவர்; சிறப்பின் மிக்க
மைவரை அனைய வேழம் கண்கட்டி விட்டால் மற்றக்
கைவரை கைக்கொண் டார்மண் காவல்கைக்
கொள்வார்.' என்று.'"

இந்தப் பாடல் குளகம். இவ்வகை-இவ்வாறு. பலவும்-பலவற்றையும். எண்ணி-அந்த மந்திரிகள் எண்ணிப் பார்த்து. இங்கு-இந்த நாட்டில். இனி-இனிமேல். அரசர்-நாட்டை ஆட்சி புரிந்து பாதுகாக்கும் மன்னர். இல்லை-இப்போது இல்லை. செய்-நாம் புரியத் தக்க, வகை-விதம். இதுவே-இது தான். என்று-என. தெளிபவர்-தெளிவை அடைபவர்களாகி; முற்றெச்சம்; ஒருமை பன்மை மயக்கம். சிறப்பின்-சிறப்பினால். மிக்க-மிக்கு விளங்கிய. மை-மையைப் போலக் கருமையாகவும். வரை அனைய-மலையைப் போலப் பெரியதாகவும் தோன்றும். வேழம்-ஒரு யானையினுடைய. கண்-கண்களை; ஒருமை பன்மை மயக்கம். கட்டி-கட்டி விட்டு. விட்டால்-அனுப்பினால். மற்று: அசை நிலை. அக்கைவரை-அந்தத் துதிக்கையை உடைய மலையைப் போன்ற யானை. வரை: உவமஆகு பெயர். கை-தன்னுடைய துதிக்கையினால். கொண்டார்-எடுத்துத் தன்மேல் வைத்துக் கொண்டவர். மண்-இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்களை; இட ஆகு பெயர். காவல்-அரசாட்சி புரிந்து பாதுகாக்கும் காவலை. கைக்கொள்வார்-மேற் கொள்வார். என்று-எனக் கூறி.

பின்பு வரும் 31-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'செம்மையும் மாட்சியும் கொண்ட செயலாகிய அருச்சனையை சாத்திர முறைப்படி அந்த மந்திரிகள் புரிந்து, "தன்னுடைய தோள்களின் வலிமையினால் இந்தப் பெரிய நாட்டைப் பாதுகாத்துத் தாங்குவதற்கு உரிய ஒரு மன்னனை நீ உன்மேல் எடுத்துக் கொண்டு வருவாயாக" எனக் கூறி மழையைப் பெய்யும் பெரிய மேகத்தைப்போலக் கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களையும் ஒழுக விடும் பெருகிய ஒளியை வீசும் பட்டத்தை அணிந்த நெற்றியையும், துதிக்கையையும் பெற்ற விலங்காகிய யானையை நறுமணம் கமழும் மெல்லிய ஆடையைக் கொண்டு கண்களைக் கட்டி விட்டு அனுப்பினார்கள்.' பாடல் வருமாறு:

"செம்மாண்வினை அர்ச்சனை நூல்முறை செய்து, 'தோளால்
இம்மாநிலம் ஏந்தஓர் ஏந்தலை ஏந்து' சென்று
பெய்ம்மாமுகில் போல்மதம் பாய்பெரு கோடை நெற்றிக்
கைம்மாவை நறுந்துகில் கொண்டு கண்கட்டி விட்டார்."

செம்—செம்மையும். மாண்—மாட்சியும் கொண்ட. வினை—செயலாகிய. அர்ச்சனை—அருச்சனையை. நூல் முறை—சாத்திர முறைப்படி. செய்து—புரிந்து. தோளால்—தன்னுடைய தோள்களின் வலிமையினால்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகு பெயர். இம்மா—இந்தப் பெரிய. நிலம்—நாட்டை. ஏந்த—பாதுகாத்துத் தாங்குவதற்கு. ஓர் ஏந்தலை—உரிய ஒரு மன்னனை. ஏந்துக-நீ உன்மேல் எடுத்துக் கொண்டு வருவாயாக. என்று—எனக் கூறி. ஏந்து சென்று: தொகுத்தல் விகாரம். பெய்—மழையைப் பெய்யும். ம்:சந்தி. மா—பெரிய. முகில் போல்—மேகத்தைப் போல. மதம்—கன்ன மதம், கபோல மதம், பிஜ மதம் என்னும் மூன்று மதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். பாய்—ஒழுக விடும். பெருகு—ஒளியைப் பெருக வீசும். ஓடை—பட்டத்தை அணிந்த. நெற்றி—நெற்றியையும். க்:சந்தி. கை—துதிக்கையையும் பெற்ற. ம்:சந்தி. மாவை—விலங்காகிய யானையை. நறும்—நறுமணம் கமழும். துகில் கொண்டு—ஒரு மெல்லிய ஆடையைக் கொண்டு. கண்—அந்த யானையினுடைய கண்களை; ஒருமை பன்மை மயக்கம். கட்டி—கட்டி விட்டு. விட்டார்—அந்த மந்திரிகள் அனுப்பினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 32—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு மந்திரிகள் தன்னுடைய கண்களைக் கட்டி விட்டு அனுப்பும் மதத்தால் களிப்பை அடைந்த அந்த வேழம் அந்தப் பாதுகாப்பைப் பெற்ற பழைய ஊரில் தரை சுழலுமாறு ஒரு தெருவின் பக்கத்தில் திரிந்து ஓடி உறுதியான தங்கத்தைப் பதித்திருக்கும் விசாலமான

பெரிய திருமதில் சுற்றியிருக்கும் மதுரை மாநகரத்தில் விளங்கும் ஆலயமாகிய திருவாலவாயிலில் ஆகாயம் தாழ்ந்து நிற்க ஓங்கி விளங்கும் கோபுர வாசலுக்கு முன்னால் சென்று."

பாடல் வருமாறு:

" கண்கட்டி விடும்களி யானைஅக் காவல் மூதூர்
மண்கொட் புறவீதி மருங்கு திரிந்து போகித்
திண்பொற்றட மாமதில் சூழ்திருவால வாயின்
விண்பிற்பட ஓங்கிய கோபுரம் முன்பு மேவி."

இந்தப் பாடல் குளகம். கண்-அவ்வாறு மந்திரிகள் தன்னுடைய கண்களை; ஒருமை பன்மை மயக்கம். கட்டி-ஒரு மெல்லிய ஆடையினால் கட்டி விட்டு. விடும் அனுப்பும். களி-மதத்தால் களிப்பை அடைந்த. யானை-அந்த வேழம். அக் காவல்-அந்தப் பாதுகாப்பைப் பெற்ற. மூதூர்-பழைய ஊராகிய மதுரை மாநகரத்தில். மண்-தரை. கொட்புற-சுழலுமாறு. வீதி-ஒரு தெருவின். மருங்கு-பக்கத்தில். திரிந்து-திரும்பி. போகி-ஓடி. த்:சந்தி. திண்-உறுதியான. பொன்-தங்கத்தைப் பதித்திருக்கும். தட-விசாலமாகிய. மா-பெரிய. மதில்-திருமதில். சூழ்-சுற்றியிருக்கும். திருவால வாயின்-மதுரை மாநகரத்தில் விளங்கும் ஆலயமாகிய திருவால வாயிலில். விண்-ஆகாயம். பிற்பட-தாழ்ந்து நிற்க. ஓங்கிய-உயரமாக விளங்கிய. கோபுரம்-கோபுர வாசலுக்கு. முன்பு-முன்னால். மேவி-சென்று.

பிறகு வரும் 33-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த யானை ஓடும் இராத்திரி வேளையில் நடந்ததைப் பார்த்த திருத்தொண்டராகிய மூர்த்தி நாயனார், "இந்த இடத்தில் எம்பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள் வழங்கிய திருவருள் ஆகும் என்று கூறினால் இந்த உலகத்தில் வாழும் மக்களை அரசாட்சி புரிந்து பாதுகாக்கும் பணியை அடியேன் ஏற்றுக்கொள்வேன்" எனத் தம்முடைய திருவுள்ளத்தில் தளர்ச்சியை விட்டுவிட்டு, கொன்றை மலர் மாலையை அணிந்தவராகிய சோமசுந்தரப் பெருமானார்

எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்கு வெளியில் நின்று கொண் டிருக்க.' பாடல் வருமாறு:

"நீங்கும் இரவின்கண் நிகழ்ந்தது கண்ட தொண்டர்
'ஈங்கெம்பெரு மான்அரு ளாம்எனில் இந்த வையம்
தாங்கும்செயல் பூண்பன்' என் றுள்ளம் தளர்வு நீங்கிப்
பூங்கொன்றை மிலைந்தவர் கோயிற் புறத்து நிற்ப."

இந்தப் பாடல் குளகம். நீங்கும்-கண்களைக் கட்டி விட்ட அந்த யானை ஓடும். இரவின் கண்-அந்த இராத்திரி வேளை யில். நிகழ்ந்தது-நடந்ததை. கண்ட-பார்த்த. தொண்டர்-திருத்தொண்டராகிய மூர்த்தி நாயனார். ஈங்கு-இந்த இடத் தில். எம்பெருமான்-எம்பெருமானாகிய சோமசுந்தரக் கடவுள். அருளாம்-வழங்கிய திருவருள் ஆகும். எனில்-என்று கூறினால்; இடைக்குறை. இந்த வையம்-இந்த உல கத்தில் வாழும் வக்களை; இட ஆகு பெயர். தாங்கும்-அர சாட்சி புரிந்து பாதுகாக்கும். செயல்-பணியை. பூண்பன்-அடியேன் ஏற்றுக் கொள்வேன். என்று-என. உள்ளம்-தம் முடைய திருவுள்ளத்தில் உண்டான. தளர்வு-தளர்ச்சியை. நீங்கி-விட்டு விட்டு. ப்: சந்தி. பூங்கொன்றை - கொன்றை மலர் மாலையை; ஆகுபெயர். மிலைந்தவர்-அணிந்தவராகிய சோமசுந்தரப் பெருமானார். கோயில்-எழுந்தருளியிருக்கும் ஆலயத்திற்கு. புறத்து-வெளியில். நிற்ப-நின்று கொண் டிருக்க.

அடுத்து உள்ள 34-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு கண்களைக் கட்டி விட்டு அனுப்பிய யானை அரசன் அந்த இடத்தில் வேகமாக நடந்து போய் நல்வாழ் வைப் பெற்று இந்த உலகத்தில் வாழும் மக்கள் முன்பிறவியில் புரிந்த தவத்தின் பயனாக வள்ளலாராகிய மூர்த்தி நாயனா ரைச் சுற்றியிருக்கும் தங்கம் ஒளியை வீசும் பெருமையைப் பெற்ற அழகிய பெரிய தரையில் படியுமாறு முன்னால் தாழ்ந்து இருந்து அந்த மூர்த்தி நாயனாரை எடுத்துக்

கொண்டு தன்னுடைய கழுத்தின் மேல் தாங்கியது.' பாடல் வருமாறு:

"வேழத்தர சங்கண் விரைந்து நடந்து சென்று
வாழ்வுற் றுலகம்செய் தவத்தினின் வள்ளலாரைச்
சூழ்பொற் சுடர்மா மணிமாநிலம் தோய முன்பு
தாழ்வுற் றெடுத்துப் பிடர்மீது தரித்த தன்றே."

வேழத்தரசு-அவ்வாறு மந்திரிகள் தன்னுடைய கண்களை ஒரு மெல்லிய ஆடையால் கட்டி விட்டு அனுப்பிய யானை அரசன். அரசு: திணை மயக்கம். அங்கண்-அந்த இடத்தில். விரைந்து-வேகமாக. நடந்து சென்று-நடந்து போய். வாழ்வு-நல்வாழ்வை. உற்று-பெற்று. உலகம்-இந்த உலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். செய்-முன் பிறவியில் புரிந்த. தவத்தினின்-தவத்தின் பயனாக; ஆகு பெயர். வள்ளலாரை-வள்ளலாராகிய அந்த மூர்த்தி நாயனாரை. ச்:சந்தி. சூழ்-சுற்றியிருக்கும். பொன் சுடர்-தங்கம் ஒளியை வீசும். மா-பெருமையைப் பெற்ற. மணி-அழகிய. மா-பெரிய; விரிந்த. நிலம்-தரையில். தோய-படியுமாறு. முன்பு-அந்த நாயனாருக்கு முன்னால். தாழ்வுற்று-தாழ்ந்து படுத்து. எடுத்து-அந்த மூர்த்தி நாயனாரை எடுத்துக் கொண்டு. ப்: சந்தி. பிடர் மீது-தன்னுடைய கழுத்தின் மேல். தரித்தது—தாங்கியது. அன்று, ஏ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

அடுத்து உள்ள 35 — ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த யானை தன்னுடைய கழுத்தில் வைத்துக் கொண்டவராகிய மூர்த்தி நாயனாரைப் பார்த்துத் துன்பங்கள் கெடுமாறு நினைத்த உறுதியான பான்மையைப் பெற்ற மந்திரிகள் எல்லாரும் அந்த நாயனாருடைய திருவடிகளின் மேல் விழுந்து வணங்கிப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தார்கள்; அந்தச் சமயத்தில் அலைகள் கிளர்ந்து எழும் சமுத்திரத்தை நிகர்த்துச் சத்தம் மிக்கு விளங்கியது அந்த மதுரை மாநகரம்.' பாடல் வருமாறு:

"மாதங்கம் எருத்தினில் வைத்தவர் தம்மைக் காணா
ஏதம்கெட எண்ணிய திண்மை அமைச்சர் எல்லாம்
பாதங்களின் மீது பணிந்தெ ழுந்தார்கள் அப்போ
தோதம்கிளர் வேலையை ஒத்தொலி மிக்க தவ்வூர்."

மாதங்கம்—மந்திரிகள் கண்களைக் கட்டி விட்டு அனுப்பிய அந்த யானை. எருத்தினில்—தன்னுடைய கழுத்தில். வைத்தவர் தம்மை—வைத்துக் கொண்டவராகிய மூர்த்தி நாயனாரை. தம்: அசைநிலை. க்: சந்தி. காணா—பார்த்து. ஏதம்—துன்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். கெட—கெடுமாறு. எண்ணிய—நினைத்த. திண்மை — உறுதியான பான்மையைப் பெற்ற. அமைச்சர்—மந்திரிகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்—எல்லாரும். பாதங்களின் மீது— அந்த நாயனாருடைய திருவடிகளின் மேல். பணிந்து— விழுந்து வணங்கி விட்டு. எழுந்தார்கள்—பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தார்கள். அப்போது— அந்தச் சமயத்தில். ஓதம்—அலைகள்; ஒருமை பன்மை மயக்கம். கிளர்—கிளர்ந்து எழும். வேலையை—சமுத்திரத்தை. ஒத்து—நகர்த்து. ஒலி—சத்தம். மிக்கது—மிக்கு விளங்கியது. அவ்வூர்—அந்த மதுரை மாநகரம்.

பிறகு வரும் 36-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சங்க வாத்தியங்களை அவற்றை வைத்திருப்பவர்கள் ஊதி முழக்கினார்கள்; தாரைகளையும் அவற்றை ஊதுபவர்கள் ஊதினார்கள்; பேரிகைகளோடு எந்த இடத்திலும் எங்கணும் பலவகையான வாத்தியங்கள் இனிய நாதத்தை எழுப்பின; ஒரு வரம்பு இல்லாதவையாக அந்த அந்த இடங்களில் மக்கள் மூர்த்தி நாயனாரை வாழ்த்துகின்ற வாழ்த்துக்களின் சத்தம் மிகுதியாகக் கேட்டன; அழகிய தங்கப் பூங்கொம்பைப் போன்ற சிவகாம வல்லியைத் தன்னுடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் நடராஜப்

பெருமான் வழங்கிய திருவருளால் நாட்டை ஆட்சி புரியும் மன்னர்கள் பக்கங்கள் எந்த இடங்களிலும் காணப்பட்டார்கள்.' பாடல் வருமாறு:

'' சங்கங்கள் முரன்றன, தாரைகள், பேரி யோடும்
எங்கெங்கும் இயம்பின, பல்லியம்; எல்லை இல்ல
அங்கங்கு மலிந்தன வாழ்த்தொலி; அம்பொற் கொம்பின்
பங்கன்அரு ளால்உல காள்பவர் பாங்கர் எங்கும்.''

சங்கங்கள்—சங்க வாத்தியங்களை. முரன்றன—அவற்றை வைத்திருப்பவர்கள் ஊதி முழக்கினார்கள்; திணை மயக்கம். தாரைகள்—தாரைகளையும் அவற்றை ஊதுபவர்கள் ஊதினார்கள்; திணை மயக்கம். பேரியோடும்—பேரிகைகளோடும்; ஒருமை பன்மை மயக்கம். பல் இயம்—பல வாத்தியங்களை வைத்திருப்பவர்கள்; திணை மயக்கம். எங்கெங்கும்—எந்த இடத்திலும் எங்கணும். இயம்பின—அவற்றை வைத்திருப்பவர்கள் இனிய ஓசையை எழுப்பினார்கள்; திணை மயக்கம். அந்த வாத்தியங்களாவன: நாகசுரம், ஒத்து, மத்தளம், கஞ்சதாளங்கள், வீணை, யாழ், முகவீணை, சல்லரி, ஒரு கண் மாக்கிணை, தம்பட்டம், முரசு, ஊது கொம்பு முதலியவை வாழ்த்து - மக்கள் மூர்த்தி நாயனாரை வாழ்த்துகின்ற வாழ்த்துக்களின்; ஒருமை பன்மை மயக்கம். ஒலி—சத்தம். எல்லை—ஒரு வரம்பு. இல்ல—இல்லாதவை, அங்கங்கு—அந்த அந்த இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மலிந்தன—மிகுதியாகக் கேட்டன. அம்—அழகிய. பொற் கொம்பின்—தங்கப் பூங்கொம்பைப் போன்ற சிவகாம வல்லியை. பங்கன் - தன்னுடைய வாமபாகத்தில் எழுந்தருளச் செய்திருப்பவனாகிய நடராஜப் பெருமான். அருளால் - வழங்கிய திருவருளினால். உலகு—தங்கள் தங்கள் நாடுகளை: ஒருமை பன்மை மயக்கம். ஆள்பவர்—ஆட்சி புரியும் மன்னர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பாங்கர்—பக்கங்களில் உள்ள: ஒருமை பன்மை மயக்கம். எங்கும்—எந்த இடங்களிலும் இருந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்,

பிறகு வரும் 37—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கொடுமையான கண்களைப் பெற்ற அந்தஆண் யானையின் மேலிருந்தும் மூர்த்தி நாயனாரை அந்த மந்திரிகள் இறங்கச் செய்து தேன் நிரம்பிய மலர்களைக் கட்டிய மாலைகளையும், ஒளியை வீசும் நவரத்தின மாலைகளையும், சுற்றியுள்ள மகுடத்தைத் தலையில் அணியும் சாலையாகிய அழகிய இடத்திற்கு அந்த நாயனாரை அழைத்துக் கொண்டு சென்று சிங்காசனத்தின் மேல் ஏறி அமரச் செய்து ஒற்றையாகிய சந்திர வட்டக் குடையின்கீழ் அரசர்களுக்கு உரிய காரியங்களை அந்த அமைச்சர்கள் ஆலோசித்துப் புரிபவர்கள் ஆனார்கள்.' பாடல் வருமாறு:

"வெங்கட்களிற் றின்மிசை நின்றும் இழிச்சி வேரித்
தொங்கற்சுடர் மாலைகள் சூழ்முடி சூடு சாலை
அங்கட்கொடு புக்கரி யாசனத் தேற்றி ஒற்றைத்
திங்கட் குடைக் கீழ்உரி மைச்செயல் சூழ்ந்து செய்வார்."

வெம்—கொடுமையாக இருக்கும். கண்—கண்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். களிற்றின்—அந்த ஆண் யானையின். மிசைநின்றும்—மேலிருந்தும். இழிச்சி—மூர்த்தி நாயனாரை அந்த மந்திரிகள் இறங்கச் செய்து. வேரி—தேன் நிரம்பிய. த்:சந்தி. தொங்கல்—மலர்களைக் கட்டிய மாலைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். சுடர் —ஒளியை வீசும். மாலைகள்—நவரத்தின மாலைகளையும். நவரத்தினங்களாவன: மாணிக்கம், பதுமராகம், மரகதக்கல், புட்பராகம், வயிரம், வயிடூரியம், பவளம், முத்து, வெள்ளைக்கல் என்பவை. சூழ்—சுற்றியுள்ள. முடி—மகுடத்தை. சூடு-தலையில் அணிந்து கொள்ளும். சாலை—மண்டபமாகிய. அங்கண் —அழகிய இடத்திற்கு. கொடு—அந்த நாயனாரை அழைத்துக் கொண்டு. புக்கு—சென்று. அரியாசனத்து—சிங்காதனத்தில். ஏற்றி—மேல் ஏறி அமரச் செய்து. ஒற்றை—ஒன்றாக உள்ள. த்:சந்தி. திங்கட்குடைக் கீழ்—சந்திர வட்டக் குடையின் கீழ். உரிமை—அரசர்களுக்கு உரிமையாக உள்ள.ச்:சந்தி..

செயல்—காரியங்களை; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்து—அந்த அமைச்சர்கள் ஆலோசித்து. செய்வார்—புரிபவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 38—ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மூர்த்தி நாயனார் வீற்றிருக்கும் கிழக்குத் திசையில் அவருக்கு எதிரில் இடப் பெற்ற ஹோம குண்டத்தில் மங்கலமான ஆகுதிகளைத் தன்னிடத்தில் பெய்யப் பெறும் ஒளியை வீசும் அக்கினியை மூட்டி வளரச் செய்து நெருங்கிய நூல்களைச் சுற்றியிருக்கும் தங்கத்தினால் செய்யப் பெற்ற கலசங்களிலும், பூரண கும்பங்களிலும் நிறையச் செய்த பரிசுத்தமான நீரைத் தியானிக்கும் செயலைப் பெற்ற மந்திரங்களை உச்சரிக்கும் யோகியர்கள் அந்த நாயனாரை அழைத்துக் கொண்டு வந்து நிற்கச் செய்தார்கள்.' பாடல் வருமாறு:

"மன்னும் திசை வேதியில் மங்கல ஆகுதிக்கண்
துன்னும் சுடர்வன்னி வளர்த்துத் துதைந்த நூல்சூழ்
பொன்னின் கலசங்கள் குடங்கள் பூரித்த தூநீர்
உன்னும் செயல்மந் திரயோகர் நிறுத்தி னார்கள்."

மன்னும் அந்த மூர்த்தி நாயனார் வீற்றிருக்கும். திசை-கிழக்குத் திசையில். வேதியில்-அவருக்கு எதிரில் இடப் பெற்ற ஹோம குண்டத்தில். மங்கல-மங்கலமாகிய. ஆகுதிக்கண்-நெய், சமித்து முதலிய ஆகுதிகளைத் தன்னிடத்தில். ஆகுதி:ஒருமை பன்மை மயக்கம். துன்னும்-பெய்யப் பெறும். சுடர்-ஒளியை வீசும். வன்னி அக்கினையை. வளர்த்து-மூட்டி வளரச் செய்து. த்:சந்தி. துதைந்த-நெருங்கிய. நூல்-நூல்களை; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றியிருக்கும். பொன்னின்-தங்கத்தினாற் செய்யப் பெற்ற. கலசங்கள்-கலசங்களிலும். குடங்கள்-பூரண கும்பங்களிலும். பூரித்த-நிறையச் செய்த. தூ-பரிசுத்தமான. நீர்-கங்கையாறு, காவிரியாறு, தாமிரபர்ணி ஆறு முதலிய ஆறுகளிலிருந்து கொண்டு வந்த நீரை. உன்னும்-தியானிக்கும். செயல்-செயலைப் பெற்ற. மந்திர-வேத மந்திரங்களை உச்சரிக்கும்;

ஒருமை பன்மை மயக்கம். யோகர்-யோகிகள்; ஒருமை பன்மை மயக்கம். நிறுத்தினார்கள் - அந்த மூர்த்தி நாயனாரை அழைத்துக் கொண்டு வந்து நிற்கச் செய்தார்கள்.

பிறகு உள்ள 39-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மண்டபத்திற்கு வந்து சேர்ந்து மங்கல வாத்தியங்களை எழுப்பி ஒலிக்கச் செய்யும் மனிதர்களைப் பார்த்துத் தம்முடைய திருவுள்ளத்தில் சிவபெருமானையே தெளிவாக உணரும் அழகிய அந்த மூர்த்தி நாயனார், "முன்பு இருந்த தீய செயல்களைப் புரிபவர்களாகும் சமணர்கள் அடியோடு ஒழிந்து போய், முதன்மையை உடைய சைவ சமயம் ஓங்கி வளருமானால் இந்த உலகத்தை ஆட்சி புரிந்து பாதுகாத்து இந்த இனிய அரசை ஆட்சி புரிவேன்" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

"வந்துற்றெழு மங்கல மாந்தர்கள் தம்மை நோக்கிச்
சிந்தைச்சிவ மேதெளி யும்திரு மூர்த்தி யார்தாம்
'முந்தைச்செய லாம்அமண் போய்முதற் சைவம் ஓங்கில்
இந்தப்புவி தாங்கிஇவ் வின்னர சாள்வன்' என்றார்."

வந்து-அந்த மண்டபத்திற்கு வந்து. உற்று-சேர்ந்து. எழுமங்கல-மங்கல வாத்தியங்களை எழுப்பி ஒலிக்கச் செய்யும். மங்கல: ஒருமை பன்மை மயக்கம். மாந்தர்கள் தம்மை-மனிதர்களை; தம்:அசைநிலை. நோக்கி-பார்த்து. ச்: சந்தி. சிந்தை தம்முடைய உள்ளத்தில், ச்: சந்தி. சிவமே-சிவபெருமானையே. தெளியும்-தெளிவாக உணரும். திரு - அழகிய; 'செல்வத்தைப் பெற்ற' எனலும் ஆம். மூர்த்தியார் - மூர்த்தி நாயனார். தாம்: அசை நிலை. முந்தை - முன்பு இருந்த. ச்: சந்தி. செயலாம்- செயல்களைப் புரிபவர்களாகும்: திணை மயக்கம். செயல்: ஒருமை பன்மை மயக்கம். அமண் - சமணர்கள்; திணை மயக்கம். போய்-அடியோடு ஒழிந்து

போய் முதல்-முதன்மையை உடைய. சைவம்-சைவசமயம், ஓங்கில்-ஓங்கி வளருமானால். இந்தப் புவி-இந்த உலகத்தை. தாங்கி-ஆட்சி புரிந்து பாதுகாத்து. இவ்வின்-இந்த இனிய. அரசு-அரசை. ஆள்வன்-அடியேன் ஆட்சி புரிவேன். என்றார்-என்று அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு உள்ள 40-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அவ்வண்ணம் அந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளைக் கேட்ட மந்திரிகளோடு உண்மை வாழ்கின்ற சாத்திரங்களைக் கற்று அறிவில் மிக்குச் சிறப்பைப் பெற்ற மனிதர்களும், "தேவரீர் எந்த வண்ணம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தீர்களோ அவற்றை அல்லாமல் யார் செய்வார்? பெரியவரே!" என்று அந்த நாயனாருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளில் விழுந்து வணங்கிக் கூற.' பாடல் வருமாறு:

"அவ்வாறு மொழிந்தது கேட்ட அமைச்ச ரோடு
மெய்வாழ்தரு நூலறி வின்மிகு மாந்தர் தாமும்
'எவ்வா றருள் செய்தனை மற்றவை அன்றி யாவர்
செய்வார்? பெரியோய்!' எனச்சேவடி தாழ்ந்து செப்ப.

இந்தப் பாடல் குளகம். அவ்வாறு - அவ்வண்ணம். மொழிந்தது-அந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்ட-கேள்விப்பட்ட. அமைச்சரோடு-மந்திரிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். மெய்-உண்மை. வாழ்தரு-வாழ்கின்ற. நூல்-சாத்திரங்களை; ஒருமை பன்மை மயக்கம். அறிவின்-கற்று அறிவில். மிகு-மிக்குச் சிறப்பைப் பெற்ற. மாந்தர் தாமும்-சாத்திரிகளும். தாம்: அசை நிலை. எவ்வாறு-எவ்வண்ணம். அருள் செய்தனை-தேவரீர் திருவாய் மலர்ந்தருளிச் செய்தீர்களோ; ஒருமை பன்மை மயக்கம். மற்று: அசை நிலை. அவை-அவற்றை. அன்றி-அல்லாமல். யாவர்-

யார். செய்வார்-புரிவார். பெரியோய்-பெருமையைப் பெற்றவரே; ஒருமை பன்மை மயக்கம். என-என்று; இடைக்குறை. ச்: சந்தி. சேவடி-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த அந்த நாயனாருடைய திருவடிகளை. அடி: ஒருமை பன்மை மயக்கம். தாழ்ந்து-விழுந்து வணங்கி. செப்ப-கூற.

பிறகு உள்ள 41-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

' "இந்த உலகத்தை ஆட்சி புரிந்து நியாயத்தை நிலை நிற்கும் வண்ணம் புரிவேனானால் விளங்கும் விபூதியே அடியேனுக்குப் புரியும் அபிடேகப் பொருளுமாக செழிப்பைப் பெற்ற அணிகலன்கள் ஐயனாகிய நடராஜப் பெருமானுடைய அடையாளங்கள் ஆகிய உருத்திராக்கமாலை, சடாபாரம் முதலியவற்றைப் புனைந்து கொண்டு தரிக்கும் அழகு மொய்த்த சிவந்த சடாபாரமாகிய பெருமையைப் பெற்ற கிரீடமே மகுடமாகுக" என்று அந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

" 'வையம் முறைசெய் குவனாகில் வயங்கு நீறே
செய்யும் அபிடே கமுமாகச் செழுங்க லன்கள்
ஐயன் அடையா ளமுமாக அணிந்து தாங்கும்
மொய்புன் சடைமா முடியேமுடி யாவ' தென்றார்."

வையம்-இந்த உலகத்தை. முறை செய்குவன்-அடியேன் ஆட்சி புரிந்து நியாயத்தை நிலை நிற்கும் வண்ணம் புரிவேன். ஆகில்-ஆனால். வயங்கு-விளங்கும். நீறே-விபூதியே. செய்யும்-அடியேனுக்குப் புரியும். அபிடேகமுமாக-அபிடேகப் பொருளுமாக. ச்: சந்தி. செழும்-செழிப்பைப் பெற்ற. கலன்கள்-அணிகலன்கள். ஐயன்-ஐயனாகிய நடராஜப் பெருமானுடைய. அடையாளமுமாக - அடையாளங்கள் ஆகிய உருத்திராக்க மாலை, சடாபாரம் முதலியவற்றை. அடையாளம்: ஒருமை பன்மை மயக்கம். அணிந்து-அடியேன் புனைந்து கொண்டு. தாங்கும்-தரிக்கும். மொய்-அழகு மொய்த்த. புன்-சிவந்த. சடை-சடாபாரமாகிய. மா-பெருமையைப் பெற்ற. முடியே-கிரீடமே. முடியாவது-மகுட

மாகுக. என்றார்-என்று அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பின்பு வரும் 42-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'என்று அந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் வரம்பு இல்லாத நூல்களைக் கற்ற கல்வியை உடைய சான்றோர்களும், வலிமையும் உறுதியும் அறிவும் சாத்திரங்களில் உள்ள உண்மையை அறிந்த அறிவாற்றலும் பெற்ற மந்திரிகளும், "இந்த இடத்தில் நடராஜப் பெருமான் வழங்கிய திருவருள் தான் நன்றாக இருக்கிறது" என்று எண்ணி நல்ல தவத்தை முன் பிறவியில் புரிந்த அரசராகிய மூர்த்தி நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் ஒன்றியிருக்கும் அரசை ஆட்சி புரியும் உரிமைக்குத் தக்க செயல்களாக இருப்பவற்றைச் செய்து அந்த அமைச்சர்கள் நிறைவேற்றினார்கள்.' பாடல் வருமாறு:

"என்றிவ்வுரை கேட்டலும் எல்லையில் கல்வி யோரும்
வன்திண்மதி நூல்வளர் வாய்மை அமைச்சர் தாமும்
'நன்றிங்கருள் தான்' என நற்றவ வேந்தர் சிந்தை
ஒன்றும்அர சாள்உரி மைச்செய லானஉய்த்தார்."

என்று-என அந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்து அருளிச் செய்த. இவ்வுரை-இந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்டலும்-கேட்டவுடன். எல்லை-வரம்பு. இல் - இல்லாத; கடைக்குறை. கல்வியோரும் - நல்ல நூல்களைக் கற்ற க விியை உடைய சான்றோர்களும்; ஒருமை பன்மை மயக்கம். வன்-வலிமையையும். திண்-உறுதியையும். மதி-அறிவையும் நூல்—சாத்திரங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வளர்-உள்ள. வாய்மை-உண்மையையும் அறிந்த. அமைச்சர் தாமும்-மந்திரிகளும். தாம்: அசை நிலை. இங்கு-இந்த இடத்தில். அருள்தான்-நடராஜப் பெருமான் வழங்கிய திருவருள்தான். நன்று—நன்றாக இருக்கிறது. என—என்று எண்ணி; இடைக்குறை. நற்றவ வேந்தர்—முன் பிறவியில்

நல்ல தவத்தைப் புரிந்த அரசராகிய மூர்த்தி நாயனார். சிந்தை-தம்முடைய திருவுள்ளத்தில். ஒன்றும்—ஒன்றியிருக்கும்; சேர்ந்திருக்கும். அரசு—அரசை. ஆள்—ஆட்சி புரியும். உரிமை—உரிமைக்குத் தக்க. ச்: சந்தி. செயலான—செயல்களாக இருப்பவற்றை. செயல்: ஒருமை பன்மை மயக்கம். உய்த்தார்—செய்து அந்த அமைச்சர்கள் நிறைவேற்றினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 43-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தம்முடைய பக்கத்தில் எவ்விடத்திலும் நெருங்கியுள்ள மங்கல வாத்தியங்கள் எழுப்பிய இனிய நாதம் மிகுதியாகக் கேட்க, தம்முடைய தலையில் சடாபாரமாகிய கிரீடத்தை அணிந்தவராகிய அந்த மூர்த்தி நாயனார் பழைய காலத்தில் பன்றியின் உருவத்தை எடுத்துக் கொண்டு திருமால் தேடும் வீரக் கழலைப் பூண்ட திருவடிகளை உடையவராகிய சுந்தரேசப் பெருமானார் எழுந்தருளியிருப்பதும், மதுரை மாநகரத்தில் விளங்குவதும் ஆகிய திருவாலவாய் என்னும் ஆலயத்துக்கு எழுந்தருளி அந்தச் சோமசுந்தரக் கடவுளைத் தரையில் விழுந்து வணங்கி உயரமாக இருக்கும் ஆண் யானையின் மேல் ஏறிக்கொண்டு நீண்ட ஒரு தெருவின் வழியே எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

"மாடெங்கும் நெருங்கிய மங்கல ஓசை மல்கச்
சூடும்சடை மௌலி அணிந்தவர் தொல்லை ஏனம்
தேடும்கழ லார்திரு வாலவாய் சென்று தாழ்ந்து
நீடும்களிற் றின்மிசை நீள்மறு கூடு போந்தார்."

மாடு-தம்முடைய பக்கத்தில். எங்கும்—எந்த இடத்திலும். மங்கல-மங்கல வாத்தியங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஓசை-எழுப்பிய இனிய நாதம். மல்க-மிகுதியாகக் கேட்க. ச்:சந்தி. சூடும் சடை-தம்முடைய தலையில் சடாபாரமாகிய. மௌலி-கிரீடத்தை. அணிந்தவர்-புனைந்து கொண்டவராகிய அந்த மூர்த்தி நாயனார். தொல்லை-பழைய காலத்தில். ஏனம்-பன்றியின் உருவத்தை எடுத்துக் கொண்டு

திருமால். தேடும் கழலார்-தேடிப் பார்க்கும் வீரக் கழலைப் பூண்ட திருவடிகளை உடையவராகிய சுந்தரேசப் பெருமானார். கழல்:ஆகு பெயர். திருவாலவாய்-எழுந்தருளியிருப்பதும் மதுரை மாநகரத்தில் விளங்குவதும் ஆகிய திருவாலவாய் என்னும் ஆலயத்துக்கு. சென்று-எழுந்தருளி. தாழ்ந்து-அந்தச் சோமசுந்தரக் கடவுளைத் தரையில் விழுந்து வணங்கிவிட்டு. நீடும்-உயரமாக விளங்கும். களிற்றின்மிசை-ஆண் யானையின் மேல் ஏறிக் கொண்டு. நீள்-நீளமான. மறுகூடு-ஒரு தெருவின் வழியே. போந்தார்-அந்த நாயனார் எழுந்தருளினார்.

அடுத்து உள்ள 44-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'மின்னலைப் போல ஒளியை வீசும் மாணிக்கங்களைப் பதித்த மாளிகைகளின் வாசல்களில் அந்த ஆண் யானையின் மேலிருந்தும் இறங்கி வந்து விளங்கும் பிரகாசத்தை வீசும் ஒரு மண்டபத்தில் தங்கத்தினால் செய்த சரிகை ஆடையை விரித்த மென்மையான சிங்காதனத்தில் சாமரைகளின் விருப்பம் மருவிய மலர் மணத்தைப் பெற்ற தென்றற் காற்று நிலை பெற்று வீசும் வெண் கொற்றக் குடையின் நிழலில் அந்த நாயனார் இந்த உலகத்தில் வாழும் மக்களைப் பாதுகாத்துக் கொண்டு இருந்தார்." பாடல் வருமாறு:

"மின்னும்மணி மாளிகை வாயிலின் வேழ மீது
தன்னின்றும் இழிந்து தயங்கொளி மண்ட பத்திற்
பொன்னின் அரிமெல் லணைச் சாமரைக் காமர் பூங்கால்
மன்னும்குடை நீழல் இருந்தனர் வையம் தாங்கி."

மின்னும்-மின்னலைப் போல ஒளியை வீசும். மணி-மாணிக்கங்களைப் பதித்த; ஒருமை பன்மை மயக்கம். மாளிகை-மாளிகைகளின்; ஒருமை பன்மை மயக்கம். வாயிலின்-வாசல்களில்; ஒருமை பன்மை மயக்கம். வேழமீது தன்னின்றும்-அந்த ஆண் யானையின் மேலிருந்தும், தன்:அசை நிலை. இழிந்து-இறங்கி வந்து. தயங்கு-விளங்கும். ஒளி-பிரகாசத்தை

வீசும். மண்டபத்தில்-ஒரு மண்டபத்தில். பொன்னின்— தங்கத்தாற் செய்யப் பெற்ற. அரி-சரிகை ஆடையை விரித்த. மெல்-மென்மையான. அணை-சிங்காதனத்தில். ச்:சந்தி. சாமரை-சாமரைகளின்; ஒருமை பன்மை மயக்கம். சாமரை-பெரிய விசிறி. க்:சந்தி. காமர்-விருப்பம் மருவிய. பூங்கால்-மலர்களின் மணத்தைப் பெற்ற தென்றற் காற்று. மன்னும்-நிலைபெற்று வீசும். குடை-வெண் கொற்றக் குடையின். நீழல்-நிழலில். வையம்-இந்த உலகத்தில் வாழும் மக்களை; இட ஆகுபெயர். தாங்கி-பாதுகாத்துக் கொண்டு. இருந்தனர் -அந்த நாயனார் இருந்து வந்தார்.

அடுத்து வரும் 45-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்மோடு இருந்து குலாவுகின்ற நியாயத் துறையில் வல்லவர்களாகிய மந்திரிகள் தாம் குறித்த எண்ணத்தின் படி தங்கி ஒழுகக் கலகத்தைப் புரிந்த சமணர்கள் செய்த தீய செயல்களான வற்றின் கட்டிலிருந்து விடுபட்டு என்றும் நிலை பெற்று விளங்கும், விபூதியின் வழியில் நடக்கும் சைவ சமயத் துறை நெடுங்காலமாக வாழுமாறும், இந்த உலகம் எங்கணும் நிறைந்துள்ள சைவ சமயம் உயர்ச்சியை அடைந்து நிலை பெற்று விளங்கவும்.' பாடல் வருமாறு:

" குலவும்துறை நீதிஅமைச்சர் குறிப்பின் வைகக்
கலகம்செய் அமண்செய லாயின கட்டுநீங்கி
நிலவும்திரு நீற்று நெறித்துறை நீடுவாழ
உலகெங்கும் நிரம்பிய சைவம்உயர்ந்து மன்ன."

இந்தப் பாடல் குளகம். குலவும்-தம்மோடு இருந்து குலாவும். துறைநீதி-நியாயத் துறையில் வல்லவர்களாகிய; திணை மயக்கம். அமைச்சர்-மந்திரிகள்; ஒருமை பன்மை மயக்கம். குறிப்பின்-தாம் குறித்த எண்ணத்தின் படி. வைக-தங்கி ஒழுக. க்:சந்தி. கலகம்-கலகத்தை. செய்-புரிந்து வந்த. அமண்-சமணர்கள்; திணை மயக்கம். செயலாயின-செயல்களாயினவற்றின். செயல்: ஒருமை பன்மை மயக்கம். கட்டு-கட்டிலிருந்து. நீங்கி-விடுபட்டு. நிலவும்-என்றும் நிலை

பெற்று விளங்கும். திருநீற்று-விபூதியின். நெறித்துறை-வழியில் நடக்கும் சைவ சமயத்துறை. நீடு-நெடுங்காலமாக. வாழ-வாழுமாறும். உலகு-இந்த உலகம். எங்கும்-எங்கணும். நிரம்பிய-நிறைந்துள்ள. சைவம்-சைவ சமயம். உயர்ந்து-உயர்ச்சியை அடைந்து. மன்ன-நிலை பெற்று விளங்கவும்.

பிறகு வரும் 46—ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணினால் விழித்துப் பார்த்த சோமசுந்தரப் பெருமானாருக்குரிய உண்மையும், நுட்பமாக உள்ள சாத்திரத்தின் பக்குவம் எல்லா இடத்திலும் நிரம்பித் திகழவும், இந்த மனிதப் பிறவிகள் போகுமாறு உதவி புரியும் விபூதியும், உயர்ச்சியைப் பெற்ற உருத்திராக்க மாலையும் அணிந் கொண்ட சடாபாரம் முதலிய மூன்று அடையாளங்களோடு அந்த மூர்த்தி நாயனார் இந்த உலகத்தை ஆட்சி புரிந்து வந்தார்.' பாடல் வருமாறு:

"நுதலின்கண் விழித்தவர் வாய்மை நுணங்கு நூலின்
பதமெங்கும் நிறைந்து விளங்கப் பவங்கள் மாற
உதவும்திரு நீறுயர் கண்டிகை கொண்ட வேணி
முதல்மும்மையி னால்உல காண்டனர் மூர்த்தி யார்தாம்."

நுதலின்கண்-தம்முடைய நெற்றியில். விழித்தவர்-ஒற்றைக் கண்ணினால் விழித்துப் பார்த்த சோமசுந்தரப் பெருமானாருக்கு உரிய. வாய்மை-உண்மையும். நுணங்கு-நுட்பமாக உள்ள. நூலின்-சாத்திரத்தின். பதம்-பக்குவம். எங்கும்-எல்லா இடத்திலும். நிறைந்து-நிரம்பி. விளங்க-திகழவும். ப்:சந்தி. பவங்கள்-இந்த மனிதப் பிறவிகள். மாற-போகுமாறு. உதவும்-உதவியைப் புரியும். திருநீறு-விபூதியும். உயர்-உயர்ச்சியைப் பெற்ற. கண்டிகை-உருத்திராக்க மாலையும். கொண்ட-அணிந்து கொண்ட. வேணி-சடாபாரம். முதல்-முதலிய. மும்மையினால்-மூன்று அடையாளங்களோடு; உருபு மயக்கம். மூர்த்தியார்-அந்த மூர்த்தி நாயனார். உலகு-இந்த உலகத்தை. ஆண்டனர்-ஆட்சி புரிந்து வந்தார். தாம்: அசைநிலை. மூன்று அடையாளங்களாவன: விபூதியைப்

பூசிக் கொள்ளுதல், உருத்திராக்க மாலையை அணிந்துகொள்ளுதல், சடைமுடி தரித்தல் என்பவை.

அடுத்து வரும் 47-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஏலம் நறுமணம் கமழும் கூந்தல்களைப் பெற்ற பெண் மணிகளுடைய பக்கத்தைச் சார்ந்து வாழ்வதை எல்லாக் காலத்திலும் அகன்று விளங்கும் சீலத்தைத் தாம் மேற் கொண்டு அந்த மூர்த்தி நாயனார் கொடுமையான மெய், வாய், மூக்கு, கண்கள், காதுகள், என்னும் ஐந்து இந்திரியங் களையும் பகைவர்களோடு வெற்றி பெற்று அகற்றி விட்டு இந்த உலகத்தில் ஒப்பற்ற ஆக்ஞா சக்கரத்தை நடத்திக் கொண்டு நன்மைகளைக் கொண்ட ஊழிக் காலம் வரையி லும் எல்லாவகை உயிர்களுக்கும் வரும் துன்பங்களானவற் றைப் போக்கி அந்த உயிர்களை ஆட்சி புரிந்து பாது காத்துக் கொண்டு.' பாடல் வருமாறு:

"ஏலம்கமழ் கோதையர் தம்திறம் என்றும் நீங்கும்
சீலம்கொடு வெம்புலன் தெவ்வுடன் வென்று நீக்கி
ஞாலம்தனி நேமி நடாத்தி நலம்கொள் ஊழிக்
காலம்உயிர் கட்கிடர் ஆன கடிந்து காத்து."

இந்தப் பாடல் குளகம். ஏலம்-ஏலக்காய். கமழ்-நறு மணம் கமழும். கோதையர் தம்-கூந்தல்களைப் பெற்ற பெண்மணிகளினுடைய. கோதை: ஒருமை பன்மை மயக்கம். கோதையர்: ஒருமை பன்மை மயக்கம். தம்:அசை நிலை. திறம்-பக்கத்தைச் சார்ந்து வாழ்வதை; ஆகு பெயர். என்றும்-எல்லாக் காலத்திலும். நீங்கும்-அகன்று விளங்கும். சீலம்-சீலத்தை. கொடு-தாம் மேற்கொண்டு. வெம்-கொடுமையான. புலன்-மெய், வாய், மூக்கு, கண்கள், காது கள் என்னும் ஐந்து இந்திரியங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். தெவ்வுடன்-பகைவர்களோடு; ஒருமை பன்மை மயக்கம்; திணை மயக்கம். வென்று-வெற்றியைப் பெற்று. நீக்கி-அகற்றி விட்டு. ஞாலம்-இந்த உலகத்தில். தனி-ஒப் பற்ற. நேமி-ஆக்ஞா சக்கரத்தை. நடாத்தி-நடத்திக்

கொண்டு. நலம்-நன்மைகளை; ஒருமை பன்மை மயக்கம். கொள்-கொண்ட. ஊழிக்காலம்-சர்வப்பிரளய காலம் வரையிலும். உயிர்கட்கு-மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழுக்கள், பூச்சிகள், நீர்வாழ் பிராணிகள் முதலிய உயிர்களுக்கு. இடரான - வரும் துன்பங்களானவற்றை; ஒருமை பன்மை மயக்கம். கடிந்து-போக்கி விட்டு. காத்து-அந்த உயிர்களை மூர்த்தி நாயனார் ஆட்சி புரிந்து பாதுகாத்துக் கொண்டு.

பின்பு உள்ள 48-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மூர்த்தி நாயனார் தம்முடைய திருவடிகளைப் பிற நாடுகளை ஆட்சி புரியும் அரசர்கள் வலமாக வந்து வணங்கிவிட்டு வாழ்த்துக்களைக் கூறவும், குற்றங்கள் கட்டுப்படுத்தாத விதத்தில் இந்த உலகத்தில் வாழும் மக்களை ஆட்சி புரிந்து கொண்டு திருத்தொண்டிலிருந்து வேறுபாட்டைச் செய்யாத சோமசுந்தரக் கடவுள் வழங்கிய திருவருளால் பெருமையைப் பெற்ற அரசை ஆட்சி புரியும் பேற்றை அடைந்து தம்முடைய தலைவனாகிய சோமசுந்தரப் பெருமானுடைய வெற்றிக் கழலைப் பூண்ட செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளைத் தலைவராகிய அந்த மூர்த்தி நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

**" பாதம்பர மன்னவர் சூழ்ந்து பணிந்து போற்ற
ஏதம்பிணி யாவகை இவ்வுல காண்டு தொண்டின்
பேதம்புரி யாஅருட் பேரர சாளப் பெற்று
நாதன்கழற் சேவடி நண்ணினர் அண்ண லாரே."**

பாதம்- தம்முடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பரமன்னவர்-பிற நாடுகளை ஆட்சி புரியும் அரசர்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்து-தம்மை வலமாக வந்து. பணிந்து-வணங்கி விட்டு.போற்ற-வாழ்த்துக்களைக் கூறவும். ஏதம்-குற்றங்கள்;' துன்பங்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். பிணியா வகை-தம்மைக் கட்டுப்படுத்தாத விதத்தில். இவ்வுலகு-இந்த உலகத்தில் வாழும் மக்களை; இட

ஆகு பெயர். ஆண்டு-ஆட்சி புரிந்து கொண்டு. தொண் டின் - திருத்தொண்டிலிருந்து. பேதம் புரியா-வேறுபாட்டைச் செய்யாத; வேறுபடாத. அருள் - சோமசுந்தரக் கடவுள் வழங்கிய திருவருளால். பேர்-பெருமையைப் பெற்ற;'புகழைப் பெற்ற' எனலும் ஆம். அரசு-அரசை. ஆளப்பெற்று-ஆட்சி புரியும் பேற்றை அடைந்து. நாதன்-தம்முடைய தலைவ னாகிய சோம சுந்தரப் பெருமானுடைய. கழல்-வெற்றிக் கழலைப் பூண்ட. சேவடி-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை. அடி: ஒருமை பன்மை மயக்கம். அண்ணலார்-தலைவராகிய அந்த மூர்த்தி நாயனார். 'பெரு மையைப் பெற்றவர்' எனலும் ஆம். நண்ணினர்-அடைந் தார். ஏ: ஈற்றசை நிலை.

இந்த மூர்த்தி நாயனார் புராணத்தில் வரும் இறுதிப் பாடலாகிய 49-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அகலமான கருங்கல் பாறையின் மேல் வைத்துத் தம் முடைய முழங்கையை அன்று ஒரு நாள் தேய்த்த பகையை உடைய ஆண் யானையைப் பெற்ற பக்தராகிய அந்த மூர்த்தி நாயனாரைத் துதித்து விட்டு, முருக நாயனாராகும் மேகங்கள் சுற்றித் தவழும் நறுமணம் கமழும் மலர்கள் மலர்ந்த பலவகை மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழிலி னுடைய மொய்த்த பிரகாசம் மாடங்கள் உயரமாக நிற்கும் தெருக்களைப் பெற்ற திருப்புகலூரில் திருவவதாரம் செய் தருளும் வேதியராகிய முருக நாயனாருடைய தொண்டின் வகையை வாழ்த்திப் பாடத் தொடங்கினோம்' பாடல் வருமாறு:

" அகல்பாறையின் வைத்து முழங்கையை அன்று தேய்த்த
இகலார்களிற் றன்பரை ஏத்தி முருக னாராம்
முகில்சூழ் நறுஞ்சோலையின் மொய்யொளி மாட வீதிப்
புகலூர்வரும் அந்தணர் தம்திறம் போற்ற லுற்றாம்."

இந்தப் பாடல் சேக்கிழார் அடுத்து வரும் முருக நாய னார் புராணத்தின் தோற்றுவாயாகப் பாடியருளியது. அகல்-

அகலமான. பாறையின்-கருங்கற் பாறையின் மேல். வைத்து முழங்கையை-வைத்துத் தம்முடைய முழங்கையை. அன்று-அன்று ஒரு நாள். தேய்த்த இகல்-தேய்த்த பகையை. ஆர்-பெற்ற. களிற்று-ஆண் யானையைப் பெற்ற. அன்பரை-பக்தராகிய அந்த மூர்த்தி நாயனாரை. ஏத்தி-துதித்து விட்டு முருகனாராம் - முருக நாயனாராகும். முகில்-மேகங்கள்: ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றித் தவழும். நறும்-நறு மணம் கமழும் மலர்கள் மலர்ந்த பலவகை மரங்கள் வளர்ந்து நிற்கும். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், வாழை மரவகைகள், மா மரம், பலா மரம், அரச மரம், பூவரச மரம், ஆல மரம், தென்ன மரம், பனை மரம், மகிழ மரம், விளா மரம், தமால மரம், வில்வ மரம், வேப்ப மரம், புளிய மரம், பவழமல்லிகை மரம், வாதநாரா யண மரம், கடம்ப மரம், சண்பக மரம் முதலியவை. சோலை யின்-பூம்பொழிலினுடைய. மொய்-மொய்த்த. ஒளி-பிரகாசம். மாட-மாடங்கள் உயரமாக நிற்கும்; ஒருமை பன்மை மயக் கம். வீதி-தெருக்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக் கம். ப்: சந்தி. புகலூர்-திருப்புகலூர் என்னும் சிவத்தலத் தில். வரும்-திருவவதாரம் செய்தருளும். அந்தணர் தம்-வேதியராகிய முருக நாயனாருடைய; தம்: அசை நிலை. திறம்-திருத்தொண்டின் வகையை. போற்றலுற்றாம்-யாம் இனிமேல் பாடத் தொடங்கினோம்.

முருக நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 4-ஆவதாக விளங்கும் மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் இரண்டாவதாக அமைந்து விளங்குவது முருக நாயனார் புராணம். அதில் வரும் முதற் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'மலர்களில் உள்ள மகரந்தப் பொடிகள் சுற்றி விளங்கும் கூந்தலைப் பெற்ற இமாசல அரசனுடைய புதல்வியாகிய பார்வதி தேவியினுடைய தளிர்களைப் போன்ற திருக்கரங்கள் சுற்றித் தழுவும் தம்முடைய திருமேனியின் மேல் சுற்றியிருக்கும் கங்கையாற்றின் நீரைத் தாங்கும் கற்றையாக உள்ள சடாபாரத்தைத் தம்முடைய திருத்தலையில் பெற்ற நம்பராகிய அக்கினீசுவரர் விரும்பிக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவத்தலம் ஒளி வெள்ளத்தைச் சுற்றி வீசும் மாணிக்கங்களைப் பதித்த மகுடத்தைச் சூடிய சோழர்கள் ஆட்சி புரிந்ததும், பொன்னைக் கொழிக்கும் காவிரி ஆறு ஓடுவதும் ஆகிய அழகிய சோழ நாட்டில் மலர்கள் சுற்றி விளங்கும் மரங்கள் வளர்ந்து நிற்கும் விசாலமான பூம்பொழிலும் பொய்கையும் சுற்றி விளங்கும் ஊர் பூம்புகலூர் ஆகும்.' பாடல் வருமாறு:

'' தாதுசூழும் குழல்மலையாள் தளிர்க்கை சூழும் திருமேனி
மீதுசூழும் புனற்கற்றை வேணிநம்பர் விரும்புபதி

சோதிசூழும் மணிமௌலிச் சோழர் பொன்னித்
திருநாட்டுப்
போதுசூழும் தடஞ்சோலைப் பொய்கை சூழும்
பூம்புகலூர்.''

தாது - மலர்களில் உள்ள மகரந்தப் பொடிகள்; ஒருமை பன்மை மயக்கம். சூழும்-சுற்றி நறுமணத்தை வீசும். குழல்-கூந்தலைப் பெற்ற. மலையாள்-இமாசல அரசனுடைய புதல்வியாகிய பார்வதி தேவி. மலை: திணை மயக்கம். தளிர்-தன்னுடைய தளிர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். தளிர்-முற்றாத இலை. க்: சந்தி. கை-திருக்கரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழும்-சுற்றித் தழுவும். திருமேனி மீது-திருமேனியின் மேல். சூழும்-சுற்றியிருக்கும். புனல்-கங்கை யாற்றின் நீரைத் தாங்கும். கற்றை-தொகுதியாக உள்ள. வேணி-சடாபாரத்தைத் தம்முடைய தலையிற் பெற்ற. நம்பர்-தம்முடைய பக்தர்களுக்குப் பலவகையான நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய அக்கினீசுவரர். விரும்பு-விரும்பிக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். பதி-சிவத்தலம். சோதி-ஒளி வெள்ளத்தை. சூழும்-சுற்றி வீசும். மணி-மாணிக்கங்களைப் பதித்த; ஒருமை பன்மை மயக்கம். மௌலி-மகுடத்தைச் சூடிய. ச்: சந்தி. சோழர்-சோழ மன்னர்கள் ஆட்சி புரிந்த; ஒருமை பன்மை மயக்கம். பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரி ஆறு ஓடும்; ''பொன்னி பொன் கொழிக்கும்.'' என வருவதைக் காண்க. த்: சந்தி திரு-செல்வர்கள் வாழும்; திணை மயக்கம். நாட்டு-சோழ நாட்டில். ப்: சந்தி. போது-மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழும்-சுற்றி மலர்ந்த பல வகை மரங்கள் வளர்ந்து நிற்கும். தடம்-விசாலமாகிய. சோலை-பூம்பொழிலும். ப்: சந்தி. பொய்கை-மனிதர் ஆக்காத நீர் நிலையும். சூழும்-சுற்றி விளங்கும் ஊர். பூம்புகலூர்-அழகிய திருப்புகலூர் ஆகும்.

திருப்புகலூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள்

அக்கினீசுவரர், கோணப் பிரான் என்பவை. அம்பிகை கருந்தாழ் குழலியம்மை. தீர்த்தம் அக்கினி தீர்த்தம். தல விருட்சம் புன்னை மரம். இந்தத் தலம் நன்னிலத்திலிருந்து கிழக்கில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இது அக்கினி பூசித்த தலம். தெற்குப் பக்கத்தைத் தவிர மற்றப் பக்கங்களில் கருங்கற்களாற் கட்டப் பெற்ற அகழி உள்ளது. கோணப் பிரானுடைய திருவுருவம் சற்றுச் சாய்ந்திருக்கிறது. இந்த ஆலயத்தில் சந்திரசேகரர் சந்நிதி சிறப்பைப் பெற்று விளங்குவது. அந்தச் சந்நிதிக்கு நேராக அக்கினி பகவானுடைய திருவுருவம் இருக்கிறது. திருப்புகலூர் வர்த்தமானீசுவரம் என்னும் சந்நிதி இந்த ஆலயத்துக்குள் இருக்கிறது. கோணப் பிரானுக்குப் பலவகையான மலர் மாலைகளைக் கட்டி வழங்கிய முருக நாயனார் திருவவதாரம் செய்தருளிய தலம் இது. சுந்தரமூர்த்தி நாயனார் இந்த ஆலயத்தில் துயில் கொண்டருளிய சமயத்தில் அவர் தம்முடைய தலையின் கீழ் தலையணையைப் போல வைத்துக் கொண்டிருந்த செங்கற்கள் யாவும் செம்பொற்கற்களாக இருப்பதைக்கண்டு, 'தம்மையே புகழ்ந்திச்சை பேசினும்'' என்று தொடங்கும் ஒரு திருப்பதிகத்தைப் பாடி அருளினார். இந்தத் தலத்தைப் பற்றிய தேவாரத்தில், ''புன்னைப் பொழிற்புக லூரண்ணல் செய்வன கேண்மின்களோ.'', ''புன்னைத் தாது பொழிற்புகலூரரை.'', ''கரம் நாலைந்துடைக் கோணற் பிரானை வலிதொலைத் தோன் தொல்லை நீர்ப்புகலூர்க் கோணப் பிரானைக் குறுகக் குறுகா கொடு வினையே'', ''பெருந்தாழ் சடைமுடி மேற் பிறை சூடிக் கருந்தாழ் குழலியும் தாமும் கலந்து.'', ''தொண்டர் தண்கயம் மூழ்கித் துணையலும் சாந்தமும் புகையும் கொண்டு கொண்டடி பரவிக் குறிப்பறி முருகன் செய் கோலம்.'' என வருவனவற்றால் இந்தத் தல சம்பந்தமான பல செய்திகள் புலப்படுத்தப் பெற்றுள்ளன. இந்தத்

தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு: இந்தப் பாசுரம் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியது.

'அங்கமே பூண்டாய் அனலாடினாய்
ஆதிரையாய் ஆல்நிழலாய் ஆனே றூர்ந்தாய்
பங்கம்ஒன் றில்லாத படர்ச்சடையி னாய்
பாம்போடு திங்கள் பகைதீர்த்தாண்டாய்
கங்கையொன் றின்றியே தேவர் வேண்டச்
சமுத்திரத்தின் நஞ்சுண்டு சாவா மூவாச்
சிங்கமே உன்னடிக்கே போதுகின் றேன்
திருப்புகலூர் மேவிய தேவ தேவே.''

அடுத்து வரும் 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'புகழைப் பெற்ற பழைய சிவத்தலமாகிய அந்தத் திருப்புகலூரில் நல்ல பண்புகளைப் பெற்ற சான்றோர்களினுடைய திருவுள்ளங்களைப் போல அந்தச் சான்றோர்கள் பூசிக் கொண்ட பாதுகாப்பு நிலாவுகின்ற விபூதியினுடைய சிறப்பு அமைந்த வெள்ளை நிறமாகிய திருத்தமாக உள்ள பிரகாசத்தால் நடுச் சாமத்தில் உள்ள இருட்டும் பகலாக மாறச் செய்யும் இராத்திரி வேளையே அல்லாமல், நறுமணம் வீசும் மலர்களின் மேல் விருப்பம் மருவும் தேனைக் குடித்துச் சிறைகளை பெற்ற வண்டுகளும் களங்கம் சிறிதும் இல்லாமல் திகழும்.' பாடல் வருமாறு:

**''நாம மூதூர் மற்றதனுள் நல்லோர் மனம்போல் அவரணிந்த
சேமம் நிலவு திருநீற்றின் சிறந்த வெண்மைத் திருந்தொளியால்
யாம இருளும் வெளியாக்கும் இரவே அல்ல, விரைமலர் மேல்
காமர் மதுவுண் சிறைவண்டும் களங்கம் இன்றி விளங்குமால்.''**

நாம-புகழைப் பெற்ற. மூதூர்-பழைய சிவத்தலமாகிய. மற்று: அசை நிலை. அதனுள் - அந்தத் திருப்புகலூரில். நல்லோர்-நல்ல பண்புகளைப் பெற்ற சான்றோர்களி

னுடைய; ஒருமை பன்மை மயக்கம். மனம் போல்-திருவுள் ளங்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். அவர்-அந்தச் சான்றோர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அணிந்த-பூசிக் கொண்ட. சேமம்-பாதுகாப்பு. நிலவு-நிலாவும்; பொருந்தி இருக்கும். திருநீற்றின்-விபூதியினுடைய. சிறந்த - சிறப்பு அமைந்த. வெண்மை-வெள்ளை நிறமாகிய. த்: சந்தி. திருந்து-திருத்தமாக உள்ள. ஒளியால்-பிரகாசத்தால். யாம-நடுச்சாமத்தில் உள்ள. இருளும்-இருட்டும்; வெளி ஆக்கும்-பகலாக மாறச் செய்யும். இரவே-இராத்திரி வேளையே. அல்ல-அல்லாமல். விரை-நறுமணம் கமழும். மலர்மேல்-மலர் களின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். காமர்-விருப்பம் மருவிய. மது-தேனை. உண்-குடிக்கும். சிறை-சிறகுகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வண்டும்-வண்டுகளும்: ஒருமை பன்மை மயக்கம். களங்கம்-அழுக்கு. இன்றி-இல்லா மல். விளங்கும்-திகழும். ஆல்: ஈற்றசை நிலை.

பின்பு உள்ள 3 ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தமக்குப் பாடக் கிடைக்கும் சங்கீதத்தை ஆராய்ந்து முரலும் வண்டுகள் அரும்புகளை உடைய மெல்லிய மரங் களின் கிளைகளின் பக்கத்தில் அலைந்து திரியவும், சிவந்த நிறத்தைப் பெற்ற இனிய சுவையைக் கொண்ட தேனைச் சொரிபவை நறுமணம் வீசும் மலர்களின் வாய்களே அல்ல; குளிர்ச்சியைப் பெற்றது என்று கூறும் பூம்பொழிலில் எந்தப் பக்கங்களிலும் பறந்து வந்து சேரும் மடப்பத்தையும் மென் மையையும் பெற்றநாகணவாய்ப் புட்களினுடைய பண் களைப் போன்ற பாடல்களைப் பாடும் அழகிய வாய்களும் தேவாரத் திருப்பதிகங்களில் உள்ள செழுமையான தேனைப் போன்ற பாசுரங்களை மழையைப் போலச் சொரி யும்.' பாடல் வருமாறு:

"நண்ணும் இசைதேர் மதுகரங்கள் நனைமென் சினையின் மருங்கலைய
வண்ண மதுரத் தேன்பொழிவ வாச மலர்வா யேஅல்ல

தண்ணென் சோலை எம்மருங்கும் சாரும் மடமென்
சாரிகையின்
பண்ணின் கிளவி மணிவாயும் பதிகச் செழுந்தேன்
பொழியுமால்.''

நண்ணும்-தங்களுக்குப் பாடக் கிடைக்கும். இசை-சங்கீ தத்தை. தேர்-ஆராய்ந்து முரலும். மதுகரங்கள்-வண்டுகள். நனை-அரும்புகளை உடைய; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையான. சினையின்-மரங்களில் உள்ள கிளை களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-பக்கத்தில். அலைய-அலைந்து திரியவும். வண்ண-சிவந்த நிறத்தைப் பெற்ற. மதுர-இனிய சுவையைக் கொண்ட. த்: சந்தி. தேன்-தேனை. பொழிவ-மழையைப் போலச் சொரிபவை. வாச-நறுமணம் கமழும். மலர்-மலர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வாயே-வாய்களே; ஒருமை பன்மை மயக்கம். அல்ல-அல்லாமல். தண்-குளிர்ச்சியைப் பெற்றது. என்-என்று கூறும். சோலை-பூம்பொழிலில். எம்மருங்கும்-எந்தப் பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். சாரும்-பறந்து வந்து சேரும். மட-இளமையையும். மென்-மென்மை யையும் பெற்ற. சாரிகையின்-மைனாக் குருவிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பண்ணின்-பண்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். கிளவி-பாடல்களைப் பாடும்; 'வார்த்தைகளைப் பேசும்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். மணி-அழகிய. வாயும்-வாய்களும்; ஒருமை பன்மை மயக்கம். பதிக-தேவாரத் திருப்பதிகங்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். ச்; சந்தி. செழும் - செழுமையாக விளங் கும். தேன்-தேனைப் போன்ற பாசுரங்களை; உவம ஆகு பெயர். பொழியும்-மழையைப் போலச் சொரியும். ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 4-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வண்டுகள் இசையைப் போல ரீங்காரம் செய்ய நீர் நிரம்பிய தடாகத்தில் மலர்ந்து ...தனாகிய நீரை முகிழ்ப்

பவை தங்கள்பாற் கொண்ட நறுமணம் கமழும் அரும்புகள் விரிந்து மலர்ந்த குளிர்ச்சியைப் பெற்ற தாமரை மலர்களே அல்லாமல், தேவர்களுடைய தலைவனாகிய நடராஜப் பெருமானைத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர் என்னும் நால்வரும் பாடியருளிய அழகிய பாசுரங்களாகிய அமுதம் பெருகி எழ அந்தப் பாசுரங்களைத் தங்களுடைய காதுகளால் கேட்கும் திருத்தொண்டர்களினுடைய முகங்களாகிய செந்தாமரை மலர்களும் துளித்து விழுந்த கண்களிலிருந்து வழியும் நீர்த்துளிகளை முகிழ்க்கும்.' பாடல் வருமாறு:

"வண்டு பாடப் புனல்தடத்து மலர்ந்து கண்ணீர் அரும்புவன
கொண்ட வாச முகைஅவிழ்ந்த குளிர்பங் கயங்க ளேஅல்ல,
அண்டர் பெருமான் திருப்பாட்டின் அமுதம் பெருகச் செவிமடுக்கும்
தொண்டர் வதன பங்கயமும் துளித்த கண்ணீர் அரும்புமால்.' '

வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். பாட—இசையைப் போல ரீங்காரம் செய்ய. ப்:சந்தி. புனல்-நீர் நிரம்பிய. தடத்து-தடாகத்தில். மலர்ந்து-அலர்ந்து. கள்—தேனாகிய. நீர்-நீரை. அரும்புவன-முகிழ்ப்பவை. கொண்ட—தங்கள்பாற் கொண்ட. வாச-நறுமணம் கமழும். முகை—அரும்புகள்; ஒருமை பன்மை மயக்கம். அவிழ்ந்த-விரிந்து மலர்ந்த. குளிர்-குளிர்ச்சியைப் பெற்ற; முதல் நிலைத் தொழிற் பெயர். பங்கயங்களே-தாமரை மலர்களே. அல்ல—அல்லாமல். அண்டர் - தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பெருமான்-தலைவனாகிய நடராஜப் பெருமானை. திருப்பாட்டின்-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், மாணிக்கவாசகர், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் என்னும் நால்வரும் பாடியருளிய அழகிய

பாசுரங்களாகிய. பாட்டு: ஒருமை பன்மை மயக்கம். அமுதம்-அமிர்தம். பெருக-பெருகி எழ. ச்:சந்தி. செவிமடுக்கும்-தங்களுடைய காதுகளால் கேட்கும். செவி: ஒருமை பன்மை மயக்கம். தொண்டர்-திருத்தொண்டர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வதன-முகங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். பங்கயமும்-செந்தாமரை மலர்களும்; ஒருமை பன்மை மயக்கம். துளித்த-துளிதுளியாகத் துளித்து விழுந்த. கண்-கண்களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். நீர்-வழியும் நீர்த்துளிகளை; ஒருமை பன்மை மயக்கம். அரும்பும்-முகிழ்க்கும். ஆல்: ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 5-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அமைந்த பெருமையும் வளங்களும் சிறப்பாக அமைந்த அழகும் குளிர்ச்சியும் நிறைந்த திருப்புகலூராகிய அந்தச் சிவத்தலத்தில் மரியாதைக்கு உரிய வேதியர்களினுடைய குடும்பங்களாகிய பரம்பரையில் திருவவதாரம் செய்தருளினார் பழைய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் பாடியருளிய முதல்வராகிய நடராஜப் பெருமானாரை அறியும் மெய்யறிவினுடைய எல்லையில் தலைசிறந்து நின்றவர் பாம்புகளை அணிந்தவராகிய அந்த நடராஜப் பெருமானாருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளின் கீழ் குறைவு இல்லாமல் நிறைந்த பக்தியினால் உருக்கத்தை அடையும் திருவுள்ளத்தைப் பெற்றவர் முருக நாயனார்.' பாடல் வருமாறு:

'' ஆன பெருமை வளம்சிறந்த அந்தண் புகலூர் அதுதன்னில்
மான மறையோர் குலமரபின் வந்தார் முந்தை மறைமுதல்வர்
ஞான வரம்பின் தலைநின்றார் நாகம் புனைவார் சேவடிக்கீழ்
ஊனம் இன்றி நிறைஅன்பால் உருகும் மனத்தார் முருகனார்.''

ஆன-அவ்வாறு அமைந்த. பெருமை-பெருமையும். வளம்-நீர் வளம், நில வளம், நன் மக்கள் வளம் முதலிய வளங்களும்; ஒருமை பன்மை மயக்கம். சிறந்த-சிறப்பாக அமைந்த. அம்-அழகையும். தண்-குளிர்ச்சியையும் பெற்ற. புகலூர்-திருப்புகலூராகிய. அது தன்னில்-அந்தச் சிவத்தலத்தில். தன்: அசை நிலை. மான-மரியாதைக்கு உரிய; 'பெருமையைப் பெற்ற' எனலும் ஆம். மறையோர்-வேதியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குல-குடும்பங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். மரபின்-பரம்பரையில். வந்தார்-திருவவதாரம் செய்தருளினார். முந்தை-பழமையான. மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் பாடியருளிய; ஒருமை பன்மை மயக்கம். முதல்வர்-முதல்வராகிய நடராஜப் பெருமானாரை. அந்தப் பெருமானார் வேதங்களைப் பாடியருளிய செய்தியைப் புலப்படுத்தும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. ஞான-அறியும் மெய்யறிவினுடைய. வரம்பின்-எல்லையில். தலை நின்றார்-தலை சிறந்து நின்றவர். நாகம்-பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். புனைவார்-அணிந்தவராகிய அந்த நடராஜப் பெருமானாருடைய. சேவடிக்கீழ்-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளின் கீழ். அடி: ஒருமை பன்மை மயக்கம். ஊனம்-ஒரு குறைவும். இன்றி-இல்லாமல். நிறை-நிரம்பிய. அன்பால்-பக்தியினால். உருகும்-உருக்கத்தை அடையும். மனத்தார்-திருவுள்ளத்தைப் பெற்றவர். முருகனார்-அந்த முருக நாயனார்.

பின்பு உள்ள 6-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நீரில் வளர்ந்த தாமரைக் கொடியினுடைய இலையின் மேல் நண்டு துயில் புரிந்து பிறகு விழிக்குமாறு மலரும். செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் வயல்களில் வாழும் கயல் மீன்கள் மடைகளின் மேல் துள்ளிக் குதிக்கும் திருப்புகலூரில் நிலைபெற்றுத் தம்முடைய வாழ்க்கையை நடத்தும் இயல்

யைப் பெற்றவராகி இடப வாகனத்தின் மேல் ஏறிக் கொண்டு எழுந்தருளுபவராகிய நடராஜப் பெருமானாருக்கு ஆளாக அமைந்த உண்மையான தவத்தின் பயனால் அந்தப் பெருமானாருடைய தொகுதியாக உள்ள சடாபாரத்தின் மீது அணிவதற்காகத் திருப்பள்ளித்தாமம் என்னும் மாலைக்கு உரிய மலர்களைக் கொய்து கொண்டு வந்து அந்தப் பெருமானாருக்கு அணிவார் அந்த முருக நாயனார்.' பாடல் வருமாறு:

'' அடைமேல் அலவன் துயிலுணர அலர்செங் கமலவயற் கயல்கள்
மடைமேல் உகளும் திருப்புகலூர் மன்னி வாழும் தன்மையராய்
விடைமேல் வருவார்க் காளான மெய்ம்மைத் தவத்தால் அவர்கற்றைச்
சடைமேல் அணியத் திருப்பள்ளித் தாமம் பறித்துச் சாத்துவார்.''

அடைமேல்-நீர்நிலைகளில் உள்ள நீரில் வளர்ந்துள்ள தாமரைக் கொடியினுடைய இலையின் மேல். அலவன்-நண்டு. துயில்-துயில் புரிந்து. உணர-பிறகு விழிக்குமாறு. அலர்-மலரும். செங்கமல-செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வயல்-வயல்களில் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். கயல்கள்-கயல் மீன்கள். மடைமேல்-வயலுக்கு நீர் பாயும் வழியாகிய மடைகளின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். உகளும்-துள்ளிக் குதிக்கும். திருப்புகலூர்-திருப்புகலூரில். மன்னி-நிலை பெற்று. வாழும்-தம்முடைய வாழ்க்கையை நடத்தும். தன்மையராய்-இயல்பைப் பெற்றவராகி. விடைமேல்-இடப வாகனத்தின்மேல் ஏறிக் கொண்டு. வருவார்க்கு-எழுந்தருளுபவராகிய நடராஜப் பெருமானாருக்கு. ஆளான-ஆளாக அமைந்த. மெய்ம்மை—உண்மையான.த்: சந்தி. தவத்தால்—முன் பிறவியில் புரிந்த தவத்தின் பயனால்; ஆகு பெயர். அவர்-அந்தப் பெருமானாருடைய.

கற்றை—தொகுதியாக உள்ள. ச்:சந்தி. சடைமேல்-சடா பாரத்தின் மீது. அணிய-புனைந்து கொள்வதற்காக. த்:சந்தி. திருப்பள்ளித் தாமம்-திருப்பள்ளி எழுச்சியின் போது அணி வதற்குரிய மலர் மாலையில் கட்டுகின்ற மலர்களை; ஆகு பெயர். பறித்து-கொய்து கொண்டு வந்து. ச்:சந்தி. சாத்து வார்-அந்தப் பெருமானாருக்கு அணிவார் அந்த முருக நாயனார்.

அடுத்து வரும் 7-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இராத்திரி விடியும் விடியல் வேளைக்கு முன்னாலேயே துயிலிலிருந்து விழித்து எழுந்து சென்று தூய்மையான நீரில் முழுகி விட்டுச் சென்று மலர்ந்து விளங்கும் பக்குவத்தை உடைய தம்முடைய தலைவனாகிய கோணப் பிரானுடைய திருமுடியின் மீது ஆகாய கங்கையாகிய நீர் நிரம்பிய ஆறும், பிறைச் சந்திரனும் தங்கியிருக்கும் பக்கத்தில் நறுமணத்தை வெளிப்படுத்துமாறு அரும்புகின்ற பக்குவத்தில் அந்த மலர் களைத் தம்மோடு கொய்து கொண்டுவந்த கணக்கு இல்லாத மலர்களை அந்த முருக நாயனார் வேறு வேறாக அழகிய மலர்க் கூடைகளில் வைப்பார்.' பாடல் வருமாறு:

"புலரும் பொழுதின் முன்எழுந்து புனித நீரில் மூழ்கிப்போய்
மலரும் செவ்வித் தம்பெருமான் முடிமேல் வான்நீர்
ஆறுமதி
உலவு மருங்கு முருகுயிர்க்க நகைக்கும் பதத்தின் உடன்
பறித்த
அலகில் மலர்கள் வெவ்வேறு திருப்பூங் கூடை
களிலமைப்பார்."

புலரும்—இராத்திரி விடியும். பொழுதின்—விடியல் வேளைக்கு. முன்—முன்னாலேயே. எழுந்து—துயிலிலிருந்து விழித்து எழுந்து. புனித—தூய்மையான. நீரில்—புனலில். மூழ்கி—முழுகி விட்டு. ப்:சந்தி. போய்—சென்று. மலரும்—மலர்ந்து விளங்கும். செவ்வி—பக்குவத்தை உடைய. த்:சந்தி. தம்—தம்முடைய. பெருமான்—தலைவனாகிய அக்கினீசுவர

ருடைய. முடிமேல்—திருமுடியின் மீது. வான்-ஆகாய. நீர் ஆறு—கங்கையாற்றின் நீரும். மதி—பிறைச் சந்திரனும். உலவு—தங்கி விளங்கும். மருங்கு—பக்கத்தில். முருகு—நறு மணத்தை. உயிர்க்க—வெளிப்படுத்த. நகைக்கும்—அரும்பும். பதத்தின்—பக்குவத்தில். உடன்—அந்த மலர்களைத் தம்மோடு. பறித்த-கொய்து கொண்டு வந்திருந்த. அலகு—கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. மலர்கள்—மலர்களை. வெவ்வேறு-வேறு வேறாக. திரு-அழகிய. ப்: சந்தி. பூங் கூடைகளில்-மலர்களை வைக்கும் கூடைகளில். பூ: ஒருமை பன்மை மயக்கம். அமைப்பார்-அந்த முருக நாயனார் அமைத்து வைப்பார்.

பிறகு வரும் 8- ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மரங்களின் கிளைகளில் மலர்ந்த மலர்களையும், தரையில் வளர்ந்து நிற்கும் செடிகளிலும் கொடிகளிலும் மலர்ந்திருக்கும் மலர்களையும், குளிர்ச்சியான குளம், பொய்கை, தடாகம் முதலியவற்றில் மலர்ந்த செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், குமுத மலர், செங்கழுநீர் மலர், நீலோற்பல மலர். முதலிய மலர்களையும், கொழுமையான கொடிகளில் பல இதழ்களை உடையவையாகி மலர்ந்த முல்லை மலர், மல்லிகை மலர், இருவாட்சி மலர் முதலிய மலர்களையும், மாமரத்தில் மலர்ந்த மலர்களையும் வேதங்களை வெளிப்படுத்தும் அழகிய அக்கினீசுவரருடைய வாயைப்போல, காட்டில் மலர்ந்த முல்லை மலர்கள் நிலவைப் போல மலர்ந்து விளங்க பொன்மலையாகிய மேரு மலையாகிய வில்லில் பாம்பாகிய நாணைப் பூட்டி எய்யும் ஒப்பற்றவராகிய அக்கினீசுவரருடைய அழகிய திருமுடிமேல் அணிவதற்கு உரியவை ஆகும் மலர்களை ஆராய்ந்து.' பாடல் வருமாறு:

"கோட்டு மலரும் நிலமலரும் குளிர்நீர் மலரும் கொழுங்கொடியின்
தோட்டு மலரும் மாமலரும் சுருதி மலரும் திருவாயில்

காட்டு முறுவல் நிலவலரக் கனகவரையிற் பன்னக நாண்
பூட்டும் ஒருவர் திருமுடிமேற் புனைய லாகும் மலர்
தெரிந்து.''

இந்தப் பாடல் குளகம். கோட்டு-மரங்களின் கிளைகளில்; ஒருமை பன்மை மயக்கம். மலரும்-மலர்ந்த பவள மல்லிகை மலர், வில்வ மலர், விளா மலர், வேங்கை மலர், வாகை மலர், மகிழ மலர், கடம்ப மலர் முதலிய மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். நில-தரையில் வளர்ந்து நிற்கும் செடிகளிலும் கொடிகளிலும்; ஆகு பெயர். மலரும்-மலர்ந்திருக்கும் நந்தியாவட்டை மலர், முல்லை மலர், மல்லிகை மலர், இருவாட்சி மலர் முதலிய மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். குளிர்-குளிர்ந்த. நீர்-குளம், பொய்கை முதலிய நீர் நிலைகளில்; ஆகுபெயர். மலரும்-மலர்ந்திருக்கும் நீலோற்பல மலர், குமுத மலர், அல்லி மலர், வெண்டாமரை மலர், செந்தாமரை மலர், ஆம்பல் மலர், செங்கழுநீர் மலர் முதலிய மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். கொழும்-கொழுமையைப் பெற்ற. கொடியின்-கொடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். தோட்டு-பல இதழ்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மலரும்- முல்லை மலர் முதலிய மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மா-மாமரத்தில் மலர்ந்த. மலரும்-மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். சுருதி-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மலரும்-வெளிப்படுத்தும். திரு-அழகிய. வாயில்-வாயைப் போல. சிவபெருமான் வேதங்களை வெளியிட்டார் என்ற கருத்தைப் புலப்படுத்தும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. காட்டு - காட்டில் மலர்ந்திருக்கும். முறுவல் - முல்லை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நிலவு-சந்திரன் வீசும் நிலாவைப் போல. அலர-மலர. க்: சந்தி. கனக வரையில்-பொன் மலையாகிய மேருமலை என்னும் வில்லில். பன்னக

பாம்பாகிய. நாண்-நாணை. பூட்டும்-பூட்டி எய்யும். ஒருவர்-ஒப்பற்றவராகிய அக்கினீசுவரருடைய. திரு-அழகிய. முடி மேல்-தலையின் மீது. புனையலாகும்-அணிவதற்கு உரியவை ஆகும். மலர்-மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். இவை தாழம்பூவைத் தவிர்த்து மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், தும்பை மலர், கரந்தை மலர், வெட்சி மலர், பவள மல்லிகை மலர், நீலோற்பல மலர், வில்வ மலர், மகிழ மலர், கடம்ப மலர் முதலியவை. தெரிந்து-ஆராய்ந்து.

பிறகு வரும் 9-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு முருக நாயனார் ஆராய்ந்து கொய்து கொண்டு வந்து மலர்களைத் தனியான ஓரிடத்தில் தாம் அமர்ந்து கொண்டு கோத்து அமைக்கும் கோவைகளையும், இண்டை மலர்களைக் கட்டும் மாலைகளோடு இணைத்துக் கட்டும் நறுமணம் வீசும் வேறு மாலைகளையும், தடிகளில் வைத்துக் கட்டும் தலை மாலைகளையும், காம்புகளை இணைத்துக் கட்டும் மாலைகளையும், நுட்பமான மகரந்தப் பொடிகளைப் பரப்பும் மாலைகளையும் அமைத்து வைத்துப் பூணூல் அசையும் திருமார்பைப் பெற்ற அந்த நாயனார்.' பாடல் வருமாறு:

**"கொண்டு வந்து தனியிடத்தில் இருந்து கோக்கும்
கோவைகளும்
இண்டைச் சுருக்கும் தாமமுடன் இணைக்கும் வாச
மாலைகளும்
தண்டிற் கட்டும் கண்ணிகளும் தாளிற் பிணைக்கும்
பிணையல்களும்
நுண்டா திறைக்கும் தொடையல்களும் சமைத்து நுடங்கு
நூல்மார்பர்."**

இந்தப் பாடலும் குளகம். கொண்டு வந்து-அவ்வாறு முருக நாயனார் ஆராய்ந்து கொண்டு வந்து. தனியிடத்தில்-அந்த மலர்களைத் தனியான ஓரிடத்தில். இருந்து-அமர்ந்து

கொண்டு. கோக்கும்-கோத்து அமைக்கும். கோவைகளும்-கோவைகளையும். இண்டை-இண்டை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சுருக்கும்-கட்டும். தாமமுடன்-மாலைகளோடு; ஒருமை பன்மை மயக்கம். இணைக்கும்-இணைத்துக் கட்டும். வாச-நறுமணம் கமழும். மாலைகளும்-வேறு மாலைகளையும். தண்டில்-தடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். கட்டும்-வைத்துக் கட்டும். கண்ணிகளும்-தலை மாலைகளையும். தாளில்-காம்புகளை; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். பிணைக்கும்-இணைத்துக் கட்டும். பிணையல்களும்-மாலைகளையும். நுண்-நுட்பமான. தாது-மகரந்தப் பொடிகளை; ஒருமை பன்மை மயக்கம். இறைக்கும்-பரப்பும். தொடையல்களும்-தொடுத்த மாலைகளையும். சமைத்து-அமைத்து வைத்து. நுடங்கு-அசையும். நூல்-பூணூலை. மார்பர்-அணிந்த மார்பைப் பெற்றவராகிய அந்த நாயனார். இந்தப் பாடலில் கோவைகள், தாமம், மாலைகள், பிணையல்கள், தொடையல்கள் என்று ஒரே பொருளில் வரும் பல சொற்களை அமைத்துள்ளார் சேக்கிழார். இஃது ஓர் அலங்காரம்.

பிறகு உள்ள 10-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அந்தத் திருப்புகலூரில் உள்ள ஆலயத்தில் அந்தத் திருப்பணிகளாக உள்ளவற்றுக்கு அமைத்திருக்கும் காலங்களில் அந்தத் திருப்பணிகளை அமையச் செய்து, திருப்பணிகளுக்குரிய மலர்கள், கற்பூரத் தட்டு, தூபக்கால், கற்பூரம், சாம்பிராணி, அடிக்கும் மணி, நிவேதனப் பொருள்கள் முதலியவற்றை ஒரு கூடையில் வைத்து அந்த முருக நாயனார் தம்முடைய தலையின் மேல் சுமந்து கொண்டு போய்ப் பக்தியோடும் மாலைகளை அக்கினீசுவரனுக்கு அணிந்து, வாய்ப்பாக அமைந்த அருச்சனைகளைப் பல மலர்களாலும், வில்வப் பத்திரங்களாலும், வண்ணப் பத்திரங்களாலும் பக்குவமாகச் செய்து பக்தியோடு இருப்பவர்; பரமேசுவரருக்குரிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாய

னார், சுந்தர மூர்த்தி நாயனார், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் பாடியருளிய திருப்பதிகங்களில் பதிந்தவை ஆன உயர்ச்சியைப் பெற்றுச் சிறப்பை அடைந்த ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை உச்சரித்தலைத் தவறாத நாக்கைப் பெற்ற உணர்ச்சியை உடையவர் அந்த நாயனார்.' பாடல் வருமாறு:

"ஆங்கப் பணிகளான வற்றுக் கமைத்த காலங்களின் அமைத்துத்
தாங்கிக் கொடுசென் றன்பி னொடும் சாத்திவாய்ந்த அர்ச்சனைகள்
பாங்கிற் புரிந்து பரிந்துள்ளார்; பரமர் பதிகப் பற்றான
ஓங்கிச் சிறந்த அஞ்செழுத்தும் ஓவா நாவின் உணர்வி னார்."

ஆங்கு-அந்தத் திருப்புகலூரில் உள்ள அக்கினீசுவரரு டைய ஆலயத்தில். அப்பணிகள் ஆனவற்றுக்கு-அந்தத் திருப்பணிகளாக உள்ளவற்றுக்கு. அமைத்த-அமைத்துள்ள. காலங்களின்-பூஜா காலங்களில். அமைத்து-அந்தத் திருப் பணிகளை அமையச் செய்து. த்:சந்தி. தாங்கிக் கொடு-திருப்பணிகளுக்கு உரிய மலர்கள், கற்பூரத் தட்டு, தூபக்கால், கற்பூரம், சாம்பிராணி, அடிக்கும் மணி, நிவேதனப் பொருள் கள், திருமஞ்சனத்துக்குரிய பால், தயிர், நெய், பஞ்சகவ்வி யம், தூய நீர் முதலியவற்றை ஒரு கூடையில் வைத்து அந்த முருக நாயனார் தம்முடைய தலையின் மேல் சுமந்து கொண்டு. சென்று-போய். அன்பினொடும் - பக்தியோடும். சாத்தி-மாலைகளை அக்கினீசுவரருக்கு அணிந்து. வாய்ந்த-வாய்ப்பாக அமைந்த. அர்ச்சனைகள் - அருச்சனைகளை. பாங்கில்-பக்குவத்தோடு; உருபு மயக்கம். புரிந்து-பல மலர் களாலும், வில்வப் பத்திரங்களாலும், வன்னிப் பத்திரங்க ளாலும் செய்து. பரிந்துள்ளார் - பக்தியோடு இருப்பார். பரமர்-பரமேசுவரருக்குரிய. பதிக-திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தர மூர்த்தி நாய

னார், மாணிக்க வாசகர் ஆகிய நால்வரும் பாடியருளிய திருப்பதிகங்களில்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பற்று ஆன-பதிந்தவை ஆன.பற்று: ஒருமை பன்மை மயக்கம்.ஓங்கி-உயர்ச்சியைப் பெற்று. ச்: சந்தி. சிறந்த-சிறப்பை அடைந்த. அஞ்சு எழுத்தும்-ந, ம,சி,வா, ய என்ற ஐந்து எழுத்துக்களில் அடங்கிய பஞ்சாட்சரத்தையும். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். ஓவா-உச்சரித்தலைத் தவறாத. நாவின்-நாக்கைப் பெற்ற. உணர்வினார்-உணர்ச்சியை உடையவர் அந்த நாயனார்.

பின்பு வரும் 11-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தள்ளி ஓதுக்கும் முறை அகன்று போக இத்தகைய தகுதியோடு நடந்து வரும் வேதியராகிய அந்த முருக நாயனார் தெளிவாக இருக்கும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்கள் முதலாக உள்ள மெய்யறிவை,சிவந்த பொற் கிண்ணத்தில் வைத்து அள்ளி எல்லா உலகங்களையும் பெற்று வழங்கியருளிய அம்மையாகிய பெரியநாயகி தன்னுடைய கொங்கைகளிலிருந்து கறந்த பாலோடு குடித்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாராகிய ஆண் குழந்தையாருக்கு நண்பராகவும் ஆகும் பெருமையைப் பெற்றவரானார்.' பாடல் வருமாறு:

" தள்ளும் முறைமை ஒழிந்திடஇத் தகுதி ஒழுகும்
மறையவர்தாம்
தெள்ளு மறைகள் முதலான ஞானம் செம்பொன்
வள்ளத்தில்
அள்ளி அகிலம் ஈன்றளித்த அம்மை முலைப்பா
லுடனுண்ட
பிள்ளை யார்க்கு நண்பருமாம் பெருமை உடையார்
ஆயினார்."

தள்ளும்-ஒதுக்கித் தள்ளும். முறைமை-முறை. ஒழிந்திட-அகன்று போக. இத் தகுதி-இத்தகைய தகுதியோடு. ஒழுகும்-நடந்து வரும். மறையவர் தாம்-வேதியராகிய அந்த

முருக நாயனார். தாம்: அசை நிலை. தெள்ளும்-தெளி வாக இருக்கும். மறைகள்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்கள். முதலான—முதலாக உள்ள. ஞானம்—மெய்யறிவை. செம்—சிவந்த. பொன்வள்ளத்தில்—ஒரு பொற்கிண்ணத்தில். அள்ளி—அள்ளி வைத்து. அகிலம்—எல்லா உலகங்களையும். ஈன்று—பெற்று. அளித்த—வழங்கியருளிய. அம்மை—சீகாழி யில் உள்ள ஆலயத்தில் ஒரு தோணியில் தோணியப்பரோடு வீற்றிருக்கும் அன்னையாகிய பெரிய நாயகி. முலைப் பாலுடன் — தன்னுடைய கொங்கைகளிலிருந்து கறந்த பாலோடு. உண்ட—குடித்தருளிய. பிள்ளையார்க்கு-திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனாராகிய ஆண் குழந்தை யாருக்கு. நண்பரும் ஆம் —நண்பராகவும் ஆகும். பெருமை— பெருமையை. உடையார்—பெற்றவர். ஆயினார்—ஆனார் அந்த நாயனார்.

பிறகு வரும் 12-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அன்னப் பறவையின் வடிவத்தையும், பன்றியின் உருவத்தையும் எடுத்துக் கொண்டு பிரமதேவனும் திருமா லும் பறந்தும் நிலத்தைத் தோண்டியும் தம்முடைய திருமுடி யையும் திருவடிகளையும் தேடி அறிந்து கொள்ள முயன்ற வர்களாகிய அந்த இரண்டு பேர்களும் அந்த இரண்டை யும் தெரிந்து கொள்ளாமல் நிலை பெற்று விளங்கும் திருப் புகலூரில் எழுந்தருளித் தங்கும் வர்த்த மானேசுவரர் கோயில் கொண்டிருக்கும் வர்த்தமானேச்சுரத்தில் நன்றாக மகிழ்ச்சி யைத் தம்முடைய திருவுள்ளத்தில் கொள்ளும் வண்ணம் அந்த முருக நாயனார் ஒவ்வொரு நாளும் தவறாமல் உச்சரிக்கும் பெருமையைப் பெற்ற ந, ம, சி, வா, ய் என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும் பலகாலும் ஜபித்துக் கொண்டே அந்த வர்த்தமானேசுவரரை வணங்கி வாழ்த்தினார்.' பாடல் வருமாறு:

"அன்ன வடிவும் ஏனமுமாய் அறிவார் இருவர் அறியாமல்
மன்னும் புகலூர் உறைவாரை வர்த்த மான வீச்சுரத்து
நன்னர் மகிழ்ச்சி மனம்கொள்ள நாளும் பூசை வழுவாமே
பன்னும் பெருமை அஞ்செழுத்தும் பயின்றே பணிந்து
பரவினார்.'"

அன்ன வடிவும்- அன்னப் பறவையின் வடிவத்தையும். ஏனமுமாய்—பன்றியின் உருவத்தையும் எடுத்துக் கொண்டவர்களாகி; திணை மயக்கம். அறிவார் இருவர்-பிரமதேவனும் திருமாலும் பறந்தும் நிலத்தைத் தோண்டியும் தம்முடைய திருமுடியையும் திருவடிகளையும் தேடி அறிந்து கொள்ள முயன்றவர்களாகிய அந்த இரண்டு பேர்களும். அறிவார்: ஒருமை பன்மை மயக்கம். அறியாமல்-அந்த இரண்டையும் தெரிந்து கொள்ளாமல். மன்னும்-நிலை பெற்று விளங்கும். புகலூர்-திருப்புகலூரில். உறைவாரை-எழுந்தருளித் தங்கும் வர்த்தமானேசுவரர் கோயில் கொண்டிருக்கும் வர்த்தமானேச்சுரத்தில். நன்னர்-நன்றாக. மகிழ்ச்சி-ஆனந்தத்தை. மனம்—தம்முடைய திருவுள்ளத்தில். கொள்ள—மேற் கொள்ளும் வண்ணம். நாளும்-ஒவ்வொரு நாளும். பூசை-அந்த முருக நாயனார் அக்கினீசுவரருடைய பூசையை. வழுவாமே—தவறாமல். பன்னும்-பலகாலும் உச்சரிக்கும். பெருமை—பெருமையைப் பெற்ற. அஞ்சு எழுத்து'ட-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். பயின்றே-ஜபித்துக் கொண்டே. பணிந்து-அந்த வர்த்தமானேசுவரரை வணங்கி. பரவினார்-வாழ்த்தினார்.

அடுத்து உள்ள 13-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் திருப்புகலூரில் தங்கியிருக்கும் அழகிய முருக நாயனார், அழகு நிரம்பிய புகலியென்னும் சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய ஆண் குழந்தையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய மங்கல வாத்தியங்கள் பொங்கி எழுந்து ஒலிக்கும் திருமணத்தில் தாம் முன் பிறவி

யில் புரிந்த பூசையாகிய அதன் பயனால் புகுந்தருளிச் சிவந்த கண்களையும் வலிமையையும் பெற்ற இடபத்தைத் தம்முடைய வாகனமாகப் பெற்ற சிவபெருமானார் வழங்கிய சிறப்பு அமைந்த திருவருளாகிய செல்வத்தை வழங்கியருளத் தங்களுடைய தலைவனாகிய அக்கினீசுவரனுடைய திருவடிகளின் நிழலில் தலைமைப் பதவியாகும் நிலையை அந்த நாயனார் சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

''அங்கண் அமரும் திருமுருகர் அழகார் புகலிப் பிள்ளையார்
பொங்கு மணத்தின் முன்செய்த பூசை அதனால் புக்கருளிச்
செங்கண் அடலே றுடையவர்தாம் சிறந்த அருளின் பொருளளிக்கத்
தங்கள் பெருமான் அடிநீழல் தலையாம் நிலைமை சார்வுற்றார்.''

அங்கண்-அந்தத் திருப்புகலூரில். அமரும்-தங்கியிருக்கும். திரு-அழகிய. முருகர்-முருக நாயனார். அழகு-எழில். ஆர்-நிரம்பிய. புகலி-புகலியாகிய சீகாழியில் சிவபாத இருதயருக்கும் பகவதியம்மையாருக்கும் புதல்வராக திருவவதாரம் செய்தருளிய. ப்:சந்தி. பிள்ளையார்-ஆண்குழந்தையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. பொங்கு-மங்கல வாத்தியங்கள் பொங்கி எழுந்து ஒலிக்கும். மணத்தின்-பெருமண நல்லூரில் நிகழ்ந்த திருமணத்தில். முன்-முற்பிறவியில். செய்த-தாம் புரிந்த. பூசை அதனால்-பூசையாகிய அதன் பயனால்; ஆகு பெயர். புக்கருளி-அப்போது தோன்றிய சோதியில் புகுந்தருளி. ச்: சந்தி. செம்-சிவந்த. கண் - கண்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அடல்-வலிமையையும் பெற்ற. ஏறு-இடபத்தை. உடையவர் தாம்-தம்முடைய வாகனமாகப் பெற்ற சிவபெருமானார். தாம்; அசை நிலை. சிறந்த-சிறப்பாக அமைந்த. அருளின்-திருவருளாகிய. பொருள்-செல்வத்தை. அளிக்க-வழங்கி அருள. த்:சந்தி. தங்கள்-தங்களுடைய. பெருமான்-தலைவ

னாகிய அக்கினீசுவரனுடைய. அடி-திருவடிகளின்; ஒருமை பன்மை மயக்கம். நீழல்-நிழலில். தலையாம்-தலைமைப் பதவியாகும். நிலைமை-நிலையை. சார்வுற்றார்-அந்த நாயனார் சேர்ந்தார்.

இந்த முருக நாயனார் புராணத்தில் இறுதியாக உள்ள 14-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பாம்புகளைப் புனைந்த இடுப்பை உடைய அக்கினீசுவரரை அர்ச்சனை புரிந்து அந்த ஈசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளின் நிழலின் கீழ் சேர்ந்து விளங்கும் திருப்புகலூரில் திருவவதாரம் செய்தருளிய முருக நாயனாருடைய உண்மையான திருத்தொண்டினுடைய திறத்தை வாழ்த்தி மறைவில் அவரிடம் வருபவரைத் தம்முடைய திருவுள்ளத்தில் உருத்திரத்தை ஜபித்துக் கொண்டு புகழும் பக்தராகிய உருத்திர பசுபதி நாயனார் சிவபெருமானை வணங்கி வாழ்ந்த பெருமையைப் பாடலானேன்.' பாடல் வருமாறு:

"அரவம் அணிந்த அரையாரை அருச்சித் தவர்தம் கழல் நிழற்கீழ்
விரவு புகலூர் முருகனார் மெய்ம்மைத் தொண்டின் திறம்போற்றிக்
கரவில் அவர்பால் வருவாரைக் கருத்தில் உருத்திரம் கொண்டு
பரவும் அன்பர் பசுபதியார் பணிந்த பெருமை பகர்வுற்றேன்."

இது சேக்கிழார் அடுத்து வரும் உருத்திர பசுபதி நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகப் பாடியருளிய பாடல்.

அரவம்-பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். அணிந்த-புனைந்த. அரையாரை-இடுப்பை உடைய அக்கினீசுவரரை. அருச்சித்து-அருச்சனை புரிந்து. அவர் தம்-அந்த ஈசுவரருடைய. தம்: அசை நிலை. கழல்-வெற்றிக்கழலைப் பூண்ட திருவடிகளின்; ஆகு பெயர். நிழற் கீழ்-நிழலின்

கீழ். விரவு-கலந்து சேர்ந்துள்ள. புகலூர்-திருப்புகலூரில் திருவவதாரம் செய்தருளிய. முருகனார்-முருக நாயனாருடைய. மெய்ம்மை-உண்மையான. த்: சந்தி. தொண்டின்-திருத்தொண்டினுடைய. திறம்-வகையை; 'ஆற்றலை' எனலும் ஆம். போற்றி-வாழ்த்தி. க்: சந்தி. கரவில்-மறைவில். அவர்பால்-அவரிடம். வருவாரை-வருபவரை. க்:சந்தி. கருத்தில்-தம்முடைய திருவுள்ளத்தில். உருத்திரம்-உருத்திரத்தை. கொண்டு-ஜபித்துக் கொண்டு. பரவும்-புகழும். அன்பர்-பக்தராகிய. பசுபதியார்-உருத்திர பசுபதி நாயனார். பணிந்த-சிவபெருமானை வணங்கி வாழ்ந்த. பெருமை-பெருமையை. பகர்வுற்றேன்-பாடலானேன்.

உருத்திர பசுபதி நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 4-ஆவதாக விளங்குவது மும்மையால் உலகாண்ட சருக்கம். அதில் மூன்றாவதாக அமைந்திருப்பது உருத்திர பசுபதி நாயனார் புராணம். அதில் வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'இந்தப் பூமண்டலத்தில் ஓங்கி எழுந்த உயர்ந்து எழுந்து ஓடும் பெரிய நீர் வெள்ளம் மலர்கள் மலர்ந்த தடாகத்திலும், பெருத்த வயல்களிலும் பாயும் பொன்னைக் கொழிக்கும் காவிரியாறு ஓடும் நல்ல சோழ நாட்டில் சாதியில் உயர்ச்சியைப் பெற்றவையும், ஒரு குறைவும் இல்லாதவையும் ஆகிய நிறைந்த குடும்பங்கள் கூடியிருந்து மற்றத் தலங்களை விட மேம்பாட்டைப் பெற்று விளங்கும் நன்மையைப் பெற்றது பெருமையைக் கொண்ட திருத்தலையூர் என்னும் சிவத்தலம்.' பாடல் வருமாறு:

"நிலத்தின் ஓங்கிய நிவந்தெழும் பெரும்புனல் நீத்தம்
மலர்த்த டம்பணை வயல்புகு பொன்னி நன்னாட்டுக்
குலத்தின் ஓங்கிய குறைவிலா நிறைகுடி குழுமித்
தலத்தின் மேம்படு நலத்தது பெருந்திருத் தலையூர்."

நிலத்தின் - இந்தப் பூ மண்டலத்தில். ஓங்கிய-ஓங்கி எழுந்த. நிவந்து-உயர்ந்து. எழும்-எழுந்து ஓடும். பெரும்--

பெரிய. புனல் நீத்தம்-நீர் வெள்ளம். மலர்-செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், அல்லி மலர், ஆம்பல் மலர், குமுத மலர், நீலோற்பல மலர், செங்குவளை மலர் முதலிய நீர்ப்பூக்கள்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தடம்-மலர்ந்திருக்கும் தடாகத்திலும். பணை-பெருத்த; 'பண்ணையிலும்' எனலும் ஆம். வயல்-சம்பா நெற்பயிர் விளையும் வயல், குறுவை நெற்பயிர் விளையும் வயல் முதலிய வயல்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். புகு-பாயும். பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரியாறு ஓடும்; "பொன்னி பொன் கொழிக்கும்" என வருதலைக் காண்க. நல்-நல்ல. நாட்டு-சோழ நாட்டில். க்:சந்தி. குலத்தின்-சாதியில். ஓங்கிய-உயர்ச்சியைப் பெற்ற. குறைவு-ஒரு குறையும். இலா-இல்லாத; இடைக்குறை. நிறை-நிறைந்த. குடி-குடும்பங்கள்; 'குடிமக்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். குழுமி-கூடி வாழ்ந்து. த்:சந்தி. தலத்தின்-மற்றத் தலங்களை விட; ஒருமை பன்மை மயக்கம். மேம்படு-மேம்பாட்டைப் பெற்று விளங்கும். நலத்தது-நன்மையைப் பெற்றது. பெரும்-பெருமையைக் கொண்ட. திருத்தலையூர் -திருத்தலையூர் என்னும் சிவத்தலம்.

பிறகு வரும் 2-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மேகங்கள் பொழியும் மழையை வழங்குபவை வேதியர்கள் யாகங்களில் வளர்க்கும் நெருப்புக்கள்; தேனைக் கொடுப்பவை நறுமணம் கமழும் மலர்கள் நெருங்கி மலர்ந்த செழிப்பான பல வகை மரங்கள் வளர்ந்து நிற்கும் செழுமையைப் பெற்ற பூம்பொழில்கள்; பசுமாடுகள் அளிப்பவையாகிய கோமயம், கோஜலம், பால், தயிர், வெண்ணெய் என்னும் பஞ்சகவ்வியங்களிலும் மகிழ்ச்சியை அடைந்து அபிடேகத்தைப் பெறும் சிவபெருமானாருக்கு அந்தத் திருத்தலையூர் வழங்குபவை அறங்களும், நியாயமும், சான்றாண்மையும் ஆகும்.' பாடல் வருமாறு:

'' வான்அ ளிப்பன மறையவர் வேள்வியின் வளர்தீ;
தேன்அ ளிப்பன நறுமலர் செறிசெழும் சோலை;
ஆன்அ ளிப்பன அஞ்சுகந் தாடுவார்க் கவ்வூர்
தான்அ ளிப்பன தருமமும் நீதியும் சால்பும்.''

வான்-மேகங்கள் பொழியும் மழையை. அளிப்பன-வழங்குபவை. மறையவர்-வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வேள்வியின்-யாகங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வளர்-வளர்க்கும். தீ-நெருப்புக்கள்; ஒருமை பன்மை மயக்கம். தேன்-தேனை. அளிப்பன-கொடுப்பவை. நறு-நறுமணம் கமழும். மலர்-மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். செறி-நெருங்கி மலர்ந்து. செழும்-செழிப்பான. சோலை-பல வகையான மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மரங்களாவன: தேக்கு மரம், மா மரம், பல வகை வாழை மரங்கள், மருத மரம், வேங்கை மரம், வாகை மரம், மகிழ மரம், பவள மல்லிகை மரம், கடம்ப மரம், வில்வ மரம், வேப்ப மரம், புளிய மரம் விளா மரம் முதலியவை. ஆன்-பசுமாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். அளிப்பன-தருபவையாகிய. அஞ்சு-கோமயம், கோஜலம், பால், தயிர், வெண்ணெய் என்ற பஞ்சகவ்வியத்திலும். உகந்து-மகிழ்ச்சியை அடைந்து. ஆடுவார்க்கு-அபிடேகத்தைப் பெறுபவராகிய சிவபெருமானாருக்கு. அவ்வூர் தான்-அந்தத் திருத்தலையூர். அளிப்பன-வழங்குபவை. தருமமும்-முப்பத்திரண்டு வகை அறங்களும்; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. நீதியும்-நியாயமும். சால்பும்-சான்றாண்மையும் ஆகும்.

வேள்வி புரிவதனால் மழை பெய்தல்: ''வேள்வி நற்பயன் வீழ்புனலாவது.'' என்று சேக்கிழார் பாடியருளியதைக்காண்க.

அஞ்சுகந்தாடுவார்: ''ஆவின் ஐந்தமர்ந்தவன்.'', ''ஆனி லங்கிளர் ஐந்தும் அவிர் முடியாடி.'', ''ஆனஞ்சாடிய சென்னி

அடிகளுக்கு.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''ஆவினுக்கருங்கலம் அரனஞ் சாடுதல்.'', ''அஞ்சு கொலாமவர் ஆடின தாமே.'', ''அஞ்சணை அஞ்சும் ஆடி.'', ''அளித்த ஆனஞ்சும் ஆடிய.'', ''ஆவின் மேவிய ஐந்தமர்ந் தாடுவான்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''ஆனிடை ஐந்தமர்ந்தான்.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''ஆனஞ்சாடும் சென்னி.'' என்று கண்டராதித்தரும், ''ஆனைந்தும் ஆட்டி.'' என்று திருமூலரும், ''மேய வேணித் திருமுடி மேல் விரும்பியாடி அருளுதற்குத் தூய திருமஞ்சனம் ஐந்தும் அளுக்கும் உரிமைச் சுரபிகள் தாம்.'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 3-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அழகிய இடங்களைப் பெற்ற பெரிய நகரமாகிய அந்தத் திருத்தலையூரில் பொருள் தெரிவதற்கு அருமையாக உள்ள இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களில் உள்ள உண்மைகளை அறிந்த பரிசுத்தமான மறையவர்களுடைய சாதியில் திருவவதாரம் செய்தருளிய தூய்மையைப் பெற்றவர் சிவந்த கண்களைக் கொண்ட திருமாலாகிய இடப வாகனத்தை ஓட்டுபவரும், செழுமையைப் பெற்ற தங்கம் தோன்றும் இமயமலை அரசனுடைய பூங்கொடியைப் போன்ற பார்வதி தேவியைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்தவரும் ஆகிய சிவ பெருமானாருடைய அடிமையாக விளங்கும் வகையில் தொண்டுகளைச் செய்து வரும் உருத்திர பசுபதி நாயனார்.' பாடல் வருமாறு:

'' அங்கண் மாநக ரதனிடை அருமறை வாய்மைத்
துங்க வேதியர் குலத்தினில் தோன்றிய தூயோர்
செங்கண் மால்விடை யார்செழும் பொன்மலை வல்லி
பங்க னார்அடி மைத்திறம் புரிபசு பதியார்.''

இந்தப் பாடல் குளகம். அம்-அழகிய. கண்-இடங்களைப் பெற்ற;ஒருமை பன்மை மயக்கம். மா-பெருமையைப் பெற்ற.

நகர்-நகரமாகிய. அதனிடை-அந்தத் திருத்தலையூரில். அரு-பொருள் தெரிவதற்கு அருமையாக உள்ள. மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். வாய்மை-உண்மைகளை அறிந்த; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. துங்க-பரிசுத்தமாகிய. வேதியர்-மறையவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலத்தினில்-சாதியில். 'குடும்பத்தில்' எனலும் ஆம். தோன்றிய-திருவவதாரம் செய்தருளிய. தூயோர்-தூய்மையைப் பெற்றவர். செம்-சிவந்த கண்—கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மால்-திருமாலாகிய. விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவரும். செழும்-செழுமையைப் பெற்ற. பொன்-தங்கம் தோன்றும். மலை-இமாசல அரசனுடைய; திணை மயக்கம். வல்லி-பூங்கொடியைப் போன்ற பார்வதி தேவியை; உவம ஆகு பெயர். பங்கனார்-தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்தவரும் ஆகிய சிவபெருமானாருடைய. அடிமைத் திறம்-அடிமையாக விளங்கும் வகையில். புரி-பல தொண்டுகளைச் செய்து வரும். பசுபதியார் - உருத்திர பசுபதி நாயனார்.

அடுத்து வரும் 4-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு விளங்கிய வேதியராகிய உருத்திர பசுபதி நாயனார் பொருள் தெரிவதற்கு அருமையாக உள்ள யஜுர் வேதத்தில் விளங்கும் உருத்திரத்தை ஜபித்துக் கொண்டு மாயனாராகிய திருமாலார் பன்றி உருவத்தை எடுத்து நிலத்தைத் தோண்டிப் பார்த்துத் தேடியும் தெரிந்து கொள்ள முடியாத செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளைத் துதித்து வணங்கும் பரிசுத்தமாகிய பக்தியோடு தொடர்ந்திருக்கும் இயல்பினால் இடையறாமல் வேதங்களைப் பாராயணம் புரியும் விருப்பத்தைக் கொண்ட திருவுள்ளத்தைப் பெற்றவராகி அந்த

உருத்திரத்தை ஜபிக்கும் திருத்தொண்டில் அந்த நாயனார் தலைசிறந்து நின்றார்.' பாடல் வருமாறு:

"ஆய அந்தணர் அருமறை உருத்திரம் கொண்டு
மாய னார்அறி யாமலர்ச் சேவடி வழுத்தும்
தூய அன்பொடு தொடர்பினில் இடையறாச் சுருதி
நேய நெஞ்சின ராகிஅத் தொழில்தலை நின்றார்."

ஆய-அவ்வாறு விளங்கிய. அந்தணர்-வேதியராகிய உருத்திர பசுபதி நாயனார். அரு-பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள. மறை-யஜுர் வேதத்தில் விளங்கும். உருத்திரம்-உருத்திரத்தை. கொண்டு-ஜபித்துக் கொண்டு. மாயனார்-மாயனாராகிய திருமாலார். அறியா-பன்றியின் உருவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்துத் தேடியும் தெரிந்து கொள்ள முடியாத. மலர்-செந்தாமரை மலர்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சேவடி-சிவந்த திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வழுத்தும்-துதித்து வணங்கும். தூய-பரிசுத்தமாகிய. அன்பொடு-பக்தியோடு. தொடர்பினில் - தொடர்ந்திருக்கும் இயல்பினால்; உருபு மயக்கம். இடையறா-இடைவிடாமல். ச்: சந்தி. சுருதி-வேதங்களைப் பாராயணம் புரியும்; ஒருமை பன்மை மயக்கம். நேய-விருப்பத்தைக் கொண்ட. நெஞ்சினர் ஆகி-திருவுள்ளத்தைப் பெற்றவராக விளங்கி. அத் தொழில்-அந்த உருத்திரத்தை ஜபிக்கும் திருத்தொண்டில். தலை நின்றார்-அந்த நாயனார் தலைசிறந்து நின்றார்.

பிறகு உள்ள 5-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வரம்பு இல்லாத முழக்கத்தைப் பலவகையான பறவைகள் கூவும் சத்தங்கள் பேரொலியை எழுப்பப் பக்கத்தில் மலர்களில் நிரம்பிய தேனை உண்டு மெல்லிய வண்டுகள் ரீங்காரம் செய்யக் கருமையான வரால் மீன்கள் புரண்டு ஓடுவதும், வரிசையாக உள்ள நீளமான கயல் மீன்கள் நீரில் நெருப்பு எழுந்தாற் போல விளங்கிய நறுமணம் மலர்ந்து கமழ்ந்த செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் மென்மை

யான நீர் நிறைந்த ஒரு பொய்கைக்குள் அந்த உருத்திர பசுபதி நாயனார் இறங்கி.' பாடல் வருமாறு:

"கரையில் கம்பலை புள்ளொலி கறங்கிட மருங்கு
பிரச மென்சுரும் பறைந்திடக் கருவரால் பிறழும்
நிரைநெடும் கயல் நீரிடை நெருப்பெழுந் தனைய
விரைநெகிழ்ந்தசெங் கமலமென் பொய்கையுள் மேவி."

இந்தப் பாடல் குளகம். கரை-வரம்பு. இல்-இல்லாத; கடைக்குறை. கம்பலை-முழக்கத்தை. புள்-பலவகையான பறவைகள்; ஒருமை பன்மை மயக்கம். அந்தப் பறவைகளாவன: மீன் கொத்திப் பறவை, நாரை, கொக்கு முதலியவை. ஒலி-கூவும் சத்தங்கள்; ஒருமை பன்மை மயக்கம். கறங்கிட-பேரொலியை எழுப்ப. மருங்கு-பக்கத்தில். பிரசம்-தேனைக் குடித்து விட்டு. மென்-மென்மையான. சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். அறைந்திட-ரீங்காரம் செய்ய. க்:சந்தி. கரு-கருமையான. வரால்-வரால் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். பிறழும்-புரண்டு ஓடுவதும்; வினையாலணையும் பெயர். நிரை-வரிசையாக உள்ள. நெடும்-நீளமாக இருக்கும். கயல்-கயல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீரிடை-புனலில். நெருப்பு-தீ. எழுந்தனைய-எழுந்தாற் போல விளங்கிய. விரை-நறுமணம். நெகிழ்ந்த-மலர்ந்து கமழ்ந்த. செங்கமலம்-செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையான நீர் நிறைந்த. பொய்கையுள்-ஒரு பொய்கைக்குள். பொய்கை-மனிதர் ஆக்காத நீர்நிலை. மேவி-அந்த உருத்திர பசுபதி நாயனார் இறங்கி.

செந்தாமரை மலருக்கு நெருப்பு உவமை: "தழல்தாமரையான்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "செந்தீ மேல் எழும்பொழுது செம்மலர் மேல் வந்தெழுந்த, அந்தணன் போல் தோன்றினார்.", "பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்." என்று சேக்கிழாரும், "தீப்பட மலர்ந்த கடவுள் ஒண்பூ." (பெரும்பாணாற்றுப்படை.

289-90), "கடவுட்கயத் தமன்ற சுடரிதழ்த் தாமரைத், தாது படு பெரும்போது." (மதுரைக் காஞ்சி, 710-11) என்று மாங்குடி மருதனாரும், "முட்டாள சுடர்த் தாமரை." (மதுரைக் காஞ்சி, 249) என்று அதே புலவரும், "விளக்கினன்ன சுடர் விடு தாமரை." (நற்றிணை, 310:1), "சுடர்ப்பூந்தாமரை.", "எரியகைந்தன்ன தாமரை." (அகநானூறு, 6:10, 106:1), "செறுவிற்பூத்த சேயிதழ்த் தாமரை, அறுதொழில் அந்தணர் அறம்புரிந் தெடுத்த, தீ யொ டு வி ள ங் கு ம் நாடன்." (பு ற ந ா னூ று, 397:19-21), "தாமரை அழற்போது." (பெருங்கதை, 1.40:2451) என்று வே று புலவர்களும், "தாமரை வனத்திடைத்தாவும் அன்னம் போல், தூமவெங் காட்டெரி தொடர்கின் றாள்.", "அ ரி ம ல ர் ப் பங்கயத் தன்னம் எங்கணும், புரிகுழல் புக்கிடம் புகல்கிலாமையால், திருமுகம் நோக்கலம் இறந்து தீர்துமென். றெரிபுகுவன வெனத் தோன்று மீட்டது.", "நீந்தரும் புனலிடை நிவந்த தாமரை, ஏய்ந்த தன் கோயிலே எய்துவாளெனப், பாய்ந்த னள் பாய்தலும் பாலின் பஞ்செனத், தீய்ந்ததவ் வெரியவள் கற்பின் தீயினால்." என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பிறகு உள்ள 6-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தெளிவாக உள்ள குளிர்ச்சியைப் பெற்ற நீர் தம்முடைய கழுத்தளவு வரை இருக்க அந்தப் பொய்கைக்கு உள்ளே அடையுமாறு இறங்கி நின்று கொண்டு தம்முடைய கைகளை உருத்திர பசுபதி நாயனார் தம்முடைய தலையின் மேற் கூப்பிச் சிவபெருமானைக் கும்பிட்டுத் தள்ளும் வெண்மையான அலைகளை வீசும் கங்கையாற்றின் புனல் ததும்பித் தங்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சிவபெருமானார்பால் தாம் கொண்டிருக்கும் பக்தியினால் உருத்திரத்தைத் தாம் குறித்த எண்ணத்தோடு பலகாலும் ஓதினார்.' பாடல் வருமாறு:

"தெள்ளு தண்புனல் கழுத்தள வாயிடைச் செறிய
உள்ளு றப்புக்கு நின்றுகை உச்சிமேற் குவித்துத்
தள்ளு வெண்டிரைக் கங்கைநீர் ததும்பிய சடையார்
கொள்ளும் அன்பினில் உருத்திரம் குறிப்பொடு
பயின்றார்."

தெள்ளு-தெளிவாக உள்ள. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. புனல்-அந்தப் பொய்கையில் நிரம்பியுள்ள நீர். கழுத்தளவு-தம்முடைய கழுத்தின் அளவில். ஆயிடை-அந்தப் பொய்கையில். பொய்கை-மனிதர் ஆக்காத நீர்நிலை. ச்: சந்தி. செறிய-இருக்க. உள்-அந்தப் பொய்கைக்கு உள்ளே. உற—அடையுமாறு. ப்: சந்தி. புக்கு—இறங்கி நின்று நின்று கொண்டு. கை-தம்முடைய கைகளை; ஒருமை பன்மை மயக்கம். உச்சிமேல்-தம்முடைய தலையின் மேல். குவித்து-கூப்பிச் சிவபெருமானைக்கும்பிட்டு. த்:சந்தி. தள்ளு-உந்தித் தள்ளும். வெண்-வெண்மையாகிய. திரை-அலைகளை வீசும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கங்கை-கங்கையாற்றின். நீர்-புனல். ததும்பிய-துளும்பித் தங்கிய. சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சிவபெருமானாரிடம். கொள்ளும்-தாம் கொண்டிருக்கும். அன்பினில்-பக்தியினால்; உருபு மயக்கம். உருத்திரம்-உருத்திரத்தை. குறிப்பொடு-தாம் குறித்த எண்ணத்தோடு. பயின்றார்-அந்த உருத்திர பசுபதி நாயனார் பலகாலும் ஓதினார்.

அடுத்து வரும் 7-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பொருள் தெரிவதற்கு அருமையாக உள்ள யஜுர் வேதத்தின் பிரயோசனமாகிய உருத்திரமாகிய அந்த மந்திரங்களை வருகின்ற முறைமையாகிய பெருமையைப் பெற்ற பகல் நேரத்திலும் இரவு நேரத்திலும் அந்த உருத்திர பசுபதி நாயனார் தவறாமல் அழகிய தாமரை மலரின் உச்சியில் அமர்ந்திருப்பவனாகிய பிரமதேவனைப் போன்றவராகிய அந்த நாயனார் சில தினங்கள் ஒருமைப்பாட்டோடு தம்முடைய திருவுள்ளத்தைச் செலுத்த அதைக் கண்டருளி

உமாதேவியைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்து மகிழ்ச்சியை அடைந்தவராகிய சிவபெருமானார் உவகையை அடைந்தருளினார்.' பாடல் வருமாறு:

"அரும றைப்பயன் ஆகிய உருத்திரம் அதனை
வருமு றைப்பெரும் பகலும் எல்லியும் வழுவாமே
திரும லர்ப்பொகுட் டிருந்தவன் அனையவர் சிலநாள்
ஒருமை உய்த்திட உமைஇடம் மகிழ்ந்தவர் உவந்தார்."

அரு-பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள. மறை-யஜுர் வேதத்தினுடைய. ப்:சந்தி. பயன்-பிரயோசனம். ஆகிய-ஆக உள்ள. உருத்திரம்-உருத்திரமாகிய அதனை-அந்த மந்திரங்களை; ஒருமை பன்மை மயக்கம். வரு-ஒவ்வொரு நாளும்வரும். முறை-முறைமையாகிய. ப்: சந்தி. பெரும்-பெருமையைப்பெற்ற.பகலும்-பகல்நேரத்திலும். எல்லியும்-இரவு நேரத்திலும். வழுவாமே-தவறாமல். திரு-அழகிய. மலர்ப் பொகுட்டு-தாமரை மலரின் உச்சியில். இருந்தவன்-அமர்ந்திருப்பவனாகிய பிரம தேவனை. அனையவர்-போன்றவராகிய அந்த உருத்திர பசுபதி நாயனார். சிலநாள்-சில தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஒருமை-ஒருமைப்பாட்டோடு. உய்த்திட-தம்முடைய திருவுள்ளத்தைச் செலுத்த. உமை-உமா தேவியை. இடம்-தம்முடைய வாம பாகத்தில். மகிழ்ந்தவர்-எழுந்தருளச் செய்து மகிழ்ச்சியை அடைந்தவராகிய சிவபெருமானார். உவந்தார் -உவகையை அடைந்தருளினார்.

அந்தணருக்குப் பிரமதேவன் உவமை: "கலைமகள் தலைமகன் இவனென வருபவர்." என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், "செம்மலர் மேல் வந்தெழுந்த அந்தணர் போல் தோன்றினார்." என்று சேக்கிழாரும், "வந்துமுனி எய்துதலும் மார் பினணியாரம். அந்தர தலத்திரவி அஞ்ச ஒளிவிஞ்சக், கந்தமல ரிற்கடவுள் தன்வரவு காணும் இந்திரன் எனக் கடிதெழுந்தான்." (கையடைப் படலம்,4), "வாச நாண் மலரோன் அன்னமாமுனி."

(தாடகை வதைப் படலம், 77), ''பூந்தண் சேக்கைப் புனிதனையே பொரு,வேய்ந்த கேண்மை சதானந்தனென்றெனும், வாய்ந்த மாதவன்.'', ''அலரியோன் தானும் நாணும் வடிவு.'' (மிதிலைக் காட்சிப் படலம், 87, 110), ''தாமரைக் கிழவனோ.'' (பிணி விடு படலம், 70) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பிறகு உள்ள 8-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'விருப்பத்தைப் பெற்ற பக்தராகிய உருத்திர பசுபதி நாயனாருடைய அருமையாகிய தவத்தினுடைய பெருமையையும் தாம் தெரிந்து கொண்டு சேர்ந்த வேதமந்திரங்களினுடைய நியதியினுடைய மிகுதியான நிலையையும் கண்டு விருப்பத்தை அடைந்து எல்லாத் தேவர்களுக்கும் முதல் தலைவராகிய சிவபெருமானார் விரும்பித் தம்முடைய திருவருளை வழங்க அந்த நாயனார் தீங்கு ஏதும் இல்லாத சிவபுரியாகிய கைலாசத்தின் எல்லையிற் சென்று சேர்ந்து விட்டார்.' பாடல் வருமாறு:

''காதல் அன்பர்தம் அருந்தவப் பெருமையும் கலந்த
வேத மந்திர நியதியின் மிகுதியும் விரும்பி
ஆதி நாயகர் அமர்ந்தருள் செய்ய மற்றவர்தாம்
தீதி லாநிலைச் சிவபுரி எல்லையிற் சேர்ந்தார்.''

காதல்-உருத்திரத்தை ஓதும் விருப்பத்தைப் பெற்ற. அன்பர் தம்-பக்தராகிய உருத்திர பசுபதி நாயனாருடைய; தம்: அசை நிலை. அரும்-அருமையாகப் புரிந்த. தவ-தவத்தினுடைய. ப்: சந்தி. பெருமையும்-பெருமையையும். கலந்த-தாம் தெரிந்து கொண்டு சேர்ந்த. வேத-யஜுர் வேதத்தில் உள்ள. மந்திர-உருத்திர மந்திரங்களை; ஒருமை பன்மை மயக்கம். நியதியின்-அவற்றிற்குரிய வரையறையோடு புரிந்த. மிகுதியும்-மிகுதியாகிய சிறப்பையும் கண்டு. விரும்பி-விருப்பத்தை அடைந்து. ஆதி நாயகர்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தலைவராகிய சிவபெருமானார். அமர்ந்து-விரும்பி. அருள்-தம்முடைய திருவருளை. செய்ய - வழங்க. மற்று: அசை

நிலை. அவர்தாம்-அந்த நாயனார். தாம்: அசை நிலை. தீது-ஒரு தீமையும். இலா-இல்லாத; இடைக்குறை. ச்: சந்தி. சிவபுரி-சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் சிவலோக பதவியின். எல்லையில் சேர்ந்தார் - எல்லைக்குள் சென்று சேர்ந்து விட்டார்.

பிறகு உள்ள 9-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நெடுங்காலமாக விளங்கும் பக்தியோடு உருத்திரத்தை ஓதி வந்த நிலையினால் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளுக்குப் பக்கத்தைச் சேர்ந்து பேரின்பம் அடையுமாறு அடைந்தனர்; அந்த நாயனாருக்குப் பெருமையையும் சீர்த்தியையும் பெற்ற உருத்திர பசுபதி நாயனாராகும் சேர்ந்த திருநாமமும் இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் வாழ்த்தி வணங்கும் வண்ணம் நடந்து வரலாயிற்று.' பாடல் வருமாறு:

"நீடும் அன்பினில் உருத்திரம் ஓதிய நிலையால்
ஆடு சேவடி அருகுற அணைந்தனர்; அவர்க்குப்
பாடு பெற்றசீர் உருத்திர பசுபதி யாராம்
கூடு நாமமும் நிகழ்ந்தது குவலயம் போற்ற."

நீடும்-நெடுங்காலமாக விளங்கும். அன்பினில்-பக்தியோடு; உருபு மயக்கம். உருத்திரம்-உருத்திரத்தை. ஓதிய-ஓதி வந்த. நிலையால்-நிலைமையினால். ஆடு-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும். சேவடி-நடராஜப் பெருமானாருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளுக்கு. அடி: ஒருமை பன்மை மயக்கம். அருகு-பக்கத்தை. உற-சேர்ந்து பேரின்பத்தை அடையுமாறு. அணைந்தனர்-அடைந்தனர். அவர்க்கு-அந்த நாயனாருக்கு. ப்: சந்தி. பாடு பெற்ற சீர்-பெருமையையும் சீர்த்தியையும் பெற்ற. உருத்திர பசுபதியாராம்-உருத்திர பசுபதி நாயனாராகும். கூடு-

சேர்ந்த. நாமமும்-திருநாமமும். குவலயம்-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். போற்ற-வாழ்த்தி வணங்கும் வண்ணம். நிகழ்ந்தது- நடந்து வரலாயிற்று.

அடுத்து வரும் 10-ஆம் பாடல் இந்த உருத்திர பசுபதி நாயனார் புராணத்தின் இறுதிப் பாடல். அதன் கருத்து வருமாறு:

'கூர்மையைக் கொண்ட மூன்று தலைகளைப் பெற்ற ஆயுதமாகிய திரிசூலத்தை ஏந்தியவராகிய நடராஜப் பெருமானாருடைய பக்கத்தில் அந்தப் பெருமானார் வழங்கிய திருவருளினால் பலகாலும் உருத்திரத்தை ஓதி வந்த உருத்திர பசுபதி நாயனாருடைய திருத்தொண்டின் இயல்பை வாழ்த்தி, திருமதிலைப் பெற்ற தில்லையாகிய சிதம்பரத்தினுடைய எல்லையில் திருநாளைப் போவார் நாயனாராகும் நல்ல செயல்களைப் பெற்ற தீண்டாதவராதலினால் ஆலயத்தின் வெளியிலிருந்து இறைவனை வணங்கும் நிலையை உடைய திருத்தொண்டருடைய தொண்டின் வகையை இனி மேல் அடியேம் பாடுவோம்.' பாடல் வருமாறு:

"அயில்கொள் முக்குடு மிப்படை யார்மருங் கருளால்
பயில்உ ருத்திர பசுபதி யார்திறம் பரசி
எயிலு டைத்தில்லை எல்லையில் நாளைப்போ வாராம்
செயலு டைப்புறத் திருத்தொண்டர் திறத்தினை
மொழிவாம்.'

இது அடுத்து வரும் திருநாளைப் போவார் நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகச் சேக்கிழார் பாடி அருளியது.

அயில்-கூர்மையை. கொள்-கொண்ட. முக்குடுமி-மூன்று தலைகளைப் பெற்ற. குடுமி: ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. படையார்-ஆயுதமாகிய திரிசூலத்தை ஏந்தியவராகிய நடராஜப் பெருமானாருடைய. மருங்கு-பக்கத்தில் அருளால்-அந்தப் பெருமானார் வழங்கிய திருவருளினால். பயில்-பலகாலும் உருத்திரத்தை ஓதி வந்த. உருத்திர பசுபதி

யார்-உருத்திர பசுபதி நாயனாருடைய. திறம்-திருத் தொண்டின் இயல்பை. பரசி-வாழ்த்திவிட்டு. எயில் உடை-திருமதிலைப் பெற்ற. த்: சந்தி. தில்லை-தில்லையாகிய சிதம்பரத்தினுடைய. எல்லையில் - எல்லையின் கண். நாளைப் போவாராம்-திருநாளைப் போவார் நாயனாராகும். செயல் உடை-நல்ல செயல்களைப் பெற்ற. செயல்: ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. புற-தீண்டாதவராதலின் ஆலயத்தின் வெளியிலிருந்து இறைவனை வணங்கும் நிலையை உடைய. த்: சந்தி. திருத்தொண்டர்—திருத்தொண்டருடைய. திறத்தினை-தொண்டின் வகையை. மொழிவாம்-இனிமேல் அடியேம் பாடுவோம்.

திருநாளைப் போவார் நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 4-ஆவதாக விளங்கும் மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் 4-ஆவதாக அமைந்திருப்பது திருநாளைப் போவார் நாயனார் புராணம். அதில் வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் பாராட்டிக் கீர்த்தியை வாழ்த்தும் பழமையானதும், நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்றதும் ஆகிய சிவத்தலமாகும் விளங்கிய நீர் ஓடும் கொள்ளிட ஆறு தன்னுடைய அலைகளாகிய கைகளால் தங்கத்தையும் செழுமையைப் பெற்ற மாணிக்கங்களையும் மொண்டு வந்து வழங்க அந்த ஆற்றினுடைய இரண்டு கரைகளின் பக்கங்களிலும் செந்தாமரை மலராகிய கையால் ஏற்றுக் கொள்ளும் அகலமாக உள்ள வயல்களைப் பெற்ற நல்ல சோழ நாட்டில் மேற்கானாடு என்னும் உள் நாட்டில் விளங்குவது ஆதனூர் ஆகும்.' பாடல் வருமாறு:

"பகர்ந்துலகு சீர்போற்றும் பழையவளம் பதியாகும்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிகள் திரைக்கரத்தால்

முகந்துதர இருமருங்கும் முளரிமலர்க் கைஏற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்கானாட் டாதனூர்.''

உலகு-இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். பகர்ந்து-பாராட்டி. சீர்-சீர்த்தியை. போற்றும்-வாழ்த்தும். பழைய-பழமையானதும்; வினையாலணையும் பெயர். வளம்-நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன் மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்றதுமாகிய; ஒருமை பன்மை மயக்கம், பதி ஆகும்-சிவத்தலம் ஆகும். திகழ்ந்த-விளங்கிய. புனல்-நீர் ஓடும். கொள்ளிடம்-கொள்ளிடமாகிய ஆறு. திரை-தன்னுடைய அலைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கரத்தால்-கைகளால்; ஒருமை பன்மை மயக்கம். பொன்-தங்கத்தையும். செழு - செழுமையைப் பெற்ற. மணிகள்-மாணிக்கங்களையும். முகந்து-மொண்டு கொண்டு வந்து. தர-வழங்க. இரு-இரண்டு. மருங்கும்-அந்த ஆற்றினுடைய கரைகளின் பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். முளரி மலர்-செந்தாமரை மலராகிய. கை-கையி னால். ஏற்கும்-ஏற்றுக் கொள்ளும். அகன்-அகலமாக உள்ள. பணை-வயல்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம், நீர் நன்னாட்டு-நல்ல சோழ நாட்டில். மேற்கானாட்டு-மேற்கானாடு என்னும் உள் நாட்டில். ஆதனூர்-விளங்குவது ஆதனூர் என்னும் ஊர் ஆகும்.

பிறகு வரும் 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சிவ பக்தர்கள் தங்களுடைய திருமேனிகளின் மேல் பூசிக்கொண்ட வீபூதியினால் மலரும் பெரிய பிரகாசம் நெருக்கமாகத் தோன்றும் அந்தச் சிவத்தலமாகிய ஆதனூரில் நிறைந்து வளர்ந்து நிற்கும் கரும்புச் செடிகளினுடைய சாற்றில் அலைகள் மோதும் வலிமையாகிய வரப்புக்களைப் பெற்ற வயல்களில் வெள்ளித் தகடுகளைப் போன்ற வரால் மீன்கள் துள்ளி எழக் காளை மாடுகளைப் பூட்டிய ஏர்களி னுடைய வலிமையைப் பெற்ற கொழுக்கள் உழுத சால்களின்

வழியே சென்று தளர்ச்சியை அடைந்து தங்கள் மேல் ஏறிச் சேற்றில் வாழும் நண்டுகள் கருப்பத்திலிருந்து குஞ்சுகளை ஈனும் வண்ணம் நறுமணத்தை வெளிப்படுத்தும் செழுமையைப் பெற்ற தாமரை மலர்கள்.' பாடல் வருமாறு:

"நீற்றலர்பே ரொளிநெருங்கும் அப்பதியின் நிறைகரும்பின்
சாற்றலைவன் குலைவயலில் தகட்டுவரால் எழப்பகட்டேர்
ஆற்றலவன் கொழுக்கிழித்த சால்வழிபோய் அசைந்தேறிச்
சேற்றலவன் கருவுயிர்க்க முருகுயிர்க்கும் செழுங்கமலம்."

நீற்று-சிவபக்தர்கள் தங்களுடைய திருமேனிகளின் மேற் பூசிக்கொண்ட விபூதியினால். அலர்-மலரும். பேரொளி-பெரிய பிரகாசம். நெருங்கும்-நெருக்கமாகத் தோன்றும். அப்பதியின்-அந்தச் சிவத்தலமாகிய ஆதனூரில். நிறை-நிறைந்து வளர்ந்து நிற்கும். கரும்பின்-கரும்புச் செடிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். சாற்று-சாற்றில். அலை-அலைகள் மோதும்; ஒருமை பன்மை மயக்கம். வன்-வலிமையை உடைய. குலை-வரப்புக்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். வயலில்-வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். தகட்டு-வெள்ளித் தகடுகளைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். வரால்-வரால் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். எழ-துள்ளி எழ. ப்: சந்தி. பகட்டு-காளை மாடுகளைப் பூட்டிய; ஒருமை பன்மை மயக்கம். ஏர்-ஏர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வன்-வலிமையைப் பெற்ற. கொழு-கலப்பைகளின் முனைகளாகிய கொழுக்கள்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கிழித்த-உழுத. சால்-சால்களின்; ஒருமை பன்மை மயக்கம். சால்-உழுதசுவடு. வழி-வழியே. போய்-சென்று. அசைந்து-தளர்ச்சியை அடைந்து. கருப்பத்தை உடைமையால் தளர்ச்சியை அடைந்தன. ஏறி-தங்கள் மேல் ஏறி. ச்:சந்தி. சேற்று-வயல்களில் உள்ள சேற்றில் வாழும். அலவன்-நண்டுகள்;

ஒருமை பன்மை மயக்கம். கருஉயிர்க்க-தங்களுடைய கருப் பத்திலிருந்து குஞ்சுகளை ஈனும் வண்ணம். முருகு-நறு மணத்தை. செழும்-செழுமையைப் பெற்ற. கமலம்-தாமரை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். உயிர்க்கும்-வெளிப் படுத்தும்.

வயலில் சேற்றில் வாழும் நண்டு தாமரை மலரில் ஏறிக் கருவுயிர்க்கும் என்ற செய்தி குறிப்பாகத் திரு நாளைப் போவார் நாயனாருடைய வாழ்க்கையைப் புலப்படுத்தும். தாம் வாழும் புலைச் சேரியிலிருந்து புறப்பட்டுச் சிதம்பரத் தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திரு நடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாருடைய செந் தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளில் அந்த நாயனார் சேர்ந்ததைப் புலப்படுத்துகிறது.

அடுத்து வரும் 3-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

"அரும்புகள் பொருந்தியிருக்கும் கிளைகள் செறிந்து நறுமணம் சுற்றி நெருங்கிய தளிர்களில் சூரிய மண்டலம் தன்னுடைய கிரணங்களால் தடவும் செழுமையைப் பெற்ற பலவகை மரங்களினுடைய கூட்டம் பெருக வளர்ந்து நின்று மேகங்கள் தவழ்ந்து அசைந்து அலையக் களிப்பைப் பெற்ற வண்டுகள் பக்கங்களில் சுற்றி மொய்க்கும் வண்ணம் நீர் மாரியோ, தேன் மாரியோ, பொழிவதை ஒழியாமல் விளங்குபவை அந்த ஆதனூரில் உள்ள பூம்பொழில்கள்." பாடல் வருமாறு:

"நனைமருவும் சினைபொதுளி நறுவிரைசூழ் செறிதளிரில்
தினகரமண் டலம்வருடும் செழுந்தருவின் குலம்பெருகிக்
கனம்மருவி அசைந்தலையக் களிவண்டு புடைசூழப்
புனல்மழையோ? மதுமழையோ? பொழிவொழியா
பூஞ்சோலை."

நனை-அரும்புகள்; ஒருமை பன்மை மயக்கம். மருவும்- பொருந்தியிருக்கும். சினை-கிளைகள்; ஒருமை பன்மை

மயக்கம். பொதுளி-செறிந்து. நறுவிரை-நறுமணம். சூழ்-சுற்றி. செறி-நெருங்கிய. தளிரில்-தளிர்களில்; ஒருமை பன்மை மயக்கம். தளிர்-முற்றாத இலை. தினகர மண்டலம்-சூரிய மண்டலம். மண்டலம்-வட்டம். வருடும்-தன்னுடைய கிரணங்களால் தடவும். செழும்-செழுமையைப் பெற்ற. தருவின்-பல வகை மரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், மருத மரம், விளா மரம், வில்வ மரம், புளிய மரம், மா மரம், பலா மரம், பலவகை வாழை மரங்கள், தென்னை மரம், பனை மரம், மகிழ மரம், கடம்ப மரம், தமால மரம், வேப்ப மரம், வாத நாராயண மரம், பவள மல்லிகை மரம், அசோக மரம், நெட்டிலிங்க மரம் முதலியவை. குலம்-கூட்டம். பெருகி-பெருக வளர்ந்து நின்று. க்:சந்தி. கனம்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மருவி-தவழ்ந்து. அசைந்து அலைய - அசைந்து அலைந்து நிற்க. க்: சந்தி. களி- களிப்பைப் பெற்ற. வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். புடை-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். சூழ-சுற்றி மொய்க்கும் வண்ணம். ப்:சந்தி. புனல் மழையோ-நீர் மாரியோ. மது மழையோ—தேன் மாரியோ. பொழிவு-அந்த இரண்டு மாரிகளும் பொழிவதை. ஒழியா-ஒழியாமல் விளங்குபவை. பூஞ்சோலை-அந்த ஆதனூரில் உள்ள பூம்பொழில்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 4-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'பாளைகள் விரிந்த நறுமணத்தை வீசும் பசுமையான காய்களை உடைய வலிமையான குலைகளைப் பெற்ற தென்ன மரங்களினுடைய அடிகள் அதிருமாறு அவற்றின் மேல் மோதி விசாலமான கிடங்குகளில் எழுமாறு துள்ளிப் பாய்ந்த வாளை மீன்கள் மறையும் வண்ணம் அவற்றின் மேல் உதிர்ந்த தேங்காய்கள் மிதந்து கொண்டு இருக்க, வளமையைப் பெற்ற பலா மரங்களில் பழுத்திருக்கும் நீள

மாகி முதிர்ச்சியைப் பெற்ற பழங்கள் வெடித்ததனால் ஒழுகிய தேன் வெள்ளத்திலிருந்து அந்த வாளை மீன்கள் எழுந்து துள்ளும்.' பாடல் வருமாறு:

"பாளைவிரி மணம்கமழும் பைங்காய்வன் குலைத்தெங்கின்
தாள்அதிர மிசைமுட்டித் தடங்கிடங்கின் எழப்பாய்ந்த
வாளைபுதை யச்சொரிந்த பழம்மிதப்ப வண்பலவின்
நீள்முதிர் கனிகிழிதேன் நீத்தத்தில் எழுந்துகளும்."

பாளை-பாளைகள்; ஒருமை பன்மை மயக்கம். விரி-விரிந்த; பரவிய. மணம்-நறுமணத்தை. கமழும்-வீசும். பைம்-பசுமையான. காய்-காய்களை உடைய; ஒருமை பன்மை மயக்கம். வன்-வலிமையான. குலை-குலைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தெங்கின்-தென்ன மரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தாள்-அடிகள்; ஒருமை பன்மை மயக்கம். அதிர-அதிருமாறு. மிசை-அவற்றின் மேல். முட்டி-மோதி. த்: சந்தி. தடம்-விசாலமான. கிடங்கின்-கிடங்குகளில்; ஒருமை பன்மை மயக்கம். கிடங்கு-நீ-தேங்கியிருக்கும் பள்ளம். எழ-எழுமாறு. ப்:சந்தி. பாய்ந்த-துள்ளிப் பாய்ந்த. வாளை-வாளை மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். புதைய-மறையும் வண்ணம். ச்:சந்தி. சொரிந்த-அவற்றின் மேல் உதிர்ந்த. பழம்-தேங்காய்கள்; ஒருமை பன்மை மயக்கம். முற்றின தேங்காயை தென்னம் பழம் என்பது மரபு; "தென்னம் பழமவீழ்சோணாடா" என் வருதலைக் காண்க. மிதப்ப-மிதந்து கொண்டிருக்க. வண்-வளப்பத்தைப் பெற்ற. பலவின்-பலா மரங்களில் பழுத்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நீள-நீளமான. முதிர்-முதிர்ச்சியைப் பெற்ற. கனி-பழங்கள்; ஒருமை பன்மை மயக்கம். கிழி-வெடித்ததனால் ஒழுகிய. தேன் நீத்தத்தில்-தேன் வெள்ளத்திலிருந்து; உருபு மயக்கம். எழுந்து-அந்த வாளை மீன்கள் எழுந்து. உகளும்-துள்ளும்.

அடுத்து வரும் 5-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

''வயல்களில் உண்டாகும் சம்பா நெற்கள், குறுவை நெற்கள், பிற வகை நெற்கள் ஆகிய வளங்களும், வைத்து வளர்க்கும் செயலால் வளரும் பசுமையான தோட்டங்களில் உண்டாகி வரும் தேங்காய்கள், மாம் பழங்கள், பலாப் பழங்கள், விளாம் பழங்கள், பழவகை வாழைப் பழங்கள், இலந்தைப் பழங்கள் முதலிய வளங்களும், பரந்த இடங்கள் எங்கும் நிறைந்து விளங்க மிகுதியாக அமைந்த பெரிய செல்வங்களை உடையவை ஆகும், மேகங்கள் வந்து தவழும் மாடங்கள் தோற்றப் பொலிவை அடைய மிகுதியைப் பெற்ற தாகி பக்கத்தில் உள்ள ஊர்களிலிருந்து வேறாக உள்ள மக்கள் இங்கே வந்து தங்களுடைய திருவடிகளில் நெருங்கி வணங்குமாறு குடிமக்கள் நெருக்கமாக அமைந்து இருப்பது அந்த ஆதனூர் என்னும் ஊர் ஆகும்.' பாடல் வருமாறு:

''வயல்வளமும் செயல்படுபைந் துடவையிடை வருவளமும்
வியலிடமெங் கணும்நிறைய மிக்கபெரும் திருவினவாம்
புயலடையும் மாடங்கள் பொலிவெய்த மலிவுடைத்தாய்
அயலிடைவே றடிநெருங்கக் குடிநெருங்கி உளதவ்வூர்.''

வயல்-வயல்களில் உண்டாகும்; ஒருமை பன்மை மயக்கம். வளமும்-சம்பா நெற்கள், குறுவை நெற்கள், பிறவகை நெற்கள் ஆகிய பல வளங்களும்; ஒருமை பன்மை மயக்கம். செயல்-வைத்து வளர்க்கும் செயலால். படு-வளரும். பைம்-பசுமையான. துடவையிடை - தோட்டங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வரும்-உண்டாகி வரும். வளமும்-தேங் காய்கள், மாம் பழங்கள், பலாப் பழங்கள், விளாம் பழங்கள், பலவகையான வாழைப் பழங்கள், இலந்தைப் பழங்கள், நாவற் பழங்கள், புளியம் பழங்கள் முதலிய வளங்களும்; ஒருமை பன்மை மயக்கம். வியல்-பரவலான, இடம்-இடங் கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கணும்-எங்கும். நிறைய-நிறைந்து விளங்க. மிக்க-மிகுதியைப் பெற்ற. பெரும்-பெரிய. திருவினவாம்-செல்வங்களை உடையவை ஆகும். திரு:

ஒருமை பன்மை மயக்கம். 'செல்வத்தைப் படைத்தவர்கள்' எனலும் ஆம்; திணை மயக்கம். புயல்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அடையும்-வந்து தவழும். மாடங்கள் பொலிவு-மாடங்கள் தோற்றப் பொலிவை. எய்த-அடைய. மலிவு-மிகுதியை. உடைத்தாய்-பெற்றதாகி. அயலிடை-பக்கத்தில் உள்ள ஊர்களிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். வேறு-வேறாக உள்ள மக்கள்; ஆகு பெயர். அடி-தங்களுடைய திருவடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். நெருங்க-நெருக்கமாக வந்து வணங்குமாறு. க்: சந்தி. குடி-குடிமக்கள்; ஒருமை பன்மை மயக்கம். நெருங்கி-நெருக்கமாக அமைந்து. உளது-இருப்பது: இடைக்குறை. அவ்வூர்-அந்த ஆதனூர் ஆகும்.

பிறகு வரும் 6-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த ஆதனூரில் உள்ள வெளியிடத்தில் இருக்கிற வயல்களுக்குப் பக்கத்தில் பெரியதாக விளங்கும், செய்த கரையில் உறவினர்கள் விழைகின்ற உரிமையைப் பெற்ற வேலையைச் செய்யும் உழவர்களின் சாதி நெருங்கிப் பற்றிக் கொண்ட பசுமையான சுரைச் செடிகள் மேலே படர்ந்து ஓடிய பழமையான கூரைகளைப் பெற்ற புற்களால் அமைந்த குடிசைகளாகிய சிறிய வீடுகள் பல நிறைந்து இருப்பது ஒரு புலைச்சேரி.' பாடல் வருமாறு:

"மற்றவ்வூர்ப் புறம்பணையின் வயல்மருங்கு பெருங்குலையில்
சுற்றம்விரும் பியகிழமைத் தொழில்உழவர் சினைதுவன்றிப்
பற்றியபைங் கொடிச்சுரைமேற் படர்ந்தபழம் கூரையுடைப்
புற்குரம்பைச் சிற்றில்பல நிறைந்துளதோர் புலைப்பாடி."

மற்று: அசை நிலை. அவ்வூர்-அந்த ஆதனூரில் உள்ள. புறம்பணையின்-வெளியிடத்தில் இருக்கிற. வயல்-வயல்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-பக்கத்தில். பெரும்-பெரியதாக விளங்கும். குலையில்-செய்த கரையில்.

சுற்றம்-தங்களுடைய உறவினர்கள்; திணை மயக்கம். விரும்பிய-விழைந்த. கிழமை-உரிமையைப் பெற்ற. த்:சந்தி. தொழில்-உழவு வேலையைச் செய்யும். உழவர்-உழவர்களின்; ஒருமை பன்மை மயக்கம். கிளை-சாதி. துவன்றி-நெருங்கி. ப்:சந்தி. பற்றிய-பற்றிக் கொண்ட. பைம்-பசுமையாக இருக்கும். கொடிச்சுரை-சுரைக் கொடிகள்; ஒருமை பன்மை மயக்கம். மேல்-மேலே. படர்ந்த-படர்ந்து ஓடிய. பழம்-பழமையான. கூரை-கூரைகளை; ஒருமை பன்மை மயக்கம். உடை-பெற்ற. ப்: சந்தி. புல்-புற்களால் அமைந்த; ஒருமை பன்மை மயக்கம். குரம்பை-குடிசைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சிற்றில் பல-பல சிறிய வீடுகள். இல்: ஒருமை பன்மை மயக்கம். நிறைந்து உளது-நிறைந்திருப்பது. உளது: இடைக்குறை. ஓர்-ஒரு. புலைப்பாடி-புலையர்கள் வாழும் சேரி.

பின்பு உள்ள 7-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'கூர்மையான நகங்களையும் மென்மையான கால்களையும் பெற்ற கோழிகளினுடைய சிறிய குஞ்சுகளின் கூட்டம் சுற்றி வந்து திரியும் தோல்வார்கள் கிடக்கும் அந்தக் குடிசைகளின் முற்றங்களில் நின்று கொண்டிருந்த வண்மையைப் பெற்ற நகங்களை உடைய நாய்களின் துள்ளிக் குதிக்கும் குட்டிகள் கருமையான இரும்பினாற் செய்யப் பெற்ற வளைகள் செறிந்த கைகளைப் பெற்ற கரிய நிறத்தைக் கொண்ட சிறுவர்கள் கவர்ந்து கொண்டு ஓட நிரம்பியுள்ள மெல்லிய அந்த நாய்க் குட்டிகளின் குரைப்பின் ஒலியை அந்தச் சிறுவர்கள் தங்களுடைய இடுப்புக்களில் கட்டியிருக்கும் இரும்பாலாகிய மணிகள் அடக்கி விடும்.' பாடல் வருமாறு:

" கூருகிர்மெல் லடியளகின் குறும்பார்ப்புக் குழூச்சுழலும்
வார்பயில்முன் றிலில்நின்ற வள்ளுகிர்நாய்த் துள்ளுபறழ்

காரிரும்பின் சரிசெறிகைக் கருஞ்சிறார் கவர்ந்தோட
ஆர்சிறுமென் குரைப்படக்கும் அரைக்கசைத்த
இருப்புமணி.''

கூர்-கூர்மையான. உகிர்-நகங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மெல்-மென்மையான. அடி-கால்களையும் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். அளகின்-பெட்டைக் கோழிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குறும்-சிறிய. பார்ப்பு-குஞ்சுகளின்; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. குழு-கூட்டம். ச்:சந்தி. சுழலும்-சுற்றி வந்து திரியும். வார்-தோல்வார்கள்; ஒருமை பன்மை மயக்கம். பயில்-கிடக்கும். முன்றிலில்-அந்தக் குடிசைகளின் முற்றங்களில்; ஒருமை பன்மை மயக்கம். முன்றில்-இல்முன்; முன் பின்னாகத் தொக்க தொகை. நின்ற-நின்று கொண்டிருந்த. வள்-பெரிய. உகிர்-நகங்களை உடைய; ஒருமை பன்மை மயக்கம். நாய்-பெண் நாய்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. துள்ளு-துள்ளிக் குதிக்கும். பறழ்-குட்டிகள்; ஒருமை பன்மை மயக்கம். கார்-கருமையான. இரும்பின்-இரும்பினாற் செய்த. சரி-வளைகள்; ஒருமை பன்மை மயக்கம். செறி-செறிந்த. கை-கைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கரும்-கரிய நிறத்தைக் கொண்டிருக்கும். சிறார்-சிறுவர்கள். கவர்ந்து-அந்த நாய்க்குட்டிகளைக் கவர்ந்து கொண்டு. ஓடஆர்-ஓட நிரம்பியுள்ள. மென்-மெல்லிய. குரைப்பு-அந்த நாய்க்குட்டிகளின் குரைப்பின் ஒலியை. அரைக்கு-அந்தச் சிறுவர்கள் தங்களுடைய இடுப்புக்களில்; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். அசைத்த-கட்டியுள்ள. இருப்பு-இரும்பாலாகிய. மணி-மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். அடக்கும்-அடக்கி விடும்.

பிறகு வரும் 8-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வன்மையாக உள்ள சிறிய தோலின் மேல் உழத்தி தன்னுடைய குழந்தையை உறங்கச் செய்யும் நிழலைத் தரும்

மருத மரமும் தன்னுடைய கருப்பத்தைப் பெற்ற மென்மை யான பெண் விலங்கு ஒடுங்கித் துயிலும் விசாலமான பானை யைப் புதைத்த நிழலைக் கொண்ட மெல்லிய கிளைகளை உடைய வஞ்சி மரங்களும் இறுகக் கட்டிய பறை தொங்கின மாமரமும், பொலிவில்லாத புல்லிய தலையைக் கொண்ட பெண் நாய் ஈன்றணிமையைக் கொண்டதாகத் துயிலும் பொந்தினைக் கொண்ட பருத்த அடிமரத்தைப் பெற்ற தென்ன மரமும் எந்த இடங்களிலும் உடையது அந்த ஆதனூர். பாடல் வருமாறு:

"வன்சிறுதோல் மிசையுழத்தி மகவுறக்கும் நிழல்மருதும்
தன்சினைமென் பெடைஒடுங்கும் தடங்குழிசிப் புதைநீழல்
மென்சினைய வஞ்சிகளும் விசிப்பறைதூங் கினமாவும்
புன்றலைநாய்ப் புனிற்றுமுழைப் புடைத்தெங்கும் உடைத்
தெங்கும்."

வன்-வன்மையாக உள்ள. சிறு-சிறிய. தோல்மிசை-தோலின் மேல். உழத்தி-உழவர் குலப் பெண். மகவு-தன்னு டைய குழந்தையை. உறக்கும்-உறங்கச் செய்யும். நிழல்-நிழலைப் பரப்பும். மருதும்-மருத மரத்தையும். தன்-தன்னு டைய. சினை-கருப்பத்தைக் கொண்ட. மென்-மென்மை யான. பெடை-பெண் விலங்கு. ஒடுங்கும்-ஒடுங்கித் துயிலும். தடம்-விசாலமாக இருக்கும். குழிசி-பானையை. ப்:சந்தி. புதை-புதைத்த. நீழல்-நிழலைப் பரப்பும். மென்-மென்மை யான. சினைய-கிளைகளை உடைய; ஒருமை பன்மை மயக்கம். வஞ்சிகளும்-வஞ்சி மரங்களையும். விசி-இறுகக் கட்டியுள்ள. ப்:சந்தி. பறை-அடிக்கும் பறை. தூங்கின-தொங்கின. மாவும்-மாமரத்தையும். புன்-புன்மையான பொலிவற்ற. தலை-தலையைக் கொண்ட. நாய்-பெண் நாய். புனிற்று-ஈன்றணிமையைக் கொண்டதாகத் துயிலும். முழை-பொந்தினைக் கொண்ட. ப்:சந்தி. புடை-பருத்த அடி மரத்தைப் பெற்ற. த்:சந்தி. தெங்கும்-தென்ன மரத்தையும்.

எங்கும்-எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். உடைத்து-உடையது அந்த ஆதனூர்.

பின்பு உள்ள 9-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'செறிந்த வலிமையையும் உறுதியையும் பெற்ற இழிந்த குல மக்களாகிய பள்ளர்கள் தங்களுடைய வேலைகளாகிய பணிகளைச் செய்யும் விடியற் காலமாகிய கடை யாமத்தின் அடையாளத்தைத் தெரிந்து கொள்ளுமாறு கூவும் சிவந்த உச்சிக் கொண்டையைப் பெற்ற கோழியானது தங்கும் இடத்தில் நறுமணம் கமழும் மலர்கள் மலர்ந்த குளிர்ச்சியைப் பெற்ற கிளைகளைக் கொண்ட காஞ்சி மரத்தினுடைய பரவிய நிழலின் பக்கத்தில் எல்லாம் நெளிகளைக் கொண்ட கூந்தல்களை உடைய புல்லிய பொலிவற்ற புலையர் வாழ்க்கைப் பெண்மணிகள் நெற்களை உரலில் இட்டுக் குற்றும் போது பாடும் வள்ளைப் பாட்டினுடைய சத்தம் அந்த ஆதனூரில் பரவிக் கேட்கும்.' பாட்டு வருமாறு:

"செறிவலித்திண் கடைஞர்வினைச் செயல்புரிவை
கறையாமக்
குறிஅளக்க உளைக்கும்செங் குடுமிவா ரணச்சேக்கை
வெறிமலர்த்தண் சினைக்காஞ்சி விரிநீழல் மருங்கெல்லாம்
நெறிகுழற்புன் புலைமகளிர் நெற்குறுபாட் டொலி
பரக்கும்."

செறி-செறிந்த. வலி-வலிமையையும். த்:சந்தி. திண்-உறுதியையும் பெற்ற. கடைஞர்-இழிந்த குல மக்களாகிய பள்ளர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வினை-தங்களுடைய வேலைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செயல்-பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். புரி-செய்யும். வைகறை - விடியற்காலமாகிய. யாம - கடை யாமத்தின். க்:சந்தி. குறி-அடையாளத்தை. அளக்க-தெரிந்து கொள்ளுமாறு. உளைக்கும்-கூவும். செம்-சிவப்பாக இருக்கும். குடுமி-உச்சிக் கொண்டையைப் பெற்ற. வாரண-சேவற் கோழி. ச்: சந்தி. சேக்கை-தங்கும் இடத்தில். வெறி-நறுமணம்

கமழும். மலர்-மலர்கள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. சினை-கிளைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. காஞ்சி-காஞ்சி மரத்தினுடைய. விரி-பரவிய. நீழல்-நிழலின். மருங்குஎல்லாம் -பக்கத்தில் எங்கும் .நெற்-நெளிகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். குழல்-கூந்தல்களை உடைய; ஒருமை பன்மை மயக்கம். புன்-புல்லிய பொலிவற்ற. புலை மகளிர்-புலையர் சாதியிற் பிறந்த பெண்மணிகள். நெல்-நெற்களை; ஒருமை பன்மை மயக்கம். குறு-உரலில் இட்டுக் குற்றும் போது பாடும். பாட்டு-வள்ளைப் பாட்டினுடைய. ஒலி-சத்தம். பரக்கும்-அந்த ஆதனூரில் பரவிக் கேட்கும்.

அடுத்து உள்ள 10-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நாரை, கொக்கு, மீன்கொத்திப் பறவை முதலிய பறவைகளும் குளிர்ச்சியைப் பெற்ற நீரில் கூவும் பொய்கையை உடைய இடங்கள் எவ்விடத்திலும் காணப்படும்; தள்ளி விழும் தங்களுடைய கால்களால் நடக்கும் நடை அந்தப் பள்ளிகளுக்குத் தளர்ச்சியை அடைய கட்டு அவிழ்ந்த குவளை மலரிலிருந்து தேன் ஒழுகும்; பசுமையான தங்களுடைய கூந்தல்களில் நெற்கதிர்களை அணிந்த புல்லிய பொலிவற்ற தோற்றத்தைக் கொண்ட புலையர் சாதிப் பெண்மணிகள் கள்ளைக் குடித்து விட்டு அந்த மயக்கத்தால் உறங்க முழங்கும் பறையும் பேரொலியை அந்த ஆதனூரில்எழுப்பும்.' பாடல் வருமாறு:

''புள்ளும்தண் புனற்கலிக்கும் பொய்கையுடைப் புடை எங்கும்
தள்ளும்தாள் நடைஅசையத் தளைஅவிழ்பூங் குவளை மது
விள்ளும்பைங் குழற்கதிர்நெல் மிலைச்சியபுன் புலைச்சியர்கள்
கள்ளுண்டு களிதூங்கக் கறங்குபறை யும்கலிக்கும்.''

புள்ளும்-நாரை, கொக்கு, மீன் கொத்திப் பறவை முதலிய பறவைகளும்; ஒருமை பன்மை மயக்கம். தண்-

குளிர்ச்சியைப் பெற்ற. புனல்-நீரில். கலிக்கும்-கூவும். பொய்கையுடை-பொய்கையை உடைய. பொய்கை-மனிதர் ஆக்காத நீர்நிலை. ப்: சந்தி. புடை-இடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எந்த இடத்திலும் காணப்படும். தள்ளும்-தள்ளிவிழும். தாள்-தங்களுடைய கால்களால்; ஒருமை பன்மை மயக்கம். நடை-நடக்கும் நடை அந்தப் பள்ளிகளுக்கு. அசைய-தளர்ச்சியை அடைய. த்:சந்தி. தளை-கட்டு. அவிழ்-அவிழ்ந்து மலர்ந்த. பூங்குவளை-குவளை மலரிலிருந்து. மது-தேன். விள்ளும்-ஒழுகும். பைம்-பசுமையான; கருமையான. குழல்-தங்களுடைய கூந்தல்களில் ஒருமை பன்மை மயக்கம். கதிர் நெல்-நெற்கதிர்களை; ஒருமை பன்மை மயக்கம். மிலைச்சிய-சூடிய. புன்-பொலிவற்ற தோற்றத்தைக் கொண்ட .புலைச்சியர்கள்-புலையர் சாதியிற் பிறந்த பெண்மணிகள். கள்-கள்ளை. உண்டு-குடித்து விட்டு. களி-அந்த மயக்கத்தால். தூங்க-உறங்க. க்:சந்தி. கறங்கும்-முழங்கும். பறையும் கலிக்கும்-பறையும் அந்த ஆதனூரில் பேரொலியை எழுப்பும்.

அடுத்து உள்ள 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இத்தகையதாக உள்ள இழிகுல மக்கள் வாழும் இடத்தின் எல்லையில் வாழ்பவர், உண்மையான பக்தி சிவபெருமானுடைய வெற்றிக்கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளுக்கே உண்டாகிய உணர்ச்சியோடும் ஆதனூரில் திருவவதாரம் செய்தருளியவர்; அந்த ஆதனூரில் ஊருக்குரிய புலைத் தன்மை அமைந்த தொழில் உரிமையை உடையவர்; தமக்கு நிகர் யாரும் இல்லாதவர்; நந்தனார் என்று திருநாமத்தைப் பெற்ற ஒரு புலையர் இருப்பவராயினார்.' பாடல் வருமாறு:

"இப்படித்தா கியகடைஞர் இருப்பின்வரைப் பினின்
வாழ்வார்;
மெய்ப்பரிவு சிவன்கழற்கே விளைந்தஉணர் வொடும்
வந்தார்

அப்பதியில் ஊர்ப்புலைமை ஆன்றதொழில் தாயத்தார்;
ஒப்பிலவர்; நந்தனார் எனஒருவர் உளரானார்.''

இப்படித்தாகிய-இத்தகையதாக உள்ள. கடைஞர்-இழி குல மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். இருப்பின்-வாழும் இடத்தின். வரைப்பினின்-எல்லையில். வாழ்வார்-வாழ்பவர். மெய்-உண்மையான. ப்: சந்தி. பரிவு-பக்தி. சிவன்-நடராஜப் பெருமானுடைய. கழற்கே-வெற்றிக் கழலைப் பூண்டு விளங் கும் திருவடிகளுக்கே; ஆகு பெயர். விளைந்த-தம்முடைய திரு வுள்ளத்தில் உண்டாகிய. உணர்வொடும்-உணர்ச்சியோடும். வந்தார்-திருவவதாரம் செய்தருளியவர். அப்பதியில்-அந்த ஆதனூரில். ஊர்-ஊருக்குரிய. ப்: சந்தி. புலைமை-புலைத் தன்மை. ஆன்ற-அமைந்த. தொழில்-வேலையில். தாயத் தார்-உரிமையை உடையவர். ஒப்பிலவர்-அவருக்கு நிகர் இல்லாதவராகிய. நந்தனார் என-நந்தனார் என்ற திருநாமத்தைப் பெற்ற. என: இடைக்குறை. ஒருவர்-ஒரு புலையர். உளரானார் - இருப்பவராயினார். உளர் இடைக்குறை.

பிறகு வரும் 12-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தாம் ஆதனூரில் திருவவதாரம் செய்தருளி உணர்ச்சி ஆரம்பமான பிறகு பிறைச்சந்திரனாகிய கண்ணியைச் சூடும் பெருமையையும் தகுதியையும் பெற்றவராகிய நடராஜப் பெருமானாரிடத்தில் சிறப்பாக அமைந்த பெரியதாக இருக் கும் விருப்பத்தோடு, நேர்மையாகிய செயல்களைச் செய்யும் திருவுள்ளத்தை உடையவராய், மறந்தும் வேறு ஒரு நினைவும் இல்லாமல் தாம் பிறந்த பிறப்பினுடைய வழியில் தமக்குக் கிடைத்த தருமங்களைச் செய்யும் மேற்கோளைப் பெற்றவ ராகவே அந்த நடராஜப் பெருமானாருடைய திருவடிகளுக்கு உரிய திருத்தொண்டுகளின் வழியில் அந்த நந்தனார் நிலை யாக நின்றார்.' பாடல் வருமாறு:

'' பிறந்துணர்வு தொடங்கியபின் பிறைக்கண்ணிப் பெருந்
தகைபால்

சிறந்தபெரும் காதலினால் செம்மைபுரி சிந்தையராய்
மறந்தும் அயல்நினைவின்றி வருபிறப்பின் வழிவந்த
அறம்புரிகொள் கையராயே அடித்தொண்டின் நெறி
நின்றார்.''

பிறந்து-தாம் ஆதனூரில் திருவவதாரம் செய்தருளி. உணர்வு-உணர்ச்சி. தொடங்கிய-ஆரம்பமாகிய. பின்-பிறகு. பிறைக் கண்ணி-பிறைச் சந்திரனாகிய கண்ணியைச் சூடும். கண்ணி-தலைமாலை. பிறையைக் கண்ணி என்று குறிப்பிடும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்: ஆண்டுக் கண்டுணர்க. ப்:சந்தி. பெரும்-பெருமையையும். தகைபால்-தகுதியையும் பெற்றவராகிய நடராஜப் பெருமானாரிடத்தில். சிறந்த-சிறப்பாக அமைந்த. பெரும்-பெரியதாக இருக்கும். காதலினால் - விருப்பத்தோடு; உருபு மயக்கம். செம்மை-நேர்மையான செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். புரி-செய்யும். சிந்தையராய்-திருவுள்ளத்தைப் பெற்றவராகி. மறந்தும் அயல்-மறந்தும் வேறு. நினைவு-எண்ணம். இன்றி-இல்லாமல். வரு-தாம் பிறந்த. பிறப்பின்-பிறப்பினுடைய. வழி-வழியில். வந்த-தமக்குக் கிடைத்த. அறம்-தருமங்களை; ஒருமை பன்மை மயக்கம். புரி-செய்யும். கொள்கையராயே-மேற்கோளைப் பெற்றவராகவே. அடி-அந்த நடராஜப் பெருமானாருடைய திருவடிகளுக்கு உரிய; ஒருமை பன்மை மயக்கம் த்:சந்தி. தொண்டின்-திருத்தொண்டுகளின்; ஒருமை பன்மை மயக்கம். நெறி-வழியில். நின்றார்-அந்த நந்தனார் நிலையாக நின்றார்.

பிறகு உள்ள 13-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த ஆதனூரில் இறையிலி நிலமாக விடும் பறையர்களுக்கு உரிய தோட்டத்தைத் தம்முடைய உணவுக்குரிய பொருள்களை வழங்கும் இடமாகப் பெற்றுக் கொண்டு அந்தச் சார்பினில் உண்டாகும் வேலைகளைப் புரிபவராகி திருத்தொண்டுகளில் தலைசிறந்து அந்த நந்தனார் நின்றார்; கூர்மையான இலைகளைப் பெற்ற மூன்று தலைகளைக்

கொண்ட ஆயுதமாகிய திரிசூலத்தை ஏந்திய தலைவனாகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் ஒவ்வோர் ஆலயத்திற்கும் பேரிகை முதலாகிய அடிக்கும் பக்கங்களைப் பெற்ற இசைக் கருவிகளாகிய மற்றவற்றிற்கும்.' பாடல் வருமாறு:

" ஊரில்விடும் பறைத்துடவை உணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வரும் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினில்;
கூரிலைய முக்குடுமிப் படைஅண்ணல் கோயில்தொறும்
பேரிகையே முதலாய முகக்கருவி பிறவினுக்கும்."

இந்தப் பாடல் குளகம். ஊரில்-அந்த ஆதனூரில். விடும்-இறையிலி நிலமாக விடும். பறை-பறையர்களுக்கு உரிய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. துடவை-தோட்டத்தை. உணவு-தம்முடைய உணவுப்பொருள்களை வழங்கும்; ஒருமை பன்மை மயக்கம். அந்தப் பொருள்களாவன: மாம் பழம், பலாப் பழம், விளாம் பழம், இலந்தைப் பழம், தேங்காய், பல வகையான வாழைப் பழங்கள், நாவற் பழம், பேரீச்சம் பழம் முதலியவை. உரிமையா-உரிய இடமாக. க்:சந்தி. கொண்டு-பெற்றுக் கொண்டு. சார்பில்-அந்தச் சார்பினில் வரும்-உண்டாகும். தொழில் வேலைகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்வார்-புரிபவராகி; முற்றெச்சம். தொண்டினில் -திருத்தொண்டுகளில்; ஒருமை பன்மை மயக்கம். தலை நின்றார்-அந்த நந்தனார் தலைசிறந்து நின்றார். கூர்-கூர்மையான. இலைய-இலைகளை உடைய' ஒருமை பன்மை மயக்கம். முக்குடுமி-மூன்று தலைகளைக் கொண்ட. குடுமி: ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. படை-ஆயுதமாகிய திரிசூலத்தை ஏந்திய. அண்ணல்-தலைவனாகிய சிவபெருமான் எழுந்தருளியுள்ள. அண்ணல்-பெருமையைப் பெற்றவர் எனலும் ஆம். கோயில் தொறும்-ஒவ்வோர் ஆலயத்திற்கும். பேரிகை முதலாய-பேரிகை முதலாக உள்ள. ஏ:அசை நிலை. முக-அடிக்கும் பக்கங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கருவி-இசைக் கருவிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். பிறவினுக்கும்-மற்றவற்றிற்கும்.

பிறகு வரும் 14-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'பேரிகை முதலிய இசைக் கருவிகளுக்கு மேலே போர்வை யாகப் போர்க்கும் தோல், அவற்றை இறுகக் கட்டும் வார்கள் என்ற இத்தகையவற்றையும் வாசிக்கும் சங்கீதத்தை சுருதி யோடு சேருமாறு வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைத்த விதத்தில் சேர்ந்துள்ள நரம்புகளையும் எல்லாத் தேவர் களுக்கும் தலைவனாகிய சிவபெருமானுக்குப் புரியும் அருச்ச னைகளுக்குப் பேராவலோடு கோரோசனையையும் ஆகிய இவற்றை அந்த நந்தனார் வழங்கியிருக்கிறவராக விளங்கி னார்.' பாடல் வருமாறு:

"போர்வைத்தோல் விசிவார்என் றினையனவும் புகலும்இசை
நேர்வைத்த வீணைக்கும் யாழுக்கும் நிலைவகையில்
சேர்வுற்ற தந்திரியும் தேவர்பிரான் அருச்சனைகட்
கார்வத்தி னுடன்கோ ரோசனையும் அளித்துள்ளார்."

போர்வை-பேரிகை முதலிய இசைக் கருவிகளுக்கு மேலே போர்வைகளாகப் போர்க்கும். த்: சந்தி. தோல்-தோலையும். விசி-அவற்றை இறுகக் கட்டும். வார்-வார்கள்: ஒருமை பன்மை மயக்கம். என்று-என்று உள்ள. இனையன வும்-இத்தகையவற்றையும். புகலும்-வாசிக்கும். இசை-சங்கீ தத்தை. நேர் வைத்த-சுருதியோடு சேருமாறு வைத்த. வீணைக்கும்-வீணை என்னும் இசைக் கருவிக்கும். யாழுக்கும் -யாழ் என்னும் இசைக் கருவிக்கும். வீணை வேறு, யாழ்வேறு; "இன்னிசை வீணைய ரியாழினர் ஒருபால்" என்று திருவாச கத்தில் வருவதைக் காண்க. நிலை-நிலைத்த. வகையில்-விதத் தில். சேர்வுற்ற-சேர்ந்துள்ள. தந்திரியும்-நரம்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். தேவர் பிரான்-எல்லாத் தேவர் களுக்கும் தலைவனாகிய சிவபெருமானுக்குப் புரியும். தேவர்: ஒருமைபன்மை மயக்கம். அருச்சனைகட்கு-அருச்சனைகளுக்கு. ஆர்வத்தினுடன்-பேராவலோடு. கோரோசனையும்-

சோரோசனையையும். இது பசு மாட்டின் வயிற்றில் உண்டாவது. அளித்துள்ளார்-அந்த நாயனார் வழங்கியிருக்கிறவராக விளங்கினார்.

பின்பு உள்ள 5-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இந்த விதங்களால் தம்முடைய வேலையில் செய்ய தம்மால் முடிந்த எல்லாவற்றையும் எந்த இடத்திலும் தாம் புரிகின்ற திருத்தொண்டுகளையும் பல ஊர்களில் உள்ள ஆலயங்களின் அழகிய கோபுர வாயில்களுக்கு வெளியில் நின்று கொண்டு உண்மையாகத் தம்முடைய திருவுள்ளத்தில் மேவிய பெரிய பக்தியின் மிகுதியினால் அந்தநாயனார் கூத்தாடுவதும் அந்த இயல்போடு பாடல்களைப் பாடுவதுமாகி அந்த நந்தனார்நடந்து வருவார்; அந்தக் காலத்தில்.' பாடல் வருமாறு:

''இவ்வகையால் தம்தொழிலின் இயன்றஎலாம் எவ்விடத்தும்
செய்வனவும் கோயில்களில் திருவாயிற் புறம்நின்று
மெய்விரவு பேரன்பு மிகுதியினால் ஆடுதலும்
அவ்வியல்பில் பாடுதலு மாய்நிகழ்வார் அந்நாளில்.''

இந்தப் பாடல் குளகம். இவ்வகையால்-இந்த விதங்களால்; ஒருமை பன்மை மயக்கம். தம்-தம்முடைய. தொழிலின்-வேலையில். இயன்ற எலாம்-தம்மால் செய்ய முடிந்த எல்லாவற்றையும். எலாம்: இடைக்குறை. எவ் விடத்தும்-எந்த இடத்திலும். செய்வனவும்-தாம் புரிகின்ற திருத்தொண்டுகளையும். கோயில்களில்-பல ஊர்களில் உள்ள ஆலயங்களின். திரு-அழகிய. வாயில்-கோபுர வாயில்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். புறம்-வெளிப் பக்கத்தில். நின்று-நின்று கொண்டு. மெய்-உண்மையாக. விரவு-தம்முடைய திருவுள்ளத்தில் மேவிய. பேரன்பு-பெரிய பக்தியின். மிகுதியினால்-மிகுதியால். ஆடுதலும்-கூத்தாடுவதும். அவ்வியல்பில்-அந்த இயல்போடு; உருபு மயக்கம். பாடுதலுமாய்-பாடுவதுமாகி. நிகழ்வார்-அந்த நந்தனார் நடந்து வருவார். அந்நாளில்-அந்தக் காலத்தில்.

அடுத்து உள்ள 6-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'திருப்புன்கூர் என்னும் சிவத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவலோக நாதனுடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை மிகவும் நந்தனார் தம்முடைய திருவுள்ளத்தில் தியானித்து விருப்பத்தோடும் தம்முடைய திருப்பணிகள் வேண்டியவற்றைப் புரிவதற்காக ஆவலோடு தீர்மானம் செய்து கொண்டு அந்த இடமாகிய ஆதனூரிலிருந்தும் வருத்தத்தை அடையும் விருப்பத்தோடு வந்து அந்தத் திருப்புன்கூரின் பக்கத்தை அடைந்தார்.'

பாடல் வருமாறு:

"திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகள் மிகநினைந்து
விருப்பினொடும் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினால் ஒருப்பட்டங் காதனூர் தனில்நின்றும்
வருத்தமுறும் காதலினால் வந்தவ்வூர் மருங்
கணைந்தார்."

திருப்புன்கூர்-திருப்புன்கூர் என்னும் சிவத்தலத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். ச்: சந்தி. சிவலோகன்-சிவலோகநாதனுடைய. சேவடிகள்-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை. மிக-மிகவும். நினைந்து-தம்முடைய திருவுள்ளத்தில் தியானித்து. விருப்பினொடும்-விருப்பத்தோடும். தம்-தம்முடைய. பணிகள்-திருப்பணிகள். வேண்டுவன-வேண்டியவற்றை. செய்வதற்கு-புரிவதற்காக. ஏ: அசை நிலை. அருத்தியினால்-ஆவலோடு; உருபு மயக்கம். ஒருப்பட்டு-தீர்மானம் செய்து கொண்டு. அங்கு-அந்த இடமாகிய. ஆதனூர்தனில் நின்றும்-ஆதனூரிலிருந்தும். தன்: அசை நிலை. வருத்தம் உறும்-வருத்தத்தை அடையும். காதலினால்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். வந்து அவ்வூர்-வந்த அந்தத் திருப்புன்கூருக்கு. மருங்கு-பக்கத்தை. அணைந்தார்-அந்த நந்தனார் அடைந்தார்.

திருப்புன்கூர்: இது சோழ நாட்டில் உள்ள தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சிவலோகநாதர். அம்பிகை

சொக்கநாயகி அம்மை. இது வைத்தீசுவரன் கோயிலுக்கு மேற்கில் 2 மைல் தூரத்தில் உள்ளது. திருநாளைப் போவார் நாயனார் தம்மை நேரே தரிசித்து வணங்கும் பொருட்டுச் சிவலோகநாதர் தமக்கு முன் இருந்த நந்திதேவரைச் சற்றே விலகியிருக்குமாறு செய்தருளிய தலம் இது. சுந்தர மூர்த்தி நாயனாரும் ஏயர்கோன் கலிக்காம நாயனாரும் நண்பர்கள் ஆனபிறகு இருவருமாக வந்து வணங்கிய தலம் இது. கலிக் காம நாயனார் இந்தத் தலத்தில் பல திருப்பணிகளைச் செய்திருக்கிறார். அந்த நாயனாரின் பொருட்டுச் சிவலோக நாதர் பன்னிரண்டு வேலி நிலத்தை இரண்டு தடவைகள் பெற்றுக் கொண்டு மழையில்லாமல் உயிர்கள் வருந்திய காலத்தில் மழையைப் பெய்யுமாறு திருவருள் பாலித்து உலகை உய்வித்த தவம் இது. இந்தச் செய்தி இத்தலத்துக் குரிய பின்வரும் தேவாரப் பாசுரத்தால் தெரிய வரும்.

''வையகம் முற்றும் மாமழை மறந்து வயலில் நீரிலை
மாநிலம் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன ஒளிகொள்
வெண்முகி லாய்ப்பரந் தெங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிரு வேலிகொண் டருளும்
செய்கை கண்டு நின் திருவடி அடைந்தேன் செழும்
பொழில் திருப்புன்கூருளானே.''

இது சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய பாசுரம். அதே திருப்பதிகத்தில் மூன்றாவது பாசுரத்தில், ''ஏத நன்னிலம் ஈரறு வேலி ஏயர் கோன்'' என்று வருவதைக் காண்க. நம்பியாண்டார் நம்பி பாடியருளிய கோயில் திருப்பண்ணியர் விருத்தத்தில்,

''பொன்னம் பலத்துறை புண்ணியன் என்பர் புயல்மறந்த
கன்னன்மை தீரப் புளிற்றுக் கலிக்காமற் கன்று புன்கூர்
மன்னும் மழைபொழிந் தீரறு வேலிகொண்
டாங்கவற்கே

பின்னும் பிழைதவிர்த் தீர்அறு வேலிகொள் பிஞ்ஞகனே.''
என வருதலைக் காண்க. கலிக்காம நாயனாருடைய திருவவதாரத் தலமாகிய திருப்பெருமங்கலம் திருப்புன் கூருக்கு அருகில் இருக்கிறது.

இத்தலத்தின் விருட்சம் புன்க மரம்.

பிறகு உள்ள 17-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சீர்த்தி ஏறி வரும் சங்கீத உருப்படிகளைப் பாடிக் கொண்டு திருத்தொண்டராகிய நந்தனார் அழகிய கோபுர வாசலில் நின்று கொண்டு சிவலோக நாதனை நேரே கும் பிட்டு வணங்க வேண்டும் என்று எண்ணிய அந்த நாயனா ருக்கு அந்த எண்ணத்தின்படி செய்வாராகி மேகங்கள் ஏறித் தவழும் திருமதிலைப் பெற்ற திருப்புன்கூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவராகிய தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்ற சிவலோக நாதர் தம்முடைய அழகிய சந்நிதியில் இருந்த பெரிய நந்தியை விலகுமாறு திரு வருளை வழங்கியருளி நந்தனாருக்குத் தம்மைத் தரிசிக்கும் வண்ணம் செய்தருளினார்.' பாடல் வருமாறு:

'' சீரேறும் இசைபாடித் திருத்தொண்டர் திருவாயில்
நேரேகும் பிடவேண்டும் எனநினைந்தார்க் கதுநேர்வார்
காரேறும் எயிற்புன்கூர்க் கண்ணுதலார் திருமுன்பு
பேரேற்றை விலங்கஅருள் புரிந்தருளிப் புலப்படுத்தார்.''

சீர்-சீர்த்தி. ஏறும்-ஏறி வரும். இசை-சங்கீத உருப்படி களை; ஒருமை பன்மை மயக்கம். பாடி-பாடிக் கொண்டு. த்:சந்தி. திருத்தொண்டர்-திருத்தொண்டராகிய நந்தனார். திரு-அழகிய. வாயில்-கோபுர வாசலில் நின்று கொண்டு. நேரே-சிவலோகநாதரை நேராகவே. கும்பிட வேண்டும்-கும் பிட்டு வணங்கவேண்டும். என-என்று; இடைக்குறை. நினைந் தார்க்கு-எண்ணிய அந்த நாயனாருக்கு. அது-அந்த எண் ணத்தின்படி. நேர்வார்-செய்வாராகி; முற்றெச்சம். கார்- மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏறும்-ஏறித் தவழும். எயில்-திருமதிலைப் பெற்ற. புன்கூர்-திருப்புன்கூரில்

கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவராகிய; இட ஆகு பெயர். க்: சந்தி. கண்ணுதலார்-தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்ற சிவலோகநாதர். திரு-அழகிய. முன்பு-தம்முடைய சந்நிதியில் இருந்த. பேரேற்றை-பெரிய திருவுருவத்தைப் பெற்ற நந்தியெம் பெருமானை. விலங்க-விலகுமாறு. அருள்-தம்முடைய திருவருளை. புரிந்தருளி-வழங்கியருளி. ப்: சந்தி. புலப்படுத்தார்-நந்தனாருக்குத் தம்மை நன்றாகத் தரிசிக்கும் வண்ணம் செய்தருளினார்.

அடுத்து வரும் 18-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நந்தனார் சிவலோக நாதருடைய அழகிய கோபுர வாசலுக்கு முன்னால் நின்று கொண்டு இந்த உலகத்தில் பிறக்கும் பிறப்பைத் தவிர்ப்பவராகிய அந்த நாதருடைய திருப்பணிகளைப் புரிந்து விட்டு அந்த நாதரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு தம்முடைய பிடரியோடு வார்கள் அலையுமாறு செல்வாராகிய அந்த நாயனார் பிறகு ஓரிடம் பள்ளத்துடனும் சேர்ந்திருக்கும் இயல்பைப் பார்த்து அன்பை மேற் கொண்டு ஒரு குளத்தைத் தோண்டினார்.' பாடல் வருமாறு:

"சிவலோகம் உடையவர்தம் திருவாயில் முன்நின்று
பவலோகம் கடப்பவர்தம் பணிவிட்டுப் பணிந்தெழுந்து
சுவலோடு வாரலையப் போவார்பின் பொருசூழல்
அவலோடும் அடுத்ததுகண் டாதரித்துக் குளம்
தொட்டார்."*

சிவலோகம் உடையவர் தம்-நந்தனார் சிவலோக நாதருடைய. தம்:அசைநிலை. திரு-அழகிய. வாயில்-கோபுர வாசலுக்கு. முன்-முன்னால். நின்று-நின்று கொண்டு. பவலோகம்-இந்த உலகத்தில் பிறக்கும் பிறப்பை. கடப்பவர் தம்-தவிர்ப்பவராகிய அந்த நாதருடைய. தம்:அசை நிலை. பணி-திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். விட்டு-புரிந்து விட்டு. ப்:சந்தி. பணிந்து—அந்த நாதரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டு. எழுந்து-பிறகு தரையிலிருந்து

எழுந்து நின்று கொண்டு. சுவலோடு-தம்முடைய பிடரி யோடு. பிடரி-கழுத்தின் பின்புறம். வார்-வார்கள்; ஒருமை பன்மை மயக்கம். அலைய—அலையுமாறு. ப்:சந்தி. போவார்—செல்பவராகிய அந்த நாயனார். பின்பு—பிறகு. ஒரு சூழல்—ஓரிடம். அவலோடும்—பள்ளத்துடனும். அடுத் தது—சேர்ந்திருக்கும் இயல்பை.கண்டு—பார்த்து. ஆதரித்து-அன்பை மேற்கொண்டு. க்:சந்தி. குளம்—ஒரு குளத்தை. தொட்டார்—தோண்டினார்.

நந்தனார் சிவலோகநாதருக்குத் தம்முடைய திருக்கரத்தி னால் நீரை அபிடேகம் செய்ய முடியாத நிலையை உணர்ந்து பூசை செய்யும் சிவாசாரியார் ஒரு பாத்திரத்தில் நிரம்ப வைத்த தண்ணீரால் அந்த நாதனாருக்கு அபிடேகம் புரிவ தைக் கண்டார். அந்தத் தண்ணீர் தாம் வெட்டும் குளத்தி லிருந்து சென்றால் அந்த நாதருக்குத் தாமே அபிடேகம் புரிந்தது போல ஆகும் என்ற எண்ணத்தால் அந்தக் குளத் தைத் தோண்டினார்.

பிறகு வரும் 19-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வடமாக அணிந்து கொண்ட தங்கத்தைப் போல மஞ்சள் நிறத்தைப் பெற்ற கொன்றை மலர் மாலையைத் தம் முடைய திருமுடியில் சூடியவராகிய சிவலோகநாதர் வழங் கிய திருவருளினால் விசாலமான பரப்பைக் கொண்ட குளத் தின் அளவை அமைத்த பிறகு தம்முடைய தலைவனாகிய சிவலோகநாதன் தான் எழுந்தருளியிருக்கும் இடமாக மேற் கொண்ட ஆலயத்துக்கு வெளியில் வலமாக வந்து பிரதட் சிணம் புரிந்து கொண்டு அந்த நாதரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு நடனத்தைப் புரிந்து கொண்டு அந்த நாதரிடம் விடையைப் பெற்றுக் கொண்டு தம்முடைய ஊராகிய ஆத னூரை நந்தனார் அடைந்தார்.' பாடல் வருமாறு:

"வடம்கொண்ட பொன்னிதழி மலர்முடியார் திருவருளால்
தடம்கொண்ட குளத்தளவு சமைத்ததற்பின் பெருமான்

இடம்கொண்ட கோயில்புறம் வலம்கொண்டு பணிந்தெழுந்து
நடம்கொண்டு விடைகொண்டு தம்பதியில் நண்ணி னார்.'

வடம் - மாலையாக. கொண்ட - அணிந்து கொண்ட. பொன்-தங்கத்தைப் போல மஞ்சள் நிறத்தைப் பெற்ற. இதழி மலர்-கொன்றை மலர் மாலையை; ஆகு பெயர். முடி யார்-தம்முடைய திருமுடியில் சூடியவராகிய சிவலோக நாதர். திருவருளால்-வழங்கிய திருவருளினால். தடம் கொண்ட-விசாலமான பரப்பைக் கொண்ட. குளத்து-குளத்தி னுடைய. அளவு-அளவை. சமைத்ததற்பின் - அமைத்த பிறகு. தம்-தம்முடைய. பெருமான்-தலைவனாகிய சிவ லோக நாதன். இடம் கொண்ட-தான் எழுந்தருளியிருக்கும் இடமாக மேற்கொண்ட. கோயில்-ஆலயத்திற்கு. புறம்-வெளியில். வலம் கொண்டு-வலமாக வந்து பிரதட்சிணம் புரிந்து கொண்டு. பணிந்து-அந்த நாதரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டு. எழுந்து-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. நடம் கொண்டு - நடனத்தைப் புரிந்து கொண்டு. விடை கொண்டு-அந்த நாதரிடம் விடையைப் பெற்றுக் கொண்டு. தம்-தம்முடைய. பதியில்-ஊராகிய ஆதனூரை; உருபு மயக்கம். நண்ணினார்-நந்தனார் அடைந்தார்.

கொன்றை மலருக்குத் தங்கம் உவமை: "பொன்னை வென்ற கொன்றை மாலை சூடும்.", "போது பொன் திகழ் கொன்றை புனை முடி நாதர்.", "கொன்றை மலர் பொன் திகழும்.", "தாரார் கொன்றை பொன் தயங்கச் சாத்தி.", "பொன் தாழ் கொன்றை.", "பொன்னியல் கொன்றை.", "பொன்னியல் கொன்றையினான்.", "பொன்னேர் கொன்றை மாலை.", "பொன்தாது திருமணம் கொள் புனை பூங்கொன்றை புனைந்தார்.", "பொன்னை வென்ற கொன்றையான்.", "பொன்னுலாவிய கொன்றை யந்

தாரினர்.'', ''கொன்றை பொன்னென மலர்தரு.'', ''கொன்றை பொன் சொரியும்.'', ''பொன்னினார் கொன்றையும்.'', ''பொன்னினார் கொன்றை யிருவடம் கிடந்து.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பொன் திகழ் கொன்றை மாலை,'', ''பொன் திகழ் கொன்றைமாலை பொருந்திய நெடுந்தண் மார்பர்.'', ''பொன்னங் கொன்றையும் '', ''பொன் கலந்த நறும்கொன்றை சடைமேல் வைத்தார்.'', ''பொன்னிலங்கு கொன்றையந்தார் மாலை சூடி.'', ''பொன்காட்டக் கடிக்கொன்றை.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''பொன்னிலங்கு நறுங்கொன்றை புரிசடை மேற் பொலிந்திலங்க.'', ''பொன்னவிலும் கொன்றையினாய்.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''பொன்னின் மின்னுகொன்றை அலங்கல்.'' என்று மாணிக்க வாசகரும், ''பொன்னிதழ்க் கொன்றை.'', ''பொன்னவில் கொன்றையார் தம் திருநீறு.'', ''பொன்தயங்கு பூங்கொன்றையும் வன்னியும் புனைந்தவர்.'', ''பொன்னாரிதழி முடியார்.'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 20-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இந்தப் பான்மையில் பரமேசுவரர் மகிழ்ந்து கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவத்தலங்கள் பலவற்றிற்கும் நந்தனார் எழுந்தருளி அந்தத் தலங்களில் விளங்கும் சிவபெருமான்களை வணங்கி விட்டு உண்மையான திருத்தொண்டுகளைப் புரிந்து கொண்டு நடப்பாராகி மிகுதியாக அமைந்து பக்தி எழுந்த திருவுள்ளத்தோடும் அழகிய தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்துக்கு எழுந்தருளி நடராஜப் பெருமானாரை வணங்கும்படி தம்மைச் செலுத்திய பெருகியிருக்கும் விருப்பமாகிய உணர்ச்சி போகாமல் வந்து தம்முடைய திருவுள்ளத்தில் தோன்ற.' பாடல் வருமாறு:

"இத்தன்மை ஈசர்மகிழ் பதிபலவும் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்த
சித்தமொடும் திருத்தில்லைத் திருமன்று சென்றிறைஞ்ச
உய்த்தபெரும் காதலுணர் வொழியாது வந்துதிப்ப."

இந்தப் பாடல் குளகம். இத்தன்மை-இந்தப் பான்மையில். ஈசர்-பரமேசுவரர். மகிழ்-மகிழ்ந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். பதி-சிவத்தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும்-பலவற்றிற்கும். சென்று-நந்தனார் எழுந்தருளி. இறைஞ்சி-அந்தத் தலங்களில் விளங்கும் சிவபெருமான்களை வணங்கி விட்டு. மெய்த்த-உண்மையாக உள்ள. திருத்தொண்டு-திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்து-புரிந்து கொண்டு. விரவுவார்-நடப்பாராகி; முற்றெச்சம். மிக்கு-மிகுதியாக அமைந்து. எழுந்த-பக்தி எழுந்த. சித்தமொடும்-திருவுள்ளத்தோடும். திரு-அழகிய. த்: சந்தி. தில்லை-தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும்; இட ஆகுபெயர். த்:சந்தி. திருமன்று-திருச்சிற்றம்பலத்திற்கு. சென்று-எழுந்தருளி. இறைஞ்ச-நடராஜப் பெருமானாரை வணங்குமாறு. உய்த்த-தம்மைச் செலுத்திய. பெரும்-பெருகி எழும். காதல்-விருப்பமாகிய. உணர்வு-உணர்ச்சி. ஒழியாது-போகாமல். வந்து உதிப்ப-வந்து தம்முடைய திருவுள்ளத்தில் தோன்ற.

பிறகு வரும் 21-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அன்றைக்கு இராத்திரியில் நந்தனார் தம்முடைய கண்களை மூடி உறங்கவில்லை; விடிந்ததன் பிறகு "அந்தச் சிதம்பரத்தை அடியேன் போய்ச் சேருவதற்கு அடியேனிடம் பொருந்தி அடைந்திருக்கும் இயல்பு அடியேன் பிறந்துள்ள பறையர் சாதியோடு பொருத்தமாக இல்லை" என்று எண்ணி மீண்டும், "இந்த நிலையும் அடியேனுடைய தலைவனாகிய நடராஜப் பெருமானுடைய கட்டளை" என்று எண்ணி அந்தச் சிதம்பரத்திற்கு எழுந்தருளுவதை விட்டு விடுபவராகி நன்றாகவும் தம்முடைய திருவுள்ளத்தில்

எழுந்து தோன்றும் விருப்பம் மிகுதியாக உண்டாக, "நாளைக்கு அடியேன் சிதம்பரத்திற்குச் செல்லுவேன்" என்று எண்ணிக் கொள்வாரானார்.' பாடல் வருமாறு:

" அன்றிரவு கண்துயிலார்; புலர்ந்ததற்பின், 'அங்கெய்த
ஒன்றியணை தருதன்மை உறுகுலத்தோ டிசைவில்லை.'
என், 'றிதுவும் எம்பெருமான் ஏவல்.' எனப் போக்கொழிவார்
நன்றும்எழும் காதல்மிக, 'நாளைப்போ வேன்' என்பார்."

அன்று-அன்றைக்கு. இரவு-இராத்திரியில். கண்-நந்தனார் தம்முடைய கண்களை; ஒருமை பன்மை மயக்கம். துயிலார்-மூடி உறங்கவில்லை. புலர்ந்ததற்பின்-விடிந்ததற்குப் பிறகு அங்கு-அந்தச் சிதம்பரத்தை. எய்த-அடியேன் போய் அடைவதற்கு. ஒன்றி அணைதரு-அடியேனிடம் பொருந்தி அடைந்திருக்கும். தன்மை-இயல்பு. உறு-அடியேன் பிறந்துள்ள. குலத்தோடு-பறையர் சாதியோடு. இசைவு இல்லை -பொருத்தமாக இல்லை. என்று—என்று எண்ணி. இதுவும்-மீண்டும் இந்த நிலையும். எம்பெருமான்-அடியேனுடைய தலைவனாகிய நடராஜப் பெருமானுடைய. ஏவல்-கட்டளை. என-என்று எண்ணிச் சமாதானத்தை அடைந்து; இடைக் குறை. ப்:சந்தி. போக்கு-சிதம்பரத்திற்கு எழுந்தருளுவதை. ஒழிவார்-விட்டு விடுபவராகி; முற்றெச்சம். நன்றும்-நன்றாக்த் தோன்றுவதும். எழும்-தம்முடைய திருவுள்ளத்தில் எழுவதுமாகிய; வினையாலணையும் பெயர். காதல்-விருப்பம். மிக-மிகுதியாக உண்டாக. நாளை-நாளைக்கு. ப்:சந்தி. போவேன்-அடியேன் சிதம்பரத்திற்குச் செல்வேன். என்பார்-என்று எண்ணிக் கொள்வாரானார்.

பிறகு வரும் 12-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'நந்தனார் அவ்வாறு, "நாளைக்குச் சிதம்பரத்திற்குச் செல்லுவேன்" என்று எண்ணிக் கொண்டு பல தினங்கள் கழியப் பொறுக்காமல் பூளை மலரைப் போன்றதாகும் இந்த மானிடப் பிறவியின் கட்டு நீங்கும் வண்ணம் செல்பவ

ராகி பாளைகளும் மலர்களும் நிறைந்த பாக்கு மரங்கள் சுற்றி உள்ள பழமையான ஊராகிய தம்முடைய ஆதனூரிலி ருந்தும் எழுந்தருளி ஆண் வாளை மீன்கள் துள்ளி எழும் வயல்கள் சுற்றியுள்ள தில்லையாகிய சிதம்பரத்திற்குப் பக்கத்தில் சென்று சேர்வாரானார்.' பாடல் வருமாறு:

"'நாளைப்போ வேன்'என்று நாள்கள்செலத் தரியாது
பூளைப்பூ வாம்பிறவிப் பிணைப்பொழியப் போவாராய்ப்
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியின் நின்றும்போய்
வாளைப்போத் தெழுபழனம் சூழ்தில்லை மருங்கணை
வார்.''

நாளை-நந்தனார் அவ்வாறு நாளைக்கு. ப்:சந்தி. போவேன்-அடியேன் சிதம்பரத்திற்குச் செல்லுவேன். என்று-என எண்ணிக் கொண்டிருந்து. நாள்கள்-பல தினங்கள். செல-கழிய; இடைக்குறை. த்:சந்தி. தரியாது-அந்தத் தாமதத்தைப் பொறுக்க மாட்டாமல். பூளைப்பூவாம்-பூளைப் பூவைப் போலச் சில தினங்களே வாழும்; "உனக்கமைந்தன மாருதம் அறைந்த பூளையாயின." என்று கம்பராமாயணத் தில் வருவதைக் காண்க. பிறவி-இந்த மானிடப் பிறவியின். ப்:சந்தி. பிணைப்பு-கட்டு. ஒழிய-நீங்கும் வண்ணம். ப்:சந்தி. போவாராய்-செல்பவராகி. ப்:சந்தி. பாளை-பாளைகளை யும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பூம்-மலர்களையும் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். கமுகு-பாக்கு மரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உடுத்த-சுற்றியுள்ள. பழம்-தம்முடைய பழமையாகவிருக்கும். பதி யினின்றும்-ஊராகிய ஆதனூரிலிருந்தும். போய்-எழுந்தருளி. வாளைப் போத்து-ஆண் வாளை மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். எழும்-துள்ளி எழுந்து பாயும். பழனம்-வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றி விளங்கும். தில்லை-தில்லையாகிய சிதம்பரத்திற்கு. மருங்கு-பக்கத்தில். அணை வார்-சென்று சேர்வாரானார்.

பிறகு வரும் 23-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு நந்தனார் சிதம்பரத்தை நோக்கி எழுந்தருளிய சமயத்தில் அந்தச் சிவத்தலத்தினுடைய அழகிய எல்லையில் தரையில் விழுந்து நடராஜப் பெருமானாரைத் தியானித்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு பலவாக விளங்கும் சிவந்த நெருப்பை வளரச் செய்து தில்லைவாழ் அந்தணர்கள் புரிகின்ற யாகத்தில் மேல் எழும் புகையையும், மிகுதியாக இருக்கும் பெருமையைப் பெற்ற வேத பாடசாலைகளையும், தேவாரத் திருவாசகப் பாசுரங்களை ஓதும் மடங்கள் நெருக்கமாக உள்ளவற்றையும் அந்த நாயனார் பார்த்து விட்டு, தாம் பிறந்து தங்கும் தம்முடைய பறைச்சாதியை எண்ணி அச்சத்தை அடைந்து சிதம்பரத்துக்குள் போகாதவராகி அந்த எல்லையிலேயே நின்று கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

"செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி எழும்புகையும்
மல்குபெருங் கிடைஓது மடங்கள்நெருங் கினவுங்கண்
டல்குந்தம் குலம்நினைந்தே அஞ்சிஅணைந் திலர்
நின்றார்."

செல்கின்ற-அவ்வாறு நந்தனார் சிதம்பரத்தை நோக்கி எழுந்தருளிய; கால மயக்கம். போழ்து-சமயத்தில். அந்த-அந்தச் சிவத்தலத்தினுடைய. த்: சந்தி. திரு-அழகிய. எல்லை-எல்லையில். பணிந்து-தரையில் விழுந்து நடராஜப் பெருமானாரைத் தியானித்து வணங்கி விட்டு. எழுந்து-பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. பல்கும்-பலவாக விளங்கும். செம்-சிவந்த. தீ-நெருப்பை. வளர்த்த பயில்-தில்லைவாழ் அந்தணர்கள் வளரச் செய்து புரிந்த. வேள்வி-யாகத்தில். எழும்-மேல் எழும். புகையும்-புகையையும். மல்கு-மிகுதியாக இருக்கும். பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். கிடை-வேத பாடசாலைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். ஓது-தேவாரத் திருவாசகப் பாசுரங்களை ஓதும். மடங்கள் நெருங்கினவும்-நெருக்கமாக உள்ள மடங்களையும். கண்டு-

அந்த நாயனார் பார்த்து விட்டு. அல்கும்-தாம் பிறந்து தங்கும். தம்-தம்முடைய. குலம்-பறைச் சாதியை. நினைந்து-எண்ணி. ஏ: அசை நிலை. அஞ்சி-அச்சத்தை அடைந்து-அணைந்திலர்-சிதம்பரத்துக்குள் போகாதவராகி; முற்றெச்சம். நின்றார்-அந்த எல்லையிலேயே நின்று கொண்டிருந்தார்.

பிறகு வரும் 24-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு நின்று கொண்டிருந்தவராகிய நந்தனார் அந்தச் சிதம்பரத்தைத் தாம் அடைவதற்கு அரியதாக உள்ள அந்த சிவத்தலத்தினுடைய பெருமையை எண்ணுபவராகி, முன்னால் எழுந்தருளி இந்த வேத பாடசாலைகளையும் திருமடங்களையும் கடந்து சென்று அந்தச் சிதம்பரமாகிய நகரத்தைச் சுற்றி விளங்கும் திருமதிலையுடைய ஆலயத்தின் முன்பு உயரமாக நிற்கும் அழகிய கோபுர வாசலின் வழியே சிதம்பரத்துக்குள் நுழைந்தார்; மலைகளைப் போன்ற திருமாளிகைகள் ஒவ்வொன்றிலும் திகழும் யாக சாலைகளில் பொருந்திய தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்கள் வேள்வித் தீயில் சொரியும் ஆகுதிகள் மூவாயிரம் அந்தச் சிதம்பரத்தில் இருக்கின்றன என்று சான்றோர்கள் கூறுவார்கள்.' பாடல் வருமாறு:

"நின்றவர்அங் கெய்தரிய பெருமையினை நினைப்பார்முன்
சென்றிவையும் கடந்தூர்சூழ் எயிற்றிருவா
யிலைப்புக்கார்;
குன்றனைய மாளிகைகள் தொறும் குலவும் வேதிகைகள்
ஒன்றியமூ வாயிரம்அங் குளஎன்பார் ஆகுதிகள்."

நின்றவர்-அவ்வாறு நின்று கொண்டிருந்தவராகிய நந்தனார். அங்கு-அந்தச் சிதம்பரத்தை. எய்தரிய-தாம் அடைவதற்கு அரியதாக உள்ள. எய்து-அடைதல்; முதல்நிலைத் தொழிற் பெயர். பெருமையினை-அந்தச் சிவத்தலத்தினுடைய பெருமையை. நினைப்பார்-எண்ணிப் பார்ப்பவராகி; முற்றெச்சம். முன்-முன்னால். சென்று-எழுந்தருளி. இவை

யும்-இந்த வேத பாடசாலைகளையும் திருமடங்களையும். கடந்து-தாண்டிச் சென்று. ஊர் - அந்தச் சிதம்பரமாகிய பெரிய ஊரை. சூழ்-சுற்றி விளங்கும். எயில்-திருமதிலை உடைய ஆலயத்தின் முன்பு உயரமாக நிற்கும்; இட ஆகு பெயர். திருவாயிலை-அழகிய கோபுர வாசலின் வழியாக; உருபு மயக்கம். ப்: சந்தி. புக்கார்-சிதம்பரத்துக்குள் அந்த நாயனார் நுழைந்தார். குன்று-மலைகளை; ஒருமை பன்மை மயக்கம். அனைய-போல உள்ள. மாளிகைகள் தொறும்-ஒவ்வொரு மாளிகையிலும். குலவும்-திகழும். வேதிகைகள்-யாக சாலைகளில். ஒன்றிய-சேர்ந்திருந்த. மூவாயிரம்-தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்கள் தாங்கள் புரியும் வேள்வித் தீயில் சொரியும் மூவாயிரம். ஆகுதிகள்-ஆகுதிகளாகிய நெய்யும் சமித்துக்கள் முதலியவைகளும். அங்கு-அந்தச் சிதம்பரத்தில். உள-இருக்கின்றன; இடைக் குறை. என்பார்-என்று சான்றோர்கள் கூறுவார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

மாளிகைக்கு மலை உவமை: "மலை போல் துன்னி வென்றி ஓங்கும் மாளிகை.", "மலையார் மாடம்.", "குன்றேய்க்கும் நெடு வெண் மாட கொடி.", "குன்றடுத்த நன் மாளிகை.", "குன்றமன்ன பொன் மாடக் கொச்சை வயம்.", "மலையின் நிகர் மாடம்.", "மலையென ஓங்கும் மாளிகை.' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "மலை குடைந்தனைய நெடுநிலை மாடம்.' என்று கருவூர்த் தேவரும், "குன்றிருந்த மாடம்." என்று திருமழிசையாழ்வாரும், "குன்ற மாடத் திருக்குருகூர்." என்று மதுரகவியாழ்வாரும், "மலையிலங்கு மாளிகை.", "மலையிலங்கு நிரைச் சந்தி மாட வீதி.", "மலையார்ந்த கோலம் சேர்மணி மாடம்.", "மலை குலாம் மாட மங்கையர் தலைவன்." என்று திருமங்கையாழ்வாரும், "குன்றம் போல் மணிமாடம நீடுதிருக்குருகூர்.", "குன்ற மாமணி மாட மாளிகை.", "குன்று நேர் மாடமாடே.", "மலை

மாடத்து.'', ''குன்றென்னத் திகழ் மாடங்கள் சூழ்திருப் பேரான்.'' என்று நம்மாழ்வாரும், ''குன்று கண் கூடிய குழா அம் ஏய்ப்ப, ஒன்று கண்டன்ன ஓங்கு நிலை வனப்பின், மாடம்.'' (பெருங்கதை, 2.7:4-6) என்று கொங்கு வேளிரும், ''குன்றுகண்டனைய கோலக் கொடி நெடு மாட மூதூர்.'' (சீவக சிந்தாமணி, 2374) என்று திருத்தக்கதேவரும், ''குன்று குயின்றன்ன அந்தணர் பள்ளியும்,'', ''குன்று கண் டன்ன, பருந்திருந்துகக்கும் பன்மாண் நல்லில்.'' (மதுரைக் காஞ்சி) என்று மாங்குடி மருதனாரும், ''குன்று குயின்றன்ன ஓங்கு நிலைவாயில்.'' (நெடுநல்வாடை, 88) என்று நக்கீரனா ரும், ''மலையென மாடம் ஓங்கி.'' (மலைபடுகடாம், 484) என்று பெருங்கௌசிகனாரும், ''குன்றம் மாடக்கோவின்.'' (மிதிலைக்காட்சிப் படலம், 21), ''மந்தரமணி மாட முன்றி லின்.'' (கடிமணப் படலம், 26), ''குன்று குன்றிய தகையுற ஓங்கிய கொற்ற மாளிகை.'' (ஊர் தேடு படலம், 203), ''வரையினைப் புரை மாடங்கள்.'', ''குன்றமொத்துயர் தட நெடுமாநிலைக் கோயில்.'' (இலங்கை எரியூட்டுப் படலம், 28, 42), ''குன்று புரையும் நெடுங்கோயில்.'' (அதிகாயன் வதைப் படலம், 274), ''குன்றென விளக்கித் தோன்றும் நாயகக் கோயில் புக்கான்.'' (திருமுடி சூட்டு படலம், 17) என்று கம்பரும் பாடியவற்றையும், ''குன்று புரை மணிமாட கூட கோபுர இலங்கை.'' (இராவணன் பிறப்பும் படலம், 43), ''குன்றுயர் செம்பொன் மாடம்.'' (அசுவமேதயாகப் படலம், 26), ''குன்று நின்றனைய தோர் கோயில்.'' (சந்திரகேதுப் படலம், 29) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றை யும் காண்க.

பிறகு வரும் 25-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'''சிதம்பரம் இந்த வகையாக இருப்பதனால் அடியே னுக்கு அந்தச் சிதம்பரத்தை அடைதல் அரியதாகிய செயல்'' என்று எண்ணி நந்தனார் அச்சத்தை அடைந்து அந்தச் சிவத்தலத்தினுடைய திருமதிலினுக்கு வெளியில் அடங்காத

பெரியதாக இருக்கும் விருப்பம் ஒப்பாக வேறு ஒன்றைக் கூறுவதற்கு அரியதாகி மேலும் மேலும் வளர்ந்து ஓங்கி நிற்கத் தம்முடைய திருவுள்ளத்தில் உருக்கத்தை அடைந்து தம்முடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டுவிட்டுப் பிறகு தரையில் விழுந்து நடராஜப் பெருமானாரைத் தியானித்து அந்தப் பெருமானாரை வணங்கி விட்டுக் கூறுவதற்கு அரியதாக உள்ள அழகிய சிதம்பரத்தின் எல்லையை வலமாக வந்து பிரதட்சிணம் செய்து எழுந்தருளுகிறவரானார்.' பாடல் வருமாறு:

**"'இப்பரிசாய் இருக்கஎனக் கெய்தல்அரி' தென்றஞ்சி
அப்பதியின் மதிற்புறத்தின் ஆராத பெருங்காதல்
ஒப்பரிதாய் வளர்ந்தோங்க உள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார்."**

இப்பரிசாய்-சிதம்பரம் இந்த வகையாக. இருக்க-இருப்பதனால். எனக்கு-அடியேனுக்கு. எய்தல்-அந்தச் சிதம்பரத்தை அடைதல். அரிது-அரியதாகிய செயல். என்று-என எண்ணி. அஞ்சி-நந்தனார் அச்சத்தை அடைந்து. அப்பதியின்-அந்தச் சிவத் தலத்தினுடைய. மதில்-திருமதிலுக்கு. புறத்தின்-வெளியில். ஆராத-அடங்காத. பெரும்-பெரியதாக இருக்கும். காதல்-விருப்பம். ஒப்பரிதாய்-ஒப்பாக வேறு ஒன்றைக் கூறுவதற்கு அரியதாகி; வளர்ந்து-மேலும் மேலும் வளர்ச்சியை அடைந்து. ஓங்க-ஓங்கிநிற்க. உள்-தம்முடைய திருவுள்ளத்தில். உருகி-உருக்கத்தை அடைந்து. க்: சந்தி. கை-தம்முடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டு; ஒருமை பன்மை மயக்கம் தொழுது-பிறகு தரையில் விழுந்து நடராஜப் பெருமானாரைத் தியானித்து அந்தப் பெருமானாரை வணங்கி விட்டு. ஏ: அசை நிலை. செப்பரிய-கூறுவதற்கு அரியதாக உள்ள. திரு-அழகிய. எல்லை-சிதம்பரத்தின் எல்லை வலம் கொண்டு-வலமாக வந்து பிரதட்சிணம் செய்து. கின்றார்-எழுந்தருளுகிறவரானார்.

பிறகு உள்ள 26-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இவ்வாறு இராத்திரி வேளையிலும், பகல் நேரத்திலும் சிதம்பரத்தின் எல்லையை வலமாக வந்து பிரதட்சிணம் செய்து விட்டு, அந்தச் சிதம்பரத்தை அடைய அரியதாக உள்ள அந்த இயல்பை எண்ணி வருந்திய நடராஜப் பெருமானாருடைய திருவடிகளுக்குத் திருத் தொண்டராகிய நந்தனார் சோர்வை அடைந்து, "மையைப் போன்ற நிறத்தைப் பெற்ற அழகிய கழுத்தைப் பெற்றவ ராகிய நடராஜப் பெருமானார் திருநடனம் புரிந் தருளும் திருச்சிற்றம்பலத்தில் அந்தப் பெருமானார் புரிந்தருளும் திருநடனத்தை அடியேனுடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டு விட்டு அந்தப் பெருமானாரை வணங்குவது எவ்வாறு?" என்று எண்ணிக் கொண்டே வேசறுதலோடு உறங்குவாரானார்.' பாடல் வருமாறு:

"'இவ்வண்ணம் இரவுபகல் வலம்செய்தங் கெய்தரிய
அவ்வண்ணம் நினைந்தழிந்த அடித்தொண்டர்
அயர்வெய்தி
'மைவண்ணத் திருமிடற்றார் மன்றில்நடம் கும்பிடுவ
தெவ்வண்ணம்?' எனநினைந்தே ஏசறவி னொடும்து
யில்வார்."

இவ்வண்ணம்-இவ்வாறு. இரவு-இராத்திரி வேளையிலும். பகல்-பகல் நேரத்திலும். வலம் செய்து-சிதம்பரத்தின் எல் லையை வலமாக. வந்து-பிரதட்சிணம் செய்து விட்டு. அங்கு-அந்தச் சிதம்பரத்தை. எய்தரிய-அடைய அரியதாக உள்ள. அவ்வண்ணம்-அந்த இயல்பை. நினைந்து-எண்ணி. அழிந்த-வருத்தத்தை அடைந்து. அடி-நடராஜப் பெருமானாருடைய திருவடிகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தொண்டர்-திருத் தொண்டராகிய நந்தனார். அயர்வு-சோர்வை. எய்தி-அடைந்து. மை வண்ண-மையைப் போன்ற நிறத்தைப் பெற்ற. த்:சந்தி. திரு-அழகிய. மிடற்றார்-கழுத் தைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானார். மன்றில்-திரு

நடனம் புரிந்தருளுவதும் சிதம்பரம் ஆலயத்தில் விளங்குவது மாகிய திருச்சிற்றம்பலத்தில். நடம்-அந்தப் பெருமானார் புரிந்தருளும் திருநடனத்தை. கும்பிடுவது-அடியேனுடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டு விட்டு அந்தப் பெருமானாரை வணங்குவது. எவ்வண்ணம்-எவ்வாறு. என-என்று; இடைக் குறை. நினைந்தே-எண்ணிக் கொண்டே. ஏசறவினொடும்-வேசறுதலோடு; ஏங்குவதோடு. உறங்குவார் ஆனார்-துயில் பவர் ஆயினார்.

பிறகு வரும் 27-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"'துன்பங்களை வழங்கும் இழிந்த பறையனாக அடியேன் பிறந்திருக்கும் பிறவியாகிய இது சிதம்பரத்திற்கு உள்ளே போவதற்குத் தடையாக இருக்கிறது'' என்று எண்ணிக் கொண்டே உறங்குபவராகிய அந்த நந்தனாருடைய அந்த நிலையைச் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச் சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளுபவராகிய நடராஜப் பெருமானார் தெரிந்து கொண்டருளி பக்தி நிலை பெற்று விளங்கும் திருத்தொண்டராகிய அந்த நந்தனார் வருந்திய வருத்தம் எல்லாவற்றையும் போக்கியருளு வதற்காக அந்த நாயனாருக்கு முன்னால் எழுந்தருளி அவரு டைய சொப்பனத்தில் புன்முறுவலோடும் திருவாய் மலர்ந் தருளிச் செய்வாரானார். பாடல் வருமாறு:

"'இன்னல்தரும் இழிபிறவி இதுதடை'என் றேதுயில்வார்
அந்நிலைமை அம்பலத்துள் ஆடுவார் அறிந்தருளி
மன்னுதிருத் தொண்டர்அவர் வருத்தமெலாம் தீர்ப்பதற்கு
முன்அணைந்து கனவின்கண் முறுவலொடும் அருள் செய்வார்.''

இன்னல்-பிணி, பசி, மூப்பு, இறப்பு என்னும் துன்பங் களை; ஒருமை பன்மை மயக்கம். தரும்-அளிக்கும். இழி-இழிந்த. பிறவி இது-பறையனாக அடியேன் பிறந்திருக்கும் பிறவியாகிய இது. தடை-சிதம்பரத்திற்கு உள்ளே போவதற் குத் தடையாக இருக்கிறது. என்றே-என்று எண்ணிக்

கொண்டே. துயில்வார்-உறங்குபவராகிய அந்த நந்தனாருடைய. அந்நிலைமை-அந்த நிலையை. அம்பலத்துள்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில். ஆடுவார்-திருநடனம் புரிந்தருளுபவராகிய நடராஜப் பெருமானார். அறிந்தருளி-தெரிந்து கொண்டருளி. மன்னு-பக்தி நிலை பெற்று விளங்கும். திருத் தொண்டர்-திருத் தொண்டராகிய. அவர்-அந்த நாயனார். வருத்தம்-வருந்திய வருத்தங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்-எல்லாவற்றையும்; இடைக்குறை. தீர்ப்பதற்கு-போக்கியருளுவதற்காக. முன்-அந்த நாயனாருக்கு முன்னால். அணைந்து-எழுந்தருளி. கனவின்கண்-அந்த நாயனாருடைய சொப்பனத்தில். முறுவலொடும்-புன்னகையினோடும். அருள் செய்வார்-திருவாய் மலர்ந்தருளிச் செய்வாரானார்.

அடுத்து வரும் 28-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இந்தப் பறையனாகப் பிறந்திருக்கும் பிறவி போய் அகலும் பொருட்டு நீ நெருப்பில் மூழ்கி மூன்று புரிகளைக் கொண்ட பூணூல்களை அணிந்த மார்புகளை உடையவர்களாகிய தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களோடு எம்முடைய சந்நிதிக்கு வந்து சேருவாயாக!'' என்று நடராஜப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு, அவ்வாறே தில்லை வாழ் அந்தணர்களுக்கும் நெருப்பை மூட்டி அமைக்கும் வண்ணம் உண்மையான பரம்பொருளாக விளங்குபவராகிய அந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டுச் சிதம்பரம் ஆலயத்தில் உள்ள திருச்சிற்றம்பலத்துக்கு எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

"'இப்பிறவி போய்நீங்க எரியினிடை நீமூழ்கி
முப்புரிநூல் மார்பருடன் முன்அணைவாய்' என்னமொழிந்
தப்பரிசே தில்லைவாழ் அந்தணர்க்கும் எரிஅமைக்க
மெய்ப்பொருளா னார்அருளி அம்பலத்தே மேவினார்."

இப்பிறவி-பறையனாகப் பிறந்திருக்கும் இந்தப் பிறவி. போய் நீங்க-போய் அகலும் பொருட்டு. எரியினிடை-நெருப்பில். நீமூழ்கி-நீ முழுகி. முப்புரி-மூன்று புரிகளைக் கொண்ட. புரி: ஒருமை பன்மை மயக்கம். நூல்-பூணூல்களை; ஒருமை பன்மை மயக்கம். மார்பருடன்-அணிந்திருக்கும் மார்புகளைக் கொண்ட தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். முன்-எம்முடைய சந்நிதிக்கு. அணைவாய்-வந்து சேருவாயாக. என்ன-என்று. மொழிந்து-நடராஜப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அப்பரிசே-அவ்வாறே. தில்லை வாழ் அந்தணர்க்கும்-தில்லைவாழ் அந்தணர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். எரி-நெருப்பை. அமைக்க-மூட்டி அமைக்கும் வண்ணம். மெய்-உண்மையான. ப்: சந்தி. பொருள்-பரம்பொருள். ஆனார்-ஆக விளங்குபவராகிய அந்தப் பெருமானார். ஆனார்: கால மயக்கம். அருளி-திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அம்பலத்து-சிதம்பரம் ஆலயத்தில் உள்ள திருச்சிற்றம்பலத்துக்கு. ஏ: அசை நிலை. மேவினார்-எழுந்தருளினார்.

பிறகு உள்ள 29-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய தலைவனாகிய நடராஜப் பெருமான் இட்ட கட்டளையைக் கேட்ட சிதம்பரத்தில் வாழும் வேதியர்களாகிய தவத்தைப் புரிந்த தில்லைவாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்கள் எல்லோரும் திருச்சிற்றம்பலத்தில் எழுந்தருளியுள்ள நடராஜப்பெருமானாருடைய ஆலயத்திற்கு முன்பு உயரமாக நிற்கும் அழகிய கோபுர வாசலுக்கு முன்னால் பயத்தோடு கூட்டமாகக் கூடிக் கொண்டு வந்து, "அடியேங்களுடைய தலைவனாகிய நடராஜப் பெருமான் திருவாய் மலர்ந்தருளிச் செய்த திருப்பணியை அடியேங்கள் புரிவோம்" என்று கூறி அந்தப் பெருமானைத் துதித்து வணங்கி விட்டு தம்முடைய பக்தி பெருகி எழ எழுந்தருளும் திருத் தொண்டராகிய நந்தனாரிடம் சேர்ந்தார்கள்.' பாடல் வருமாறு:

"தம்பெருமான் பணிகேட்ட தவமறையோர் எல்லாரும்
அம்பலவர் திருவாயில் முன்பச்ச முடன்ஈண்டி
'எம்பெருமான் அருள்செய்த பணிசெய்வோம்' என்றேத்தித்
தம்பரிவு பெருகவரும் திருத்தொண்டர் பாற்சார்ந்தார்.''

தம்-தங்களுடைய. பெருமான்-தலைவனாகிய நடராஜப் பெருமான். பணி கேட்ட-இட்ட கட்டளையைக் கேட்ட. தவ-தவத்தைப் புரிந்த. மறையோர்-வேதியர்களாகிய தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாரும்-எல்லோரும். அம்பலவர்-திருச்சிற்றம் பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாரு டைய. திரு-அழகிய. வாயில்-கோபுர வாசலுக்கு. முன்பு-முன்னால். அச்சமுடன்-பயத்தோடு. ஈண்டி-கூட்டமாகக் கூடிக் கொண்டு வந்து. எம்-அடியேங்களுடைய. பெருமான்-தலைவனாகிய நடராஜப் பெருமான். அருள் செய்த-திரு வாய் மலர்ந்தருளிச் செய்த. பணி-கட்டளைப் படி. செய் வோம்-செய்து நிறைவேற்றுவோம். என்று-என்று கூறி. ஏத்தி-அந்தப் பெருமானைத் துதித்து வணங்கி விட்டு. த்:சந்தி. தம்-தம்முடைய. பரிவு-பக்தி. பெருக-பெருகி எழ. வரும்-எழுந்தருளும். திருத்தொண்டர் பால்-திருத் தொண்ட ராகிய நந்தனாரிடம். சார்ந்தார்-அவர்கள் சேர்ந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 30-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'''ஐயரே, பொன்னம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ததால் நாங்கள் மூவாயிரம் அந்தணர்களும் இந்தச் சமயத்தில் வெப்ப மான நெருப்பை மூட்டி அமைத்துத் தேவரீருக்கு அளிக்க விரும்பி அடைந்தோம்.'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய உருகும் திருவுள்ளத்தைப் பெற்ற திருத்தொண்டரா கிய நந்தனார், ''அடியேன் உஜ்ஜீவனத்தை அடைந்தேன்'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்

களையும் அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்; தெய்வத் தன்மை வாய்ந்தவர்களும், இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவர்களாகிய அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும் நெருப்பை மூட்டி அமைத்த விதத்தை நந்தனாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்கள்.' பாடல் வருமாறு:

" 'ஐயரே, அம்பலவர் அருளால்இப் பொழுதணைந்தோம்;
வெய்யஅழல் அமைத்துமக்குத் தரவேண்டி' எனவிளம்ப
நையுமனத் திருத்தொண்டர், 'நான்உய்ந்தேன்' எனத் தொழுதார்;
தெய்வமறை முனிவர்களும் தீயமைத்த படிமொழிந்தார்."

ஐயரே அம்பலவர்-ஐயரே, பொன்னம்பலத்தில் திரு நடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானார். அருளால்-திரு வாய் மலர்ந்தருளிச் செய்ததால். இப்பொழுது-இந்தச் சமயத் தில். வெய்ய-வெப்பமான. அழல்-நெருப்பை. அமைத்து-மூட்டி அமைத்து; மூட்டி எரியச் செய்து. உமக்கு-தேவரீருக்கு. த்: சந்தி. தர-அளிக்க. வேண்டி-விரும்பி. அணைந்தோம்-நாங்கள் தில்லை வாழ் அந்தணர்களாகிய மூவாயிரம் பேர்களும் தேவரீரிடம் வந்து சேர்ந்தோம். என-என்று; இடைக்குறை. விளம்ப-திருவாய் மலர்ந் தருளிச் செய்ய. நையும்-உருக்கத்தை அடையும். மன-திருவுள்ளத்தைப் பெற்ற. த்: சந்தி. திருத்தொண்டர்-திரு தொண்டராகிய அந்த நந்தனார். நான்-அடியேன். உய்ந்தேன்-உஜ்ஜீவனத்தை அடைந்தேன். என-என்று திரு வாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு; இடைக்குறை. த்:சந்தி. தொழுதார்-அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களையும் அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்கி னார். தெய்வ தெய்வத் தன்மை வாய்ந்தவர்களும்; திணை மயக்கம். மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும்

முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம்; திணை மயக்கம். முனிவர்களும்—வேதியர்களாகிய அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும். தீ-நெருப்பை. அமைத்த-மூட்டி எரியச் செய்த. படி-விதத்தை. மொழிந்தார்-நந்தனாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 31-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும் அவ்வாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்ததற்குப் பிறகு சிதம்பரத்தில் உள்ள ஆலயத்துக்குத் தெற்குத் திசையில் திரு மதிலுக்கு வெளியில் பிறைச் சந்திரன் தவழும் அழகிய கோபுர வாசலுக்கு முன்பு அமையும் வண்ணம் பின்னிய சடா பாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய நடராஜப் பெருமானார் வழங்கிய நிறைந்த திருவருளினால் அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் நெருப்பை மூட்டி எரியச் செய்த குண்டத்தை நந்தனார் அடைந்து இறையவராகிய நடராஜப் பெருமானாருடைய திருவடிகளைத் தம்முடைய திருவுள்ளத்தில் தியானம் புரிந்து கொண்டே அந்த நெருப்பைச் சுற்றி வலமாக வந்து பிரதட்சிணம் செய்தார்.' பாடல் வருமாறு:

"மறையவர்கள் மொழிந்ததற்பின் தென்றிசையின் மதிற் புறத்துப்
பிறையுரிஞ்சும் திருவாயில் முன்னாகப் பிஞ்ஞகர்தம்
நிறையருளால் மறையவர்கள் நெருப்பமைத்த குழிஎய்தி
இறையவர்தாள் மனம்கொண்டே எரிசூழ வலம் கொண்டார்."

மறையவர்கள்-வேதியர்களாகிய அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும். மொழிந்ததற்பின்—அவ்வாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்ததற்குப் பிறகு. தென் திசையின்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்திற்குத் தெற்குத் திக்கில். மதில்-திருமதிலுக்கு. புறத்து-வெளியில்.

ப்: சந்தி. பிறை-பிறைச் சந்திரன். உரிஞ்சும்-தவழும். திரு-அழகிய. வாயில்-கோபுர வாசலுக்கு. முன்னாக-முன்பு அமையும் வண்ணம். ப்: சந்தி. பிஞ்ஞகர் தம்-பின்னிய சடா பாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய நடராஜப் பெருமானார். தம்: அசை நிலை. நிறை-வழங்கிய நிறைந்த. அருளால்-திருவருளினால். மறையவர்கள்-வேதியர்களாகிய அந்தத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும். நெருப்பு-நெருப்பை. அமைத்த-மூட்டி எரியச் செய்த. குழி-குண்டத்தை. எய்தி-நந்தனார் அடைந்து. இறையவர்-இறையவராகிய நடராஜப் பெருமானாருடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். மனம்-தம்முடைய திருவுள்ளத்தில். கொண்டே-தியானம் புரிந்து கொண்டே. எரி-நெருப்பை. சூழ-சுற்றி; எச்சத் திரிபு. வலம் கொண்டார்-வலமாக வந்து பிரதட்சிணம் செய்தார்.

பிறகு உள்ள 32-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த நந்தனார் தம்முடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டு விட்டு நடராஜப் பெருமானாருடைய திருநடனம் புரிந்தருளும் வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளைத் தியானித்துக் கொண்டே நெருப்புக்குள் இறங்கினார்; அவ்வாறு அந்த நெருப்புக்குள் இறங்கிய அந்தச் சமயத்தில் அந்த நெருப்பில் இந்த மாயமான பொய்யைப் பொருந்தும் பறையருடைய திருவுருவத்தைப் போக்கி விட்டு புண்ணியத்தைப் புரிந்த பெருமையைப் பெற்ற ஓர் அந்தணருடைய திருவுருவத்தைப் பெற்றவராகித் தம்முடைய திருமேனியில் விளங்கும் வெண்மையான பூணூல் பொலியத் தம்முடைய திருமுடியின் மேல் சடாபாரத்தைப் பெற்றவராய் அந்த நெருப்புக் குண்டத்திலிருந்து எழுந்து வந்தார்.' பாடல் வருமாறு:

"கைதொழுது நடமாடும் கழல்உன்னி அழல்புக்கார்;
எய்தியஅப் பொழுதின்கண் எரியின்கண் இம்மாயப்

பொய்தகையும் உருவொழித்துப் புண்ணியமா முனி வடிவாய்
மெய்திகழ்வெண் ணூல்விளங்க வேணிமுடி கொண்டெழுந்தார்.''

கை-அந்த நந்தனார் தம்முடைய கைகளை; ஒருமை பன்மை மயக்கம். தொழுது-கூப்பிக் கும்பிட்டு வணங்கிவிட்டு. நட்டமாடும்-நடராஜப் பெருமானாருடைய திருநடனம் புரிந்தருளும். கழல்-வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகுபெயர். உன்னி-தியானம் செய்து கொண்டே. அழல்-நெருப்புக்குள். புக்கார்-இறங்கினார். எய்திய-அவ்வாறு அந்த நெருப்புக்குள் இறங்கிய. அப்பொழுதின்கண்-அந்தச் சமயத்தில். எரியின்கண்-அந்த நெருப்பில். இம்மாய-இந்த மாயமான. ப்: சந்தி. பொய்-பொய்யை. தகையும்-உடையதாக விளங்கும். உரு-பறையருடைய திருவுருவத்தை. ஒழித்து-போக்கி விட்டு. ப்: சந்தி. புண்ணிய-புண்ணியச்செயல்களைப் புரிந்த; ஒருமை பன்மை மயக்கம். மா-பெருமையைப் பெற்ற. முனி-ஓர் அந்தணனுடைய. வடிவாய்-திருவுருவத்தைப் பெற்றவராகி; திணை மயக்கம். மெய்-தம்முடைய திருமேனியில். திகழ்-விளங்கும். வெண்-வெண்மையான. நூல்-பூணூல். விளங்க-திகழ. வேணி முடி-தம்முடைய திருமுடியின் மேல் சடாபாரத்தை. கொண்டு-பெற்றுக் கொண்டு. எழுந்தார்-அந்த நெருப்புக் குண்டத்திலிருந்து எழுந்து வந்தார்.

பிறகு வரும் 33-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அந்த நந்தனார் சிவந்த நெருப்பின் மேலிருந்து எழுந்து வரும் சமயத்தில் செந்தாமரை மலரின் மேல் வந்து தோன்றிய பிரம தேவனாகிய வேதியனைப் போல அந்த நாயனார் தோற்றத்தை உடையவராக விளங்கினார்; வானத்திலிருந்து தேவர்கள் முழக்கிய துந்துபி வாத்தியங்களின் இனிய கீத நாதம் வந்து எழுந்து கருமையான ஆகாயத்தில் கேட்டது; தேவர்கள் மகிழ்ச்சியை அடைந்து ஆரவாரத்தை எழுப்பி பசுமையான மலர்க் கொத்துக்களைக் கொண்ட மந்தார

மரத்தில் மலர்ந்த குளிர்ச்சியைக் கொண்ட மலர்களை மழைகளைப் போலச் சொரிந்தார்கள்.' பாடல் வருமாறு:

"செந்தீமேல் எழும்பொழுது செம்மலர்மேல் வந்தெழுந்த
அந்தணன்போல் தோன்றினார்; அந்தரதுந் துபிநாதம்
வந்தெழுந்த திருவிசும்பில்; வானவர்கள் மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந் தாரத்தின் பனிமலர்மா ரிகள்
பொழிந்தார்."

செந்தீ மேல்-அந்த நந்தனார் சிவந்த நெருப்பின் மேலிருந்து. எழும்-எழுந்து வரும். பொழுது-சமயத்தில். செம் மலர் மேல்-செந்தாமரை மலரின் மேலிருந்து. வந்து எழுந்த-வந்து தோன்றிய. அந்தணன் போல்-பிரம தேவனாகிய வேதியனைப் போல். தோன்றினார்-அந்த நாயனார் தோற்றத்தை உடையவராக விளங்கினார். அந்தர-வானத்தில் உள்ள. துந்துபி-துந்துபி என்னும் வாத்தியங்களின்; ஒருமை பன்மை மயக்கம். நாதம்-இனிய கீத நாதம். இரு-கருமையான. விசும்பில்-வானத்தில். வந்து எழுந்தது-வந்து எழுந்து கேட்டது. வானவர்கள்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. ஆர்த்து-ஆரவாரத்தை எழுப்பி. ப்: சந்தி. பைம்-பசுமையான. துணர்-மலர்க் கொத்துக்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மந்தாரத்தின்-மந்தார மரத்தில் மலர்ந்த. பனி-குளிர்ச்சியைக் கொண்ட. மலர்-மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். மாரிகள்-மழைகளைப் போல. பொழிந்தார்-சொரிந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 34-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அந்த நந்தனாரைப் பார்த்துச் செல்வத்தைப் பெற்ற தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும் அந்த நாயனாரைத் தங்களுடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டுப் பிறகு அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள்; புகழ்வதற்கு அருமையாக உள்ள திருத் தொண்டர்களும்

நந்தனாரை வணங்கித் தங்களுடைய திருவுள்ளங்களில் ஆனந்தத்தை அடைந்தார்கள்; பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும் சுற்றி வந்து வணங்கும் திருச்சிற்றம்பலத்தில் நடனம் புரிந்தருளுகின்ற வெற்றிக் கழலைக் பூண்ட நடராஜப் பெருமானாருடைய திருவடிகளைப் பணியும் பொருட்டு திருநாளைப் போவாராகும் எல்லா வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய அந்தணர் எழுந்தருளுகிறார்.' பாடல் வருமாறு:

'' திருவுடைய தில்லைவாழ் அந்தணர்கள் கைதொழுதார்;
பரவரிய தொண்டர்களும் பணிந்துமனம் களிபயின்றார்;
அருமறைசூழ் திருமன்றில் ஆடுகின்ற கழல்வணங்க
வருகின்றார் திருநாளைப் போவாராம் மறைமுனிவர்.''

திரு-அந்த நந்தனாரைப் பார்த்து. திரு-செல்வத்தை. உடைய-பெற்ற. தில்லை வாழ் அந்தணர்கள்- தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும். கை-தங்களுடைய கைகளை; ஒருமை பன்மை மயக்கம். தொழுதார் -கூப்பிக் கும்பிட்டுப் பிறகு அந்த நாயனாருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். பரவு அரிய-புகழ்வதற்கு அருமையாக உள்ள. பரவு: முதல் நிலைத் தொழிற் பெயர். தொண்டர்களும்-திருத்தொண்டர்களும். பணிந்து-நந்தனாரை வணங்கி. மனம்-தங்களுடைய திருவுள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். களி-ஆனந்தத்தை. பயின்றார்-அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். அரு-பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள. மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றி வந்து வணங்கும், திருமன்றில்-திருச்சிற்றம்பலத்தில். ஆடுகின்ற-திருநடனம் புரிந்தருளு

கின்ற. கழல்-வெற்றிக் கழலைப் பூண்ட நடராஜப் பெருமானாருடைய திருவடிகளை; ஆகு பெயர். வணங்க-பணியும் பொருட்டு. திருநாளைப் போவாராம்-திருநாளைப் போவாராகும். மறை-எல்லா வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய; ஒருமை பன்மை மயக்கம். முனிவர்-அந்தணர். வருகின்றார்-எழுந்தருளுகின்றார்.

பிறகு வரும் 35-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும் திருநாளைப் போவார் நாயனாரோடு எழுந்தருள அந்த அந்தணர்கள் எழுந்தருளி அடைந்து முல்லை நிலத்தில் வாழும் மான்குட்டியை ஏந்திய கையை உடைய நடராஜப் பெருமானார் எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் முன்னால் உயரமாக நிற்கும் கோபுர வாசலில் நின்றவாறே நடராஜப் பெருமானாரை வணங்கி மீண்டும் பணிந்து வேகமாக எழுந்தருளி ஆலயத்துக்குள் நுழைந்தார்; இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் திரு நடனத்தைப் புரிந்தருளும் சி வ லோ க த் தி ன் எல்லையை அடைந்து தலைசிறந்து நின்றார்; எல்லா மக்களும் அந்த நாயனாரைப் பார்க்க முடியவில்லை.' பாடல் வருமாறு:

"தில்லைவாழ் அந்தணரும் உடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழு
திறைஞ்சி
ஒல்லைபோய் உட்புகுந்தார்; உலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார்; யாவர்களும்
கண்டிலரால்."

தில்லை வாழ் அந்தணரும்-தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும். அந்தணர்: ஒருமை பன்மை மயக்கம். உடன்-திருநாளைப் போவார் நாயனாரோடு. செல்ல-எழுந்தருள. ச்: சந்தி. சென்று- எழுந்தருளி. எய்தி-அடைந்து. க்:சந்தி. கொல்லை-முல்லை நிலத்தில் வாழும். மான்மறி-

மான் குட்டியை ஏந்திய. க்:சந்தி. கரத்தார்-கையை உடைய நடராஜப் பெருமானார். கோபுரத்தை-எழுந்தருளியிருக்கும் ஆலயத்தின் முன்னால் உயரமாக நிற்கும் கோபுர வாசலில் நின்றவாறே; கோபுரம்: ஆகு பெயர். த்:சந்தி. தொழுது-நடராஜப் பெருமானாரை வணங்கி. இறைஞ்சி-மீண்டும் ஒரு முறை பணிந்து. ஒல்லை-வேகமாக. போய்-எழுந்தருளி. உள் -ஆலயத்துக்குள். புகுந்தார்-நுழைந்தார். உலகு-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். நடமாடும்-திரு நடனத்தைப் புரிந்தருளும். எல்லையினை-சிவலோகத்தின் எல்லையை. த்: சந்தி. தலைப்பட்டார்-அடைந்து தலை சிறந்து நின்றார். யாவர்களும்-எல்லா மக்களும். கண்டிலர்-அந்த நாயனாரைப் பார்க்க முடியவில்லை. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 36-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருநாளைப் போவார் நாயனார் மறைந்து போனதைப் பார்த்துத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவா யிரம் பேர்களும் வியப்பை அடைந்தார்கள்; அருமையாக விளங்கும் முனிவர்கள் அந்த நாயனாரைத் துதித்தார்கள்; தம்மிடம் வந்து சேர்ந்த திருத்தொண்டராகிய திருநாளைப் போவார் நாயனாருடைய பாவங்களாகிய அழுக்குகள் எல்லாவற்றையும் போக்கி விட்டு அழகைப் பெற்ற செந்தாமரை மலர்களை ஒத்து விளங்கும் தம்முடைய இரண்டு திருவடிகளையும் வணங்கிக் கொண்டு இருக்குமாறு முடிவு இல்லாத பெருமையை உடைய ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளுபவர் தம்முடைய திருவருளை மகிழ்ந்து வழங்கியருளினார்.' பாடல் வருமாறு:

அந்தணர்கள் அதிசயித்தார்; அருமுனிவர் துதிசெய்தார்;
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மையினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையும் துணையடிகள் தொழுதிருக்க
அந்தமிலா ஆனந்தப் பெருங்கூத்தர் அருள்புரிந்தார்."

அந்தணர்கள்-அவ்வாறு திருநாளைப் போவார் நாயனார் மறைந்து போனதைப் பார்த்துத் தில்லை வாழ் அந்தணர்கள் மூவாயிரம் பேர்களும். அதிசயித்தார்-வியப்பை அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். அரு-அருமையாக விளங்கும். முனிவர்-முனிவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். துதி செய்தார்-தோத்திரங்களை இயம்பினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். வந்து-தம்மிடம் வந்து. அணைந்த-சேர்ந்த. திருத்தொண்டர் தம்மை-திருத்தொண்டராகிய திருநாளைப் போவார் நாயனாருடைய; உருபு மயக்கம். தம்: அசை நிலை. வினை-பாவங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். மாசு-அழுக்குக்கள்; ஒருமை பன்மை மயக்கம். அறுத்து-எல்லாவற்றையும் போக்கி விட்டு. ச்: சந்தி. சுந்தர-அழகைப் பெற்ற. த்: சந்தி. தாமரை-செந்தாமரை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். புரையும்-ஒத்து விளங்கும். துணை-இரண்டு. அடிகள்-திருவடிகளையும். தொழுது-வணங்கிக் கொண்டு. இருக்க-கவலையின்றி இருக்குமாறு. அந்தம்-முடிவு. இலா-இல்லாத; இடைக்குறை. ஆனந்தப் பெருங்கூத்தர்-பெருமையை உடைய ஆனந்தத் தாண்டவம் புரிந்தருளுபவராகிய ஆனந்தத் தாண்டவ மூர்த்தியார். அருள்-தம்முடைய திருவருளை. புரிந்தார்-அந்தத் திருநாளைப் போவார் நாயனாருக்கு மகிழ்ந்து வழங்கியருளினார்.

அடுத்து வரும் 37-ஆம் பாடல் இந்தத் திருநாளைப் போவார் நாயனார் புராணத்தின் இறுதிப் பாட்டு. அதன் கருத்து வருமாறு:

"அந்தத் திருநாளைப் போவார் நாயனார் அழுக்குக்களைப் பெற்ற தம்முடைய திருமேனியை விடுவதற்காக நெருப்பில் திருமஞ்சனம் புரிந்தருளி விட்டுப் பின்பு அந்த நெருப்பிலிருந்து எழுந்து வந்து நின்று கொண்டு ஒரு குற்றமும் இல்லாத வேதங்களை அத்தியயனம் செய்து நிறைவேற்றிய அந்தணனாக மாறி பொன்னம்பலத்தில் திருநட

னம் புரிந்தருளும் பொன்னம்பலவாணருடைய திருவடிகளை அடைந்தார்; அந்த நாயனாருடைய தேஜஸ் பொருந்தியவையும், வெற்றிக் கழலைப் பூண்டவையுமாகிய திருவடிகளை வாழ்த்தி வணங்கி விட்டு, திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தம்முடைய பாவங்களாகிய கயிறு அறுமாறு முயற்சி செய்தவருடைய திருத்தொண்டுகளின் இயல்பை இனிமேல் அடியேம் பாடுவோம்.' பாடல் வருமாறு:

'' மாசுடம்பு விடத்தீயின் மஞ்சனம்செய் தருளிஎழுந்
தாசில்மறை முனியாகி அம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாழ்த்தித் திருக்குறிப்புத் தொண்டர் வினைப்
பாசமற முயன்றவர்தம் திருத்தொண்டின் பரிசுரைப்பாம்.''

இந்தப் பாடல் அடுத்து வரும் திருக்குறிப்புத் தொண்டர் நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகச் சேக்கிழார் பாடியருளியது. மாசு-அந்தத் திருநாளைப் போவார் நாயனார் அழுக்குக்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். உடம்பு-தம்முடைய பறையர் சாதியிற் பிறந்த திருமேனியை. விட-விடுவதற்காக. த்:சந்தி. தீயின்-தில்லை வாழ் அந்தணர்கள் மூட்டி எரியச் செய்த நெருப்பில். மஞ்சனம்-திருமஞ்சனம்; அபிடேகம். செய்தருளி-புரிந்தருளி. எழுந்து-அந்த நெருப்புக் குண்டத்திலிருந்து எழுந்து வந்து நின்று கொண்டு. ஆசு-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய; ஒருமை பன்மை மயக்கம். முனியாகி-அந்தணனாக மாறி. அம்பலவர்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பொன்னம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் பொன்னம்பல வாணருடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அடைந்தார்-சேர்ந்தார். தேசு-தேஜஸ்ஸை; ஒளியை. உடைய-பெற்ற. கழல்-வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளை; ஆகு பெயர்.

வாழ்த்தி-வாழ்த்தி வணங்கிவிட்டு. த்:சந்தி. திருக்குறிப்புத் தொண்டர்-திருக்குறிப்புத் தொண்ட நாயனார். வினை-செய்த பாவங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாசம்-கயிறு. அற-அற்றுப் போகும் வண்ணம். முயன்றவர் தம்-முயற்சி செய்தவராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய. தம்:அசை நிலை. திருத்தொண்டின்-திருத் தொண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பரிசு-இயல்பை. உரைப்பாம்-இனிமேல் அடியேம் பாடுவோம்.

திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 4- ஆவதாக உள்ள மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் 5-ஆவதாக விளங்குவது திருக்குறிப் புத் தொண்ட நாயனார் புராணம். அதில் வரும் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'பொருந்தும் வகையில் பலவிதமாக உள்ள உயிர்களுக்கு வரம்பு இல்லாத கருணையை வழங்கும் அன்னையைப் போன்றவளாகிய காமாட்சி அம்மை ஒப்பற்றவராகத் திகழும் தன்னுடைய கணவராகிய ஏகாம்பரேசுவரரை அணைத்துத் தழுவும் பொருட்டு அந்தணர்கள் ஆராய்ச்சி புரியும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர் வண வேதம் என்னும் நான்கு வேதங்களும் போற்றி வாழ்த்து மாறு நின்று கொண்டு அருமையான தவத்தைச் செய்யப் பரிசுத்தமும் பெருமையும் பெற்ற தவத்தைப் புரிந்தருளியது நல்லோர்கள் வாழும் தொண்டை நாடு.' பாடல் வருமாறு:

'' ஏயு மாறுபல் உயிர்களுக் கெல்லையில் கருணைத்
தாய் னாள்தனி ஆயின தலைவரைத் தழுவ
ஆயும் நான்மறை போற்றநின் றருந்தவம் புரியத்
தூய மாதவம் செய்தது தொண்டைநன் னாடு.''

ஏயும்-பொருந்தும். ஆறு-வகையில். பல் - பலவகையாக உள்ள. உயிர்களுக்கு-உயிர்களைப் பெற்றவற்றிற்கு. அந்த உயிர்களாவன: மக்கள், பலவகை விலங்குகள், பலவகையான பறவைகள், ஊர்வன, புழுக்கள், பூச்சிகள், நீர் வாழ் பிராணிகள் முதலியவை. எல்லை-வரம்பு. இல்-இல்லாத; கடைக்குறை. கருணை-கருணையை வழங்கும். த்:சந்தி. தாய்-அன்னையை. அனாள்-போன்றவளாகிய காமாட்சி அம்மை; இடைக்குறை. தனி-ஒப்பற்றவர்; திணை மயக்கம். ஆயின-ஆக விளங்கும்; கால மயக்கம். தலைவரை-தன்னுடைய கணவராகிய ஏகாம்பரேசுவரரை. த்:சந்தி. தழுவ-அணைத்துத் தழுவும்பொருட்டு. ஆயும்-அந்தணர்கள் ஆராய்ச்சி புரியும். நான்மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும். மறை: ஒருமை பன்மை மயக்கம். போற்ற-போற்றி வாழ்த்துமாறு. நின்று-நின்று கொண்டு. அரும்-செய்வதற்கு அருமையாகும். தவம்-தவத்தை. புரிய-செய்தருள. த்:சந்தி. தூய-பரிசுத்தமாக உள்ள. மா-பெருமையைப்பெற்ற. தவம்-தவத்தை. செய்தது-புரிவதற்கு இடமாக விளங்குவது. தொண்டை நல் நாடு-நல்ல தூயவர்கள் வாழும் தொண்டை நாடு; "தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத் தூயமாந்தர் வாழ் தொண்டை நாட்டியல்பு." என்று சேக்கிழார் பாடியருளியதைக் காண்க.

பிறகு உள்ள 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பலவகையான நன்மைகளை நெடுங்காலமாகப் பெற்று விளங்கிய சமநிலையாகிய நல்ல ஒழுக்கத்தினால் தாங்கள் விரும்பிய இயல்பை அடைந்த தலைமைப் பதவி அமைந்த, பெருமையைப் பெற்ற குடிமக்கள் தழைத்து ஓங்கி வாழவும், வலிமையோடு உயர்ந்து நிற்கும் திருமதிலைப் பெற்று நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலியவற்றோடு அமைந்த பல சிவத்தலங்களை உடையதும்,

எல்லையிலும், பழமையிலும், மேம்பாட்டிலும் சிறந்து நடக்கும் மக்கள் வாழ்வது பெருமையைப்பெற்ற நல்ல தொண்டை நாடு ஆகும்.' பாடல் வருமாறு:

> ''நன்மை நீடிய நடுநிலை ஒழுக்கத்து நயந்த
> தன்மை மேவிய தலைமைசால் பெரும்குடி தழைப்ப
> வன்மை ஓங்கெயில் வளம்பதி பயின்றது வரம்பின்
> தொன்மை மேன்மையில் நிகழ்பெரும் தொண்டை
> நன்னாடு.''

நன்மை-பலவகையான நன்மைகளை; ஒருமை பன்மை மயக்கம். அந்த நன்மைகளாவன: செல்வர்கள் வாழ்ந்திருத்தல், நீர் வளம், நில வளம் முதலியவற்றைப் பெற்றிருத்தல், பிறருக்கு வரையறை இன்றி வழங்கும் வள்ளல்களைப் பெற்று விளங்குதல் முதலியவை. நீடிய-நெடுங்காலமாகப் பெற்று விளங்கிய. நடுநிலை-சம நிலையாகிய. ஒழுக்கத்து-நல்ல ஒழுக்கத்தினால். நயந்த-தாங்கள் விரும்பிய. தன்மை-இயல்பை. மேவிய-அடைந்த. தலைமை-தலைமைப் பதவி. சால்-அமைந்த. பெரும்-பெருமையைப் பெற்ற. குடி-குடி மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். 'குடும்பங்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். தழைப்ப-தழைத்து ஓங்கி வாழவும். வன்மை-வலிமையோடு. ஓங்கு-உயர்ந்து நிற்கும் எயில்-திருமதிலைப் பெற்று. வளம்-நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலியவற்றோடு; ஒருமை பன்மை மயக்கம். பதி-அமைந்த பல் சிவத்தலங்களை; ஒருமை பன்மை மயக்கம். பயின்றது-உடையதும். வரம்பின்-எல்லையிலும். தொன்மை-பழமையிலும். மேன்மையில்-மேம்பாட்டிலும். நிகழ்-சிறந்து நடக்கும் மக்கள் வாழ்வது; திணை மயக்கம். பெரும்-பெருமையைப் பெற்ற. தொண்டை நன்னாடு-நல்ல தொண்டை நாடு ஆகும்.

பிறகு உள்ள 3-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நல்ல வகையான செயல்களையே செய்யும் மக்கள் வாழும் பழையனூரில் சிறுத்தொண்ட நாயனார் குற்றம்

தம்மை வந்து அடைந்த சமயத்தில் தம்முடைய ஆவியையும் ஒரு வியாபாரிக்கு ஒரு காலத்தில் தாங்கள் கூறிய உண்மையையும் எண்ணிப் பார்த்து அந்த உண்மையான வார்த்தைகளைப் பாதுகாக்கும் பேற்றினைப் பெற்ற மேம்பாட்டோடு நடந்தது பெருமையைப் பெற்ற தொண்டை நாடு.' பாடல் வருமாறு:

> "நற்றி றம்புரி பழைய னூர்ச் சிறுத்தொண்டர் நலைவந்
> துற்ற போதுதம் உயிரையும் வணிகனுக் கொருகால்
> சொற்ற மெய்ம்மையும் தூக்கிஅச் சொல்லையே காக்கப்
> பெற்ற மேன்மையில் நிகழ்ந்தது பெருந்தொண்டை
> நாடு."

நல்-நல்ல. திறம்-வகையான செயல்களையே; ஒருமை பன்மை மயக்கம். புரி-செய்யும். பழையனூர்-திருவாலங் காட்டைச் சார்ந்த பழையனூரில். ச்: சந்தி. சிறுத்தொண் டர்-சிறுத்தொண்ட நாயனார். நலை-குற்றம். வந்து-தம் மிடம் வந்து. உற்ற-அடைந்த. போது-சமயத்தில். தம்-தங்க ளுடைய. உயிரையும்-உயிர்களையும்; ஒருமை பன்மை மயக் கம். வணிகனுக்கு-ஒரு வியாபாரிக்கு. ஒருகால்-ஒரு காலத்தில். சொற்ற-தாங்கள் கூறிய. மெய்ம்மையும்-உண்மையையும். தூக்கி-எண்ணிப் பார்த்து. அச்சொல்லையே-அந்த உண்மை யான வார்த்தைகளை. சொல்: ஒருமை பன்மை மயக்கம். ஏ: அசை நிலை. காக்கப் பெற்ற-பாதுகாக்கும் பேற்றினைப் பெற்ற. மேன்மையில்-மேம்பாட்டோடு; உருபு மயக்கம். நிகழ்ந்தது-நடந்தது. பெரும்-பெருமையைப் பெற்ற. தொண்டை நாடு-அந்தத் தொண்டை நாடு.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட வரலாறு வருமாறு:

ஒரு வணிகன் திருவாலங்காட்டைச் சேர்ந்த பழையனூரில் செல்லும் போது நீலி என்ற ஒரு பேய் மகள் ஒரு கரிக் கட்டையைத் தன்னுடைய குழந்தையைப் போலச் செய்து அந்த வணிகனிடம் வந்து, "நீங்கள் என்னை விட்டு விட்டு வரலாமா? நான் கைக்குழந்தையோடு இருக்கிறேன். வாருங்

கள். நம் இல்லத்துக்குச் செல்லுவோம்'' என்றாள். அந்த வணிகன் அவள் பேய் மகள் என்பதை அறிந்து அவளோடு செல்ல மறுத்தான். அப்போது அந்த நீலி அந்த ஊரில் வாழ்ந்திருந்த எழுபது வேளாளர்களிடம் சென்று, ''என்னுடைய கணவர் என்னோடு வர மாட்டேன் என்கிறார். அவரை என்னோடு வருமாறு நீங்கள் சொல்ல வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டாள். அந்த வேளாளர்கள் அந்த வணிகனை அழைத்து, ''நீ இவளுடன் செல்வதற்கு ஏன் மறுக்கிறாய்?'' என்று கேட்க, அவன், ''ஐயோ, அவள் என் மனைவி அல்லள். அவள் ஒரு பேய் மகள். அவளோடு நான் சென்றால் அவள் என்னைக் கொன்று தின்று விடுவாள்'' என்றான். அந்த வார்த்தைகளைக் கேட்ட அந்த எழுபது வேளாளர்களும், ''நீ இவளோடு போவதுதான் முறை. ஒரு கால் இவள் நீ சொன்னபடி உன்னைக் கொன்று தின்றுவிட்டால் நாங்கள் எழுபது பேரும் தீக்குளித்து எங்களுடைய உயிர்களை விடுவோம்.'' என்று உறுதியாகக் கூறினார்கள். அந்த வணிகன் அவர்கள் கூறியதை மறுக்க மாட்டாமல் அந்த நீலியோடு சென்று ஓர் இல்லத்தில் புகுந்தான். அங்கே அந்த நீலி அவனைக் கொன்று தின்று விட்டாள். மறுநாள் அந்த இல்லத்தைத் திறந்து பார்த்த போது நீலி என்னும் பேய் மகள் அந்த வணிகனைக் கொன்று தின்று விட்டதை அறிந்து கொண்டார்கள். பிறகு அந்த எழுபது வேளாளர்களும் அந்த வணிகனுக்குத் தாங்கள் கூறிய உறுதிமொழிப்படி தீக்குளித்துத் தங்களுடைய உயிர்களை நீத்தார்கள்.

பிறகு வரும் 4-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இது சிவபெருமான் இட்ட ஆக்ஞையாகும் என்று எண்ணி ஒரு வண்ணான் திருமேனியின் மேல் விபூதியைப் போல இருந்த தோற்றத்தைப் பார்த்து, ''அடியேன் அடிச்சேரன்.'' என்று அவனுடைய திருவடிகளில் விழுந்து பணிந்து நிற்கும் நெடுந்தூரம் பரவிய சீர்த்தியைப் பெற்ற சேரமான் பெருமாள் நாயனார் ஆட்சி புரிந்தருளிய அழகிய மலை நா

டில் ஒளி வீசிய அணிகலன்களை அணிந்த வீரர்களை மைத்துனர்கள் என்னும் உறவின் முறையைப் பாதுகாக்க நெடுங் காலமாக விளங்கிய முறையைப் பெற்றது பெருமையைப் பெற்ற அந்தத் தொண்டை நாடு.' பாடல் வருமாறு:

"ஆணை யாமென நீறுகண்; 'டடிச்சேரன்' என்னும்
சேணு லாவுசீர்ச் சேரனார் திருமலை நாட்டு
வாணி லாவுபூண் வயவர்கள் மைத்துனக் கேண்மை
பேண நீடிய முறையது பெருந்தொண்டை நாடு."

ஆணை-இது சிவபெருமான் இட்ட ஆக்ஞை. ஆம்-ஆகும். என-என்று எண்ணி;இடைக்குறை. நீறு-ஒரு வண்ணானுடைய திருமேனியின் மேல் விபூதியைப் போல இருந்த தோற்றத்தை; ஆகுபெயர். கண்டு-பார்த்து. அடிச்சேரன்-அடியேன் தேவரீருடைய திருவடிகளை வணங்கும் சேர மன்னன். அடி: ஒருமை பன்மை மயக்கம். என்னும்-என்று அந்த வண்ணானுடைய திருவடிகளில் விழுந்து வணங்கி நிற்கும். சேண்-நெடுந்தூரம். உலாவு- பரவிய. சீர்-சீர்த்தியைப் பெற்ற. ச்: சந்தி. சேரனார்-சேரமான் பெருமாள் நாயனார். திரு-ஆட்சி புரிந்தருளிய அழகிய. மலைநாட்டு-மலைநாட்டில். வாள்-ஒளியை. நிலாவு-வீசிய. பூண்-கழல்கள், தோள் வளைகள் முதலிய அணிகலன்களை அணிந்த; ஒருமை பன்மை மயக்கம். வயவர்கள்-படை வீரர்கள். மைத்துன-மைத்துனர்கள் என்னும்; திணை மயக்கம். க்:சந்தி. கேண்மை-உறவின் முறையை. பேண-பாதுகாக்க. நீடிய-அதனால் நெடுங்காலமாக விளங்கிய. முறையது-முறைமையைப் பெற்றது. பெரும்-பெருமையைப் பெற்ற. தொண்டை நாடு-அந்தத் தொண்டை நாடு.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட வரலாறு வருமாறு:

மலை நாட்டில் உள்ள பழைய ஊர் கொடுங்கோளூர். அந்த ஊரில் சேர மன்னர்களின் பரம்பரையில் திருவவதாரம் செய்தருளியவர் பெருமாக் கோதையார் என்பவர். அவர் மன்னராக இருப்பதை விட்டு விட்டுத் திருவஞ்சைக் களத்தில்

கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அஞ்சைஅப்பருக்குரிய திருத்தொண்டுகளையே புரிந்து வந்தார். அவரை அரசை ஏற்று ஆட்சி புரியுமாறு அமைச்சர்கள் வேண்டிக் கொண்டார்கள். அப்போது அஞ்சையப்பரிடம் சென்று அந்தப் பெருமாக் கோதையார் அவருடைய சம்மதத்தைப் பெற வேண்டித் துதித்தார். அஞ்சையப்பர் அரசாட்சி உரிமையையும், எந்த விலங்குகளும், பறவைகள் முதலியவையும், எந்தத் தாய் மொழி பேசும் மக்களும் பேசிய வார்த்தைகளைத் தெரிந்து கொள்ளும் அறிவாற்றலை அந்தச் சேர மன்னருக்கு வழங்கியருளினார். அஞ்சையப்பருடைய ஆணையின் படியே பெருமாக்கோதையார் அரசை ஏற்று ஆட்சி புரிந்து வந்தார். ஒரு நாள் அந்தச் சேர மன்னர் யானையின் மேல் ஏறிக் கொண்டு கொடுங்கோளூர் என்னும் நகரத்தை வலமாக வரும் போது உவர்மண் மூட்டையைத் தன்னுடைய தலையின் மேற் சுமந்து கொண்டு ஒரு வண்ணான் தமக்கு முன்னால் வருவதைப் பார்த்தார். மழையினால் அவன் சுமந்து கொண்டிருந்த உவர்மண் கரைந்து அவனுடைய உடம்பின் மேல் வழிந்து திருநீற்றைப் பூசிக் கொண்டவனைப் போலத் தோன்றினான். அவனைப் பார்த்து, ''இவர் சிவபெருமானுடைய அடியவர்'' என்று எண்ணி யானையிலிருந்து இறங்கி வந்து அந்த வண்ணானிடம் சென்று அவனைத் தம்முடைய கைகளைக் கூப்பிக் கும்பிட்டார். அதைக் கண்ட அந்த வண்ணான் தன்னுடைய உள்ளத்தில் கலக்கத்தை அடைந்து, ''அடியேன் அடிவண்ணான்'' என்று கூறி சேர மன்னரை வணங்கினான். அப்போது அந்தப் பெருமாக் கோதையார், ''அடியேன் அடிச்சேரன். தேவரீர் விபூதியைப் பூசிய திருவேடத்தை நினைக்கச் செய்தீர். அதனால் அடியேன் உம்மைப் பணிந்தேன்.'' என்று கூறி அவனுக்கு விடை கொடுத்து அனுப்பினார். இந்த வரலாற்றைச் சேக்கிழார் பின் வருமாறு பாடியருளியிருக்கிறார்.

மாவீற்றிருந்த பெருஞ்சிறப்பின் மன்னும் தொன்மை மலை நாட்டுப்
பாவீற்றிருந்த பல்புகழிற் பயிலும் இயல்பிற் பழம்பதிதான்
சேவீற்றிருந்தார் திருவஞ்சைக் களமும் நிலவிச் சேரர் குலக்
கோவீற்றிருந்து முறைபுரியும் குலக்கோ மூதூர் கொடுங்கோளூர்."

"முருகுவிரியும் மலர்ச்சோலை மூதூ ரதன்கண் மறைமரபின்
அருகிஅழியும் கலிநீக்கி அறம்கொள் சைவத் திறம்தழைப்பத்
திருகுசின வெங் களியானைச் சேரர்குலமும் உலகும்செய்
பெருகுதவத்தால் அரனருளாற் பிறந்தார் பெருமாக் கோதையார்."

"மண்மேற் சைவநெறிவாழ வளர்ந்து முன்னை வழிஅன்பாற்
கண்மேல் விளங்கு நெற்றியினார்கழலே பேணும் கருத்தினராய்
உண்மே வியஅன் பினராகி உரிமைஅரசர் தொழில் புரியார்
தெண்ணீர் முடியார் திருவஞ்சைக் களத்தில் திருத்தொண் டேபுரிவார்."

"நீரின்மலிந்த கடல்கழி நெடுமால் வரையின் கொடிமதில் சூழ்
சீரின் மலிந்த திருநகர மதனிற்செங்கோற் பொறையனெனும்
காரின்மலிந்த கொடைநிழல் மேற்கவிக்கும் கொற்றக் குடைநிழற் கீழ்த்
தாரின்மலிந்த புயத்தரசன் தரணிநீத்துத் தவம்சார்ந்தான்."

"வந்தமரபின் அரசளிப்பான் வளம்சார்தவத்தின் மருவியபின்
சிந்தை மதிநூல் தேரமைச்சர் சிலநாள் ஆய்ந்து தெளிந்தநெறி

முந்தை மரபின் முதல்வர்திருத் தொண்டு முயல்வார் முதற்றாக
இந்து முடியார் திருவஞ்சைக் களத்தில் அவர்பால்எய் தினார்."
"எய்தி அவர்தம் எதிர்இறைஞ்சி இருந்தண் சாரல்மலை நாட்டுச்
செய்தி முறைமை யாலுரிமைச் செங்கோ லரசு புரிவதற்கு
மைதீர் நெறியின் முடிசூடி அருளும் மரபால் வந்ததெனப்
பொய்தீர் வாய்மை மந்திரிகள் போற்றிப் புகன்ற பொழுதின்கண்."
"இன்பம் பெருகும் திருத்தொண்டுக் கிடையூறாக இவர் மொழிந்தார்
அன்பு நிலைமை வழுவாமை அரசுபுரக்கும் அருள்உண்டேல்
என்பும் அரவும் புனைந்தாரை இடைபெற் றறிவே னென்புக்கு
முன்பு தொழுது விண்ணப்பம் செய்ய முதல்வர் அருளினால்."
"மேவும் உரிமை அரசளித்தே விரும்பு காதல் வழிபாடும்
யாவும் யாரும் கழறினவும் அறியும் உணர்வும் ஈதில்லாத்
தாவில் விறலும் தண்டாத கொடையும் படைவா கனமுதலாம்
காவல் மன்னர்க் குரியனவும் எல்லாம் கைவந்துரப் பெற்றார்."
"தம்பிரானார் கோயில் வலம்கொண்டு திருமுன் தாழ்ந்தெழுந்து
கும்பயானை மேல்கொண்டு கொற்றக் குடையும் சாமரையும்
நம்பும்உரிமை யவர்தாங்க நலங்கொள் நகர்சூழ் வலம்கொள்வார்
மொய்ம்பில் உவரின்பொதி சுமந்தோர் வண்ணான் முன்னே வரக்கண்டார்."

"மழையிற் கரைந்தங் குவருறி மேனி வெளுத்த
வடிவினால்
உழையிற் பொலிந்த திருக்கரத்தார் அடியார்
வேட மென்றுணர்ந்தே
இழையிற் சிறந்த ஓடை நுதல் யானைக் கழுத்தி
னின்றிழிந்து
விழைவிற் பெருகும் காதலினால் விரைந்து சென்று
கைதொழுதார்."

"சேரர் பெருமான் தொழக்கண்டு சிந்தை கலங்கி முன்
வணங்கி
யாரென் றடியே னைக்கொண்ட தடியேன்அடி வண்
ணான் என்னச்
சேரர் பிரானும் அடிச்சேரன் அடியேன் என்று
திருநீற்றின்
வார வேடம் நினைப்பித்தீர் வருந்தா தேகும்என
மொழிந்தார்."

(சேரமான் பெருமாள் நாயனார் புராணம்)

பிறகு வரும் 5-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஆலகால விடத்தை விழுங்கியமையால் உண்டான நீல நிறம் திகழ்ந்த கழுத்தைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரரிடத்தில் காதலைப் புரியும் முறை நிறைந்து கடப்பதற்காக நுட்பமான அணிகலன்களை அணிந்திருக்கும் காமாட்சி அம்மை முப்பத்திரண்டு தருமங்களைச் செய்ததனால் பிறைச் சந்திரன் தவழும் திருமதிலைப் பெற்ற சிவத்தலமாகிய அந்தக் காஞ்சீபுரம் விளங்கும் பெருமையைப் பெற்ற தொண்டை நாட்டினுடைய முறைமை ஆகும் என்று இந்த உலகத்தில் வாழ்பவர்களிடத்தில் மிக்குப் பாராட்டும் புகழ் வார்த்தைகளை அந்தத் தொண்டை நாடு உடையது.'

பாடல் வருமாறு:

"கறைவி ளங்கிய கண்டர்பாற் காதல்செய் முறைமை
நிறைபு நீந்திட நேரிழை அறம்புரிந் ததனால்

பிறையு ரிஞ்செயிற் பதிபயில் பெருந்தொண்டை நாட்டு
முறைமை யாமென உலகினில் மிகுமொழி உடைத்தால்.''

கறை-ஆலகால விடத்தை விழுங்கியமையால் உண்டான நீல நிறம். கறை-கறுப்பு நிறம்; இங்கே நீல நிறம் என்று கொள்க. கறுப்பு நிறத்தை நீல நிறம் என்பது வழக்கு: ''நீல நிறக்காக்கை'' என வருதலைக் காண்க. விளங்கிய-திகழ்ந்த. கண்டர்பால்-கழுத்தைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரரிடத்தில். காதல் செய்-காதலைப் புரியும்-முறைமை-முறை. நிறைபு-நிறைந்து. நீந்திட-கடப்பதற்காக. நேர்-நுட்பமான; 'ஒன்றற்கு ஒன்று சமமான' எனலும் ஆம். இழை-அணிகலன்களை அணிந்த காமாட்சி அம்மை. நேரிழை: அன்மொழித் தொகை. அறம்-முப்பத்திரண்டு தருமங்களை; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. புரிந்ததனால்-செய்தருளியமையால். பிறை-பிறைச் சந்திரன். உரிஞ்சு-தவழும். எயில்-திருமதில் சூழ்ந்த. பதி-சிவத்தலமாகிய காஞ்சீபுரம். பயில்-விளங்கும். பெரும்-பெருமையைப் பெற்ற. தொண்டை நாட்டு-தொண்டை நாட்டில் வாழும் மக்களுடைய; இட ஆகு பெயர். முறைமை யாம்-முறைமை ஆகும். என-என்று; இடைக் குறை. உலகினில்-இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்களிடத்தில்; இட ஆகு பெயர். மிகு-மிக்குப் பாராட்டும். மொழி-புகழ் வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். உடைத்து-அந்தத் தொண்டை நாடு உடையது. ஆல்: ஈற்றசை நிலை.

நேரிழை: ''அருளாய் என்னும் நேரிழையே.'', ''மாதனை நேரிழையேர் தடங்கண் மலையான்மகள்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''நேரிழையாவாள் நிரதிசயானந்தப் பேருடையாள்:'' என்று திருமூலரும், ''நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்.'' என்று ஆண்டாளும், ''நேரிழை நடந்தாள்.'' என்று நம்மாழ்வாரும், ''நேரிழைக் குரையெ யன.'', ''நேரிழை மகளிரை.'', ''நேரிழை மடந்தை

யர்.", "நீலமொ டிகன்ற நேரிழை மகளிரை.", "நேரிழை அரிவை நின்வாய்க் கேட்டனென்." (பெருங்கதை, 1.37:367, 41:105, 49:942.12,57, 3.10:177) என்று கொங்கு வேளி ரும், "அமிர்தொக்கும் நேரிழை."(சித்திர கூடப் படலம்,24), "நேரிழை மகளிர் கூந்தல்." (மாரீசன் வதைப் படலம்,163), "நீண்டவிழி நேரிழை." (உருக்காட்டுப் படலம், 68) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பிறகு வரும் 6-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கெடுதல் இல்லாத சிவந்த மாணிக்கங்கள் மலையி லிருந்து குதிக்கும் அருவியின் நீர் வழியே மலைச்சாரல்களி லிருந்து இறங்குபவையாக விளங்கும்; மலர்களில் வண்டு களின் கூட்டம் முல்லை நிலத்தில் மரங்களில் மலர்ந்திருக்கும் மலர்களில் உள்ள புதிய தேனைக் குடிப்பவையாக இருக்கும்; மருத நிலத்தில் உள்ள வாவிகளில் நீளமான கயல் மீன்கள் வயல்களில் உள்ள வரப்புக்கள் அழியும் வண்ணம் துள்ளிக் குதிப்பவையாகத் திகழும்; நெய்தல் நிலத்தில் முத்துக்களைக் கழுவி வலையர் சாதிப் பெண்மணிகள் உலர்த்துபவையாக இலகும்.' பாடல் வருமாறு:

"தாவில் செம்மணி அருவியா றிழிவன சாரல்;
பூவில் வண்டினம் புதுநற வருந்துவ புறவம்;
வாவி நீள்கயல் வரம்பிற உகைப்பன மருதம்;
நீவி நித்திலம் பரத்தியர் உணக்குவ நெய்தல்."

சாரல்-குறிஞ்சி நிலத்தில் உள்ள மலைச்சாரல்களில்; ஒருமை பன்மை மயக்கம். குறிஞ்சி நிலம்-மலையும் அதைச் சார்ந்த இடங்களும். தா-கெடுதல். இல்-இல்லாத; கடைக் குறை. செம்மணி-சிவந்த நிறத்தைப் பெற்ற மாணிக்கங்கள். அருவியாறு-மலையிலிருந்து குதிக்கும் அருவியின் நீரோடு இழிவன-இறங்குபவையாக விளங்கும். புறவம்-முல்லை நிலத் தில் பலவகை மரங்களில் மலர்ந்திருக்கும். முல்லை நிலம்-காடும் அதைச் சார்ந்த இடங்களும். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், மா மரம், பல

வகை வாழை மரங்கள், புளிய மரம், சண்பக மரம், மகிழ மரம், கடம்ப மரம், வேப்ப மரம், வாதநாராயண மரம், வில்வ மரம் முதலியவை. பூவில்-மலர்களில்; ஒருமை பன்மை மயக்கம். வண்டு-வண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இனம்-கூட்டம். புதுநறவு-மலர்களில் உள்ள புதிய தேனை. அருந்துவ-குடிப்பவையாக இருக்கும். மருதம்-மருத நிலத்தில். மருத நிலம்-வயல்களும் அவற்றைச் சார்ந்த இடங்களும். வாவி-வாவிகளில்; ஒருமை பன்மை மயக்கம். வாவி-வாபி என்ற வடசொல்லின் திரிபு. நீள்-நீளமாக இருக்கும். கயல்-கயல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். வரம்பு-வயல்களில் உள்ள வரப்புக்கள்; ஒருமை பன்மை மயக்கம். இற-அழியுமாறு. உகைப்பன-துள்ளிக் குதிப்பவையாக இலகும். நித்திலம்-முத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். நீவி-தண்ணீரில் கழுவி. பரத்தியர்-வலையர் சாதிப் பெண்மணிகள். நெய்தல்-நெய்தல் நிலத்தில். நெய்தல் நிலம்-கடற்கரையும் அதைச் சார்ந்த இடங்களும். உணக்குவ-உலர்த்துபவையாகத் திகழும்.

அடுத்து வரும் 7-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'குறிஞ்சி நிலத்தில் வாழும் குறவர்கள் பல வகையான இரத்தினங்களை அரித்து எடுத்துப் புதிய கொல்லை நிலங்களில் புதைப்பார்கள்; காடுகளில் பால் கறப்பவையாகிய பசுமாடுகளினுடைய வரிசை அங்கே வாழும் மான்களோடு பழகுபவையாக விளங்கும்; வயல்களில் பலவகையான பறவைகள் தாமரை மலர்களில் அமர்ந்திருந்து இறா மீன்களைத் தின்பவையாக விளங்கும்; கழிகளை அடுத்த இடங்களில் சுறா மீன்களினுடைய முட்களைப் பெற்ற கொம்புகளை நட்டுத் தெய்வத்தை அந்த இடங்களில் வாழும் மக்கள் வணங்குவார்கள்.' பாடல் வருமாறு:

" குறவர் பன்மணி அரித்திதை விதைப்பன குறிஞ்சி;
கறவை ஆன்நிரை மானுடன் பயில்வன கானம்;

பறவை தாமரை யிருந்திற வருந்துவ பழனம்;
சுறவ முள்மருப் பணங்கயர் வனகழிச் சூழல்.''

குறிஞ்சி-மலைச் சாரல்களில். குறவர்-அந்த மலையில் வாழும் குறவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல் - பலவகை யாகிய. மணி-இரத்தினங்களை; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மாணிக்கம், நீலமணி, மரகதக் கல், கோமேதகம், புட்பராகம். பதுமராகம், வஜ்ரம், வயிடூரியம், மஞ்சள் நிறக்கல் என்பவை. அரித்து-நீரில் அரித்து. இதை-கொல்லை நிலங்களில்; ஒருமை பன்மை மயக்கம். விதைப்பன-புதைப் பவையாகத் திகழும். கானம்-முல்லை நிலமாகிய காடுகளில்; ஒருமை பன்மை மயக்கம். கறவை-பால் கறப்பவை ஆகிய ஆன்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசை. மானுடன்-மான்களோடு; ஒருமை பன்மை மயக்கம். பயில்வன-பழகுபவையாக இலகும். பழனம்-வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம்.பறவை-பல வகையான பறவைகள்; ஒருமை பன்மை மயக்கம். இருந்து-இருப்பவை ஆகி. இறவு-இறா மீன்களை; ஒருமை பன்மை மயக்கம். அருந்துவ-தின்பவையாக விளங்கும். கழி-கழிகளைச் சார்ந்த; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சூழல்-இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். சுறவம்-சுறா மீன்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். முள்-முட்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மருப்பு-கொம்புகளை நட்டு; ஒருமை பன்மை மயக்கம். அணங்கு-தெய்வங்களை; ஒருமை பன்மை மயக்கம். அயர்வன-வழிபடும் இடங்களாகவிளங்கும்.

வலையர்கள் சுறாமீனினுடைய கொம்பை நட்டுத் தெய்வத்தை வணங்குதல்: ''சினைச் சுறவின் கோடு நட்டு, மனைச் சேர்த்திய வல்வணங்கினால்.'' (பட்டினப்பாலை, 86-7) என்று உருத்திரங்கண்ணனாரும், ''விருப்பின் மீன் சுவர் வினைஞர் கேட்சுறா, மருப்பினாடலும் வருதல் மார்ண்புணர்ந், தொருப்பட்டீர்ம் புனல்உம்பற் போற்றித்தம், கருத்து வாய்ப்பது கருங்கடற்புறம்.'' (தணிகைப் புராணம்,

திருநாட்டுப் படலம், 136), "புறவுக் கோட்டம் செயும் வனப்பிற் பூவை மொழியார் வழிதான் வாழ், இறவுக் கோட்டுக் கடல் பணிக்கும் எழிலால் அவர் நாட்டினர் இறைஞ்சும், சுறவுக் கோட்டு மலர்ப்புன்னை ஞாழற்பொதும் பர் எவ்விடனும்." (ஆனைக்காப் புராணம், நாட்டுப் படலம், 96) என்று வேறு புலவர்களும் பாடியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 8-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மேகங்கள் தவழும் ஆகாயத்தில் சிறந்த மலைகளி னிடங்கள் இரத்தினங்களை மழையைப் போலப் பொழிபவை யாகத் திகழும்; அந்தக் காஞ்சிபுரத்தில் உள்ள வயல்களினு டைய பக்கங்களில் குளிர்ச்சியைப் பெற்ற கொத்துக்களைக் கொண்ட கொன்றை மலர்கள் முல்லை மலர்களின் பக்கங் களில் தங்கத்தைப் போன்ற மகரந்தப் பொடிகளைப் பொழி பவையாக விளங்கும்; அந்த வயல்களைச் சார்ந்த பக்கங் களில் வலையர் சாதிப் பெண்மணிகள் தாங்கள் விளையாடும் விளையாட்டுக்களில் முத்துக்களை நீர் மிகுதியாகப் பாயும் கால்வாய்கள் பொழிபவையாகத் திகழும்; கடற்கரைப் பக்கங்களில் தாழை மரங்கள் முன்னால் உள்ள நீர் நிலை களினுடைய துறைகளில் யானைகளை மரக்கலங்கள் இறக்கு வனவாக இலகும்.' பாடல் வருமாறு:

"கொண்டல் வானத்தின் மணி சொரிவனகுல வரைப்பால்;
தண்டு ணர்க்கொன்றை பொன்சொரி வனதளவயற்பால்;
வண்டல முத்தநீர் மண்டுகால் சொரிவன வயற்பால்;
கண்டல் முன்துறைக் கரிசொரி வனகலம் கடற்பால்."

கொண்டல்-மேகங்கள் தவழும்; ஒருமை பன்மை மயக் கம். வானத்தின்-ஆகாயத்தில். மணி-நவரத்தினங்களை; ஒருமை பன்மை மயக்கம்; அவை இன்ன என்பதை வேறோரி டத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. குல-சிறப்பான. வரைப்பால்-மலைகளின் பக்கங்களில்; மலைச் சாரல்களில்; ஒருமை பன்மை மயக்கம். சொரிவன-பொழிபவையாகத் திகழும். தளவு-முல்லை மலர்களினுடைய; ஒருமை பன்மை

மயக்கம். அயற்பால்-பக்கங்களில் உள்ள இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. துணர்-மலர்க் கொத்துக்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கொன்றை-கொன்றை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொன்-தங்கத்தைப் போன்ற மகரந்தப் பொடிகளை; உவம ஆகு பெயர். சொரிவன-பொழிபவையாக விளங்கும். வயற்பால்-அந்த வயல்களினுடைய பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வண்டல்-வலையர் மகளிர் மணல்களைக் குவித்து விளையாடும் விளையாட்டுக்களில்; ஒருமை பன்மை மயக்கம். முத்தம்-முத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். நீர்-புனல். மண்டு-மிகுதியாக ஓடும். கால்-கால்வாய்கள்; ஒருமை பன்மை மயக்கம். சொரிவன-பொழிபவையாகத் திகழும். கடற்பால்-சமுத்திரத்தினுடைய பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். கண்டல்-தாழை மரங்கள் வளர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். துறை-துறைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். முன்-முன்னால். க்:சந்தி. கரி-யானைகளை; ஒருமை பன்மை மயக்கம். கலம்-மரக்கலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சொரிவன-இறக்குபவையாகத் திகழும்.

பிறகு வரும் 9-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தேன் நிரம்பியுள்ள சிவந்த நிறத்தைப் பெற்ற தினைகளை இடித்த மாவை மலைகளைச் சார்ந்த சிறிய ஊர்களில் வாழும் மக்கள் வழங்குவார்கள்; முல்லை நிலத்தில் உள்ள நீளமான ஆயர்கள் வாழும் ஊர்களில் பால் நிரம்பியுள்ள புற்களின் பதத்தை உடையவற்றை அங்கே வாழும் இடையர்கள் வழங்குவார்கள்; குளிர்ச்சியைப் பெற்ற நீர் நிலைகளினுடைய துறைகளைப் பெற்ற ஊர்களில் பரிசுத்தமான நெற்களைச் சமைத்த சோற்றையும், புத்துருக்கு நெய்யையும், சர்க்கரையைப் போலத் தித்திக்கும் பழங்களை உடையவை;' சமுத்திரத்தைச் சார்ந்த ஊர்களாகிய இடங்களில்

மீன்கள் நிறைந்திருக்கும் பெரிய உணவுகளை அங்கே வாழும் வலைச் சாதி மக்கள் உண்ணுவார்கள்.' பாடல் வருமாறு:

" தேன்நி றைந்தசெந் தினையிடி தரும்மலைச் சீறூர்;
பாலி றைந்தபுற் பதத்தன முல்லைநீள் பாடி
தூநெல் அன்னம்நெய் கன்னலின் கனிய தண்டுறையூர்
மீன்நி றைந்தபே ருணவின் வேலைவைப் பிடங்கள்."

தேன் நிறைந்த-தேன் நிரம்பி உள்ள. செம்-சிவப்பாக இருக்கும். தினை-தினைகளை உரலில் இட்டு இடித்த: ஒருமை பன்மை மயக்கம். இடி-மாவுகளை; ஒருமை பன்மை மயக்கம். மலை-மலைகளைச் சார்ந்த; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சீறூர்-சிறிய ஊர்களில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். ஊர்: ஒருமை பன்மை மயக்கம். தரும்-வந்தவர்களுக்கு வழங்குவார்கள்; திணை மயக்கம். முல்லை-முல்லை நிலங்களாகிய காடுகளில் உள்ள, ஒருமை பன்மை மயக்கம். நீள்-நீளமான. பாடி-இடையர்கள் வாழும் ஊர்கள். பால் நிறைந்த-பால் நிரம்பிய. புல்-புல்வரிகள்; ஒருமை பன்மை மயக்கம். பதத்தன-உணவுகளை உடையவை. பதம்: ஒருமை பன்மை மயக்கம். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. துறை-நீர் நிலைகளின் துறைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம் ஊர்-ஊர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தூ-பரிசுத்தமாகிய. நெல்-நெற்களைக் குத்தி ஆக்கிய அரிசிகளால்; ஒருமை பன்மை மயக்கம். அன்னம்-சோறுகளும்; ஒருமை பன்மை மயக்கம். நெய்-புத்துருக்கு நெய்யும். கன்னல்-சர்க்கரையைப் போல. இன்-தித்திப்புச் சுவையைப் பெற்ற. கனிய-பல விதமான பழங்களை உடையவை. அந்தப் பழங்களாவன. பலாப்பழம், மாம்பழம், பலவகையான வாழைப்பழங்கள், இலந்தைப் பழம், பேரீச்சம் பழம், கொடிமுந்திரிப் பழம், முந்திரிப் பழம் முதலியவை. வேலை-சமுத்திரக் கரையைச் சார்ந்த. வைப்பு-ஊர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். இடங்கள் மீன்-இடங்கள் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம் நிறைந்த-நிரம்பியுள்ள. பேர்-பெரிய. உணவின்- உணவு

களைப் பெற்றவையாக விளங்கும். உணவு: ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 10-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'புல்லாங்குழல்களைப் போல ரீங்காரம் செய்யும் வண்டுகளின் கூட்டங்கள் குறிஞ்சி நிலமாகிய மலையைச் சார்ந்த ஊர்களில் குறிஞ்சி யாழைப் போல ரீங்காரம் செய்பவையாக விளங்கும்; முல்லை நிலங்களாகிய காடுகளில் மத்தளங்களை உடையவர்கள் மேகங்களைப் போன்ற முழக்கத்தைக் கொள்ள, முல்லைக் கொடிகள் அரும்புகளை அரும்புபவைகளாகக் காட்சி அளிக்கும்; மருத நிலங்களாகிய வயல்களும் அவற்றைச் சார்ந்த ஊர்கள் மழலைப் பேச்சைப் போலப் பேசும் மென்மையான கிளிகள் மருத மரங்களில் அமருகின்ற தாங்கள் தங்கும் இடங்களை உடையவையாகத் திகழும்; கடற்கரையைச் சார்ந்த இடமாகிய நெய்தல் நிலத்தில் உள்ள ஊர்கள் நிழலை உண்டாக்கும் தாழை மரங்கள் சுற்றியிருக்கும் நெய்தல் மலர்கள் மலர்ந்த அழகிய கழிகளை உடையவையாக விளங்கும்.' பாடல் வருமாறு:

"குழல்செய் வண்டினம் குறிஞ்சியாழ் முரல்வன குறிஞ்சி;
முழவு கார்கொள முல்லைகள் முகைப்பன முல்லை;
மழலை மென்கிளி மருதமர் சேக்கைய மருதம்;
நிழல்செய் கைதைசூழ் நெய்தலம் கழியன நெய்தல்."

குழல்-புல்லாங்குழல்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். செய்-ரீங்காரம் செய்யும். வண்டு-வண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இனம்-கூட்டங்கள்; ஒருமை பன்மை மயக்கம். குறிஞ்சி-குறிஞ்சி நிலமாகிய மலையைச் சார்ந்த ஊர்களில்; இட ஆகு பெயர். குறிஞ்சி யாழ்-குறிஞ்சி யாழைப் போல். முரல்வன-ரீங்காரம் செய்பவைகளாகத் திகழும். முல்லை-முல்லை நிலங்களாகிய காடுகளில்; ஒருமை பன்மை மயக்கம். முழவு-மத்தளங்களை வைத்திருப்பவர்கள்; திணை மயக்கம். முழவு: ஒருமை பன்மை மயக்கம். கார்-மேகங்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். கொள-

இனிய ஓசையைக் கொள்ள; இடைக்குறை. முல்லைகள்-முல்லைக் கொடிகள். முகைப்பன-அரும்புகளை அரும்புபவைக ளாகக் காட்சி அளிக்கும். மருதம்-வயல்களைச் சார்ந்த மருத நிலத்தில் உள்ள ஊர்களில்; இட ஆகு பெயர். மழலை-குழந் தைகள் பேசும் மழலைச் சொற்களைப் போலப் பேசும்; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையாக உள்ள. கிளி-கிளிகள்; ஒருமை பன்மை மயக்கம். மருது-மருத மரங்களில்; ஒருமை பன்மை மயக்கம்.அமர்-அமருகின்ற தாங்கள் தங்கும். சேக்கைய-இடங்களை உடையவையாகத் திகழும். சேக்கை: ஒருமை பன்மை மயக்கம். நெய்தல்-கடற்கரையைச் சார்ந்த நெய்தல் நிலத்தில் உள்ள ஊர்கள்; இட ஆகு பெயர். நிழல் செய்-நிழலைத் தருகின்ற. சைதை-தாழை மரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றியிருக்கும். நெய்தல்-நெய்தல் மலர்கள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். அம்-அழகிய. கழியன-கழிகளை உடையவைகளாக விளங்கும்.

பிறகு வரும் 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இத்தகைய செயல்கள் மிகுதியாக விளங்கும் அந்தப் பெரிய குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருத நிலம், நெய்தல் நிலம் என்னும் நிலங்களுக்குள் மலைகளோடு சார்ந்த குறிஞ்சி நிலங்களின் எல்லை யில் உள்ள எல்லா இடங்களிலும் வேடர்கள் தினைக் கொல்லைகளுக்கு முன்னால் விளையுமாறு செய்யும் பல பெரியவையாக விளங்கும் தினைப் புனங்களில் நடந்து பழகு பவை படர்ந்துள்ள சிறகுகளைப் பெற்ற மயில்கள்; புகழ்ந்து பாராட்டும் அந்தத் தினைக் கொல்லைகளில் கிளி, மான் முதலியவை வந்து தினைகளை உண்ணாத படி பாதுகாப் பவர்களும் நெளிகளைக் கொண்ட கூந்தல்களைப் பெற்ற மயில்களைப் போன்ற பெண்மணிகள்.' பாடல் வருமாறு:

"மல்கும் அப்பெரு நிலங்களில் வரைபுணர் குறிஞ்சி
எல்லை எங்கணும் இறவுளர் ஏனல்முன் விளைக்கும்

"பல்பெரும்புனம் பயில்வன படர்சிறைத் தோகை;
சொல்லும் அப்புனம் காப்பவும் சுரிகுழல் தோகை."

மல்கும்-இத்தகைய செயல்கள் மிகுதியாக விளங்கும். அப்பெரு-அந்தப் பெரிய. நிலங்களில்-குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருத நிலம், நெய்தல் நிலம் என்னும் நான்கு நிலங்களுக்குள். வரை-மலைகளை; ஒருமை பன்மை மயக்கம். புணர்-சார்ந்த. குறிஞ்சி-குறிஞ்சி நிலங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். எல்லை-எல்லையில் உள்ள. எங்கணும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கணும்: இடைக்குறை. இறவுளர்-வேடர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏனல்-தினைக் கொல்லைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். முன்-முன்னால். விளைக்கும்-பயிர் செய்து விளையச் செய்யும். பல்-பலவாகிய. பெரும்-பெரியவையாக விளங்கும். புனம்-தினைக் கொல்லைகளில்; ஒருமை பன்மை மயக்கம். பயில்வன-நடந்து பழகுபவை. படர்-விரிவாக உள்ள. சிறை-சிறகுகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தோகை-மயில்கள்; ஒருமை பன்மை மயக்கம். சொல்லும்-புகழ்ந்து பாராட்டும். அப்புனம் -அந்தத் தினைக் கொல்லைகளில்; ஒருமை பன்மை மயக்கம். காப்பவும்-பரண்களின்மேல் அமர்ந்து கிளி, மான் முதலியவை வந்து தினைகளைத் தின்னாதவாறு பாதுகாப்பவர்களும்; திணை மயக்கம். சுரி-நெளிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். குழல்-கூந்தல்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். தோகை-மயில்களைப் போன்ற வேடர் குலப்பெண் மணிகள்; உவம ஆகு பெயர். தோகை: ஒருமை பன்மை மயக்கம்.

பெண்மணிகளுக்கு மயில் உவமை: "மயிலார் சாயல் மாதோர் பாகமா.", "மயிலுறு சாயல் வனமுலை ஒருபால் மகிழ்பவர்.", "மயிலும்... போல் மாதர்.", "வருநல மயிலன மடநடை மலைமகள்.", "மடமயிலைக் கட்டிட்டம்

கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்.", "கலவ மாமயி லாளொர் பங்கனை.", "மயிலார்ந்த சாயல் மடமங்கை.", "இடமயில் அன்னசாயல் மடமங்கை.", "மயிற்கெதிர் அணங்கு சாயல் மாது.", "மயிலினேரன சாயலோடமர்ந்த வன்.", "கலவ மாமயிலாரியலாள்." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "மயிலியல் மலை மாதின் மணாளனை." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "பூமயிலி தாதை.", "மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு." என்று நக்கீர தேவ நாயனாரும், "கலவ மயிலனார்.", "குயிலெனப் பேசும் மயிலிளம் பேடை." என்று பட்டினத்துப் பிள்ளை யாரும், "கலவ மயில் எனஎழுந்து.", "மயிலைப் புறங்கொள் மென் சாயல் மகளிர்.", "இளமயிலனைய சாயல் ஏந்திழை.", "சாயல்மா மயிலே போல் வாள்." என்று சேக்கிழாரும், "பெடைமயில் உருவிற் பெருந்தகு பாடினி."(பொருநராற்றுப் படை, 47) என்று முடத்தாமக் கண்ணியாரும், "மயில் கண்டன்ன மடநடை மகளிரொடு." (திருமுருகாற்றுப்படை, 205), "மடநடை மஞ்ஞை." (ஷை, 310) என்று நச்சீரரும், "பீலி மஞ்ஞையின் இயலி." (பெரும்பாணாற்றுப்படை, 331) என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரும், "நன்மாமயிலின் மென்மெல இயலி." (மதுரைக் காஞ்சி, 608) என்று மாங்குடி மருதனாரும், "அணிமயிலன்ன அசை நடைக் கொடிச்சியை.", (ஐங்குறுநூறு, 258:2), "மணிமயிற் தொழில்." (பரிபாடல், 62), "வருநல் மயிலன் மடநடை மலைமகள்." (தேவாரம்), "மயிலெனப் பேர்ந்து." (திருச்சிற்றம்பலக் கோவை, 224), "நடை மயிலே." (பிரயோக விவேகம், 42), "மயில்...மக ளிர்." (இலக்கணக் கொத்து), என்று வேறு பல புலவர்களும், "மராஅ மயிலின் மயங்குபு தூங்கும, குழா அம்மகளிர்.", "பொறி மயிற் பெடையிற் பொங்குபு பாய்தலின்.", "சூருறு மஞ்ஞையிற் சோர்ந்த கூந்தலர்.", "பொறி மயிற்றொழுதி புயல்கழி கானலச். செறி மயிர் உளர்த்தும், செய்கை போற் றும், நெறி மயிர்க் கூந்தல் நீரற பாரி.", "வெருவுறு மஞ்

ஞெயிற் றெரு மந்திகலி.", "அந்தண் மஞ்ஞை ஆடிடம் ஏய்ப்பக், கோதையும் குழலும் துள்ளுபு விரியப், பேதை மகளிர் வீதி முன்னினர்.", "கானத் தீயிடைக் கணமயில் போலத், தானத் தீயிடைத் தானுழன் றேங்கிக், காணல் செல்லாக் காஞ்சனை புலம்பி.", "தளைச் செறி மஞ்ஞை யின் அஞ்சுவனன் விம்மி.", "மயிலெருத் தணிமுடி மாதர்த் தோழி.", (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், "மாதுரு மயிலின் நல்லார்." (சீவகசிந்தாமணி, 463) என்று திருத் தக்க தேவரும், "அவர் பயில் நடமேகேகயம் நவில்வன." (நாட்டுப் படலம், 49), "துடியிடைப் பணை முலைத் தோகையன்னவர்." (நகரப் படலம், 37), "தோகையர் இன்னை சொல்லிட." (கார்முகப் படலம், 32), "நடிக்கும் மயிலென்ன வரு நவ் விழியாரும்.", "மயிலினம் திரிவவென் னத் திரிந்தனர் மகளிர் எல்லாம்." (வரைக்காட்சிப் படலம்), 15, 29), "தோளுண்ட மாலையொரு தோகையைச் சூட்ட.", "மயில் போல் வருவாள்." (பூக்கொய் படலம், 14, 15), கானமா மயில்கள் எல்லாம் களிகெடக் களிக்கும் சாயல் சோனைவார் குழலினார்." (நீர் விளையாட்டுப்படலம், 14), "புனைத்துள மயிலனாள்.", "வட்ட வாண் முகத்தொரு மயிலும்." (உண்டாட்டுப் படலம், 61, 65), "மயிலினம் திரிவபோன்றும்...மாதர்.", "புனம் கொள் கார்மயில் போலி யோர் பொற்கொடி." (உலாவியற் படலம், 1, 29), "கைவளர் மயிலனாளை." (கோலம் காண் படலம், 18), "தொண்டைவாய்க்கேகயன் தோகை.", "நாடகமயில் துயின் றென்ன." (மந்தரை சூழ்ச்சிப் படலம், 4, 88), "தோகையர் குழாமும்.", "தோகையிவற் பேருவகை சொல்லரிதென் பார்." (கைகேசி சூழ்வினைப் படலம், 68, 97), "அணி யிழை மயிலோடும்." (கங்கைப் படலம்,72), "மயிலியல் இள மானே." (வனம்புகு படலம்,3),"வடம் கொள்பூண் முலைமட மயிலே.", "ஆடுகின்ற மாமயிலினும் அழகிய குயிலே.", "இடு

இடைத் தோகாய்.'', ''வளைகள் காந்தளிற் பெய்தன் வனையகைம் மயிலே.'', ''வடுவின் மா வகிர் இவையெனப் போலிந்த கண் மயிலே.'' (சித்திர கூடப்படலம், 4, 12, 19, 29, 30), ''மலர்த்தொகை இழந்தன தோகையர் ஓதியே.'' (பள்ளியடைப் படலம்,25), ''அஞ்சொல் இள மஞ்ஞையென ...வஞ்ச மகள் வந்தாள்.'' (சூர்ப்பணகைப் படலம், 31), ''மயிலுடைச் சாயலாளை.'' (மாரீசன் வதைப் படலம், 82). ''தோகையும் இவ்வழித் தோமில் சிந்தனை.'', ''புனமயிற் சாயலின்.'', ''அஞ்சொல் மயிலை அருந்ததியை.'' (சடாயு உயிர் நீத்த படலம், 25, 28, 190), ''மயிலியல் பிரிந்தபின்.'' (அயோமுகிப் படலம், 65), ''தோகையும் பிரிந்தனள்.'' (கவந்தப் படலம், 24), ''ஓடா நின்ற களிமயிலே சாயற் கொதுங்கி.'' (பம்பாநதிப் படலம், 27), ''மயிலியற் குயில் மொழி.'' (வாலி வதைப் படலம், 18), ''மயிலியற் கொடித்தேரல் குல்.'' (கிட்கிந்தைப் படலம், 77), ''காண்டகு தோகை உம்பர் இல்லெனக் கருத்துட் கொண்டான்.'', ''மயிலியல் தேவிமார்கள்.'' (கடல்தாவு படலம், 2, 12), ''மழைதொடர் மஞ்ஞை யென்ன விழாவொடு வருகின்றாரை.'' (ஊர் தேடு படலம், 111), ''மயிலியற் குயில் மழலையாள்.'' (காட்சிப் படலம், 4), ''தொண்டை வாய் மயிலினைத் தொழுது தோன்றினான்.'' (உருக்காட்டுப் படலம், 22), ''மயிலியற் சீதை.'' (பிணிவிடு படலம், 15), ''மயிற்புரை இயலினாரும்.'' (திருவடி தொழுத படலம்,71), ''தூரம் இல்லை மயில் இருந்த சூழல்.'' (கடல் காண் படலம், 8), ''மங்கை அழலும் வானாட்டு மயில்கள் அழுதார்'' (பிராட்டி களன் காண் படலம், 5), ''மலையின் மேல் மயில் வீழ்ந்தென்ன மைந்தன் மேல் மறுகி வீழ்ந்தாள்.'' (இராவணன் சோகப் படலம், 45), ''வேதத் தோகை மங்கலங்கள் பாட.'', ''சூதார் முலைத் தோகையை நோக்கி.'' (மீட்சிப் படலம், 44, 180) என்று கம்பரும் பாடியருளியவற்றையும், ''மயிலியல் உமையினை.'' (இராவணன் பிறப்புப்

படலம், 49). "புண்டரிக மாதோ புனமயிலோ." (திக்கு விசயப்படலம், 156), "தோகை நின் சாயலுக்குடைந்து தன்னடை கெட்டே." (சீதை வனம்புகு படலம், 17). "அங்கண் மயில் சாய லவை அஞ்சி அகல.", "குன்றின்மிசை ஏறு சில கோல மயில் போல.", "புனமயிற் சாயற் பைம் பொற் பூண் முலை ஒருத்தி." (அசுவமேத யாகப் படலம், 50, 59, 92) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

பிறகு வரும் 12-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அழகிய இடத்தைப் பெற்ற ஆகாயத்தின் மேல் தெய்வப் பெண்களாகிய அரம்பையர்களினுடைய கருமையான கூந்தல்களில் சூடிய மலர்களில் மொய்க்கும் வண்டுகள் அழகு பொங்கி எழும் அணிகலன்களை அணிந்த கொங்கைகளைப் பெற்ற குறவர் சாதிப் பெண்களினுடைய கூந்தல்களில் மூழ்கி அந்த இடங்களிலிருந்து செல்லா; சிவந்த கண்களைக் கொண்ட திருமாலாகிய இடப வாகனத்தை ஓட்டுபவராகிய காளத்தி நாதர் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்காளத்தி என்று கூறப்படும் மேகங்கள் சுற்றித் தவழும் மலையில் நிலாவிய வாழ்க்கையினால் நிரம்ப இத்தகைய காட்சிகள் காணப்படும்.' பாடல் வருமாறு:

"அங்கண் வான்மிசை அரம்பையர் கருங்குழற் சுரும்பு
பொங்கு பூண்முலைக் கொடிச்சியர் குழல்மூழ்கிப் போகாச்
செங்கண் மால்விடை யார்திருக் காளத்தி என்னும்
மங்குல் சூழ்வரை நிலவிய வாழ்வினால் மல்கும்."

செம்-சிவந்த. கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மால்-திருமாலாகிய. விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவராகிய காளத்திநாதர் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருக்காளத்தி - அழகிய காளத்தி. என்னும்-என்று கூறப்படும். மங்குல்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றி விளங்கும். வரை-மலையில்

நிலவிய-இருக்கிற. வாழ்வினால்-வாழ்க்கையினால். அங்-அழகிய. கண்-இடத்தைப் பெற்ற. வான்-ஆகாயத்தின். மிசை-மேல். அரம்பையர்-தெய்வலோகப் பெண்களாகிய அரம்பையர்களினுடைய. கரும்-கருமையாக விளங்கும் குழல்-கூந்தல்களில். சுரும்பு-சூடிய மலர்களில் மொய்க்கும் வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். பொங்கு-அழகு பொங்கி எழும். பூண்-அணிகலன்களை அணிந்த. அவையா வன: காசு மாலை, முத்து மாலை, இரத்தின மாலை, உருத்தி ராக்க மாலை, மலர் மாலை முதலியவை. முலை-கொங்கை களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கொடிச் சியர்-குறமகளிர்களினுடைய. குழல்-கூந்தல்களில்; ஒருமை பன்மை மயக்கம். மூழ்கி-முழுகி. ப்: சந்தி. போகா-செல்லா. ச்: சந்தி.

அடுத்து வரும் 13-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் தொண்டை நாட்டில் விளங்கும் வளங்களைப் பெற்ற குறிஞ்சி நிலத்தில் பாக்கியம் வேறாகச் சுற்றிவரும் தேவர்களும் தெய்வலோகத்துப் பெண்மணிகளாகிய அரம் பையர்களும் திருவவதாரம் செய்தருளி தங்களுக்கு ஒப்பு வேறு யாரும் இல்லாத வேடர்களும் வேட்டுவச் சாதிப் பெண்மணிகளுமாகவே உருவங்களை எடுத்து வந்து இடைச் சுரநாதரைப் பணியும் கங்கையாறு தங்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற தலைவராகிய ஞானபுரீ சர் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவிடைச் சுரம் என்னும் சிவத்தலமும் சொல்லப்படும் மேம்பாட்டில் மிகுதியாக விளங்குவது.' பாடல் வருமாறு:

"பேறு வேறுசூழ் இமையவர் அரம்பையர் பிறந்து
மாறில் வேடரும் மாதரு மாகவே வணங்கும்
ஆறு சூழ்சடை அண்ணலார் திருவிடைச் சுரமும்
கூறு மேன்மையின் மிக்கதந் நாட்டு வண்குறிஞ்சி."

அந்நாட்டு-அந்தத் தொண்டை நாட்டில் உள்ள. வண்-

நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். குறிஞ்சி-குறிஞ்சி நிலத்தில். பேறு-பாக்கியம். வேறு-வேறாக. சூழ்-வலமாகவரும். இமையவர்-தேவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அரம்பையர்-தேவலோகத்துப் பெண்மணிகளாகிய அரம்பையர்களும். பிறந்து-திருவவதாரம் செய்தருளி. மாறு-சமானம் வேறு யாரும். இல்-இல்லாத; கடைக்குறை. வேடரும்-வேடர்களும்; ஒருமை பன்மை மயக்கம். மாதரும்-வேட்டுவச் சாதிப் பெண்மணிகளும். ஆகவே-ஆக உருவங்களை எடுத்துக் கொண்டு வந்தே. வணங்கும்-இடைச்சுர நாதரைப் பணியும். ஆறு-கங்கையாறு. சூழ்-தங்கும். சடை-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்ற. அண்ணலார்-தலைவராகிய ஞானபுரீசர். அண்ணலார்-பெருமையைப் பெற்றவர் எனலும் ஆம். திருவிடைச் சுரமும்-கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவிடைச்சுரம் என்னும் சிவத்தலமும். கூறும் -சொல்லப்படும். மேன்மையின்-மேம்பாட்டில். மிக்கது-மிகுதியாக விளங்குவது.

திருவிடைச்சுரம்: இது தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் இடைச்சுர நாதர், ஞான புரீசுவரர் என்பவை. அம்பிகை இமைய மடக்கொடியம்மை. இது திருப்போரூருக்கு வடக்குத் திசையில் அரை மைல் தூரத்தில் உள்ளது. சனற்குமார முனிவர் வழிபட்ட தலம் இது.

இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"வரிவளர் அவிரொளி யாவரை தாழ
வார்சடை முடிமிசை வளர்மதி சூடிக்
கரிவளர் தருகழல் கால்வலன் ஏந்திக்
கனவெரி ஆடுவர் காடரங்காக
"விரிவளர் தருபொழில் இளமயில்ஆல
வெண்ணிறத் தருவிகள் திண்ணெனவீழும்

எரிவளர் இனமணி புனமணி சாரல்
இடைச்சுரம் மேவிய இவர்வளம் என்னே.''

பிறகு உள்ள 14-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அழகிய தங்கத்தைப் போன்ற நீண்ட கூந்தல்களைப் பெற்ற குறமகளிர்களோடு தேவலோகத்துப் பெண்மணிகள் நறுமணம் கமழும் மலர்கள் மலர்ந்த சுனைகளில் இறங்கி நீராடும் நீளமான இடங்களைப் பெற்றது; தேவர்களின் தலைவராகிய வேதகிரீசுவரர் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருக்கழுக்குன்றத்தையும் பெற்றது அந்தத் தொண்டை வள நாடு; என்றால் மரக்கிளைகளில் வண்டுகள் மலர்களில் சுற்றி மொய்க்கும் குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள் முன் பிறவியில் புரிந்த தவம் குறைவாக உள்ளதோ?' பாட்டல் வருமாறு:

''அம்பொன் வார்குழற் கொடிச்சிய ருடன்அர மகளிர்
வம்பு லாமலர்ச் சுனைபடிந் தாடுநீள் வரைப்பின்
உம்பர் நாயகர் திருக்கழுக் குன்றமும் உடைத்தால்;
கொம்பர் வண்டுசூழ் குறிஞ்சிசெய் தவக்குறை
உளதோ?''

அம்-அழகிய. பொன்-தங்கத்தைப் போன்ற; 'தங்க நகைகளை அணிந்து.' எனலும் ஆம்; ஆகு பெயர். அவையாவன: உச்சிப்பூ, கட்கு, திருகுப்பூ முதலியவை. வார்-நீளமான. குழல்-கூந்தல்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். கொடிச்சியருடன்-குறச்சாதிப் பெண்மணிகளோடு. அரமகளிர்-தேவலோகத்துப் பெண்கள். வம்பு-நறுமணம். உலாம்-கமழும். மலர்-நீலோற்பல மலர், செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், செங்கழுநீர் மலர், குமுத மலர் முதலிய நீர்ப்பூக்கள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சுனை-சுனைகளில்; ஒருமை பன்மை மயக்கம். படிந்து-இறங்கி. ஆடும்-நீராடும். நீள்-நீளமான. வரைப்பின்-இடங்களைப் பெற்றது; ஒருமை பன்மை மயக்கம்; வினையாலணையும் பெயர். உம்பர்-தேவர்களினுடைய;

ஒருமை பன்மை மயக்கம். நாயகர்-தலைவராகிய வேதகிரீ சுவரர் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருக்கழுக் குன்றமும்-திருக்கழுக்குன்றம் என்னும் சிவத்தலத்தையும். உடைத்து-அந்தத் தொண்டை வள நாடு பெற்றது. ஆல்: அசை நிலை. 'என்றால்'என்ற சொல்லை வருவிக்க. கொம் பர்-மரக்கிளைகளில்; ஒருமை பன்மை மயக்கம். வண்டு-மலர்ந்த மலர்களில் வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றி மொய்க்கும். குறிஞ்சி-குறிஞ்சி நிலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். செய்-முன்பிறவியில் புரிந்த. தவ -தவத்தில். குறை -குறைபாடு. உளதோ-உள்ளதோ; இடைக் குறை. இல்லை என்பது கருத்து.

திருக்கழுக்குன்றம்: இது தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் வேதகிரீசு வரர். அம்பிகையின் திருநாமங்கள் பெண்ணினல்லாள் அம்மை, மலைச் சொக்க நாயகி என்பவை. தீர்த்தம் சங்க தீர்த்தம். இது செங்கற்பட்டுக்குத் தென்கிழக்குத் திசையில் 9 மைல் தூரத்தில் உள்ளது. ஒவ்வொரு நாளும் உச்சிக் காலத்தில் இரண்டு கழுகுகள் வந்து தங்களுக்கு அளிக்கப் படும் அன்னத்தையும் நெய்யையும் உண்டு விட்டு மலையை வலமாகச் சுற்றிக் கொண்டு போகும். 12-ஆண்டுகளுக்கு ஒரு முறை சங்கு பிறக்கும் காரணத்தால் சங்க தீர்த்தம் என்று இங்கே உள்ள திருக்குளத்திற்குப் பெயர் அமைந்தது. இந்தத் தலத்தில் தங்கி சங்க தீர்த்தத்தில் நீராடி மலையை வலமாக வந்தால் அடியவர்கள் எத்தகைய நோயையும் போக்கிக் கொள்ளலாம் என்று ஆன்றோர் கூறுவர். மாணிக்க வாச கருக்கு வேதகிரீசுவரர் குருவடிவமாக எழுந்தருளித் தரிசனம் கொடுத்தருளிய தலம் இது. இதனைப் பின் வரும் பாசுரம் புலப்படுத்தும்.

" பிணக்கிலாதபெ ருந்துறைப்பெரு
மானுன் நாமங்கள் பேசுவார்க்

கணக்கி லாததோர் இன்பமேவரும்
துன்ப மேதுடைத் தெம்பிரான்
உணக்கில்லாததோர் வித்து மேல்விளை
யாமல் என்வினை ஒத்தபின்
கணக்கிலாத்திருக் கோலம் நீவந்து
காட்டி னாய் கழுக் குன்றிலே.''

இவ்வாறு இந்தப் பதிகத்தில் ஏழு பாசுரங்கள் உள்ளன. இத்தலத்தைப் பற்றிய மற்றொரு பாசுரம் வருமாறு:

"பையுடைய பாம் பொடு நீறு பயில்கின்ற
மெய்யுடை யான்வெண் பிறைசூடி வரிகொன்றை
மையுடைய மாமிடற் றண்ணல் மறிசேர்ந்த
கையுடையான் காதல்கொள் கோயில் கழுக்குன்றே.''

பிறகு உள்ள 15-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அழகைப் பெற்ற முல்லை நிலமாகிய காடும், குறிஞ்சி நிலமாகிய மலையும் அடுத்து இருக்கும சில ஊர்களில் நீல நிறத்தைப் பெற்ற வாளாயுதத்தை ஏந்திய துர்க்கையின் திருக்கோயில்களும் வரிசையாக அமைந்து முதுவேனிற் காலத்தில் கடுமையான நண்பகல் நேரத்தைப் பெற்று பாலை நிலமும் உடையது என்று கூறுமாறு உள்ளவையாக இருப் பவை சிறு கற்களைக் கொண்ட மேட்டு நிலங்கள்.' பாடல் வருமாறு:

"கோல முல்லையும் குறிஞ்சியும் அடுத்தசில விடங்கள்
நீல வாட்படை நீலிகோட் டங்களும் நிரந்து
கால வேனிலிற் கடும்பகற் பொழுதினைப் பற்றிப்
பாலை யும்சொல லாவன உளபரல் முரம்பு.''

கோல-அழகைப் பெற்ற. முல்லையும்-முல்லை நிலமாகிய காடும். குறிஞ்சியும்-குறிஞ்சி நிலமாகிய மலையும். அடுத்த-அடுத்து அடுத்து உள்ள. சில இடங்கள்-சில ஊர்களில். நீல-நீல நிறத்தைப் பெற்ற; இது துர்க்கைக்கு அடை. வாட் படை-வாளாயுதத்தை ஏந்திய. நீலி-துர்க்கையினுடைய

கோட்டங்களும்-திருக்கோயில்களும். நிரந்து-வரிசையாக அமைந்து. காலவேனிலில்-முதுவேனிற் காலத்தில். கடும் பகல்-கடுமையாகிய நண்பகல் என்னும். பொழுதினை-நேரத்தை. ப்: சந்தி. பற்றி-பெற்று. ப்: சந்தி. பாலை யும்-பால நிலமும் உடையது; ஆகு பெயர். சொலலாவன என்று கூறுபவையாக இருப்பவை. பரல்-பருக்கைக் கற்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். முரம்பு-மேட்டு நிலங் கள்; ஒருமை பன்மை மயக்கம். உள-இருக்கின்றன; இடைக் குறை.

பிறகு வரும் 16-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மேலே கூறப்பட்ட பாலை நிலத்தின் எல்லைக்கு வெளி யில் உள்ளவை பூங்கொத்துக்களில் வண்டுகள் மொய்த்துத் திரியும் பல பெரியதாக இருக்கும் நீர் ஓடும் காட்டாறு நடு நடுவில் பரவியிருந்து முல்லை நிலத்தில் உள்ள மென்மையா கிய பூங்கொத்துக்கள் மலர்ந்திருக்கும் குருந்த மரத்தின் மேல் படர்ந்து ஏறிய மலர்களைப் பந்தலைப் போலப் பெற்ற முல்லைக் கொடி படரும் மென்மையான செடிகளில் முயல் துள்ளித் தள்ளிவிட்டு அடங்குவது நீளமான முல்லை நில மாகிய காடு.' பாடல் வருமாறு:

"சொல்லும் எல்லையின் புறத்தன துணர்ச்சுரும் பலைக்கும்
பல்பெரும் புனற் கானியா றிடையிடை பரந்து
கொல்லை மெல்லிணர்க் குருந்தின்மேற் படர்ந்த பூம்பந்தர்
முல்லை மென்புதல் முயலுகைத் தடங்கும் நீள்முல்லை."

நீள்-நீளமான. முல்லை-அந்தத் தொண்டை நாட்டில் உள்ள முல்லை நிலங்களாகிய காடுகளில்; ஒருமை பன்மை மயக்கம். சொல்லும்-மேலே கூறப்பட்ட; கால மயக்கம். எல்லையின்-பாலை நிலத்தின் எல்லைக்கு. புறத்தன-வெளி யில் உள்ளவை. துணர்-பூங்கொத்துக்களில்; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக் கம். அலைக்கும்-மொய்த்துத் திரியும். பல்-பல. பெரும்-

பெரியதாக இருக்கும். புனல்-நீர்ஓடும். கானியாறு-காட்டாறு. இ: குற்றியலிகரம். இடை இடை-நடு நடுவில். பரந்து-பரவியிருந்து. கொல்லை-முல்லை நிலத்தில் உள்ள. மெல்-மென்மையான. இணர்-பூங்கொத்துக்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குருந்தின் மேல்-குருந்த மரத்தின் மேல். படர்ந்த-படர்ந்து ஏறிய. பூம்பந்தர்-மலர்களைப் பந்தலைப் போலப் பெற்ற. பூம்: ஒருமை பன்மை மயக்கம். முல்லை-முல்லைக் கொடி படரும். மென்-மென்மையான. புதல்-செடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். முயல் உகைத்து-முயல் துள்ளித் தள்ளி விட்டு. அடங்கும்-அடங்கியிருக்கும். இந்தப் பாடலில் விற்பூட்டுப் பொருள் கோள் அமைந்துள்ளது.

பிறகு வரும் 17-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'துண்டமாக உருவத்தைக் கொண்ட குளிர்ச்சியைப் பெற்ற பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றிகளைப் பெற்ற பேதை பருவப் பெண்களினுடைய பற்களை முல்லை அரும்புகள் திருடிக் கொண்டன என்று களாமலர்கள் பழிச் சொல்லை எடுத்துக் கூறும்; அந்தச் செயலைப் பார்த்து அந்தப் பெண்களுடைய கூந்தல்களைப் போல நிறத்தைப் பெற்ற களாப் பழங்களை முல்லை மலர்கள் பார்த்துத் தங்களுக்கும் அந்த நிறம் இருக்கிறது என அவற்றுக்கு எதிரில் நகைப்பவையாக விளங்கும்.' பாடல் வருமாறு:

"பிளவு கொண்டதண் மதிநுதற் பேதையர் எயிற்றைக்
களவு கொண்டது தளவெனக் களவலர் தூற்றும்;
அளவு கண்டவர் குழல்நிறம் கனியும்அக் களவைத்
தளவு கண்டெதிர் சிரிப்பன தமக்கும்உண் டென்று."

பிளவ-துண்டமாக. கொண்ட-தன்னுடைய உருவத்தை கொண்ட. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. மதி-பிறைச் சந்திரனைப் போன்ற. நுதல்-நெற்றிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். பேதையர்-பேதைப் பருவப் பெண்களினு

டைய. எயிற்றை-பற்களின் வடிவங்களை; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தளவு-முல்லை அரும்புகள்; ஒருமை பன்மை மயக்கம். களவு-திருடுதலை. கொண்டது-மேற் கொண்டவை; ஒருமை பன்மை மயக்கம். என-என்று; இடைக்குறை. களவு-களா மலர்கள்; ஒருமை பன்மை மயக் கம். அலர்-பழிச் சொல்லை. தூற்றும்-எடுத்துக் கூறும். அளவு-அளாவியச் செயலை. கண்டு-பார்த்து. அவர்-அந்தப் பெண்களினுடைய. குழல்-கூந்தல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிறம்-நிறத்தைப் பெற்ற. கனியும் அக்க ளவை-பழங்களைப் பழுக்கும் அந்தக் களாச் செடிகளை; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தளவு-முல்லை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தமக்கும்-தங்களுக்கும். உண்டு-அந்த நிறம் இருக்கிறது. என்று-என. கண்டு-அவற்றைப் பார்த்து. எதிர்-அவற்றுக்கு எதிரில். சிரிப்பன-நகைச்சுவை யாகத் தோன்றும்.

பிறகு உள்ள 18-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் தொண்டை வள நாட்டில் முல்லை நிலத்தினு டைய கடவுள் என்று அருமையாக விளங்கும் தமிழ் இலக்கண நூல் கூறும் சிவந்த கண்களைப் பெற்ற திருமால் வணங்கி வழிபடும் மாசிலாமணி யீசுவரன் மகிழ்ந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருமுல்லை வாயில் என்னும் சிவத்தலத்தில் மங்கைப் பருவம் உள்ள பெண்மணிகளுக்கு வாளாயுதங்களைப் போன்ற இரண்டு கண்களிடம் தோல்வியைப் பெற்ற மான்களினுடைய கூட்டங்கள் எவ்வி டங்களிலும் காணப்படும்; அந்தப் பெண்களினுடைய இடுப் புக்களிடம் தோல்வியைப் பெற்ற மலர்கள் மலர்ந்த கொடி கள் எந்த இடங்களிலும் காட்சி அளிக்கும்.' பாடல் வருமாறு:

"**மங்கையர்க்கு வாள் விழியிணை தோற்றமான் குலங்கள்**
எங்கும்; மற்றவர் இடைக்கிடை மலர்க்கொடி எங்கும்;

அங்கண் முல்லையின் தெய்வமென் றருந்தமிழ் உரைக்கும்
செங்கண் மால்தொழும் சிவன்மகிழ் திருமுல்லை
வாயில்."

அங்கண்-அந்தத் தொண்டை வள நாட்டில். முல்லையின்-முல்லை நிலத்தினுடைய. தெய்வம்-கடவுள். என்று-என. அரும்-அருமையாக விளங்கும். தமிழ்-செந்தமிழ் இலக்கண நூல்கள்; ஒருமை பன்மை மயக்கம். உரைக்கும்-கூறும். செம்-சிவந்த. கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மால்-திருமால். தொழும்-வணங்கி வழிபடும். சிவன்-மாசிலா மணி ஈசுவரன். மகிழ்-மகிழ்ந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருமுல்லை வாயில்-வடதிரு முல்லை வாயிலில். மங்கையர்க்கு-மங்கைப் பருவத்தைப் பெற்ற பெண்மணிகளிடம்; உருபு மயக்கம். வாள்-வாளாயுதங் களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். விழியிணை-இரண்டு கண்களினிடம். விழி: ஒருமை பன்மை மயக்கம். தோற்ற-தோல்வியை அடைந்த. மான்-மான்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலங்கள்-கூட்டங்கள். எங்கும்-எந்த இடங்களிலும் காட்சி அளிக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மற்று: அசை நிலை. அவர்-அந்தப் பெண்மணிகளினுடைய. இடைக்கு-இடுப்புக்களினிடம்; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். இடை-தோல்வியடைந்த. மலர்-மலர்கள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கொடி-பூங்கொடிகள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எந்த இடங்களிலும் காணப்படும்; ஒருமை பன்மை மயக்கம்.

திருமுல்லை வாயில்: இது தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மாசிலாமணி ஈசுவரர். அம்பிகை கொடியிடை நாயகி. இது ஆவடி என்ற ஊரிலிருந்து வடகிழக்குத் திசையில் இரண்டரை மைல் தூரத்தில் உள்ளது. மாசிலாமணி ஈசுவரருடைய சந்நிதியில் இரண்டு எருக்கந் தூண்கள் உள்ளன. முருகப் பெருமான் வழிபட்ட தலம் இது. தொண்டைமான் சக்கரவர்த்தி அருள்

பெற்ற தலம் இது. இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"சொல்லரும் புகழான் தொண்டைமான் களிற்றைச்
சூழ்கொடி முல்லையாற் கட்டிட்
டெல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்
டருளிய இறைவனே என்று
நல்லவர் பரவும் திருமுல்லை வாயில்
நாதனே நரைவிடை ஏறி
பல்கலைப் பொருளே படுதுயர் களையாய்
பாசுப தாபரஞ் சுடரே."

பெண்களின் கண்களுக்கு மான் கண்கள் உவமை: "மானன டைந்த நோக்கி காண.", "மானேர் நோக்கி கண்டங் குவப்ப.", "மானை மென்விழி மங்கையொர் பாகமும்", "மானமரும் மென்விழியாள் பாகமாகும் மாண்பினீர்.", "மானஞ்சும் மடநோக்கி மலைமகள்.", "மானை நோக்கியை தேவி தன்னை.", "மானினேர் விழி மாதராய்.", "மானார் விழிநன் மாதொடும் மகிழ்ந்த மைந்தனல்லனே.", "மானைம் மடநோக்குடையாளொடே.", "மானை நோக்கி தன்னோ டுடனாவது மாண்பதுவே.", "மானை மென்விழியாளொடும் வக்கரை மேவியவன்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "மானுலாம் மழைக் கணார்." என்று திரு நாவுக்கரசு நாயனாரும், "மானை மேவிய கண்ணினாள் மலை மங்கை.", "மானைப் புரையும் மடமென்னோக்கி மடவாள்.", "மானை நோக்கியர்கண் வலைப்பட்டு." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "மான் நிலாவிய நோக்கி யர்.", "மானேர் நோக்கி உமையாள் பங்கா.", "மானேர் நோக்கி உடையாள் பங்கா.", "வலைத்தலை மானன்ன நோக்கியர்.", "உழைதரு நோக்கியர்.", "மானேர் நோக்கி மணவாளா." என்று மாணிக்க வாசகரும், "மானைப் புரை யும் மடமென்னோக்கி மாமலையாள்." என்று கண்டரா தித்தரும், "மானின் கண்." என்று திருமூலரும், "திருநெடு

நாட்டம் நவ்விமானின் செவ்வித்தாகி.'', ''மான் மாற விழிக்கும்.'' என்று பட்டினத்துப் பிள்ளையாரும், ''இன மான் விழி ஒக்கும்.'' என்று நம்பியாண்டார் நம்பியும், ''மானி நேர் விழியினாய் கேள்.'', ''மானார் நோக்கின் வனப்பகை யார்.'', ''மானேய் கண்மடவார்.'', ''மானேய் மட நோக்கி.'', ''மான் போலும் மென்னோக்கின் செய்ய வாயார்.'', ''மானாய மென்னோக்கி.'', ''மானேய் நோக்கியர் தம் வயிற்றுக் குழியில்.'', ''மானேய் நோக்கு நல்லார்.'', ''மானமரும் மென்னோக்கி வைதேவி.'' என்று திருமங்கை ஆழ்வாரும், ''மானேய் நோக்கி மடவாளை.'', ''மானேய் நோக்கு நல்லீர்.'', ''மானை நோக்கி மடப்பிள்ளை.'' என்று நம்மாழ்வாரும், ''மானேர் நோக்கியர்.'', ''மானமர் நோக்கின் மகளிரொடு.'', ''மடமான் அம்பிணை கண்டு மாதர், கடைபோழ் நெடுங்கட் காம நோக்கம், உள்ளத் திர.'', ''மடமான் நோக்கின் ஆய்ந்த கோலத் தயிராபதி.'' (**பெருங்கதை**) என்று கொங்கு வேளிரும், ''மானின் நோக்கி வரும் வழி நோக்கி.'', ''மானயா நோக்கியர்.'', ''மானை நோக்கியர் வாய்மது வாடின.'' (**சீவக சிந்தாமணி**,359, 1822, 2576) என்று திருத்தக்க தேவரும், ''மடமான் நோக்கின் வாணுதல் விறலியர்.'' (**சிறுபாணாற்றுப்படை**, 31) என்று நல்லூர் நத்தத்தனாரும், ''பெண்மகிழ்வுற்ற பிணைநோக்கு மகளிர்.'' (**மதுரைக் காஞ்சி**, 555) என்று மாங்குடி மருதனாரும், ''பிணையேர் நோக்கின் மனையோள்.'' (**குறிஞ்சிப் பாட்டு**, 154) என்று கபிலரும், ''மான் நோக்கிற் கிளிமழலை மென் சாயலோர்.'' (**பட்டினப்பாலை**, 149-50) என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரும், ''கூற்றமோ கண்ணோ பிணையோ மடவரல், நோக்கம் இம் மூன்றும் உடைத்து.'' (**திருக்குறள்**, 1085) என்று திருவள்ளுவரும், ''வென்றம் மானை. பிறழ்கண்ணாள்.'' (மிதிலைக் காட்சிப் படலம், 26), ''நவ்வி நோக்கியர்.'', ''நவ்வி விழியாரும்.'' (வரைக் காட்

சிப் படலம், 9, 15), ''மானின் நோக்கியர்.'' (நீர் விளையாட்டுப் படலம், 32), ''மானுடை நோக்கினார்.'', ''மானமர் நோக்கியோர் மதுகை வேந்தன் பால்.'' (உண்டாட்டுப் படலம், 7, 26), ''மானணி நோக்கினார்.'', ''உழை குலாம் நயனத்தார்.'' (கோலம் காண் படலம், 7, 20), ''மானின் விழி பெற்று மயில் வந்ததென வந்தார்.'' (சூர்ப்பணகைப் படலம், 33), ''நவ்விநோக்கியர் இதழ்நிகர் குமுதத்து நறுந் தேன்.'' (பம்பா நதிப் படலம், 17), ''செவ்வுழை நெடுங் கணவன்.'' (பிலம் நீங்கு படலம், 55), ''உழைத் தடங்கணி.'' (சம்பாதிப் படலம், 1), ''ஏழைக்குல நோக்கினார்கள்.'', ''மானனார் கண் இள மடவாராயினர்.'' (அட்சகுமாரன் வதைப் படலம், 14, 40) என்று கம்பரும் பாடியவற்றையும், ''மானை நேர்விழி மங்கையர்.'' (வரை எடுத்த படலம், 29) என்று உத்தர காண்டத்தில் வருவதையும் காண்க.

பிறகு உள்ள 19-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'விபூதியைப் பூசிக் கொண்ட திருமேனியைப் பெற்றவ ராகிய உமாபதீசுவரருடைய பிறைச்சந்திரன் விளங்கும் திருமுடியின் மீது ஒப்பு இல்லாத கங்கையாற்றில் ஓடும் நீர் அந்த ஈசுவரருக்குத் திருமஞ்சனத்தை வழங்குவதற்காக வந்து சேர்ந்து ஊறும் புனலை அளிக்கும் ஒளியை வீசும் மலர்கள் மலர்ந்த மரங்கள் வளர்ந்து ஓங்கி நிற்கும் கலிகை மாநகராகிய திருஊறல் என்னும் சிவத்தலத்தை வேறாகத் தன்னுடைய பெருமையைப் பெற்ற திருப்பதி என்று அந்தத் தொண்டை நாட்டில் உள்ள பெருமையைக் கொண்ட முல்லை நிலமாகிய காடு திகழும்.' பாடல் வருமாறு:

> **''நீறு சேர்திரு மேனியர் நிலாத்திகழ் முடிமேல்**
> **மாறில் கங்கைதான் அவர்க்குமஞ் சனம்தர அணைந்தே**
> **ஊறு நீர்தரும் ஒளிமலர்க் கலிகைமா நகரை**
> **வேறு தன்பெரு வைப்பென விளங்கும் மாமுல்லை.''**

நீறு-விபூதியை. சேர்-பூசிக் கொண்ட. திருமேனியர்-

திருமேனியைப் பெற்றவராகிய உமாபதீசுவரருடைய. நிலா-பிறைச் சந்திரன்; த்:சந்தி. திகழ்-விளங்கும். முடிமேல் -திருமுடியின் மீது. மாறு-தனக்கு ஒப்பு வேறு ஏதும். இல்-இல்லாத; கடைக்குறை. கங்கை தான்-கங்கையாற்றில் ஓடும் நீர்; இட ஆகு பெயர். தான்:அசை நிலை. அவர்க்கு-அந்த ஈசுவரருக்கு. மஞ்சனம்-அபிடேக நீரை. தர-வழங்கும் பொருட்டு. அணைந்து-வந்து சேர்ந்து. ஏ: அசை நிலை. ஊறு-ஊறி வரும். நீர்-புனலை. தரும்—அளிக்கும். ஒளி-பிர காசத்தை வீசும். மலர்-மலர்கள் மலர்ந்த மரங்கள் வளர்ந்து ஓங்கி நிற்கும்;ஒருமை பன்மை மயக்கம். அந்த மரங்களாவன: மகிழ மரம், தாழை மரம், வாகை மரம், வேங்கை மரம், மருத மரம், வில்வ மரம், வேப்ப மரம், பூவரச மரம், பவள மல்லிகை மரம் முதலியவை. க்:சந்தி. கலிகை மாநகரை-கலிசை மாநகரமாகிய திரு ஊறல் என்னும் சிவத்தலத்தை. நகர்-பெரிய ஊர். வேறு-மேலே கூறியவற்றையல்லாமல் வேறாக. தன்-தன்னுடைய. பெரு-பெருமையைப் பெற்ற. வைப்பு-திருப்பதி. என-என்று; இடைக்குறை. மா-அந்தத் தொண்டை வள நாட்டில் உள்ள பெருமையைக் கொண்ட. முல்லை-முல்லை நிலமாகிய காடு. விளங்கும்-திகழும்.

திரு ஊறல்: இது தொண்டை நாட்டில் விளங்கும் சிவத் தலம். இப்போது தக்கோலம் என வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவர் உமாபதீசுவரர். அம்பிகை உமையம்மை. இது அரக்கோணத்திலிருந்து தென் கிழக்குத் திசையில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. நந்தி தேவருடைய வாயிலிருந்து நீர் எந்தக் காலத்திலும் வந்து விழுந்து கொண்டிருக்கும். இதனால் தான் இந்தத் தலத்துக்குத் திருஊறல் என்ற பெயர் அமைந்தது.

இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"நீரின் மிசைத் துயின்றோன் நிறைநான் முகனு மறியா தன்னு
தேடும் வகையமர்ந்தா னவன் சேரும் இடம் வினவிற்

பாரின் மிசைஅடியார் பலர் வந்திறைஞ்ச மகிழ்ந் தாகம்
ஊரும் அரவசைத்தான் திருவூறலை உள்குதுமே.''

பிறகு உள்ள 20-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நறுமணம் கமழும் மென்மையான மலர்கள் மிகுதியாக மலர்ந்த மரம், செடி, கொடிகளைப் பெற்ற முல்லை நில மாகிய காட்டைச் சுற்றியுள்ள மருத நிலத்தில் தெளிவைக் கொண்ட அலைகளை வீசும் பல் ஆறுகள் மிகுதியான வெள் ளத்தையும் உயர்ச்சியையும் அடைந்து ஓடிச் சென்று பசுமை யான இலைகளைப் பெற்ற விசாலமான தாமரை மலர்கள் மலர்ந்த வயல்களின் பக்கங்களிலும் ஒலியை உண்டாக்கும் வலிமையைக் கொண்ட கரைகளைப் பெற்ற குளங்களிலும் ஏரியிலும் சேருபவைகளாக விளங்கும்.' பாடல் வருமாறு:

''வாச மென்மலர் மல்கிய முல்லைசூழ் மருதம்
வீசு தெண்டிரை நதிபல மிக்குயர்ந் தோடிப்
பாச டைத்தடம் தாமரைப் பழனங்கள் மருங்கும்
பூசல் வன்கரைக் குளங்களும் ஏரியும் புகுவ.''

வாச-நறுமணம் கமழும். மென்-மென்மையான. மலர்-மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்களாவன: வேங்கை மலர், வாகை மலர், கடம்ப மலர், பவள மல்லிகை மலர், மா மலர், தேக்கு மலர், மகிழ மலர், வில்வ மலர், விளா மலர் முதலியவை. மல்கிய-மிகுதியாக மலர்ந்த. முல்லை-மரம், செடி, கொடிகளைப் பெற்ற முல்லை நில மாகிய காட்டை. செடியில் மலர்ந்த மலர்களாவன: நந்தியா வட்டை மலர், தும்பை மலர் முதலியவை. கொடியில் மலர்ந்த மலர்களாவன: முல்லை மலர், மல்லிகை மலர், இருவாட்சி மலர், பூசணி மலர், பறங்கி மலர் முதலியவை. சூழ்-சுற்றியுள்ள. மருதம்-மருத நிலத்தில். தெண் திரை-தெளிவைக் கொண்ட அலைகளை திரை: ஒருமை பன்மை மயக்கம். வீசு-வீசுகின்ற. நதிபல-பல ஆறுகள்; ஒருமை பன்மை மயக்கம். மிக்கு-மிகுதி யான வெள்ளத்தையும். உயர்ந்து-உயர்ச்சியையும் அடைந்து.

ஓடி-ஓடிச் சென்று. ப்:சந்தி. பாசடை-பசுமையான இலை களைப் பெற்ற. அடை: ஒருமை பன்மை மடக்கம். த்:சந்தி. தடம்-விசாலமாக இருக்கும். தாமரை-செந்தாமரை மலர் களும் வெண்டாமரை மலர்களும் மலர்ந்து விளங்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பழனங்கள்-வயல்களினு டைய. மருங்கும்-பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். பூசல்-ஒலியை எழுப்பும். வன்-வலிமையைப் பெற்ற. கரை-கரைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. குளங்களும்-குளங்களிலும். ஏரியும்-ஏரியிலும். புகுவ-சேரு பவைகளாக விளங்கும்.

பிறகு உள்ள 21-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'பரிசுத்தராகிய பெரிய தவத்தைப் புரிந்த வசிஷ்ட முனி வருக்கு உரிய காமதேனுவினுடைய அழகிய முலைகளிலிருந்து பொழியும் பால் பொங்கி எழும் தீர்த்தமாக அமைந்து பெருமையைப் பெற்ற நந்தி மலையின் மேல் சென்று அந்த இடத்தில் முத்துக்களையும், சந்தன மரங்களையும், அகில் மரங்களோடு மாணிக்கங்களையும் செந்தாமரை மலர்களும் வெண்டாமரை மலர்களும் மலர்ந்திருக்கும் தடாகங்களில் நிறையும் வண்ணம் வந்து இறங்குவது பாலாறு.' பாடல் வரு மாறு:

"துங்க மாதவன் சுரபியின் திருமுலை சொரிபால்
பொங்கு தீர்த்தமாய் நந்திமால் வரைமிசைப் போந்தே
அங்கண் நித்திலம் சந்தனம், அகிலொடு மணிகள்
பங்க யத்தடம் நிறைப்பவந் திழிவது பாலி."

துங்க-பரிசுத்தராகிய; திணை மயக்கம். மா-பெரிய. தவன்-தவத்தைப் புரிந்த வசிஷ்ட முனிவருக்கு உரிய; ஒருமை பன்மை மயக்கம். சுரபியின்-காமதேனுவினுடைய. திரு-அழகிய. முலை-முலைகளிலிருந்து; ஒருமை பன்மை மயக் கம். சொரி-பொழியும். பால்-பாலானது. பொங்கு-பொங்கி எழும். தீர்த்தமாய்-புனித நீராகி. மால்-பெருமையைப் பெற்ற. நந்தி வரை மிசை-நந்தி மலையின் மேல். ப்:சந்தி.

போந்து-சென்று. ஏ:அசை நிலை. அங்கண்-அந்த இடத்தில். 'அழகிய இடத்தில்' என்றுமாம். நித்திலம்-முத்துக்களையும்; ஒருமை பன்மை மயக்கம். சந்தனம்-சந்தன மரங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அகிலொடு-அகில் மரங்களோடு; ஒருமை பன்மை மயக்கம். மணிகள்-மாணிக்கங்களையும். பங்கய-செந்தாமரை மலர்களும் வெண்டாமரை மலர்களும் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தடம்-தடாகங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நிறைப்ப-நிறையும் வண்ணம். வந்து இழிவது-வந்து இறங்குவது. பாலி-பாலாறு.

பிறகு வரும் 22-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தன்னுடைய குழந்தை வருடப் பெருகி எழும் பாலைக் கறக்கும் கொங்கைகளைப் பெற்ற அன்னையைப் போல உழவர்கள் முதுவேனிற் காலத்தில் மணல்கள் குவிந்திருக்கும் மேட்டைப் பிசைந்து தங்களுடைய கைகளால் தோண்ட வெள்ளமாக ஓடும் புனல் இரண்டு பக்கங்களிலும் ஓடும் கால்வாய்களினுடைய வழியே மிதந்து வந்து கரையின் மேல் ஏறி பள்ளமாக உள்ள நீளமான வயல்களில் உள்ள பெரிய மடைகளைத் தகர்ப்பது அந்தப் பாலாறு.' பாடல் வருமாறு:

" பிள்ளை தைவரப் பெருகுபால் சொரிமுலைத் தாய்போல்
மள்ளர் வேனிலின் மணல்திடர் பிசைந்து கைவருட
வெள்ள நீர்இரு மருங்குகால் வழிமிதந் தேறிப்
பள்ள நீள்வயல் பருமடை உடைப்பது பாலி."

பிள்ளை-தன்னுடைய குழந்தை. தைவர-வருடப்:சந்தி. பெருகு-பெருகிஎழும். பால்-பாலை. சொரி-கறக்கும். முலை-கொங்கைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தாய்போல்-அன்னையைப் போல. மள்ளர்-உழவர்கள்;ஒருமை பன்மை மயக்கம். வேனிலின்-முதுவேனிற் காலத்தில். மணல்-மணல்கள் குவிந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். திடர்-மேட்டை. பிசைந்து கை-பிசைந்து தங்களுடைய

கைகளால். கை: ஒருமை பன்மை மயக்கம். வருட-தோண்ட. வெள்ள-வெள்ளமாக ஓடும். நீர்-புனல். இரு-இரண்டு. மருங்கு-பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கால்வழி-கால்வாய்களின் வழியே. கால்: ஒருமை பன்மை மயக்கம். மிதந்து-மிதந்து வந்து. ஏறி-கரையின் மேல் ஏறி. ப்:சந்தி. பள்ள-பள்ளமாக உள்ள. நீள்-நீளமான. வயல்-வயல்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். பரு-பெரிய. மடை-மடைகளை; ஒருமை பன்மை மயக்கம். மடை-வயல்களுக்கு நீர் பாயும் இடம். உடைப்பது-தகர்ப்பது. பாலி-அந்தப் பாலாறு.

பிறகு வரும் 23-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அத்தகையவை ஆகிய பல ஆறுகள் பரவிஓடி அகலமான வயல்களினுடைய பக்கங்களில் அலைகள் எழுப்பும் ஒலியைப் பெற்ற ஆழமாக இருக்கும் நீர் நிரம்பி உறுதியாகிய கரைகளைக் கொண்ட பெரியவையாக விளங்கும் குளங்களையும் சூழ்ந்திருக்கும் பெரியவையாகத் திகழும் காவலைப் பெற்ற மதகுகளையும் அவற்றின் வாய்கள் திறக்கும் வண்ணம் வெளியில் ஓடிச் சென்று வயல்களில் பணிகளைப் புரியும் உழவர்கள் ஆரவாரச் சத்தத்தை எழுப்புமாறு புனலை அகலமான கால்வாய்கள் தருவனவாக இருக்கும்.' பாடல் வருமாறு:

"அனைய வாகிய நதிபரந் தகன்பணை மருங்கில்
கனைநெ டும்புனல் நிறைந்துதிண் கரைப்பெருங்
குளங்கள்
புனையி ருங்கடி மதகுவாய் திறந்திடப் புறம்போங்
வினைஞர் ஆர்ப்பொலி எடுப்பநீர் வழங்குவ வியன்கால்."

அனைய ஆகிய-அத்தகையவையாக உள்ள. நதி-பாலாறு முதலிய ஆறுகள்; ஒருமை பன்மை மயக்கம். பரந்து-பரவி ஓடி. அகன்-அகலமான. பணை-வயல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மருங்கில்-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். கனை-அலைகள் எழுப்பும் ஒலியைப் பெற்ற. நெடும்-ஆழமாக இருக்கும். புனல்-நீர். நிறைந்து—

நிரம்பி. திண்-உறுதியாகிய. கரை-கரைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பெரும்-பெரியவையாகத் திகழும். குளங்கள்-குளங்களையும். புனை-சூழ்ந்திருக்கும். இரும்-பெரியவைகளாகத் திகழும். கடி-காவலைப் பெற்ற. மதகு-மதகுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். வாய்-அவற்றின் வாய்கள்; ஒருமை பன்மை மயக்கம். திறந்திட-திறக்கும் வண்ணம். ப்:சந்தி. புறம்-வெளியில். போய்-ஓடிச் சென்று. வினைஞர்-அந்த வயல்களில் பணிகளைப் புரியும் உழவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்பு ஒலி-ஆரவாரச் சத்தத்தை. எழுப்ப-எழுப்புமாறு. நீர்-புனலை வியன்-அகலமாகிய. கால்-கால்வாய்கள்; ஒருமை பன்மை மயக்கம். வழங்குவ-தருபவையாக இருக்கும்.

பிறகு உள்ள 24-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'தமக்கு ஒப்பு இல்லாத வளப்பத்தைப் பெற்ற காளை மாடுகளைப் பூட்டியிருக்கும் பல ஏர்கள் நெருங்கி உழ வயல்களில் சேற்றை உண்டாக்கும் உழவர்கள் சம்பா நெற் பயிர்களினுடைய வெண்மையான முளைகளை சிதறுமாறு செய்து நாற்றுக்களுக்குத் தண்ணீரைப் பாய்ச்சுபவர்களும் பிடுங்குகிறவர்களும் அவற்றை நடுபவர்களும் ஆக உள்ள வேறு வேறு பல தொழில்களைப் பெற்றவர்கள் பெரியதாக எழுப்பும் முழக்கம் அந்த வயல்களில் மிகுதியாகக் கேட்கும்.' பாடல் வருமாறு:

"மாறில் வண்பகட் டேர்பல நெருங்கிட வயல்கள்
சேறு செய்பவர் செந்நெலின் வெண்முளை சிதறி
நாறு வார்ப்பவர் பறிப்பவர் நடுபவ ரான
வேறு பல்வினையுடைப் பெருங் கம்பலை மிகுமால்."

மாறு-தங்களுக்கு ஒப்பு. இல்-இல்லாத; கடைக்குறை. வண்-வளப்பத்தைப் பெற்ற. பகட்டு-காளை மாடுகளைப் பூட்டியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ஏர்பல-பல ஏர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நெருங்கிட-நெருங்கி உழ. வயல்கள்-அந்த வயல்களில். சேறு-சேற்றை. செய்பவர்-உண்டாக்கும்

உழவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். செந்நெலின்-சம்பா நெற்பயிர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நெலின்: இடைக்குறை. வெண்-வெண்மையாகிய.முளை-முளைகளை; ஒருமை பன்மை மயக்கம். சிதறி-சிதறுமாறு செய்து. நாறு-நாற்றுக்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். வார்ப்பவர்-தண்ணீரைப் பாய்ச்சுபவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். பறிப்பவர்-பிடுங்குகிறவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். நடுபவர்-அவற்றை வேறு இடங்களில் நடுபவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். ஆன-ஆக உள்ள. வேறு-வேறு வேறு. பல்-பலவாகிய. வினையுடை-தொழில்களைப் பெற்றவர்கள்: வினையாலணையும் பெயர். வினை: ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பெரும்-பெரியதாக எழுப்பும். கம்பலை-முழக்கம். மிகும்-அந்த வயல்களில் மிகுதியாகக் கேட்கும். ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 25-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஓடி வரும் நீர் நிரம்பிய பெரியவையாக விளங்கும் கால்வாய்களை வாளை மீன்கள் அணையைப் போல இருந்து தடுக்க பெரியவையாகத் திகழும் கரைகளில் அமையும் வண்ணம் நீர் வளத்தைப் பெற்ற வயல்கள் விளங்குபவையாக இருக்கும்; நெருக்கமாக உள்ள சேல் மீன்களினுடைய கூட்டம் உயரமாகச் செய்பவை நீண்ட நீர்நிலைகளினுடைய கரைகளில் இருக்கும் வண்ணம் புரிந்து நீர் பாய்ந்து வரும் சிறிய மதகுகளில் அந்த நீரை ஓடுவதைத் தடுப்பவை பருத்தவையாக இருக்கும் வரால் மீன்களின் கூட்டம்.' பாடல் வருமாறு:

"வரும்பு னற்பெரும் கால்களை மறித்திட வாளை
பெருங்கு லைப்பட விலங்குவ பிறங்குநீர்ப் பழனம்;
நெருங்கு சேற்குலம் உயர்த்துவ நீள்கரைப் படுத்துச்
சுருங்கை நீர்வழக் கறுப்பன பருவரால் தொகுதி."

வரும்-ஓடி வரும். புனல்-நீர் நிரம்பிய. பெரும்-பெரியவை

யாக விளங்கும். கால்களை-கால்வாய்களை. வாளை-வாளை மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். மறித்திட-அணையைப் போல இருந்து நீரைத் தடுக்க. பெரும்-பெரியவையாகத் திகழும். சூலை-நீர் நிலைகளின் கரைகளில்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பட-அமையும் வண்ணம். நீர்-நீர் வளத்தைப் பெற்ற. ப்: சந்தி. பழனம்-வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். இலங்குவ-விளங்குபவையாக இருக்கும். நெருங்கு-நெருக்கமாக உள்ள. சேல்-சேல் மீன்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலம்-கூட்டம். உயர்த்துவ-உயரமாகச் செய்பவை. நீள்-நீளமாக உள்ள. கரை-நீர் நிலைகளினுடைய கரைகளில்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. படுத்து-இருக்கும் வண்ணம் புரிந்து. ச்:சந்தி. சுருங்கை-நீர் பாய்ந்து வரும் சிறிய மதகுகளில்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-அந்த நீரை. வழக்கு-ஓடுவதை. அறுப்பன-தடுப்பவை. பரு-பருத்தவையாக இருக்கும்; வினையாலணையும் பெயர். வரால்-வரால் மீன்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தொகுதி-குவியல்.

பிறகு வரும் 26-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வரப்புக்களைப் பெற்ற விசாலமாகிய வயல்களில் முளைத்து எழுந்து தோன்றிய செந்தாமரை மலராகிய ஆசனத்தில் களைப்பை அடைந்த கருப்பத்தைப் பெற்ற சங்குப் பூச்சிகள் அந்த வயல்களில் உள்ள இடங்கள் எல்லாவற்றிலும் தங்கள் கண்களை மூடிக் கொண்டு உறங்குபவையாக இருக்கும்; அந்தத் தொண்டை நாட்டில் உள்ள நீர் வளத்தைப் பெற்ற மருத நிலத்தில் விளங்கும் ஊர்களில் வாழும் மக்கள் விளையச் செய்த பசுமையான பிரகாசம் திகழும் உயரமாகிய ஆகாயத்தில் ஊர்ந்து செல்லும் ராகுவாகிய கிரகம் வளைத்துள்ள பெருமையைப் பெற்ற சந்திரனைப் போல இருக்கின்றன.' பாடல் வருமாறு:

" தளைத்த டம்பணை எழுந்தசெங் தாமரைத் தவிசின்
இளைத்த சூல்வளை கண்படுப் பனஇடை எங்கும்;

விளைத்த பாசொளி விளங்குநீள் விசும்பிடை ஊர்கோள்
வளைத்த மாமதி போன்றுள மருதநீர் வைப்பு.''

தளை-வரப்புக்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்.சந்தி. தடம்-விசாலமாக இருக்கும். பணை-வயல் களில்; ஒருமை பன்மை மயக்கம். எழுந்த-முளைத்து எழுந்து தோன்றிய. செந்தாமரை-செந்தாமரை மலராகிய த்:சந்தி தவிசின்-ஆசனத்தில். இளைத்த-களைப்பை அடைந்த. சூல்-கருப்பத்தைப் பெற்ற. வளை-சங்குப் பூச்சிகள்; ஒருமை பன்மை மயக்கம். கண்-தங்களுடைய கண்களை மூடிக் கொண்டு; ஒருமை பன்மை மயக்கம். இடை-அந்த வயல்களில் உள்ள இடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எல்லா வற்றிலும்; ஒருமை பன்மை மயக்கம். படுப்பன-உறங்கு பவையாக இருக்கும். நீர்-அந்தத் தொண்டை வள நாட்டில் உள்ள நீர் வளத்தைப் பெற்ற. மருத-மருத நிலத்தில் விளங் கும். வைப்பு-ஊர்களில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். வைப்பு: ஒருமை பன்மை மயக்கம். விளைத்த-விளையச் செய்த. பாசொளி-பசுமையாகிய பிரகாசம்.விளங்கு-திகழும். நீள்-உயரமாகிய. விசும்பிடை-ஆகாயத்தில். ஊர்-ஊர்ந்து செல்லும். கோள்-ராகுவாகிய கிரகம். வளைத்த-பிடித்த. மா-பெருமையைப் பெற்ற. மதி-கிரகணத்தைப் பெற்ற சந்திரனை. போன்று-போல. உள-இருக்கின்றன; இடைக் குறை. சந்திர கிரகணத்தின் போது ராகுவாகிய கிரகம் சந்திரனைப் பிடித்து விழுங்கும்.

பிறகு வரும் 27-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'உயரமாக வளர்ந்த சம்பா நெற்பயிர்களினுடைய பக்கங்களில் வளர்ந்து நிற்பவை தடிகளைப் பெற்ற உயர மான கரும்புச் செடிகள்; பூக்களைக் கொண்ட அந்தக் கரும்பு செடிகளினுடைய பக்கங்களில் நெருங்கி வளர்ந்திருப்பவை கமுக மரங்கள்; அந்தக் கமுக மரங்களினுடைய பக்கங்களில் நீளமான குலைகளைப் பெற்ற தென்ன மரங்களும், பசுமை யாகிய வாழை மரங்களும், வளப்பத்தைப் பெற்ற டலா மரங்

களும், தொங்குகின்ற இனிய சுவையைப் பெற்ற பழங்களைக் கொண்ட மாமரங்களும் நீளமாக உள்ள வேலியைப் போல் விளங்குபவை பூம்பொழில்கள்.' பாடல் வருமாறு:

'' ஓங்கு செந்நெலின் புடையன உயர்கழைக் கரும்பு
பூங்க ரும்பயல் மிடைவன பூகம்; அப்பூகப்
பாங்கு நீள்குலைத் தெங்குபைய கதலிவண் பலவு
தூங்கு தீங்கனிச் சூதம்நீள் வேலிய சோலை.''

ஓங்கு-உயரமாக வளர்ந்து நிற்கும். செந்நெலின்-சம்பா நெற் பயிர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நெலின்: இடைக்குறை. புடையன-பக்கங்களில் வளர்ந்து நிற்பவை. புடை: ஒருமை பன்மை மயக்கம். கழை-தடிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். கழை-இரண்டு கணுக்களுக்கும் நடுவில் உள்ள பகுதி. க்:சந்தி. உயர்-உயரமாகிய. கரும்பு-கரும்புச் செடிகள்; ஒருமை பன்மை மயக்கம். பூம்-மலர்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். கரும்பு-அந்தக் கரும்புச் செடிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். அயல்-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மிடைவன-நெருங்கி வளர்ந்திருப்பவை. பூகம்-கமுக மரங்கள்; ஒருமை பன்மை மயக்கம் அப்பூக-அந்தப் பாக்க மரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பாங்கு-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நீள்-நீளமான. குலை-குலைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தெங்கு-தென்ன மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். பைம்-பசுமையான இலைகளைப் பெற்ற. கதலி-வாழை மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். அந்த வாழை மரங்களாவன: கசந்தன் வாழை மரம், ரஸ்தாளி வாழை மரம், கதலி வாழை மரம், பேயன் வாழை மரம், பொந்தன் வாழை மரம், கூளி வாழை மரம், பச்சைநாடன் வாழை மரம் முதலியவை. வண்-வளப்பத்தைப் பெற்ற. பலவு-பலா மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். வளப்பம் என்றது பழங்களின் வளப்பத்தை. தூங்கு-தொங்கும். தீம்-இனிப்புச் சுவையைப் பெற்ற. கனி-பழங்கள் பழுக்கும்;

ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சூதம்-தேமா மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். நீள்-நீளமாக உள்ள. வேலிய-வேலியைப்போல விளங்குபவை. சோலை-பூம்பொழில்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 28-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் தொண்டை வள நாட்டில் உள்ள வளங்களைப் பெற்ற பழைய ஊர்களில் நீண்ட குளிர்ச்சியைப் பெற்ற வயல்கள் சூழ்ந்த பக்கங்களில் உள்ளவை, அவை நெற்களைச் சேமித்து வைத்திருக்கும் குதிர்கள் நெருங்கி உள்ள இருப்பிடங்களை உடையவை; தங்கள் திரு மாளிகைகளுக்கு வரும் விருந்தினர்களை அவர்களுடைய எதிரில் சென்று வரவேற்கும் பெருமை நிலைத்துத் தங்கியுள்ள பெருமையைப் பெற்ற குடிமக்கள் இல்லற வாழ்வை நடத்திக் கொண்டு விளங்குவார்கள்; அந்த ஊர்கள் மாடங்கள் உயரமாக நின்று விளங்கிய தெருக்களை உடையவை.' பாடல் வருமாறு:

"நீடு தண்பணை உடுத்தநீள் மருங்கின; நெல்லின்
கூடு துன்றிய இருக்கைய; விருந்தெதிர் கொள்ளும்
பீடு தங்கிய பெருங்குடி மனையறம் பிறங்கும்
மாடம் ஓங்கிய மறுகின; மல்லல் மூதூர்கள்."

மல்லல்-அந்தத் தொண்டை வள நாட்டில் உள்ள நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மூதூர்கள்-பழைய ஊர்கள். நீடு-நெடுங்காலமாக உள்ள. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. பணை-வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். உடுத்த-சூழ்ந்த. நீள்-நீளமான. மருங்கின-பக்கங்களில் உள்ளவை. மருங்கு: ஒருமை பன்மை மயக்கம். நெல்லின்-அந்த ஊர்கள் நெற்களைச் சேமித்து வைத்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். கூடு-குதிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். துன்றிய-நெருங்கி உள்ள. இருக்கைய-இருப்பிடங்களை உடையவை. இருக்கை: ஒருமை பன்மை மயக்கம். விருந்து-

தங்களுடைய திருமாளிகைகளுக்கு வரும் விருந்தினர்களை; திணை மயக்கம். எதிர் கொள்ளும்-அவர்களுக்கு எதிரில் சென்று வரவேற்கும். பீடு-பெருமை. தங்கிய-நிலையாகத் தங்கியுள்ள. பெரும்-பெருமையைப் பெற்ற. குடி-குடி மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். மனையறம்-இல்லற வாழ்வை நடத்திக் கொண்டு. பிறங்கும்-விளங்குவார்கள்; திணை மயக்கம். மாடம்-அந்த ஊர்கள் மாடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஓங்கிய-உயரமாக நின்று விளங்கிய. மறுகினை-தெருக்களை உடையவை. மறுகு: ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 29-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'செல்வத்தைப் படைத்த மக்கள் உயர்ச்சியைப் பெற்று விளங்கிய அழகிய வேதியர்கள் வாழும் செழுமையைப் பெற்றவையாகிய அந்தத் தொண்டைவள நாட்டில் உள்ள ஊர்கள்; பழையவையாகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய நான்கு வேதங்கள் முதலிய பெருமையைப் பெற்ற சாத்திரங்களை அந்தணர்கள் ஓதும் இனிய நாதம் பொருந்தி இல்லற வாழ்வை விரும்பி நடத்திக் கொண்டு யாகங்களில் வளர்க்கும் தீயில் சொரியும் நெய், சமித்துக்கள் முதலிய ஆகுதிகளினால் எழுந்து தோன்றிய மிகுதியாக உள்ள குளிர்ச்சியைப் பெற்ற புகை மழையை வழங்கும் மேகங்களினுடைய கூட்டத்தைப் பரவச் செய்யும்.' பாடல் வருமாறு:

"தொல்லை நான்மறை முதற்பெரும் கலையொலி துவன்றி
இல்ல றம்புரிந் தாகுதி வேள்வியில் எழுந்த
மல்கு தண்புகை மழைதரு முகிற்குலம் பரப்பும்
செல்வம் ஓங்கிய திருமறை யவர்செழும் பதிகள்."

செல்வம்-செல்வத்தைப் படைத்த மக்கள்; திணை மயக்கம். ஓங்கிய-உயர்ச்சியைப் பெற்று விளங்கிய. திரு-அழகிய.

மறையவர்-வேதியர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். செழும்-செழுமையைப் பெற்றவையாகிய; வினையாலணையும் பெயர். பதிகள்-அந்தத் தொண்டை வளநாட்டில் உள்ள ஊர்கள். தொல்லை-பழையவை ஆகிய. நான்மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்கள்; ஒருமை பன்மை மயக்கம். முதல்-முதலிய. பெரும்-பெருமையைப் பெற்ற. கலை-சாத்திரங்களை அந்தணர்கள் ஓதும்; ஒருமை பன்மை மயக்கம். ஒலி-இனிய நாதம். துவன்றி-பொருந்தி. இல்லறம்-இல்லற வாழ்வை. புரிந்து விரும்பி நடத்திக்கொண்டு. வேள்வியில்—யாகங்களில் வளர்க்கும் தீயில்; ஆகு பெயர். ஆகுதி-நெய், சமித்துக்கள் முதலிய ஆகுதிகளால்; ஒருமை பன்மை மயக்கம். எழுந்த-எழுந்து தோன்றிய. மல்கு-மிகுதியாக உள்ள. தண்புகை-குளிர்ச்சியைப் பெற்ற புகை. மழை-மழையை. தரு-வழங்கும். முகில்-மேகங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலம்-கூட்டத்தை. பரப்பும்-பரவச் செய்யும்.

வேள்வியினால் மழை பெய்தல்: "நான்மறை ஓதி ஐவகை வேள்வி அமைத்தாறங்கம் முதலெழுத்தோதி வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும் பிரமபுரம்." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பாடி அருளியதைக் காண்க.

பிறகு உள்ள 30-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தீங்குகள் போகும் வண்ணம் தீக்காவியாகும் அசுரனுக்குத் தலைவராகிய வல்லநாதேசுவரர் திருவருளை வழங்கிய தவமும், நல்லவினைகளாகிய புண்ணியச் செயல்களின் பயனாக விருப்பம் மருவிய பெண்மணிகள் பிறந்த பரம்பரையைப் பெற்ற வேதியர்கள் வாழும் திருவல்லம் என்னும் சிவத்தலம் விபூதி முதலிய சைவ சமயத்துக்கு உரிய சாதனங்களைப் பாதுகாத்த பொலிவினால் திகழ்வதும் அந்தத் திருவல்லம் ஆகும்.' பாடல் வருமாறு:

"தீது நீங்கிடத் தீக்காவி யாம்அவு ணற்கு
நாதர் தாம்அருள் புரிந்தது; நல்வினைப் பயன்செய்
மாதர் தோன்றிய மரபுடை மறையவர் வல்லம்
பூதி சாதனம் போற்றிய பொற்பினால் விளங்கும்."

தீது-தீங்குகள்; ஒருமை பன்மை மயக்கம். நீங்கிட-போகும் வண்ணம். த்:சந்தி. தீக்காவியாம்-தீக்காவியாகும். அவுணற்கு-அசுரனுக்கு. நாதர்-தலைவராகிய வல்லநாதேசுவரர். தாம்: அசை நிலை. அருள்-தம்முடைய திருவருளை. புரிந்தது-விரும்பி வழங்கிய தவமும். நல்வினை-நல்லவினைகளாகிய புண்ணியச் செயல்களை முன் பிறவியில் செய்ததனால் உண்டாகிய. வினை: ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பயன்-பிரயோசனத்தை. செய்-வழங்கும். மாதர்-விருப்பம் மருவிய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். தோன்றிய-பிறந்த. மரபு-பரம்பரையை. உடை-பெற்ற. மறையவர்-வேதியர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். வல்லம்-திருவல்லம் என்னும் சிவத்தலம். பூதி-விபூதி. சாதனம்-உருத்திராக்கம், சடை ஆகிய சைவ சமயத்துக்கு உரிய சாதனங்களை; ஒருமை பன்மை மயக்கம். போற்றிய-பாதுகாத்த. பொற்பினால்-பொலிவினால். விளங்கும்-திகழ்வதும் அந்தத் திருவல்லம் ஆகும்; வினையாலணையும் பெயர்.

திருவல்லம்: இது தொண்டை வளநாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் வல்லநாதேசுவரர். அம்பிகை வல்லாம்பிகையம்மை. இது இந்தக் காலத்தில் திருவலம் என்று வழங்கும். ஆர்க்காட்டுக்கு மேற்குத் திசையில் எட்டு மைல் தூரத்தில் உள்ளது இது; நீவா என்னும் ஆற்றின் மேற்குக் கரையில் விளங்குவது. இது ஒன்பது கிரகங்களும் வல்லாளன் என்ற பெயரைப் பெற்ற மன்னனும் வழிபட்ட தலம். இதைப்பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"எரித்தவன் முப்புரம் எரியின் மூழ்கத்
தரித்தவன் கங்கையைத் தாழ்சடை மேல்

விரித்தவன் வேதங்கள் வேறு வேறு
தெரித்தவன் உறைவிடம் திரு வல்லமே."

பிறகு வரும் 31-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மலையிலிருந்து குதிக்கும் அருவி தரையில் விழும்போது வழங்கிய சிவந்த நிறத்தைப் பெற்ற மாணிக்கங்களும், முல்லை நிலமாகிய காட்டில் வளர்ந்து நிற்கும் பலவகையான மரங்களில் மலர்ந்திருக்கும் அழகிய மலர்களும், பருத்திச் செடிகள் வளர்ந்து நிற்கும் இடங்களில் ஓடைகள் நீர் நிரம்பி இருக்குமாறு ஓடி வந்து இறங்கும் பாலாற்றினுடைய கரையில் தங்கிய கங்கையாறு வாழும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேல் பெற்றவராகிய மணிகண்டேசுவரர் மகிழ்ச்சியை அடைந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருமாற்பேறு ஆகும் ஒப்பு இல்லாத தலத்தில் உள்ள ஆலயமும் சூழ்ந்திருப்பது அந்த மலர்கள் மலர்ந்திருக்கும் வயல்களைப் பெற்ற தொண்டை வள நாட்டில் விளங்கும் மருத நிலங்கள்.' பாடல் வருமாறு:

**"அருவி தந்தசெம் மணிகளும் புறவில்ஆய் மலரும்
பருவி ஓடைகள் நிறைந்திழி பாலியின் கரையின்
மருவு கங்கைவாழ் சடையவர் மகிழ்ந்தமாற் பேறாம்
பொருவில் கோயிலும் சூழ்ந்ததப் பூம்பணை மருதம்."**

அருவி-மலையிலிருந்து குதிக்கும் அருவி. தந்த-தரையில் விழும்போது வழங்கிய. செம்-சிவந்த நிறத்தைப் பெற்றிருக்கும். மணிகளும்-மாணிக்கங்களும். புறவில்-முல்லை நிலமாகிய காட்டில் வளர்ந்து நிற்கும் பலவகையான மரங்களில் மலர்ந்திருக்கும்; இட ஆகு பெயர். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வேங்கை மரம், வாகை மரம், மகிழ மரம், தாழை மரம், கடம்ப மரம், மருத மரம், வில்வ மரம், வேப்ப மரம், நுணா மரம், விளா மரம் முதலியவை. ஆய்-அழகிய. மலரும்-மலர்களும்; ஒருமை பன்மை மயக்கம். பருவி-பருத்திச் செடிகள் வளர்ந்து நிற்கும் இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம்; இட ஆகுபெயர். ஓடைகள்-ஓடும்

ஓடைகள். நிறைந்து-நீர் நிரம்பியிருக்குமாறு. இழி-ஓடிவந்து இறங்கும். பாலியின்-பாலாற்றினுடைய. கரையின்-கரையில். மருவு-தங்கிய. கங்கை-கங்கையாறு. வாழ்-வாழும். சடைய வர்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவ ராகிய மணிகண்டேசுவரர். மகிழ்ந்த-மகிழ்ச்சியை அடைந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; கால மயக்கம். மாற்பேறு ஆம்-திருமாற்பேறு ஆகும். பொரு-ஒப்பு. இல் -இல்லாத தலத்தில் உள்ள; கடைக்குறை. கோயிலும்-ஆலயமும். சூழ்ந்தது-விளங்குவது. அப்பூம்-அந்த மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பணை-வயல் களைப் பெற்ற;ஒருமை பன்மை மயக்கம். மருதம்-தொண்டை வள நாட்டில் விளங்கும் மருத நிலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மருதம்-வயல்களும் அவற்றைச்சார்ந்த இடங்களும்.

திருமாற்பேறு: இது தொண்டை வள நாட்டில் பாலாற் றின் கரையில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டு இருப்பவருடைய திருநாமங்கள் மால்வணங்கீசுவரர்,மணிகண் டேசுவரர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் கருணை நாயகி, அஞ்சனாட்சி அம்மை என்பவை. இந்தத் தலம் பளூர் என்ற ஊருக்குத் தென்மேற்குத் திசையில் இரண்டரை மைல் தூரத்தில் உள்ளது. வடமொழியில் இந்தத் தலத்தின் திருநாமம் ஹரிச்சந்திரபுரம் எனக் கூறப்படும். குபன் என் னும் மன்னனுக்காக திருமால் ததீசி முனிவரோடு போர் புரிய அவருடைய சக்கராயுதம் அந்த முனிவருடைய வஜ்ர திருமேனியிற் பட்டு வாய் மடிந்து விட்டனால் வேறு சக்கராயுதத்தைப் பெற அந்தத் திருமால் எண்ணிப் பார்த்து சலந்தராசுரனைச் சங்காரம் புரிந்தருளிய சக்கரம் சிவபெருமானிடத்தில் இருப்பதைத் தெரிந்து கொண்டு அந்த ஆயுதத்தை அடையும் பொருட்டுத் திருமால் இந்தத் தலத்திற்கு எழுந்தருளி மணிகண்டேசுவரரை ஒவ்வொரு நாளும் ஆயிரம் செந்தாமரை மலர்களால் அருச்சனை புரிந்து கொண்டு வந்தார்; மணிகண்டேசுவரர் அந்தத் திருமாலினு

டைய பக்தியின் ஆற்றலைத் தெரிந்து கொள்ளும் பொருட்டு ஒரு நாள் ஒரு மலரை மறைத்தருள, திருமால் சகசிர நாம அருச்சனை புரியும் சமயத்தில் ஒரு திருநாமத்துக்கு ஒரு தாமரை மலர் குறைதலைப் பார்த்து வருத்தத்தை அடைந்து தம்முடைய கண்ணையே தோண்டி மணிகண்டேசுவரருக்கு அணிந்து ஆசையை நிறைவேற்றினார். அப்போது மணிகண்டேசுவரர் தம்முடைய காட்சியை வழங்கியருளத் திருமாலுக்குச் சுதரிசனம் என்னும் சக்கராயுதத்தையும் தம்முடைய கண்ணைத் தோண்டி அருச்சனை புரிந்த காரணத்தினால் பதுமாட்சன் என்னும் திருநாமத்தையும் வழங்கியருளி, இந்தத் தலத்தில் ஒரு கண நேரம் தங்கின பக்தர்களுக்கு முக்தியை வழங்கியருள வேண்டும் என்று திருமால் வேண்டிக் கொண்ட வண்ணம் திருவருளைப் புரிந்து அந்த ஈசுவரர் மறைந்தருளினார். இது சோமனும் வழிபட்ட தலம். "மன்னி மாலொடு சோமன் பணி செயும், மன்னு மாற்பேற்றடிகளை." என்று தேவாரத்தில் வருகிறது. இந்தத் தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"பொருமால் திண்படை வேண்டிநற் பூம்புனல்
வருமாற் றின்மலர் கொண்டு வழிபடும்
கருமாற் கின்னருள் செய்தவன் காண்டகு
திருமாற் பேறு தொழவினை தேயுமே."

அடுத்து உள்ள 32-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தொண்டை வள நாட்டில் உள்ள மருத நிலத்தினுடைய வலரும் விளையும் மேம்பாட்டை எவ்வாறு எடுத்துக் கூறுவது? பரவிய அலைகள் வீசும் பல ஆறுகளினுடைய அருமையாகிய கரைகளில் விளங்கும் சிவபெருமானுடைய திருக்கோயில்கள் பலவற்றையும் பெற்றுப் பருத்திருக்கும் துதிக்கையைப் பெற்றதும், தாருகாவனத்து முனிவர்கள் தம்மைக் கொல்லுமாறு விடுத்ததும் ஆகிய யானையின் தோலை உரித்தவராகிய பாசூர் நாதேசுவரர் மகிழ்ந்து எழுந்தருளி

யுள்ள அந்தத் திருப்பாசூர் என்னும் சிவத்தலத்தினுடைய பக்கங்களைச் சார்ந்திருக்கும் தவத்தைப் புரிந்தது அல்லவோ அந்தத் திருப்பாசூர்.' பாடல் வருமாறு:

''விரும்பு மேன்மைஎன் பகர்வது? விரிதிரை நதிகள்
அரும்க ரைப்பயில் சிவாலயம் அனேகமும் அணைந்து
பருங்கை யானையை உரித்தவர் இருந்த அப்பாசூர்
மருங்கு சூழ்தவம் புரிந்த தன்றோ மற்றமருதம்.''

மற்று: அசைநிலை. அ மருதம்-அந்தத் தொண்டை வள நாட்டில் உள்ள அந்த மருத நிலத்தினுடைய. விரும்பு-பலரும் விழையும். மேன்மை-மேம்பாட்டை. என்-எவ்வாறு. பகர்வது -எடுத்துக் கூறுவது. விரி-பரவிய. திரை-அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். நதிகள்-பாலாறு முதலிய ஆறுகளி னுடைய. அரும்-அருமையாக விளங்கும். கரை-கரைகளில்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பயில்-விளங்கும். சிவா லயம்-சிவபெருமானுடைய திருக்கோயில்கள்; ஒருமை பன்மை மயக்கம். அனேகமும்-பலவற்றையும். அணைந்து-பெற்று. பரும்-பருத்திருக்கும். கை-துதிக்கையைப் பெற்றதும்; வினை யாலணையும் பெயர். யானையை-தாருகாவனத்து முனிவர் கள் தம்மைக் கொல்லுமாறு விடுத்த யானையின் தோலை; ஆகு பெயர்,உரித்தவர்-உரித்துப் போர்வையாகப் போர்த்துக் கொண்டருளியவராகிய பாசூர் நாதேசுவரர். இருந்த- மகிழ்ந்து எழுந்தருளியுள்ள. அப்பாசூர்-அந்தத் திருப்பாசூர் என்னும் சிவத்தலத்தினுடைய. மருங்கு-பக்கங்களை; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சார்ந்திருக்கும். தவம்-தவத்தை. புரிந்தது-செய்தது. அன்றோ-அல்லவோ அந்தத் திருப்பாசூர்.

திருப்பாசூர்: இது தொண்டை வள நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் பாசூர் நாதேசுவரர். அம்பிகைபசுபதி நாயகியம்மை. இது திருவெவ்வு ளூருக்கு மேற்குத் திசையில் இரண்டு மைல் தூரத்தில் உள்ளது. பாசூர் நாதேசுவரர் ஒரு மூங்கில் மரத்தின் அடியில் தோன்றியருளிய தலம் இது. சமணர்கள் கரிகால் சோழ

மன்னனுக்குப் பகைவனாக இருந்த ஒரு குறும்ப மன்னனுக்கு உதவியாக, ஒரு குடத்தில் விட்டு அந்தச் சோழ மன்னனிடம் அனுப்பிய பெரிய பாம்பை அந்தச் சோழ மன்னனுக்கு உதவியாகப் பாசூர் நாதேசுவரர் எடுத்து ஆட்டியருளிய தலம் இது. இந்தச் செய்தியைத் திருநாவுக்கரசு நாயனார் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகையில், "திரை வந்தனைப் பற்றி ஆட்டுவர் பாசூரடிகளே." என்றும், மற்றொரு பாசுரத்தில், "தீயதோர் பாம்பும் ஆட்டுவர் பாசூர் அடிகளே." என்றும், ஒரு திருத்தாண்டகத்தில், "படவரவொன்றது சூட்டிப் பாசூர் மேய பரஞ்சுடரைக் கண்டடியேன் உயர்ந்தவாறே." என்றும் சிறப்பித்துப் பாடியருளியுள்ளார். இந்தத் தலத்தைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"சாம்பர் பூசுவர் தாழ்சடை கட்டுவர்
ஓம்பன் மூதெரு தேறும் ஒருவனார்
தேம்பல் வெண்மதி சூடுவர் தீயதோர்
பாம்பும் ஆட்டுவர் பாசூர் அடிகளே."

இது திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய பாசுரம்.

பிறகு வரும் 33-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மலர்கள் மேவும் நீர் பாயும் வயல்களாகிய களங்களைப் பாடிய பொருநர்கள் தாங்கள் தங்களுடைய அருமையாக விளங்கும் சுற்றத்தினர்களோடு தடாகங்களில் மலர்ந்த மென்மையான மலர்களை அணிந்து கொண்டு மாமரங்களின் பக்கங்களில் உள்ள குளிர்ச்சியைப் பெற்ற நிழல்களில் தங்கியிருந்து மருதயாழ்களை வாசிக்கும் அழகு மருவிய குளிர்ச்சியைப் பெற்ற வயல்களினுடைய வெளியில் இருப்பது கருமையான நீர் நிறைந்த கழிகள் உள்ள தொண்டை வளநாட்டில் இருக்கும் நெய்தல் நிலம்.' பாடல் வருமாறு:

"பூமரும்புனல் வயற்களம் பாடிய பொருநர்
தாமரும் கிளையுடன்தட மென்மலர் மிலைந்து

மாம ருங்குதண் ணிழலின் மருதயாழ் முரலும்
காமர் தண்பணைப் புறத்தது கருங்கழி நெய்தல்.''

கரும்-தொண்டை வளநாட்டில் உள்ள கருமையான. கழி-நீர் நிறைந்த கழிகள்; ஒருமை பன்மை மயக்கம். நெய்தல் -இருக்கும் நெய்தல் நிலம். நெய்தல் நிலம்-கடற்கரையும் அதைச் சார்ந்த இடங்களும். பூ-மலர்கள். மரும்-மேவும். புனல்-நீர்பாயும். அந்த மலர்களாவன: செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், நீலோற்பல மலர், குமுத மலர், அல்லி மலர், ஆம்பல் மலர், செங்கழுநீர் மலர் முதலியவை. வயல் -வயல்களாகிய. களம்-ஏர்க்களங்களை; ஒருமை பன்மை மயக்கம். பாடிய-புகழ்ந்து பாடிய. பொருநர்-தடாரிப்பறைகளை அடிக்கும் பொருநர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொருநர் கள் ஏர்க்களம் பாடும் பொருநர், போர்க்களம் பாடும் பொரு நர் என்று இருவகைப்படுவர். அவர்களில் இங்கே கூறப் பெற்றவர்கள் ஏர்க்களம் பாடும் பொருநர்கள். தாம்-தாங் கள். அரும்-அருமையாக விளங்கும். கிளையுடன்-உறவினர் களோடு; திணை மயக்கம். தட-தடாகத்தில் மலர்ந்திருக்கும். மென்-மென்மையான. மலர்-மேலே கூறிய மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். மிலைந்து-அணிந்து கொண்டு. மா-மாமரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம்-மருங்கு-பக்கங் களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. நிழலின்-நிழல்களில் தங்கிக்கொண்டிருந்து; ஒருமை பன்மை மயக்கம். மருத யாழ்-மருத யாழ்களை; ஒருமை பன்மை மயக்கம். முரலும்-மீட்டி வாசிக்கும். காமர்-அழகு மருவிய; 'விருப்பம் மருவிய' எனலும் ஆம். தண்-குளிர்ச்சி யைப் பெற்ற. பணை-வயல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புறத்தது-வெளியில் இருந்து விளங்குவது.

அடுத்து உள்ள 34-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் தொண்டை வளநாட்டில் உள்ள பரிசுத்தமாகிய வெண்மையான நீர் நிலைகளின் துறைகளில் அமர்ந்து கொண்டு வலையர்கள் கட்டுபவை மீன்களைப் பிடிக்கும்

வலைகள்; சிவப்பாக உள்ள காதுகளளவும் நீண்ட கண்களைப் பெற்ற வலைச்சியர்கள் மாலையாகத் தொடுத்துக் கட்டு பவை செருந்தி மலர்கள்; அந்தத் தொண்டை வளநாட்டில் அமைந்த பெரிய உப்பளங்களில் உப்பைக் குவிப்பவர்கள் விலைக்கு அளந்து வழங்குபவை உப்புக்குவியல்கள்; மென்மை யான சாயல்களையும், மென்மையான இடுப்புக்களையும் பெற்றவர்களாகிய உப்பளத்தில் பணிகளைப் புரியும் பெண் மணிகள் விலைக்கு அளந்து வழங்குபவை முத்துக்கள்.' பாடல் வருமாறு:

'' தூய வெண்துறைப் பரதவர் தொடுப்பன வலைகள்;
சேய நீள்விழிப் பரத்தியர் தொடுப்பன செருந்தி;
ஆய பேரளத் தளவர்கள் அளப்பன உப்பு;
சாயல் மெல்லிடை அளத்தியர் அளப்பன தரளம்.''

தூய-அந்தத் தொண்டை வள நாட்டில் உள்ள பரிசுத்த மாகிய. வெண்-வெண்மையான. துறை-நீர் நிலைகளில் உள்ள துறைகளில்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பரத வர்-அமர்ந்து கொண்டு வலையர்கள்; ஒருமை பன்மை மயக் கம். தொடுப்பன-கட்டுபவை. வலைகள்-மீனகளைக் கடலில் பிடிக்கும் வலைகள். சேய-சிவப்பாக உள்ள. நீள்-காதுகளின் அளவும் நீண்ட. விழி-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பரத்தியர்-வலைச்சியர்கள். தொடுப்பன- தொடுத்துக் கட்டுபவை. செருந்தி-பொன் நிறத்தைக் கொண்ட செருந்தி மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆய- அந்தத் தொண்டை வளநாட்டில் அமைந்த. பேர்-பெரிய, அளத்து-உப்பளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். அளவர் கள்-உப்பைக் குவியலாகக் குவிப்பவர்கள். அளப்பன- விலைக்கு அளந்து வழங்குபவை. உப்பு-உப்புக் குவியல்கள்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். சாயல்மெல்-மென்மை யான சாயல்களையும்; ஒருமை பன்மை மயக்கம். இடை- மென்மையான இடுப்புக்களையும் பெற்றவர்களாகிய. இடை: ஒருமை பன்மை மயக்கம். இடை: ஆகுபெயர். அளத்தியர்-

உப்பளத்தில் பணிகளைப் புரியும் பெண்மணிகள். அளப்பன-விலைக்கு அளந்து வழங்குபவை. தரளம்-முத்துக்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 35-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கொடுமையாக உள்ள செயல்களாகிய தொழில்களைப் புரியும் வலையர்கள் விலைக்கு வழங்குபவை கொழுத்த மீன்கள்; அந்தக் கடலின் பக்கத்தில் உள்ள மணல்கள் பரவிய கரைகளில் வலையர் சாதிப் பெண்மணிகள் விலைக்கு அளந்து வழங்குபவை பவளங்கள்; சகரர்களால் தோண்டப் பெற்ற சாகரத்தில் சங்குப் பூச்சிகளை அந்தத் துறைகளில் உள்ளவர்கள் முழுகுவார்கள்; அவ்வாறு முழுகுபவர்களுடைய மாவடுக்களின் பிளப்புக்களைப்போல உள்ள கண்களைப் பெற்ற மனைவியர்களாகிய மங்கைப் பருவத்தை அடைந்த பெண்மணிகள் முழுகுபவை கடற்கரையில் உள்ள மணற்பரப்பில் தோண்டப் பெற்ற கிணறுகள்.' பாடல் வருமாறு:

''கொடுவி னைத்தொழில் நுளையர்கள் கொடுப்பன கொழுமீன்;
படும ணற்கரை நுளைச்சியர் கொடுப்பன பவளம்;
தொடுக டற்சங்கு துறையவர் குளிப்பன; அவர்தம்
வடுவ கிர்க்கண் மங்கையர் குளிப்பன மணற்கேணி.''

கொடு-கொடுமையாக உள்ள. வினை-செயல்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தொழில்-வேலைகளைப் புரியும்; ஒருமை பன்மை மயக்கம். நுளையர்கள்-வலையர்கள். கொடுப்பன-வழங்குபவை. கொழு-கொழுத்த. மீன்-கடலில் உள்ள மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். படுமணல்-அந்தக் கடலின் பக்கத்தில் உள்ள மணல்கள் பரவிய. மணல்: ஒருமை பன்மை மயக்கம். கரை-கரைகளில்; ஒருமை பன்மை மயக்கம். நுளைச்சியர்-வலைச்சிகள். கொடுப்பன-விலைக்கு அளந்து வழங்குபவை. பவளம்-அந்தக் கடலில் தோன்றிய பவளங்கள்; ஒருமை பன்மை மயக்கம். தொடு-சகரர்கள்

தோண்டிய, கடல்-சாகரத்தில். சங்கு-சங்குப்பூச்சிகளை; ஒருமை பன்மை மயக்கம். துறையவர்-அந்தத் துறைகளில் உள்ளவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். குளிப்பன-முழுகு வார்கள்; திணை மயக்கம். அவர்தம்-அவ்வாறு முழுகுபவர் களுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசை நிலை. வடு-மாவடுக்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வகிர்-பிளப்புக்களைப் போல உள்ள; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கண்-விழிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மங்கையர்-மங்கைப் பருவத்தை அடைந்த பெண்மணிகள். குளிப்பன-முழுகுபவை. மணல்-கடற்கரையில் பரவியுள்ள மணற்பரப்பில் தோண்டப் பெற்ற; ஆகுபெயர். கேணி-கிணறுகள்; ஒருமை பன்மை மயக்கம்.

வடு வகிர்க்கண் மங்கையர்: "மாழை ஒண்கண் மடவாளை.", "மாழையங்கயற்கண்ணி." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "மாழையொண் கண்ணினார்கள்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "மாழையொண்கண் பரவையை.", "வடிகொள் கண்ணிணை மடந்தையர்.", "மாழை ஒண்கண் உமையை மகிழ்ந்தானை." என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "மாவின் வடுவகிர் அன்ன கண்ணீர்.", "மாழைமைப் பாவிய கண்ணியர்." என்று மாணிக்க வாசகரும், "வடித் தேர் நயனக்கணையிணை.", "வடிக்கண்ணியாளை.", "வடிக்கண் மலர்." என்று நம்பியாண்டார் நம்பியும், "மாழைமான் மடநோக்கி உன் தோழி.", "வடித்தடங்கண் மலரவளோ." என்று திருமங்கையாழ்வாரும், "வடிக்கோல வாள் நெடுங்கண் மாமலராள்." என்று பூதத்தாழ்வாரும், "மாழை நோக்கி மனத்தே மதித்தவன்.", "மன்றப்புகன்று மாழை நோக்கி." (பெருங்கதை, 3.145, 256, 15:51) என்று கொங்கு வேளிரும், "வடுப்பிளவனைய கண்ணாள்.", "வடி நிறை நெடியகண்ணார்." (சீவக சிந்தாமணி, 1573, 2650) என்று திருத்தக்க தேவரும், "மாழையுண் கணி,", (மந்தரை

சூழ்ச்சிப் படலம், 80), "வடுவின் மாவகிர் இவை எனப் பொலிந்த கண் மயிலே." (சித்திர கூடப் படலம், 30), "வடி நெடுங்கண் மடந்தையர்.", "மாழையுண் கண் மயி லெனும் சாயலார்." (பள்ளியடைப் படலம், 10, 34), "வடுக்கண் வார்கூந்தலாளை." (சடாயு உயிர் நீத்த படலம், 200), "வாளொக்கும் வடிக்கனாள்." (நாடவிட்ட படலம், 55), என்று கம்பர் பாடியவற்றையும் காண்க.

பிறகு வரும் 36-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கழிகளில் நிரம்பியுள்ள நீரை நிறையச் செய்யும் சமுத்திரத்தில் வீசும் அலைகள்முன்னால் சுற்றிக்கொண்டு அணிந்து கொள்ளும் வண்ணம் அந்த வழியில் உள்ள கடற்கரையில் மூட்டையாக உள்ள தங்கத்தைப் போன்ற மகரந்தப் பொடிகளை மலர்கள் மலர்ந்த புன்னை மரங்கள் சிந்தி விடுபவையாக விளங்கும்; விழிகளைப்போல மலரும் நெய்தற் செடிகளில் உள்ள நறுமணம் கமழும் மலர்களினிடத்தில் வண்டுகள் மொய்த்து உண்ணுமாறு அந்தக் கழிகளைப் பெற்ற கடற்கரையில் கட்டுச் சோற்றைப் போன்ற மகரந்தப பொடிகளை மடல்களைக் கொண்ட தாழை மரங்கள் உதிரச் செய்பவைகளாகத் திகழும்.' பாடல் வருமாறு:

"கழிப்பு னற்கடல் ஓதமுன் சூழ்ந்துகொண் டணிய
வழிக்க ரைப்பொதிப் பொன்னவிழ்ப் பனமலர்ப் புன்னை;
விழிக்கும் நெய்தலின் விரைமலர்க் கட்சுரும் புண்ணக்
கழிக்க ரைப்பொதி சோறவிழ்ப் பனமடற் கைதை."

கழி-கழிகளில் நிரம்பியுள்ள; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புனல்-நீரை நிறையச் செய்யும். கடல்-சமுத்திரத்தில். ஓதம்-வீசும் அலைகள்; ஒருமை பன்மை மயக்கம். முன்-முன்னால். சூழ்ந்து கொண்டு-சுற்றிக்கொண்டு. அணிய-அணிந்து கொள்ளும் வண்ணம். வழி-அந்த வழியில் உள்ள. க்:சந்தி. கரை-கடற்கரையில். ப்:சந்தி. பொதி-மூட்டையாக உள்ள. ப்:சந்தி. பொன்-தங்கத்தைப் போன்ற மகரந்தப் பொடிகளை; உவம் ஆகுபெயர். மலர்-மலர்கள் மலர்ந்

துள்ள; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புன்னை-புன்னை மரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவிழ்ப்பன-தரையில் சிந்திவிடுபவைகளாக விளங்கும். விழிக்கும்-கண்களைப் போல மலரும். நெய்தலின்-நெய்தல் செடிகளில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். விரை-நறுமணம் கமழும். மலர்க் கண்-மலர்களினிடத்தில்; ஒருமை பன்மை மயக்கம். சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். உண்ண-மொய்த்து உண்ணுமாறு. க்:சந்தி. கழி-அந்தக் கழிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். கழி-உப்பங்கழி. க்:சந்தி. கரை-கடற்கரையில். ப்:சந்தி. பொதி சோறு-கட்டுச்சோற்றைப் போன்ற மகரந்தப்பொடிகளை; உவம ஆகுபெயர். மடல்-மடல்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். கைதை-தாழை மரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவிழ்ப்பன-உதிரச் செய்பவைகளாகத் திகழும்.

புன்னை பொன் அவிழ்த்தல்: ''புன்னை பொன்னந்தாது சொரி பாதிரிப் புலியூர்.'', ''புன்னை நன்மாமலர் பொன் உதிர்க்கும் புனவாயிலே.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''புன்னை பொன்னேய தாதுதிர்க்கும்.'', ''பொன்னவரும் புன்னை சூழ் புல்லாணி.'' என்று திரு மங்கையாழ்வாரும், ''புன்னைப் பூந்தாதுமானும் பொற் பொடியப்பி விட்டார்.'' (கோலங்காண் படலம், 17) என்று கம்பரும் பாடியருளியவற்றைக் காண்க.

தாழை மரம் சோறு அவிழ்த்தல்: ''கூன் கைதை சோறு கால்வன.'' (திருவிளையாடற் புராணம், பாண்டித் திருநாட்டுப் படலம், 41).

பிறகு வரும் 36-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'உப்பங்கழிகளின் பக்கத்தில் உள்ள வலிமையை உடைய கரைகளில் உள்ள குற்றமான வழிகளை அடைப்பவை மெல்லிய முட்கள் பொருந்திய சிவந்த குளிர்ச்சியைப் பெற்ற நறுமணம் கமழும் செழிப்பான அரும்புகள் நெருங்கி உள்ள தாமரை மலர்கள் அவ்விடத்தில் அமைந்த நுட்பமான மணல்

களினுடைய வெள்ளை நிறத்தை மறைப்பவையாகிய அன்னப் பறவைகள் தாவிய கடல் துறையின் முன்னால் உள்ள இடத்தைச் சுற்றியுள்ள புலிநகக் கொன்றை மலர்களில் உள்ள மகரந்தப் பொடிகள்.' பாடல் வருமாறு:

''காயல் வன்கரைப் புரைநெறி அடைப்பன கனிமுட்
சேய தண்ணறும் செழுமுகை செறியுமுண் டகங்கள்;
ஆய நுண்மணல் வெண்மையை மறைப்பன அன்னம்
தாய முன்றுறைச் சூழல்சூழ் ஞாழலின் தாது.''

காயல்-உப்பங்கழிகளின் பக்கத்தில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். வன்-வலிமையை உடைய. கரை-கரைகளில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புரை-குற்றமான. நெறி-வழிகளை; ஒருமை பன்மை மயக்கம். அடைப்பன-அடைப்பவை. கனி-மென்மையான. முள்-முட்கள் பொருந்திய; ஒருமை பன்மை மயக்கம். சேய-சிவந்த. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. நறும்-நறுமணம் கமழும். செழு-செழிப்பைப் பெற்ற. முகை-அரும்புகள்; ஒருமை பன்மை மயக்கம். செறியும்-நெருங்கியிருக்கும். முண்டகங்கள்-தாமரை மலர்கள். ஆய-அந்த இடத்தில் அமைந்த. நுண்-நுட்பமான. மணல்-மணல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வெண்மையை-வெள்ளை நிறத்தை. மறைப்பன-மறைப்பவையாகிய. அன்னம்-அன்னப் பறவைகள்; ஒருமை பன்மை மயக்கம். தாய-தாவிய; 'பரவிய' எனலும் ஆம். முன்துறை-கடல் துறையின் முன்னால் உள்ள. ச்:சந்தி. சூழல்-இடத்தை. சூழ்-சுற்றி வளர்ந்து நிற்கும். ஞாழலின்-புலி நகக் கொன்றை மலர்களில் உள்ள; ஆகு பெயர். தாது-மகரந்தப் பொடிகள்; ஒருமை பன்மை மயக்கம். மரகந்தப் பொடிகள் மணல்களினுடைய வெள்ளை நிறத்தை மறைக்கும் என்பது கருத்து.

அடுத்து வரும் 38-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தாவி வரும் பெரியவையாக இருக்கும் அலைகள் வீசும் கடற்பரப்புக்கு முன்னால் குடிமக்கள் வாழும் ஊர்களில்

வலைச்சியர்கள் வெயிலில் உலர்வதற்காகப் பரவலாக வைத்த கயல் மீன்களைப் போன்ற அவர்களுடைய கண்களாகிய கயல் மீன்களை அல்லாமல் மூங்கில்களைப் போல தோற்றத்தை உண்டாக்கும் தோள்களைப் பெற்ற அந்த வலைச்சியர்கள் உப்பங்கழிகளில் உள்ள கயல் மீன்களை வலைகளிற் பிடித்துக் கொண்டு வந்து விற்பனை புரிகின்ற தேன் நிரம்பிய சிலவாகிய மழலைச் சொற்களாகிய மென்மையாகிய வார்த்தைகளைப் போல வாசிக்கப் படுபவை செவ்வழி யாழ்கள்.' பாடல் வருமாறு:

"வாம்பெ ருந்திரை வளாகமுன் குடிபயில் வரைப்பில்
தாம்ப ரப்பிய கயல்களின் விழிக்கயல் தவிரக்
காம்பின் நேர்வரும் தோளியர் கழிக்கயல் விலைசெய்
தேம்பொ திந்தசின் மழலைமென் மொழியசெவ் வழியாழ்."

வாம்-தாவி வரும். பெரும்-பெரியவையாக இருக்கும்-திரை-அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். வளாகம்-கடற் பரப்புக்கு. முன்-முன்னால். குடி-குடிமக்கள்; ஒருமை பன்மை மயக்கம்; 'குடும்பங்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். பயில்-வாழும். வரைப்பில்-ஊர்களில்; ஒருமை பன்மை மயக்கம். 'தாம்' என்றது வலைச்சியர்களை. பரப்பிய-உலர்வதற்காகப் பரவலாக வைத்துள்ள. கயல்களின்-கயல் மீன்களைப் போன்ற. விழி-அவர்களுடைய கண்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கயல்-கயல் மீன்களை; ஒருமை பன்மை மயக்கம். தவிர-அல்லாமல். க்:சந்தி. காம்பின்-மூங்கில்களைப் போல்; ஒருமை பன்மை மயக்கம். நேர்வரும்-தோற்றத்தை உண்டாக்கும். தோளியர்-தோள்களைப் பெற்ற அந்த வலைச்சியர்கள். தோள்: ஒருமை பன்மை மயக்கம். கழி-உப்பங்கழிகளில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம. க்:சந்தி. கயல்-கயல் மீன்களை; ஒருமை பன்மை மயக்கம். விலைசெய்-வலைகளில் பிடித்துக் கொண்டு வந்து விற்பனை புரிகின்ற. தேம்-தேன். பொதிந்த-நிரம்பிய.

சில்-சிலவாகிய. மழலை-மழலைச் சொற்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையைப் பெற்ற. மொழிய-வார்த்தைகளைப் போல வாசிக்கப்படுபவை. மொழி: ஒருமை பன்மை மயக்கம். செவ்வழியாழ்-செவ்வழிப் பண்ணை வாசிக்கும் யாழ்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பெண்களின் வார்த்தைக்குத் தேன் உவமை: ''தேனின் பொலி மொழியாளொடு.'', ''தேனை வென்ற மொழியாள்.'', ''தேனொத்தனமென் மொழிமான் விழியாள்.'', ''தேனார் மொழியார் திளைத்தங்காடி.'', ''தேனமரும் மொழி மாது.'', ''தேனைக் காவின் மொழித்தேவி பாகமாயினான்.'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''தேமொழியாளொடும் பாடி.'', ''தேன்நோக்கும் கிளி மழலை உமை.'', ''தேனை வென்ற சொல்லாளொடு.'', ''தேனுற்ற சொல் மடவாள் பங்கன் நீயே.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''தெளிதேனொத்தினிய சொல் மடவார்.'' என்று நம்பியாண்டார் நம்பியும், ''தேனும் குழலும் பிழைத்ததிரு மொழியாள்.'' என்று சேக்கிழாரும், ''தேன் போலும் மென்மழலை.'', ''தேனார் இன்சொல்.'' என்று திருமங்கையாழ்வாரும், ''தேன் தோய்த்தன்ன தீஞ்சொல் அளைஇ.'', ''தேனென மிழற்றி.'', ''தேனேர் கிளவி சென்ற உலகம்.'', ''தேன் தோய்த்தன்ன திருமொழி அளைஇ.'', ''தேன் தோயத்தன்ன கிளவியில் தெளிபட.'' (**பெருங்கதை**) என்று கொங்குவேளிரும், ''தேனூறு தீஞ்சொற்குண மாலையை.'', ''தேனெனப் பாலெனச் சில்லமிர் தூற்றெனக் கானமர் கோதை கனாமொழிகின்றாள்.'', ''தேன்தரு மாரி போன்று திவ்விய கிளவி.'' (**சீவகசிந்தாமணி**, 15, 222, 581) என்று திருத்தக்க தேவரும், ''தேன்தரு கமலச் செவ்வாய் திறந்தனள்.'' (உண்டாட்டுப் படலம், 19), ''தேனிடை யமுதளாய அன்னமென் சில சொல்.'' (சடாயு உயிர்நீத்த படலம், 60), ''தேனுகு மழலையை.'' (பம்பா

நதிப் படலம், 15), ''மீனின்ற கண்ணினாள்தன் மென் மொழிக்குவமை வேண்டின் தேனென்றோ.'' (நாடவிட்ட படலம், 13), ''தேனென்ப தறிந்த சொல்லாய்.'' (நிந்தனைப் படலம், 67), ''தேன்நகு மழலை இன்சொல் உருப்பசி.'' (களியாட்டுப் படலம், 37) என்று கம்பர் பாடியவற்றையும், ''தேனார்மொழி மடவாள்.'' (திக்கு விசயப் படலம், 18), ''தேனனைய இன்சொல் மடமங்கையர்.'' (அசுவமேத யாகப் படலம், 51) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையுங் காண்க.

பிறகு வரும் 39-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மயக்கத்தையும் கொடுமையான தொழில்களையும் புரியும் வேந்தன் வாங்கிய வரியை நெருங்கச் செய்து முன்பு திருவொற்றியூர் மட்டும் விட்டுவிட என்று வரையும் ஒப்பற்றவராகிய மாணிக்கத்தியாகர் எழுந்தருளியிருக்கும் பெருமையைப் பெற்ற ஆலயத்தினுடைய ஒரு பக்கத்தில் சுற்றியிருந்த அழகிய பரவலாகிய இடங்களையும் பெற்றது அந்த அலைகள் வீசும் சமுத்திரத்தைச் சார்ந்துள்ள சிவத்தலம்.' பாடல் வருமாறு:

'' மருட்கொ டும்தொழில் மன்னவன் இறக்கிய வரியை
நெருக்கி முன்திரு வொற்றியூர் நீங்கவென் றெழுதும்
ஒருத்தர் தம்பெரும் கோயிலின் ஒருபுறம் சூழ்ந்த
திருப்ப ரப்பையும் உடையதத் திரைக்கடல் வரைப்பு.''

மருள்-மயக்கத்தையும், கொடும்-கொடுமையாக இருக்கும். தொழில்-தொழில்களையும் புரியும்; ஒருமை பன்மை மயக்கம். மன்னவன்-அரசன். இறக்கியவரியை-வாங்கிய வரியை. நெருக்கி-நெருங்கச் செய்து. முன்-முன்பு. திருவொற்றியூர்-திருவொற்றியூர் என்னும் சிவத்தலத்தை. நீங்க-மட்டும் விட்டுவிட. என்று-என. எழுதும்-வரையும். ஒருத்தர்-ஒப்பற்றவராகிய மாணிக்கத்தியாகர் எழுந்தருளியிருக்கும். தம்: அசை நிலை. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். கோயிலின்-ஆலயத்தினுடைய. ஒருபுறம்-ஒரு பக்கத்தில். சூழ்ந்த-சுற்றி

யிருந்த. திரு-அழகிய. ப்:சந்தி. பரப்பையும்-பரவலாகிய இடங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். உடையது-பெற்றது. அத்திரை-அந்த அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கடல்-சமுத்திரத்தைச் சார்ந்துள்ள. வரைப்பு-சிவத்தலம்.

திருவொற்றியூர்: இது தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திரு நாமங்கள் மாணிக்கத்தியாகர், படம் பக்கநாதர், ஆதி புரீசுவரர் என்பவை. அம்பிகை வடிவுடையம்மை. தீர்த்தம் பிரம தீர்த்தம். தலவிருட்சம் மகிழ மரம். இது சென்னை மாநகருக்கு வடக்குத் திசையில் ஐந்து மைல் தூரத்தில் உள்ளது. இது திருவிளக்குத் தொண்டு புரிந்து வந்த கலிய நாயனார் திருவவதாரம் செய்தருளிய தலம். சங்கிலி நாச்சி யாரைச் சுந்தரமூர்த்தி நாயனார் திருமணம் புரிந்தருளிய தலம் இது. அவர் அந்தச் சங்கிலி நாச்சியாருக்கு மகிழ மரத் தின் அடியில் 'நான் உன்னைப் பிரியமாட்டேன்.' என்று சத்தியம் செய்து கொடுத்தார். இந்த வரலாற்றைப் புலப் படுத்தும் மகிழடித் திருவிழா இந்தத் தலத்தில் நடைபெற்று வருகிறது. இங்குள்ள தியாகேசர் சந்நிதி சிறப்புடையது. திருக்கோயிலுக்குள் பல சிவலிங்கங்கள் உள்ளன. புற்றிடம் கொண்டாருடைய சந்நிதிக்கு வடக்குத் திசையில் ஆதி லிங்கம் என்னும் சிவலிங்கம் இருக்கிறது. சுந்தரமூர்த்தி நாய னார், சங்கிலி நாச்சியார் என்னும் இரண்டு பேர்களினுடைய விக்கிரகங்கள் மணவாளக் கோலத்தோடு உள்ளன.

பட்டினத்துப் பிள்ளையார் வழிபட்டு முத்தியை அடைந்த தலமும் இதுவே. பட்டினத்துப் பிள்ளையாருக்கும், திருநாவுக்கரசு நாயனாருக்கும் தனியாக ஆலயங்கள் இங்கே உள்ளன. இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாய னார் பாடியருளிய பாசுரம் ஒன்று வருமாறு:

''மண்ணல்லை விண்ணல்லை வலையம் அல்லை
மலையல்லை கடலல்லை வாயு அல்லை

எண்ணல்லை எழுத்தல்லை எரியும் அல்லை
இரவல்லை பகலல்லை யாவும் அல்லை
பெண்ணல்லை ஆணல்லை பேடும் அல்லை
பிறிதல்லை ஆனாயும் பெரியாய் நீயே
உண்ணல்லை நல்லார்க்குத் தீயை அல்லை
உணர்வரிய ஒற்றியூர் உடைய கோவே.''

இந்தத் தலத்தைப் பற்றிப் பஞ்சமப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

''விடையவன் விண்ணும் மண்ணும்
தொழநின்றவன் வெண்மழு வாட்
படையவன் பாய்புலித் தோலுடை
கோவணம் பல்கரந்தைச்
சடையவன் சாமவேதன்சதி
தங்கிய சங்க வெண்தோ
டுடையவன் ஊனம் இல்லி
உறையும் இடம் ஒற்றியூரே.''

திருநாவுக்கரசு நாயனார் திருநேரிசை, திருவிருத்தம், திருக்குறுந்தொகை, திருத்தாண்டகம் என்பவற்றையும் பாடியருளி யுள்ளார். அவற்றில் ஒரு திருத்தாண்டகம் வருமாறு:

''வண்டோங்கு செங்கமலக் கழுநீர் மல்கும்
மதமத்தம் சேர்சடைமேல் மதியம் சூடித்
திண்டோள்கள் ஆயிரமும் வீசி நின்று
திசைசேர நடமாடிச் சிவலோக னார்
உண்டார் நஞ்சுலகுக்கோர் உறுதி வேண்டி
ஒற்றியூர் மேய ஒளி வண்ணனார்
கண்டேன் நான் கவைகத்திற் கண்டேற் கென்றன்
கடும்பிணியும் கடுந்தொழிலும் கைவிட் டவே.''

இந்தத் தலத்தைப் பற்றித் தக்கேசிப் பண்ணிலும் குறிஞ்சிப் பண்ணிலும் சுந்தரமூர்த்தி நாயனார் திருப்பதிகங்

களைப் பாடியருளியுள்ளார். அவற்றுள் தக்கேசிப் பண்ணில் அமைந்த ஒரு பாசுரம் வருமாறு:

''அழுக்கு மெய்கொடுன் திருவடி அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன் றானால்
பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடியேன்
பிழைப்ப னாகிலும் திருவடிப் பிழையேன்
வழுக்கி வீழினும் திருப்பெயர் அல்லால்
மற்று நான்அறி யேன்மறு மாற்றம்
ஒழுக்க என்கணுக் கொருமருந் துரையாய்
ஒற்றி யூரெனும் ஊருறை வானே.''

பிறகு வரும் 40-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'உண்மையை வழங்கும் புகழைப் பெற்ற அழகிய மயிலாபுரி என்னும் மயிலாப்பூர் நறுமணம் சுற்றிக் கமழும் வண்டுகள் மொய்த்துக் கொண்டு விளங்கும் குளிர்ச்சியைப் பெற்ற பூஞ்சோலை சூழ்ந்த திருவான்மியூர் முதலாக படங்களைப் பெற்ற பாம்புகளை அணிந்தவராகிய சிவபெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எத்தனையோ சிவத்தலங்கள் பல ஆகும்; இந்த நெய்தல் நிலமாகிய கடற்கரையைச் சார்ந்த ஊர்களில் வாழும் மக்கள் இந்தப் பெருமையை அடையுமாறு முன் பிறவியில் புரிந்த அந்த நிறைந்த தவம் சிறியதோ?' பாடல் வருமாறு:

'' மெய்த ரும்புகழ்த் திருமயி லாபுரி விரைசூழ்
மொய்த யங்குதண் பொழில்திரு வான்மியூர் முதலாப்
பைத ரும்பணி அணிந்தவர் பதியெனைப் பலவால்;
நெய்தல் எய்தமுன் செய்தஅந் நிறைதவம் சிறிதோ?''

மெய்-உண்மையை. தரும்-வழங்கும். புகழ்-புகழைப் பெற்ற. த்:சந்தி. திரு-அழகிய. மயிலாபுரி-மயிலாபுரி என்னும் மயிலாப்பூர். விரை-நறுமணம். சூழ்-சுற்றிக் கமழும். மொய்-வண்டுகள் மொய்த்துக் கொண்டு. தயங்கு-விளங்கும். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. பொழில்-பூஞ்சோலை சூழ்ந்த திருவான்மியூர் முதலா-திருவான்மியூர் முதலாக உள்ள.

ப்:சந்தி. பை-படங்களை; ஒருமை பன்மை மயக்கம். தரும்-பெற்றிருக்கும். பணி-பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். அணிந்தவர்-புனைந்தருளியவராகிய சிவபெருமானார். பதி-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எனை-எத்தனையோ. ப்:சந்தி. பல-பல ஆகும். ஆல்:அசை நிலை. நெய்தல்-இந்த நெய்தல் நிலமாகிய கடற்கரையைச்சார்ந்த ஊர்களில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். எய்த-இந்தப் பெருமையை அடையுமாறு. முன்-முன் பிறவியில். செய்த-புரிந்த. அந்நிறை-அந்த நிறைந்த. தவம் சிறிதோ-தவம் சிறியதோ? பெரியது என்பது கருத்து.

மயிலாபுரி: இது தொண்டை வள நாட்டில் உள்ள சென்னை மாநகரத்தின் ஒரு பகுதி. மயிலாப்பூர் என வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவர் கபாலீசுவரர். அம்பிகை கற்பகவல்லியம்மை. தீர்த்தம் கபாலி தீர்த்தம், தலவிருட்சம் புன்னை மரம். இது கற்பகாம்பிகை மயில் வடிவத்தை எடுத்துக் கபாலீசுவரரை வழிபட்டுப் பூசித்த தலம். வாயிலார் நாயனார் திருவவதாரம் செய்தருளிய தலமும் இதுவே. சிவநேசச் செட்டியார் என்பவருடைய புதல்வி அரவுகடித்து இறந்து போக அவளுடைய என்புகளை அந்தச் செட்டியார் ஒரு குடத்தில் சேமித்து வைத்திருந்தார். திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இந்தத் தலத்துக்கு எழுந்தருளிய போது அந்தக் குடத்தை அந்தச் செட்டியார் அவருக்கு முன் வைத்தார். அந்த நாயனார் பூம்பாவைத் திருப்பதிகம் பாடியருளி அந்தப் பெண்மணியை உயிர் பெறும் வண்ணம் செய்தார். திருவள்ளுவர் இந்த ஊரில் வாழ்ந்து வந்ததாகக் கூறுவர். அவருடைய திருக்கோயில் இந்தத் தலத்திலே இருக்கிறது. கபாலீசுவரர் சந்நிதி மேற்குப் பார்த்தது. ஆலயத்தின் பிரகாரத்தில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவுருவமும் பூம்பாவையின் திருவுருவமும்

உள்ளன. திருக்குளம் கோயிலுக்கு மேற்குத் திசையில் இருக்கிறது. பூம்பாவைப் பதிகத்தில் வரும் முதற் பாசுரம் வருமாறு:

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிட்டம் கொண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பில் உருத்திர பலகணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்."

திருவான்மியூர்: இது தொண்டை நாட்டில் உள்ள சிவத் தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் மருந்தீசுவரர். அம்பிகை சொக்க நாயகி. இது சைதாப்பேட்டையிலிருந்து தென்கிழக்குத் திசையில் நான்கு மைல் தூரத்தில் உள்ளது. இது வான்மீக முனிவர் வழிபட்ட தலம் மருந்தீசுவரர் பால் நிறமான சுயம்பு மூர்த்தி. இந்தத் தலம் கடற்கரையில் உள்ளது. இதைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

"ஒட்டை மாடத்தில் ஒன்பது வாசலும்
காட்டில் வேவதன் முன்னம் கழலடி
நாட்டி நாண்மலர் தூவிவலம் செயின்
வாட்டம் தீர்த்திடும் வான்மியூர் ஈசனே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய கௌசிகப் பண் அமைந்த பாசுரம் ஒன்று வருமாறு:

"விரையார் கொன்றையினாய் விடமுண்ட மிடற்றினனே
உரையார் பல்புகழாய் உமைநங்கை ஓர்பங்குடையாய்
திரையார் தெண்கடல்சூழ் திருவான்மியூர் உறையும்
அரையா உன்னையல்லால் அடையா தெனதாதரவே."

இந்தத் தலத்தைப் பற்றித் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு திருக்குறுந்தொகை வருமாறு:

"விண்ட மாமலர் கொண்டு விரைந்துநீர்
அண்ட நாயகன் தானடி சூழ்மின்கள்
பண்டு நீர்செய்த பாவம் பறைந்திடும்
வண்டு சேர்பொழில் வான்மியூர் ஈசனே."

பிறகு உள்ள 41-ஆம் பாடலின் கருத்து வருமாறு;

'கரையை மோதிக் கொண்டு எழுந்து வீசும் அலைகளைப் பெற்ற சமுத்திரத்தில் பவளக் கொடியினுடைய மென்மையான கொழுந்துகள் பக்கத்தில் உள்ள வண்டுகள் மொய்க்கும் மலர்கள் மலர்ந்திருக்கும் மலையில் வளர்ந்து நிற்கும் சந்தன மரத்தினுடைய கிளையின் மேல் படர்ந்து வளரும் இயல்பைப் பெற்று நீளமாக இருக்கும் நெய்தல் நிலமும், குறிஞ்சி நிலமும் சேர்ந்துள்ள நிலங்கள் பலவாகும்; காற்றில் அசைந்து ஆடும் நீளமான துவசங்கள் கட்டியிருக்கும் மாடங்கள் ஓங்கி நிற்கும் பெருமையைப் பெற்ற மாமல்லபுரத்தையே அந்த நிலங்கள் ஒத்தவையாக விளங்கும்.' பாடல் வருமாறு:

" கோடு கொண்டெழும் திரைக்கடற் பவளமென் கொழுந்து
மாடு மொய்வரைச் சந்தனச் சினைமிசை வளரும்
நீடு நெய்தலும் குறிஞ்சியும் புணர்நிலம் பலவால்;
ஆடு நீள்கொடி மாடமா மல்லையே அனைய."

கோடு-கரையை. கொண்டு-மோதிக் கொண்டு. எழும்—எழுந்து வீசும். திரை-அலைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கடல்-சமுத்திரத்தின் அடியில் உள்ள. பவள-பவளக் கொடியினுடைய. மென்-மென்மையான. கொழுந்து-கொழுந்துகள்; ஒருமை பன்மை மயக்கம். மாடு—பக்கத்தில் உள்ள. மொய்-வண்டுகள் மொய்க்கும் வரை-மலர்கள் மலர்ந்திருக்கும். வரை-மலையில் வளர்ந்து நிற்கும். ச்:சந்தி. சந்தன-சந்தன மரத்தினுடைய. ச்:சந்தி. சினை மிசை-கிளையின் மேல். வளரும்-படர்ந்து வளரும். நீடு-நீளமாக இருக்கும். நெய்தலும்-கடலும் கடலைச் சார்ந்த இடங்களுமாகிய நெய்தல் நிலமும். குறிஞ்சியும்-மலையும் மலையைச் சார்ந்த இடங்களுமாகிய குறிஞ்சி நிலமும். புணர்—சேர்ந்துள்ள. நிலம்-நிலங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பல ஆகும். ஆல்: அசை நிலை. ஆடு-காற்றில் அசைந்து ஆடும். நீள்-நீளமான. கொடி-துவசங்கள் கட்டியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மாடம்-மாடங்கள் ஓங்கி நிற்கும்;

ஒருமை பன்மை மயக்கம். மா-பெருமையைப் பெற்ற. மல்லையே-மாமல்லபுரத்தையே. அனைய-அந்த நிலங்கள் ஒத்தவையாக விளங்கும்.

பிறகு வரும் 42-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மலை தன்னுடைய கண்களால் விழித்துப் பார்க்கின்றன என்று எண்ணி வயல்களில் உள்ள சேல்மீன்கள் மலையில் உள்ள கருங்கற் பாறையின் மேல் துள்ளிக் குதிப்பவையும், தளைகளாக வகுக்கப்பட்ட வயல்களில் உயரமாக விளங்கும் கருமையான கலைமான்கள் குதிப்பவைகளும், கருமையான எருமை மாடுகளைப் பூட்டியிருக்கும் ஏர்களை ஒத்து விளங்குபவைகளுமாகி அலைகள் வீசும் நீர் பாயும் வயல்களைப் பெற்ற குறிஞ்சி நிலத்தோடு சேர்ந்திருக்கும் ஊர்கள் பல.' பாடல் வருமாறு:

" மலைவி ழிப்பன எனவயற் சேல்வரைப் பாறைத்
தலையு கைப்பவும் தளைச்செறு விடைநெடும் கருமான்
கலைகு திப்பன கரும்பகட் டேர்நிகர்ப் பவுமாய்
அலைபு னற்பணை குறிஞ்சியோ டணைவன அனேகம்.' "

மலை-அந்தத் தொண்டை வளநாட்டில் உள்ள மலை. விழிப்பன-தன்னுடைய கண்களால் விழித்துப் பார்க்கின்றன; கால மயக்கம். என-என்று எண்ணி; இடைக்குறை. வயல்-வயல்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். சேல்-சேல் மீன்கள்; ஒருமை பன்மை மயக்கம். வரை-அந்த மலையில் உள்ள. ப்:சந்தி. பாறைத்தலை-பாறையின் மேல். உகைப்பவும்-துள்ளிக் குதிப்பவையும். தளை-தளைகளாக வகுக்கப்பட்ட; ஒருமை பன்மை மயக்கம். தளை-நிலத்தின் வரம்பைக் குறிக்கும் வரப்பு. ச்:சந்தி. செறுவிடை-வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். நெடும்-உயரமாக விளங்கும். கருமான் கலை-கருமையான நிறத்தைப் பெற்ற கலைமான்கள்; ஒருமை பன்மை மயக்கம். குதிப்பன-துள்ளிக்குதிப்பவைகளும். கரும்-கருமை நிறத்தோடு விளங்கும். பகட்டு-எருமை மாடுகளைப் பூட்டியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம், ஏர்—

உழும் ஏர்களை; ஒருமை பன்மை மயக்கம். நிகர்ப்பவுமாய்-ஒத்து விளங்குபவைகளுமாகி. அலை-அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். புனல்-நீர் பாயும். பணை-வயல் களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். குறிஞ்சியோடு-குறிஞ்சி நிலத்தோடு. அணைவன-சேர்ந்திருக்கும் ஊர்கள். அனேகம்-பல ஆகும்.

பிறகு வரும் 43-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு சேர்ந்துள்ள பசுமாடுகளினுடைய வரிசை மேயும் முல்லை நிலமாகிய காட்டில் சிறிய உருவத்தைப் பெற்ற முயல் மலையின்மேல் வந்து தவழ்ந்த ஆகாயத்தில் உலாவும் சந்திரனிடத்தில் உள்ள கறையாகிய முயலைத் தன்னுடைய சாதி என்று எண்ணி அதைச் சேர்ந்து திரு மணத்தை மேற்கொள்ளும் கொல்லை நிலத்தில் வரகுக்கதிர் களை அடுக்கி வைத்துள்ள போரில் மலையின்மேல் தவழும் மேகங்கள் அபிடேகம் செய்யும் இடத்தோடு சேர்ந்து முல்லை நிலமாகிய காடும், குறிஞ்சி நிலமும் எல்லா இடங்களிலும் கலந்து தோன்றுபவையாக விளங்கும்.' பாடல் வருமாறு:

"புணர்ந்த ஆனிரைப் புறவிடைக் குறுமுயல் பொருப்பின்
அணைந்த வான்மதி முயலினை இனமென அணைந்து
மணம்கொள் கொல்லையில் வரகுபோர் மஞ்சன வரைக்கார்
இணைந்து முல்லையும் குறிஞ்சியும் கலப்பன எங்கும்."

புணர்ந்த-அவ்வாறு சேர்ந்துள்ள. ஆன்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசை. ப்:சந்தி. புறவிடை-முல்லை நிலமாகிய காட்டில். க்:சந்தி. குறுமுயல்-சிறிய உருவத்தைப் பெற்ற முயல். பொருப்பின்-மலையின் மேல் வந்து. அணைந்த-சேர்ந்து தவழ்ந்த. வான்-ஆகாயத் தில் உலாவும். மதி-சந்திரனிடத்தில் உள்ள. முயலினை-கறை யாகிய முயலை. இனம்-தன்னுடைய சாதி. என-என்று எண்ணி; இடைக்குறை. அணைந்து-அதைச் சேர்ந்து. மணம்-திருமணத்தை. கொள்-மேற்கொள்ளும். கொல்லை

யில்-கொல்லை நிலத்தில். வரகு-வரகுக்கதிர்களை அடுக்கி வைத்துள்ள; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். போர்-போரில். வரை-மலையின் மேல் தவழும். க்:சந்தி. கார்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம் மஞ்சன-அபிடேகம் செய்யும். இணைந்து-இடத்தோடு சேர்ந்து. முல்லையும்-முல்லை நிலமாகிய காடும். குறிஞ்சியும்-குறிஞ்சி நிலமும். எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கலப்பன-கலந்து விளங்கும்.

பிறகு வரும் 44-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தாங்கள் உப்பங்கழிகளில் பிடித்துக்கொண்டு வரும் மீன்களினுடைய குவியலைக் காட்டில் வாழும் வேடர்களுக்கு வழங்கி கவுதாரியையும் ஆண்கோழியையும் விலைக்கு விற்றும் சிறிய உப்பங்கழிகளின் பக்கத்தில் வாழும் வலைச்சியர்கள் அவரைக்காய்களுக்கும் தினை நெற்களுக்கும் வேட்டுவச் சாதிப் பெண்கள் பவளத்தையும் முத்துக்களையும் விலைக்கு அளந்து கொடுத்தும் உப்புநீர் நிரம்பிய கடற்கரைப்பக்கத்தைச் சார்ந்திருக்கும் நெய்தல் நிலமும் காடும் கலந்து விளங்குபவை அந்தத் தொண்டை நாட்டில் நடக்கும் செயல்கள் ஆகும்.' பாடல் வருமாறு:

'' கவரும் மீன்குவை கழியவர் கானவர்க் களித்துச்
சிவலும் சேவலும் மாறியும் சிறுகழிச் சியர்கள்
அவரை ஏனலுக் கெயிற்றியர் பவளமுத் தளந்தும்
உவரி நெய்தலும் கானமும் கலந்துள ஒழுக்கம்.''

கழியவர் கவரும்-தாங்கள் உப்பங்கழிகளில் பிடித்துக் கொண்டு வரும். மீன்-மீன்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குவை-குவியலை. கானவர்க்கு-காட்டில் வாழும் வேடர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அளித்து-வழங்கி. ச்:சந்தி. சிவலும்-கவுதாரியையும். சேவலும்-ஆண்கோழியையும். மாறியும்-விலைக்கு விற்றும். சிறு-சிறிய. கழிச்சியர்கள்-உப்பங்கழிகளின் பக்கத்தில் வாழும் வலைச்சியர்கள். அவரை-அவரைக் காய்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம்.

ஏனலுக்கு-தினை நெற்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். எயிற்றியர்-வேட்டுவச் சாதிப் பெண்கள். பவளம்-பவளத்தை யும். முத்து-முத்துக்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அளந்தும்-விலைக்கு அளந்து கொடுத்தும். உவரி-உப்பு நீர் நிரம்பிய கடற்கரைப் பக்கத்தைச் சார்ந்திருக்கும்: இட ஆகு பெயர். நெய்தலும்-நெய்தல் நிலமும், கானமும்-காடும். கலந்து உள-கலந்து விளங்குபவை. உள: இடைக்குறை. ஒழுக்கம்-அந்தத் தொண்டை நாட்டில் நடக்கும் செயல்கள் ஆகும்.

பிறகு உள்ள 45-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

''அந்தப் பக்கங்களில் இருக்கும் முல்லை நிலத்தில் வாழும் இடையர் சாதிப் பெண்மணிகள் தங்களுடைய கால் களால் நடக்கும் அழகிய நடையையும், அகலமாகவும் நீள மாகவும் உள்ள வயல்களில் வேலைகளைச் செய்யும் உழவர் சாதிப் பெண்மணிகளினுடைய சாயலையும் விழைந்து நடக் கும் அன்னப் பறவையும் கலாபத்தைப் பெற்ற மயிலும் எதிர் எதிரில் நின்று பழகுமாறு வயல்களும் முல்லை நிலங்களாகிய காடுகளும் சேர்ந்து விளங்குபவைகளாக அந்தப் பக்கங்களில் பல இருக்கின்றன. இடைச்சியர்கள் தங்களுடைய கால்களால் நடக்கும் நடையைப் பார்த்து அன்னப்பறவை நடக்கப் பழகும். உழவர் சாதிப் பெண்களினுடைய சாயலை விழைந்து மயில் தானும் அவ்வாறு விளங்கப் பழகும்.' பாடல் வருமாறு:

'' அயல்ந றும்புற வினில்இடைச் சியர்அணி நடையும்
வியன்நெ டும்பணை உழத்தியர் சாயலும் விரும்பி
இயலும் அன்னமும் தோகையும் எதிர்எதிர் பயில
வயலும் முல்லையும் இயைவன பலவுள மருங்கு.''

அயல்-பக்கங்களில். நறும்புறவினில்-உள்ள முல்லை நிலங்களில். இடைச்சியர்-இடையர் சாதிப் பெண்மணிகளினு டைய. அணி நடையும்-அழகிய நடையையும். வியன்-அகல மாகவும். நெடும்-நீளமாகவும் உள்ள. பணை-வயல்களில்;

ஒருமை பன்மை மயக்கம். உழத்தியர்-உழவர் சாதிப் பெண் மணிகளினுடைய. சாயலும்-சாயலையும். விரும்பி-விழைந்து. இயலும்-நடக்கும். அன்னமும்-அன்னப் பறவையும். தோகை யும்-கலாபத்தைப் பெற்ற மயிலும். எதிர் எதிர்-எதிர் எதிரில். பயில-நின்று பழகுமாறு. வயலும்-வயல்களும்; ஒருமை பன்மை மயக்கம். முல்லையும்-முல்லை நிலங்களும்; ஒருமை பன்மை மயக்கம். இயைவன-பொருந்தி விளங்கு பவைகளாக. மருங்கு-அந்தப் பக்கங்களில். பல-பலவாக. உள -இருக்கின்றன; இடைக்குறை.

பிறகு வரும் 46-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கடற்கரையை மோதிவிட்டுத் திரும்பும் அலைகள் முன் னால் கொழித்துத் தந்த வெண்மை நிறத்தைப் பெற்ற முத்துக்களும் கமுக மரத்தினுடைய பாளைகள் உகுத்தவை யாகிய பாக்குக்களும் கலந்து இருப்பதனால் வலைச்சியர்களி னுடைய மூங்கில்களைப் போன்ற மென்மையான தோள் களும், உழவர் சாதிப் பெண்களினுடைய புதல்வியர்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு முன்னால் கூட்டிக் குவிக்கும் இடமாக நீளமாக இருக்கும் நெய்தல் நிலமும் மருத நிலமும் அங்கே உள்ள நிலங்களில் கலந்து இருக் கின்றன.' பாடல் வருமாறு:

" மீளும் ஓதம்முன் கொழித்த வெண்தரளமும் கமுகின்
பாளை உக்கவும் விரவலிற் பரத்தியர் பணைமென்
தோளு ழத்தியர் மகளிர்மா றாடிமுன் தொகுக்கும்
நீளு நெய்தலும் மருதமும் கலந்துள நிலங்கள்."

மீளும்-கடற்கரையை மோதிவிட்டுத் திரும்பும். ஓதம்-அலைகள்; ஒருமை பன்மை மயக்கம். முன்-முன்னால். கொழித்த-கொழித்துக் கொண்டு வந்து தந்த. வெண்-வெண்மை நிறத்தைப் பெற்ற. தரளமும்-முத்துக்களும்; ஒருமை பன்மை மயக்கம். கமுகின்-கமுக மரத்தினுடைய. பாளை-பாளைகள்; ஒருமை பன்மை மயக்கம். உக்கவும்-உகுத்தவையாகிய பாக்குக்களும். விரவலின்-கலந்து இருப்ப

தனால். பரத்தியர்-வலைச்சியர்களினுடைய. பணை-மூங்கில்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையான. தோள்-தோள்களும்; ஒருமை பன்மை மயக்கம். உழத்தியர்-உழவர் சாதிப் பெண்களினுடைய. மகளிர் புதல்வியர்கள். மாறாடி-தங்களுக்குள் போட்டி போட்டுக் கொண்டு. முன்-முன்னால். தொகுக்கும்-கூட்டிக் குவிக்கும். நீளும்-நீளமாக இருக்கும். நெய்தலும்-கடற்கரையைச் சார்ந்த நெய்தல் நிலமும். மருதமும்-வயல்களைச் சார்ந்த மருத நிலமும். நிலங்கள்-அங்கே உள்ள நிலங்களில். கலந்து உள-கலந்து இருக்கின்றன. உள:இடைக்குறை. பெண்களின் தோள்களுக்கு மூங்கில்களை உவமையாகக் கூறும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க

பிறகு வரும் 47-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு அமைந்த குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருத நிலம், நெய்தல் நிலம் என்னும் நான்கு நிலங்களுக்குப் பொருத்தமாக உள்ள வேலைகளில் தங்கள் தங்களுக்கு ஏற்றவையாக உள்ளவையும் மேவியவையுமாகிப் புரியும் தொழில்களை வேறு வேறு பலவாகிய குடும்பங்களில் விளக்கத்தை அடைந்து கெட்ட செயல்கள் என்று கூறப்படுபவற்றைச் சொப்பனத்திலும் எண்ணுதல் இல்லாத திருவுள்ளங்களைப் பெற்ற பரிசுத்தமாகிய மக்கள் தங்களுடைய வாழ்க்கையை நடத்தும் தொண்டை வள நாட்டினுடைய பான்மை அடியேனுடைய வார்த்தைகளின் எல்லைக்குள் அடங்குவதோ?' பாடல் வருமாறு:

"ஆய நானிலத் தமைதியில் தத்தமக் கடுத்த
மேய செய்தொழில் வேறுபல் குலங்களின் விளங்கித்
தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தைத்
தூய மாந்தர்வாழ் தொண்டை நாட்டியல்பு சொல்
வரைத்தோ?"

ஆய-அவ்வாறு அமைந்த. நானிலத்து-குறிஞ்சி நிலம், முல்லை நிலம், மருத நிலம், நெய்தல் நிலம் என்னும் நான்கு

நிலங்களுக்கு; நிலம்: ஒருமை பன்மை மயக்கம். அமைதியில்-பொருத்தமாக உள்ள வேலைகளில்; ஒருமை பன்மை மயக்கம். தத்தமக்கு-தங்கள் தங்களுக்கு. அடுத்த-ஏற்றவையாக உள்ளவையும்; வினையாலணையும் பெயர். மேய-மேவியவை யுமாகி; வினையாலணையும் பெயர். செய்-புரியும். தொழில் -வேலைகளை; ஒருமை பன்மை மயக்கம். வேறு-வேறு வேறாகவும். பல்-பலவாகவும் உள்ள. குலங்களின்-குடும்பங் களில். விளங்கி-விளக்கத்தை அடைந்து. த்:சந்தி. தீய-கெட்ட செயல்கள். என்பன-என்று கூறப்படுபவற்றை. கன விலும்-தாங்கள் உறங்கும் போது காணும் சொப்பனத்திலும். நினைவு-எண்ணுதல். இலா-இல்லாத; இடைக்குறை. ச்:சந்தி. சிந்தை-திருவுள்ளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தூய-பரிசுத்தமாகிய. மாந்தர்-நன்மக்கள். வாழ்-தங்களுடைய வாழ்க்கையை நலத்தும். தொண்டை நாட்டு-தொண்டை வள நாட்டினுடைய. இயல்பு-பான்மை. சொல்-அடியேனுடைய வார்த்தைகளின்; ஒருமை பன்மை மயக்கம். இது சேக்கிழார் தம்மைக் கூறிக் கொண்டது. வரைத்தோ-எல்லைக்குள் அடங்குவதோ? அடங்காது என்பது கருத்து.

பின்பு வரும் 48-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இத்தகைய வளங்களை வழங்கும் பெருமையைப் பெற்ற அழகிய தொண்டை வள நாட்டில் எல்லாக் காலத்திலும் உண்மையாகிய வளங்களை அளிக்கும் சிறப்பைப் பெற்றிருப் பதனால் இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள் யாவரும் வியப்பை அடையும் வண்ணம், எந்த வகையாகிய உலகங்க ளிலும் இருக்கின்றது என எல்லா மக்களும் துதித்து வணங் கும் ஒழுக்கம் விளக்கத்தை அடைந்த நிலையைப் பெற்று விளங்குவது பெருமையைக் கொண்ட காஞ்சீபுரம் என்னும் பெரிய சிவத்தலம்.' பாடல் வருமாறு:

" இவ்வளம்தரு பெருந்திரு நாட்டிடை என்னும்
மெய் வளம்தரு சிறப்பினால் உலகெலாம் வியப்ப

எவ்வுல கங்களும் உள்ளதென் றி யாவரும் ஏத்தும்
கைவிளங்கிய நிலையது காஞ்சிமா நகரம்.''

இவ்வளம்-இத்தகைய வளங்களை; ஒருமை பன்மை மயக்கம். தரு-வழங்கும். பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். திரு-அழகிய. நாட்டிடை-தொண்டை வளநாட்டில். என்னும்-எல்லாக் காலத்திலும். மெய்-உண்மையாகிய; 'உண்மையையே பேசும்' எனலும் ஆம். வளம்-வளங்களை; ஒருமை பன்மை மயக்கம். தரு-அளிக்கும். சிறப்பினால்-சிறப்பைப் பெற்றிருப்பதனால். உலகு-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். எல்ாம்-எல்லோரும்; இடைக்குறை. வியப்ப-ஆச்சரியத்தை அடையும் வண்ணம். எவ்வுலகங்களும் - எந்த வகையாகிய உலகங்களிலும். உள்ளது-இருக்கின்றது. என்று-என. இ:குற்றியலிகரம். யாவரும்-எல்லா மக்களும். ஏத்தும்-துதித்து வணங்கும். கை-நல்லொழுக்கம். விளங்கிய விளக்கத்தை அடைந்த. நிலையது-நிலையைப் பெற்று விளங்குவது. காஞ்சி மாநகரம்-காஞ்சீபுரம் என்னும் பெரிய சிவத்தலம்.

காஞ்சீபுரம்: இது கச்சி ஏகம்பம் எனவும் வழங்கும். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் ஏகாம்பர நாதர், ஏகாம்பரேசுவரர், பெரியகம்பர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் ஏலவார் குழலி, காமாட்சியம்மை என்பவை. தீர்த்தங்கள் சிவகங்கை, கம்பாநதி முதலிய பல தீர்த்தங்கள். தலவிருட்சம் மாமரம். பஞ்ச பூதத் தலங்களில் இது விருதுவித் தலம். காமாட்சி அம்மையார் ஏகாம்பரேசுவரரைப் பூசித்து முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்தருளிய தலம் இது. சிதம்பரம் முதலிய சிவத்தலங்கள் ஒவ்வொன்றுக்கும் சென்று அந்தத் தலங்களில் திருப்பணிகளைப் புரிந்துவிட்டு, ஒவ்வொரு சிவத்தலத்துக்கு ஒவ்வொரு திருவெண்பாவாக க்ஷேத்திரத் திருவெண்பா என்ற நூலைப் பாடியருளிய ஐயடிகள் காடவர் கோன் நாயனார் அரசாட்சி செய்து வாழ்ந்த தலம் இது. திருவொற்றியூரின் எல்லை

யைத் தாண்டியவுடன் இரண்டு கண்களின் பார்வைகளையும் இழந்திருந்த சுந்தர மூர்த்தி நாயனார் இடக்கண் பார்வையைப் பெற்ற தலம் இது. திருக்குறிப்புத் தொண்ட நாயனார், சாக்கிய நாயனார் என்பவர்கள் ஏகாம்பரேசுவரரை வழிபட்டு முக்தியை அடைந்த தலம் இது. காமாட்சியம்மையினுடைய ஆலயமாகிய காமக் கோட்டம், முருகக் கடவுளின் திருக்கோயிலாகிய குமரக் கோட்டம், திருமாலினுடைய திவ்ய தேசமாகிய அத்திகிரி முதலிய பல ஆலயங்கள் நிறைந்த பெரிய தலம் இது. 'நகரேஷு காஞ்சி' என்று வடமொழியில் பாராட்டப் பெறும் தலம் இது.

இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

''ஆலந்தானுகந் தமு துசெய் தானை
ஆதியை அமரர் தொழு தேத்தும்
சீலந்தான் பெரிதும்முடை யானைச்
சிந்திப் பாரவர் சிந்தை யுள்ளானை
ஏல வார்குழ லாள்உமை நங்கை
என்றும் ஏத்தி வழிபடப் பெற்ற
கால காலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன் பெற்றவாறே.''

இது சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய பாசுரம்.

காஞ்சீபுரத்தைப் பற்றி ஐயடிகள் காடவர் கோன் நாயனார் பாடியருளிய பாசுரம் வருமாறு:

''என் நெஞ்சே உன்னை இரந்தும் உரைக்கின்றேன்
கன்னம்செய் வாயாகிற் காலத்தால்-வனனெஞ்சேய்
மாகம்பத் தானை உரித்தானை வண்கச்சி
ஏகம்பத் தானை இறைஞ்சு.''

அடுத்து வரும் 49-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அமைந்த பழைய நகரமாகிய காஞ்சீபுரம் காமாட்சியம்மையார் தம்முடைய கணவராகிய ஏகாம்பரே

சுவரரை பெருமையைப் பெற்ற அருச்சனையால் ஒரு பழைய காலத்தில் வணங்கி குறைவு இல்லாத முப்பத்திரண்டு தருமங்களாகிய பலவற்றையும் இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் செய்து வைத்தருளிய மேம்பாட்டைப் புனைந்த அந்தப் பெருமையினை அடியேனுக்குத் தெரிந்த வழியில் பாடப் புகுந்தால்." பாடல் வருமாறு:

"ஆன தொல்நகர் அம்பிகை தம்பெரு மானை
மான அர்ச்சனை யாலொரு காலத்து வழிபட்
டூனமில் அறம் அனேகமும் உலகுய்ய வைத்த
மேன்மை பூண்ட அப்பெருமையை அறிந்தவா விளம்பில்.'

இந்தப் பாடல் குளகம். ஆன-அவ்வாறு அமைந்த. தொல்-பழமையாகிய. நகர்-பெரிய தலமாகிய காஞ்சீபுரம். அம்பிகை-காமாட்சி அம்மையார். தம்-தம்முடைய. பெருமானை-கணவராகிய ஏகாம்பரேசுவரரை. மான-பெருமையைப் பெற்ற. அர்ச்சனையால்-அருச்சனையால். ஒரு காலத்து-ஒரு பழைய காலத்தில். வழிபட்டு-வணங்கி. ஊனம்-ஒரு குறைவும். இல்-இல்லாத; கடைக்குறை. அறம்-முப்பத்திரண்டு தருமங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். அனேகமும்-பலவற்றையும். உலகு-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்: இட ஆகுபெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். வைத்த-வைத்தருளிய மேன்மை-மேம்பாட்டை. பூண்ட-புனைந்த. அப்பெருமையை -அந்தப் பெருமையினை. அறிந்தவா-அடியேனுக்குத் தெரிந்த வழியில், இது சேக்கிழார் கூறியது. விளம்பில்-பாடப் புகுந்தால். காமாட்சியம்மை தவம் புரிந்ததைக் கூறும் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"முதிர மங்கை தவம்செய்த காலமே
முன்பு மங்கை தவம்செய்த காலமே

வெதிர்க ளோடகில் சந்தம் உருட்டியே
வேழ மோடகில் சந்தம் உருட்டியே
அதிர வாறுரைத் தழுவத்தொ டேயானை
ஆடு வாத்தழுவத்தொடே
கதிர்கொள் பூண்முளைக் கம்பம் இருப்பதே
காஞ்சி மாநகர்க் கம்பம் இருப்பதே."

பிறகு உள்ள 50-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பெருமையைப் பெற்ற வெள்ளி மலையாகிய கயிலாய மலையில் வீற்றிருந்தருளித் துள்ளிக் குதிக்கும் கங்கையாற்றின் நீர் தங்கும் நீண்ட சடாபாரத்தைத் தம்முடைய தலையில் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரர் தம்முடைய திருவருளை வழங்க அவரை வணங்கித் தெளிவாக உள்ள உண்மைகளை எடுத்துக் கூறும் சைவ ஆகமங்களினுடைய வகைகள் எல்லாம் அறிந்து கொள்ளும் வண்ணம் உள்ளதை உள்ளபடி கேட்டு இந்தப் பூ மண்டலத்தை ஆட்சி புரிவதை உடையவனாகிய ஏகாம்பரேசுவரன் தன்னுடைய திருவருளை வழங்கினான்.' பாடல் வருமாறு:

"வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளித்
துள்ளு வார்புனல் வேணியார் அருள்செயத் தொழுது
தெள்ளு வாய்மையின் ஆகமத் திறனெலாம் தெரிய
உள்ள வாறுகேட் டருளினான் உலகைஆ ளுடையான்."

வெள்ளி மால் வரை-பெருமையைப் பெற்ற வெள்ளி மலையாகிய. க்:சந்தி. கயிலையில்-கயிலாய மலையில். வீற்றிருந்தருளி-எழுந்தருளி யிருந்து. த்:சந்தி. துள்ளு-துள்ளிக் குதிக்கும். புனல்-கங்கையாற்றின் நீரை. வார்-தம்முடைய நீளமான. வேணியார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையிற் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரர். அருள்-தம்முடைய திருவருளை. செய-வழங்க; இடைக்குறை. த்:சந்தி. தொழுது-அந்த ஈசுவரரைத் திருக்குறிப்புத்தொண்ட நாயனார்வணங்கி விட்டு. தெள்ளு-தெளிவாக உள்ள. வாய்மையின்-உண்மை

களை எடுத்துக் கூறும்; ஒருமை பன்மை மயக்கம். ஆகமம்-சைவ ஆகமங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். அவை யாவன: காரணாகமம், காரியாகமம், காமிகாகமம் முதலியவை. த்:சந்தி. திறன்-வகைகள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்-யாவும்; இடைக்குறை. தெரிய-அறிந்து கொள்ளும் வண்ணம். உள்ளவாறு-உள்ளதை உள்ளபடி. உலகை-இந்தப் பூமண்டலத்தை. ஆளுடையான்-ஆட்சி புரிவதை உடையவனாகிய ஏகாம்பரேசுவரன். கேட்டு-செவியேற்று. அருளினான்-தன்னுடைய திருவருளை வழங்கினான்.

பிறகு உள்ள 51-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'கணக்கு இல்லாத சைவ ஆகமங்களைத் திருவாய் மலர்ந்தருளிய இறைவராகிய ஏகாம்பரேசுவரர் தாம் விழையும் உண்மையான செயல் தம்மைப் பூசை புரிவதே என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய தலைவராகிய அந்த ஈசுவரரை அருச்சனை செய்வதை பெண்மணிகளுக்குள் நல்லவள் ஆக விளங்கும் பெரிய தவத்தைப் புரிந்த கொழுந்தைப் போன்ற காமாட்சி அம்மையார் பேராவலைக் கொண்டார்.' பாடல் வருமாறு:

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யானது பூசனை எனஉரைத் தருள
அண்ண லார்தமை அர்ச்சனை புரிய ஆதரித்தாள்
பெண்ணின் நல்லவ ளாயின பெருந்தவக் கொழுந்து."

எண்-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. ஆகமம்-சைவாகமங்களை; ஒருமை பன்மை மயக்கம். இயம்பிய-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. இறைவர்-இறைவராகிய ஏகாம்பரேசுவரர். தாம் விரும்பும்-தாம் விழையும். உண்மையானது-மெய்யான செயல். பூசனை-தம்மைப்பூசை புரிதலே. என-என்று; இடைக்குறை. உரைத்தருள-திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. அண்ணலார்தமை-தலைவராகிய அந்த ஈசுவரரை. தம்: அசை நிலை. அண்ணலார்- 'பெருமையைப் பெற்றவர்' எனலும் ஆம். அர்ச்சனை-அருச்சனையை. புரிய-

செய்தருள. பெண்ணின்-தெய்வப் பெண்மணிகளுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். நல்லவளாயின-நல்லவளாக விளங்கின; கால மயக்கம். பெரும்-பெருமையைப் பெற்றிருக்கும். தவ-தவத்தைப் புரிந்த. க்:சந்தி. கொழுந்து-கொழுந்தைப் போன்றவளாகிய காமாட்சி அம்மை. ஆதரித்தாள்-பேராவலைக் கொண்டாள்.

பெண்ணின் நல்லவள்: "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும், எண்ணின் நல்லகதிக் கியாது மோர் குறைவிலைக், கண்ணின் நல்லஃதுறும் கழுமல வளநகர்ப், பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே.", "பெண்ணின் நல்லாளை ஓர் பாகமாப் பேணினான்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "தையல் நல்லாளொடும் பாடி." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "பெண்ணினல்லாளும் பிரானைக் கரத்துளே.", "தையல் நல்லாளைத் தவத்தின் தலைவியை.", "மாது நல்லாளும் மணாளன் இருந்திடப், பாதி நல்லாளும் பகவனு மானது, சோதி நல்லாளை." என்று திருமூலரும், "கலையூர் பெண்ணினும் நல்லள் பெரும் புகழ்ச் சனகியோ நல்லள்."(மந்திரப் படலம். 40) என்று கம்பரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 52-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நங்கையாகிய காமாட்சி அம்மையினுடைய திருவுள்ளத்தில் நிறைந்திருந்த காதலைப் பார்த்து அவளுடைய கணவனாகிய ஏகாம்பரேசுவரன் தன்னுடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து அந்த இடத்தில் உண்டான புன்னகையும் காட்சியை அளிக்க "உன்னிடத்தில் உண்டானதாகிய துன்பம் என்ன?" என்று கேட்டருள, "இந்த இடத்தில் அடியேனுடைய கணவனே, தேவரீர் திருவாய் மலர்ந்தருளிச் செய்த சைவ ஆகமம் கூறிய பான்மையோடு தேவரீரை அடியேன் அருச்சனையைச் செய்வதற்கு அடியேனுக்கு ஆவல் பொங்கி எழுகின்றது;" என்று அவரை வணங்கி விட்டு போகம் நிரம்பிய அணிகலன்களை அணிந்த கொங்கைகளை

பெற்றவளாகிய அந்தக் காமாட்சி அம்மை வாழ்த்தி அவரை வணங்க.' பாடல் வருமாறு:

''நங்கை உள்நிறை காதலை நோக்கி
நாய கன்திரு உள்ளத்து மகிழ்ந்தே
அங்கண் எய்திய முறுவலும் தோன்ற
'அடுத்த தென்கொல்நின் பால்?' என வினவ,
'இங்கு நாத,நீ மொழிந்தஆ கமத்தின்
இயல்பி னால்உனை அர்ச்சனை புரியப்
பொங்கு கின்றதென் ஆசை.' என் றிறைஞ்சிப்
போகம் ஆர்த்தபூண் முலையினாள் போற்ற.''

இந்தப் பாடல் குளகம். நங்கை-நற்பண்புகள் நிறைந்த நங்கையாகிய காமாட்சி அம்மையினுடைய. உள்-திருவுள்ளத்தில். நிறை-நிறைந்திருந்த. காதலை-விருப்பத்தை. நோக்கி-அறிந்து கொண்டு. நாயகன்-அவளுடைய கணவனாகிய ஏகாம்பரேசுவரன். திருவுள்ளத்து-தன்னுடைய திருவுள்ளத்தில். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. ஏ: அசை நிலை. அங்கண்-அந்த இடத்தில். எய்திய-அடைந்த. முறுவலும்-புன்னகையும். தோன்ற-காட்சியை அளிக்க. நின்பால்-உன்னிடத்தில். அடுத்தது-உண்டான துன்பம். என்கொல்-என்ன? சொல்: அசை நிலை. என-என்று; இடைக்குறை. வினவ-அவளைக் கேட்டருள. இங்கு-இந்த இடத்தில். நாத-அடியேனுடைய கணவனே. நீ-தேவரீர். மொழிந்த-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. ஆகமத்தின்-சைவ ஆகமம் கூறிய. இயல்பினால்-பான்மையோடு; உருபு மயக்கம். உனை-தேவரீரை: இடைக்குறை. அர்ச்சனை-அடியேன் அருச்சனையை. புரிய-செய்வதற்கு. ப்:சந்தி. என்-அடியேனுக்கு. ஆசை-பேராவல். பொங்குகின்றது-பொங்கி எழுகின்றது. என்று-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. இறைஞ்சி-அந்த ஈசுவரரை வணங்கிவிட்டு. ப்:சந்தி. போகம்-இன்பம். ஆர்த்த-நிரம்பிய. பூண்-அணிகலன்களை அணிந்த; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: காசு மாலை, முத்து மாலை, நவரத்

தின மாலை, படிக மாலை, மலர் மாலை முதலியவை. முலை யினாள்-கொங்கைகளைப்பெற்றவளாகிய காமாட்சி அம்மை. முலை: ஒருமை பன்மை மயக்கம். போற்ற-அவரை வாழ்த்தி வணங்க.

சிவபெருமான் ஆகமங்களை அருளிச் செய்தது: ''அரன் ஆகமம் மிகக் கூறும்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "மன்னுமா மலை மகேந்திரமதனிற், சொன்ன ஆகமம் தோற்றுவித் தருளியும்." என்று மாணிக்க வாசகரும், "அஞ்சன மேனி அரிவையோர், பாகத்தின் அஞ்சொடிரு பத்து மூன்றுள ஆகமம், அஞ்சலி கூப்பி அறுபத் தறுவரும், அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே.'', ''அண்ணல் அருளால் அருளும் சிவாகமம் எண்ணில் இருபத் தெண் கோடிநூறாயிரம்.'', ''அண்ணல் அருளால் அருளும் திவ்யாகமம்.", ''அரனாய் அமரர்கள் அர்ச்சிக்கும் நந்தி, உரனாகி ஆகமம் ஓங்கி நின்றானே.'', ''நவ ஆகமம் எங்கள் நந்தி பெற்றானே.'', ''பெற்ற நல்ஆகமம் காரணம் காமிகம் உற்ற நல் வீரம் உயர் சிந்தம் வாதுளம், மற்றவ் வியாமளம் ஆகும் காலோத்தரம், துற்றநற் சுப்பிரம் சொல்லும் மகுடமே.'', ''அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்.", ''செப்பும் சிவாகமம் என்னும் அப்பேர் பெற்றும், அப்படி நல்கும் அருள் நந்தி." என்று சேக்கிழாரும் பாடியருளிய வற்றைக் காண்க.

போகமார்த்த பூண் முலையினாள்: ''போக மார்த்த பூண் முலையாள்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாய னார் பாடியருளியதைக் காண்க.

பிறகு வரும் 53-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தேவர்களுக்கு எல்லாம் முதல் தேவனாகிய ஏகாம்பரே சுவரனும் காமாட்சி அம்மை வேண்டிக் கொண்ட அந்த வேண்டுகோளைத் தம்முடைய திருவுள்ளத்தில் அங்கீகாரம் புரிந்தருளி, ''பாரத நாட்டில் தெற்குத் திசையில் விளங்கும் செந்தமிழ் நாட்டில் வாழும் மக்கள் மிகுதியாகப் புரிந்த தவத்தின் பயனால் எல்லோரும் தன்னிடம் வந்து சேர்வது,

இந்த மண்ணுலகத்தின் மேல் என்றைக்கும் இருப்பது காஞ்சீ புரம்; அந்தத் தலத்துக்குள் மாமரத்தின் அடியில் வீற்றிருந்த எம்முடைய இருப்பிடத்தில் நீ அடைந்து நிலை பெற்று விளங்கும் பூசையை மகிழ்ச்சியை அடைந்து புரிவாயாக'' எனக் கட்டளையிட எம்பெருமாட்டியாகிய காமாட்சி அம்மையும் பிரிய முடியாத சம்மதத்தை மேற்கொண்டு காஞ்சீ புரத்திற்குச் சென்றருளுவதற்கு உடம்பட்டாள்.' பாடல் வருமாறு:

'' தேவ தேவனும் அதுதிருவுள்ளம் செய்து
தென்றிசை மிக்கசெய் தவத்தால்
யாவ ரும்தனை அடைவது மண்மேல்
என்றும் உள்ளது காஞ்சிமற் றதனுள்
மா அமர்ந்தநம் இருக்கையில் அணைந்து
மன்னு பூசனை மகிழ்ந்து செய் வாய்'என்
றேவ எம்பெரு மாட்டியும் பிரியா
இசைவு கொண்டெழுந் தருளுதற் கிசைந்தாள்.''

தேவ-தேவர்களுக்கு எல்லாம்; ஒருமை பன்மை மயக்கம். தேவனும்-முதல் தேவனாகிய ஏகாம்பரேசுவரனும். அது-காமாட்சி அம்மை வேண்டிக் கொண்ட அந்த வேண்டு கோளை. திருவுள்ளம்-தம்முடைய திருவுள்ளத்தில். செய்து-அங்கீகாரம் புரிந்தருளி. தென் திசை-பாரத நாட்டில் தெற்குத் திசையில் விளங்கும் தமிழ்நாட்டில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். மிக்க-மிகுதியாக. செய்-புரிந்த. தவத்தால்-தவத்தின் பயனால்; ஆகுபெயர். யாவரும்-எல்லோரும். தனை-தன்னை; இடைக்குறை. அடைவது-சேர்வது. மண் மேல்-இந்த மண்ணுலகத்தின் மேல். என்றும்-என்றைக்கும். உள்ளது-இருப்பது. காஞ்சி-காஞ்சீபுரம். மற்று: அசைநிலை. அதனுள்-அந்தத் தலத்துக்குள். மா-ஒரு மாமரத்தின் அடியில்; ஆகுபெயர். அமர்ந்த-வீற்றிருந்த. நம்-எம்முடைய. இருக்கையில்-இருப்பிடத்தை; உருபு மயக்கம். அணைந்து-நீ அடைந்து. மன்னு-நிலைபெற்று விளங்கும். பூசனை-

பூசையை. மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. செய்வாய்-புரி வாயாக. என்று-என. ஏவ-கட்டளையிட. எம்பெருமாட்டியும் -அடியேங்களுடைய தலைவியாகிய காமாட்சி அம்மையும். அடியேங்கள் என்றது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர் களையும் சேர்த்துக் கூறியது. பிரியா-ஏகாம்பரேசுவரரைப் பிரிய முடியாத. இசைவு-சம்மதத்தை. கொண்டு-மேற் கொண்டு. எழுந்தருளுதற்கு-காஞ்சிபுரத்திற்குச் சென்றருளு வதற்கு. இசைந்தாள்-உடம்பட்டாள்.

பிறகு வரும் 54-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'குற்றம் இல்லாத பலவகை யோனிகளாகிய எண்பத்து நான்கு லட்சங்களாகிய உயிர்களுக்குள் அமைத்து வைத்த வேறுபாடுகளையும் பாதுகாத்தருளும் அந்தக் கருணையைப் பெற்ற தலைவனாகிய ஏகாம்பரேசுவரன் திருவாய் மலர்ந் தருளிச் செய்த சைவ ஆகமத்தின் வழியில் விரும்பி அந்தக் காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளும் இயல்பினால் காமாட்சி யம்மை ஏகாம்பரேசுவரரை வணங்கிவிட்டு எழுந்தருள இமய மலைக்கு அரசனும் விருப்பத்தோடு காஞ்சீபுரத்துக்கு வந்து சேர்ந்து பெரிய தவத்தைச் செய்தருளுவதற்குப் பொருத்த மாக உள்ள படைகளோடும் தன்னுடைய பரிவார மக்களைக் காஞ்சீ புரத்திற்கு அனுப்பினான்.' பாடல் வருமாறு:

"ஏதம் இல்பல யோனிஎண் பத்து நான்கு
நூறாயிரந் தனுள் வைத்த
பேத மும்புரந் தருளும்அக் கருணைப்
பிரான் மொழிந்தஆ கமவழி பேணிப்
போதும் நீர்மையில் தொழுதனள் போதப்
பொருப்பில் வேந்தனும் விருப்பில்வந் தெய்தி
மாத வம்புரிந் தருளுதற் கமைந்த
வளத்தொடும் பரி சனங்களை விடுத்தான்."

ஏதம்-குற்றம். இல்-இல்லாத; கடைக்குறை. பல-பல வகை. யோனி-யோனிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். எண்பத்து நான்கு நூறாயிரந்தனுள்-எண்பத்து நான்கு லட்

சங்களாகிய உயிர்களுக்குள். தனுள்: இடைக்குறை. வைத்த-அமைத்து வைத்துள்ள. பேதமும்-வேறு பாடுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். புரந்தருளும்-பாதுகாத்தருளும். அக்கருணை-அந்தக் கருணையைப் பெற்ற. ப்:சந்தி. பிரான்-தலைவனாகிய ஏகாம்பரேசுவரன். மொழிந்த-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. ஆகம-சைவ ஆகமத்தின். வழி-வழியில். பேணி-விரும்பி. ப்:சந்தி. போதும்-அந்தக் காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளும். நீர்மையில்-இயல்பினால்; உருபுமயக்கம். தொழுதனள்-காமாட்சியம்மை ஏகாம்பரேசுவரரை வணங்கி விட்டு; முற்றெச்சம். போத-எழுந்தருள. ப்:சந்தி. பொருப்பில் வேந்தனும்-இமய மலைக்கு அரசனும்; இவன் காமாட்சி அம்மைக்குத் தந்தை. விருப்பில்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். வந்து எய்தி-காஞ்சீபுரத்திற்கு வந்து சேர்ந்து. மா-பெரிய. தவம்-தவத்தை. புரிந்தருளுதற்கு-செய்தருளுவதற்கு. அமைந்த-பொருத்தமாக உள்ள. வளத்தொடும்-பண்டங்களோடும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மரவுரி, ஜபமாலை முதலியவை. பரிசனங்களை-தன்னுடைய பரிவார மக்களை. விடுத்தான்-காஞ்சீபுரத்திற்கு அனுப்பினான்.

பிறகு வரும் 55-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இந்தப் பூமண்டலத்தில் வந்து பிறந்திருக்கும் பலவகை உயிர்கள், தேவர்கள் முதலாகத் தன்னோடு சுற்றிக் கொண்டு வர அந்தக் காஞ்சீபுரத்தைக் காமாட்சியம்மை அடையத் தனக்குத் தன்னையே ஒப்பாக இருக்கும் பெரிய பதுமன் என்னும் பாம்பரசன் தங்களுடைய தலைவியாகிய காமாட்சியம்மையினுடைய திருவடிகளைத் தன்னுடைய தலையின் மேல் வைத்து வணங்கி விட்டு, "தாயாகி இந்த உலகத்தில் வாழும் உயிர்கள் எல்லாவற்றையும் பெற்றெடுத்தருளியவளே, அடியேன் தங்கி வாழும் பிலத்தில் நிலை பெற்ற திருக்கோயில் கொண்டு எழுந்தருளுவாயாக." என்று கூற, இமாசல அரசனுடைய புதல்வியாகிய அந்தக் காமாட்சி

யம்மை அந்த வேண்டுகோளுக்கு இசைந்து தன்னுடைய திரு வருளை விருப்பத்தோடு வழங்கி.' பாடல் வருமாறு:

'' துன்னு பல்லுயிர் வானவர் முதலாச்
சூழ்ந்து டன்செலக் காஞ்சியில் அணையத்
தன்னை நேர்வரும் பதுமமா நாகம்
தம்பி ராட்டிதாள் தலைமிசை வைத்தே
'அன்னை யாய்உல கனைத்தையும் ஈன்றாய்,
அடிய னேன்உறை பிலமத னிடையே
மன்னு கோயில்கொண் டருளுவாய்.' என்ன
மலைம டந்தைமற் றதற்கருள் புரிந்து.''

இந்தப் பாடல் குளகம். துன்னு-இந்தப்பூ மண்டலத்தில் வந்து பிறந்திருக்கும். பல்-பலவகை. உயிர்-உயிர்கள்; அவை யாவன: மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, நீர்வாழ் பிராணிகள், புழுக்கள், பூச்சிகள், மரம், செடி, கொடி முதலி யவை; ஒருமை பன்மை மயக்கம். வானவர்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். முதலா-முதலாக. ச்:சந்தி. சூழ்ந்து-சுற்றிக்கொண்டு. உடன்-தன் னோடு.செல-வர; இடைக்குறை. க்:சந்தி. காஞ்சியில்-அந்தக் காஞ்சீபுரத்தை; உருபு மயக்கம். அணைய-காமாட்சி அம்மை அடைய. த்:சந்தி. தன்னை நேர் வரும்-தனக்குத் தன்மையே ஒப்பாக விளங்கும். பதுமமா-பெரிய பதுமன் என்னும். நாகம்-பாம்பரசன்; திணை மயக்கம். தம்-தங்களுடைய. என்றது பதுமன் தன்னையும் பிற பாம்புகளையும் சேர்த்துச் சொன்னது. பிராட்டி-தலைவியாகிய காமாட்சி அம்மையினு டைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். தலை மிசை-தன்னுடைய தலையின்மேல். வைத்து-வைத்து வணங்கிவிட்டு. ஏ: அசைநிலை. அன்னையாய்-தாயாகி. உலகு-இந்த உலகில் வாழும் உயிர்கள்; இட ஆகுபெயர். அனைத்தையும்-எல்லாவற்றையும். ஈன்றாய்-பெற்றெடுத் தருளியவளே. அடியனேன்-அடியேன். உறை-தங்கி வாழும். பிலமதனிடை-பிலத்தில். அது-பகுதிப் பொருள் விகுதி. ஏ:

அசை நிலை. மன்னு-நிலை பெற்ற. கோயில் கொண்டு-திருக் கோயில் கொண்டு. அருளுவாய்-எழுந்தருளுவாயாக. என்ன- என்று பதுமன் வேண்டிக் கொள்ள. மலை மடந்தை-இமாசல அரசனுடைய புதல்வியாகிய அந்தக் காமாட்சி அம்மை. மலை: திணை மயக்கம். மற்று: அசை நிலை. அதற்கு-அந்த வேண்டுகோளுக்கு. அருள் புரிந்து-இசைந்து தன்னுடைய திருவருளை விருப்பத்தோடு வழங்கி.

அடுத்து வரும் 56-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தக் காஞ்சீபுரத்தில் இந்த மண்ணுலகத்தில் வாழும் பல வகையாகிய உயிர்களும் தழைத்து ஓங்கும் வண்ணம் அளவு இல்லாத ஆனந்தத்தில் தம்முடைய திருவருளால் அந்த உயிர்களைத் தாய்மார்களினுடைய கருப்பங்களில் இருக்குமாறு செய்து பிறைச்சந்திரன் தங்கியுள்ள புரிகளைப் பெற்ற சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்ற வராகிய ஏகாம்பரேசுவரருக்குத் திருத்தமாக அமைந்துள்ள பூசையைப் புரிந்தருள விருப்பத்தை உடையவளாகி அந்தக் காமாட்சி அம்மை புரிய எங்கணும் யாவரும் விரும்பவும் திரு விளையாட்டினால் தனியாக உள்ள ஒற்றை மாமரத்தின் அடியில் எழுந்தருளியிருக்கும் முதல்வராகிய அந்த ஏகாம்ப ரேசுவரர் தனக்கு எதிரில் தோன்றாமல் அகன்று சென்றரு ளப் பொங்கி எழும் பெரிய தவத்தைப் புரிந்தருளி அந்த ஏகாம்பரேசுவரரைத் தரிசனம் புரிவதற்காக மீண்டும் தவத்தைச் செய்தலை அந்தத் தங்கம் தோன்றும் இமய மலைக்கு அரசனுடைய புதல்வியும் பூங்கொடியைப் போன்ற வளும் ஆகிய காமாட்சி அம்மை மேற்கொண்டாள்.' பாடல் வருமாறு:

"அங்கு மண்ணுல கத்துயிர் தழைப்ப
அளவில் இன்பத்தின் அருட்கரு இருத்தித்
திங்கள் தங்கிய புரிசடை யார்க்குத்
திருந்து பூசனை விரும்பினள் செய்ய

எங்கும் நாடவும் திருவிளை யாட்டால்
ஏக மாமுதல் எதிர்ப்படா தொழியப்
பொங்கு மாதவம் செய்துகாண் பதற்கே
புரிவு செய்தனள் பொன்மலை வல்லி.''

அங்கு-அந்தக் காஞ்சீபுரத்தில். மண்ணுலகத்து-இந்த மண்ணுலகத்தில் வாழும். உயிர்-பலவகையாக உள்ள உயிர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழுக்கள், பூச்சிகள், நீர் வாழ் பிராணிகள், மரம், செடி, கொடி முதலியவை. தழைப்ப-தழைத்து ஓங்கும் வண்ணம். அளவு இல்-அளவு இல்லாத. இல்: கடைக்குறை. இன்பத்தின்-ஆனந்தத்தில். அருள்-தம்முடைய திருவருளால். கரு-தாய்மார்களினுடைய கருப்பங்களில்; ஒருமை பன்மை மயக்கம். இருத்தி-இருக்குமாறு செய்தருளி. த்:சந்தி. திங்கள்-பிறைச்சந்திரன். தங்கிய -தங்கியுள்ள. புரி-புரிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். சடையார்க்கு-சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருக்கு. த்:சந்தி. திருந்து-திருத்தமாக அமைந்துள்ள. பூசனை-பூசையை. விரும்பினள்-புரிந்தருளும் விருப்பத்தை உடையவளாகி; முற்றெச்சம். செய்ய-அந்தக் காமாட்சி அம்மை புரிந்தருள. எங்கும்-எவ்விடத்திலும். நாடவும்-யாவரும் விரும்பவும். திருவிளையாட்டால்-ஒரு திருவிளையாட்டினால். ஏக-ஒற்றை. மா-மாமரத்தின் அடியில் எழுந்தருளியிருக்கும்; ஆகு பெயர். முதல்-முதல்வராகிய அந்த ஏகாம்பரேசுவரர்; திணை மயக்கம். எதிர்ப்படாது-தனக்கு எதிரில் தோன்றாமல். ஒழிய-அகன்று சென்றருள. ப்:சந்தி. பொங்கு-பக்தி பொங்கி எழும். மா-பெரிய. தவம்-தவத்தை. செய்து-அந்தக் காமாட்சியம்மை புரிந்தருளி. காண்பதற்கு-அந்த ஏகாம்பரேசுவரரைத் தரிசனம் புரிவதற்காக. ஏ: அசை நிலை. பொன்-அந்தத் தங்கம் தோன்றும். மலை-இமயமலையின்

அரசனுடைய புதல்வியும்; திணை மயக்கம். வல்லி-பூங் கொடியைப் போன்றவளும் ஆகிய காமாட்சியம்மை; உவம ஆகு பெயர். புரிவு-புரிந்தருளுதலை. செய்தனள்-மேற்கொள் வதைப் புரிந்தாள்; மேற்கொண்டாள்.

பிறகு வரும் 57-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'காமாட்சி அம்மையினுடைய திருவுள்ளம் அந்த ஏகாம் பரேசுவரனைத் தரிசனம் புரிவதையே விழைந்து இடை விடாமல் தன்னுடைய அழகிய வாக்கில் உச்சரிப்பவை ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட் சரமேயாக இருக்க அடியேங்களை ஆட்களாகப் பெற்ற அந்தக் காமாட்சி அம்மை தன்னுடைய செந்தாமரை மலர் களைப் போலச் சிவந்த திருக்கரங்களைத் தன்னுடைய தலையின் மேல் வைத்துக் கும்பிட்டருளிப் பற்றுக் கோடா கிய செய்வதற்கு அருமையாக இருக்கும் தவத்தைப் புரிந் தருள, அவளுடைய ஒப்பற்ற பெருமையைப் பெற்ற கணவ ராகிய ஏகாம்பரேசுவரர் அந்தத் தவத்தைப் பார்த்துச் சகிப் பாரோ? வஞ்சனையைப் போக்கியுள்ள மாமரத்தினுடைய அடியில் எழுந்தருளி வந்து அந்த இமயமலையரசனுடைய புதல்வியாகிய காமாட்சி அம்மை தம்மைத் தரிசனம் புரியும் வண்ணம் தம்முடைய காட்சியை வழங்கியருளினார்.' பாடல் வருமாறு:

" நெஞ்சம் ஈசனைக் காண்பதே விரும்பி
நிரந்த ரம்திரு வாக்கினில் நிகழ்வ
தஞ்செ ழுத்துமே ஆகஆளுடைய அம்மை
செம்ம லர்க்கை குவித் தருளித்
தஞ்ச மாகிய அருந்தவம் புரியத்
தரிப்ப ரேஅவள் தனிப்பெரும் கணவர்?
வஞ்சம் நீக்கிய மாவின்மூ லத்தில்
வந்து தோன்றினார் மலைமகள் காண."

நெஞ்சம்-காமாட்சி அம்மையினுடைய திருவுள்ளம்

ஈசனை-அந்த ஏகாம்பரேசுவரனை. க்:சந்தி. காண்பதே-தரிசனம் புரிவதனையே. விரும்பி-விழைந்து. நிரந்தரம்-இடை விடாமல். திரு-தன்னுடைய அழகிய. வாக்கினில்-வாக்கில்; திரு வாயில். நிகழ்வது-உச்சரிப்பவை; ஒருமை பன்மை மயக்கம். அஞ்சு எழுத்துமே-ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையே. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். ஆக-ஆக இருக்க. ஆளுடைய-அடியேங்களை ஆட்களாகப் பெற்ற. ஆள்: ஒருமை பன்மை மயக்கம். இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. அம்மை-காமாட்சி அம்மை. செம்மலர்-தன்னுடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த. மலர்: ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கை-தன்னுடைய திருக்கரங்களை; ஒருமை பன்மை மயக்கம். குவித்தருளி-தன்னுடைய தலையின் மேல் வைத்துக் கும்பிட்டருளி. த்:சந்தி. தஞ்சமாகிய-பற்றுக் கோடாக உள்ள. அரும்-செய்வதற்கு அருமையாக இருக்கும். தவம்-தவத்தை. புரிய-அந்தக் காமாட்சி அம்மை செய்தருள. த்:சந்தி. அவள்-அந்த அம்மையினுடைய. தனி-ஒப்பற்ற. ப்:சந்தி. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். கணவர்-கொழுநராகிய ஏகாம்பரேசுவரர். தரிப்பரே-அந்தத் தவத்தைப் பார்த்துச் சகிப்பாரோ? வஞ்சம்-வஞ்சகச் செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். நீக்கிய-போக்கியுள்ள. மாவின்-மாமரத்தினுடைய. மூலத்தில்-அடியில். வந்து-எழுந்தருளி வந்து. மலை-அந்த இமய மலையின் அரசனுடைய; இணை மயக்கம். மகள்-புதல்வியாகிய காமாட்சி அம்மை. காண-தம்மைத் தரிசனம் புரியும் வண்ணம். தோன்றினார்-தம்முடைய காட்சியை வழங்கியருளினார்.

பிறகு வரும் 58-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு காமாட்சி அம்மை ஏகாம்பரேசுவரரைத் தரிசித்த சமயத்தில் அவள் புரிந்த தவத்தின் பிரயோசனம்

ஆகும் ஏகம்பமாகிய காஞ்சீபுரத்தில் விரும்பித் திருக்கோயில் கொண்டருளிய தம்முடைய பெருமானும் கணவனுமாகிய ஏகாம்பரேசுவரனை வண்டுகள் மொய்த்துக் கொண்டு திரியும் கூந்தலின் கற்றை அந்த ஏகாம்பரேசுவரருக்கு முன்னால் தரையில் படுமாறு அவரைப் பணிந்து தம்முடைய திருவுள்ளத்தில் வந்து எழுந்து விளங்கும் பேராவல் முன் னால் பொங்கி எழத் தம்முடைய திருவுள்ளத்தில் மேற் கொண்ட காதலாகிய விருப்பம் ஓர் அளவு இல்லாமல் தாம் எண்ணிய பூசையைப் புரிவதை மேற்கொண்டு கோவைப் பழங்களைப் போன்ற அதரங்களைப் பெற்ற திருவாயை உடைய உமை நங்கையாகிய காமாட்சி அம்மை பரிசுத்த மாகிய அருச்சனையை ஆரம்பித்தலை விரும்புபவள் ஆனாள்.' பாடல் வருமாறு:

'' கண்ட போதில் அப்பெருந்தவப் பயனாம்
கம்பம் மேவிய தம்பெரு மானை
வண்டு லாம்குழற் கற்றைமுன் தாழ
வணங்கி வந்தெழும் ஆசைமுன் பொங்கக்
கொண்ட காதலின் விருப்பள வின்றிக்குறித்த
பூசனைக் கொள் கைமேற் கொண்டு
தொண்டை யங்கனி வாயுமை நங்கை
தூய அர்ச்சனை தொடங்குதல் புரிவாள்."

கண்ட-அவ்வாறு காமாட்சி அம்மை ஏகாம்பரேசுவர ரைத் தரிசித்த. **போதில்**-சமயத்தில். **அப்பெரும்**-அந்தப் பெருமையைப் பெற்று விளங்கும். **தவ**-தவத்தினுடைய. **பயன் ஆம்**-பிரயோசனம் ஆகும். **கம்பம்**-ஏகம்பமாகிய காஞ்சீபுரத்தில். **மேவிய**-விரும்பித் திருக்கோயில் கொண் டருளிய. **தம்**-தம்முடைய. **பெருமானை**-பெருமானும் கணவனும் ஆகிய ஏகாம்பரேசுவரனை. **வண்டு**-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். **உலாம்**-மொய்த்துக் கொண்டு திரியும். **குழல்**-கூந்தலின். **கற்றை**-தொகுதி. **முன்**-அந்த ஏகாம்பரேசுவரருக்கு முன்னால். **தாழ**-தரையில் படுமாறு. **வணங்கி**-அந்த ஈசுவரரைப் பணிந்து. **வந்து எழும்**-தம்மு

டைய திருவுள்ளத்தில் வந்து எழுந்து விளங்கும். ஆசை-பேராவல். முன்-முன்னால். பொங்க-பொங்கி எழ. க்:சந்தி. கொண்ட-தம்முடைய திருவுள்ளத்தில் மேற் கொண்ட. காதலின்-காதலாகிய. விருப்பு-விருப்பம். அளவு-ஓர் அளவு. இன்றி-இல்லாமல். க்:சந்தி. குறித்த-தாம் எண்ணிய. பூசனை-பூசையை. க்:சந்தி. கொள்கை-புரிவதை. மேற் கொண்டு-தாம் மேற்கொண்டு. தொண்டை-கோவைப் பழங்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். அம்-அழகிய. கனி-கனிவை உடைய அதரங்களைப் பெற்ற. வாய் -திருவாயை உடைய. உமை நங்கை-உமை நங்கையாகிய காமாட்சி அம்மை. தூய-பரிசுத்தமாகிய. அர்ச்சனை-அருச்சனையை. தொடங்குதல்-ஆரம்பித்தலை. புரிவாள்-விரும்புபவள் ஆனாள்.

தொண்டையங்கனி வாய்: ''தொண்டைவாய் உமையோடு கூடிய வேடனே.'' என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், ''கோவைவாய் மலைமகள் கோன்.'', ''தொண்டை கொப்புளித்த செவ்வாய்த் துடியிடைப்பரவை அல்குற்...கோதை.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''கோவை வாய்ப் பரவையார்.'' என்று சேக்கிழாரும், ''என் மகள்தன் தொண்டையம் செங்கனிவாய் நுகர்ந்தானை.'', ''கொவ்வைக் கனிவாய்.'' என்று திருமங்கை யாழ்வாரும், ''கோவை வாயாள் பொருட் டேற்றின் எருத்தம் இறுத்தாய்.'', ''கோவை வாய் துடிப்ப.'' என்று நம்மாழ்வாரும், ''கொவ்வை நோக்கிய வாய்களை.'' (வரைக் காட்சிப் படலம், 9), ''தொண்டை வாய்ப் பெய்து.'' (நீர் விளையாட்டுப் படலம், 5), ''தொண்டை வாய்ச்சியர்.'', ''தொண்டை வாயினீர் சொல்லுமின்.'' (மந்திரப் படலம், 55, 89), ''தொண்டை வாய்க் கேகயன் தோகை.'' (மந்தரை சூழ்ச்சிப் படலம், 41), ''தொண்டை வாய் மடந்தை மாரில்.'' (கைகேசி சூழ்வினைப் படலம், 79), ''தொண்டை

யஞ் சேயொளித் துவர்த்தவாய்.'' (அயோமுகிப் படலம், 68). ''ஓதியர் தொண்டையங் கனியிதழ்.'' (பம்பா நதிப் படலம், 13), ''கொவ்வைப் பழனும்... குவளையுண்கண்ணி வண்ண வாயது.'' (நாடவிட்ட படலம், 49), ''தொண்டை வாய் மயிலினைத் தொழுது தோன்றினான்.''(உருக்காட்டுப் படலம், 22), ''தொண்டையங்கனிவாய்ச் சீதை.'', ''தொண்டை வாய் அரக்கிமார்கள்.'' (பொழிலிறுத்த படலம், 40,60) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

அடுத்து வரும் 59-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தேவர்களினுடைய தலைவராகிய ஏகாம்பரேசுவரரைப் பூசை புரியும் பொருட்டு அந்த ஈசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்த சைவாகமத்தில் கூறப் பெற்ற மெய்யான வழியில் தலைசிறந்து நின்று அடியேங்களுடைய தலைவியாகிய காமாட்சி யம்மை தம்மை அருச்சனை செய்வதற்காக இயல்போடு வாழும் அழகிய தோழிமார்களான பூங்கொம்பைப் போன்ற பெண்மணிகள் மலர்க் கூடையை எடுத்துக்கொண்டு வந்து சேர குலாவும் மென்மையான தளிர்களைப் போன்ற இரண்டு திருவடிகளாலும் நடந்து அம்பிகா வனமாகும் அழகிய காட்டில் மரங்களில் மலர்ந்திருப்பவையான பரிசுத்தமும் நறுமணமும் கொண்ட புதிய மலர்களை அந்தக் காமாட்சியம்மை பறித்தாள்.' பாடல் வருமாறு:

'' உம்பர் நாயகர் பூசனைக் கவர்தாம்
உரைத்த ஆகமத் துண்மையே தலைநின்
றெம்பி ராட்டிஅர் ச்சனைபுரி வதனுக்
கியல்பில் வாழ்திருச் சேடிய ரான
கொம்ப னார்கள்பூம் பிடகைகொண் டணையக்
குலவு மென்தளிர் அடியிணை ஒதுங்கி
அம்பி காவன மாம்திரு வனத்தில்
ஆன தூநறும் புதுமலர் கொய்தாள்.''

உம்பர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகர்-தலைவராகிய ஏகாம்பரேசுவரரை. பூசனைக்கு-

பூசை புரியும் பொருட்டு. அவர்தாம்-அந்த ஈசுவரர். தாம்: அசை நிலை. உரைத்த-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. ஆகமத்து-சைவாகமத்தில் கூறப்பெற்ற. உண்மை-மெய்யான வழியில்; ஆகுபெயர். ஏ: அசை நிலை. தலை நின்று-தலை சிறந்து நின்று. எம்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும்சேர்த்துக் கூறியது.பிராட்டி -தலைவியாகிய காமாட்சியம்மை. அர்ச்சனை-தம்மை அருச்சனை. புரிவதனுக்கு-செய்வதற்காக. இயல்பில்-இயல்போடு; உருபு மயக்கம். வாழ்-வாழும். திரு-அழகிய. ச்:சந்தி. சேடியரான-தோழிமார்களான. கொம்பு-பூங்கொம்பை. அனார்கள்-போன்ற பெண்மணிகள். அனார்: இடைக்குறை. பூப்பிடகை-மலர்களை வைத்திருக்கும் கூடையை. கொண்டு -எடுத்துக் கொண்டு. அணைய-வந்து சேர. க்:சந்தி. குலவு-தங்களிடம் உள்ள. மென்-மென்மையாகிய. தளிர்-தளிர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். அடியிணை-இரண்டு திருவடிகளாலும். அடி: ஒருமை பன்மை மயக்கம். ஒதுங்கி-நடந்து. அம்பிகாவனம் ஆம்-அம்பிகை தவம் புரிந்த காடு ஆகும். திரு-அழகிய. வனத்தில்-காட்டில். ஆன-மலர்ந்திருப்பவையான தூ-பரிசுத்தமும். நறும்-நறுமணமும் கொண்ட. புது-அன்று அலர்ந்த புதிய. மலர்-மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். கொய்தாள்-காமாட்சி யம்மை பறித்தாள்.

பெண்களின் திருவடிகளுக்குத் தளிர்கள் உவமை: "தளிர்போல் மெல்லடியாள்." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "தளிர் தயங்கும்மே அடியே." என்று இளம் பெருமான் அடிகளும், "கற்பகப் பூந்தளிரடி.", "பூந்துணர் மலர்ந்த போலும் நற்பதம் பொலிவு காட்ட." என்று சேக்கிழாரும், "அடிமானத்தாள்புரை தளிர்." (வனம்புகு படலம், 17), "குளிர் பல்லவம் அனுங்கச் செஞ்செவிய கஞ்ச நிமிர் சீறடியளாகி." (சூர்ப்பணகைப் படலம், 31) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பிறகு வரும் 60-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு காமாட்சி அம்மை பறித்துக் கொண்டு வந்த பல மலர்களையும், பெருமையைப் பெற்று விளங்கும் கம்பை ஆற்றில் ஓடுகின்ற அபிடேக நீரையும், மேவிய ஏகாம்பரேசுவரருடைய திருமேனியிற் பூசும் அரைத்த சந்தனம் முதலியவற்றையும், புத்துருக்கு நெய்யை வார்த்த கொழுமையைப் பெற்ற தூபக்காலையும், திருவிளக்குக்களையும் பக்தி நிரம்பியுள்ள தன்னுடைய திருவுள்ளத்தில் மேவிய பக்தியோடு, உண்மையை வழங்குமாறு வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் தான் வேண்டும் சமயத்தில் உதவுமாறு உண்மையாகிய பூசையை அமையுமாறு சைவ ஆகமம் கூறிய விதிப்படி எல்லாவற்றையும் இந்த உலகத்தில் வாழும் உயிர்கள் யாவற்றையும் பெற்றெடுத்த அடியேங்களுடைய தலைவியாகிய அந்தக் காமாட்சி அம்மை புரிந்தாள்.' பாடல் வருமாறு:

"கொய்த பன்மலர் கம்பைமா நதியிற்
குலவு மஞ்சனம் நிலவுமெய்ப் பூச்சு
நெய்த ரும்கொழும் தூபதீ பங்கள்
நிறைந்த சிந்தையில் நீடிய அன்பின்
மெய்த ரும்படி வேண்டின எல்லாம்
வேண்டும் போதினில் உதவமெய்ப் பூசை
எய்த ஆகம விதியெலாம் செய்தாள்
உயிர்கள் யாவையும் ஈன்றஎம் பிராட்டி."

கொய்த-அவ்வாறு காமாட்சி அம்மை பறித்துக் கொண்டு வந்த. பன்-பலவகை. மலர்-மலர்களையும்; ஒருமை பன்மை மயக்கம், அவையாவன: கதம்ப மலர், நீலோற்பல மலர், பவள மல்லிகை மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், குமுத மலர், வில்வ மலர், செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், அல்லி மலர், ஆம்பல் மலர், தும்பை மலர், வெட்சி மலர், மகிழ மலர் முதலியவை. கம்பை மா நதியில்-பெருமையைப் பெற்று விளங்கும் கம்பை ஆற்றில். குலவும்-ஓடும்.

மஞ்சனம்-அபிடேக நீரையும். நிலவு-மேவிய மெய்ப்பூச்சு-ஏகாம்பரேசுவரருடைய திருமேனியிற் பூசுவதற்கு உரிய அரைத்த சந்தனம், புனுகு. அரகஜா, ஜவ்வாது, திருநீறு முதலியவற்றையும். பூச்சு: ஒருமை பன்மை மயக்கம். நெய்-புத்தூருக்கு நெய்யை. தரும்-வார்த்திருக்கும்: கொழும்-கொழுமையான. தூப-தூபக்காலையும். தீபங்கள்-திருவிளக்குக்களையும். நெய்யை வார்த்தவை இந்தத் திருவிளக்குக்கள். தூபத்துக்குச் சாம்பிராணியைக் கொண்டு வந்தாள். நிறைந்த-பக்தி நிரம்பியுள்ள. சிந்தையில்-தன்னுடைய திருவுள்ளத்தில். நீடிய-மேவிய. அன்பின்-பக்தியோடு. மெய்-உண்மையை. தரும்படி-வழங்குமாறு. வேண்டின-பூசைக்கு வேண்டிய பொருள்கள். இவை, மலர்கள், அடிக்கும் மணி, தூபக்கால், சாம்பிராணி, கற்பூரத்தட்டு, கற்பூரம், திருமஞ்சனக் குடம், திருமஞ்சன நீர், ஹாரத்தி முதலியவை. எல்லாம்-எல்லாவற்றையும். வேண்டும்-தான் வேண்டும். போதினில்-சமயத்தில். உதவ-கிடைக்குமாறு. மெய்-உண்மையாகிய. ப்:சந்தி. பூசை-பூசையை. எய்த-அமையுமாறு. ஆகம-சைவ ஆகமம் கூறிய.விதி எலாம்-விதிப்படி எல்லாவற்றையும். எலாம்: இடைக்குறை. உயிர்கள்-இந்த உலகத்தில் வாழும் மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழு, பூச்சி, நீர் வாழ் பிராணிகள், மரம், செடி, கொடி முதலிய உயிர்கள். யாவையும் யாவற்றையும். ஈன்ற-பெற்றெடுத்த. எம்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பிராட்டி-தலைவியாகிய அந்தக் காமாட்சி அம்மை. செய்தாள்-புரிந்தருளினாள்.

பிறகு வரும் 61-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னுடைய கைகள் வழங்கும் பிரயோசனம் இது என்று தெரிந்து கொண்டு ஏகம்பம் ஆகிய காஞ்சீபுரத்தில் விரும்பித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தேவர்களினுடைய தலைவராகிய ஏகாம்பரேசுவரரிடத்தில் அமைந்த விருப்பத்தைச் செய்யும் திருவுள்ளத்தைப் பெற்ற

வளாகி நெடுங்காலம் இருக்கும் நன்மைகள் யாவும் பெருகி உண்டாகும் வண்ணம் வரங்களை வழங்கியருளும் பரம்பொருளாகும் இமாசல அரசனுடைய புதல்வியும், பூங்கொடியைப் போன்றவளும் ஆகிய காமாட்சி அம்மை ஒப்பு இல்லாத விதத்தில் தன்னுடைய திருவுள்ளத்தில் மலர்ச்சியை அடைந்த பெரிய பக்தியோடு தன்னுடைய தலையைத் தரையில் படுமாறு வணங்கி எழுந்து ஏகாம்பரேசுவரருக்குப் புரியும் பூசையை ஒவ்வொரு நாளும் தன்னுடைய திருவுள்ளம் கொள்ளுமாறு அவளுடைய பக்தி பெருகி எழுந்தது.' பாடல் வருமாறு:

"கரம் தரும்பயன் இதுவென உணர்ந்து
கம்பம் மேவிய உம்பர்நா யகர்பால்
நிரந்த காதல்செய் உள்ளத்த ளாகி
நீடு நன்மைகள் யாவையும் பெருக
வரந்த ரும்பொரு ளாம்மலை வல்லி
மாறி லாவகை மலர்ந்தபே ரன்பால்
சிரம்ப ணிந்தெழு பூசை நாடொறும்
திருவு ளம்கொளப் பெருகிய தன்றே."

கரம்-தன்னுடைய கைகள்; ஒருமை பன்மை மயக்கம். தரும்-வழங்கும். பயன்-பிரயோசனம். இது என-இது என்று. என: இடைக்குறை. உணர்ந்து-தெரிந்து கொண்டு. கம்பம்-ஏகம்பம் ஆகிய காஞ்சீபுரத்தில். மேவிய-விரும்பித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய. உம்பர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகர் பால்-தலைவராகிய ஏகாம்பரேசுவரரிடத்தில். நிரந்த-அமைந்துள்ள. காதல்-விருப்பத்தை. செய் புரியும். உள்ளத்தளாகி-திருவுள்ளத்தைப் பெற்றவளாகி. நீடு-நெடுங்காலம் இருக்கும். நன்மைகள்-நலங்கள்; என்றது செல்வம், பக்தி, தோழிகள், பூசைக்கு உரிய பொருள்கள் முதலியவற்றை. யாவையும்-யாவும். பெருக-பெருகி உண்டாகும் வண்ணம். வரம்-வரங்களை; ஒருமை பன்மை

மயக்கம்; என்றது செல்வத்தைப் பெறுதல், நல்ல மாளிகையை அடைதல், நல்ல நண்பர்களைப் பெறுதல், நல்ல உறவினர்களைப் பெறுதல், மக்கட் பேற்றை அடைதல், நல்ல வயல்களைப் பெறுதல் முதலியவற்றை. தரும்-வழங்கியருளும். பொருள் ஆம்-பரம்பொருள் ஆகும்; பரதேவதை ஆகும். மலை-இமாசல அரசனுடைய புதல்வியும்; திணை மயக்கம். வல்லி-பூங்கொடியைப் போன்றவளும் ஆகிய காமாட்சி அம்மை; உவம ஆகுபெயர். மாறு-ஒப்பு. இலா-இல்லாத; இடைக்குறை. வகை-விதத்தில். மலர்ந்த-தன்னுடைய திருவுள்ளத்தில் மலர்ச்சியை அடைந்த. பேரன்பால்-பெரிய பக்தியோடு; உருபு மயக்கம். சிரம்-தன்னுடைய தலையை. பணிந்து-தரையில் படுமாறு வணங்கி. எழு-எழும். பூசை-ஏகாம்பரேசுவரருக்குத் தான் புரிந்தருளும் பூசையை. நாடொறும்-ஒவ்வொரு நாளும். திருவுளம்-தன்னுடைய திருவுள்ளம். உளம்; இடைக்குறை. கொள-கொள்ளுமாறு; இடைக்குறை. ப்:சந்தி. பெருகியது-அவளுடைய பக்தி பெருகி எழுந்தது. அன்று, ஏ: இரண்டும் ஈற்று அசை நிலைகள்.

கரம் தரும் பயன் பூசை புரிதல்: "கைகாள் கூப்பித் தொழீர் கடி மாமலர் தூவி நின்று, பை வாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக் கைகாள் கூப்பித் தொழீர்." என்று திருநாவுக்கரசு நாயனார் பாடியருளியதைக் காண்க.

பிறகு வரும் 62-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'காமாட்சியம்மையினுடைய கணவராகிய ஏகாம்பரேசுவரரும் பெரிய விருப்பத்தோடு விரும்பி நற்பண்புகள் நிறைந்தவளாகிய காமாட்சியம்மை தம்மை அருச்சனை புரியும் அந்தச் சமயத்தில் விருப்பம் மிகுதியாக உள்ள ஒரு திருவிளையாட்டினால் பாரமாக உள்ள குழைகளைத் தன்னுடைய காதுகளில் அணிந்தவளாகிய காமாட்சி அம்மைக்குத் தம்முடைய திருவருளை வழங்குவதற்கு விரும்பி குளிர்ச்சி

யைப் பெற்ற நீர் நிரம்பிய சமுத்திரங்கள் ஏழும் ஒன்றாகச் சேர்ந்து பெருகி ஓங்கி ஆகாயமும் உட்படுமாறு பரவி ஓடி மேலே ஓடுவது போல வரவே, கம்பா நதியின் வெள்ளம் ஆகும் வண்ணம் ஏகாம்பரேசுவரர் தம்முடைய திருவுள்ளத் திலும் எண்ணினார்.' பாடல் வருமாறு:

''நாதரும் பெரு விருப்பொடு நயந்து
நங்கை அர்ச்சனை செய்யும்அப் பொழுதில்
காதல் மிக்கவோர் திருவிளை யாட்டில்
கனம்கு ழைக்கருள் புரிந்திட வேண்டி.
சீத மார்கடல் ஏழும்ஒன் றாகி
ஓங்கி வானமும் உட்படப் பரந்து
மீது செல்வது போல்வரக் கம்பை
வெள்ள மாம்திரு வுள்ளமும் செய்தார்.''

நாதரும்-காமாட்சி அம்மையாருடைய கணவராகிய ஏகாம்பரேசுவரரும். பெரு-பெரிய. விருப்பொடு-விருப்பத் தோடு. நயந்து-விரும்பி. நங்கை-நற்பண்புகள் நிறைந்தவளா கிய காமாட்சியம்மை. அர்ச்சனை-தம்மை அருச்சனை செய்யும்-புரிந்தருளும். அப்பொழுதில்-அந்தச் சமயத்தில். காதல்-விருப்பம். மிக்க-மிகுதியாக உள்ள. ஓர்-ஒரு. திரு விளையாட்டில்-திருவிளையாட்டினால்; உருபு மயக்கம். கனம்-பாரமாக உள்ள; 'தங்கத்தால் செய்த' எனலும் ஆம். குழைக்கு-குழைகளைத் தன்னுடைய காதுகளில் அணிந்த வளாகிய காமாட்சி அம்மைக்கு. குழை: ஒருமை பன்மை மயக்கம். கனம் குழை: அன்மொழித் தொகை. அருள்-தம்மு டைய திருவருளை. புரிந்திட-வழங்குவதற்கு. வேண்டி- விரும்பி. சீதம்-குளிர்ச்சியைப் பெற்ற நீர்; ஆகுபெயர். ஆர்- நிரம்பிய. கடல் ஏழும்-ஏழு சமுத்திரங்களும். கடல்: ஒருமை பன்மை மயக்கம். ஏழு கடல்களாவன: உப்பு நீர்க்கடல், கரும் பஞ் சாற்றுக்கடல், கட்கடல், நெய்க்கடல், தயிர்க்கடல், பாற்கடல், நன்னீர்க்கடல் என்பவை. ஒன்றாகி-ஒன்றாகச் சேர்ந்து பெருகி. ஓங்கி வானமும்-ஓங்கி ஆகாயமும். உட்பட

தங்களுக்குள் அடங்குமாறு. ப்:சந்தி. பரந்து-பரவி ஓடி. மீது-மேலே. செல்வதுபோல்-ஓடுவது போல. வர-வரவே. க்:சந்தி. கம்பை-கம்பையாறு. வெள்ளம் ஆம்-வெள்ளம் ஆகும் வண்ணம். திருவுள்ளமும்-தம்முடைய திருவுள்ளத்திலும். செய்தார்-எண்ணினார்.

கனம் குழை: "கனம் குழை மாதர் கொல்." (திருக்குறள், 1081) என்று திருவள்ளுவரும், "கோழி எறிந்த கொடுங்காற் கனங்குழை." (பட்டினப்பாலை,23) என்று கடியலூர் உருத்திரங்கண்ணனாரும், "கனங்குழை ஆடற்பிரிய." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "கனங்குழையாள் பொருட்டா." என்று பெரியாழ்வாரும், "கல்லா நின்றனள் கனங்குழையோள்.", "கதிர் பொற் பட்டமொடு கனங்குழை திருத்தி.", "கண்ணீர் ஆடுமோர் கனங்குழை.", "கண்ணார் கனங்குழை.", "கரும்பேர் கிளவிக்கனங்குழை." (பெருங்கதை, 1. 36: 45, 37: 164, 40: 231, 2. 16: 12, 20: 29) என்று கொங்குவேளிரும், "கடிப்பிகு காதிற் கனங்குழை." (பரிபாடல் திரட்டு, 16: 33) என்று வேறு ஒரு புலவரும் பாடியவற்றைக் காண்க.

பிறகு வரும் 63-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தன்னுடைய தலைவரும் கணவருமாகிய ஏகாம்பரேசுவரர் அருளிய அருள் வெள்ளத்தைப் பார்த்து அழகிய கயல் மீன்களைப் போன்ற கண்களைப் பெற்றவளாகிய காமாட்சி அம்மை தம்முடைய பெருமானாகிய ஏகாம்பரேசுவரன் மேல் ஆகாயம் முழுவதையும் அடக்கிக் கொள்ளும் வண்ணம் ஓடி வரும் பெரிய கம்பையாற்றின் வெள்ளம் ஏகாம்பரேசுவர் மேல் வந்து சேரும் என்று அச்சத்தைக்கொண்டு தன்னுடைய திருவுள்ளத்தில் மேவிய பதைபதைப்பை அடையும் விருப்பத்தோடு தன்னுடைய அழகிய கரங்களால் அந்த வெள்ளத்தைத் தடுத்துப் பார்த்தும் அது நிற்காமையால் குளிர்ச்சியைப் பெற்ற பிறைச்சந்திரன் மலரும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய ஏகாம்ப

ரேசுவரரைத் தன்னையே தனக்கு ஒப்பாக விளங்குபவளாகிய அந்தக் காமாட்சி அம்மை தழுவிக் கொண்டாள்.' பாடல் வருமாறு:

" அண்ண லார்அருள் வெள்ளத்தை நோக்கி
அங்க யற்கண்ணி தம்பெரு மான்மேல்
விண்ணெ லாம்கொள வரும்பெரு வெள்ளம்
மீது வந்துறும் எனவெருக் கொண்டே
உண்ணி லாவிய பதைப்புறு காத
லுடன்தி ருக்கையால் தடுத்தும் நில்லாமை
தண்ணி லாமலர் வேணியி னாரைத்
தழுவிக் கொண்டனள் தன்னையே ஒப்பாள்."

அண்ணலார்-தன்னுடைய தலைவரும் கணவருமாகிய ஏகாம்பரேசுவரர். அண்ணலார்-'பெருமையைப் பெற்றவர்' எனலும் ஆம். அருள்-அருளிய அருள். வெள்ளத்தை நோக்கி-வெள்ளத்தைப் பார்த்து. அம்-அழகிய. கயல்-கயல் மீன்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். கண்ணி-கண்களைப் பெற்றவளாகிய காமாட்சி அம்மை. கண்: ஒருமை பன்மை மயக்கம். தம்-தம்முடைய; என்றது காமாட்சி அம்மை தன்னையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பெருமான்மேல்-பெருமானாகிய ஏகாம்பரேசுவரன் மேல். விண்-ஆகாயம். எலாம்-முழுவதையும்; இடைக்குறை. கொள-அடக்கிக் கொள்ளும் வண்ணம்; இடைக்குறை. வரும்-ஓடி வரும். பெரு-பெரிய. வெள்ளம்-கம்பையாற்றின் வெள்ளம். மீது-ஏகாம்பரேசுவரின் மேல். வந்து உறும்-வந்து சேரும். என-என்று; இடைக்குறை. வெருக் கொண்டு-அச்சத்தைக் கொண்டு. ஏ: அசை நிலை. உள்-தன்னுடைய திருவுள்ளத்தில். நிலாவிய-உண்டாகிய. பதைப்பு-பதை பதைப்பை. உறு-அடையும். காதலுடன்-விருப்பத்தோடு. திரு-தன்னுடைய அழகிய. க்: சந்தி. கையால்-இரண்டு கரங்களாலும்; ஒருமை பன்மை மயக்கம். தடுத்தும்-அந்த வெள்ளத்தைத் தடுத்துப் பார்த்தும். நில்லாமை-

அது நிற்காமையால். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. நிலா-பிறைச் சந்திரன். மலர்-மலரும்; விளங்கும். வேணியினாரை-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரரை. த்:சந்தி. தன்னையே-தன்னையே தனக்கு ஒப்பாள்-ஒப்பாக விளங்குபவளாகிய அந்தக் காமாட்சி அம்மை. தழுவிக் கொண்டனள்-ஏகாம்பரேசுவரரைத் தழுவிக் கொண்டாள்.

பிறகு உள்ள 64-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இமாசல அரசனுடைய புதல்வியும் சிறந்த பூங்கொடியைப் போன்றவளுமாகிய காமாட்சியம்மை தன்னுடைய திருவுள்ளத்தில் இரக்கத்தையும் உண்டான அச்சத்தையும் பெற்றதால் மாமரத்தின் அடியில் எழுந்தருளிய தேவர்களினுடைய தலைவராகிய ஏகாம்பரேசுவரரைத் தன்னுடைய கொங்கைகளாகிய மலைகளோடும் வளைகளை அணிந்திருக்கும் தன்னுடைய இரண்டு கரங்களாலும் நெருங்கிப் பிடித்து முறுகிய விருப்பத்தோடு இறுகுமாறு அவரைத் தழுவ வில்லைப் போன்ற ஒப்பற்ற அழகிய அவளுடைய நெற்றியைப் பெற்ற காமாட்சி அம்மையினுடைய அழகிய கொங்கைகளுக்கும் சிவந்த தளிர்களைப் போன்ற அவளுடைய இரண்டு கைகளுக்கும் மெத்தென்று இருக்குமாறு கொல்லுதலை உடையதும் தாருகாவனத்து முனிவர்கள் தம்மைக் கொல்லுமாறு விடுத்ததுமாகிய ஆனையை உரித்து அதன் தோலைத் தம்முடைய போர்வையாக அணிந்து கொண்ட தம்முடைய திருமேனியைக் குழைவை அடையும் வண்ணம் விரும்பிய கொள்கையை உடையவராகிய அந்த ஏகாம்பரேசுவரர் காட்டியருளினார்.' பாடல் வருமாறு:

" மலைக்கு லக்கொடி பரிவுறு பயந்தால்
மாவின் மேவிய தேவநா யகரை
முலைக்கு வட்டொடு வளைக்கை யால் நெருக்கி
முறுகு காதலால் இறுகிடத் தழுவச்

சிலைத்த னித்திரு நுதல்திரு முலைக்கும்
செந்த ளிர்க்கரங் களுக்கும் மெத்தெனவே
கொலைக்க ளிற்றுரி புனைந்ததம் மேனி
குழைந்து காட்டினார் விழைந்தகொள்
கையினார்.

மலை-இமாசல அரசனுடைய புதல்வியும்; திணை மயக்கம். க்:சந்தி. குல-சிறப்பைப் பெற்ற. க்:சந்தி. கொடி-பூங்கொடியைப் போன்றவளுமாகிய காமாட்சி அம்மை; உவம ஆகு பெயர். பரிவு-இரக்கத்தினாலும். ஊறு-உண்டான. பயத்தால்-அச்சத்தினாலும். மாவின்-ஒரு மாமரத்தின் அடியில்; ஆகு பெயர். மேவிய-எழுந்தருளிய. தேவ-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகரை-தலைவராகிய ஏகாம்பரேசுவரரை. முலை-தன்னுடைய கொங்கைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குவட்டொடு-மலைகளோடு; ஒருமை பன்மை மயக்கம். வளை-வளையல்களை அணிந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கையால்-தன்னுடைய இரண்டு கரங்களாலும்; ஒருமை பன்மை மயக்கம். நெருக்கி-நெருங்கிப் பிடித்து. முறுகு-முறுகிய; மிகுதியாக எழுந்த. காதலால்-விருப்பத்தோடு; உருபு மயக்கம். இறுகிட-இறுகுமாறு. த்:சந்தி. தழுவ-அவரைத் தழுவிக் கொள்ள. ச்:சந்தி. சிலை-வில்லைப் போன்ற. த்:சந்தி. தனி-ஒப்பற்ற. த்:சந்தி. திரு-அழகிய. நுதல்-நெற்றியைப் பெற்றவளாகிய காமாட்சியம்மையினுடைய. சிலைத் தனித்திருநுதல்: அன்மொழித் தொகை. திரு-அழகிய. முலைக்கும்-இரண்டு கொங்கைகளுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். செம்-சிவப்பாக இருக்கும். தளிர்-தளிர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கரங்களுக்கும்-இரண்டு கைகளுக்கும். மெத்தென-மெத்தென்று இருக்குமாறு. என: இடைக்குறை. ஏ:அசை நிலை. கொலை-கொல்லுதலை உடையதும்; ஆகு பெயர். க்:சந்தி. களிற்று-தாருகா வனத்து முனிவர்கள் தம்மைக் கொல்லுமாறு விடுத்

ததுமாகிய ஆண் யானையை. உரி-உரித்து அதன் தோலைத் தம்முடைய போர்வையாக; ஆகு பெயர். புனைந்த-அணிந்து கொண்ட. தம்-தம்முடைய. மேனி-திருமேனியை. குழைந்து -குழைவை அடைந்திருக்கும் வண்ணம். விழைந்த-அதனை விரும்பிய. கொள்கையினார்-எண்ணத்தை உடையவராகிய ஏகாம்பரேசுவரர். காட்டினார்-காட்டியருளினார்.

கொங்கைக்கு மலை உவமை: "தொழுமணிசேயர் நகையார் கொங்கைக் குன்றிடைச் சென்று."(நீத்தல் விண்ணப்பம், 131) என்று மாணிக்க வாசகரும், "தனக்குன்றம்." என்று சேரமான் பெருமாள் நாயனாரும், "கொங்கை மலையார் கலை போய்." என்று பரணதேவ நாயனாரும், "ஏரிள மென்முலைப் பொன்மலையாட்டி." என்று இளம் பெருமான் அடிகளும், "கொங்கைச் சிறுவரை." என்று பெரியாழ்வாரும், "பொன்னிலங்கு முலைக் குவட்டில்." என்று திருமங்கை யாழ்வாரும், "காரார் வரைக் கொங்கை.", "தென்னன் உயர் பொருப்பும் தெய்வ வட மலையும், என்னும் இவையே முலையா வடிவமைந்த அன்ன நடைய அணங்கே." என்று திருமங்கையாழ்வாரும், "அலை நீராடை மலை முலையாக." (சிலப்பதிகாரம், 5:1) என்று இளங்கோவடிகளும், "மாநில மடந்தை, அணி முலைத்துயல் வரும் ஆரம்போல." (சிறுபாணாற்றுப்படை, 1-2) என்று நல்லூர் நத்தத்தனாரும், "சோலை மலையோ டிரண்டாய். மேதினியாள் கொங்கைநிகர் வேங்கடமே." (திருவேங்கட மாலை), "கொங்கையே பரங்குன்றமும் கொடுங் குன்றும்." (திருவிளையாடற்புராணம், நகரப் படலம், 2) என்று வேறு புலவர்களும், "மலை மிசைத்தடத்துகு மழைக்கண் ஆலிபோல், முலை முகட்டுதிர்ந்தன நெடுங்கண்முத்தினம்." (மிதிலைக் காட்சிப்படலம், 48), "முலைக் கோட்டு விலங்கு." (குலமுறை கிளத்து படலம், 15), "குங்கும மலைக் குவிர் பனிக்குழுமி என்னத், துங்கமுலையிற்றுகளுறச் சிலர் துயின்றார்." (தைலமாட்டுப் படலம், 66), "கோடுகள் மிடைந்த

என்ன மிடைந்தன குவுவுக் கொங்கை.'' (குகப் படலம், 53), ''முலை தும்தித்துயர் மூக்கினை நீக்கிய முறைமை, மலை தூமித்தென.'' (சூர்ப்பணகைப் படலம், 46), ''கொங்கை யிணைக் குவட்டை நோக்கி.'' (அயோமுகிப் படலம், 31), ''குங்குமம் கொட்டியன்ன குவிமுலைக்குவட்டுக் கொக்க.'' (அரசியற் படலம், 2), ''கேழிலா வனமுலைக்கிரி சுமந்து.'' (நாடவிட்ட படலம், 68), ''மேருவரை மாமுலையள்.'' (பிலம் நீங்கு படலம், 73), ''பருவரை என முலை பலவும் நாற்றினர்.'' (காட்சிப் படலம், 57), ''வார்க்குன்றாம் முலை.'' (நிந்தனைப் படலம், 29), ''வணங்கு நுண்ணிடை மலை முலை.'' (படைத்தலைவர் வதைப் படலம், 61) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பெண்ணின் நெற்றிக்கு வில் உவமை: ''திருந்து சிவனும் சிலை நுதலாளும்.'' என்று திருமூலரும், ''வில்லேர் நுதலாள்.'', ''வில்லேர் நுதல் வேல் நெடுங்கண்ணியும்.'' என்று திருமங்கையாழ்வாரும், ''விற்கலை நுதலினாரும்.'' (மிதிலைக் காட்சிப் படலம், 6), ''சிலைக் கோட்டு நுதல்.'' (உலாவியற் படலம், 15), ''விற்டகை நுதலினார்.'' (வரைக்காட்சிப் படலம், 52), ''விற்றிரு நுதல்மாதே.'' (வனம்புகு படலம், 12), ''சிலையெனப் பொலி நுதல் விளக்கே.'', ''விற்கொள் வாணுதல் விளங்கிழையிளந் தளிர்க்கொழுந்தே.'' (சித்திர கூடப்படலம், 13, 17), ''வில் லொக்கும் நுதல்.'' (மாரீசன் வதைப்படலம், 74), ''சிலை நுதல்.. போனாள்.'' (கிட்கிந்தைப் படலம், 77), ''விற்கூடு நுதற்றிரு.'' (உருக்காட்டுப் படலம், 94) என்று கம்பரும் பாடியவற்றைக் காண்க.

பிறகு வரும் 65-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஏகாம்பரேசுவரர் தம்முடைய காதலைப் பெற்ற மனைவியாகிய காமாட்சி அம்மை தம்மை இரண்டு கரங்களா லும் தழுவி அணைக்க அந்த ஈசுவரர் தம்முடைய திருமேனி குழைவதைப் பார்த்து அசரங்களும் சரங்களும் ஆக உள்ள

வையும், தேவர்களோ முதலிய யோனிகள் யாவும் தங்களுடைய உயிர்களும், உடம்புகளும், உருக்கத்தை அடைந்து ஒன்று போல்பவை ஆகி, "அடியேங்களுடைய தலைவியாகிய காமாட்சியம்மைக்கு ஏகாம்பரேசுவரர் எக்காலத்திலும் மெலிவை உடையவரானார்" என்று கூறிப் பாராட்டுக்களை எடுத்துத் துதிக்க நறுமணம் கமழும் மலர்களை நிரம்பத் தேவலோகத்தில் வாழும் தேவர்கள் சொரிய கம்பாநதி அந்த ஈசுவரருக்கு முன்னால் பணிந்தது.' பாடல் வருமாறு:

"கம்பர் காதலி தழுவமெய் குழையக்
கண்டு நிற்பவும் சரிப்பவு மான
உம்ப ரேமுதல் யோனிகள் எல்லாம்
உயிரும் யாக்கையும் உருகிஒன் றாகி
'எம்பி ராட்டிக்கு மெல்லியர் ஆனார்
என்றும் ஏகம்பர்' என்றெடுத் தேத்த
வம்பு லாமலர் நிறையவிண் பொழியக்
கம்பை யாறுமுன் வணங்கிய தன்றே."

கம்பர்-ஏகாம்பரேசுவரர். காதலி-தம்முடைய காதலைப் பெற்ற மனைவியாகிய காமாட்சி அம்மை. தழுவ-தம்மைத் தன்னுடைய இரண்டு கரங்களாலும் தழுவி அணைக்க. மெய்-அந்த ஈசுவரர் தம்முடைய திருமேனி. குழைய-குழைவதை; வினையாலணையும் பெயர். க்:சந்தி. கண்டு-பார்த்து. நிற்பவும்-மரம், செடி, கொடி என்னும் அசரங்களும். சரிப்பவும்-நடப்பவையும் பறப்பவையும் ஊர்பவையும் ஆகிய மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழு, பூச்சி, நீர்வாழ் பிராணிகள் முதலியவைகளும். ஆன-ஆக உள்ளவையும். வினையாலணையும் பெயர். உம்பரே-தேவர்களே; ஒருமை பன்மை மயக்கம். முதல்-முதலிய. யோனிகள்-பிறந்த உயிர்கள். எல்லாம்-யாவும். உயிரும்-தங்களுடைய உயிர்களும்; ஒருமை பன்மை மயக்கம். யாக்கையும்-தங்களுடைய உடம்புகளும்; ஒருமை பன்மை மயக்கம். உருகி-உருக்கத்தை அடைந்து. ஒன்று ஆகி-ஒன்றுபோல்பவை ஆகி. ஒன்று:

ஒருமை பன்மை மயக்கம். எம்பிராட்டிக்கு-அடியேங்களுடைய தலைவியாகிய காமாட்சி அம்மைக்கு. ஏகம்பர்-ஏகாம்பரேசுவரர். என்றும்-எந்தக் காலத்திலும். மெல்லியர் ஆனார்-மெலிவை உடையவரானார். என்று-என. எடுத்து-பாராட்டுக்களை எடுத்து. ஏத்த-துதிக்க. வம்பு-நறுமணம். உலாம்-கமழும்; பரவும். மலர்-கற்பக மரத்தில் மலர்ந்த மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். நிறைய-தரை முழுதும் நிரம்புமாறு. விண்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; இட ஆகு பெயர். பொழிய-சொரிய. க்:சந்தி. கம்பை ஆறு-கம்பாநதி. முன்-அந்த ஈசுவரருக்கு முன்னால். வணங்கியது-பணிந்தது. அன்று, ஏ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

அடுத்து உள்ள 66-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'விபூதியாகிய தூய்மையான திருநீற்றில் அபிடேகம் செய்யப் பெற்றுப் பொங்கி வரும் கங்கையாறு தங்கும் தம்முடைய தலையில் சடாபாரத்தை அணிந்து கொண் - தம்முடைய திருச்செவிகளில் வெண்ணிறத்தைப் பெற்ற சங்கக் குழைகளும், திருமார்பில் உருத்திராக்க மாலையும் தொங்க தம்மிடம் கலந்துள்ள யோகத்தோடு சேர்ந்த எண்ணத்தினால் எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய ஏகாம்பரேசுவரர் ஆராயும் பெரிய தவத்தைக் காமாட்சியம்மை புரியும் அந்த வரமோ அகிலாண்டங்களையும் பெற்றுத்தந்த காமர் மருவிய காமாட்சியம்மை தன்னுடைய உண்மையான பயனை வழங்கியருளவே அதை ஏற்றுக்கொண்டு அந்த அம்மையினுடைய திருக்கரங்களில் அணிந்திருக்கும் வளைகளின் தழும்போடு அவளுடைய கொங்கைகளின் தழும்புகளையும் அந்த ஈசுவரர் புனைந்து கொண்டருளினார்.' பாடல் வருமாறு:

" பூதி யாகிய புனிதநீ றாடிப்
பொங்கு கங்கைதோய் முடிச்சடை புனைந்து
காதில் வெண்குழை கண்டிகை தாழக்
கலந்த யோகத்தின் மருவிய கருத்தால்

ஆதி தேவனா ராயுமா தவம்செய்
அவ்வரம் கொலோ அகிலம் ஈன்றளித்த
மாது மெய்ப்பயன் கொடுப்பவே கொண்டு
வளைத்த ழும்புடன் முலைச்சுவ டணிந்தார்.''

பூதியாகிய-விபூதியாகிய. புனித-தூய்மையாகிய. நீறு-திருநீற்றில். ஆடி-அபிடேகம் செய்யப் பெற்று. ப்:சந்தி. பொங்கு-பொங்கி வரும். கங்கை-கங்கையாறு. தோய்-தங்கும். முடி-தம்முடைய தலையில். ச்:சந்தி. சடை-சடா பாரத்தை. புனைந்து-அணிந்து கொண்டு. காதில்-தம்முடைய திருச் செவிகளில்; ஒருமை பன்மை மயக்கம். வெண்-வெள்ளை நிறத்தைப் பெற்ற. குழை-சங்கக் குழைகளும்; ஒருமை பன்மை மயக்கம். கண்டிகை-தம்முடைய திருமார்பில் உருத்திராக்க மாலையும். தாழ-தொங்க. க்:சந்தி. கலந்த-தம்முடம் கலந்துள்ள. யோகத்தின்-யோகத்தோடு. மருவிய-சேர்ந்த. கருத்தால்-எண்ணத்தினால். ஆதிதேவனார்-எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய ஏகாம்பரேசுவரர். ஆயும்-ஆராய்ச்சி புரிந்தருளும். மா-பெரிய. தவம்-தவத்தை. செய்-காமாட்சி அம்மை செய்யும். அவ்வரம் கொல்-அந்த வரமோ. ஓ: அசை நிலை. அகிலம்-அகிலாண்டங்களையும். ஈன்றளித்த-பெற்றுத் தந்த. மாது-காமர் மருவிய காமாட்சி அம்மை. மெய்-தன்னுடைய உண்மையான. ப்:சந்தி. பயன்-பயனை. கொடுப்பவே-வழங்கியருளவே. கொண்டு-அதை ஏற்றுக் கொண்டு. வளை-அந்த அம்மையினுடைய திருக்கரங்களில் அணிந்திருக்கும் வளைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தழும்புடன்-தழும்போடு. முலை-அவளுடைய கொங்கைகளின்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சுவடு-தழும்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். அணிந்தார்-அந்த ஈசுவரர் புனைந்து கொண்டருளினார்.

அடுத்து வரும் 67-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஒரு குற்றமும் இல்லாத அமுதத்தைப் போன்றவளாகிய காமாட்சி அம்மையினுடைய கொங்கைகளுக்குக் குழைவை அடைந்த தம்முடைய நல்ல மணவாளக் கோலத்தை விருப்பம் மருவிய அந்தக் காமாட்சி அம்மை மகிழ்ச்சியை அடையும் வண்ணம் அவளுக்குக் காண்பித்தருளி அவளுக்கு முன்னால் எழுந்தருளி நின்று கொண்டு, "நீ உனக்கு வேண்டிய வரங்களைப் பெற்றுக் கொள்வாயாக!" என்று ஏகாம்பரேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய வேதங்களை வெளிப்படுத்தும் காரணராகிய ஏகாம்பரேசுவரருடைய நறுமணம் கமழும் செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்தவையும், வெற்றிக் கழலைப் பூண்டவையும் ஆகிய திருவடிகளின் கீழ் குற்றம் அகன்ற பூசை நிறைவேறியது இல்லாமையை அவருக்குத் தெரிவிக்கும் பொருட்டு அவரை வணங்கி.' பாடல் வருமாறு:

"கோதி லாஅமு தனையவள் முலைக்குக்
குழைந்த தம்மண வாளநற் கோலம்
மாது வாழவே காட்டிமுன் நின்று
'வரங்கள் வேண்டுவ கொள்க' என் றருள
வேத காரண ராயஏ கம்பர்
விரைம லர்ச்செய்ய தாமரைக் கழற்கீழ்
ஏதம் நீங்கிய பூசனை முடிந்த
தின்மை தானறி விப்பதற் கிறைஞ்சி."

இந்தப் பாடல் குளகம். கோது-ஒரு குற்றமும். இலா-இல்லாத; இடைக்குறை. அமுது-அமுதத்தை. அனையவள்-போன்றவளாகிய காமாட்சி அம்மையினுடைய. முலைக்கு-இரண்டு கொங்கைகளுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குழைந்த-குழைவை அடைந்த. தம்-தம்முடைய. மணவாள நற்கோலம்-நல்ல மணவாளத் திருக்கோலத்தை. மாது-விருப்பம் மருவிய அந்தக் காமாட்சி அம்மை. வாழ-

மகிழ்ச்சியை அடையும் வண்ணம். ஏ: அசை நிலை. காட்டி-அவளுக்குக் காண்பித்தருளி. முன்-அவளுக்கு முன்னால். நின்று-எழுந்தருளி நின்றுகொண்டு. வரங்கள் வேண்டுவ-நீ உனக்கு வேண்டியவைகளாகிய வரங்களை. கொள்க-பெற்றுக் கொள்வாயாக. என்று-என. அருள-ஏகாம்பரேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. வேதகாரணராய-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் வெளிப்படுத்தும் காரணராகிய. வேத: ஒருமை பன்மை மயக்கம். ஏகம்பர்-ஏகாம்பரேசுவரர். விரை-நறுமணம் கமழும். மலர்-செந்தாமரை மலர்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செய்ய-சிவந்தவையும்; வினையாலணையும் பெயர். தாமரை-தாமரை மலர்களைப் போன்றவையும்: ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கழல்-வெற்றிக் கழலைப் பூண்டவையும் ஆகிய திருவடிகளின்; ஆகுபெயர். கீழ்-கீழே. ஏதம்-குற்றம். நீங்கிய-அகன்ற. பூசனை-தான் செய்யும் பூசை. முடிந்தது-நிறைவேறியது. இன்மை-இல்லாமையை. 'தான்' என்றது காமாட்சி அம்மையை. அறிவிப்பதற்கு-அந்த ஈசுவரருக்குத் தெரிவிக்கும் பொருட்டு. இறைஞ்சி-அந்த ஈசுவரரை வணங்கி.

பெண்மணிக்கு அமுதம் உவமை: ''அமுதமதாக அழகிய மேனி.'' என்று திருமூலரும், ''ஆரா அமுதம் அவயவம் பெற்றனைய, சீரார் தெரிவைப் பிராயத்தாள்.'' என்று சேரமான் பெருமாள் நாயனாரும், ''ஆவியே அமுதே என நினைந்துருகி அவரவர் பணைமுலை துணையா.'' என்று திருமங்கையாழ்வாரும், ''இன்னமிர் தன்ன சாயல்.'', ''அமிர்த மன்னாளை எய்தி.'' (சீவக சிந்தாமணி, 8, 268) என்று திருத்தக்க தேவரும், ''அன்னே தேனே ஆரமிர்தே என்றடி போற்ற.'' (மிதிலைக் காட்சிப் படலம், 30), ''அமிழ் தினைச்சுவை செய்தென்ன அழகினுக்கழகு செய்தார்.'', ''ஆரமிழ்தும் நாண...கன்னி அமிழ்தத்தை எதிர்

கண்டகடல் வண்ணன்.'' (கோலம்காண் படலம், 3,28,30), ''பெண்ணின் இன்னமுதன்னவள்.'' (மந்திரப் படலம், 50), ''அமிர்தினும் இனியாளே.'' (வனம்புகு படலம், 8), ''உவரி வாயன்றிப் பாற்கடல் உதவிய அமுதே.'' (சித்திர கூடப்படலம், 5), ''விண்ணருள வந்ததொரு மெல்லமுதம் என்ன.'', ''ஆயிடை அமுதின் வந்த அருந்ததிக் கற்பின் அஞ்சொல் வேயிடை தோளினாளும்.'' (சூர்ப்பணகைப் படலம். 35, 65), ''தாரையென் றமிழ்திற் றோன்றிய வேயிடைத் தோளினாள்.'', ''சனகன் பெற்ற அன்னத்தை அமிழ்தின் வந்த தேவியை.'' (வாலி வதைப் படலம், 13,78), ''ஆவித் துணையை அமுதிற் பிறந்தாளை.'' (இரணியன் வதைப்படலம், 113), ''மாதரார் வடிவு கொண்ட நஞ்சு தோய் அமுதம்.'' (மாயாசனகப் படலம், 10), ''சீதையென் றமிழ்தாற் செய்த நஞ்சினால்.'' (இராவணன் சோகப் படலம், 53) என்று கம்பரும் பாடியவற்றையும், ''அண்டர் கடைந்த அமிழ்தோ.'' (திக்குவிசயப் படலம், 156), ''என் றன் ஆருயிரே அமிழ்தே.'' (சம்புவன் வதைப்படலம், 8.), ''தெள்ளமிழ் தம்புரைசீதை.'' (அசுவமேத யாகப் படலம், 172) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

பிறகு வரும் 68-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'எல்லாத் தேவர்களுக்கும் தலைவராகிய ஏகாம்பரேசுவர ருக்கு எதிரில் நின்று கொண்டு சொல்லும் அளவினால் அச் சத்தை அடைந்து தன்னுடைய கைகளைத் தன்னுடைய தலையின் மேல் வைத்து அஞ்சலியாகக் கூப்பிப் பிறகு தரை யில் விழுந்து ஏகாம்பரேசுவரரை வணங்கி விட்டு, ''அடியேன் மேற்கொண்ட இன்றைத் தினத்தில் அடியேன் புரிந்த பூசை இனிமேலும் குறைபாடு நிரம்புமாறு இந்தப் பூசையை ஏற்றுக் கொண்டருள்வீராக.'' என்று வண்டுகள் மொய்க்கும் நீண்ட கூந்தலைக் கொண்ட இமாசல அரசனுடைய புதல்வி யாகிய காமாட்சி அம்மையினுடைய செந்தாமரை மலரைப்

போன்ற திருமுகத்தைப் பார்த்து அந்த மலர்ந்த ஒற்றைக் கண்ணைப் பெற்ற தம்முடைய நுதலின் மேல் திரிபுண்டர மாக அணிந்த திருநீற்றை உடைய அந்த ஏகாம்பரேசுவரர், "உன்னுடைய பூசை எக்காலத்திலும் நம்மிடத்தில் என்றைக் கும் முடிவை அடைவது இல்லை" என்று அந்த ஏகாம்பரேசு வரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.' பாடல் வருமாறு:

" அண்டர் நாயகர் எதிர்நின்று கூறும்
அளவி னால்அஞ்சி அஞ்சலி கூப்பிக்
'கொண்ட இற்றைஎன் பூசனை இன்னும்
குறைநி ரம்பிடக் கொள்க.' என்றருள
வண்டு வார்குழல் மலைமகள் கமல
வதனம் நோக்கிஅம் மலர்க்கண்நெற் றியின்மேல்
முண்ட நீற்றர், 'நின்பூசனை என்றும்
முடிவ தில்லைநம் பால்'என மொழிய."

இந்தப் பாடல் குளகம். அண்டர்-எல்லாத் தேவர்களுக் கும்; ஒருமை பன்மை மயக்கம். நாயகர்-தலைவராகிய ஏகாம் பரேசுவரர். எதிர்-காமாட்சி அம்மைக்கு எதிரில். நின்று-நின்று கொண்டு. கூறும்-திருவாய் மலர்ந்தருளிச் செய்யும். அளவினால் - அளவால். அஞ்சி-அச்சத்தை அடைந்து. அஞ்சலி-காமாட்சி அம்மை தன்னுடைய திருக்கரங்களைத் தன்னுடைய தலையின் மேல் வைத்து அஞ்சலியாக. கூப்பி-குவித்துக் கும்பிட்டு விட்டு. க்:சந்தி. கொண்ட-அடியேன் மேற் கொண்ட. இற்றை-இன்றைத் தினத்தில் என்-அடியேன் புரிந்த. பூசனை-பூசை. இன்னும்-இனியும். குறை-குறைபாடு. நிரம்பிட-நிறையுமாறு. க்:சந்தி. கொள்க-பெற்றுக் கொள்வாயாக. என்று-என. அருள-ஏகாம்பரேசு வரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. வண்டு-வண்டுகள் மொய்க்கும் மலர்களை அணிந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வார்-நீளமான. குழல்-கூந்தலைப் பெற்ற. மலை-இமாசல அரசனுடைய; திணை மயக்கம். மகள்_

புதல்வியாகிய காமாட்சி அம்மையினுடைய. கமல-செந்தா மரை மலரைப் போன்ற. வதனம்-முகத்தை. நோக்கி-அந்த ஏகாம்பரேசுவரர் பார்த்தருளி. அம்-அழகிய. மலர்-மலர்ந்த. க்:சந்தி. கண்-ஒற்றைக் கண்ணைப் பெற்ற. நெற்றியின் மேல்-தம்முடைய நுதலின் மீது. முண்ட-திரிபுண்டரமாகிய. நீற்றர்-விபூதியை அணிந்த அந்த ஈசுவரர். நின்-உன்னுடைய. பூசனை-பூசை. என்றும்-என்றைக்கும் நம்பால்-எம்மிடத் தில். முடிவது இல்லை-முடிந்து போவது அன்று. என-என்று; இடைக்குறை. மொழிய-அந்த ஈசுவரர் திருவாய் மலர்ந் தருளிச் செய்ய.

பிறகு வரும் 69-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'ஒப்பு ஒன்றும் இல்லாத இந்தக் காமாட்சி அம்மை புரிந்த பூசை என்றைக்கும் நிலைபெற்று விளங்குமாறு அடியேங்களுடைய தலைவனாகிய ஏகாம்பரேசுவரன் மகிழ்ச் சியை அடைந்து அந்தப் பூசையை ஏற்றுக் கொண்டருளி, "முடிவு இல்லாத இந்தச் சிவத்தலமாகிய காஞ்சீபுரத்தில் எல்லா வகையான முப்பத்திரண்டு தருமங்களையும் அடியேன் புரியுமாறு திருவருளைத் தேவரீர் வழங்க வேண்டும்; வேறாகப் புரியும் தொழில்கள் தேவரீருடைய திருவடிகளை மறந்து வாழ்தல் அகல இந்தக் காஞ்சீபுரத்தில் வாழும் மக்கள் தங்களுக்கு விருப்பமான செயல்களைப் புரிந் தாலும் அவர்கள் பெறும் பேறாகப் பெரிய தவத்தைச் செய் வதனால் உண்டாகும் பிரயோசனத்தை தேவரீர் வழங்கி யருள அந்தப் பயனை அந்த மக்கள் அடையவும் வேண்டும்" என்று பிறப்புக்களை ஒழிப்பவளாகிய காமாட்சி அம்மை திரு வாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

" மாறி லாதஇப் பூசனை என்றும்
மன்ன எம்பிரான் மகிழ்ந்து கொண்டருளி
'ஈறி லாதஇப் பதியினுள் எல்லா
அறமும் யான்செய அருள்செய வேண்டும்

வேறு செய்வினை திருவடிப் பிழைத்தல்
ஒழிய இங்குளார் வேண்டின செயினும்
பேறு மாதவப் பயன்கொடுத் தருளப்
பெறவும் வேண்டும்.'என்றனள்பிறப் பொழிப்பாள்."

மாறு-தனக்கு ஒப்பாக ஒன்றும். இலா-இல்லாத; இடைக் குறை. இப்பூசனை-காமாட்சி அம்மை புரிந்த இந்தப் பூசை. என்றும்-என்றைக்கும். மன்ன-நிலைபெற்று விளங்குமாறு. எம் -அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண் டர்களையும் சேர்த்துக் கூறியது. பிரான்-தலைவனாகிய ஏகாம்பரேசுவரன். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. கொண்டருளி-அந்தப் பூசையை ஏற்றுக் கொண்டருளி. ஈறு-முடிவு. இலாத-இல்லாத; இடைக்குறை. இப்பதியினுள்- இந்தச் சிவத்தலமாகிய காஞ்சீபுரத்தில். எல்லா-முப்பத் திரண்டு அறங்களாகிய எல்லாம். அவை இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. அறமும்-தருமங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். யான்- அடியேன். செய-புரியுமாறு; இடைக்குறை. அருள்-தேவரீர் திருவருளை. செய வேண்டும்-புரிய வேண்டும். செய; இடைக்குறை. வேறு-வேறு வேறாக. செய்-தாங்கள் புரியும். வினை-தொழில்களை; ஒருமை பன்மை மயக்கம். திருவடி-புரிந் தாலும் தேவரீருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக் கம். ப்:சந்தி. பிழைத்தல்-மறந்து வாழ்தல். ஒழிய-அகலுமாறு. இங்கு-இந்தக் காஞ்சீபுரத்தில். உளார்-வாழும் மக்கள்; இடைக்குறை. வேண்டின-தங்களுக்கு விருப்பமாகிய செயல் களை. செயினும்-புரிந்தாலும்; இடைக்குறை. பேறு-அந்த மக்கள் அடையும் பாக்கியமாக. மா-பெரிய. தவ-தவத்தைச் செய்வதனால் உண்டாகும். ப்:சந்தி. பயன்-பிரயோ சனத்தை. கொடுத்தருள-தேவரீர் வழங்கியருள. ப்:சந்தி. பெறவும் வேண்டும-அந்தப் பயனை அந்த மக்கள் அடையவும் வேண்டும். பிறப்பு-இந்த மானிடப் பிறவியை. ஒழிப்பாள் - போக்கியருளுபவளாகிய காமாட்சியம்மை.

என்றனள்-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தாள்.

பிறகு வரும் 70-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இடப வாகனத்தின் மேல் எழுந்தருளுபவராகிய ஏகாம்பரேசுவரர் அந்த இமாசல அரசனுடைய புதல்வியாகிய காமாட்சி அம்மை தம்மை வேண்டிக் கொள்ள அந்த அம்மை தான் விழைந்த பூசையைப் புரிந்து கொண்டு அந்தக் காஞ்சீபுரத்தில் அமர்ந்து கொண்டே இடைவிடாத முப்பத்திரண்டு தருமங்களையும் வளர்ப்பதற்கு ஏற்றவையாக விளங்கும் விதைகளாக இந்த உலகத்திலும் பரலோகத்திலும் புரியுமாறு இரண்டு படிகள் நெற்களை அந்தக் காமாட்சியம்மைக்கு வழங்கியருளி இழிந்த குலங்களில் பிறந்தவர்களாகியும் உயர்ந்த குலங்களில் பிறந்தவர்களாகியும் காஞ்சீபுரத்தில் வாழும் மக்கள் தாங்கள் புரியும் தீய வினைகளாகிய பாவங்களும் தடை உண்டாகாமல் உண்மையான சிவகதியாகிய வழியைப் பெறுவதற்கு வேண்டியவையாகும் தவங்களாக இருக்கவும் ஏகாம்பரேசுவரர் மகிழ்ச்சியை அடைந்து தன்னுடைய திருவருளை வழங்கினார்.' பாடல் வருமாறு:

"விடையின் மேலவர் மலைமகள் வேண்ட
விரும்பு பூசனை மேவிவீற் றிருந்தே
இடையறா அறம்வ ளர்க்கும்வித் தாக
இகப ரத்திரு நாழிநெல் அளித்துக்
கடைய ராகியும் உயர்ந்தவ ராயும்
காஞ்சி வாழ்பவர் தாம்செய்தீ வினையும்
தடைப டாதுமெய்ந் நெறியடை வதற்காம்
தவங்க ளாகவும் உவந்தருள் செய்தார்."

விடையின்-இடப வாகனத்தின். மேலவர்-மேல் எழுந்தருளுபவராகிய ஏகாம்பரேசுவரர். மலை-அந்த இமாசல அரசனுடைய; திணை மயக்கம். மகள்-புதல்வியாகிய காமாட்சியம்மை. வேண்ட-தம்மை வேண்டிக் கொள்ள. விரும்பு-அந்த அம்மை தான் விழைந்த. பூசனை-பூசையை. மேவி-புரிந்து கொண்டு. வீற்றிருந்தே-அந்தக் காஞ்சீபுரத்தில் அமர்ந்து

கொண்டே. இடைஅறா-இடை விடாத. அறம்-முப்பத்திரண்டு தருமங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். வளர்க்கும்-வளர்ப்பதற்கு ஏற்றவையாக விளங்கும். வித்து ஆக-விதைகளாக; ஒருமை பன்மை மயக்கம். இக-இந்த உலகத்திலும். பரத்து-பரலோகத்திலும் புரியுமாறு. இரு-இரண்டு. நாழி-படிகள்; ஒருமை பன்மை மயக்கம். நெல்-நெற்களை; ஒருமை பன்மை மயக்கம். அளித்து-அந்தக் காமாட்சியம்மைக்கு வழங்கியருளி. க்:சந்தி. கடையராகியும்-இழிந்த குலங்களிற் பிறந்தவர்களாகியும்; ஒருமை பன்மை மயக்கம். அவர்கள் பள்ளர், பள்ளிகள், பறையர், பறைச்சிகள், சக்கிலியர், சக்கிலிச்சிகள் என்பவர்கள். உயர்ந்தவராயும்-உயர்ந்த குலங்களிற் பிறந்தவர்களாகியும்; ஒருமை பன்மை மயக்கம். அவர்கள் அந்தணர்கள், க்ஷத்திரியர்கள், வைசியர்கள், வேளாளர்கள் என்பவர்கள். காஞ்சி-காஞ்சீபுரத்தில். வாழ்பவர்-வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். தாம்-தாங்கள். செய்-புரியும். தீவினையும்-தீய வினைகளாகிய பாவங்களும்; ஒருமை பன்மை மயக்கம். தடை படாது-தடை உண்டாகாமல். மெய்-உண்மையாகிய. ந்:சந்தி. நெறி-சிவ கதியாகிய வழியை. அடைவதற்கு-பெறுவதற்கு. ஆம்-வேண்டியவை ஆகும். தலங்கள் ஆகவும்-தலங்களாக அமையவும். உவந்து-ஏகாம்பரேசுவரர் மகிழ்ச்சியை அடைந்து. அருள்-தம்முடைய திருவருளை. செய்தார்-வழங்கினார்.

அடுத்து வரும் 71-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கணக்கிடுவதற்கு அருமையாக இருக்கும் பெரிய வரங்களை ஏகாம்பரேசுவரருக்கு முன்னால் தான் பெற்றுக்கொண்டு அந்தக் காஞ்சீபுரத்தில் அடியேங்களுடைய தலைவியாகிய காமாட்சி அம்மை தம்முடைய தலைவனாகிய ஏகாம்பரேசுவரன் மகிழ்ச்சியை அடைந்து தன்னுடைய திருவருளை வழங்க இந்த மண்ணுலகத்தின் மீது தன்னை வழிபாட்டைப் புரிந்தருளி இல்லற வாழ்க்கையை பெருகுமாறு செய்யும் கருணையால் இந்த உலகத்தில் பிறந்திருக்கும்

நிலை பெற்று விளங்கும் உயிர்கள் யாவும் பலவாகப் பெருகும் வண்ணம் விரும்பும் காதலோடு நெடுங்காலம் வாழும் வாழ்க்கையைப் புண்ணியமாகிய அழகிய காமக்கோட்டத்தில் விளங்குமாறு முப்பதோடு இரண்டு தருமங்களையும் அந்தக் காமாட்சி அம்மை பாதுகாத்து வருபவள் ஆனாள்.'

பாடல் வருமாறு:

"எண்ண ரும்பெரு வரங்கள்முன் பெற்றங்
கெம்பி ராட்டிதம் பிரான்மகிழ்ந் தருள
மண்ணின் மேல்வழி பாடுசெய் தருளி
மனைய றம்பெருக் குங்கரு ணையினால்
நண்ணும் மன்னுயிர் யாவையும் பல்க
நாடு காதலின் நீடிய வாழ்க்கைப்
புண்ணி யத்திருக் காமக்கோட் டத்துப்
பொலிய முப்பதோ டிரண்டறம் புரக்கும்."

எண்-கணக்கிடுவதற்கு. அரும்-அருமையாக இருக்கும். பெரு-பெரிய. வரங்கள்-வரங்களை. முன்-அந்த ஏகாம்பரேசுவரருக்கு முன்னால். பெற்று-தான் பெற்றுக் கொண்டு. அங்கு -அந்தக் காஞ்சீபுரத்தில். எம்-அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பிராட்டி-தலைவியாகிய காமாட்சி அம்மை. தம்-தம்முடைய; இதுவும் மேலே சொன்னவாறு கொள்க. பிரான் -தலைவனாகிய ஏகாம்பரேசுவரன். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. அருள-தன்னுடைய திருவருளை வழங்க. மண்ணின்மேல்-இந்த மண்ணுலகத்தின் மீது. வழிபாடு-தன்னை வழிபாட்டை. செய்தருளி-புரிந்தருளி. மனை அறம்-இல்லற வாழ்க்கையை. பெருக்கும்-பெருகுமாறு செய்யும். கருணையினால்-கருணையால். நண்ணும்-இந்தப் பூ மண்டலத்தில் பிறந்திருக்கும். மன்-நிலை பெற்று விளங்கும். உயிர்-உயிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழுக்கள், பூச்சிகள், நீர் வாழ் பிராணிகள் முதலியவை. யாவையும்-யாவும். பல்க-பலவாகப் பெருகும்

-கும் வண்ணம். நாடு-விரும்பும். காதலின்-விருப்பத்தோடு. நீடிய-நெடுங்காலம் வாழும். வாழ்க்கை-வாழ்க்கையை. ப்:சந்தி. புண்ணிய-புண்ணியமாகிய. த்:சந்தி. திரு-அழகிய. க்:சந்தி. காமக் கோட்டத்து-காமக் கோட்டமாகிய காமாட்சி அம்மையினுடைய திருக்கோயில் விளங்கும் காஞ்சீபுரத்தில்; இட ஆகுபெயர். ப்:சந்தி. பொலிய-விளங்குமாறு. முப்பதோடு -முப்பதுடன். இரண்டு அறம்-இரண்டு தருமங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். புரக்கும்-அந்தக் காமாட்சி அம்மை பாதுகாத்து வருபவள் ஆனாள்.

பிறகு வரும் 72-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கணக்கு இல்லாத நெடுங்காலமாகத் தவத்தைப் புரிந்த தருமங்களைப் பாதுகாக்கும் பெருமையைப் பெற்ற செல்வியாகிய காமாட்சி அம்மை இந்த உலகமாகும் அழகிய திரு மாளிகைக்கு ஏற்றி வைக்கும் திருவிளக்கு இந்தப் பூமண்டலத்தில் வந்து சேரும் பிரயோசனத்தைத் தெரிவிக்கும் பொருட்டு ஓங்கி மலரும் அன்று மலர்ந்த மலர்கள் மூன்றோடு ஒன்றும் அமையுமாறு வருடத்துக்கு ஒரு தடவை புரியும் நெடுங்காலமாக உள்ள பழமையினால் நிரம்பியுள்ள பெரிய உலகம் மலர்ந்த பெருமையைப் பெற்று விளங்கும் அழகிய காமக் கோட்டமாகிய காமாட்சியம்மையின் திருக்கோயில் விளங்கும் காஞ்சீபுரத்தில் அமைத்து வைத்த நல்ல முப்பத்திரண்டு தருமங்கள் நிலைபெற்று விளங்குமாறே அந்தக் காஞ்சீபுரம் நிலைபெற்று விளங்கும்.' பாடல் வருமாறு:

'' அலகில் நீள்தவத் தறப்பெரும் செல்வி
அண்ட மாம்திரு மனைக்கிடும் தீபம்
உலகில் வந்துறு பயனறி விக்க
ஓங்கும் நாண்மலர் மூன்றுடன் ஒன்று
நிலவ ஆண்டினுக் கொருமுறை செய்யும்
நீடு தொன்மையால் நிறைந்தபே ருலகம்
மலர் பெரும்திருக் காமக்கோட் டத்து
வைத்த நல்லறம் மன்னவே மன்னும்.''

அலகு-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. நீள்-நெடுங்காலமாக. தவத்து-தவத்தைப் புரிந்த. அறப்பெரும் செல்வி-தருமங்களைப் பாதுகாக்கும் பெருமையைப் பெற்ற செல்வியாகிய காமாட்சி அம்மை. அற: ஒருமை பன்மை மயக்கம். அண்டமாம்-இந்தப் பூமண்டலம் ஆகும். திருமனைக்கு-திருமாளிகைக்கு. இடும்-ஏற்றி வைக்கும். தீபம்-திருவிளக்கு. உலகில்-இந்தப் பூமண்டலத்தில். வந்து உறு-பிறந்து வந்து சேரும். பயன்-பிரயோசனத்தை. அறிவிக்க-தெரிவிக்கும் பொருட்டு. ஓங்கும்-ஓங்கி மலரும். நாள்-அன்று மலர்ந்த. மலர்-மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மூன்றுடன் ஒன்று-மூன்றோடு ஒன்றாகிய நான்கும். நிலவ-அமையுமாறு. ஆண்டினுக்கு-ஒரு வருடத்துக்கு. ஒருமுறை-ஒரு தடவை. செய்யும்-புரியும். நீடு-நெடுங்காலமாக உள்ள. தொன்மையால்-பழமையால். நிறைந்த-மக்கள் நிரம்பியுள்ள. பேருலகம்-இந்தப் பெரிய பூமண்டலம். மலர்-மலர்ந்த. பெரும்-பெருமையைப் பெற்று விளங்கும். திரு-அழகிய. க்:சந்தி. காமக்கோட்டத்து-காமக்கோட்டமாகிய காமாட்சியம்மையின் திருக்கோயில் விளங்கும்காஞ்சீபுரத்தில். வைத்த-அமைத்து வைத்த. நல்-நல்ல. அறம்-முப்பத்திரண்டு தருமங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. மன்னவே-நிலை பெற்று விளங்குமாறே. மன்னும்-அந்தக் காஞ்சீபுரம் நிலைபெற்றுத் திகழும்.

அடுத்து வரும் 73-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'தீங்குகளாகிய பாவங்களைப் போக்கும் பல புண்ணிய தீர்த்தங்களைப் பாதுகாக்கும் சிறப்பான செய்கையினால் அழகிய காமக்கோட்டமாகிய காமாட்சி அம்மையினுடைய திருக்கோயிலுக்குப் பக்கத்தில் அந்தர் உலகத்தில் வாழும் தேவர்களும், மத்திய லோகமாகிய இப் பூமண்டலத்தில் வாழும் அனைத்து மக்களும், பாதல லோகத்தில் வாழும்

நாகர்களும் புகழ்ந்து பாராட்டும் பசுமையான நீர் நிரம்பிய ஒரு கேணி வளைந்த தெளிவைப் பெற்ற அலைகளை வீசும் சமுத்திரமாகிய மேகலை தன்னுடைய இடுப்பைச் சுற்றியிருக்கும் பூமகளுக்கு அடைந்த படியாகி ஓங்கியிருக்கும் தன்னுடைய வடிவத்தைப் பெற்றதாக விளங்கி என்றைக்கும் இருப்பதாகிய ஒரு தீர்த்தம் உலகாணி என்னும் பெயர் பெற்று அந்தக் காஞ்சீபுரத்தில் இருப்பதாக விளங்கும்.* பாடல் வருமாறு:

"தீங்கு தீர்க்கும்நல் தீர்த்தங்கள் போற்றும்
சிறப்பி னால்திருக் காமக்கோட் டத்தின்
பாங்கு மூன்றுல கத்தினுள் ளோரும்
பரவு தீர்த்தமாம் பைம்புனற் கேணி
வாங்கு தெண்டிரை வேலை மேகலைசூழ்
வைய கந்தனக் கெய்திய படியாய்
ஓங்கு தன்வடி வாய்நிகழ்ந் தென்றும்
உள்ள தொன்றுல காணிஎன் றுளதாம்."

தீங்கு-தீங்குகளாகிய பாவங்களை; ஒருமை பன்மை மயக்கம். தீர்க்கும்-போக்கும். நல்-நல்ல. தீர்த்தங்கள்-புனிதமாகிய நீர் நிலைகளை. போற்றும்-பாதுகாக்கும். சிறப்பினால்-சிறப்பான செய்கையால். திரு-அழகிய. க்:சந்தி. காமக்கோட்டத்தின்-காமக்கோட்டமாகிய காமாட்சி அம்மையினுடைய திருக்கோயிலுக்கு. பாங்கு-பக்கத்தில். மூன்று உலகத்தின்-அந்தர் மத்திய பாதலம் என்னும் மூன்று உலகங்களில். உலகத்தின்: ஒருமை பன்மை மயக்கம். உள்ளோரும்-வாழ்பவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அந்தர் உலகமாகிய தேவலோகத்தில் வாழ்பவர்கள் தேவர்கள். மத்திய லோகமாகிய இந்தப் பூமண்டலத்தில் வாழ்பவர்கள் ஆடவர்களும் பெண்மணிகளும். பாதல லோகத்தில் வாழ்பவர்கள் நாகராஜாக்கள். பரவு-புகழ்ந்து பாராட்டும். தீர்த்தம் ஆம்-தீர்த்தம் ஆக விளங்கும். பைம்-பசுமையாகிய. புனல்-நீர் நிரம்பிய. கேணி-ஒரு கேணி. வாங்கு-வளைந்த. தெண்-தெளி

வைப் பெற்ற. திரை-அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். வேலை-சமுத்திரமாகிய. மேகலை சூழ்-மேகலை தன்னுடைய இடுப்பைச் சுற்றியுள்ள. வையகந் தனக்கு-பூமடந்தைக்கு; திணை மயக்கம். தன்: அசை நிலை. எய்திய-அடைந்த. படிடாய்-படியாகி. ஓங்கு-ஓங்கி விளங்கும். தன்-தன்னுடைய. வடிவாய்-வடிவைப் பெற்றதாகி. நிகழ்ந்து-நடந்து. என்றும்-என்றைக்கும். உள்ளது-இருப்பதாகிய. ஒன்று-ஒரு தீர்த்தம். உலகாணி என்று-உலகாணி என்னும் பெயரைப் பெற்று. உளதாம்-அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கிறதாக விளங்கும். உளது: இடைக்குறை.

பிறகு உள்ள 74-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'முடிவு இல்லாமல் நல்ல முப்பத்திரண்டு தருமங்களைச் செய்து பாதுகாக்கும் தாயாகிய காமாட்சியம்மை எழுந்தருளியிருக்கும்அழகிய காமக்கோட்டமாகிய காமாட்சியம்மையினுடைய திருக்கோயிலுக்கு வந்து சந்திரனும் சூரியனும் அந்தத் திருக்கோயிலுக்கு மேலே செல்லாமல் அதற்குப் பக்கத்தில் செல்லுவதால் நல்லவையாகிய திசைகள் மயக்கத்தை உண்டாக்கி எந்தப் பக்கத்திலும் நிழல் மாறியிருப்பதனுடைய திசை மயக்கம் இந்தப் பெரிய பூமண்டலத்தில் வாழும் மக்கள் எல்லாரும் பார்க்குமாறு என்றைக்கும் இருப்பதாகிய ஒரு தீர்த்தம் இன்றைக்கும் அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கிறது.' பாடல் வருமாறு:

" அந்தம் இன்றிநல் அறம்புரிந் தளிக்கும்
அன்னை தன்திருக் காமக் கோட்டத்தில்
வந்து சந்திர சூரியர் மீது
வழிக்கொ ளாததன் மருங்குபோ தலினால்
சந்த மாதிரம் மயங்கிஎம் மருங்கும்
சாயை மாறிய தன்றிசை மயக்கம்
இந்த மாநிலத் தவரெலாம் காண
என்றும் உள்ளதொன் றின்றும்அங் குளதால்."

அந்தம்-முடிவு. இன்றி-இல்லாமல். நல்-நல்ல. அறம்—

முப்பத்திரண்டு தருமங்களை; ஒருமை பன்மை மயக்கம். புரிந்து-செய்தருளி. அளிக்கும்-அவற்றைப் பாதுகாத்து வரும். அன்னைதன்-தாயாகிய காமாட்சியம்மையினுடைய. தன்: அசைநிலை. திரு-அழகிய. க்: சந்தி. காமக்கோட்டத்தில்-காமக்கோட்டமாகிய காமாட்சி அம்மை எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு; உருபு மயக்கம். வந்து-வந்து சேர்ந்து. சந்திர சூரியர்-சந்திரனும் சூரியனும். மீது-அந்தத் திருக்கோயிலுக்கு மேல். வழிக்கொளாது-செல்லாமல். கொளாது: இடைக்குறை. அதன்-அந்தக் கோயிலுக்கு மருங்கு-பக்கத்தில் போதலினால்-செல்லுவதால். சந்தம்-அழகைப் பெற்ற. மாதிரம்-திசைகள்; ஒருமை பன்மை மயக்கம். மயங்கி-மயக்கத்தைத் தந்து. எம்மருங்கும்-எந்தப் பக்கத்திலும். சாயை-அந்த இரண்டு கிரகங்களின் நிழல். மாறிய தன்-மாறிப் போனதாகிய. திசை மயக்கம்-திசை மயங்கும் நிலை. இந்த மா-இந்தப் பெரிய நிலத்தவர்-பூமண்டலத்தில் வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்-எல்லாரும்; இடைக்குறை. காண-பார்க்குமாறு. என்றும்-என்றைக்கும். உள்ளது-இருப்பதாகிய. ஒன்று-ஒரு தீர்த்தம். இன்றும்-இன்றைக்கும். அங்கு-அந்தக் காஞ்சீபுரத்தில். உளது-இருக்கிறது; இடைக்குறை. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 75-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'கன்னியாகிய துர்க்கையினுடைய நல்ல நீண்டகாலமாக உள்ள பாதுகாப்பைப் பெற்ற எல்லையில் காஞ்சியாறு ஆகும் அழகிய ஆற்றினுடைய கரையின் பக்கத்தில் தம்முடைய தலையில் பிறைச்சந்திரனை அணிந்தவராகிய ஏகாம்பரேசுவரர் விழைந்து எழுந்தருளியிருக்கும் அழகிய பெருமையைப் பெற்ற புகழைக் கொண்ட ஓர் இருப்பிடத்தில் விளங்கி நிலை பெற்று விளங்கும் வெம்மையைப் பெற்ற சூரியன் வானத்தின் மேல் உதயமாகும் சமயத்திலும் மீண்டும் மேற்குக் கடலிடத்தில் விழுந்து அத்தமிக்கும் சமயத்திலும் தங்களுடைய நிழல் பிரியாமல் உள்ள வளப்பத்தைக் கொண்ட காஞ்சித்தானம்

என்னும் இடம் சார்ந்துள்ள மேம்பாட்டையும் பெற்றது அந்தக் காஞ்சீபுரம்.' பாடல் வருமாறு:

" கன்னி நன்னெடும் காப்புடை வரைப்பில்
காஞ்சி யாம்திரு நதிக்கரை மருங்கு
சென்னி யிற்பிறை அணிந்தவர் விரும்பும்
திருப்பெ ரும்பெயர் இருக்கையில் திகழ்ந்து
மன்னு வெங்கதிர் மீதெழும் போதும்
மறித்து மேற்கடல் தலைவிழும் போதும்
தன்னி ழற்பிரி யாதவண் காஞ்சித்
தானம் மேவிய மேன்மையும் உடைத்தால்."

கன்னி-கன்னியாகிய துர்க்கையினுடைய. நல்-நல்ல. நெடும்-நீண்ட காலமாக இருக்கும். காப்பு உடை-பாதுகாப்பைப் பெற்ற. வரைப்பில்-எல்லையில். காஞ்சி ஆம்-காஞ்சி ஆறு ஆகும்; இது கம்பையாறு போலும். திரு-அழகிய. நதி-ஆற்றினுடைய. க்:சந்தி. கரை-கரைக்கு. மருங்கு-பக்கத்தில். சென்னியில்-தம்முடைய தலையில். பிறை-பிறைச் சந்திரனை. அணிந்தவர்-புனைந்து கொண்டவராகிய ஏகாம்பரேசுவரர். விரும்பும்-விழைந்து எழுந்தருளியிருக்கும். திரு-அழகைப் பெற்ற. ப்:சந்தி. பெரும்-பெருமையைக் கொண்ட. பெயர்-புகழை உடைய. இருக்கையில்-இருப்பிடத்தில். திகழ்ந்து-விளங்கி. மன்னு-நிலைபெற்று விளங்கும். வெம்-வெம்மையான கிரணங்களை வீசும். கதிர்-சூரியன். மீது-வானத்தின்மேல். எழும் போதும்-உதயமாகும் சமயத்திலும். மறித்து-மீண்டும். மேற் கடல் தலை-மேற்குக் கடலாகிய இடத்தில். விழும்-அத்தமனம் ஆகும். போதும்-சமயத்திலும். தன்-அந்தச் சந்திரன் சூரியன் என்ற இரண்டு கிரகங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிழல்-சாயை. பிரியாத-பிரிந்து இராத. வண்-நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். காஞ்சித்தானம்-காஞ்சித்தானம்

என்னும் சிவத்தலம். மேவிய-சார்ந்துள்ள. மேன்மையும்-மேம்பாட்டையும். உடைத்து-அந்தக் காஞ்சீபுரம் பெற்று விளங்குவது. ஆல்: ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 76-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'வேத மந்திரங்களால் தோத்திரம் புரிந்து செய்வதற்கு அருமையாக இருக்கும் தவத்தைச் செய்து மாறுபாடு இல்லாத நேமத்தில் தலைசிறந்து நின்று முறைப்படி அமையும் பூசையை ஏகாம்பரேசுவரருக்குப் புரியும் பொருட்டு முனிவர்கள், தேவலோகத்தில் வாழும் தேவர்கள், முதலிய உயிர்கள் யாவும் நிரம்பியிருக்கும் பக்தியோடு அந்த ஈசுவரருக்கு அருச்சனை புரிய அவர்களிடம் நெடுங்காலமாக உள்ள ஆசைப்பட்ட பொருள்களை அவரவர்களுக்கு வழங்கியருளி இறைவராகிய ஏகாம்பரேசுவரர் மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளியுள்ள சிவத்தலங்கள் கணக்கைக் கடந்தவை அந்த அழகிய காஞ்சீபுரமாகிய நகரத்தினுடைய எல்லைக்குள் உள்ளன.' பாடல் வருமாறு:

" மறை களால்துதித் தருந்தவம் புரிந்து
மாறி லாநிய மம்தலை நின்று
முறைமை யால்வரும் பூசனை செய்ய
முனிவர் வானவர் முதல்உயிர் எல்லாம்
நிறையும் அன்பினால் அர்ச்சனை செய்ய
நீடு காமங்கள் அவரவர்க் கருளி
இறைவர் தாம்மகிழ்ந் தருளிய பதிகள்
எண்இ றந்தஅத் திருநகர் எல்லை.''

மறைகளால்-வேத மந்திரங்களால். துதித்து-தோத்திரம் புரிந்து. அரும்-செய்வதற்கு அருமையாக இருக்கும். தவம்-தவத்தை. புரிந்து-செய்து. மாறு-மாறுபாடு. இலா-இல்லாத; இடைக்குறை. நியமம்—நேமத்தில். தலை நின்று-தலைசிறந்து நின்று. முறைமையால்-முறையோடு; உருபு மயக்கம். வரும்-அமையும். பூசனை-பூசையை. செய்ய-

ஏகாம்பரேசுவரருக்குப் புரியும் பொருட்டு. முனிவர்-முனிவர் களும்; ஒருமை பன்மை மயக்கம். வானவர்-தேவலோகத்தில் வாழும் தேவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். முதல்-முதலாகிய. உயிர்-உயிர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-யாவும். நிறையும்-நிரம்பியிருக்கும். அன்பினால்-பக்தியோடு; உருபு மயக்கம். அர்ச்சனை-அந்த ஈசுவரருக்கு அருச்சனையை. செய்ய-புரிய. நீடு-தங்களிடம் நெடுங்கால மாக இருந்து வரும். காமங்கள்-ஆசைப்பட்ட பொருள்களை; என்றது செல்வம், நல்ல திருமாளிகை, வயல்கள், நல்ல மனைவி, நல்ல கணவன், நல்ல பேரர் பேத்திகள், கன்னி கைக்கு ஏற்ற கணவன் முதலியவற்றை. அவரவர்க்கு-அவர்கள் அவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். இறைவர்-இறைவராகிய ஏகாம்பரேசுவரர். தாம்: அசை நிலை. மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. அருளிய-வழங்கியருளிய. பதிகள்-சிவத்தலங்கள். எண்-கணக்கை. இறந்த-கடந்தவை. அத்திரு-அந்த அழகிய. நகர்-காஞ்சீபுரமாகிய பெரிய தலத்தினுடைய. எல்லை-எல்லைக்குள் உள்ளன.

அந்தத் தலங்களாவன: திருநெறிக்காரைக் காடு, புண்ணிய கோடீசம், வலம்புரி விநாயகர் ஆலயம், சிவாத்தானம், மணிகண்டீச்சரம், சாந்தாசயம், சத்த தானம், பராசரேசம், ஆதிபிதேசம், முத்தீசம், பணாதரீச்சரம், காரோணம், சித்தீசம், அரிசாபபயம் தீர்த்த தானம், இட்டசித்தீச்சரம், சச்சபேசம், சகோதர தீர்த்தத் தானம், சுரகரீசம், தான் றோன்றிச் சரம், அமரீசம், திருமேற்றளி, அனேகதங்காவதம், கயிலாயம், வீரராகவீசம், பல பத்திரராமீசம், வன்மீக நாதர் ஆலயம், வயிர வீசம், விடுவச் சேனீசம், தக்கீசம், முப்புராரி கோட்டம், இரணியீசம், நாரசிங்கீசம், அந்தகேசம், வாணீசம், திருவோண காந்தன் தளி, திரு ஏகம்பம், குமர கோட்டம், காமக் கோட்டம் முதலியவை.

பிறகு வரும் 77-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நிலை பெற்று விளங்குகின்ற அந்த அழகிய நகரமாகிய காஞ்சீபுரத்தினுடைய எல்லைக்குள் இந்த மண்ணுலகத்தில் மிகுதியாக உள்ள ஒரு நன்மையினால் அங்கே வரும் யானையைப் புதரில் வாழும் முயல் முன்னால் துரத்த அவ்வாறு அடைந்த தொலைதல் இல்லாத ஊக்கத்தினால் தான் வாழும் நிலத்திலிருந்து போக்குதலைப் புரியும் தானம் அல்லாமலும் வில்லும் எழுத்தாணியும் எந்த வகையான நிலங்களிலும் பார்ப்பதற்கு அருமையாக இருக்கும் இறவாத் தானம் என்ற இந்தச் சிவத்தலங்கள் இயல்போடு அந்தக் காஞ்சீபுரம் பெற்று விளங்குவது.' பாடல் வருமாறு:

"மன்னு கின்றஅத் திருநகர் வரைப்பில்
மண்ணில் மிக்கதோர் நன்மையி னாலே
துன்னும் யானையைத் தூற்றில்வாழ் முயல்முன்
துரக்க எய்திய தொலைவில்ஊக் கத்தால்
தன்னி லத்துநின் றகற்றுதல் செய்யும்
தானம் அன்றியும் தனுஎழுத் தாணி
எந்நி லத்தினும் காண்பரும் இறவாத்
தானம் என்றிவை இயல்பினில் உடைத்தால்."

மன்னுகின்ற-நிலை பெற்று விளங்குகின்ற. அத்திரு-அந்த அழகிய. நகர்-நகரமாகிய காஞ்சீபுரத்தினுடைய. நகர்-பெரிய சிவத்தலம். வரைப்பில்-எல்லைக்குள். மண்ணில்-இந்த மண்ணுலகத்தில். மிக்கது-மிகுதியாக உள்ள. ஓர்-ஒரு. நன்மையினால்-நலத்தினால். ஏ: அசை நிலை. துன்னும்-அங்கே வரும். யானையை-ஓர் யானையை. த்:சந்தி. தூற்றில்-புதரில். வாழ்-வாழும். முயல்-ஒரு முயல். முன்-தனக்கு முன்னால். துரக்க-துரத்த. எய்திய-அவ்வாறு செய்ததனால் அடைந்த. தொலைவு-தொலைதல். இல்-இல்லாத; கடைக்குறை. ஊக்கத்தால்-ஊக்கத்தினால்; உற்சாகத்தால். தன்-தன்னுடைய. நிலத்து நின்று-நிலத்திலிருந்து. அகற்றுதல்-போக்குதலை. செய்யும்-புரியும். தானம் அன்றியும்-தானம் அல்லாமலும். தனு-வில்லும். எழுத்தாணி-

எழுத்தாணியும். எந்நிலத்தினும்-எந்த வகையாகிய நிலங்களி லும்; ஒருமை பன்மை மயக்கம். காண்பரும்-பார்ப்பதற்கு அருமையாக இருக்கும். இறவாத்தானம் என்ற-இறவாத் தானம் என்று கூறப் பெற்ற. இவை-இந்தத் தலங்கள். என்றிவை-என்ற இவை; தொகுத்தல் விகாரம். இயன்பினில்-தங்களுக்குரிய இயல்புகளோடு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். உடைத்து-அந்தக் காஞ்சீபுரம் உடையது. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 78-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மக்களுக்கு உண்டாகும் தீய வினைகளாகிய பாவங்கள் யாவற்றையும் போக்கி ஆனந்தத்தையே வழங்கும் புண்ணிய தீர்த்தம், விரும்பினவர்களுக்கு இட்ட சித்தியாகத் திகழும் இட்ட சித்தி தீர்த்தம், நல்ல மங்கல தீர்த்தம், நெடுங்காலமாக உள்ள பாதுகாப்பைப் பெற்ற தீர்த்தங்கள் மூன்று இந்த உலகத்தில் விளங்கிய சாருவதீர்த்தமும் முதலாக உள்ளவை அந்தக் காஞ்சீபுரத்தில் நெடுங்காலமாக உள்ள தீர்த்தங்கள் கணக்கு இல்லாதவையும் உள்ளன; அவற்றில் தேவலோகத்தில் வாழும் தேவர்கள் நீராடுதலை விட மாட்டார்கள்.' பாடல் வருமாறு:

" ஈண்டு தீவினை யாவையும் நீக்கி
இன்ப மேதரும் புண்ணிய தீர்த்தம்
வேண்டி னார்தமக் கிட்டசித் தியதாய்
விளங்கு தீர்த்தம்நல் மங்கல தீர்த்தம்
நீண்ட காப்புடைத் தீர்த்தம்மூன் றுலகில்
நிகழ்ந்த சாருவ தீர்த்தமும் முதலா
ஆண்டு நீடிய தீர்த்தம் எண்ணிலவும்
அமரர் நாட்டவர் ஆடுதல் ஒழியார்."

ஈண்டு-மக்களுக்கு உண்டாகும். தீவினை-தீய வினைகளாகிய பாவங்கள்; ஒருமை பன்மை மயக்கம். யாவையும்-யாவற்றையும். நீக்கி-போக்கி. இன்பமே-ஆனந்தத்தையே. தரும்-வழங்கும். புண்ணிய தீர்த்தம்-புண்ணிய தீர்த்தம் என்பதும். வேண்டினார் தமக்கு-விரும்பினவர்களுக்கு;

ஒருமை பன்மை மயக்கம். தம்: அசை நிலை. இட்ட சித்திய தாய்-இட்ட சித்திகளை வழங்குவதாய். விளங்கு-திகழும். தீர்த்தம்-இட்ட சித்தி தீர்த்தமும். நல்-நல்ல. மங்கல தீர்த்தம்-மங்கல தீர்த்தமும். நீண்ட-நெடுங்காலமாக உள்ள. காப்பு-பாதுகாப்பை. உடை-பெற்ற. த்:சந்தி. தீர்த்தம்-தீர்த் தங்கள்;ஒருமை பன்மை மயக்கம். மூன்று-புண்ணிய தீர்த்தம், இட்டசித்தி தீர்த்தம், மங்கல தீர்த்தம் என்னும் மூன்று தீர்த் தங்களும். உலகில்-இந்த மண்ணுலகத்தில். நிகழ்ந்த-விளங் கிய. சாருவ தீர்த்தமும்-சாருவதீர்த்தம் என்பதும். முதலா-முதலாக உள்ள. ஆண்டு-அந்தக் காஞ்சீபுரத்தில். நீடிய-நெடுங்காலமாக உள்ள. தீர்த்தம்-தீர்த்தங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எண்-கணக்கு. இலவும்-இல்லாதவையும்; இடைக்குறை. அமரர் நாட்டவர்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆடுதல்-இந்தத் தீர்த் தங்களில் நீராடுதலை; முழுகுவதை. ஒழியார்-விடமாட்டார் கள்; ஒருமை பன்மை மயக்கம்.

புண்ணிய தீர்த்தம்: இது புண்ணிய கோடீசம் என்னும் ஆலயத்தைச் சேர்ந்ததாக உள்ளது. "மின்பாய் பொழிற் சத்திய மாவிரதத் தலத்தின், தென்பாலது புண்ணிய கோடி நம்தேவன் வைப்பு, வன்பாவலர்கள் எய்தரும் புண்ணிய தீர்த்தம்மாடே, என்போலிகட்கும் சிவப்பேறெளி தெய்தும் அங்கண்." (2) என்று காஞ்சிப் புராணத்தில் உள்ள புண் ணிய கோடீசப் படலத்தில் வருவதைக் காண்க.

இட்ட சித்தி தீர்த்தம்: இது காஞ்சீபுரத்தில் உள்ள இட்ட சித்தீசத்தைச் சார்ந்து விளங்கும் தீர்த்தம். இதில் முழுகிச் சுக்கிராசாரியன் தனக்கு இஷ்டமாகிய சித்திகள் எல்லாவற்றையும் அடைந்தான். ததீசி முனிவன் இந்தத் தீர்த்தத்தில் நீராடி வச்சிர தேகத்தைப் பெற்றான். திரேதா யுகத்தில் பிரமதேவன் இந்தத் தீர்த்தத்தில் ஸ்நானம் செய்து சத்திய லோகத்தில் வாழும் வாழ்க்கையையும் படைக்கும் தொழிலையும் பெற்றான். துவாபர யுகத்தில் திருமால் திரு

மகளோடு காஞ்சீபுரத்துக்கு எழுந்தருளி இந்தத் தீர்த்தத்தில் நீராடி, பலவுயிர்களையும் காக்கும் தொழிலோடு வைகுந்தத்தில் வாழும் பதவியையும் பெற்றான். கலியுகத்தில் காமாட்சியம்மை இந்தத் தீர்த்தத்தில் முழுகியருளி ஏகாம்பரேசுவரருடைய திருமேனியில் பாதிப் பகுதியைப் பெற்றாள். இந்தத் தீர்த்தத்தில் சூரியன் முழுகித் தக்கன் யாகத்தில் இழந்த தன்னுடைய பற்களை அடைந்தான். வடதிசைக்குத் தலைவனாகிய குபேரன் காமாட்சியம்மையினுடைய திருமேனியின் அழகைப் பார்த்ததால் ஒரு கண்ணை இழந்தான். அவன் இந்தத் தீர்த்தத்தில் நீராடி மீண்டும் இழந்த கண்ணைப்பெற்றான்; சிவபெருமானுக்கு நண்பன் என்ற பதவியையும் பெற்றான். துச்சருமேனன் என்னும் ஒரு முனிவன் இந்தத் தீர்த்தத்தில் நீராடி ஊர்வசியினுடைய கொங்கைகளை அணையும் இன்பத்தை அடைந்தான். கண்ணனுடைய தேவிமாருள் ஒருத்தியாகிய சாம்பவதியினுடைய புதல்வனாகிய சாம்பன் என்பவன் தனக்கு உண்டாகியிருந்த குட்ட நோயிலிருந்து இந்தத் தீர்த்தத்தில் நீராடியதனால் நீங்கப் பெற்றான். நளச் சக்கரவர்த்தியும், இராமபிரானும், பஞ்ச பாண்டவர்களும் ஆகியவர்கள் இந்தத் தீர்த்தத்தில் முழுகித் தாங்கள் இழந்த தங்களுடைய நாடுகளையும் அரசுரிமைகளையும் அடைந்தார்கள். இந்தச் செய்திகளைக் காஞ்சிப் புராணத்தில் உள்ள இட்டசித்தீச்சரப் படலத்திற் காணலாம்.

அடுத்து உள்ள 79-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஒரு தாளில் மூன்று மலர்கள் மலரும் பொற்றாமரைத் தடாகமும், நீளமாக நிறைந்த நீர் மேற்குத் திக்கில் ஓடிச் சென்று தன்னிடம் உள்ள புனலை மறைக்கும் பெரிய ஆற்றோடு நெடுங்காலமாக மலர்ந்து செங்குவளை மலரையும், பசுமையான தாமரை மலரையும் உச்சி வேளையில் மலரும் மலர்களைப் பெற்ற பாதிரி மரத்தை அல்லாமல் கருமையான மேகத்தை ஒத்து விளங்குபவனாகிய திருமால் எழுந்தருளித் தங்கும் அத்திகிரியின் எல்லையில் உறங்காததும்

காய்களைக் காய்க்காததும் ஆகிய ஒரு புளிய மரம் இருக்கிறது.' பாடல் வருமாறு:

" தாள தொன்றினில் மூன்றுபூ மலரும்
தமனி யச்செழும் தாமரைத் தடமும்
நீள வார்புனல் குடதிசை ஓடி
நீர்க ரக்கும்மா நதியுடன் நீடு
நாள லர்ந்து செங்குவளை பைங்கமலம்
நண்ப கல்தரும் பாடலம் அன்றிக்
காள மேகம்ஒப் பான்உறை வரைப்பில்
கண்ப டாதகா யாப்புளி உளதால்.''

தாளது ஒன்றினில்-ஒரு தாளில். அது: பகுதிப் பொருள் விகுதி. மூன்று பூ-மூன்று மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மலரும்-அலரும். தமனியச் செழும் தாமரைத் தடமும்-செழுமையாகிய பொற்றாமரைத் தடாகமும். நீள-நீளமாக. ஆர்-நிரம்பிய. புனல்-நீர். குடதிசை-மேற்குத் திக்கில். ஓடி-ஓடிச் சென்று. நீர்-தன்னிடம் உள்ள புனலை. கரக்கும்-மறைத்துக் கொள்ளும். மா-பெரிய. நதியுடன்-ஆற்றோடு. நீடுநாள்-நெடுங்காலமாக. அலர்ந்து-மலர்ந்து. செங்குவளை-செங்குவளை மலரையும். பைம்-பசுமையாகிய. கமலம்-தாமரை மலரையும். நண்பகல்-உச்சி வேளையில். தரும்-மலரும் மலர்களைப் பெற்றிருக்கும். பாடலம்-பாதிரி மரத்தை. அன்றி-அல்லாமல். க்:சந்தி. காளமேகம்-கரிய மேகத்தை. ஒப்பான்-போன்ற நிறத்தைப் பெற்றவனாகிய திருமால்; வரதராஜப் பெருமாள். உறை-எழுந்தருளித் தங்கும். வரைப்பில்-அத்திகிரியின் எல்லையில். கண்படாத-உறங்காததும்; வினையாலணையும் பெயர். காயா-காய்களைக் காய்க்காததும்; வினையாலணையும் பெயர். ப்:சந்தி. புளி- ஆகிய ஒரு புளிய மரம்; ஆகுபெயர். உளது-இருக்கிறது; இடைக்குறை. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 80-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நிழலை முன்னால் கட்டும் கிணறு ஒன்றும், பற்றுக் கோடாக குடித்தால் விடமாகும் தடாகம் ஒன்றும், மாயம் இல்லாமல் வந்து தனக்குள் படிந்து மூழ்கிய மக்கள் குரங்கு களின் வடிவங்கள் ஆக மாறும் பிலம் ஒன்றும், உண்டாகிய அந்தக் குரங்குகளின் உருவங்கள் போகுமாறு முழுகும் திக ழும் பொய்கை ஒன்றும், சேர்ந்து வரும் தேவலோகத்தில் வாழும் தேவர்களோடு உண்டாகிய ஆனந்தத்தை உண் டாக்கும் பிலம் ஒன்றனோடு அத்தகைய அதிசயங்கள் பல அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கின்றன.' பாடல் வருமாறு:

"சாயை முன்பிணிக் கும்கிண றொன்று
தஞ்சம் உண்ணின் நஞ்சாம் தடம்ஒன்று
மாயை இன்றிவந் துள்ளடைந் தார்கள்
வான ரத்துரு வாம்பிலம் ஒன்றும்;
மேய அவ்வுரு நீங்கிடக் குளிக்கும்
விளங்கு பொய்கையும் ஒன்றுவிண் ணவரோ
டாய இன்பம் உய்க்கும் பிலம்ஒன்றோ
டனைய ஆகிய அதிசயம் பலவால்."

சாயை-நிழலை. முன்-முன்னால். பிணிக்கும்-கட்டும். கிணறு-கேணி. ஒன்று-ஒன்றும். தஞ்சம்-தாகம் தீர்ப்பதற்குப் பற்றுக் கோடாக. உண்ணின்-நீரைக் குடித்தால். நஞ்சு ஆம்-விடமாக மாறும். தடம்-தடாகம். ஒன்று-ஒன்றும். மாயை-மாயம். இன்றி-இல்லாமல், வந்து உள்-வந்து தனக்குள். அடைந் தார்கள்-படிந்து முழுகிய மக்கள். வானரத்து-குரங்குகளின்: ஒருமை பன்மை மயக்கம். உரு ஆம்-வடிவங்களாக மாறும். உரு: ஒருமை பன்மை மயக்கம். பிலம் ஒன்றும்-ஒரு பிலமும். மேய-அவ்வாறு உண்டாகிய. அவ்வுரு-அந்தக் குரங்குகளின் வடிவங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீங்கிட-அகலுமாறு. க்:சந்தி. குளிக்கும்-முழுகும். விளங்கு-திகழும். பொய்கையும் -மனிதர் ஆக்காத நீர்நிலையும். ஒன்று-ஒன்று ஆகும். விண் ணவரோடு-தேவலோகத்தில் வாழும் தேவர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். ஆய-உண்டாக்கிய. இன்பம்-ஆனந்தத்தை-

உய்க்கும்-உண்டாக்கும். பிலம் ஒன்றோடு-ஒரு பிலத்தோடு. அனைய-அத்தகையவை. ஆகிய-ஆக உள்ள. அதிசயம்-அதிசயங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பல-பல ஆகும். இவை காஞ்சீபுரத்தில் உள்ளவை. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 81-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஐந்து வெண்மையான கைகளை உடைய ஆற்றைப் போல ஒழுகும் கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்ற மூன்று மதங்களைப் பெற்ற ஓர் ஆனை முகத்தான் ஆகிய வலம்புரி விநாயகர் நின்று கொண்டிருக்கவும் நடுச்சாமத்தில் உள்ள இருட்டு ஓடிப் போகும் மேகம் உயர்ந்து இருப்பது போல இருக்கும் பெரிய திருமேனியைப் பெற்ற வரதராஜப் பெருமாளினுடைய செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளில் வளப்பமான சிலம்புகள் ஒலியைஎழுப்ப விடத்தைக் கக்கும் பற்களைக் கொண்ட பாம்புகளைப் பூண்ட ஆடை இல்லாத வெறுமையான இடுப்பை உடையவரும் அச்சத்தைத் தரும் மூன்று இலைகளைக் கொண்ட ஆயுதமாகிய திரிசூலத்தைத் தம்முடைய கையில் ஏந்திய மூத்த பிள்ளையார் குறைவு படுதல் இல்லாமல் முன்னால் திரிந்து கொண்டிருக்கவும் கிரௌஞ்ச மலையை எறிந்த வேலாயுதத்தை ஏந்திய குமரன் பாதுகாக்கவும் அந்தக் காஞ்சீபுரம் பொருந்தி விளங்கும்.' பாடல் வருமாறு:

" அஞ்சு வான்கரத் தாறிழி மதத்தோர்
ஆனை நிற்கவும் அரையிருட் டிரியும்
மஞ்சு நீள்வது போலுமா மேனி
மலர்ப்ப தங்களில் வண்சிலம் பொலிப்ப
நஞ்சு பில்கெயிற் றரவுவெற் றரையின்
நாம மூன்றிலைப் படையுடைப் பிள்ளை
எஞ்சல் இன்றிமுன் திரியவும் குன்றம்
எறிந்த வேலவன் காக்கவும் இசையும்."

அஞ்சு-ஐந்து. வான்-வெண்மையான. கரத்து-கைகளை உடைய; ஒருமை பன்மை மயக்கம். ஆறு-ஆற்றைப் போல.

இழி-வழியும். மதத்து-கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களையும் ஒழுக விடும்; ஒருமை பன்மை மயக்கம். ஓர்-ஒப்பற்ற. ஆனை-ஆனை முகத்தானாகிய வலம் புரி விநாயகர்; ஆகு பெயர். நிற்கவும்-நின்று கொண்டிருக் கவும். அரை இருட்டு-நடுச் சாமத்தில் உள்ள இருட்டு. இரியும்-ஓடிப் போகும். மஞ்சு-மேகம். நீள்வது போலும்-உயர்ந்து நிற்பது போல இருக்கும். மா-பெரிய. மேனி-திரு மேனியைப்பெற்ற வரதராஜப் பெருமாளினுடைய. மாமேனி: அன்மொழித் தொகை; அடையடுத்த ஆகு பெயரும் ஆம். மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பதங்களில்-திருவடிகளில். வண்-தங்கத் தால் ஆகிய வளப்பத்தைக் கொண்ட. சிலம்பு-சிலம்புகள்; ஒருமை பன்மை மயக்கம். ஒலிப்ப-ஒலியை எழுப்ப. நஞ்சு-விடத்தை. பில்கு-கக்கும். எயிற்று-பற்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். அரவு-பாம்புகளைப் பூண்ட; ஒருமை பன்மை மயக்கம். வெற்றரையின்-வெறுமையாகிய இடுப்பை உடையவரும்; அன்மொழித் தொகை. நாமம்-அச் சத்தைத் தரும். மூன்று இலை-மூன்று இலைகளைக் கொண்ட. இலை; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. படை-ஆயுதமா கிய திரிசூலத்தை. உடை-தம்முடைய கையில் ஏந்துதலை உடைய. ப்:சந்தி. பிள்ளை-மூத்த பிள்ளையார்; ஒருமை பன்மை மயக்கம். எஞ்சல்-குறைவு படுதல். இன்றி-இல்லாமல். முன்-முன்னால். திரியவும்-திரிந்து கொண்டிருக்கவும். குன்றம்-கிரவுஞ்ச மலையை. எறிந்த-எறிந்து பொடியாக்கிய. வேலவன்-வேலாயுதத்தைத் தன் கையில் ஏந்திய குமரன்; இவன் குமரகோட்டத்தில் எழுந்தருளியிருப்பவன். காக்கவும்-பாதுகாத்துக் கொண்டிருக்கவும். இசையும்-அந்தக் காஞ்சீ புரம் பொருந்தி விளங்கும்.

வலம்புரி விநாயகர்-வலப்பக்கமாக வளைந்த துதிக் கையைப் பெற்ற விநாயகர். முன் ஒரு காலத்தில் பிரம

தேவன், திருமால், முனிவர்கள், தேவர்கள், கின்னரர்கள் ஆகிய யாவரும் ஓரிடத்தில் கூடித் தங்களுக்குள் அரக்கர்கள் தங்களுக்குச் செய்யும் கொடிய துன்பங்களை நீக்குவதைப் பற்றி ஆலோசனை செய்தார்கள். அவர்கள் ஏகாம்பரேசுவரனை அணுகி அவனுடைய திரு நடனத்தைத் தரிசித்து, களிப்புத் துளும்பி வழிய அந்த ஏகாம்பரேசுவரனுடைய செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளில் விழுந்து வணங்கி, ''இறைவனார் பெற்றெடுத்த புதல்வனாகிய இந்த விநாயகப் பெருமானை இப்பொழுதே எங்கும் உள்ள சிவகணங்களும் வேறு பல கண நாதர்களும் துதித்தார்கள்.'' அப்போது ஏகாம்பரேசுவரர் தேவர்களும் முனிவர்களும் பிரமதேவனும் திருமாலும் கணநாதர்களும் தம்மோடு வரத் திருவுள்ளத்தில் கருணை கொண்டு திருவாய் மலர்ந்தருளிச் செய்பவராகி, தம்முடைய மடியில் வீரத்தைக் கொண்ட இளைஞனாகிய விநாயகப் பெருமானை அமரச் செய்து, ''இவன் இமாசல அரசனுக்குப் புதல்வியாகப் பிறந்த மயிலைப் போன்றவளாகிய காமாட்சியம்மைக்கு இனியவன்; இவன் நாம் பெற்றெடுத்த உத்தமனாகிய புதல்வன் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள்.'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார். அந்த வலம்புரி விநாயகர் பலவகையான விளையாடல்களைப் புரிந்து தேவர்கள் முதலியவர்களுக்குத் துன்பங்களை உண்டாக்கிய அசுரர்களைச் சங்காரம் புரிந்தருளினார். இந்த வரலாற்றைக் காஞ்சிப் புராணத்தில் உள்ள வலம்புரி விநாயகப் படலத்தால் உணரலாகும்.

பின்பு உள்ள 82-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'ஆற்றலைப் பெற்ற அந்தப் பரம்பொருளைத் தியானம் புரியும் சித்தர்களும், அஷ்டாங்க யோகத்தைப் புரியும் யோகிகளும், மந்திர சாதகம் புரியும் ஒப்பற்ற தலைவர்களும் முதலாக உள்ள சிரஞ்சீவித் தன்மையை அடைந்த ஆயுளைப் பெற்ற உண்மையான தவசிகளும், நெடுங்காலமாக வாழும்

அழகிய ஊர்களும் பலவாகும்; சித்தர்கள், வித்தியாதரர்கள், யட்சர்கள், கந்தருவர்கள் ஆகியவர்கள் விளங்கி நிலை பெற்றுக் காஞ்சீபுரத்தில் வாழ்வார்கள்; குதிரைச் சம்மட்டியைத் தம்முடைய திருக்கரத்தில் ஏந்திக் கொண்டு நன்றாக ஓடும் யானையின் மேல் ஏறிக்கொண்டு ஐயனார் சேரும் செண்டு அடையும் வெளியும் ஒன்று அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கிறது.' பாடல் வருமாறு:

"சத்தி தற்பர சித்தயோ கிகளும்
சாத கத்தனித் தலைவரும் முதலா
நித்தம் எய்திய ஆயுள்மெய்த் தவர்கள்
நீடு வாழ்திருப் பாடியும் அனேகம்
சித்தர் விஞ்சையர் இயக்கர்கந் தருவர்
திகழ்ந்து மன்னுவார் செண்டுகை ஏந்தி
வித்த கக்கரி மேற்கொளும் காரி
மேவு செண்டணை வெளியும்ஒன் றுளதால்."

சத்தி-ஆற்றலைப் பெற்ற. தத்பர-அந்தப் பரம்பொருளைத் தியானம் புரியும்.சித்த-சித்தர்களும். யோகிகளும்-அஷ்டாங்க யோகத்தைப் புரியும் யோகிகளும். அஷ்டாங்கங்கள் ஆவன: இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை,தியானம்,சமாதி என்பவை.சாதக-மந்திர சாதகம் புரியும். த்:சந்தி. தனி-ஒப்பற்ற. த்:சந்தி. தலைவரும் -தலைவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். முதலா-முதலாக உள்ள. நித்தம்-சிரஞ்சீவித் தன்மையை. எய்திய-அடைந்த. ஆயுள்-ஆயுளைப் பெற்ற. மெய்-உண்மையாகிய. த்:சந்தி. தவர்கள்-தவசிகளும். நீடு-நெடுங் காலமாக. வாழ்-வாழும். திரு-அழகிய. ப்:சந்தி. பாடியும்-ஊர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அனேகம்-பலவாகும். சித்தர்-சித்திகளைப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். விஞ்சையர்-வித்தியாதரர்கள்; ஒருமை பன்மை மயக்கம். இயக்கர்-யட்சர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கந்தருவர்-கந்தர்வர்கள்; ஒருமை பன்மை மயக்கம். இவர்கள் இசைப் பாடல்களைப் பாடும்

தேவ சாதியினர். திகழ்ந்து-விளங்கி. மன்னுவார்-நிலை பெற்றுக் காஞ்சீபுரத்தில் வாழ்வார்கள்; ஒருமை பன்மை மயக்கம். செண்டு-குதிரைச் சம்மட்டியாகிய சவுக்கை. கை-தம்முடைய திருக்கரத்தில். ஏந்தி-ஏந்திக் கொண்டு. வித்தக-நன்றாக ஓடும் கலையில் வல்ல. க்:சந்தி. கரி-யானை யின். மேற்கொளும்-ஏறிக் கொண்டு எழுந்தருளும். கொளும்: இடைக்குறை. காரி-ஐயனார்; ஒருமை பன்மை மயக்கம். மேவு-சேரும். செண்டு அணை-செண்டாயுதம் அடையும். வெளியும்-குதிரை வையாளியாக ஓடும் வெளியிடமும். ஒன்று உளது-காஞ்சீபுரத்தில் ஒன்று இருக்கிறது. உளது: இடைக் குறை. ஆல்: ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 83-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு காஞ்சீபுரத்திற்கு வந்து சேர்ந்த சித்தர்கள் முதலியவர்கள் தங்களுடைய உருவங்கள் மறைய வேறாக உள்ளவர்களைத் தாங்கள் பார்க்கும் இடம் ஒன்று காஞ்சீ புரத்தில் இருக்கிறது; தங்களுடைய திருவுள்ளங்களை யோகத் தில் செலுத்தும் முனிவர்களும், யோகினிகளும் வந்து சேர்ந்தி ருக்கும் யோகபீடமும் ஒன்று எல்லாக் காலத்திலும் அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கிறது; முடிவு இல்லாத முப்பத்திரண்டு தருமங்களைப் பாதுகாப்பவளாகிய காமாட்சியம்மை எழுந் தருளியிருக்கும் ஆலயமான போக பீடமும் அந்த நகரத்தில் இருப்பது ஆகும்; அடியேங்களுடைய தந்தையாரைப் போன்றவராகிய ஏகாம்பரேசுவரர் மகிழ்ச்சியை அடைந்து கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் காஞ்சீபுரத்தில் நீள மாக உள்ள எல்லையின் வரம்பை இந்த அளவைப் பெற்றது என்பதை யார் தெரிந்து கொள்வார்?' பாடல் வருமாறு:

"வந்த டைந்தவர் தம்முரு மாய
மற்று ளாரைத்தாம் காண்பிடம் உளது;
சிந்தை யோகத்து முனிவர்யோ கினிகள்
சேரும் யோகபீ டமும்உள தென்றும்;

அந்த மில்அறம் புரப்பவள் கோயில்
ஆன போகபீ டமும்உள தாகும்;
எந்தை யார்மகிழ் காஞ்சிநீ டெல்லை
எல்லை இல்லன உள்ள; ஆ ரறிவார்.''

வந்து-அவ்வாறு காஞ்சீபுரத்திற்கு வந்து. அடைந்தவர்—சேர்ந்தவர்களாகிய சித்தர்கள் முதலியார்கள்; ஒருமை பன்மை மயக்கம். தம்-தங்களுடைய. உரு-வடிவங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மாய-மறைய. மற்று-அவ்வாறு மறையாமல் வேறாக. உளாரை-உள்ளவர்களை; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. த்:சந்தி. தாம்-தாங்கள். காண்பிடம்-பார்க்கும் இடம் ஒன்று. உளது-அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கிறது; இடைக்குறை. சிந்தை-தங்களுடைய திருவுள்ளங்களை; ஒருமை பன்மை மயக்கம். யோகத்து-யோகத்தில் செலுத்தும். முனிவர்-முனிவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். யோகினிகள் - யோகினிகளும்; இவர்கள் கொற்றவையோடு இருக்கும் பரிவார தேவதைகள் சேரும்—வந்து சேர்ந்திருக்கும். யோக பீடமும்-யோக பீடம் ஒன்றும். என்றும்-எந்தக் காலத்திலும். உளது-அந்தக் காஞ்சி மாநகரில் இருக்கிறது; இடைக்குறை. அந்தம்-முடிவு. இல்-இல்லாத; கடைக்குறை. அறம்-முப்பத்திரண்டு தருமங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். புரப்பவள்-பாதுகாப்பவளாகிய காமாட்சி அம்மை எழுந்தருளியிருக்கும். கோயில்—ஆலயம். ஆன-ஆக அமைந்த. போக பீடமும்-போக பீடம் ஒன்றும். உளது ஆகும்-அந்த நகரத்தில் இருப்பது ஆகும். உளது:இடைக்குறை. எந்தையார்-அடியேங்களுடைய தந்தையாரைப் போன்றவராகிய ஏகாம்பரேசுவரர். இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. மகிழ்-மகிழ்ச்சியை அடைந்து கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். காஞ்சி-காஞ்சீபுரத்தில். நீடு-நீளமாக உள்ள எல்லை-எல்லையினுடைய. எல்லை-வரம்பை. இல்லன-இல்-

லாதவை. உள்ள-இருக்கின்றன. ஆர்-இதை யார். அறிவார்-தெரிந்து கொள்வார்.

அடுத்து வரும் 84-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தூண்டும் ஒளி வெள்ளம் ஒன்று அங்கே எழுந்து இருட்டை ஓட்டும்; தேவர்கள் காஞ்சீபுரத்திற்கு வந்து சுற்றி வரும் உருத்திர சோலை என்பது விரும்புகிற மக்களுடைய பிறப்புக்களைப் போக்கி விடும்; உண்மையாகிய சைவ சமய வழியில் நிலைத்து நின்றிருக்கும் மக்கள் தாங்கள் விழைந்து தீண்டினால் எல்லாவற்றையும் சிவந்த தங்கமாக மாறச் செய்வதாகிய ஒரு சிலையும் அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கிறது; அதன் பெருமை எடுத்துக்கூறுவதற்கு அரியது; அடியேங்களை ஆட்களாகக் கொண்ட தலைவியாகிய காமாட்சி அம்மை ஆறு சமயங்களையும் எல்லா யோனிகளையும் பாதுகாக்கும் இடமாக விளங்குவது அந்தக் காஞ்சி மாநகரம்.' பாடல் வருமாறு:

"தூண்டு சோதியொன் றெழுந்திருள் துரக்கும்
சுரர்கள் வந்துசூழ் உருத்திர சோலை
வேண்டி னார்கள்தம் பிறப்பினை ஒழிக்கும்
மெய்ந்நெ றிக்கணின் றார்கள்தாம் விரும்பித்
தீண்டில் யாவையும் செம்பொன் ஆக்குவதோர்
சிலையும் உண்டுரை செய்வதற் கரிதால்;
ஆண்ட நாயகி சமயங்கள் ஆறும்
அகில யோனியும் அளிக்கும் அந்நகரம்."

தூண்டு-தூண்டும். சோதி ஒன்று-ஓர் ஒளி வெள்ளம். எழுந்து-அங்கே எழுந்து. இருள்-இருட்டை. துரக்கும்-ஓட்டி விடும். சுரர்கள்-தேவர்கள். வந்து-இந்தக் காஞ்சீபுரத்திற்கு வந்து. சூழ்-சுற்றி வரும். உருத்திர சோலை-உருத்திரப் பூம்பொழில். வேண்டினார்கள்-விரும்புகிற மக்களுடைய. தம்: அசை நிலை. பிறப்பினை-மானிடப் பிறப்புக்களை; ஒருமை பன்மை மயக்கம். ஒழிக்கும்-போக்கி விடும். மெய்-

உண்மையாகிய. ந்:சந்தி. நெறிக்கண்-சைவ சமய வழியில். நின்றார்கள்-நிலைத்து நின்றிருக்கும் மக்கள். தாம்-தாங்கள். விரும்பி-விழைந்து. த்:சந்தி. தீண்டில்-தொட்டால். யாவை யும்-எல்லாவற்றையும். செம்-சிவப்பாக இருக்கும். பொன்-தங்கமாக. ஆக்குவது-மாறச் செய்வதாகிய. ஓர்-ஒரு. சிலை யும்-கல்லும். உண்டு-அந்தக் காஞ்சீபுரத்தில் இருக்கிறது. உரைசெய்வதற்கு-அதன் பெருமை எடுத்துக் கூறுவதற்கு. அரிது-அருமையாக இருப்பது. ஆல்:அசை நிலை. ஆண்ட-அடி யேங்களை ஆட்களாக ஏற்றுக் கொண்ட. இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. நாயகி-தலைவியாகிய காமாட்சி அம்மை. சமயங்கள் ஆறும்-சைவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், வைணவம், சௌரம் என்னும் ஆறு சமயங்களையும். சைவம்-சிவபெரு மானே முழுமுதற் கடவுள் என்று வழிபடும் சமயம் சாக்தம் -பராசக்தியே யாவருக்கும் மேலான பர தேவதை என்று வழி படும் சமயம். இதை ஸ்ரீ வித்யை என்பர். கௌமாரம்-முருகக் கடவுளே முழுமுதற் கடவுள் என்று வழிபடும் சமயம். காண பத்தியம்-கணபதியே முழுமுதற் கடவுள் என்று வணங்கி வாழும் சமயம். வைணவம்-திருமாலே பரதெய்வம் என்று வழிபடும் சமயம். சௌரம்-சூரியனே முழுமுதற் கடவுள் என்று வழிபடும் சமயம். அகில யோனியும்-எல்லா வகை யான பிறப்புக்களை எடுத்த உயிர்களையும். இவை எண் பத்து நான்கு லட்சம். யோனி: ஒருமை பன்மை மயக்கம். அளிக்கும்-படைத்துப் பாதுகாக்கும் இடமாக விளங்குவது; வினையாலணையும் பெயர். அந்நகரம்-அந்தக் காஞ்சி மா நகரம். நகரம்-பெரிய சிவத்தலம்.

அடுத்து வரும் 85-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'எல்லாக் காலத்திலும் அழியாமல் இருப்பதாகிய இந்தக் காஞ்சி மாநகரம் கலியுகத்தில் விளங்கிய வேலாயுதத்தை ஏந்திய கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழச் சக்கர வர்த்தி வலிமையைப் பெற்ற தன்னுடைய அடையாளப்

பொறியாகிய புலியைப் பெருமையைப் பெற்று விளங்கும் இமய மலையின் மேல் பொறித்து வைக்கும் பொருட்டு அந்த மலைக்கு அடியேன் செல்லுவேன் என்று அந்த மன்னன் காமாட்சி அம்மையிடம் விடை பெற்றுக் கொண்டு புறப்பட்ட தலம் இந்தக் காஞ்சீபுரம்; இந்தக் காஞ்சீ மாநகரத்தினுடைய வளப்பத்தைப் போய் வேடனுக்கு முன்னால் பார்த்துக் கூறத் திருத்தமாக அமைந்த நான்கு காதங்கள் உள்ளிட வகுத்து மலையைப் போல உயரமாக விளங்கும் திருமதிலை அந்தக் காஞ்சீபுரத்தினைச் சுற்றி உயரமாகக் கட்டிப் பல வகையான குடிமக்களை அந்தக் கரிகாற் பெருவளத்தான் குடிகளாக இருக்குமாறு புரிந்த மேற் கோளோடு அந்தக் காஞ்சீபுரம் திகழும்.' பாடல் வருமாறு:

''என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேற்கரி காற்பெரு வளத்தோன்
வன்தி றற்புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவேன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதம் நான்குட்பட வகுத்துக்
குன்று போலுமா மதில்புடை போக்கிக்
குடியி ருத்தின கொள்கையின் விளங்கும்.''

என்றும்-எல்லாக் காலத்திலும். உள்ள-அழியாமல் இருப்பதாகிய. இந்நகர்-இந்தக் காஞ்சி மாநகரம். கலியுகத்தில்-இப்போது நடைபெறும் கலியுகத்தில். இலங்கு-ஒளியை விட்டு விளங்கும். வேல்-வேலாயுதத்தை ஏந்தியிருக்கும். கரிகாற் பெருவளத் தோன்-கரிகாற் பெருவளத்தான் என்னும் சோழச் சக்கரவர்த்தி. வன்-வலிமையைப் பெற்ற. திறல்-ஆற்றலைக் கொண்ட. புலி-தன்னுடைய அடையாளப் பொறியாகிய புலியின் உருவத்தை; ஆகு பெயர். இமய மால் வரை மேல்-பெருமையைப் பெற்ற இமய மலையின் மீது. வைக்க-

பொறித்து வைக்கும் பொருட்டு. ஏகுவேன் தனக்கு-அந்த மலைக்குப் போகிறவனாகிய அடியேனுக்கு. இதன்-இந்தக் காஞ்சீபுரத்தினுடைய. வளமை-வளப்பத்தை. சென்று—அந்த மலைக்குப் போய். வேடன்முன்-அந்த மலையில் வாழும் வேடனுக்கு முன்னால். கண்டு-பார்த்து. உரை செய்ய-கூறுவதற்காக. த்:சந்தி. திருந்து-திருத்தமாக அமைந்துள்ள. காதம் நான்கு-நாற்பது மைல்கள். உட்பட-அடங்குமாறு. வகுத்து-அமைத்து. க்:சந்தி. குன்று போலும்-மலையை போல உயரமாக விளங்கும். மா-பெரிய. மதில்-திருமதிலை. புடை-அந்தக் காஞ்சீபுரத்தைச் சுற்றி. போக்கி-உயரமாகக் கட்டி. க்:சந்தி. குடி-குடிமக்களை; ஒருமை பன்மை மயக்கம். இருத்தின-வேறு ஊர்களிலிருந்து அழைத்துக் கொண்டு வந்து இங்கே குடியிருக்கச் செய்த. கொள்கையின்-மேற் கோளோடு. விளங்கும்-அந்தக் காஞ்சி மாநகரம் திகழும்.

கரிகாற் பெருவளத்தான் இமய மலைக்குப் போவதற்கு முன்னால் காமாட்சி அம்மையை வணங்கி விடை பெற்றுக் கொண்டு அந்த மலைக்குச் சென்றான் என்பது வரலாறு.

அடுத்து உள்ள 86-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'குளிர்ச்சியைப் பெற்ற காஞ்சி மரத்தினுடைய மென்மையாகிய கிளைகளாகிய மலர்கள் மலர்ந்திருக்கும் கொம்புகள் ஆடுதலைப் பொருந்தி அசைந்து கொண்டிருக்க அந்தக் கொம்புகளின் பக்கத்தில் வண்டுகள் வந்து தங்கி காஞ்சிப் பண்ணாகிய இசைப்பாடலை ரீங்காரம் செய்யும் வயல்களை வேலியாகக் கொண்ட பண்ணைகளை உடைய மருத நிலத்தைப் பக்கத்தில் உடையதாகி இந்தப் பூ மண்டலத்தில் நெடுங்காலமாக விளங்கும் உறுதியைப் பெற்ற காஞ்சி மாநகரத்தில் நொச்சி மரத்தின் தழைகள் சார்ந்திருக்கும் திருமதில் சுற்றி உள்ள செழுமையைப் பெற்ற அகழி அழகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய அந்தணர்கள் அந்த

வேதங்களைக் கானம் செய்யும் கானம் கேட்கும் இடமாகிய தெய்வத் தன்மையையும் வளமையைப் பெற்ற காஞ்சி என்னும் அணிகலத்தை அணிந்து கொண்டிருக்கும் பெண் குறியைப் பெற்றவளும், இமாசல அரசனுடைய புதல்வியும், பூங்கொடியைப் போன்றவளும் ஆகிய காமாட்சி அம்மை பாதுகாக்க வளர்கின்ற கருணையாகிய சமுத்திரம் இந்த உலகத்தைச் சுற்றியிருப்பதை ஒக்கும்.' பாடல் வருமாறு:

'' தண்காஞ்சி மென்சி னைப்பூங் கொம்பர் ஆடல்
சார்ந்தசைய அதன்மருங்கு சுரும்பு தாழ்ந்து
பண்காஞ்சி இசைபாடும் பழன வேலிப்
பணைமருதம் புடையுடைத்தாய்ப் பாரில் நீடும்
திண்காஞ்சி நகர்நொச்சி இஞ்சி சூழ்ந்த
செழுங்கிடங்கு திருமறைகள் ஒலிக்கும் தெய்வ
வண்காஞ்சி அல்குல்மலை வல்லி காக்க
வளர்கருணைக் கடல்உலகம் சூழ்ந்தால் மானும்.''

தண்-குளிர்ச்சியைப் பெற்ற. காஞ்சி-காஞ்சி மரத்தினுடைய. மென்-மென்மையாக உள்ள. சினை-கிளைகளாகிய: ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பூங் கொம்பர்-மலர்கள் மலர்ந்திருக்கும் கொம்புகள். பூ: ஒருமை பன்மை மயக்கம் கொம்பர்: ஒருமை பன்மை மயக்கம். கொம்பர்-கொம்பு: போலி. ஆடல்-அசைந்து ஆடுதலை. சார்ந்து-பொருந்தி. அசைய-அசைந்து கொண்டிருக்க. அதன்-அந்தக் கொம்புகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-பக்கத்தில். சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். தாழ்ந்து-பறந்து வந்து தங்கி. பண் காஞ்சி-காஞ்சி என்னும் பண்ணாகிய. இசை பாடும்-இசைப் பாடலை ரீங்காரம் செய்யும். பழன-வயல்களை; ஒருமை பன்மை மயக்கம். வேலி-வேலியாகக் கொண்ட. ப்:சந்தி. பணை-பண்ணைகளை உடைய; ஒருமை பன்மை மயக்கம். பணை: இடைக்குறை. மருதம்-மருத நிலம். புடை-பக்கத்தில். உடைத்தாய்-உடையதாகி. ப்:சந்தி. பாரில்-இந்தப் பூ மண்டலத்தில். நீடும்-நெடுங்கால

மாக விளங்கும். திண்-உடம்பு உறுதியைப் பெற்ற மக்கள்; ஆகு பெயர். காஞ்சி நகர்-வாழும் காஞ்சி மாநகரத்தில். நொச்சி-நொச்சி மரத்தின் தழைகள் சார்ந்திருக்கும்; ஆகு பெயர். இஞ்சி-திருமதில். சூழ்ந்த-சுற்றி உள்ள. செழும்-செழுமையைப் பெற்ற; என்றது 'நீர் நிரம்பியுள்ள' என்ற படி. கிடங்கு-அகழி. திரு-அழகிய. மறைகள்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறை வேற்றிய அந்தணர்கள் அந்த வேதங்களைக் கானம் செய்யும் இனிய ஒலி; ஆகுபெயர். ஒலிக்கும்-கேட்கும். தெய்வ-இடமாகிய தெய்வத் தன்மையையும். வண்-வளத்தைப் பெற்ற. வளம்-அழகு. காஞ்சி-காஞ்சி என்னும் அணிகலனை அணிந்திருக்கும். அல்குல்-பெண் குறியைப் பெற்றவளும்; ஆகுபெயர். மலை-இமாசல அரசனுடைய புதல்வியும்; திணை மயக்கம். வல்லி-பூங்கொடியைப் போன்றவளும் ஆகிய காமாட்சி அம்மை; உவம ஆகு பெயர். காக்க-இந்தக் காஞ்சீபுரத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்க. வளர்-வளரும். கருணைக் கடல்-கருணையாகிய சமுத்திரம். க்:சந்தி. கடல்-சமுத்திரம். உலகம்-இந்த மண்ணுலகத்தை. சூழ்ந்தால்-சுற்றியிருந்தால் எவ்வாறோ அவ்வற்றை. மானும்-ஒக்கும்.

அடுத்து உள்ள 87-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கொத்துக்கள் மலர்ந்த மலர்களை அணிந்திருக்கும் கூந்தலைப் பெற்றவளும், இமாசல அரசனுடைய புதல்வியும் பூங்கொம்பு போன்றவளும் ஆகிய காமாட்சி அம்மை ஏகாம்பரேசுவரர் ஏற்றுக் கொண்டருளும் பூசையைப் புரிவதற்காகக் குறிப்பிட்ட இடத்தைப் பாதுகாக்கும் பொருட்டு மந்தர மலையைப் போல உயரமாக உள்ள பெரிய திருமதிலும் அகழியும் அந்த ஏகாம்பரேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்து வழங்கிய உண்மைகளைக் கூறும் சைவ ஆகமம் விதித்த விதிகளினுடைய வகுப்பைப் போல விளங்கும்;

முடிவு இல்லாத சீர்த்தியைப் பெற்றதாகிய காஞ்சி மாநகரத்திற்கு வந்து சேர்ந்த மக்களுக்கு அல்லாமல் அவர்கள் அடைந்த அழுக்குகளைப் போக்குவது அரியதாகிய செயல் எனத் தெரிந்து கொண்டு அந்தக் காஞ்சிபுரத்தை வலம் வருவதற்காக வந்து சேர்ந்து தன்னுடைய கறுப்பு நிறத்தையும் உப்புத் தன்மையையும் போக்கிக் கொள்ளும் பெரிய சமுத்திரத்தையும் போல் விளங்கும் அந்த மலர்கள் மலர்ந்திருக்கும் அகழி.' பாடல் வருமாறு :

"கொந்தலர்பூங் குழல்இமயக் கொம்பு கம்பர்
கொள்ளும்பூ சனைகுறித்த தானம் காக்க
மந்திரமா மதில்அகழி அவர்தாம் தந்த
வாய்மைஆ கமவிதியின் வகுப்புப் போலும்
அந்தமில்சீர்க் காஞ்சியைவந் தடைந்தார்க் கன்றி
அடைகளங்கம் அறுப்பரிதென் றறிந்து சூழ
வந்தணைந்து தன்கறுப்பும் உவர்ப்பும் நீக்கும்
மாகடலும் போலும்மலர்க் கிடங்கு மாதோ."

கொந்து-கொத்துக்கள்; ஒருமை பன்மை மயக்கம். அலர்-மலர்ந்த. பூம்-மலர்களை அணிந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்களாவன; மகிழம்பூ, செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், பவள மல்லிகை மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், தாழம்பூ, நீலோற்பல மலர், குமுத மலர் முதலியவை. குழல்-கூந்தலைப் பெற்ற. இமய-இமாசல அரசனுடைய புதல்வியும்; இன் மயக்கம்; க்:சந்தி. கொம்பு - பூங்கொம்பைப் போன்றவளுமாகிய காமாட்சி அம்மை; உவம ஆகு பெயர். கம்பர்-ஏகாம்பரேசுவரர். கொள்ளும்-ஏற்றுக் கொண்டருளும். பூசனை-பூசையைப் புரிவதற்காக. குறித்த-குறிப்பிட்ட. தானம்-இடத்தை. காக்க-பாதுகாக்கும் பொருட்டு. மந்திர-மந்தர மலையைப் போல உயரமாக உள்ள. மதில்-திருமதிலும். அகழி-அகழியும். அவர் தாம்-அந்த ஏகாம்பரேசுவரர். தாம்: அசை நிலை. தந்த-திருவாய் மலர்ந்தருளிச் செய்து வழங்கிய. வாய்மை-

உண்மைகளைக் கூறும்; ஒருமை பன்மை மயக்கம். ஆகமம்-சைவ ஆகமம் விதித்த. விதியின்-விதிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வகுப்பு-வகுத்து வைத்த முறையை. ப்:சந்தி. போலும்-போல விளங்கும். அந்தம்-முடிவு. இல்-இல்லாத; கடைக்குறை. சீர்-சீர்த்தியைப் பெற்றதாகிய. க்:சந்தி காஞ்சியை-காஞ்சி மாநகரத்திற்கு; உருபு மயக்கம். வந்து-வேறு ஊர்களிலிருந்து வந்து. அடைந்தார்க்கு-சேர்ந்த மக்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அன்றி-அல்லாமல். அடை-அவர்கள் அடைந்திருக்கும். களங்கம்-அழுக்குக்களை; ஒருமை பன்மை மயக்கம்; என்றது உடம்பிலுள்ள அழுக்கையும் உள்ளத்திலுள்ள அறியாமை என்னும் அழுக்கையும். அறுப்பு-போக்கிக்கொள்ளுதல். அரிது-அரியதாகிய செயல். என்று-என. அறிந்து-தெரிந்து கொண்டு. சூழ-காஞ்சீபுரத்தை வலம் வருவதற்காக. 'காமாட்சியம்மையின் கோயிலையும் ஏகாம்பரேசுவரரின் கோயிலையும் வலம் வருவதற்காக' எனலும் ஆம். வந்து-இந்த நகரத்துக்கு வந்து சேர்ந்து. 'தன்' என்றது சமுத்திரத்தினுடைய என்பதை. கறுப்பும்-கறுப்பாகிய நிறத்தையும். உவர்ப்பும்-உப்புத் தன்மையையும். நீக்கும்-போக்கிக் கொள்ளும். மா-பெரிய. கடலும்-சமுத்திரத்தையும். மலர்-மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்களாவன: செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், ஆம்பல் மலர், அல்லி மலர், குமுத மலர், நீலோற்பல மலர், செங்கழுநீர்ப்பூ முதலியவை. க்: சந்தி. கிடங்கு-அகழி. போலும்-போல விளங்கும். மதிலானது மந்தர மலையைப் போலவும் அகழி-சமுத்திரத்தைப் போலவும் விளங்கும் என்பது கருத்து. மாது, ஓ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

மதிலுக்கு மலை உவமை: ''மலை மலி மதில்.'', ''மலையதனாருடைய மதில்.'', ''கல்லார் மதில்.'', ''வரைதிகழ் மதில் வலிவலம்.'', ''மலை மலி மதில் வலிவலம்.'', ''சிலை மலி மதில்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''கல்லார் மதில் சூழ்.''; ''கல்லுயர்ந்த

நெடு மதிள் சூழ் கச்சி.'' என்று திருமங்கையாழ்வாரும், ''கல்லில் ஏய்ந்த மதிள் சூழ் திருக்கண்ணபுரம்.'' என்று நம் மாழ்வாரும், ''வரை புரை நிவப்பின் வான் தோய் இஞ்சி.'' (மலைபடுகடாம், 92) என்று பெருங் கௌசிகனாரும், ''மதில் வடிவமாகிய மலை (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், ''கோடுறழ்ந் தெடுத்த கொடுங்கண் இஞ்சி.'' (பதிற்றுப்பத்து, 10:1) என்று வேறு ஒரு புலவரும், ''ஓங்கல் மதிலுள்.'' (புறப்பொருள் வெண்பாமாலை, 90) என்று ஐயன் ஆரிதனாரும், ''அன்ன மதிலுக் காழிமால் வரையை அலைகடல் சூழ்ந்தன அகழி.'', ''குன்றமென்றாகம் நொந்து நின்று தாரை அம்மதிற்கண் வீசுமே.'' (நகரப் படலம், 141) என்று கம்பரும் பாடியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 88-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தக் காஞ்சீபுரத்தில் உயரமாக வளர்ந்திருக்கும் திரு மதிலோடு திகழும் கோபுர வாசல் அந்தச் சிவத்தலத்தில் வாழும் பெரியவர்களுடைய திருவுள்ளங்களைப் போல ஓங்கி, உயர்ந்த நிலையைப் பெற்ற பான்மையை உடையவை ஆகி, இந்த உலகம் முழுவதிலும் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் உமாதேவியைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்தவராகிய ஏகாம்பரேசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்த நல்லொழுக்கத்தை அல்லா மல் தீங்காகிய பாவ வழியை அடையாத ஒழுக்கமுமாகி நேர் மையாகிய வழியில் நடக்கும் உண்மை திருத்தமாக அமைந்தி ருக்கும் வழிகள் பொருந்துமாறு நிலாவி வளரும் பிரகாசத் தால் எல்லாக் காலத்திலும் விசாலமாகி உயர்ந்து ஆகாயத்தை அளப்பவை ஆகும் இயல்பை உடையவை ஆக விளங்கும்.' பாடல் வருமாறு:

'' ஆங்குவளர் எயிலினுடன் விளங்கும் வாயில்
அப்பதியில் வாழ்பெரியோர் உள்ளம் போல
ஓங்குநிலைத் தன்மையவாய் அகிலம் உய்ய
உமைபாகர் அருள்செய்த ஒழுக்கம் அல்லால்

தீங்குநெறி அடையாத நடையு மாகிச்
செந்நெறிக்கண் நிகழ்வாய்மை திருந்து மார்க்கம்
தாங்குலவ நிலவிவளர் ஒளியால் என்றும்
தடநெடுவான் அளப்பனவாம் தகைய வாகும்.''

ஆங்கு-அந்தக் காஞ்சி மாநகரத்தில். வளர்-உயரமாக வளர்ந்திருக்கும். எயிலினுடன்-திருமதிலோடு. விளங்கும்-திகழும். வாயில்-கோபுர வாசல். அப்பதியில்-அந்தச் சிவத்தலத்தில். வாழ்-நிலைபெற்று வாழும். பெரியோர்-பெருமையைப் பெற்றவர்களாகிய சான்றோர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். உள்ளம் போல-திருவுள்ளங்களைப் போல; ஒருமை பன்மை மயக்கம். ஓங்கு-ஓங்கி உயர்ந்த. நிலை-நிலையைப் பெற்ற. த்:சந்தி. தன்மையவாய்-பான்மையைப் பெற்றவையாகி. அகிலம்-இந்த உலகம் முழுவதிலும் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும்வண்ணம். உமை பாகர்-உமாதேவியாகிய காமாட்சியம்மையைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்திருக்கும் ஏகாம்பரேசுவரர். அருள் செய்த-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. ஒழுக்கம்-நல் ஒழுக்கத்தை. அல்லால் - அல்லாமல். தீங்கு நெறி-தீங்காகிய பாவ வழியை. அடையாத-சேராத. நடையும்-நன்னடத்தையையும். ஆகி-பெற்று விளங்கி. ச்:சந்தி. செந் நெறிக்கண்-நேர்மையான வழியில். நிகழ்-தங்களுடைய வாழ்க்கையை நடத்தும். வாய்மை-உண்மை. திருந்து-திருத்தமாக அமைந்து விளங்கும். மார்க்கம்-சைவ சமயமாகிய வழி. தாம்-தாங்கள்; என்றது காஞ்சிபுரத்தில் வாழும் மக்களை. குலவ-பொருந்துமாறு. நிலவி-நிலாவி; மேவி. வளர்-வளரும். ஒளியால்-பிரகாசத்தால்; திருமேனிகளின் பிரகாசத்தால். என்றும்-எல்லாக் காலத்திலும். தட-விசாலமாகி. நெடு-உயர்ந்துள்ள. வான்-ஆகாயத்தை. அளப்பனவாம்-அளப்பவையாகும். தகைய ஆகும்-இயல்பை உடையவையாக விளங்கும்.

பிறகு வரும் 89-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தக் காஞ்சி மாநகரம் தங்களுக்கு ஒப்பாக வேறு மாடங்களைப் பெறுவது அருமையாக இருக்கும் தங்கத்தைப் பதித்துள்ள மாடங்கள் உயர்ந்து நிற்கும் அழகிய வீதிகளும் நீண்ட வேறு தெருக்களும், காட்டிலிருந்து ஓடிவந்த நதியைப் போல விளங்கும் கடைத் தெருக்களும் வேறு பல வீதிகளும் அமைந்த அந்த நகரம் அழகிய மலைகளை இடை இடையே அமைத்துக் கூறுபாடுகள் அமைந்த ஒன்பது கண்டங்களை அல்லாமல் மிகுதியாகக் கொண்டிருக்கும் பல கண்டங்களாக உண்டாகி அத்தகைய வேறு ஒரு மண்ணுலகம் அந்தக் காஞ்சி மாநகரத்தில் இருக்கிறதாகும் என்று கூறுமாறு திகழ்ந்த பெரிய உலகத்தின் நிலையை அந்த நகரம் அடைந்தது.' பாடல் வருமாறு:

"மாறுபெறல் அரும்கனக மாடம் நீடு
மணிமறுகும் நெடுந்தெருவும் வனத்தில் வந்த
ஆறுபயில் ஆவணவீ திகளும் மற்றும்
அமைந்தநகர் அணிவரைகள் நடுவு போக்கிக்
கூறுபடு நவகண்டம் அன்றி மல்கக்
கொண்டஅனே கம்கண்ட மாகி அன்ன
வேறொருமண் ணுலகுதனில் உளதாம் என்ன
விளங்கியமா லோகநிலை மேவிற் றன்றே."

மாறு-தங்களுக்கு ஒப்பாக. பெறல்-வேறு மாடங்களைப் பெறுவது. அரும்-அருமையாக இருக்கும். கனக-தங்கத்தைப் பதித்திருக்கும். மாடம்-மாடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நீடு-உயர்ந்து நிற்கும். மணி-அழகிய. மறுகும்-வீதிகளும்; ஒருமை பன்மை மயக்கம். நெடும்-நீளமாக விளங்கும். தெருவும்-வேறு வீதிகளும்; ஒருமை பன்மை மயக்கம். வனத்தில்-காட்டிலிருந்து; உருபு மயக்கம். வந்த-ஓடி வந்த. ஆறு-நதிகளைப் போல; ஒருமை பன்மை மயக்கம். பயில்-விளங்கும். ஆவண வீதிகளும்-பண்டங்களை விற்கும் கடைகள் உள்ள கடைத் தெருக்களும். அந்தப் பண்டங்களாவன: அரிசி, உப்பு, புளி, மிளகாய், வெந்தயம், சீரகம், மிளகு, பயற்றம் பருப்பு

துவரம் பருப்பு, கொத்துக் கடலை, பெருங்காயம், பலவகை அணிகலன்கள், ஆடவர் உடுத்தும் வேட்டிகள், பெண்மணி கள் உடுத்தும் புடவைகள் முதலியவை. மற்றும்-வேறாக உள்ள வீதிகளும். அமைந்த-அமைந்துள்ள. நகர்-அந்தக் காஞ்சி மாநகரம். அணி-அழகிய. வரைகள்-இமய மலை முதலிய மலைகளை. நடுவு இடை இடையே. போக்கி -அமைத்து வைத்து. க்:சந்தி. கூறு-கூறுபாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். படு-அமைந்துள்ள. நவ-ஒன்பது. கண்டம்-கண்டங்களை; ஒருமை பன்மை மயக்கம். அன்றி-அல்லா மல். மல்கக் கொண்ட-பகுதியாகக் கொண்டுள்ள. அநேகம்-பல. கண்டம்-கண்டங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆகி-ஆக உண்டாகி. அன்ன-அத்தகைய. வேறு ஒரு-வேறாக உள்ள ஒரு. மண்ணுலகு-மண்ணுலகம். தனில்-அந்தக் காஞ்சீ புரத்தில்; இடைக்குறை. உளது ஆம்-இருக்கிறது ஆகும் என்ன-என்று கூறுமாறு. விளங்கிய-திகழ்ந்த. மா-பெரிய. லோக-உலகத்தினுடைய. நிலை-நிலையை. மேவிற்று-அந்த நகரம் அடைந்தது. அன்று ஏ:இரண்டும் ஈற்றசை நிலைகள்.

வீதிக்கு ஆறு உவமை: ''யாறு கிடந்தன்ன அகல் நெடும் தெருவின்.'' (**மதுரைக்காஞ்சி**, 359) என்று மாங்குடி மருதனாரும், ''ஆறு கிடந்தன்ன அகல் நெடும் தெருவில்.'' (**நெடுநல்வாடை**, 30) என்று நக்கீரனாரும், ''யாறு கிடந் தன்ன அகனெடுந் தெருவில்'' (**நற்றிணை**, 200:3) என்று கூடலூர்ப் பல்கண்ணனாரும், ''யாறெனக் கிடந்த தெரு'' (**மலைபடுகடாம்**, 481) என்று பெருங் கௌசிகனாரும், ''யாறுகண்டன்ன அகன்கனை வீதியுள்.'', ''நீத்தியாற்றன்ன நெடுங்கண் வீதி.'' (பெருங்கதை, 2. 7:7, 5. 7:23) என்று கொங்கு வேளிரும், ''ஓராறாய்ச் சேறுமாய்... மறுகிற் சென்றார்.'' (மிதிலைக் காட்சிப் படலம், 7) என்று கம்பரும் பாடியவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 90-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தக் காஞ்சி மாநகரத்தினுடைய பகுதிகளின் பக்கங்

களில் இரண்டு பக்கங்களிலும் உயரமாக அமைந்து நீளமாக உள்ள பரவும் பிரகாசத்தை வீசும் திருமாளிகைகளினுடைய வரிசைகளில் உள்ள வீடுகளில் வாழும் மென்மையான கூந் தல்களையும், மயில்களைப் போன்ற தோற்றத்தையும் பெற்ற பெண் மணிகள் கூடியிருக்கும் கூட்டம் தெருக்களில் திரிய தொங்கவிட்ட முத்துக்களினுடைய ஒளியை வீசும் மாலைகளினுடைய குளிர்ந்த பான்மை செறிந்த தெருக்கள் ஆகாயத்தில் செறிந்த பிரகாசம் தழைத்து விளங்க நிலை பெற்று விளங்கி நீண்ட பக்கங்களில் நட்சத்திரங்கள் அசைந்து மின்ன எல்லை இல்லாத கரிய நிறத்தைக் கொண்ட மேகங்களை அவற்றின் நடுவில் கிழித்து விட்டு வந்து ஓடும் தெய்வத் தன்மையைக் கொண்ட ஆகாய கங்கையாற்றுக்கு மேலாக பல ஆறுகள் இந்த மண்ணுலகத்தின் மேல் விளக் கத்தைப் பெற்றதை ஒத்துத் திகழும்.' பாடல் வருமாறு:

''பாகமருங் கிருபுடையும் உயர்ந்து நீண்ட
படரொளிமா ளிகைநிரைகள் பயில்மென் கூந்தல்
தோகை யர்தம் குழாம் அலையத்
தூக்குமுத்தின் சுடர்க்கோவைக் குளிர்நீர்மை துதைந்தவீதி
மாகமிடை ஒளிதழைப்ப மன்னி நீடு
மருங்குதா ரகைஅலைய வரம்பில் வண்ண
மேகமிடை கிழித்தொழுகும் தெய்வக் கங்கை
மேல்நதிகள் பலமண்மேல் விளங்கி ஒக்கும்.

பாகம்-அந்தக் காஞ்சி மாநகரத்தினுடைய பகுதிகளின்; ஒருமை பன்மை மயக்கம். மருங்கு-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். இருபுடையும்-இரண்டு சாரிகளிலும்; ஒருமை பன்மை மயக்கம். உயர்ந்து-உயரமாக அமைந்து. நீண்ட-நீளமாக உள்ள. படர்-பரவும். ஒளி-பிரகாசத்தை வீசும். மாளிகை-திருமாளிகைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரைகள்-வரிசைகளில் உள்ள இல்லங்களில்; இட ஆகுபெயர். பயில்-வாழும். மென்-மென்மையாகிய. கூந்தல்-கூந்தல்களையும்; ஒருமை பன்மை மயக்கம். தோகையர்-

மயில்களைப்போன்ற தோற்றப் பொலிவையும்பெற்ற பெண் மணிகள்; உவம ஆகு பெயர். தம்:அசை நிலை. குழாம்-கூடியுள்ள கூட்டம். அலைய-தெருக்களில் திரிய. த்:சந்தி. தூக்கு-தொங்க விட்ட. முத்தின்-முத்துக்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். சுடர்-ஒளியை வீசும். க்:சந்தி. கோவை-கோத்த மாலைகளினுடைய. க்:சந்தி. குளிர்-குளிர்ந்திருக்கும். நீர்மை-பான்மை. துதைந்த-செறிந்த. வீதி-தெருக்கள்; ஒருமை பன்மை மயக்கம். மாகம்-ஆகாயத்தில். மிடை-செறிந்த. ஒளி-பிரகாசம். தழைப்ப-தழைத்து விளங்க. மன்னி-நிலைபெற்று விளங்கி. நீடு-நீளமாக உள்ள. மருங்கு-அந்த மாளிகைகளினுடைய பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். தாரகை-நட்சத்திரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அலைய-அசைந்து மின்ன. வரம்பு-எல்லை. இல்-இல்லாத; கடைக்குறை. வண்ண-கரிய நிறத்தைக்கொண்ட. மேகம்-மேகங்களை; ஒருமை பன்மை மயக்கம். இடை-அவற்றின் நடுவில். கிழித்து-கிழித்து விட்டுவந்து. ஒழுகும்-ஓடும். தெய்வ-தெய்வத் தன்மையைக் கொண்ட. க்:சந்தி. கங்கை-ஆகாய கங்கையாற்றுக்கு. மேல்-மேலாக. நதிகள் பல-பல ஆறுகள். மண்மேல்-இந்த மண்ணுலகத்தின் மேல். விளங்கி-விளங்கினால். ஒக்கும்-போல இருக்கும். பாலாறு முதலிய ஆறுகள் அந்தத் தொண்டை மண்டலத்தில் ஆகாய கங்காநதிக்கு மேலான சிறப்போடு விளங்கும் என்பது கருத்து.

பிறகு உள்ள 91-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'கிளர்ந்து வீசும் பிரகாசத்தைப் பெற்ற சிவந்த தங்கமயமாகி பக்கங்களில் கீழே உள்ள தளத்தில் ஒரு நீல நிறம் படிக்கட்டைப் புனையுமாறு கொள்ளும் வண்ணம் அமைய வைத்து அதற்கு மேல் ஒரு பக்கத்தில் பொற்கொல்லர்கள் வாழும் வீதியை சிறப்பான வயிரங்களைப் பதித்து வைத்து மேற்கோளினால் அளவு இல்லாத சோதிப் பிழம்பாக ஆன விளங்கிய ஏகாம்பரேசுவரரைத் தேடி நிலத்தைத் தோண்டியும்

பன்றி உருவத்தை எடுத்தவனாகிய திருமாலையும் அன்னப் பறவையின் வடிவத்தை எடுத்துக் கொண்டவனாகி வளரும் ஆகாயத்தில் எழுந்து பறந்தவனாகிய பிரம தேவனையும் போல உயர்ந்து நிற்கும் மாளிகைகளும் அந்தக் காஞ்சி மா நகரத்தில் உள்ள ஒவ்வொரு வீதியிலும் இருக்கின்றன." பாடல் வருமாறு:

"கிளரொளிச்செங் கனகமயம் தானாய் மாடு
கீழ்நிலைஓர் நீலச்சோ பானம் பூணக்
கொளஅ மைத்து மீதொருபாற் கன்னசாலை
குலவயிரத் தாலமைத்த கொள்கை யாலே
அளவில்சுடர்ப் பிழம்பானார் தம்மைத் தேடி
அகழ்ந்தேனம் ஆனானும் அன்ன மாகி
வளர்விசும்பில் எழுந்தானும் போல நீடு
மாளிகையும் உளமற்று மறுகு தோறும்."

கிளர்-கிளர்ந்த. ஒளி-பிரகாசத்தை வீசும். க்:சந்தி. செம்-சிவந்த. கனகமயம் தானாய்-தங்க மயமாகி. தான்: அசை நிலை. மாடு-பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். கீழ்நிலை-கீழே உள்ள தளத்தில். ஓர்-ஒரு. நீல-கரிய நிறத்தைப் பெற்ற கருங்கற்களால் கட்டப் பெற்ற. 'நீலம்' என்பது இங்கே கரிய நிறத்தைக் குறித்தது. "நீல நிறக் காக்கை" என வருதலைக் காண்க சோபானம்-படிக்கட்டை. பூண-புனையுமாறு; அலங்காரம் உள்ளதாக. க்:சந்தி. கொள-தோற்றத்தைக் கொள்ளும் வண்ணம்; இடைக் குறை. அமைத்து-கட்டி வைத்து. மீது-அதற்கு மேல். ஒருபால்-ஒரு பக்கத்தில். கன்ன சாலை-பொற்கொல்லர்கள் வாழும் வீதியை. கன்னம்-பொன் வேலை. குல-சிறப்பாக உள்ள. வயிரத்தால்-வயிரங்களை; உருபு மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். அமைத்த-பதித்து வைத்த. கொள்கையால்-மேற்கோளினால். ஏ: அசை நிலை. அளவு இல்-அளவு இல்லாத; கடைக்குறை. சுடர்-ஜோதி. ப்:சந்தி. பிழம்பானார் தம்மை-வடிவமானவராகிய ஏகாம்பரேசுவரரை. தம்: அசை நிலை.

த்:சந்தி. தேடி - தேடுவதற்காக. அகழ்ந்து-நிலத்தைத் தோண்டி. ஏனம் ஆனானும்-பன்றியின் உருவத்தை எடுத்துக் கொண்டவனாகிய திருமாலையும். அன்னம் ஆகி-அன்னப் பறவையின் வடிவத்தை எடுத்துக் கொண்டவனாகி. வளர்-வளரும். விசும்பில்-ஆகாயத்தில். எழுந்தானும்-எழுந்து பறந்தவனாகிய பிரம தேவனையும். போல நீடு-போல உயர்ந்து நிற்கும். மாளிகையும்-திருமாளிகைகளும்; ஒருமை பன்மை மயக்கம். மற்று: அசை நிலை. மறுகு தோறும்-அந்தக் காஞ்சி மாநகரத்தில் உள்ள ஒவ்வொரு வீதியிலும். உள-இருக்கின்றன; இடைக்குறை.

பிறகு உள்ள 92-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தக் காஞ்சி மாநகரத்தில் மின்னலைப் போல விளங்கும் பல மாணிக்கங்களைச் செறியும் வண்ணம் பதித்திருக்கும் வெண்ணிறத்தைப் பெற்ற பளிங்குக் கற்களால் கட்டப் பெற்ற மாடத்தின் மேல் பதித்துள்ள சந்திர காந்தக் கற்கள் ஆகாயத்தின் மேல் தங்கத்தைப் போல விளங்கும் செவ்வந்தி நிறத்தோடு செவ்வந்தி வேளையில் உதயமாகும் அப்பொழுது உதித்த பிறைச் சந்திரனைப் பார்த்து உருகிச் சொரிந்த புனலால் வன்மையைப் பெற்றதும் தாருகா வனத்து முனிவர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு விடுத்ததும் ஆகிய புலியினுடைய தோலை உரித்து அதனைத் தம்முடைய ஆடையாக உடுத்தருளிய அழகிய ஏகாம்பரேசுவரருடைய தலையில் தங்கியிருக்கும் சடாபாரத்தையும் இளம் பருவத்தைக் கொண்ட பிறைச்சந்திரனையும் தரிசித்து அந்த ஈசுவரரைக் கும்பிட்டு விட்டு பக்தியினால் உருக்கத்தை அடைந்து தங்களுடைய திருமேனிகளின் மேல் சொரியுமாறு தங்களுடைய விழிகளிலிருந்து நீர்த்துளிகளை வழிய விடும் அடியவர்களைப் போலவும் கணக்கு இல்லாத மாடங்கள் இருக்கின்றன.' பாடல் வருமாறு:

"மின்பொலிபல் மணிமிடைந்த தவள மாட
மிசைப்பயில்சந் திரகாந்தம் விசும்பின் மீது

பொன்புரையும் செக்கர்நிறப் பொழுது தோன்றும்
புனிற்றுமதி கண்டுருகிப் பொழிந்த நீரால்
வன்புலியின் உரியாடைத் திருஏ கம்பர்
வளர்சடையும் இளம்பிறையும் கண்டு கும்பிட்
டன்புருகி மெய்பொழியக் கண்ணீர் வாரும்
அடியவரும் அனையஉள அலகி லாத."

மின்-அந்தக் காஞ்சி மாநகரத்தில் மின்னலைப் போல. பொலி-விளங்கும். பல்-பல. மணி-மாணிக்கங்களை; ஒருமை பன்மை மயக்கம். மிடைந்த-செறியும் வண்ணம் பதித்துள்ள. தவ்ள-வெண்ணிறத்தைப் பெற்ற. மாடமிசை-பளிங்குக் கற்களால் கட்டப் பெற்ற மாடத்தின் மேல். ப்:சந்தி. பயில்-பதித்துள்ள. சந்திரகாந்தம்-சந்திர காந்தக் கற்கள்; ஒருமை பன்மை மயக்கம். விசும்பின் மீது-ஆகாயத்தின் மேல். பொன்-தங்கத்தை. புரையும்-போல விளங்கும். செக்கர்-செவ்வந்தி. நிற-வர்ணத்தோடு. ப்:சந்தி. பொழுது-செவ்வந்தி வேளையில். தோன்றும்-உதயமாகும். புனிற்று-அப்பொழுது உதயமாகிய. மதி-பிறைச் சந்திரனை. கண்டு-பார்த்து. உருகிப் பொழிந்த-உருகிச் சொரிந்த. நீரால்-புனலால். வன்-வலிமையைப் பெற்றதும்; வினையாலணையும் பெயர். புலியின்-தாருகா வனத்து முனிவர்கள் தம்மைக் கொல்லும் பொருட்டு விடுத்ததும் ஆகிய புலியினுடைய. உரி-தோலை உரித்து. ஆடை-அதனைத் தம்முடைய ஆடையாக உடுத்தருளிய. த்:சந்தி. திரு-அழகிய. ஏகம்பர்-ஏகாம்பரேசுவரருடைய. வளர்-தலையில் தங்கியிருக்கும். சடையும்-சடாபாரத்தையும். இளம்-இளம் பருவத்தைக் கொண்ட. பிறையும்-பிறைச் சந்திரனையும். கண்டு-தரிசித்து. கும்பிட்டு-தங்களுடைய கைகளைத் தலைகளின் மேல் வைத்துக் கும்பிட்டு விட்டு. அன்பு-பக்தியினால். உருகி-உருக்கத்தை அடைந்து. மெய்-தங்களுடைய திருமேனிகளின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். பொழிய-சொரியுமாறு. க்:சந்தி. கண்-தங்களுடைய விழிகளிருந்து; ஒருமை பன்மை மயக்கம்.

நீர்-நீர்த்துளிகளை; ஒருமை பன்மை மயக்கம். வாரும்-வழிய விடும். அடியவரும் அனைய-ஏகாம்பரேசுவரருடைய அடிய வர்களைப் போலவும். அடியவரும்: ஒருமை பன்மை மயக்கம். அலகு-கணக்கு. இலாத-இல்லாத மாடங்கள்; வினையாலணையும் பெயர்; இடைக்குறை. உள-அந்த நகரத்தில் இருக்கின்றன; இடைக்குறை.

சிவபெருமானார் அழகியவர்: "எழிலார் தரும் இறைவர்க்கு.", "திருப்புன்கூர்,அழகர்.", "எழிலார் மருதரை.", "அழகன் அன்னியூர்க் குழகன்.", "கரியுரி போர்த்துகந்த எழிலவன்.", "வெண் நாவலின் மேவிய எம் அழகா.", "எரியாடும் அழகன்.", "நாகேச்சரத்தழகர்.", "அழகரை அடிகளை.", "கருகாவூர் எம் அழகர்.", "அனலாடிய ஆரழகன்.", "காளி ஏத்தும் அழகனார்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "எழிலார் இராச சிங்கத்தை.", "யானையின் தோல் மலை மகள் வெருவப் போர்த்த அழகனே.", "அழகனே ஆல வாயில் அப்பனே.", "அழகனை நினைந்த நெஞ்சம் அழகிதாம்.", "அழகன் அடி நிழற் கீழதன்றோ என்றன் ஆருயிரே.", "எழிற் பெருஞ் சோதியை.","காலனைச் சாடிய அழகனே." "அழகன் ஆவடுதண்டுறையா.","அழகனே கழிப்பாலை எம் அண்ணலே.","ஐயனே அழகே.","சேறையிற் செந்நெறிமேவிய அழகனார்.", "அழகனை ஆரூரில் அம்மான்தன்னை.", "அணியாரூர் இடம் கொண்ட அழகா.", "அழகாய பொன்னார் மேனி.", "எழிலானை இடை மருதின் இடம் கொண்டானை.", "கருமணி போற் கண்டத் தழகன்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அழகா.", "திருப்புத்தூர் அழகனீரே.", "சங்கக் குழையார் செவியா அழகா.", என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "சுந்தர வேடத் தொரு முதல் உருவு கொண்டு.", "சுந்தரத் தன்மையொடு துதைந்திருந்தருளியும்.", "அருமையில் எளிய அழகே போற்றி.", "நிரம்ப

அழகியர்." என்று மாணிக்க வாசகரும், "ஒழுகு நீர்க்கங்கை அழகரே." என்று கருவூர்த் தேவரும், "அமரர் போற்ற அழகன் ஆடுமே.", "அனல் கைஏந்தி அழகன் ஆடுமே." என்று திருவாவிய முதனாரும், "சுந்தரக் கூத்தனை.", "சுந்தரக் கூத்தனை என் சொல்லுமாறே." என்று திருமூலரும், "அனல் கைஏந்தி அழகன் ஆடுமே." என்று காரைக்கால் அம்மையாரும், "கோல மேனியை." என்று நக்கீர தேவ நாயனாரும், "அழகறிவிற் பெரிதாகிய ஏகம்பர்.", "அமரர் போற்றி அழகா போற்றி." என்று பட்டினத்து பிள்ளையாரும், "நீற்றழகர் பாட்டு வந்த.", "திருவாரூர் அணிவீதி அழகர்.", "ஆமாத்தூர் அழகர்." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 93-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மேகங்கள் தவழும் துவசங்களைக் கட்டியுள்ள உச்சித் தளங்களை உடையவையும், முழுவதும் பளிங்குக் கற்களால் கட்டி அமைத்த திருமாளிகைகளில் முழுவதும் இந்தப் பூமண்டலத்தில் சுற்றி உலாவும் ஒப்பு இல்லாத சரங்களும் அசரங்களும் ஆகிய யாவும் அந்தத் திருமாளிகைகளின் ஒளியினால் நிரம்பியிருப்பதனால் நிறைந்த தவத்தைப் புரிந்த இமாசல அரசனுடைய புதல்வியும், பொம்மையைப் போல அழியாத அழகைப் பெற்றவளும் ஆகிய காமாட்சி அம்மை தம்மைத் தழுவிக் கொண்ட போது அந்த அம்மையினுடைய கொங்கைகள் அழுந்திய தழும்புகளையும், அந்த அம்மை தன்னுடைய திருக்கரங்களில் அணிந்திருக்கும் வளைகளினுடைய தழும்புகளையும் புனைந்திருக்கும் அந்த அம்மையினுடைய கணவராகிய ஏகாம்பரேசுவரர், நான்கு முகங்களைப் பெற்ற பிரமதேவனுக்கு உயிர்களுக்கு உடம்புகளை அமைக்கும் பொருட்டு வழங்கியருளும் இந்த உலகத்தில் வாழும் எண்பத்து நான்கு லட்சம் யோனிகள் எல்லாவற்றையும், உண்டாக்கி வைத்துள்ள அருமையும்

பெருமையும் கொண்ட களஞ்சியத்தினுடைய நிலையைப் போன்றவையாக அந்த மாளிகைகள் காஞ்சி மாநகரத்தில் விளங்கும்.' பாடல் வருமாறு:

"முகில் உரிஞ்சும்கொடி தொடுத்தமுடிய ஆகும்
முழுப்பளிங்கின் மாளிகைகள் முற்றும் சுற்றும்
நிகரில்சரா சரங்கள் எல்லாம் நிழலினாலே
நிறைதலினால் நிறைதவம்செய் இமயப் பாவை
நகில்உழுத சுவடும்வளைத் தழும்பும் பூண்ட
நாயகனார் நான்முகற்குப் படைக்க நல்கும்
அகிலயோ னிகள்எல்லாம் அமைத்து வைத்த
அரும்பெரும்பண் டாரநிலை அனைய ஆகும்."

முகில்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உரிஞ்சும்—தடவித் தவழும். கொடி-துவசங்களை; ஒருமை பன்மை மயக்கம். தொடுத்த-கட்டியுள்ள. முடிய-உச்சித் தளங்களை உடையவை. ஆகும்-ஆக விளங்கும். முழு-முழுவதும். ப்: சந்தி. பளிங்கின்-பளிங்குக் கற்களால் கட்டி அமைத்த; ஒருமை பன்மை மயக்கம். மாளிகைகள்-மாளிகைகளில். முற்றும்-முழுவதும். சுற்றும்-இந்தப் பூ மண்டலத்தில் பல ஊர்களில் சுற்றி உலாவும். நிகர்-ஒப்பு. இல்-இல்லாத; கடைக்குறை. சராசரங்கள்-சரிப்பவை ஆகிய மக்கள், விலங்குகள், பறவைகள், ஊர்வன, புழு, பூச்சி, நீர் வாழ் பிராணிகள் ஆகியவையும் சரிக்காதவை ஆகிய பல வகையான மரங்களும், செடிகளும், கொடிகளும். எல்லாம்-ஆகிய எல்லாவற்றையும். நிழலினால் -அந்தத் திருமாளிகைகள் வீசும் ஒளியினால். ஏ: அசை நிலை. நிறைதலினால்-நிரம்பியிருப்பதனால். நிறை-நிறைந்த. தவம் -தவத்தை. செய்-புரிந்தருளிய. இமய-இமாசல அரசனுடைய புதல்வியும்; திணை மயக்கம். ப்:சந்தி. பாவை-பொம்மையைப் போல என்றும் அழியாத அழகைப் பெற்றவளும் ஆகிய காமாட்சி அம்மை; உவம ஆகுபெயர். நகில்-தம்மைத் தழுவிக் கொண்ட போது அந்த அம்மையினுடைய கொங்கைகள்; ஒருமை பன்மை மயக்கம். உழுத-அழுந்திய. சுவடும்—

தழும்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். வளை-அந்த அம்மை தன்னுடைய திருக்கரங்களில் அணிந்திருக்கும் வளைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தழும்பும்-தழும்புகளையும்; ஒருமை பன்மை மயக்கம். பூண்ட-புனைந்து கொண்ட. நாயகனார்-அந்த அம்மையினுடைய கணவராகிய ஏகாம்பரேசுவரர். நான்முகற்கு-நான்கு முகங்களைப் பெற்ற பிரமதேவனுக்கு; முகம்: ஒருமை பன்மை மயக்கம் ப்: சந்தி. படைக்க-உயிர்களுக்கு உடம்புகளை அமைக்கும் பொருட்டு. நல்கும்-வழங்கிய நளும். அகில-இந்த உலகத்தில் வாழும். யோனிகள்-எண்பத்து நான்கு லட்சம் யோனிகள். யோனிகள்-பிறப்பைப் பெற்ற உயிர்கள். எல்லாம்-எல்லாவற்றையும். அமைத்து வைத்த-உண்டாக்கினவத்துள்ள. அரும்-அருமையையும். பெரும்-பெருமையையும் பெற்ற. பண்டார-களஞ்சியத்தினுடைய; கருவூலத்தினுடைய. நிலை-நிலையை. அனைய-போன்றவையாக. ஆதும்-அந்த மாளிகைகள் காஞ்சி மாநகரத்தில் விளங்குபவை ஆகும்

பெண் மணிக்குப் பாவை உவமை: "பாடக மெல்லடிப் பாவை யோடும்.", "அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்.", "துய்ப்பனவும் காணாதே போதியோ பூம்பாவாய்.", "விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்.", "ஆதிரை நாள் காணாதே போதியோ பூம்பாவாய்.", "தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்" "நட்டமாடல் காணாதே போதியோ பூம்பாவாய்.", "ஒலி விழாக் காணாதே போதியோ பூம்பாவாய்.", "கண்ணாரக் காணாதே போதியோ பூம்பாவாய்.", பொற்றாப்புக் காணாதே போதியோ பூம்பாவாய்.", "பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்.", "கல்லினற் பாவை ஓர் பாகத்தர்.", "வளவர் கோன் பாவை." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "காவிரிப் பூம்பாவை வாய் முத்திலங்க.", "இன்சொற் பாவை ஓர் பாங்கா.",

"பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனை.", "பாடகம் சேர் மெல்லடி நற்பாவையாளும்.", "மலையார் பொற் பாவையொடு." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "பவள கனிவாய்ப் பாவை பங்கன்." என்று சுந்தர மூர்த்தி நாயனா ரும், "ஈதே எம்தோழி பரிசலோரெம் பாவாய்.","ஈசனார்க் கன்பார் யாமாரேலோ ரெம்பாவாய்.", "இத்தனையும் வேண்டும் எமக் கேலோரெம் பாவாய்.", "குறையில் துயி லேலோரெம்பாவாய்.", "ஏலக்குழலி பரிசலோரெம் பாவாய்.", "ஏனோர்க்கும் தம்கோனைப் பாடேலோரெம் பாவாய்.", "என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய்.", "ஏழை பங்காளனையே பாடேலோரெம் பாவாய்.","என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய்.", "ஏதவனைப் பாடும் பரிசேலோரெம் பாவாய்.", "எய்யாமற் காப்பாய் எமையேலோரெம் பாவாய்.", "ஏத்தி இருந்தனை நீர் ஆடேலோரெம்பாவாய்.", "பங்கயப் பூம்புனல் பாய்ந்தா டேலோரெம் பாவாய்.", "பாதத் திறம்பாடி ஆடேலோரெம் பாவாய்.", "பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.", "பொழியாய் மழையேலோரெம்பாவாய்.","பெண்ணே இப் பூம்புனல் பாய்ந்தாடேலோ ரெம்பாவாய்.", "எங்கெழி லென் ஞாயிறெமக்கேலேரெம்பாவாய்.", "போற்றியாம் மார்கழி நீர் ஆடேலோரெம்பாவாய்.", "மலையரையன் பொற்பாவை." என்று மாணிக்க வாசகரும், "மெல்லிசைப் பாவை வியோமத்தின் மென்கொடி, பல்லிசைப் பாவை பயன்தரு பைங்கொடி, புல்லிசைப் பாவையைப் போகத் துரந்திட்டு, வல்லிசைப் பாவை மனம் புகுந்தானே." என்று திருமூலரும், "பாவையை விலக்காது.", "பாவை கொண் டாடும் இப் பாவைக்கு." என்று சேரமான் பெருமாள் நாயனாரும், "இமவான் பயந்த மடப்பாவை.", "பாவை ஆடிய துறையும் பாவை மருவொடு வளர்த்த அன்னமும்.", "வெற்பன் மடப்பாவை." என்று நக்கீரதேவ நாயனாரும், "பாய் திரைப் பாவை.", "இள்முலைப் பாவையுடன்

இருந்த பரமயோகி." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "கயற்கண் மலை மடப் பாவைக்கு.", "மாதரார் பாவை ஒலியும்." என்று நம்பியாண்டார் நம்பியும், "பாவை பாகர்." என்று உமாபதி சிவமும், "பஞ்சின் மெல்லடிப் பாவையர்.", "பரவையாம் பாவை தந்த படர்பெரும் காதலும்.", "பாவை பங்கர்க்கு.", "இன்புறப் பயந்த பாவை.", "பாவை மேல் விழுந்தழுதது.", "பாவை பாகனைப் பரிவுறு பண்பினாற் பரவி.", "பணிவளர் அல்குற் பாவை.", "பாவை பாகர் தமைப் பணிந்து.", "தென்னர் குலப் பழி தீர்த்த தெய்வப் பாவை." என்று சேக்கிழாரும், "பாரோர் புகழப் படிந்தே லோரெம்பாவாய்.", "உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.", "நீங்காத செல்வம் நிறைந்தேலோரெம் பாவாய்.", "மார்கழி நீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய்.", "தீயினில் தூசாகும் செப்பேலோரெம்பாவாய்.", "உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.", "தேசமுடையாய் "ஆவாவென்றாராய்ந்தருளேலோரெம்பாவாய்.", "நாமம் பலவும் நவின்றேலோரெம்பாவாய்.", "தோற்றமாய் வந்து திறவேலோரெம்பாவாய்.", "எற்றுக் குறங்கும் பொருளேலோரெம்பாவாய்.", "அனைத் தில்லத் தாரும் அறிந்தேலோரெம்பாவாய்.", "கள்ளம் தவிர்ந்து கலந்தே லோரெம்பாவாய்.", "பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.", "மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.", "நேய நிலைக்க தவம் நீக்கேலோரெம்பாவாய்.", "உம்பியும் நீயும் உறங்கேலோரெம்பாவாய்.", "வந்து திறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய்.", "தத்துவம் அன்று தகவே லோரெம்பாவாய்.", "இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.". "போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.", "எங்கள் மேற் சாபம் இழிந்தேலோரெம் பாவாய்.", "காரியம் ஆராய்ந்தருளேலோரெம்பாவாய்.", "இன்று யாம் வந்தோம் இரங்கே லோரெம்பாவாய்.". வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.", "ஆவி

ணிலையாய் அருளேலோரெம்பாவாய்.'', ''கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.'', ''இறைவா நீ தாராய் பறையேலோரெம்பாவாய்.'', ''மற்றை நம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.'', ''எங்கும் திருவருள் பெற்றின்புறுவர் எம்பாவாய்.'' என்று ஆண்டாளும், ''பாவாய் இது நமக்கோர் பான்மையே ஆகாதே.'' என்று திருமங்கை ஆழ்வாரும், ''பாவை போய் இனித் தண்பழனத் திருக்கோளூர்க்கே.'', ''பாவைகள் தீர்க்கிற்றிரே வினையாட்டியேன் பாசறவே.'' என்று நம்மாழ்வாரும், ''பசும்பொன் புனைந்த பாவை, செல்சுடர்ப் பசுவெயில் தோன்றியன்ன செய்யர்.'', ''வரிப்புனை பாவை, முருகியன்றன்ன உருவினையாகி.'' (மதுரைக் காஞ்சி, 410-12:23-4), ''பொறியறு பாவையின் அறிவறக் கலங்கி.'', ''எல்லொளிப் பாவையைக் கல்லெனச் சுற்றி.'', ''பாவை நோக்கித் தாரணங் கெய்தி.'', ''புது மரப் பாவை பொறியாற்றாங்கு, விருப்புறு நடுக்கமொடு.'', ''பாவை பிரிவினைக் காவலன் உணர்த்தலின்.'', ''பைவிரி அல்குற் பாவாய்.'', ''பூநுதற் பாவையை.'', ''பொன்புனை பாவையும் போகுதல் வலிப்ப.'', ''கட்டளை பாவை கடுப்பத் தோன்றி.'', ''பாவையருள்ளும் ஓவா வாழ்க்கை, ஏசுவதில்லா வாசவதத்தையும்.'', ''பன்மணிப் பாவை கண்ணிய காதல்.'', ''பாவைக் கருத்து மெய் தெரிதல்.'', ''பெருமணிப் பாவையிற் பிறந்தனை.'', ''பாவையும் யானும் பண்புளிச் சூடுகம்.'', ''மெழுகு செய் பாவையின் மெல்லியல் அமைந்து.'', ''பொறியறு பாவையின் முடிமிசை அணிந்த முத்தொடு பன்மணி, விடுசுடர் விசும்பின் மீனெனச் சிதற.'', ''பொற்பூம் பாவை காதணி கலத்தொடு.'', ''செல்வப் பாவை சென்றினிது பிறந்தூழி.'', ''பாவை வினவ'', ''அன்பு புரி பாவை ஆடிய பொய்கையுள்.'' (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், ''பாவை அன்னவர் பந்து புடைத்தலின்.'', ''ஒருமணி குயின்ற பாவை ஒன்று கொல்.'', ''ஓவியப் பாவை ஒத்தார்.'',

"இலங்கு பாவை இருமணம் சேர்த்துவார்.", "ஓர் பாவை பந்தாடுகின்றாள்.", "பெருமகன் காதற் பாவை.", "நன் பொற் பாவை, பொற் பொறி கழல எல்லாப் பொறிகளும் கழல்வதே போல்." (சீவக சிந்தாமணி, 125, 549, 699, 1319, 1951, 2177, 2886) என்று திருத்தக்க தேவரும், "பாடகச் செம்பதும மலர்ப் பாவையர்." (திருவவதாரப் படலம், 62), "விஞ்சைப் பாவையர் வைகத் தீயந்த பல்லவ சயனம் கண்டார்." (வரைக் காட்சிப் படலம், 49), "பாவையர் பணிமென் கொம்பை நோக்கினர் பரிந்து நிற்பார்." (பூக்கொய்ப் படலம், 11). "பாவைமார் பரந்த கோலப் பண்ணையிற் பொலிவாள்." (நீர் விளையாட்டுப் படலம், 15), "பஞ்சி சூழ் மெல்லடிப் பாவைமார்." (எதிர்கோட் படலம், 32), "மழுதிலா ஒரு பாவையன்னாள்." (உலாவியற் படலம், 25), "பஞ்சி மென்றளிரடிப் பாவை." (மந்திரப் படலம், 19), "பாவையர் முகமென்ன முன்னம் மலர்ந்த பங்கய ராகியே." (கைகேசி சூழ்வினைப் படலம், 62), "புவிப்பாவை பரம் கெட." (நகர் நீங்கு படலம், 127), "பஞ்சின் மெல்லடிப் பாவையும் ஆடினாள்." (கங்கைப் படலம், 20), "பாவையும் அதனைக் கேளா." (சடாயு உயர்நீத்த படலம், 86), "பாவையர் குழாங்கள் சூழ.", "பாவை பேசுவபோற்கண் பனிப்புற." (ஊர்தேடு படலம், 120, 173), "பாவை நின் பொருட்டினாலே." (நிந்தனைப் படலம், 69), "எழுது பாவையும் ஏத்தினள்." (சூடாமணிப் படலம், 89), "பாவைமார் நறும் குழல்களும் பரிமளம் கமழ்ந்த." (இலங்கை எரியூட்டு படலம், 40), "பாவையும் இனிவேறெண்ணல்." (திருவடி தொழுத படலம், 11), "பாவை நீ இவனின் வந்த பயன் பழுதாவதன்றால்." (மாயா சனகப் படலம், 44), "பாவையர் குழுவை." (மீட்சிப் படலம், 170) என்று கம்பரும் பாடியவற்றையும், "பாவை தன் வயிற்றோன்றினன் எழில் மணிப் புதல்வன்." (புலத்தியப் படலம், 16), "பொருப்பரையன்

மடப்பாவை.'' (வரையெடுத்த படலம், 76), ''பொருள் தேர் பாவையர்க்கும் உண்டோ பதி.'' (திக்கு விசயப் படலம், 160), ''பாவையைத் தனுவகத்துப் பாரியாச் சங்கற் பித்து.'' (அசுவமேத யாகப் படலம், 141), என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

பிறகு வரும் 94-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தங்கத்தைப் பதித்தவையும், சுண்ணாம்பை அடித்த வையும் ஆகிய திருமாளிகைகளின் மீது நிலா முற்றங்களில் நின்று கொண்டு அழகிய கழற் கோடிகளையும் அழகிய பந்துகளையும் விரும்பி ஆடும் விற்களைப் போன்ற புருவங் களையும் பூங்கொடிக்களைப் போன்ற தோற்றப் பொலிவை யும் கொண்ட மடப்பமுடைய பெண்மணிகள் தாங்கள் அணிந்து கொண்டிருக்கும் அணிகலன்களை அவ்வாறு ஆடுவ தனால் தரையில் படிந்து விழுபவைகளும் அவர்களோடு பொருந்திய தோழிகளாக மேவிய பெண்மணிகள் காதல் முதிர்ந்த புணர்ச்சியில் அவிழ்ந்து தரையில் விழும் ஆபரணங் களையும் மாணிக்கங்களையும் அந்தத் தோழிமார்கள் சேர்த்துக் குவிக்கும் அவைகளும் ஆக அமைந்து நல்ல பொன் மாரியே அல்லாமல் காஞ்சி மாநகரத்தின் எல்லைக்குள் மாணிக்கம், பவளம், முத்து, வைடூரியம், மரகதக்கல், பதும ராகம், புட்பராகம், நீலமணி, வஜ்ரம் ஆகிய நவரத்தினங் களின் மழையும் ஒவ்வொரு நாளும் சொரியும்.' பாடல் வருமாறு:

'' பொற்களப மாளிகைமேல் முன்றில் நின்று
பூங்கழங்கும் மணிப்பந்தும் போற்றி ஆடும்
விற்புருவக் கொடிமடவார் கலன்கள் சிந்தி
விழுவனவும் கெழுவுதுணை மேவும் மாதர்
அற்புமுதிர் கலவியினிற் பரிந்து சிந்தும்
அணிமணிச்சே டியர்தொகுக்கும் அவையும் ஆகி
நற்கனக மழையன்றிக் காஞ்சி எல்லை
நவமணிமா ரியும்பொழியும் நாளும் நாளும்.''

பொன்-தங்கத்தைப் பதித்தவையும்; ஆகு பெயர். களப -சுண்ணாம்பை அடித்தவையும்; ஆகு பெயர். மாளிகை மேல்-திருமாளிகைகளின் மேல் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். முன்றில்-நிலா முற்றங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நின்று-நின்று கொண்டு. பூங்கழங்கும்-அழகிய கழற் கோடிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். மணி-அழகிய. ப்:சந்தி. பந்தும்-பந்துகளையும்; ஒருமை பன்மை மயக்கம். போற்றி ஆடும்-விரும்பி ஆடும். வில்-விற்களைப் போன்ற ஒருமை பன்மை மயக்கம். புருவம்-புருவங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கொடி-பூங்கொடிகளைப் போன்ற தோற்றப் பொலிவையும்; உவம ஆகு பெயர். ஒருமை பன்மை மயக்கம். மடவார்-கொண்ட மடப்பத்தை யுடைய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். கலன்கள் -தாங்கள் அணிந்து கொண்டிருக்கும் அணிகலன்களை; அவை யாவன: உச்சிப்பூ, அராக்கொடி, தோடுகள், அட்டிகை, வங்கிகள், காசு மாலை, முத்து மாலை, நவரத்தின மாலை, கைகளில் தங்கக் கங்கணங்கள், தங்க வளையல்கள், முத்து வளையல்கள், விரல்களில் மோதிரங்கள், ஒட்டியாணம், கால்களில் சிலம்புகள், காப்புக்கள், மெட்டிகள் முதலியவை. சிந்தி-அவ்வாறு ஆடுவதனால் தரையில் படிந்து. விழு வனவும்-விழுபவைகளும். கெழுவு-அவர்களோடு பொருந்திய சேர்ந்துள்ள. துணை-தோழிகளாக; திணை மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். மேவும்-மேவியிருக்கும். மாதர்-பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். அற்பு-காதல். முதிர்-முதிர்ந்த. கலவியினில்-தங்களுடைய கணவர்க ளோடு செய்யும் புணர்ச்சியில். பரிந்து-அவிழ்ந்து. சிந்தும்-தரையில் விழும். அணி-மேலே கூறிய அணிகலன்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மணி-நவரத்தினங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சேடியர் - அந்தத் தோழிமார்கள். தொகுக்கும்-சேர்த்துக் குவிக்கும். அவையும் ஆகி-அவைகளும் ஆக-அமைந்து. நல்-நல்ல

கனக மழை-பொன் மாரியே. அன்றி-அல்லாமல். க்:சந்தி. காஞ்சி-காஞ்சி மாநகரத்தினுடைய. எல்லை "எல்லைக்குள் இருக்கும் தெருக்களில் உள்ள மாடங்களில்; ஆகு பெயர். நவமணி-மாணிக்கம், பவளம், முத்து, வைடூரியம், மரகதம், பதுமராகம், புட்பராகம், நீலமணி, வஜ்ரம் ஆகிய நவரத்தினங்களின். மணி: ஒருமை பன்மை மயக்கம். மாரியும்-மழையும். நாளும் நாளும்-ஒவ்வொரு நாளிலும். பொழியும்-சொரியும்.

மகளிர் புருவத்துக்கு வில் உவமை: "வில்லடைந்த புருவ நல்லாள்.", "வில்லை வென்ற நுண்புருவ வேல் நெடுங் கண்ணி." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "வில்லேர் புருவத்துமையாள்.", "வில்லருளி வருபுருவத் தொருத்தி." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "ஈசன் சிலையும் புருவமும்." என்று சேரமான் பெருமாள் நாயனாரும், "திண்சிலை புருவமாக." (பூக்கொய் படலம், 4), "விற்றங்கு புருவம்," (உலாவியற் படலம், 13), "வெம் புருவம் போர் வில் மெல்லியர்." (கிட்கிந்தைப் படலம்,47), "புருவத்துக் குவமை வைக்கின் தாளொக்க வளைந்து நிற்ப இரண்டில்லை அனங்க சாபம்." (நாட விட்ட படலம், 55) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பிறகு வரும் 95-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'செந்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் திருமகளுக்குத் தங்கும் இடம் என்று கூறும் பான்மையை உடையவை ஆக விளங்கும் தங்கத்தைப் பதித்திருக்கும் மாடங்களின் மேல் உள்ள நிலா முற்றங்களில் விளங்குமாறு நின்று கொண்டு பெரிய மகரக் குழைகளைத் தங்களுடைய காதுகளில் அணிந்து கொண்டிருக்கும் பெண்மணிகளும் வலிமையைப் பெற்ற ஆடவர்களும் அந்த நிலா முற்றங்களுக்கு வந்து அந்த நிலா முற்றங்களின்மேல் சென்று ஏறுவதற்கு முன்னால் நறுமணம் கமழும் நீரோடு சேர்த்து அந்தப் பெண் மணிகள் வண்டல் என்னும் விளையாட்டை ஆட, பரிசுத்த

மான மாணிக்கத்தையும் தங்கத்தையும் அணிந்த வாயைப் பெற்ற நீர்வீசு கருவி நீரை வீசி அடிக்கும் ஒளியை வீசும் சிவந்த குங்குமப் பூக்களைக் கரைத்திருக்கும் புனலின் துளிகள் படிந்த விருப்பத்தை உண்டாக்கும் அழகிய கோபுரத்தின் நாசிகை என்னும் உறுப்பின் பக்கத்தில் தங்கித் தவழும் கருமையான மேகங்கள் அந்தக் குங்குமப் பூக்களைக் கரைத்திருக்கும் நீரை வீசியதால் சிவந்த நிறத்தைப் பெற்றிருக்கும் மேகங்களாகிய தோற்றத்தைத் தரும்.' பாடல் வருமாறு:

"பூமகளுக் குறையுளெனும் தகைய ஆன
பொன்மாடத் தரமியங்கள் பொலிய நின்று
மாமகரக் குழைமகளிர் மைந்தர் அங்கண்
வந்தேறு முன்நறுநீர் வண்டல் ஆடத்
தூமணிப்பொன் புனைநாளத் துருத்தி வீசும்
சுடர்விடுசெங் குங்குமநீர்த் துவலை தோய்ந்த
காமர்மணி நாசிகையின் மருங்கு தங்கும்
கருமுகில்கள் செம்முகில்க ளாகிக் காட்டும்."

பூமகளுக்கு-செந்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் திருமகளுக்கு. உறையுள்-தங்கும் இடம்; வாசத்தானம். எனும்-என்று கூறும்; இடைக்குறை. தகைய ஆன-பான்மையை உடையவையாக உள்ள. பொன்-தங்கத்தைப் பதித்திருக்கும். மாடத்து-மாடங்களின் மேல் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். அரமியங்கள் - நிலா முற்றங்களில். பொலிய - தோற்றப் பொலிவு அமைய. நின்று-நின்று கொண்டு. மா-பெரிய. மகரக்குழை-தங்களுடைய காதுகளில் மகரக் குழைகளை அணிந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மகளிர்-பெண்மணிகளும். மைந்தர்-வலிமையைப் பெற்ற ஆடவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். அங்கண்-அந்த நிலா முற்றங்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம்; 'அழகிய நிலா முற்றங்களாகிய இடங்களுக்கு.' எனலும் ஆம். கண்: ஒருமை பன்மை

மயக்கம். வந்து ஏறுமுன்-வந்து ஏறுவதற்கு முன்னால். நறு-நறுமணம் கமழும். நீர்-நீரோடு சேர்த்து. வண்ட ஆடல் வண்டல் என்னும் விளையாட்டை அந்தப் பெண்மணிகள் ஆட. த்:சந்தி. தூ-தூய்மையாகிய. மணி-மாணிக்கத்தை-யும். ப்:சந்தி. பொன்-தங்கத்தையும். புனை-அணிந்த. நாள-வாயைப் பெற்ற. த்:சந்தி. துருத்தி-நீர் வீசு கருவி. வீசும்-நீரை வீசி அடிக்கும். சுடர்-ஒளியை. விடு-வீசும். செம்-சிவந்திருக்கும். குங்கும-குங்குமப் பூ களைக் கரைத்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-புனலின். த்:சந்தி. துவலை-துளிகள்; ஒருமை பன்மை மயக்கம். தோய்ந்த-படிந்த. காமர்-விருப்பத்தை உண்டாக்கும்; 'அழகு மருவிய' எனலும் ஆம். மணி-அழகிய. நாசிகையின்-மூக்கணை என்னும் உறுப்பின். மருங்கு-பக்கத்தில். தங்கும் - தங்கித் தவழும். கருமுகில்கள்-கருமையான மேகங்கள். செம்முகில்கள் ஆகி-அந்தக் குங்குமப் பூக்களைக் கரைத்திருக்கும் நீரை வீசியதால் சிவந்த நிறத்தைப் பெற்றிருக்கும் மேகங்கள் ஆகி. க்:சந்தி. காட்டும்-ஒரு தோற்றத்தைக் காண்பிக்கும்.

பிறகு வரும் 96-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பனி மிகுதியாகக் கொண்ட உயர்ந்த இமய மலையையும் வேறு மலைகளையும் போல விளங்கும் சுண்ணாம்பை அடித்த பளிங்குக் கற்களாற் கட்டியுள்ள திருமாளிகைகளினுடைய உயரமான சிகரங்களினுடைய உயரமான உச்சிகளுக்கு ஏறும் படிகளினுடைய வரிசையும் ஆகாயமும் அறிவதற்கு அருமையாக உள்ள பரிசுத்தத்தால் அந்தப் படிகளில் சேர்ந்து கொண்டு தங்களுடைய பந்துக்களோடு இறங்கியும் ஏறியும் செல்லுகின்ற வலிமையைப் பெற்ற ஆடவர்களையும், பெண்மணிகளையும் தேவலோகத்திலிருந்து இறங்கி வரும் தேவர்களையும் தெய்வலோகத்துப் பெண்மணிகளையும் வேறு வேறாகத் தெரிந்து கொள்வதற்கு அருமையாக இருக்கும் பான்மையைப் பெற்றவையாகிய திருமாளிகைகள் அந்தக் காஞ்சி மாநகரத்தில் பல உண்டு.' பாடல் வருமாறு:

"இம்மலிய எடுத்தநெடு வரைகள் போல
இலங்குசுதைத் தவளமா ளிகைநீள் கோட்டுச்
சிமையடையும் சோபான நிரையும் விண்ணும்
தெரிவரிய தூய்மையினால் அவற்றுட் சேர்ந்து
தமர்களுடன் இழிந்தேறு மைந்தர் மாதர்
தங்களையும் விசும்பிடைநின் றிழியா நிற்கும்
அமரரையும் அரமகளிர் தமையும் வெவ்வே
றறிவரிதாம் தகைமையன அனேகம் அங்கண்."

இமம்-பனி. மலிய-மிகுதியாக. எடுத்த-படிந்துள்ள. நெடு-உயரமாகிய. வரைகள் போல-இமய மலையையும் வேறு மலைகளையும் போல. இலங்கு-விளங்கும். சுதை-சுண்ணாம் பைத் தீற்றிய. த்:சந்தி. தவள-பளிங்குக் கற்களால் கட்டி யுள்ள; ஒருமை பன்மை மயக்கம். மாளிகை-திருமாளிகை களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நீள்-உயரமான. கோட்டு-சிகரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சிமை-உச்சிகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அடையும்-ஏறும். சோபான -படிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரையும்-வரிசையும். விண்ணும்-ஆகாய மும். தெரிவரிய-வேறுபாடு அறிந்து கொள்வதற்கு அருமை யாக உள்ள. தூய்மையினால்-பரிசுத்தத்தால். அவற்றுள்-அந்தப் படிகளில். சேர்ந்து-சேர்ந்து கொண்டு. தமர்களுடன்-தங்களுடைய பந்துக்களோடு. இழிந்து-இறங்கியும். ஏறு-ஏறி யும் செல்லுகின்ற. மைந்தர்-வலிமையைப் பெற்ற ஆடவர் களையும்; ஒருமை பன்மை மயக்கம். மாதர் தங்களையும்-பெண்மணிகளையும். தம்: அசைநிலை. விசும்பிடை நின்று-தேவலோகத்திலிருந்து. இழியா நிற்கும்-இறங்கி வரும். அமரரையும்-தேவர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அரமகளிர் தமையும்-தெய்வலோகத்துப் பெண்மணிகளை யும். தம்: அசை நிலை. வெவ்வேறு-வேறு வேறாக. அறிவரி தாம்-தெரிந்து கொள்வதற்கு அருமையாக இருக்கும். தகை மையன-பான்மையைப் பெற்றவையாகிய; 'தகுதியைப்

பெற்றவையாகிய' எனலும் ஆம். அங்கண்-அந்தக் காஞ்சி மாநகரத்தில். அனேகம்-திருமாளிகைகள் பல உண்டு.

அடுத்து உள்ள 97-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஓசையை உண்டாக்கும் உயரமாக விளங்கும் இரதங்கள் ஓடும் ஒரு தெருவுக்குச் சமீபத்தில் உயரமாக நிற்கும் மாடங்களில் உள்ள அழகான அடிக்கும் மணியைத் தொங்கவிட்ட கோபுர வாசலுக்குப் பக்கத்தில் பரவிய இடத்தையும் நீளமாக இருக்கும் இயல்பையும் பெற்றுக் கலந்திருக்கும் பச்சை ஒளி வெள்ளம் வீசும் யாகசாலைகளினுடைய திண்ணைகளின் ஓரத்தில் பிரகாசம் ததும்பும் முறையில் அமைந்திருக்கும் படிகளின் மேல் ஏறிச் செல்லும் குரா மலர்கள் மலருமாறு அணிந்த கூந்தல்களைப் பெற்ற மடப்பத்தைக் கொண்ட பெண்மணிகள் தங்களுடைய பாதங்களில் பூசும் குழம்பாக அமைந்துள்ள செம்பஞ்சின் அடையாளத்தின் அழகு, கடலில் வீசும் நீளமாக இருக்கும் அலைகளின் மேல் திகழ்ந்து காணப்படும் பவளக் கொடியினுடைய நறுமணம் கமழும் தளிர்களைப் போன்ற பல பாதங்களும் அந்த மாடங்கள் பலவற்றின் பக்கங்களிலும் காணப்படும்.' பாடல் வருமாறு:

" அரவநெடும் தேர்வீதி அருகு மாடத்
தணிமணிக்கோ புரத்தயலே வியல்வாய் நீண்ட
விரவுமர கதச்சோதி வேதித் திண்ணை
விளிம்பின்ஒளி துளும்புமுறைப் படிமீ தேறும்
குரவலரும் குழல்மடவார் அடியில் ஊட்டும்
குழம்படுத்த செம்பஞ்சின் சுவட்டுக் கோலம்
பரவைநெடும் தரங்கமிசை விளங்கித் தோன்றும்
பவளநறுந் தளிரனைய பலவும் பாங்கர்."

அரவ-ஓசையை உண்டாக்கும். நெடும்-உயரமாக விளங்கும். தேர்-இரதங்கள் ஓடும்; ஒருமை பன்மை மயக்கம். வீதி-ஒரு தெருவுக்கு. அருகு-சமீபத்தில் உயரமாக நிற்கும். மாடத்து-மாடங்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம்.

அணி-அழகான. மணி-அடிக்கும் மணியைத் தொங்க விட்டிருக்கும். க்:சந்தி. கோபுரத்து-கோபுர வாசலுக்கு. அயல்-பக்கத்தில். ஏ:அசை நிலை. வியல்-பரவிய. வாய்-இடத்தையும். நீண்ட-நீளமாக இருக்கும் இயல்பையும் பெற்று; வினையாலணையும் பெயர். விரவு-கலந்திருக்கும். மரகதச் சோதி-பச்சை நிற ஒளி வெள்ளத்தை வீசும். வேதி-யாகசாலைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. திண்ணை-திண்ணைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். விளிம்பின்-ஓரத்தில். ஒளி-பிரகாசம். துளும்பு-ததும்பும். முறை-முறையில் அமைந்திருக்கும். ப்:சந்தி. படி மீது-படிகளின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். ஏறும்-ஏறிச் செல்லும். குரவு-குரா மரங்களில்; ஒருமை பன்மை மயக்கம். அலரும்-மலர்ந்த மலர்களை அணிந்திருக்கும். குழல்-கூந்தல்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மடவார்-மடப்பத்தை உடைய பெண்மணிகள். அடியில்-தங்களுடைய பாதங்களில்; ஒருமை பன்மை மயக்கம். ஊட்டும்-பூசிக் கொள்ளும். குழம்பு-குழம்பாக. அடுத்த-அமைந்துள்ள. செம்பஞ்சின்-செம்பஞ்சியின். சுவட்டு-அடையாளத்தின். க்:சந்தி. கோலம்-அழகு. பரவை-கடலில் வீசும். நெடும்-நீளமாக இருக்கும். தரங்கமிசை-அலைகளின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். விளங்கி-திகழ்ந்து. த்:சந்தி. தோன்றும்-காட்சியை அளிக்கும். பவள-பவளக் கொடியினுடைய. நறும்-நறுமணம் கமழும். தளிர்-தளிர்களை; ஒருமை பன்மை மயக்கம். தளிர்-முற்றாத இலை. அனைய-போல உள்ள. பலவும்-பல பாதங்களும். பாங்கர்-அந்த மாடங்கள் பலவற்றின் பக்கங்களிலும் காணப்படும்; ஒருமை பன்மை மயக்கம்.

மகளிர் தங்கள் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பைப் பூசிக் கொள்ளுதல்: ''பஞ்சுசேர் மெல்லடிப் பாவையர்.'', ''பஞ்சின் மெல்லடி மாதர்.'', ''பஞ்சியாரும் மெல்லடி.'', ''பஞ்சுலாவிய மெல்லடிப் பார்ப்பதி.'', ''சீறடிப் பஞ்சுறும்.'', ''பஞ்சுதோய் மெல்லடிப் பாவையாளொடும்.'' என்று,

திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "பஞ்சின் மெல் அடியினார்கள்.", "பஞ்சின் மெல்லடிப் பாவையோர் பங்கனை.", "பஞ்சின் மெல்லடி யாளுமை பங்க.", "பஞ்சடுத்த மெல்விரலாள் பங்கர்.", "பஞ்சுண்ட மெல்லடியாள் பங்கன்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "பஞ்சேர் மெல்லடி மாமலை மங்கை பங்கா.", "பஞ்சின் மெல்லடிப் பாவைமார்.", "பஞ்சிச் சீறடியாளை.", "பஞ்சின் மெல்லடியார் பயிலும் திருப்பனையூர்.", 'பஞ் சேர் மெல்லடி யாளை." என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "பஞ்சேர் அடியாள் பாகத் தொருவா.", "பஞ்சின் மெல் லடியாள் பங்க.", "பஞ்சாய அடிமடவார்.", "பஞ்சாய அடிமடவார் கடைக் கண்ணால் இடர்ப்பட்டு." என்று மாணிக்க வாசகரும், "பஞ்சார் அடி வைத்த பாங்கிவை." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "பஞ்சின் மெல்லடிப் பாவையர்." என்று சேக்கிழாரும், "பஞ்சியல் மெல்லடிப் பின்னை.", "பஞ்சியல் மெல்லடிஎம் பணைத் தோளி.", 'பஞ்சியல் மெல்லடிப் பிள்ளைகள்." என்று "திருமங்கையாழ்வாரும், "பஞ்சித்திருவடிப் பிள்ளை." என்று திருவரங்கத்தமுதனாரும், "காழில் பஞ்சி ஊழறிந் தாற்றி." (பெருங்கதை, 1. 53: 128) என்று கொங்கு வேளிரும், "பஞ்சி மெல்லடி." (சீவக சிந்தாமணி, 358) என்று திருத்தக்க தேவரும், "பஞ்சிசூழ் மெல்லடிப் பாவையார்." (எதிர்கோட் படலம், 32), "பஞ்சணி விரலினார்." (உலாவி யற்படலம், 10), "பஞ்சிமென் தளிரடிப் பாவை கோல்கொள." (மந்திரப் படலம், 19), "பஞ்சினை அணிவார்." (கைகேசி சூழ்வினைப் படலம், 64), "பஞ்சி மெல்லடிப் பாவையும் ஆடினாள்." (கங்கைப் படலம், 20), "பஞ்சளாவிய சீறடிச் சுவடுகள் பாராய்." (சித்திர கூடப் படலம், 20), "அலத்த கட் பஞ்சடுத்த பரிபுரப் பல்லவ." (கிளை கண்டு நீங்கு படலம், 11), "பஞ்சியொளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச் செந்செவிய கஞ்சம் நிமிர்

சீறடியளாகி.'' (சூர்ப்பணகைப் படலம், 31), "பஞ்சின் மெல்லடியாள் பாகன்." (வாலி வதைப்படலம், 145), ''பஞ்சி போர்த்த மெல்லடி.'', ''பஞ்செனச் சிவக்கும் மென்பாதப் பேதையர்.'' (கார்காலப் படலம், 45, 113), ''பஞ்சின் மெல் லடியினார்.'' (பிலம் நீங்கு படலம், 15), ''பஞ்சியூட்டிய பாட்டிசைக் கிண்கிணிப்பதும்... அஞ்சலோதி.''(ஊர் தேடு படலம், 4), ''பஞ்சியடி வஞ்சியர்கள்." (பொழில் இறுத்த படலம், 14), ''பஞ்செனச் சிவக்கும் மென்கால் தேவியை.'' (விபீடணன் அடைக்கலப் படலம், 126) என்று கம்பரும் பாடியவற்றையும், ''செம்பஞ்சின் சீறடியும்.'' (திக்குவிசயப் படலம், 175), "பஞ்சியடிக்குப் பல்லணியெல்லாம் அணி வாரும்." (அசுவமேத யாகப் படலம், 35) என்று உத்தர காண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

பிறகு வரும் 98-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'கொதிக்கும் கோபத்தைக் கொண்ட ஆண் யானையின் முழக்கமும், குதிரையின் கர்ஜனையும், அகலமாகவும் உயர மாகவும் உள்ள இரதத்தினுடைய சக்கரங்களின் ஆரவார மும், திருவிழாக்கள் நடைபெறாமல் இராத அழகிய தங்கத் தையும், மாணிக்கத்தையும் பதித்த திரு மாளிகைகள் ஓங்கி நிற்கும் காஞ்சி மாநகரத்தில் விளங்கும் தெருக்களில் உள்ள நாடக அரங்கங்களில் நடனமாடும் பெண்கள் தங்கள் திருவடிகளில் பூண்டிருக்கும் சிலம்புகளின் சத்தத்தோடு அமைந்திருக்கும் இந்த உலகத்திலும் தேவலோகத்திலும் அந்த உலகத்தினுடைய மன்னனாகிய இந்திரனுடைய வெள்ளை யானையின் பிளிறலும், தெய்வத் தன்மையைப் பெற்றதும் உயரமாக இருப்பதும் ஆகிய சூரியனுடைய ஏழு பச்சைக் குதிரைகளின் கர்ஜனையும், பிரம தேவனுடைய வாகனமாகிய அன்னப் பறவையாகிய இரதம் மிகுதியாக ஒலிக்கும் சத்தமும் விமானங்களுக்குள் நடனமாடும் தெய்வ லோகத்தில் உள்ளவர்களும், பொம்மைகளைப் போல

என்றும் மாறாத அழகைப் பெற்றவர்களும் ஆகிய அணங்குகள் தங்களுடைய திருவடிகளில் அணிந்து கொண்டிருக்கும் சிலம்புகளின் ஓசையோடு அந்த நகரத்தில் பல படியாகக் கேட்கும்.' பாடல் வருமாறு:

'' வெம்புசினக் களிற்றதிர்வும் மாவின் ஆர்ப்பும்
வியன் நெடுந்தேர்க் காலிசைப்பும் விழவறாத
அம்பொன்மணி வீதிகளில் அரங்கில் ஆடும்
அரிவையர்நூ புரவொலியோ டமையும் இம்பர்
உம்பரின்இந் திரன்களிற்றின் முழக்கும் தெய்வ
உயர்இரவி மாக்கலிப்பும் அயனூர் தித்தேர்
பம்பிசையும் விமானத்துள் ஆடும் தெய்வப்
பாவையர்நூ புரஅரவத் துடனே பல்கும்.''

வெம்பு-கொதிக்கும். சின-கோபம் மூண்ட. க்:சந்தி. களிற்று-ஆண் யானையின். அதிர்வும்-பிளிறலும். மாவின்-குதிரைகளின். ஆர்ப்பும்-கனைப்பும். வியன்-அகலமான. நெடும்-உயரமாக இருக்கும். தேர்-இரதத்தின். க்:சந்தி. கால்-சக்கரங்களின்; ஒருமை பன்மை மயக்கம். இசைப்பும்-முழக்கமும். விழவு-திருவிழாக்கள். அறாத-நடை பெறாமல் இராத. அம்-அழகிய. பொன்-தங்கத்தையும். மணி-மாணிக்கத்தையும் பதித்திருக்கும் திருமாளிகைகள் ஓங்கி நிற்கும் காஞ்சி மாநகரத்தில் விளங்கும். வீதிகளில்-தெருக்களில் உள்ள. அரங்கில்-நாடக அரங்குகளில்; ஒருமை பன்மை மயக்கம். ஆடும்-நடனம் புரியும். அரிவையர்-அரிவைப் பருவத்தை அடைந்த பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். நூபுர-தங்களுடைய திருவடிகளில் பூண்டு கொண்டிருக்கும் சிலம்புகளின்; ஒருமை பன்மை மயக்கம். ஒலியோடு-இனிய சத்தத்தோடு. அமையும்-அமைந்திருக்கும். இமபர்-இந்த உலகத்திலும். உம்பரின்-தேவலோகத்திலும். இந்திரன்-அந்த உலகத்தினுடைய மன்னனாகிய இந்திரனுடைய. களிற்றின்-வெள்ளை யானையினுடைய. முழக்கும்-பிளிறலும். தெய்வ-தெய்வத் தன்மையைப் பெற்றதும்; வினைய

லணையும் பெயர். உயர்-உயரமாக இருப்பதும் ஆகிய; வினை யாலணையும் பெயர். இரவி-சூரியனுடைய. மா-இரதத்தில் பூட்டிய ஏழு பச்சைக் குதிரைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கலிப்பும்-கனைப்பும். அயன்-பிரமதேவனு டைய. ஊர்தித் தேர்-வாகனமாகிய அன்னப் பறவை என்னும் இரதம். "அன்னத் தேர் ஏறி" என வருதல் காண்க. பம்பு-மிகுதியாக ஒலிக்கும். இசையும்-ஒலியும். விமானத்துள்-விமானங்களுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். ஆடும்-நடனம் புரியும். தெய்வ-தெய்வலோகத்தில் உள்ளவர் களும்; இட ஆகு பெயர். ப்:சந்தி. பாவையர்-பொம்மை களைப் போல என்றும் மாறாத அழகைப் பெற்றவர்களும் ஆகிய அணங்குகள்; உவம ஆகு பெயர். நூபுர-தங்களுடைய திருவடிகளில் அணிந்து கொண்டிருக்கும் சிலம்புகளின்; ஒருமை பன்மை மயக்கம். அரவத்துடன்-இனிய ஓசையோடு. ஏ:அசை நிலை. பல்கும்-அந்த நகரத்தில் பல படியாகக் கேட்கும்.

அடுத்து வரும் 99-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்திய யனம் செய்து நிறைவேற்றிய வேதியர்கள் நிலைபெற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தும் இருப்பிடமான வேள்விச் சாலைகளில் தீயில் அர்ப்பணம் செய்யும் ஆகுதி களின் புகை அந்த வேள்விச் சாலைகளை அடுத்து உள்ள அழகிய தங்கத்தைப் பதித்திருக்கும் மாடங்கள் உயர்ந்து நிற்கும் பெரிய வீதி ஒவ்வொன்றிலும் யாக சாலைகள் உள்ள எல்லா இடங்களிலும் தேவர்கள் அடைவதற்கு உரிய அவிர்ப் பாகங்களை வழங்கும் பான்மை மேம்பாட்டைப் பெற்று விளங்கும் சான்றோர்கள் தங்களுக்கு வரும் முறைப்படி அழைத்து அளிக்கும் வேத மந்திரங்களின் ஓசை அந்தக் காஞ்சி மாநகரத்தில் எந்தப் பக்கங்களிலும் தேவலோகத்தில்

வாழும் தேவர்களினுடைய தலைவராகிய அழகிய ஏகாம் பரேசுவரருடைய ஆலயத்தின் முற்றத்தில் அழகு மலிந் துள்ள தங்கத்தைப் பதித்திருக்கும் கோபுரவாசலில் நெருங்கி வரும் எல்லாத் தேவர்களையும் சமீபமாகக் கொண்டு அந்த நகரம் நடந்து வரும்.' பாடல் வருமாறு:

"அருமறைஅந் தணர்மன்னும் இருக்கை யான
ஆகுதியின் புகைஅடுத்த அம்பொன் மாடப்
பெருமறுகு தொறும் வேள்விச் சாலைஎங்கும்
பெறும்அவிர்ப்பா கம்கொடுக்கும் பெற்றி மேலோர்
வருமுறைமை அழைத்துவிடு மந்திரம்எம் மருங்கும்
வானவர்நா யகர்திருவே கம்பர் முன்றில்
திருமலிபொற் கோபுரத்து நெருங்கும் எல்லாத்
தேவரையும் அணித்தாகக் கொண்டு செல்லும்."

அரு-பொருள் தெரிந்துகொள்வதற்கு அருமையாக உள்ள. மறை-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வணவேதம் என்னும் நான்கு வேதங்களையும்முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய; ஒருமை பன்மை மயக் கம். அந்தணர்-வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மன் னும்-நிலைபெற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தும். இருக்கையான-இருப்பிடமான. ஆகுதியின்-வேள்விச் சாலை களில் தீயில் சொரியும் ஆகுதிகளின்; ஒருமை பன்மை மயக்கம். புகை அடுத்த-புகை அந்த வேள்விச் சாலைகளை அடுத்து உள்ள. அம்-அழகிய. பொன்-தங்கத்தைப் பதித்தி ருக்கும். மாட-மாடங்கள் உயர்ந்து நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பெரு-பெரிய. மறுகுதொறும்-ஒவ்வொரு வீதியிலும். வேள்விச்சாலை-யாக சாலைகள் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். பெறும்-தேவர்கள் அடையும். அவிர்ப்பா கம்-அவிர்ப்பாகங்களை; ஒருமை பன்மை மயக்கம். அவை யாவன: அன்னம், சமித்துக்கள், நெய், அட்சதை, மலர் முதலியன. கொடுக்கும்-வழங்கும். பெற்றி-பான்மை.

மேலோர்-மேம்பாட்டைப் பெற்று விளங்கும் சான்றோர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வரு-தங்களுக்கு வரும். முறைமை-முறைப்படி. அழைத்து-தேவர்களை அழைத்து. விடு-அளிக்கும். மந்திரம்-வேத மந்திரங்களின் இனிய கானம்; ஒருமை பன்மை மயக்கம். எம்மருங்கும்-அந்தக் காஞ்சி மாநகரத்தில் உள்ள எந்தப் பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். வானவர்-தேவலோகத்தில் வாழும் தேவர்களி னுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகர்-தலைவராகிய. திரு-அழகிய. ஏகம்பர் ஏகாம்பரேசுவரருடைய ஆலயத்தின்; ஆகுபெயர். முன்றில்-முற்றத்தில். முன்றில்-இல்முன்; முன் பின்னாகத் தொக்க தொகை. திரு-அழகு. மலி-மிகுதியாக உள்ள. பொன்-தங்கத்தைப் பதித்திருக்கும். கோபுரத்து-கோபுர வாசலில். நெருங்கும்-நெருங்கிவரும்; சமீபமாக வரும். எல்லாத் தேவரையும்-எல்லாத் தேவர்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அணித்தாக-சமீபமாக. க்: சந்தி. கொண்டு செல்லும்-கொண்டு அந்த நகரம் நடந்து வரும்.

அடுத்து வரும் 100-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'மன்னர்களினுடைய குடும்பங்கள் வாழும் பெரிய வீதியும் அவர்கள் வாழும் அரண்மனைகளில் உள்ள திண்ணைகளோடு சேர்ந்த முற்றங்களில் வைத்திருக்கும் படைக்கலங்களைப் பிரயோகம் செய்து இளவரசர்கள் பழகும் விரிவான இடங்களும், அந்த இடங்களில் தங்களுடைய கழுத்துக்களிற் கட்டும் கயிறுகளையும். கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களையும் கொண்ட யானைகளோடு குதிரை களின் மேல் ஏறி அவர்கள் நடத்தும் பொலிவைப் பெற்ற தெருக்களும் விளங்க அந்தக் காஞ்சிபுரத்தில் எந்த இடத் திலும் நறுமணம் கமழும் நல்ல வாசனையை வீசும் தொடுத் தலைப் பெற்ற மலர் மாலைகளை அணிந்திருக்கும் அரசிளங் குமரர்கள் புரியும் ஆச்சரியத்தை அடைவதற்குக் காரண மாகிய அவர்கள் புரியும் வேலைகளைப் பார்த்து வித்தியா

தரர்களும், தேவலோகத்தில் வாழும் தேவர்களும் சேர்ந்து வந்திருக்கும் வரிசை நெருங்கியிருக்கும் விமானங்களின் மேலும், வாகனங்களின் மேலும் தரையின் மேலும் பல தடவைகளிலும் வரிசையாக நின்றுகொண்டு அந்த இடங்களை விட்டு அவர்கள் போக மாட்டார்கள்.'' பாடல் வருமாறு:

'' அரசர்குலப் பெருந்தெருவும் தெற்றி முற்றத்
தாயுதங்கள் பயிலும்வியல் இடமும் அங்கண்
புரசைமதக் கரிகளொடு புரவி ஏறும்
பொற்புடைய வீதிகளும் பொலிய எங்கும்
விரைசெய்நறுந் தொடையலங்கல் குமரர் செய்யும்
வியப்புறுசெய் தொழில்கண்டு விஞ்சை விண்ணோர்
நிரைசெறியும் விமானஊர் திகளின் மேலும்
நிலமிசையும் பலமுறையும் நிரந்து நீங்கார்.''

அரசர்-க்ஷத்திரியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குல-குடும்பங்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பெரும்-பெரியதாக இருக்கும். தெருவும்-வீதியும். தெற்றி-அவர்கள் வாழும் அரண்மனைகளில் உள்ள திண்ணைகளோடு சேர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். முற்றத்து-முற்றங்களில் வைத்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ஆயுதங்கள்-வாள், ஈட்டி, வில், அம்பு, குத்தீட்டி முதலிய படைக்கலங்களை. பயிலும்-இளவரசர்கள் பிரயோகம் செய்து பழகும். வியல்-விரிவான. இடமும்-இடங்களும்; ஒருமை பன்மை மயக்கம். அங்கண்-அந்த இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். புரசை-தங்களுடைய கழுத்துக் களிற் கட்டும் கயிறுகளையும்; ஒருமை பன்மை மயக்கம். மத-கன்ன மதம், கபோல மதம், பீஜ மதம் என்னும் மூன்று மதங்களையும் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கரிகளொடு-ஆண் யானைகளோடு. புரவி-குதிரைகளின் மேல். ஒருமை பன்மை மயக்கம். ஏறும்-ஏறி அவர்கள் நடத்தும்,

பொற்புடைய-தோற்றப் பொலிவைப் பெற்ற. வீதிகளும்-தெருக்களும். பொலிய-விளங்க. எங்கும்-அந்தக் காஞ்சி மாநகரத்தில் உள்ள எந்தஇடத்திலும். விரை-வாசனையை. செய்-வீசும். நறும்-நறுமணம் கமழும். தொடை-தொடுத்தலைப் பெற்ற. அலங்கல்-மலர் மாலைகளை அணிந்து கொண்டு விளங்கும்; ஒருமை பன்மை மயக்கம். குமரர்-அரசிளங்குமரர்கள்; ஒருமை பன்மை மயக்கம். செய்யும்-புரியும். வியப்புறு-ஆச்சரியத்தை அடைவதற்குக் காரணமாகிய. செய்-அவர்கள் புரியும். தொழில்-வேலைகளை; ஒருமை பன்மை மயக்கம். கண்டு-பார்த்து. விஞ்சை-வித்தியாதரர்களும்; ஒருமை பன்மை மயக்கம். விண்ணோர்-தேவலோகத்தில் வாழும் தேவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். நிரை-சேர்ந்து காஞ்சீபுரத்திற்கு வந்திருக்கும் வரிசை. செறியும்-நெருங்கியிருக்கும். விமான-விமானங்களின் மேலும்; ஒருமை பன்மை மயக்கம். ஊர்திகளின் மேலும்-யானை, குதிரை, தேர் முதலிய வாகனங்களின் மேலும். நிலமிசையும்-தரையின் மேலும். பல முறையும்-பல தடவைகளிலும்; ஒருமை பன்மை மயக்கம். நிரந்து-வரிசையாக நின்றுகொண்டு. நீங்கார்-அந்த இடங்களை விட்டு அவர்கள் போகமாட்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 10-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஒளியை வெளி விடும் பல மாணிக்கங்களைப் பதித்திருக்கும் அணிகலன்களை அணிந்து கொண்ட வைசியர்களாகிய மனிதர்கள் மேவிய செல்வத்தின் வளத்தைப் பெருகுமாறு செய்யும் நிதிகள் மிகுதியாக உள்ள இடங்களில் அமைந்திருக்கும் அழகிய கடைகளைக் கொண்ட பெரிய நகரங்கள் எல்லாவற்றிலும் அழகைப் பெற்ற பண்டங்களின் வகைகள் மிகுதியாக இருத்தலால், கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் கயிலாச பதியாராகிய ஏகாம்பரேசுவரர் எழுந்தருளியிருக்கும் காஞ்சீபுரத்தில் விளங்கும் பல திருக்கோயில்களும், திரு

ஏகம்பமாகிய ஏகாம்பரேசுவரருடைய ஆலயமும் பொருந்திய பான்மையைப் பார்த்து அந்த ஏகாம்பரேசுவரரை வாழ்த்தி வணங்கும் பொருட்டு எடுத்துக் கொண்ட வடிவங்கள் பலவற்றை மேற்கொண்டு சங்க நிதி, பதும நிதி என்று இரண்டு நிதிகளுக்கும் அரசனாகிய குபேரன் தங்கும் பொருட்டு, அவன் வாழும் அளகாபுரியை வகுத்து அமைத்த இயல்பை அவை தோற்றச் செய்யும்.' பாடல் வருமாறு:

" வெயிலுமிழும் பன்மணிப்பூண் வணிக மாக்கள்
விரவுநிதி வளம்பெருக்கும் வெறுக்கை மிக்க
வயின்நிலவு மணிக்கடைமா நகர்கள் எல்லாம்
வனப்புடைய பொருட்குலங்கள் மலித லாலே
கயிலைமலை யார்கச்சி ஆலயங்கள் பலவும்
கம்பமுமே வியதன்மை கண்டு போற்றப்
பயிலுமுருப் பலகொண்டு நிதிக்கோன் தங்கப்
பயில்அளகா புரிவகுத்த பரிசு காட்டும்."

வெயில்-ஒளியை. உமிழும்-வெளி விடும்; வீசும். பல்—பல வகையான. மணி-மாணிக்கங்களைப் பதித்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மாணிக்கம், முத்து, பவளம், பதுமராகம், புட்பராகம், வைரம், கோமேதகம், மரகதம், வைடூரியம் என்பவை. ப்:சந்தி. பூண்-அணிகலன்களை அணிந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வணிகமாக்கள்-வைசியர்களாகிய மனிதர்கள். வணிக:ஒருமை பன்மை மயக்கம். விரவு-தங்களிடம் மேவிய. நிதி-செல்வத்தின். வளம்-வளத்தை. பெருக்கும்-மேன் மேலும் பெருகுமாறு செய்யும். வெறுக்கை-நிதிகள்;ஒருமை பன்மை மயக்கம். மிக்க-மிகுதியாக உள்ள. வயின்-இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நிலவு-அமைந்திருக்கும். மணி-அழகிய. க்:சந்தி. கடை-கடைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மா-பெரிய. நகர்கள்-நகரங்கள். எல்லாம்-எல்லாவற்றிலும். வனப்புடைய-அழகைப் பெற்ற. பொருட் குலங்கள்-பண்டங்களின் வகைகள். பொருள்: ஒருமை பன்மை

மயக்கம். இவை கடைகளில் விற்பனை செய்யப் பெறும் அரிசி, நெல், உளுந்து, துவரம் பருப்பு, பயற்றம் பருப்பு, மிளகு, சீரகம், பெருங்காயம், ஏலம், இலவங்கம், கிராம்பு, கடுகு, வெந்தயம், கடலைப் பருப்பு, வெல்லம், கற்கண்டு, நல்லெண்ணெய், தேங்காய் எண்ணெய், எள், தேங்காய், ஆடைகள் முதலியவை. மலிதலால்-மிகுதியாக இருத்தலால். ஏ:அசை நிலை. கயிலை மலையார்-கயிலாய மலையில் எழுந்தருளியிருக்கும் கயிலாக பதியாராகிய. கச்சி-ஏகாம்பரேசுவரர் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் காஞ்சி மாநகரத்தில் விளங்கும். ஆலயங்கள் பலவும்-பல திருக்கோயில்களும். அவையாவன: ஏகாம்பரேசுவரர் கோயில், அமரீசம், அந்தகேசம், அபிராமீச்சரம், அனந்த பத்மநாபேசம், ஆதிபிதீசம், இட்டசித்தீச்சரம், இரணியீசம், இரேணுகீச்சரம், இறவாத்தானம், கச்சபேசம், கயிலாயம், கண்ணீசம், கச்சிமயானம், கச்சிக்காரோணம், குமரகோட்டம், சத்த தானம், கவந்தரீசம், சாந்தாசயம், சிவாத்தானம், சித்தீசம், சுரகரீசம், தக்கீசம், தான்றோன்றீச்சரம், திருநெறிக் காரைக் காடு, திருமேற்றளி, திருவோணகாந்தன் தளி, திருமாற் பேறு, நவக்கிரகீசம், நாரசிங்கீசம், பராசரேசம், பணாத ரீச்சரம், பலபத்திர ராமீசம், பரசிராமீச்சரம், பாண்ட வீசம், பிறவாத் தானம், புண்ணியகோடீசம், மணிகண்டீச்சரம், மகாலிங்கேச்சரம், மச்சீசம், மாசாத்தன்தளி, முத்தீசம், முப்புராரி கோட்டம், யோகாசாரியர்தளி, வலம்புரி விநாயகர் திருக்கோயில், வன்மீகநாதர் ஆலயம், வயீர வீசம், வாணீசம், விடுவச் சேனீசம், வீரராக வீசம், வீராட்டகாசம், காமக் கோட்டம் முதலியவை. கம்பமும்-ஏகாம்பரேசுவரருடைய ஆலயமும். மேவிய-நிலவிய. தன்மை-பான்மையை. கண்டு-பார்த்து. போற்ற-அந்த ஏகாம்பரேசுவரரை வாழ்த்தி வணங்கும் பொருட்டு. ப்:சந்தி. பயிலும்-தாங்கள் எடுத்துக் கொள்ளும். உருப்பல-வடிவங்கள் பலவற்றை. உரு: ஒருமை பன்மை

மயக்கம். கொண்டு-மேற்கொண்டு. நிதிக்கோன்-சங்க நிதி, பதுமநிதி என்ற இரண்டு நிதிகளுக்கும் அரசனாகிய குபேரன். நிதி: ஒருமை பன்மை மயக்கம். தங்க-தங்கும் பொருட்டு. ப்:சந்தி. பயில்-அவன் வாழும். அளகாபுரி-அளகாபுரியை. வகுத்த-இந்தக் காஞ்சீபுரத்தில் வகுத்து அமைத்த. பரிசு-இயல்பை. காட்டும்-அவை தோற்றச் செய்யும்.

பிறகு வரும் 102-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பல வகையான திருவிழாக்கள் மிகுதியாக நடைபெறும் அழகிய காஞ்சி மாநகரத்தினுடைய எல்லைக்குள் வாழும் வேளாளர்களாகிய மேம்பாட்டைப் பெற்ற குடிகளின் தன்மையையும் பெரிய செல்வங்களையும் பெற்ற பணக்காரர்கள் திகழும் தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தில் மிகவும் இளைய வெண்மையாகிய பிறைச்சந்திரனை அணிந்து கொண்டிருக்கும் ஏகாம்பரேசுவரர் சிவந்த தங்கம் உண்டாகும் இமாசல அரசனுடைய புதல்வியும், பூங்கொடியைப் போன்றவளும் ஆகிய காமாட்சி அம்மைக்கு வழங்கி அருளிய வளரும் இரண்டு படி நெற்களின் மூலம் இந்த உலகத்தில் வாழும் மக்கள் வணங்குமாறு இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்களை ஈன்றெடுத்தருளும் அந்தக் காமாட்சி அம்மை திருவாய் மலர்ந்தருள அந்தத் திருவருளை பெற்றுக் கொண்டு பழமையாகிய இந்தப் பூ மண்டலத்தில் நிலைபெற்று வளரும் பல வகையான பயிர்கள் வேதங்கள் கூறிய உண்மையின்படி உழவாகிய தொழிலால் பெருகச் செய்து எல்லா உயிர்களும் ஓங்கி வளரும் வண்ணம் வரும் அறங்களாகிய செயல்களுக்கு உரியவர்களாக எக்காலத்திலும் இருப்பவர்கள் அந்த வேளாளர்கள்.' பாடல் வருமாறு:

''விழவுமலி திருக்காஞ்சி வரைப்பின் வேளாண்
விழுக்குடிமைப் பெருஞ்செல்வர் விளங்கும் வேணி
மழஇளவெண் திங்கள்புனை கம்பர் செம்பொன்
மலைவல்லிக் களித்தவளர் உணவின் மூலம்

தொழஉலகு பெறுமவள்தான் அருளப் பெற்றுத்
தொன்னிலத்து மன்றுபயிர் வேத வாய்மை
உழவுதொழி லாற்பெருக்கி உயிர்கள் எல்லாம்
ஓங்கவரும் தருமவினைக் குளரால் என்றும்.''

விழவு-பலவகையாகிய திருவிழாக்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: சித்திரா பௌர்ணமித் திருவிழா, விசாகத் திருவிழா, ஆனித்திரு மஞ்சனம், ஆடிப்பூரம், ஆவணி மூலத்திருவிழா, நவராத்திரி விழா, தீபாவளிப் பண்டிகை, கார்த்திகைத் தீபத் திருவிழா, திருவாதிரைத் திருவிழா, தைப்பூசத் திருவிழா, மாசிமகத் திருவிழா, பங்குனி உத்தரத் திருவிழா முதலியவை. *மலி*-மிகுதியாக நடைபெற்று வரும். *திரு*-அழகிய. க்:சந்தி. *காஞ்சி*-காஞ்சி மாநகரத்தின். *வரைப்பின்*-எல்லைக்குள் வாழும். *வேளாண்*-வேளாளர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம்; திணை மயக்கம். *விழு*-மேலான. க்:சந்தி. *குடிமை*-குடிகளின் தன்மையையும். குடி: ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. *பெரும் செல்வர்*-பெரிய செல்வங்களையும் பெற்ற பணக்காரர்கள்; ஒருமை பன்மை மயக்கம். *விளங்கும்*-திகழும். *வேணி*-தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தில். *மழஇள*-மிகவும் இளைய. *வெண்*-வெண்மையாகிய. *திங்கள்*-பிறைச்சந்திரனை. *புனை*-அணிந்து கொண்டிருக்கும். *கம்பர்*-ஏகாம்பரேசுவரர். *செம்*-சிவந்த. *பொன்*-தங்கம் உண்டாகும். *மலை*-இமாசல அரசனுடைய புதல்வியும்;திணை மயக்கம். *வல்லிக்கு*-பூங்கொடியைப் போன்றவளுமாகிய காமாட்சி அம்மைக்கு; உமை ஆகு பெயர். *அளித்த*-வழங்கியருளிய. *வளர்*-எடுக்க எடுக்க மேன்மேலும் வளரும். *உணவின் மூலம்*-இரண்டு படி நெற்களின் மூலம்; ஒருமை பன்மை மயக்கம். *தொழ உலகு*-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் வணங்குமாறு: இட ஆகு பெயர். *பெறும்*-ஈன்றெடுத்தருளும். *அவள்*-அந்தக் காமாட்சி அம்மை. *தான்*: அசைநிலை. *அருள*-திருவாய் மலர்ந்தருள. ப்:சந்தி. *பெற்று*-அவருடைய திருவருளைப்

பெற்றுக் கொண்டு. த்:சந்தி. தொல்-பழமையாகிய. நிலத்து-இந்தப் பூ மண்டலத்தில். மன்னு-நிலை பெற்று வளரும். பயிர்-பலவிதமான பயிர்களை; ஒருமை பன்மை மயக்கம். அவைகளாவன: சம்பா நெற்பயிர், குறுவை நெற் பயிர், கரும்புச் செடி, தினைப் பயிர், வரகுப் பயிர், சோளம், கம்பு முதலியவை. வேத-வேதங்கள் கூறிய; ஒருமை பன்மை மயக்கம். வாய்மை-உண்மையின்படி. உழவு-உழவாகிய. தொழிலால்-வேலையினால். பெருக்கி-பெருகச் செய்து. உயிர்கள் எல்லாம்-எல்லா உயிர்களும்.அவையாவன:ஆடவர், பெண்கள், பலவகை விலங்குகள், பலவிதமான பறவைகள், ஊர்வன, புழுக்கள், பூச்சிகள், நீர்வாழ் பிராணிகள் முதலியவை. ஓங்க-ஓங்கி வளரும் வண்ணம். வரும் தரும-வரும் முப்பத்திரண்டு அறங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். வினைக்கு-செயல்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். என்றும்-எந்தக் காலத்திலும், உளர்-இருப்பவர்கள் அந்த வேளாளர்கள்; இடைக்குறை; ஒருமை பன்மை மயக்கம். ஆல்-அசைநிலை.

அடுத்து வரும் 103-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஓங்கி வாழுகின்ற நான்கு சாதிகளுக்கு ஒவ்வாது சேர்ந்து வாழ்வதில் தங்களுக்குள் உயர்ந்தவையாக உள்ள உயிர்களும், இழிவாக இருக்கும் உயிர்களும் ஆன சாதிகளிற் பிறந்த மக்கள் தாங்கள் கூடிக் கொண்டு பிறந்திருக்கும் சாதிகளின் வேறுபாடுகள் யாவும் தம்முடைய தகுதியாகிய பான்மைகளுக்கு ஏற்றவையாக இருக்கும் தனியான இடங்களில் சேர்ந்து அந்த இடங்களில் நிரம்பியுள்ள சுற்றத்தார்கள் பழகி வாழும் பரம்பரையில் முழுவதும் தமக்கு அடுத்தவையாக உள்ள வேலைகளாகிய தொழில்களை முறை தவறாமல் நெடுங்காலமாக காஞ்சீபுரத்தின் பக்கங்களில் வளரும் இருப்பிடங்களாகிய நிலைகள் பலவாகவும்உள்ள யாவும் நற்குண நல்லொழுக்கம் நெடுங்காலமாக வளர்ந்து உரிமையின் பகுதிகளை உடையவை.' பாடல் வருமாறு:

"ஓங்கியநாற் குலத்தொவ்வாப் புணர்வில் தம்மில்
உயர்ந்தனவும் இழிந்தனவும் ஆன சாதி
தாம்குழுமிப் பிறந்தகுல பேதம் எல்லாம்
தம்தகைமைக் கேற்றதனி இடங்கள் மேவி
ஆங்குநிறை கிளைபயின்று மரபின் ஆற்ற
அடுத்தவினைத் தொழில்முறைமை வழாமை நீடு
பாங்குவளர் இருக்கைநிலை பலவும் எல்லாம்
பண்புநீ டியஉரிமைப் பால அன்றே."

ஓங்கிய-ஓங்கி வாழ்ந்து விளங்கிய. நாற்குலத்து-நான்கு சாதிகளுக்கு. குலத்து: ஒருமை பன்மை மயக்கம். அவை களாவன: க்ஷத்திரிய சாதி, வைசிய சாதி, வேளாளர் சாதி, கமாத்தியர் சாதி என்பவை. ஒவ்வா-ஒவ்வாத. ப்:சந்தி. புணர்வில்-சேர்ந்து வாழ்வதில். தம்மில்-தங்களுக்குள். உயர்ந்தனவும்-உயர்ந்தவையாக உள்ள உயிர்களும். அவை யாவன: ஆடவர்கள், பெண்மணிகள், குழந்தைகள் முதலி யவர்கள். இழிந்தனவும்-இழிவாக இருக்கும் உயிர்களும். அவையாவன: பள்ளர், பள்ளிகள், பறையர், பறைச்சிகள்; சக்கிலியர்கள், சக்கிலிச்சிகள் முதலியவர்கள். ஆன-ஆக அமைந்த. சாதி-சாதியிற் பிறந்தவர்கள்; திணை மயக்கம். தாம்-தாங்கள். குழுமி-கூடிக் கொண்டு. ப்:சந்தி. பிறந்த-தாங்கள் பிறந்திருக்கும். குல-சாதிகளின்; ஒருமை பன்மை மயக்கம். பேதம்-வேறுபாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-யாவும். தம்-தங்களுடைய. தகைமைக்கு-தகுதி யாகிய பான்மைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். ஏற்ற-ஏற்றவையாக இருக்கும். வினையாலணையும் பெயர். தனி-தனியாக உள்ள. இடங்கள்-இடங்களை. மேவி-அடைந்து. ஆங்கு-அந்த இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நிறை-நிரம்பியுள்ள. கிளை-சுற்றத்தார்கள்; திணை மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். பயின்று-பழகி வாழும். மரபின்-பரம்பரையில். ஆற்ற-முழுவதும். அடுத்த-தங்களுக்கு ஏற்ற வையாக உள்ள. வினை-வேலைகளாகிய; ஒருமை பன்மை

மயக்கம். த்:சந்தி. தொழில்-தொழில்களை; ஒருமை பன்மை மயக்கம். முறைமை-முறை. வழாமை-தவறாமல். நீடு-நெடுங் காலமாக. பாங்கு-காஞ்சி மாநகரத்தின் பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். வளர்-வளரும். இருக்கை-இருப்பிடங் களாகிய; ஒருமை பன்மை மயக்கம். நிலை-நிலைகள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும்-பலவாகவும். எல்லாம்-யாவும். பண்பு-நற்குண நல்லொழுக்கம். நீடிய-நெடுங் காலமாக வளர்ந்துள்ள. உரிமை-உரிமையின்; ட்:சந்தி. பால-பகுதி களை உடையவை. அன்று, ஏ:இரண்டும் ஈற்றசை நிலைகள்.

பிறகு வரும் 104 ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பழங்காலம் முதல் உள்ள பழைய திருமதில் சூழ்ந்திருக் கும் அந்தக் காஞ்சி மாநகரத்தில் நிலைபெற்று விளங்கிய ஒளி வெள்ளம் நீண்ட அழகிய தூபமும் திருவிளக்கும் குற்றம் இல்லாத பல வாத்தியங்களும் துவசங்களும் பொருந்தியுள்ள திருவீதிகளில் ஒவ்வொரு நாளிலும் திருவிழாக்களின் அலங் காரங்கள் ஒழியாமல் விளங்கும்.' பாடல் வருமாறு:

'' ஆதி மூதெயில் அந்நகர் மன்னிய
சோதி நீள்மணித் தூபமும் தீபமும்
கோதில் பல்லிய மும்கொடி யும்பயில்
வீதி நாளும் ஒழியா விழாஅணி.''

ஆதி - பழங்காலம் முதல் உள்ள. மூதெயில்-பழைய திருமதில் சூழ்ந்திருக்கும். அந்நகர்-அந்தக் காஞ்சி மாநக ரத்தில். மன்னிய-நிலை பெற்று விளங்கிய. சோதி-ஒளி வெள் ளம். நீள்-நீண்ட. மணி-அழகிய. த்:சந்தி. தூபமும் தீபமும்- தூபமும் திரு விளக்கும். தூபம்-சாம்பிராணி, மட்டிப்பால் முதலியவை. கோது-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக் குறை. பல்-பல. இயமும்-வாத்தியங்களும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன; வீணை யாழ், நாகசுரம், ஒத்து, மத்தளம், கஞ்சதாளம், முரசு, பேரிகை, சல்லரி, முகவீணை, தம்புரா, இடக்கை முதலியவை. கொடியும்-துவசங்களும்; ஒருமை பன்மை மயக்கம். பயில்-பொருந்தியுள்ள. வீதி-

திருவீதிகளில்; ஒருமை பன்மை மயக்கம். நாளும்-ஒவ்வொரு நாளிலும். விழா-திருவிழாக்களின்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: சித்திராபௌர்ணமி விழா, விசாக விழா, ஆனித் திருமஞ்சனம், ஆடிப்பூர விழா, ஆவணி மூலவிழா, நவராத்திரி விழா, விஜயதசமி, தீபாவளி, திருவாதிரை விழா, திருப்பள்ளி எழுச்சி, தைப்பூச விழா, பொங்கல் விழா, மாசிமக விழா, பங்குனி உத்தர விழா, தேரோட்டம் முதலியவை. அணி-அலங்காரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஒழியா-ஒழியாமல் விளங்கும்.

அடுத்து உள்ள 105-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு: 'திருமாளிகைகளினுடைய வாசல்கள் எந்த இடங்களிலும் தோரணங்கள் கட்டப் பெற்றிருக்கும்; பெரிய திருமதிலில் உள்ள உறுப்புக்கள் எந்த இடங்களிலும் மேகங்கள் சூழ்ந்து தவழ்ந்து கொண்டிருக்கும்; அப்பொழுது உதயமாகிய சந்திரன் தவழும் திருமாளிகைகள் எந்த இடங்களிலும் மங்கலச் சடங்குகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்; திருத் தொண்டர்கள் வலமாக வரும் ஏகாம்பரேசுவரர் ஆலயம் உள்ள எந்த இடங்களிலும் தேவர்களின் சாதியினர் கூடிய கூட்டத்தைக் காணலாம்.' பாடல் வருமாறு:

"வாயில் எங்கணும் தோரணம்; மாமதில்
ஞாயில் எங்கணும் சூழ்முகில் நாண்மதி
தோயில் எங்கணும் மங்கலம்; தொண்டர்சூழ்
கோயில் எங்கணும் உம்பர் குலக்குழாம்."

வாயில்-காஞ்சீபுரத்தில் ஓங்கி நிற்கும் திருமாளிகைகளினுடைய, வாசல்கள்: ஒருமை பன்மை மயக்கம். எங்கணும்-எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கணும்: இடைக்குறை. தோரணம்-தோரணங்கள் கட்டப் பெற்றிருக்கும். தோரணம்-மாவிலை, தென்னங் குருத்தோலைகள், மலர் மாலைகள் முதலியவற்றைக் கட்டித் தொங்கவிடும் ஒன்று. மா-பெரிய. மதில்-திருமதிலினுடைய, ஞாயில்-

உறுப்புக்கள்; ஒருமை பன்மை மயக்கம். எங்கணும்-எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கணும்: இடைக் குறை. முகில்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சூழ்ந்து தவழ்ந்து கொண்டிருக்கும். நாள்-அப்பொழுது உதய மாகிய. மதி-சந்திரன். தோய்-தவழும். இல்-திரு மாளிகைகள் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். எங்கணும்-எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கணும்: இடைக்குறை. மங்கலம்-மங்கலச் சடங்குகள் நிகழ்ந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன; குழந்தைகளுக்கு மொட்டை அடித்தல், காது குத்துதல், காதணி அணிதல், இளைஞர்களுக்கு உபநயனம் செய்தல், கன்னிகைகளுக்குத் திருமணம் புரிதல், இளைஞர்களுக்கு ஏற்ற அழகும் நற்பண்பும் உள்ள கன்னிகைகளைத் திருமணம் செய்தல், ருது சாந்தி முகூர்த்தம், பிள்ளைப் பேறு, புண்ணி யாஹவாசனம் முதலியவை. தொண்டர்-திருத் தொண் டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-வலமாக வரும். கோயில்-ஏகாம்பரேசுவரர் ஆலயம் உள்ள. எங்கணும்-எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். கணும்: இடைக் குறை. உம்பர்-தேவர்களின்; ஒருமை பன்மை மயக்கம். குல-சாதியினர்; திணை மயக்கம். க்:சந்தி. குழாம்-கூடியிருக்கும் கூட்டத்தைக் காணலாம்.

பிறகு உள்ள 106-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்திய யனம் செய்து நிறை வேற்றிய மறையவர்கள் புரியும் யாகங் களே நெருப்பை உடையவை; விருப்பம் மருவிய பெண்மணி களினுடைய கூந்தல்களில் கூடிய மலர்களே கட்டுதலை உடையவை; விருப்பத்தை உண்டாக்கும் குறுந்தெருக்களே கவர்த்த வழிகளை உடையவை; மாமரங்களும், குருக்கத்தி மரங்களுமே அந்தக் காஞ்சிபுரத்தின் வெளியிடங்களில் சுற்றி வளர்ந்து நிற்கும்.' பாடல் வருமாறு:

"வேத வேதியர் வேள்வியே தீயன;
மாதர் ஓதி மலரே பிணியன;
காதல் வீதிவி லக்கே கவலைய;
சூதம் மாதவி யேபுறம் சூழ்வன."

வேத - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றிய; ஒருமை பன்மை மயக்கம். வேதியர்-மறையவர்கள் புரியும்; ஒருமை பன்மை மயக்கம். வேள்வியே-யாகங்களே; ஒருமை பன்மை மயக்கம். தீயன-நெருப்பை உடையவை. காஞ்சீபுரத்தில் வாழும் மக்கள் கெட்டவர்களாக இருக்க மாட்டார்கள் என்பது குறிப்பு. மாதர்-விருப்பம் மருவிய பெண்மணிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஓதி-கூந்தல்களில் சூடியுள்ள; ஒருமை பன்மை மயக்கம். மலரே-மலர்களே; ஒருமை பன்மை மயக்கம். பிணியன-கட்டுவதை உடையவை. காஞ்சீபுரத்தில் வாழும் மக்கள் ஒரு நோயும் இல்லாமல் தேக ஆரோக்கியத்தோடு வாழ்ந்து வருவார்கள் என்பது குறிப்பு. காதல்-விருப்பத்தை உண்டாக்கும். வீதி விலக்கே-குறுந் தெருக்களே; ஒருமை பன்மை மயக்கம். கவலைய-கவர்த்த வழிகளை உடையவை. கவலை: ஒருமை பன்மை மயக்கம். அந்தக் காஞ்சீபுரத்தில் வாழும் மக்கள் மனக் கவலை சிறிதும் இல்லாமல் வாழ்ந்து வருவார்கள் என்பது குறிப்பு. சூதம்-மா மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். மாதவியே-குருக்கத்தி மரங்களுமே; ஒருமை பன்மை மயக்கம். புறம்-காஞ்சீபுரத்தினுடைய வெளியிடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்வன-சுற்றி வளர்ந்து நிற்கும். காஞ்சீபுரத்தில் உள்ள பக்தர்கள் யாரையும் புறங்கூறாமல் வாழ்ந்து வருவார்கள் என்பது குறிப்பு.

பிறகு உள்ள 107-ஆம் பாடலின் கருத்து வருமாறு: 'மயில்களைப் போன்ற சாயல்களைப் பெற்றவர்களாகிய

பெண்மணிகளினுடைய இடுப்புக்களே தளர்ச்சியை உடையவையாக விளங்கும்; அந்தக் காஞ்சி மாநகரத்தில் உள்ள வீதிகளில் உயர்ந்து நிற்பவை யாகிய மாடங்களில் கட்டியிருக்கும் துவசங்களே அசைந்து ஆடிக் கொண்டிருக்கும்; சிவந்த நிறத்தைப் பெற்ற முகபடாங்களை அணிந்திருக்கும் ஆண் யானைகளே திகைப்பை அடைபவை; பரவி வளர்ந்திருக்கும் மரங்கள் ஓங்கி வளரும் பூம்பொழில்களில் உள்ள பலவகை மரங்களே பழங்களை உடையவை.' பாடல் வருமாறு:

"சாய லார்கள் நுசுப்பே தளர்வன;
ஆய மாடக் கொடியே அசைவன;
சேய ஓடைக் களிறே திகைப்பன;
பாய சோலைத் தருவே பயத்தன."

சாயலார்கள்-மயில்களைப் போன்ற சாயல்களைப் பெற்றவர்களாகிய பெண்மணிகளினுடைய. சாயல்: ஒருமை பன்மை மயக்கம். நுசுப்பே-இடுப்புக்களே; ஒருமை பன்மை மயக்கம். தளர்வன-மெலிவை உடையவையாக விளங்கும். காஞ்சீபுரத்தில் வாழும் தொண்டர்கள் தளர்ச்சியை அடையாமல் தங்களுக்கு உரிய வேலைகளைச் செய்து நிறைவேற்றுவார்கள் என்பது குறிப்பு. ஆய-அந்தக் காஞ்சி மாநகரத்தில் இருப்பவை ஆகிய. மாட-வீதிகளில் உயர்ந்து நிற்பவையாகிய மாடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கொடியே-கட்டியிருக்கும் துவசங்களே; ஒருமை பன்மை மயக்கம். அசைவன-அசைந்து ஆடிக் கொண்டிருக்கும். அந்தக் காஞ்சீபுரத்தில் வாழும் திருத் தொண்டர்கள் தளர்ச்சி சிறிதும் இல்லாமல் இருப்பார்கள் என்பது குறிப்பு. சேய-சிவந்த. ஓடை-பொன்னால் செய்த முகபடாங்களை அணிந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. களிறே-ஆண் யானைகளே; ஒருமை பன்மை மயக்கம். திகைப்பன-எந்தச் சாலையில் போவது என்று அறியாமல் திகைத்து நிற்பவையாக விளங்கும். காஞ்சி மாநகரத்தில்

வாழும் அன்பர்கள் திகைப்பை அடையாமல் பொறுமை யாகத் தங்களுடைய கடமைகளை நிறைவேற்றிக் கொண்டு வாழ்வார்கள் என்பது குறிப்பு. பாய-பரவி வளர்ந்திருக்கும். சோலை-பலவகை மரங்கள் ஓங்கி வளரும் பூம்பொழில்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தருவே-மரங்களே; ஒருமைபன்மை மயக்கம். அவையாவன: மாமரம், பலா மரம், தென்ன மரம், பலவகை வாழை மரங்கள், நாரத்தை மரம், விளா மரம், களாச் செடி, முந்திரி மரம் முதலியவை. பயத்தன-பழங்களை உடையவை. பயம்: ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: மாம் பழம், தெங்கம் பழம், பலாப் பழம், விளாம் பழம், கொய்யாப் பழம், மாதுளங் கனி, வேப்பம் பழம் முதலியவை. காஞ்சீபுரத்தில் வாழும் பக்தர் கள் காலனுக்கும் கூட அஞ்சாமல் தைரியமாக இருப்பார்கள் என்பது குறிப்பு.

அடுத்து வரும் 108-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பெருமையைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய பக்தர்களுடைய பக்தியே முன்னால் நிறைந்திருப்பவை; குளிர்ச்சியையும் நறுமணத்தையும் செழுமையையும் கொண்ட மகரந்தப் பொடிகளே பொடிகளாக இருப்பவை; சிவப்பு நிறத்தைப் பெற்ற நீளமான மாணிக்கங்களைக் கட்டி யிருக்கும் மாலைகளே ஆடவர்களின் மார்புகளிலும் பெண் மணிகளின் மார்புகளிலும் தொங்கிக் கொண்டிருக்கும். அளவு இல்லாத குங்குமப் பூக்களைக் கரைத்திருக்கும் குழம்பே வழுக்கி விழச் செய்பவை.' பாடல் வருமாறு:

"அண்ண லார்அன்பர் அன்பேமுன் ஆர்த்தன;
தண்ண றும்செழும் தாதே துகள்வன;
வண்ண நீள்மணி மாலையே தாழ்வன;
எண்ணில் குங்குமச் சேறே இழுக்கின."

அண்ணலார்-பெருமையைப் பெற்றவராகிய ஏகாம்பரே சுவரருடைய. அண்ணலார்-தலைவர் எனலும் ஆம். அன்பர்-பக்தர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். அன்பே-பக்தியே.

முன்-அந்த ஏகாம்பரேசுவரருடைய சந்நிதிக்கு முன்னால். ஆர்த்தன-நிறைந்திருப்பவை. 'தோத்திரங்களைக் கூறி ஆரவாரம் செய்வார்கள்' எனலும் ஆம். காஞ்சீபுரத்தில் வாழும் திருத்தொண்டர்கள் யாருக்கும் கட்டுப்பட்டு அடிமைகளாக வாழ மாட்டார்கள் என்பது குறிப்பு. தண்-குளிர்ச்சியையும். நறும்-நறுமணத்தையும். செழும்-செழுமையையும் கொண்ட. தாதே-மலர்களில் உள்ள மகரந்தப் பொடிகளே; ஒருமை பன்மை மயக்கம். துகள்வன-பொடிகளாக இருப்பவை. காஞ்சீபுரத்தில் வாழும் பக்தர்கள் சிறிதளவும் அழுக்கை உடையவர்களாக இராமல் தூயவர்களாக விளங்குவார்கள் என்பது குறிப்பு. வண்ண-சிவப்பு நிறத்தைப் பெற்று. நீள்-நீளமாக உள்ள. மணி-மாணிக்கங்களைக் கட்டியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மாலையே-மாலைகளே; ஒருமை பன்மை மயக்கம். தாழ்வன-ஆடவர்களின் மார்புகளிலும் பெண்மணிகளின் மார்புகளிலும் தொங்கிக் கொண்டிருக்கும். அந்தக் காஞ்சி மாநகரத்தில் வாழும் திருத்தொண்டர்கள் எந்தக் காலத்திலும் தாழ்வை அடைய மாட்டார்கள் என்பது குறிப்பு. எண்-அளவு. இல்-இல்லாத; கடைக்குறை. குங்கும-குங்குமப் பூக்களைத் கரைத்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சேறே-குழம்பே. இழுக்கின-வீதியில் நடக்கும் மக்களை வழுக்கி விழுமாறு செய்பவை. அந்தக் காஞ்சீபுரத்தில் வாழும் பக்தர்கள் எந்த வகையான இழுக்கையும் அடைய மாட்டார்கள்; பழிச் சொற்களைப் பிறர் கூறுமாறு வாழ மாட்டார்கள் என்பது குறிப்பு.

அடுத்து உள்ள 109-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'வெற்றியைப் பெற்ற தேவலோகத்தில் வாழும் தேவர்கள் திருவிளையாடல்களும் காஞ்சீபுரத்தில் என்றைக்கும் வாழும் மக்கள் வாழும் இயல்பும் நன்றாகவும் தங்களுடைய திருவுள்ளங்களில் அந்தத் தலத்தில் வாழும் மக்கள் கொண்ட விருப்பங்கள் ஒன்றையும் அந்தக் காஞ்சீபுரத்தில் நீங்காத விதத்தில் பெறச் செய்து செலுத்துவதாக அந்த நகரம்

விளங்கும்.' பாடல் வருமாறு:

" வென்றி வானவர் தாம்விளை யாடலும்
என்றும் உள்ளவர் வாழும் இயற்கையும்
நன்றும் உள்ளத்து நண்ணினர் வேட்கைகள்
ஒன்றும் அங்கொழி யாவகை உய்ப்பது."

வென்றி-அசுரர்களை வென்ற வெற்றியைப் பெற்ற. வானவர்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தாம்:அசை நிலை. விளையாடலும்-புரியும் திருவிளையாடல்களும்; ஒருமை பன்மை மயக்கம். என்றும்-அந்தக் காஞ்சீபுரத்தில் என்றைக்கும். உள்ளவர்-வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். வாழும்-தங்கள் வாழ்க்கையை நடத்தும். இயற்கையும்-இயல்பும். நன்றும்-நன்றாகவும். உள்ளத்து-தங்களுடைய திருவுள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நண்ணினர்-அந்தத் தலத்தில் வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். வேட்கைகள்-கொண்ட விருப்பங்கள். அவையாவன: செல்வத்தைப் பெறுதல், நன்மக்களை ஈனுதல், நல்ல கணவரைப் பெறுதல், கற்புடைய மனைவியை அடைதல், இடித்துரைக்கும் நண்பர்களைப் பெறுதல், சமயத்தில் உதவி புரியும் உறவினர்களை உடையவர்களாக இருத்தல், நல்ல தோழிமார்களைப் பெறுதல் முதலியவை. ஒன்றும்-ஒன்றையும். அங்கு-அந்தக் காஞ்சீபுரத்தில். ஒழியா-நீங்காத. வகை-விதத்தில். உய்ப்பது-பெறச் செய்து செலுத்துவதாக அந்த நகரம் விளங்கும்.

பிறகு உள்ள 110-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்கு உரிய பறக்கும் கோட்டைகளாகிய திரிபுரங்களை எரித்து வென்றவராகிய ஏகாம்பரேசுவரர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் காஞ்சீபுரத்தினுடைய புகழ் பரவியிருக்கும் நீண்ட பதினான்கு புவனங்களிலும் எல்லை இல்லாத போகங்களை வழங்கும் அழகைப் பெற்ற வளங்கள் யாவும் நிறைந்திருக்கும்

கொள்ளும் பாத்திரம் என்று பாராட்டுமாறு அந்தக் காஞ்சீ புரத்தில் நிரம்பியிருக்கிறது.' பாடல் வருமாறு:

'' புரங்க டந்தவர் காஞ்சி புரம்புகழ்
பரம்பு நீள்புவ னம்பதி னான்கினும்
வரம்பில் போக வனப்பின் வளமெலாம்
நிரம்பு கொள்கலம் என்ன நிறைந்ததால்.''

புரம்-தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்கு உரிய பறக்கும் கோட்டைகளாகிய திரிபுரங்களை; ஒருமை பன்மை மயக்கம். திரி-மூன்று. கடந்தவர்-எரித்து வென்றவராகிய ஏகாம்பரேசுவரர். காஞ்சிபுரம்-திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் காஞ்சீபுரத்தினுடைய. புகழ் பரம்பு-புகழ் பரவியிருக்கும். நீள்-நீளமாகிய. புவனம்-உலகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பதினான்கினும்-பதினான்கிலும். வரம்பு-எல்லை. இல்-இல்லாத; கடைக்குறை. போக-போகங்களை வழங்கும்; ஒருமை பன்மை மயக்கம். வனப்பின்-அழகைப்பெற்ற. வளம்-வளங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எலாம்-யாவும்; இடைக்குறை. நிரம்பு-நிறைந்திருக்கும். கொள் கலம்-பொருள்களைக் கொள்ளும் பாத்திரம். என்ன-என்று பாராட்டுமாறு. நிறைந்தது-அந்தக் காஞ்சீபுரத்தில் வளங்கள் நிரம்பியிருக்கின்றன. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 111-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த விதங்களைப் பெற்ற அழகிய காஞ்சி மாநகரமாகிய அதில் ஒரு பக்கத்தில் தங்கி வாழும் மக்கள் இந்தப் பூ மண்டலத்தில் அடைந்த மானிடப் பிறவிகளால் வண்ணாரச் சாதியில் பிறந்தவர் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் என்னும் திருநாமத்தைப் பெற்றவர்; நேர்மையாகிய பக்தியைப் பெற்ற திருவுள்ளத்தை உடையவர் அந்த நாயனார்; நற்குண நல்லொழுக்கத்தின் வழியில் நிலை நின்றவர் அவர்; மையைப் போல நீல நிறம் தங்கியிருக்கும் கழுத்தைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய திருவடி

களை வணங்கும் பரம்பரையில் திருவவதாரம் செய்தருளிய திருத்தொண்டர் இருப்பவராக ஆனார்.' பாடல் வருமாறு:

"அவ்வகைய திருநகரம்
அதன்கண்ஒரு மருங்குறைவார்;
இவ்வுலகிற் பிறப்பினால்
ஏகாலிக் குலத்துள்ளார்;
செவ்வியஅன் புடைமனத்தார்;
சீலத்தின் நெறிநின்றார்;
மைவிரவு கண்டரடி
வழித்தொண்டர் உளரானார்."

அவ்வகைய-அந்த விதங்களைப் பெற்ற. வகை: ஒருமை பன்மை மயக்கம். திரு-அழகிய. நகரம்-காஞ்சி மாநகர மாகிய. அதன்கண்-அதில். ஒரு மருங்கு-ஒரு பக்கத்தில். உறைவார்-தங்கி வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். இவ்வுலகில்-இந்தப் பூ மண்டலத்தில். பிறப்பினால்-அடைந்த மானிடப் பிறவிகளால்; ஒருமை பன்மை மயக்கம். ஏகாலி-வண்ணார. க்:சந்தி. குலத்துள்ளார்-சாதியிற் பிறந்தவர் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் என்னும் திருநாமத்தைப் பெற்றவர். செவ்விய-நேர்மையாகிய. அன்புடை-பக்தியைப் பெற்ற. மனத்தார்-திருவுள்ளத்தைப் பெற்றவர் அந்த நாயனார். சீலத்தின்-நற்குண நல்லொழுக்கத்தின். நெறி-வழியில். நின்றார்-நிலைத்து நின்றவர் அந்த நாயனார். மை-மையைப் போல. விரவு-நீல நிறம் தங்கிய. மை கறுப்பு நிறம் உடையது, என்றாலும் கறுப்பு நிறத்தை நீல நிறம் என்று கூறுவது புலவர் வழக்கம்; "நீல நிறக் காக்கை" என வருதலைக் காண்க. கண்டர்-திருக்கழுத்தைப் பெற்றவ ராகிய ஏகாம்பரேசுவரருடைய. அடி-திருவடிகளை வணங்கும்; ஒருமை பன்மை மயக்கம். வழி-பரம்பரையில் திருவவதாரம் செய்தருளிய. த்:சந்தி. தொண்டர்-ஒரு திருத் தொண்டர். உளர்-இருப்பவராக; இடைக்குறை. ஆனார்-ஆயினார்.

பின்பு வரும் 112-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இந்த மண்ணுலகத்தின்மேல் திருவவதாரம் செய்தருளியதற்குப் பிறகு தம்முடைய திருவுள்ளம் ஆகிய உள்ளம், மெய், வாக்கு என்னும் மூன்று கரணங்களையும் தலைவராகிய ஏகாம்பரேசுவரருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளினுடைய சார்பாக அடையுமாறு புரிபவர் அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார்; புண்ணியச் செயல்களைப் புரிந்த உண்மையான திருத் தொண்டர்கள் தங்களுடைய திருவுள்ளங்களில் கொண்ட அழகிய குறிப்பைத் தெரிந்து கொண்டு அதைப் பாதுகாக்கின்ற நிலை பெற்ற உறுதியால் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் என்னும் சிறப்பாகிய திருநாமத்தைப் பெற்றவர்.' பாடல் வருமாறு:

''மண்ணின்மிசை வந்ததற்பின்
மனம்முத லாயினமூன்றும்
அண்ணலார் சேவடியின்
சார்வாக அணைவிப்பார்
புண்ணியமெய்த் தொண்டர்திருக்
குறிப்பறிந்து போற்றுநிலைத்
திண்மையினால் திருக்குறிப்புத்
தொண்டர்எனும் சிறப்பினார்.''

மண்ணின் மிசை-இந்த மண்ணுலகத்தின்மேல். **வந்ததற் பின்**-திருவவதாரம் செய்தருளியதற்குப் பிறகு. **மனம்**-திருவுள்ளம். **முதலாயின**-முதலிய. **மூன்றும்**-உள்ளம், வாக்கு, உடம்பு என்னும் மூன்று கரணங்களையும். **அண்ணலார்**-தலைவராகிய ஏகாம்பரேசுவரருடைய. அண்ணலார்-பெருமையைப் பெற்றவர் எனலும் ஆம். **சேவடியின்**-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளினுடைய. அடி: ஒருமை பன்மை மயக்கம். **சார்வாக**-சார்பாக. **அணைவிப்பார்**-அந்த மூன்று கரணங்களையும் அடையுமாறு புரிபவர்

அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். புண்ணிய-புண்ணியச் செயல்களைப் புரிந்த; ஒருமை பன்மை மயக்கம். மெய்-உண்மையாகிய. த்: சந்தி. தொண்டர்-திருத் தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். திரு-தங்களுடைய திருவுள்ளங்களில் கொண்ட அழகிய. க்:சந்தி. குறிப்பு-குறிப்பிட்ட எண்ணத்தை. அறிந்து-தாம் தெரிந்து கொண்டு. போற்றும்-அந்த எண்ணத்தைப் பாதுகாக்கும். நிலை-நிலைபெற்ற. த்:சந்தி. திண்மையினால்-திருவுள்ளத்தின் உறுதியினால். திருக்குறிப்புத் தொண்டர்-திருக்குறிப்புத் தொண்ட நாயனார். எனும்-என்னும்; இடைக் குறை. சிறப்பினார்-சிறப்பைப் பெற்ற திருநாமத்தை உடையவர்.

பின்பு வரும் 113-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இரதம் ஓடும் போது ஒலியை எழுப்ப, குதிரைகள் கனைக்க, கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத் திசைகளிலும் சென்று ஒலியை எழுப்பும் புகழைப் பெற்ற காஞ்சீபுரம் என்னும் சிவத்தலத்தில் பலருடைய ஆடைகளை வெளுத்து வழங்கும் பெருமையைப் பெற்ற வண்ணார் என்று கூற முடியாத மெய்ம்மையைப் பெற்றவர் அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார்; கங்கையாற்றில் உள்ள புனல் ஒலியை எழுப்ப பாம்புகள் முழங்க பிறைச்சந்திரன் அரும்பும் அழகிய சடாபாரத்தைக் கொண்ட அழகிய தலையைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய திருநாமத்தை யாராவது கூற அதைக் கேட்டு உருகுகின்ற அந்தப் பக்தர்களுக்கு அவர்களுடைய ஆடைகளைப் பெரிய விருப்பத்தோடும் வெளுத்து வழங்குவார் அந்த நாயனார்.' பாடல் வருமாறு:

" தேரொலிக்க மாவொலிக்கத்
திசைஒலிக்கும் புகழ்க்காஞ்சி

ஊர்ஒலிக்கும் பெருவண்ணார்
எனவொண்ணா உண்மையினார்
நீரொலிக்க அராஇரைக்க
நிலாமுகிழ்க்கும் திருமுடியார்
பேரொலிக்க உருகுமவர்க்
கொலிப்பர்பெரு விருப்பினொடும்.''

தேர்-இரதம் ஓடும்போது. ஒலிக்க-ஒலியை எழுப்ப. மா-குதிரைகள்; ஒருமை பன்மை மயக்கம். ஒலிக்க-கனைக்க. த்:சந்தி. திசை-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென் மேற்கு என்னும் எட்டுத் திசைகளிலும்; ஒருமை பன்மை மயக்கம். ஒலிக்கும்-சென்று ஒலியை எழுப்பும். புகழ்-புகழைப் பெற்ற. க்:சந்தி. காஞ்சி ஊர்-காஞ்சீபுரம் என்னும் சிவத் தலத்தில். ஒலிக்கும்-பல மக்களுடைய ஆடைகளை வெளுத்து வழங்கும். பெரு-பெருமையைப் பெற்ற. வண்ணார் என-வண்ணார் என்று கூற. என: இடைக்குறை. ஒண்ணா-முடியாத. உண்மையினார்-மெய்ம்மையைப் பெற்றவர் அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். நீர்-கங்கையாற்றில் உள்ள புனல். ஒலிக்க-ஒலியை எழுப்ப. அரா-பாம்புகள்; ஒருமை பன்மை மயக்கம். இரைக்க-முழங்க. நிலா-பிறைச் சந்திரன். முகிழ்க்கும்-அரும்பும். திரு-அழகிய. முடியார்-சடாபாரத்தைக் கொண்ட தலையைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய. பேர்-திருநாமத்தை. ஒலிக்க-யாராவது கூற. உருகும்-அதைக் கேட்டு உருக்கத்தை அடையும். அவர்க்கு-அந்தப் பக்தர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். பெரு-பெரிய. விருப்பினொடும்-விருப்பத்தோடும். ஒலிப்பர்-வெளுத்து அந்த ஆடைகளை வழங்குவார் அந்த நாயனார்.

பிறகு வரும் 114-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தேஜஸ்ஸைப் பெற்ற செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய அடியவர்களுடைய ஆடைகள் பெற்ற புழுதியாகிய

அழுக்கைப் போக்கியருளுபவரைப் போல பழைய பிறவிகளில் புரிந்த தீவினைகளாகிய பாவங்களையும் குற்றத்தைக் கொண்ட ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் அடைவதனால் உண்டாகும் பெரியதாக இருக்கும் மனிதப் பிறவியாகிய அழுக்கை விடுமாறு போக்கி விட்டு அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் நடந்து வரும் காலத்தில் அந்தக் காஞ்சீபுரத்தில் ஒரு நாள்.' பாடல் வருமாறு:

" தேசுடைய மலர்க்கமலச்
சேவடியார் அடியார்தம்
தூசுடைய துகள்மாசு
கழிப்பார்போல் தொல்லைவினை
ஆசுடைய மலம்மூன்றும்
அணையவரும் பெரும்பிறவி
மாசுதனை விடக்கழித்து
வருநாளில் அங்கொருநாள்."

இந்தப் பாடல் குளகம். தேசுடைய-தேஜஸ்ஸைப் பெற்ற. மலர்க்கமலச் சேவடியார்-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய. மலர்: ஒருமை பன்மை மயக்கம். அடி: ஒருமை பன்மை மயக்கம். அடியார்தம்-அடியவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம்: அசை நிலை. தூசு உடைய-ஆடைகள் பெற்ற. தூசு: ஒருமை பன்மை மயக்கம். துகள்-புழுதியாகிய. மாசு-அழுக்கை. கழிப்பார் போல்-போக்கியருளுபவரைப் போல. தொல்லை-பழைய பிறவிகளில் புரிந்த. வினை-தீவினைகளாகிய பாவங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். ஆசு உடைய-குற்றத்தைக் கொண்ட. மலம் மூன்றும்-ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும். மலம்: ஒருமை பன்மை மயக்கம். அணைய வரும்-அடைவதனால் உண்டாகும். பெரும்-பெரியதாக இருக்கும். பிறவி-மனிதப் பிறவியாகிய. மாசுதனை-அழுக்கை. தன்:

அசைநிலை. விட-விடுமாறு. க்:சந்தி. கழித்து-போக்கி விட்டு. வரும் நாளில்-அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் நடந்து வரும் காலத்தில். அங்கு-அந்தக் காஞ்சீபுரத்தில். ஒரு நாள்-ஒரு தினம்.

பிறகு வரும் 115-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தங்கம் உண்டாகும் இமாசலத்தினுடைய மன்னன் ஈன்றருளும் பூங்கொடியைப் போல விளங்கும் காமாட்சி அம்மையினுடைய நல்ல நிலையை அன்று அளந்து தெரிந்து கொள்ளும் பொருட்டு எழுந்தருளி வரும் அடியேங்களுடைய தலைவனாகிய ஏகாம்பரேசுவரன் தன்னுடைய அடியவர்களுடைய ஒப்பற்ற திருத் தொண்டராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய அந்த நிலையைப் பார்த்தருளி அந்தப் பக்தராகிய அந்த நாயனாருக்குத் தன்னுடைய திருவருளை வழங்கும் பொருட்டு எழுந்தருளிக் காஞ்சீபுரத்துக்கு வந்து சேர்வாரானார்.' பாடல் வருமாறு:

"பொன்னிமயப் பொருப்பரையன்
பயந்தருளும் பூங்கொடிதன்
நன்னிலைமை அன்றளக்க
எழுந்தருளும் நம்பெருமான்
தன்னுடைய அடியவர்தம்
தனித்தொண்டர் தம்முடைய
அந்நிலைமை கண்டன்பர்க்
கருள்புரிவான் வந்தணைவார்."

பொன்-தங்கம் உண்டாகும். இமயப் பொருப்பு அரையன் -இமாசலத்தினுடைய மன்னன். பயந்தருளும்-ஈன்றெடுத்தருளும். பூங்கொடிதன்-மலர்கள் மலர்ந்த கொடியைப் போல விளங்கும் காமாட்சி அம்மையினுடைய; உவம ஆகு பெயர். பூ: ஒருமை பன்மை மயக்கம். தன்: அசை நிலை. நல் -நல்ல. நிலைமை-நிலையை. அன்று-அன்றைக்கு. அளக்க- அளந்து தெரிந்து கொள்ளும் பொருட்டு. எழுந்தருளும் -காஞ்சீபுரத்திற்கு எழுந்தருளி வரும். நம்-அடியேங்களு-

டைய; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களை யும் சேர்த்துக் கூறியது. பெருமான்-தலைவனாகிய ஏகாம்ப ரேசுவரன். தன்னுடைய அடியவர் தம்-தன்பால் பக்தியைக் கொண்ட அடியவர்களுடைய. தம்:அசை நிலை. தனி-ஒப் பற்ற. த்:சந்தி. தொண்டர் தம்முடைய-திருத் தொண்ட ராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய. தம்:அசை நிலை. அந்நிலைமை-அந்த நிலையை. கண்டு-பார்த்தருளி. அன்பர்க்கு-தன்னுடைய பக்தராகிய அந்த நாயனாருக்கு. அருள் புரிவான்-தன்னுடைய திருவருளை வழங்கும் பொருட்டு. வந்து-காஞ்சி மாநகரத்துக்கு வந்து. அணைவார் -சேர்பவரானார்.

பிறகு வரும் 116-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'குளிர் மிகுதியாக உள்ள பின் பனிக்காலத்தில் அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனாரிடத்திற்கு ஏழையரைப் போல வடிவத்தை எடுத்துக் கொண்டவராகித் தம்முடைய திருமேனி மெலிவை அடைந்து மிகவும் அழுக்கு ஏறிய கந்தல் துணியை உடுத்தவராகி பெருமையைப் பெற்ற ஒரு தவசியின் வேடத்தைத் தரித்துக் கொண்டு திருமால் பன்றியின் உருவத்தை எடுத்துக் கொண்டு தேடிப் பார்த்தும் அறிந்து கொள்ள முடியாத அந்தத் தவசியினுடைய செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளால் சிறிதும் குற்றத்தை அடையாத திருவுள்ளத்தைப் பெற்றவராகிய அந்த நாயனா ருக்கு முன்னால் குறுகுறு எனத் தம்முடைய திருவடிகளால் நடக்கும் நடைகளைக் கொள்ளுமாறு அந்த நாயனாரி டத்தை அடைந்து.' பாடல் வருமாறு:

"சீதம்மலி காலத்துத்
திருக்குறிப்புத் தொண்டர்பால்
ஆதுவராய் மெலிந்துமிக
அழுக்கடைந்த கந்தையுடன்
மாதவவே டம்தாங்கி
மாலறியா மலரடிகள்

கோதடையா மனத்தவர்முன்
குறுநடைகள் கொளக்குறுகி.''

இந்தப் பாடல் குளகம். சீதம்-குளிர். மலி-மிகுதியாக உள்ள. காலத்து-பின் பனிக் காலத்தில். த்:சந்தி. திருக் குறிப்புத் தொண்டர் பால்-திருக்குறிப்புத் தொண்ட நாய னாரிடத்திற்கு. ஆதுவராய்-வறுமையை உடையவரைப் போல ஒரு வடிவத்தை எடுத்துக் கொண்டவராகி. மெலிந்து -தம்முடைய திருமேனி மெலிவை அடைந்து.மிக-மிகுதியாக. அழுக்கு அடைந்த-அழுக்கு ஏறிய. கந்தையுடன்-ஒரு கந்தல் துணியை உடுத்தவராகி; திணை மயக்கம். மாதவ-பெருமை யைப் பெற்ற ஒரு தவசியினுடைய. வேடம்-வேடத்தை. தாங்கி-தரித்துக் கொண்டு. மால்-திருமால். அறியா-ஒரு பன்றியின் உருவத்தை எடுத்துக் கொண்டு தேடிப் பார்த்தும் அறிந்து கொள்ள முடியாத. மலர்-அந்தத் தவசியினுடைய செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். அடிகள் - திருவடிகளால். கோது -சிறிதளவும் குற்றத்தை. அடையா-அடையாத. மனத்தவர்-திருவுள் ளத்தைப் பெற்றவராகிய அந்த நாயனாருக்கு. முன்-முன் னால். குறு நடைகள்-குறு குறு எனத் தம்முடைய திருவடி களால் நடக்கும் நடைகளை. கொள-கொள்ளுமாறு; இடைக் குறை. க்:சந்தி. குறுகி-அந்த நாயனார் இருக்கும் இடத்தை அடைந்து.

பிறகு வரும் 117-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தம்முடைய திருமேனியில் வெண்மையாகிய விபூதி விளங்கி ஒளியை வீசும திருக்கோலத்தோடு கரிய மேகம் என்று சொல்லுமாறு உள்ள ஓர் அழுக்கு ஏறிய கந்தல் துணி யோடு திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய திருமாளி கைக்கு எழுந்தருளி வரும் திருமேனி அருமையாகிய தவத் தைப் புரிந்த அந்தத் தவசியாரைப் பார்த்துத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச் சியை அடைந்து அந்தத் தவசியாருக்கு எதிரில் சென்று

அவரை வரவேற்றுத் தம்முடைய திருமேனியில் உண்டாகும் மயிர்க்கூச்சலாகிய புளகாங்கிதம் இருப்பவையாக விளங்க அந்தத் தவசியாரை அந்த நாயனார் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

"திருமேனி வெண்ணீறு
திகழ்ந்தொளிரும் கோலத்துக்
கருமேகம் எனஅழுக்குக்
கந்தையுடன் எழுந்தருளி
வருமேனி அருந்தவரைக்
கண்டுமனம் மகிழ்ந்தெதிர்கொண்
டுருமேவும் மயிர்ப்புளகம்
உளவாகப் பணிந்தெழுந்தார்."

திருமேனி-தம்முடைய திருமேனியில். வெண்-வெண்மையாகிய. நீறு-விபூதி. திகழ்ந்து-விளங்கி. ஒளிரும்-ஒளியை வீசும். கோலத்து-திருக்கோலத்தோடு. க்:சந்தி. கரு-கருமையான. மேகம்-முகில். என-என்று கூறுமாறு; இடைக்குறை. அழுக்கு-அழுக்கு ஏறிய. க்:சந்தி. கந்தையுடன்-தம்முடைய இடுப்பில் உடுத்துக் கொண்டிருந்த கந்தல் துணியோடு. எழுந்தருளி வரும்-திருக்குறிப்புத் தொண்டனார் வாழும் திருமாளிகைக்கு எழுந்தருளி வரும். மேனி-திருமேனி. அரும்-அருமையாக இருக்கும். தவரை-தவத்தைப் புரிந்த அந்தத் தவசியாரை. க்:சந்தி. கண்டு-பார்த்து. மனம்-திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. எதிர்கொண்டு-அந்தத் தவசியாருக்கு எதிரில் சென்று அவரை வரவேற்று. உரு-தம்முடைய திருமேனியில். மேவும்-உண்டாகும். மயிர்ப்புளகம்-மயிர்க்கூச்சலாகிய புளகாங்கிதங்கள்; ஒருமை பன்மை மயக்கம். உளவாக-இருப்பவையாக விளங்க. உள:இடைக்குறை. ப்:சந்தி. பணிந்து-அந்தத் தவசியாரை அந்த நாயனார் தரையில் விழுந்து வணங்கி விட்டு. எழுந்தார்-பிறகு தரையி

லிருந்து எழுந்து நின்று கொண்டிருந்தார்.

அடுத்து உள்ள 118-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு தம்முடைய திருமாளிகைக்கு வந்து சேர்ந்த அந்தத் தவசியார் குறித்த எண்ணத்தைத் தெரிந்து கொண்டு அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் இனிமையாகிய பல வார்த்தைகளைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து, "புரிந்த தவத்தைப் பெற்ற தவசியாரே, தேவரீருடைய திருமேனி இளைத்திருந்ததற்கு என்ன காரணம்?" என்று கேட்டுவிட்டு அவரைத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின்மேல் வைத்துக் கும்பிட்டு விட்டுப் பிறகு அவர் திருவடிகளில் விழுந்து வணங்கி, "யாம் உம்மிடம் கொடுத்து வைத்த கந்தல் துணியை எம்மிடம் தோய்ப்பதற்காக வழங்கியருளுவீராக" என்று மையைப் போல விளங்கும் திருக்கழுத்தை மறைத்துவிட்டு எழுந்தருளிய பெரிய தவத்தைப் புரிந்தவராகிய அந்தத் தவசியார் பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்வாரானார்.' பாடல் வருமாறு:

"எய்தும்அவர் குறிப்பறிந்தே
இன்மொழிகள் பலமொழிந்து
'செய்தவத்தீர், திருமேனி
இளைத்திருந்த தென்?' என்று
கைதொழுது, 'கந்தையினைத்
தந்தருளும் கழுவ.' என
மைதிகழ்கண் டம்கரந்த
மாதவத்தோர் அருள்செய்வார்."

எய்தும்-அவ்வாறு தம்முடைய திருமாளிகைக்கு வந்து சேர்ந்த; கால மயக்கம். அவர்-அந்தத் தவசியார். குறிப்பு-குறித்த எண்ணத்தை. அறிந்து-தெரிந்து கொண்டு. ஏ: அசை நிலை. இன்-இனிய. மொழிகள்பல-பல வார்த்தைகளை. மொழிந்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. செய்-

புரிந்த. தவத்தீர்-தவத்தைப் பெற்ற தவசியாரே. திருமேனி-தேவரீருடைய அழகிய திருமேனி. இளைத்திருந்தது-இளைத்திருந்ததற்கு. என்-என்ன காரணம்? கடைக்குறை. என்று-என்று கேட்டு விட்டு. கை-அவரைத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்து; ஒருமை பன்மை மயக்கம். தொழுது-கும்பிட்டுப் பிறகு அந்தத் தவசியாருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி. கந்தையினை-பிறகு "யாம் உம்மிடம் கொடுத்துவைத்த கந்தல் துணியை. த்:சந்தி கழுவ-தோய்ப்பதற்காக. தந்தருளும்-வழங்கியருளுவீராக.' என-என்று; இடைக்குறை. மை-மையைப் போல. திகழ்-நீலமாக விளங்கும். கண்டம்-தம்முடைய திருக்கழுத்தை கரந்த-மறைத்து விட்டு எழுந்தருளிய. மா-பெருமையைப் பெற்ற. தவத்தோர்-தவத்தைப் புரிந்தவராகிய அந்தத் தவசியார். அருள் செய்வார்-பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்வாரானார்.

பிறகு உள்ள 119-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

' "எம்முடைய இந்தக் கந்தல் துணி அழுக்கு ஏறி கைகளால் எடுக்க முடியாதது என்றாலும் நான் என்னுடைய உடம்பில் கொண்டிருந்த குளிருக்கு வருத்தத்தை அடைந்து இதை யான் விடமாட்டேன்; மேலைச் சமுத்திரத்தில் அந்த அத்தமன மலையில் வெம்மையான கிரணங்களை வீசும் சூரியன் விழுந்து அத்தமனத்தை அடைவதற்கு முன்னால் என்னுடைய கந்தல் துணியை நீர் வழுங்குவீரானால் அதை என்னுடைய கைகளிலிருந்து வாங்கிக் கொண்டு சென்று நீர் வெளுத்துக் கொண்டு வேகமாக வருவீராக" என்று அந்தத் தவசியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு:

" இக்கந்தை அழுக்கேறி
எடுக்கவொணா தெனினும்யான்
மெய்க்கொண்ட குளிர்க்குடைந்து
விடமாட்டேன்; மேல்கடற்பால்

அக்குன்றம் வெங்கதிரோன்
அணைவதன்முன் தருவீரேல்
கைக்கொண்டு போய்ஒலித்துக்
கொடுவாரும் கடி'தென்றார்.''

இக்கந்தை-எம்முடைய இந்தக் கந்தல் துணி. அழுக்கு ஏறி-மிகவும் அழுக்கு ஏறி. எடுக்க-கைகளால் எடுப்பதற்கு. ஒணாது-முடியாதது; இடைக்குறை. எனினும்-என்றாலும். இடைக்குறை. யான்-நான். மெய்-என்னுடைய உடம்பில். க்:சந்தி. கொண்ட-கொண்டிருந்த. குளிர்க்கு-குளிரை; உருபு மயக்கம். உடைந்து- வருத்தத்தை அடைந்து. விடமாட்டேன்-இந்தத் துணியை யான் விட மாட்டேன். மேல்-மேற்குத் திசையில் உள்ள. கடற்பால்-சமுத்திரத்தில். அக்குன்றம்-அந்த அத்தமன மலையில். வெம்-வெம்மையான கிரணங்களை வீசும். கதிரோன்-சூரியன. அணைவதன் முன்-விழுந்து அத்தமனத்தை அடைவதற்கு முன்னால். தருவீரேல்-என்னுடைய கந்தல் துணியை நீர் வழங்குவீரானால். கை-அதனை என்னுடைய கைகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கொண்டு-நீர் வாங்கிக் கொண்டு. போய்-நீர் நிலைக்குச் சென்று. ஒலித்து-வெளுத்துக்கொண்டு. க்:சந்தி. கடிது-வேகமாக. வாரும்-வருவீராக. என்றார்—என்று அந்தத் தவசியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு வரும் 120-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தேவரீர் இந்தக் கந்தல் துணியை அடியேனிடத்தில் வழங்கியருளும் அந்தத் துணியைத் தாமதம் செய்யாமல் வெளுத்து உங்களுக்கு இன்றைக்கு செவ்வந்தி வேளை வருவதற்கு முன்னால் வழங்குகின்றேன் என்று திருக்குறிப்புத் தொண்ட நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய, அந்தத் தவசியாரும், ''கந்தல் துணியாகிய இதனை வெளுத்து தேவரீருக்கு உலர வைத்து விரைவில் இன்றைக்கே நீர் வழங்காவிட்டால் இந்த என்னுடைய உடம்பிற்குத் துன்பத்தை இழைத்தவர் ஆவீர்'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து

விட்டு அந்தக் கந்தல் துணியை அந்த நாயனாரிடம் வழங்கி விட்டு அந்தத் தவசியார் நீராடுவதற்காக ஒரு நீர்நிலைக்கு எழுந்தருளிச் சென்றார்.' பாடல் வருமாறு:

"'தந்தருளும் இக்கந்தை
தாழாதே ஒலித்துமக்கின்
றந்திபடு வதன்முன்னம்
தருகின்றேன்.' என அவரும்
'கந்தைஇது ஒலித்துணக்கிக்
கடிதின்றே தாரீரேல்
இந்தஉடற் கிடர்செய்தீர்'
என்றுகொடுத் தேகினார்."

தந்தருளும் இக்கந்தை-தேவரீர் இந்தக் கந்தல் துணியை அடியேனிடத்தில் வழங்கியருளும். தாழாது-அந்தத் துணியைத் தாமதம் செய்யாமல். ஏ:அசை நிலை. ஒலித்து-வெளுத்து விட்டு. உமக்கு-தேவரீருக்கு. இன்று-இன்றைக்கே. அந்தி-செவ்வந்தி வேளை. படுவதன்-வருவதற்கு. முன்னம்-முன்னாலேயே. தருகின்றேன்-அடியேன் வழங்குகின்றேன். என-என்று திருக்குறிப்புத் தொண்ட நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய; இடைக்குறை. அவரும்-அந்தத் தவசியாரும். கந்தை இது-கந்தல் துணியாகிய இதனை. ஒலித்து-வெளுத்து விட்டு. உணக்கி-தேவரீருக்கு வெயிலில் உலர வைத்து. க்:சந்தி. கடிது-விரைவில். இன்றே-இன்றைக்கே. தாரீரேல்-நீர் என்னிடம் வழங்காவிட்டால். இந்த-இந்த என்னுடைய. உடற்கு-உடம்பிற்கு. இடர்-துன்பத்தை. செய்தீர்-இழைத்தவர் ஆவீர். என்று-என்று அந்தத் தவசியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. கொடுத்து-அந்தக் கந்தல் துணியை அந்த நாயனாரிடம் வழங்கி விட்டு. ஏகினார்-அந்தத் தவசியார் நீராடுவதற்காக ஒரு நீர் நிலைக்கு எழுந்தருளிச் சென்றார்.

பிறகு வரும் 121-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தத் தவசியார் குறிப்பிட்ட நேரத்திலேயே அவரு

டைய கந்தல் துணியை வெளுத்து விட்டு அவரிடம் வழங்குவதற்காக அதை எடுத்துக் கொண்டு அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சென்று நறுமணம் கமழும் தடாகத்தில் நிரம்பியிருக்கும் புனல் ஓடும் துறையில் அந்தக் கந்தல் துணியில் ஏறியிருந்த அழுக்கை ஒரு கல்லில் தோய்த்துப் போக்கி விட்டு மிகுதியாக அந்தத் துணியை ஒரு பானையில் வேக வைத்து எடுத்து அதை வெயிலில் உலரச் செய்து மீண்டும் அந்தத் துணியை வெளுக்கப் போகும் சமயத்தில் பெரிதாகும் பகல் நேரம் சென்று பிற்பகல் நேரமாகி மான் குட்டியைத் தம்முடைய திருக்கரத்தில் ஏந்தியிருக்கும் ஏகாம்பரேசுவரர் வழங்கிய திருவருளினால் மாரி ஆகாயத்தில் எழுந்து வந்து சொரியும்.' பாடல் வருமாறு:

'' குறித்தபொழு தேஒலித்துக்
 கொடுப்பதற்குக் கொடுபோந்து
வெறித்தடநீர்த் துறையின்கண்
 மாசெறிந்து மிகப்புழுக்கிப்
பிறித்தொலிக்கப் புகும்அளவில்
 பெரும்பகல்போய்ப் பின்பகலாய்
மறிக்கரத்தார் திருவருளால்
 மழைஎழுந்து பொழிந்திடுமால்.''

குறித்த-அந்தத் தவசியார் குறிப்பிட்ட. பொழுதே-நேரத்திலேயே. ஒலித்து-அந்தத் தவசியாருடைய கந்தல் துணியை வெளுத்து விட்டு. க்:சந்தி. கொடுப்பதற்கு-அந்தத் தவசியாரிடம் வழங்குவதற்காக. க்:சந்தி. கொடு-அந்தத் துணியை எடுத்துக்கொண்டு. போந்து-அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் சென்று. வெறி நறுமணம் கமழும். த்:சந்தி. தட-ஒரு தடாகத்தில் நிரம்பியிருக்கும். நீர்த் துறையின் கண்-புனல் ஓடும் துறையில். மாசு-அந்தக் கந்தல் துணியில் ஏறியிருந்த அழுக்கை. எறிந்து-ஒரு கருங்கல்லில் தோய்த்து விட்டு. மிக-மிகுதியாக. ப்:சந்தி. புழுக்கி-ஒரு பானையில் அந்தத் துணியை வேக வைத்து. ப்:சந்தி. பிறித்து

-அந்தத் துணியைப் பிரித்து. ஒலிக்க-வேக வைத்ததை எடுத்து வெளுக்க. ப்:சந்தி. புகும்-போகும். அளவில்-சமயத்தில். பெரும்-பெரிதாக இருக்கும். பகல்-பகல் நேரம். போய்-சென்று. ப்:சந்தி. பின்பகலாய்-பிற்பகல் நேரமாகி. பிற்பகல்-உச்சிவேளைக்குப் பின்னால் உள்ள பகல் வேளை. மறி-மான் குட்டியை ஏந்தும். க்:சந்தி. கரத்தார்-திருக்கரத்தைப் பெற்ற ஏகாம்பரேசுவரர். திருவருளால்-வழங்கிய திருவருளினால். மழை-மாரி. எழுந்து-ஆகாயத்தில் எழுந்து வந்து. பொழிந்திடும்-சொரியும். ஆல்: ஈற்றசை நிலை.

மறிக்கரத்தார்: ''மறி ஏந்திய கையான்.'', ''மறிவளர் அங்கையர்.'', ''மறி கொள் கையன்.'', ''மறியாரும் கையுடையானை.'', ''கலை மான் மறியும்... நிலையாகிய கையினனே.'', ''மறியாரும் கைத்தலத்தீர்.'', ''மான் மறி பிடித்தான்.'', ''மறி திருகரத்தினான்.'', ''மறியுலாம் கையினான்.'', ''துள்ளும் மான்மறி அங்கையில் ஏந்தி.'', ''மறியுலாம் கையினர்.'', ''மறிகிளர் மான் மழுப்புல் குகை எம் மணாளர்.'', ''மறியார் கரத்தெந்தை.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''மறி படக் கிடந்த கையர்.'', ''மறியுடையான்.'', ''மறித் திகழ்கையினன்.'', ''துள்ளு மான்மறி தூமழு வாளினர்.'', ''மறியிலங்கு கையர்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''மறிசேர் அங்கையனே.'', ''மறிசேர் கையினனே.'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், ''மறியார் வளைக்கை.'' என்று திருமூலரும், ''மறி மழுவுடைய கரன்.'' என்று பட்டினத்துப் பிள்ளையாரும், ''மறிக்கரத் தாரூர் அரற்கு.'' என்று நம்பியாண்டார் நம்பியும், ''மறி கரந்து.'', ''மறியுற்ற கையரை.'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 122-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'திசைகள் மயங்கும் வண்ணம் வானவெளியை மூடிக் கொண்டிருந்த நெருங்கிய மேகங்களினுடைய கூட்டம்

செறிந்து ஆகாயத்திலிருந்து பொழியும் மழை நீர்த்தாரைகள் பார்ப்பவர்களுடைய கண்கள் நுழையாத விதத்தில் செறிந்து இருக்க தளர்ச்சியைப் பெற்றதிருவுள்ளத்தை உடைய பக்தரா கிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தம்முடைய அறிவை மறந்து போய் செய்வதற்கு அருமையாக உள்ள தவத்தைப் புரிந்த அந்தத் தவசியாரிடம் அவருடைய சம்மதத்தைப் பெறுவதற்கு எண்ணி வருத்தத்தை அடைந்து, ''இனிமேல் அடியேன் என்ன செயலைப் புரிவேன்'' என்று எண்ணி நின்று கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

> '' திசைமயங்க வெளிஅடைத்த
> செறிமுகிலின் குழாம்மிடைந்து
> மிசைசொரியும் புனல்தாரை
> விழிநுழையா வகைமிடைய
> அசைவுடைய மனத்தன்பர்
> அறிவுமறந் தருந்தவர்பால்
> இசைவுநினைந் தழிந்தினியான்
> என்செய்கேன்' எனநின்றார்.''

திசை-கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வட மேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத்திசை களும்; ஒருமை பன்மை மயக்கம். மயங்க-மயங்கும் வண்ணம். வெளி-வான வெளியை. அடைத்த-மூடிக் கொண்டிருந்த. செறி-நெருக்கமாக இருந்த. முகிலின்-மேகங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குழாம்-கூட்டம். மிடைந்து- செறிந்து. மிசை-ஆகாயத்திலிருந்து. சொரியும்-பொழியும். புனல்-மழை நீரினுடைய. தாரை-தாரைகள்; ஒருமை பன்மை மயக்கம். தாரை-நீர் ஒழுக்கு. விழி-பார்ப்ப வர்களுடைய கண்கள்; ஒருமை பன்மை மயக்கம். நுழையா- நுழைய முடியாத. வகை-விதத்தில். மிடைய-செறிந்திருக்க. அசைவு உடைய-தளர்ச்சியைப் பெற்ற. மனத்து-திருவுள்ளத் தைக் கொண்ட. அன்பர்-பக்தராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார். அறிவு-தம்முடைய அறிவை. மறந்து-

மறந்து போய். அரும்-புரிவதற்கு அருமையாக இருக்கும். தவர் பால்-தவத்தைப் புரிந்த அந்தத் தவசியிடம். இசைவு-அவருடைய சம்மதத்தைப் பெறுவதற்கு. நினைந்து-எண்ணி. அழிந்து-வருத்தத்தை அடைந்து. இனி-இனிமேல். யான்-அடியேன், என்-என்ன செயலை. செய்கேன்-புரிவேன். என-என்று எண்ணி; இடைக்குறை. நின்றார்-நின்று கொண்டிருந்தார்.

அடுத்து வரும் 123-ஆம் கவியின் கருத்து வருமாறு:

' "விடாமல் சொரியும் மாரி ஒரு வேளை விட்டு விடும்" என்று எண்ணிப் பிரம கபாலத்தை ஏந்தியவராகிய ஏகாம்பரேசுவரருடைய திருத் தொண்டராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார் தனியாக நின்று கொண்டிருந்தார்; மழை விட அவர் பார்க்கவில்லை; பகைவர்களைப் போல இரவு நேரம் வரவே, "தம்முடைய திருமேனி குளிரை அடையும் மேலான தவத்தைப் புரிந்த தவசியரிடம் ஆஆ அடியேனுடைய குற்றேவல் அழிந்து போனவாறு என்னே" என்று எண்ணி அந்த நாயனார் தரையின் மேல் வீழ்ந்தார்.' பாடல் வருமாறு:

" 'ஓவாதே பொழியும்மழை
ஒருகால்விட் டொழியும்' எனக்
காவாலி திருத்தொண்டர்
தனிநின்றார்; விடக்காணார்;
மேவார்போற் கங்குல்வர
'மெய்குளிரும் விழுத்தவர்பால்
ஆ! ஆ! என் குற்றேவல்
அழிந்தவா' எனவிழுந்தார்."

ஓவாது-சிறிதளவும் விடாமல். ஏ: அசை நிலை. பொழியும்-சொரியும். மழை-மாரி. ஒருகால்-ஒரு வேளை. விட்டு ஒழியும்-விட்டு விடும். என-என்று எண்ணிக் கொண்டு; இடைக்குறை. சுசந்தி. காவாலி-பிரம கபாலத்தை ஏந்திய வராகிய ஏகாம்பரேசுவரருடைய திருத்தொண்டர்-திருத்

தொண்டராகிய அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். தனி-தனியாக. நின்றார்-நின்று கொண்டிருந்தார். விட-மழை விட. க்:சந்தி. காணார்-அவர் பார்க்கவில்லை. மேவார்-பகைவர்களை; ஒருமை பன்மை மயக்கம். போல்-போல. கங்குல்-இரவு நேரம். வர-அப்போது வந்து சேர. மெய்-தம்முடைய திருமேனி குளிரும்-குளிரை அடையும். விழு-மேலான. த்:சந்தி. தவர்பால்-தவத்தைப் புரிந்த தவசியினிடத்தில். ஆ ஆ-ஐயோ! ஐயோ! என்-அடியேனுடைய. குற்றேவல்-சிறிய செயல். அழிந்தவா-அழிந்து போனவாறு என்னே! என-என்று எண்ணி; இடைக்குறை. விழுந்தார் -அந்த நாயனார் தரையின் மேல் வீழ்ந்தார்.

பிரம கபாலத்தை ஏந்தியவர்: ''சுருதியான் தலையும்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''சிரமேற்ற நான்முகன்றன் தலையும்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''நல்ல மலரின் மேல் நான்முகனார் தலை, ஒல்லை அரிந்ததென்றுந்தீ பற.'' என்று மாணிக்க வாசகரும், ''பண்பாய நான் மறையான் சென்னிப் பலி தேர்ந்தான்.'' என்று கபிலதேவ நாயனாரும் பாடியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 124-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

' ''வானத்திலிருந்து பொழிந்து தரையில் விழுந்த மாரி விடாமல் உண்மையான தவத்தைப் புரிந்த அந்தத் தவசியார் திருவாய் மலர்ந்தருளிய நேரத்தின் எல்லை கடந்து விட்டது; முன்பு அந்தத் தவசியாருடைய ஆடையை வெளுத்துக் கொண்டு வந்து அடியேனுடைய இல்லத்தில் வீசும் காற்றில் உலர்த்துவதை அடியேன் தெரிந்து கொள்ளவில்லை; செம்மையாகிய தவத்தைப் புரிந்த அந்தத் தவசியாருடைய திருமேனி குளிரை அடைவதைப் பார்க்கும் தீய செயலைப் புரிந்த தொண்டனாகிய அடியேனுக்கு இனிமேல் இதுதான் செய்யக் கூடிய செயல்'' என்று எண்ணி அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் துணிவை அடைந்து எழுந்து செல்வாரானார்.' பாடல் வருமாறு:

"'விழுந்தமழை ஒழியாது
மெய்த்தவர்சொல் லியஎல்லை
கழிந்தது;முன் பொலித்துமனைக்
காற்றேற்க அறிந்திலேன்;
செழுந்தவர்தம் திருமேனி
குளிர்காணும் தீங்கிழைத்த
தொழும்பனேற் கினியிதுவே
செயல்' என்று துணிந்தெழுந்தார்.''

விழுந்த-வானத்திலிருந்து பொழிந்து தரையில் விழுந்த. மழை-மாரி. ஒழியாது-விடாமல். மெய்-உண்மையாகிய. த்:சந்தி. தவர்-தவத்தைப் புரிந்த அந்தத் தவசியார். சொல்லிய-திருவாய் மலர்ந்தருளிச் செய்த. எல்லை-நேரத்தின் எல்லை. கழிந்தது-கடந்து விட்டது. முன்பு-முன்னால். ஒலித்து-அந்தத் தவசியாருடைய ஆடையை அடியேன் வெளுத்துக் கொண்டு வந்து. மனை-அடியேனுடைய இல்லத்தில். க்:சந்தி. காற்று-வீசும் காற்றில். ஏற்க-தக்கபடி உலர்த்துவதை. அறிந்திலேன்-அடியேன் தெரிந்து கொள்ளவில்லை. செழும்-செழுமையாகிய. தவர்தம்-தவத்தைப் புரிந்த அந்தத் தவசியாருடைய. தம்: அசைநிலை. திருமேனி-அழகிய திருமேனி. குளிர்-குளிரை அடைவதை; ஆகு பெயர். காணும்-பார்க்கும். தீங்கு-தீய செயலை. இழைத்த-புரிந்த. தொழும்பனேற்கு-தொண்டனாகிய அடியேனுக்கு. இனி-இனிமேல். இதுவே-இதுதான். செயல்-செய்யக் கூடிய காரியம். என்று- என எண்ணி. துணிந்து-அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் துணிவை அடைந்து. எழுந்தார்-தம்முடைய திருமாளிகையிலிருந்து எழுந்து செல்வாரானார்.

பிறகு வரும் 125-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தத் தவசியார் தம்மிடம் கொடுத்திருந்த கந்தல் துணியைத் தோய்ப்பதற்காக அடிக்கும் கருங்கற் பாறையின் மேல் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் ''அடியேனுடைய

சிரத்தினைத் தரையில் விழும் வண்ணம் எடுத்து அடிப்பேன்'' என்று எண்ணி அடைந்து செழுமையாகிய கருங்கற் பாறையின்மேல் தம்முடைய சிரத்தினை அடித்துத் தகர்க்க அந்தப் பாறையினுடைய பக்கத்தில் எழுந்தருளி வந்து அழகிய காமாட்சியம்மையினுடைய கைகளில் அணிந்திருந்த வளைகளினுடைய தழும்புகளைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய செந்தாமரை மலரைப் போலச் சிவந்த திருக்கரம் அந்த நாயனாருடைய திருக்கரங்களைப் பிடித்துக் கொண்டது.' பாடல் வருமாறு:

'' கந்தைபுடைத் திடஎற்றும்
கற்பாறை மிசைத்தலையைச்
சிந்தஎடுத் தெற்றுவன்'என்
றணைந்துசெழும் பாறைமிசைத்
தம்தலையைப் புடைத்தெற்ற
அப்பாறை தன்மருங்கு
வந்தெழுந்து பிடித்ததணி
வளைத்தழும்பர் மலர்ச்செங்கை.''

கந்தை-அந்தத் தவசியார் தம்மிடம் கொடுத்திருந்த கந்தல் துணியை. புடைத்திட-தோய்ப்பதற்காக. எற்றும்-அடிக்கும். கற்பாறை. மிசை-கருங்கற் பாறையின்மேல். த்:சந்தி. தலையை-திருக்குறிப்புத் தொண்ட நாயனார், 'அடியேனுடைய சிரத்தினை. ச்:சந்தி. சிந்த-தரையில் விழும் வண்ணம். எடுத்து எற்றுவன்-எடுத்து அடிப்பேன்.' என்று-என்று எண்ணி. அணைந்து-அடைந்து. செழும்-செழுமையாகிய. பாறை-கருங்கற் பாறையின். மிசை-மேல். த்:சந்தி. தம்-தம்முடைய. தலையை-சிரத்தினை. ப்:சந்தி. புடைத்து-அடித்து. எற்ற-தகர்க்க. அப்பாறைதன்-அந்தப் பாறையினுடைய. தன்: அசைநிலை. மருங்கு-பக்கத்தில். வந்து எழுந்து-எழுந்தருளி வந்து. அணி-அழகிய. வளை-காமாட்சியம்மையினுடைய கைகளில் அணிந்திருந்த வளை

களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். த்:சந்தி. தழும்பர்-தழும்புகளைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரருடைய. தழும்பு: ஒருமை பன்மை மயக்கம். மலர்-செந்தாமரை மலரைப் போல. ச்:சந்தி. செங்கை-சிவந்த திருக்கரம். பிடித்தது-அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனாருடைய திருக்கரங்களைப் பிடித்துக் கொண்டது.

அடுத்து உள்ள 126-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'வானத்தில் நிறைந்திருந்த மழை பொழிந்த நீர் நின்று விட அந்த மழை மலர்களைப் பொழிந்த மாரியாக மாறி விடப் பக்கத்தில் தேன் நிரம்பியுள்ள கொன்றை மலர் மாலையை அணிந்தருளிய அழகிய முடியைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரர் போர் புரியும் இடப வாகனத்தின்மீது அழகு நிரம்பிய தம்முடைய மனைவியாகிய காமாட்சியம்மை யோடும் வெளிப்பட்டு நின்று காட்சியை வழங்கியருளினார்; உண்மையான திருத் தொண்டராகிய அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் நிரம்பிய பக்தியினால் உருக்கத்தை அடையத் தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கும்பிட்டு விட்டுப் பிறகு தரையில் விழுந்து அந்த ஏகாம்பரேசுவரரை வணங்கி விட்டுத் தனியாக நின்று கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு:

"வான்நிறைந்த புனல்மழைபோய்
மலர்மழையா யிடமருங்கு
தேன்நிறைந்த மலரிதழித்
திருமுடியார் பொருவிடையின்
மேல்நிறைந்த துணைவியொடும்
வெளிநின்றார்; மெய்த்தொண்டர்
தான்நிறைந்த அன்புருகக்
கைதொழுது தனிநின்றார்."

வான்-வானத்தில். நிறைந்த-நிரம்பியிருந்த. புனல் மழை-மழை பொழிந்த நீர். போய்-நின்றுவிட. மலர்-தேவர்கள் கற்பக மரத்திலிருந்து கொய்து கொண்டு வந்து

ருந்த மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். மழையாடிட-பொழிந்த மாரியாக மாறி விட. மருங்கு-பக்கத்தில். தேன் நிறைந்த-தேன் நிரம்பியுள்ள. மலர் இதழி-கொன்றை மலர் மாலையை; ஆகு பெயர். த்:சந்தி. திரு-அணிந்தருளிய அழகிய. முடியார்-முடியைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரர். பொரு-போர் புரியும். விடையின் மேல்-இடப வாகனத்தின்மீது. நிறைந்த-அழகு நிரம்பியுள்ள. துணைவி யோடும்-தம்முடைய பத்தினியாகிய காமாட்சி அம்மையோடும். வெளி-வெளிப்பட்டு. நின்றார்-நின்று தம்முடைய காட்சியை வழங்கியருளினார். மெய்-உண்மையான. த்:சந்தி. தொண்டர்-திருத்தொண்டராகிய திருக்குறிப்புத் தொண்ட நாயனார். தான்: அசை நிலை. நிறைந்த-தம்முடைய திருவுள்ளத்தில் நிரம்பிய. அன்பு-பக்தியினால். உருக-உருக்கத்தை அடைய. க்:சந்தி. கை-தம்முடைய கைகளை; ஒருமை பன்மை மயக்கம். தொழுது-தம்முடைய தலையின் மேல் வைத்துக் கும்பிட்டு விட்டுப் பிறகு தரையில் விழுந்து அந்த ஏகாம்பரேசுவரரை வணங்கி விட்டு. தனி-தனியாக. நின்றார்-நின்று கொண்டிருந்தார்.

தேன் நிறைந்த மலர் இதழி: ''தேனகத்தார் வண்டது வுண்டதிகழ் கொன்றை.'', ''தேனமர் கொன்றையன்.'', ''கள்ளார்ந்த பூங்கொன்றை.'', ''தேனமர் கொன்றையினானை.'', ''தேனிடம் கொளும் கொன்றையந் தாரினார்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''தேன் சொட்டச் சொட்ட நின்றட்டும் திருக் கொன்றை.'', ''தேனப்பூ வண்டுண்ட கொன்றையான்.'', ''தேனேறும் மலர்க்கொன்றைக் கண்ணியான்.'', ''தேனேறு திரு இதழித்தாரார்.'', ''மட்டிலங்கு கொன்றையந்தார் மாலை சூடி.'', ''தேனாரும் கொன்றையனே.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''மட்டார் மலர்க் கொன்றையும்.'', ''மது மலர்க் கொன்றையான்.'', ''மதுவார் கொன்றைப் புதுவீ.'', ''தேனை ஆடிய கொன்றை

யினானை.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''தேனார் மலர்க் கொன்றைச் சேவகனார்.", "தேனக மாமலர்க் கொன்றை.'', ''தேனாடு கொன்றை சடைக்கணிந்த சிவபெருமான்.", ''தேன் பாய் மலர்க்கொன்றை." என்று மாணிக்க வாசகரும், ''தேனொரு பால்திகழ் கொன்றை அணிசிவன்.'' என்று திருமூலரும், ''தேன் ஏறு கொன்றை.'', என்று நக்கீர தேவ நாயனாரும், ''தேனாரும் தண்பூங்கொன் றைச் செஞ்சடையவர்.'', ''தேனலர் கொன்றையார்.", ''மட்டவிழ்க் கொன்றையினார்.'', ''தேனலரும் கொன்றை யினார் திருநனி பள்ளி.'', ''தேனலர் கொன்றையார் தம் திருமுன்பு.'', "தேனலம்பு தண்கொன்றையார் சேவடி.'', ''தேன்நக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார்.'', ''தேன லர் கொன்றையார்.'', ''தேனலர் கொன்றையார் தம் திருநெறி.'', ''நறையிதழித் திருமுடியார்.'', ''தேனலம்பு தண் கொன்றையார் திருமலை." என்று சேக்கிழாரும் பாடி அருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 127-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தமக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அந்தத் திருக் குறிப்புத் தொண்ட நாயனாரை நேரில் பார்த்தருளி மூன்று கண்களைப் பெற்றவராகிய ஏகாம்பரேசுவரர், "அந்தர் மத்திய பாதலம் என்னும் மூன்று உலகங்களிலும் வாழ்பவர் களுக்கு உன்னுடைய நிலைமையை யாம் தெரியப் படுத்தி னோம்; நீயும் இனிமேல் நெடுங்காலமாக விளங்கும் நம்மு டைய நிலைபெற்று விளங்கும் சிவலோகத்தைப் பிரியாமல் தங்குவாயாக.'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு அந்த நிலையிலேயே அந்த இடத்திலிருந்து எழுந் தருளி அழகிய ஏகாம்பரமாகிய காஞ்சி மாநகரத்தில் உள்ள தம்முடைய ஆலயத்தை அடைந்தருளினார்.' பாடல் வருமாறு:

"முன்னவரை நேர்நோக்கி
முக்கண்ணர், 'மூவுலகும்

நின்னிலைமை அறிவித்தோம்;
நீயும்இனி நீடியநம்
மன்னுலகு பிரியாது
வைகுவாய்' எனஅருளி
அந்நிலையே எழுந்தருளி
அணிஏகாம் பரம்அணைந்தார்.''

முன்-தமக்கு முன்னால் நின்று கொண்டிருந்த. அவரை -அந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனாரை. நேர்-நேரில். நோக்கி-பார்த்தருளி. முக்கண்ணர்- இயல்பாகத் தம்முடைய தருமுகத்தில் இரண்டு கண்களையும் தம்முடைய திரு நெற்றியில் ஒற்றைக் கண்ணையும் பெற்றவராகிய ஏகாம் பரேசுவரர். மூவுலகும்-அந்தர் மத்திய பாதலம் என்னும் மூன்று உலகங்களிலும் வாழ்பவர்களுக்கு; இட ஆகு பெயர். உலகு: ஒருமை பன்மை மயக்கம். அந்தர்லோகம்-தேவ லோகம்; அதில் வாழ்பவர்கள் தேவர்கள். மத்திய லோகம்— இந்த மண்ணுலகம்; இதில் வாழ்கிறவர்கள் ஆடவர்களும் பெண்களும். பாதலம் பாதாள லோகம்; இதில் வாழ்பவர்கள் நாகராஜக்கள். நின்-உன்னுடைய. நிலைமை-நிலைமையை. அறிவித்தோம்-யாம் தெரியப் படுத்தினோம். நீயும் இனி-நீயும் இனிமேல். நீடிய-நெடுங்காலமாக. நம்— தம்முடைய. மன்-நிலை பெற்று விளங்கும். உலகு -சிவலோகத்தை. பிரியாது-என்றும் பிரியாமல். வைகு வாய்-தங்கியிருப்பாயாக. என-என்று; இடைக்குறை. அருளி-அந்த ஈசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அந்நிலையே-அந்த நிலையிலேயே. எழுந்தருளி-அங்கிருந்து எழுந்தருளி. அணி- அழகிய. ஏகாம்பரம்-ஏகாம்பரமாகிய காஞ்சி மாநகரத்தில் விளங்கும் தம்முடைய ஆலயத்தை; இட ஆகு பெயர். அணைந்தார்-அடைந்தருளினார்.

அடுத்து வரும் 128-ஆம் பாடல் இந்தத் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணத்தில் உள்ள இறுதிப் பாடல். அதன் கருத்து வருமாறு:

'சீர்த்தி நிலை பெற்று நிற்கும் திருக்குறிப்புத் தொண்ட நாயனார் ஆற்றிய அழகிய பணியாகிய திருத்தொண்டினை வாழ்த்தி அவரை வணங்கி விட்டு இந்தப் பூ மண்டலத்தில் அமையுமாறு தம்முடைய தந்தையினுடைய காலை அற்று விழுமாறு மழுவாயுதத்தினால் வெட்டினவராகிய சண்டேசுவர நாயனாருடைய இயல்பை இனிமேல் அடியேன் பாடுவேன்; திருவெண்ணெய்நல்லூரில் கோயில் கொண்டிருக்கும் திருபாபுரீசுவரர் வழங்கிய பெரிய திருவருளால் உண்மையான திருத்தொண்டராகிய சுந்தர மூர்த்தி நாயனார் அந்த ஈசுவரரை, ''பித்தன்'' என்று வைத்துப் பிதற்றிப் பாடியருளியதனால் இந்த உலகத்தில் வாழும் யார் இதனுடைய உண்மையைத் தெரிந்து கொண்டு கூறுவதற்கு உடம்பட்டு எழுவார்?' பாடல் வருமாறு:

'' சீர்நிலவு திருக்குறிப்புத்
தொண்டர்திருத் தொழில்போற்றிப்
பார்குலவத் தந்தைதாள்
அறஎறிந்தார் பரிசுரைக்கேன்;
பேரருளின் மெய்த்தொண்டர்
'பித்தன்' எனப் பிதற்றுதலால்
ஆருலகில் இதனுண்மை
அறிந்துரைக்க இசைந்தெழுவார்.''

இந்தப் பாடல் சேக்கிழார் அடுத்து வரும் சண்டேசுர நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகவும், சுந்தர மூர்த்தி நாயனாருடைய துதியாகவும் அமைந்துள்ளது. சீர்-சீர்த்தி. நிலவு-நிலைபெற்று நிற்கும். திருக்குறிப்புத் தொண்டர்-திருக்குறிப்புத் தொண்ட நாயனார். திரு-அழகிய. த்:சந்தி. தொழில்-ஆற்றிய பணியாகிய திருத் தொண்டினை. போற்றி-வாழ்த்தி அந்த நாயனாரை வணங்கி விட்டு. ப்:சந்தி. பார்-இந்தப் பூ மண்டலத்தில். குலவ-அமையுமாறு. த்:சந்தி. தந்தை-தம்முடைய தந்தையாகிய எச்சதத்தனுடைய. தாள்-காலை. அற-அற்று விழுமாறு. எறிந்தார்-

ஒரு மழுவாயுதத்தினால் வெட்டினவராகிய சண்டேசுர நாயனாருடைய. பரிசு-இயல்பை. உரைக்கேன்-இனிமேல் அடியேன் பாடுவேன். பேரருளின்-திருவெண்ணெய் நல்லூரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கிருபாபுரீசுவரர் வழங்கிய பெரிய திருவருளால். மெய்-உண்மையான. த்:சந்தி. தொண்டர்-வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனார். பித்தன் என-பித்தா பிறை சூடி என்று தொடங்கி. என: இடைக்குறை. ப்:சந்தி. பிதற்றுதலால்-பிதற்றுவதாகக் கூறிப் பாடியருளுதலால். உலகில்-இந்த மண்ணுலகத்தில் வாழும். ஆர்-யார். இதன்-இதனுடைய. உண்மை-உண்மையை. அறிந்து-தெரிந்து கொண்டு. உரைக்க-கூறுவதற்கு. இசைந்து-உடம்பட்டு. எழுவார்-துணிந்து எழுவார்.

சண்டேசுர நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 4-ஆவதாக உள்ள மும்மையால் உலகாண்ட சருக்கத்தில் 6-ஆவதாக இருப்பது சண்டேசுர நாயனார் புராணம்.

அதில் வரும் முதற் கவியின் உள்ளுறை வருமாறு:

'பல வகை மலர்கள் மிதந்து வரும் குளிர்ச்சியைப் பெற்ற நீரைக் கொண்ட பொன்னைக் கொழிக்கும் காவிரி ஆறு எந்தக் காலத்திலும் வற்றாமல் பயிர்களையும் மக்களையும் பாதுகாக்கும் புனல் நாடாகிய சோழவள நாட்டில் அமைந்து ஓடும் மண்ணி யாற்றினுடைய தெற்குக் கரையில் நிலை பெற்று விளங்கும் வண்ணம் முன் ஒரு காலத்தில் கிரௌஞ்ச மலை கிழிந்து பொடியாகுமாறு தான் ஏந்தியிருக்கும் கூர்மையான வேலாயுதத்தை ஓர் இடத்தில் நட்டுவைத்து தேவர்களினுடைய பகைவர்களினுடைய கொடுமையான பகைமையைப் போக்கி வெற்றியை அடையும் சேந்தனாகிய சுப்பிரமணியக் கடவுள் பாதுகாத்தருளிய அழகிய வேதியர்கள் வாழும் பழைய சிவத்தலம் செல்வர்கள் வாழும் சேய்ஞலூர் என்பது ஆகும்.' பாடல் வருமாறு:

"பூந்தண் பொன்னி எந்நாளும்
பொய்யா தளிக்கும் புனல்நாட்டு
வாய்ந்த மண்ணித் தென்கரையில்
மன்ன முன்னாள் வரைகிழிய
ஏந்தும் அயில்வேல் நிலைநாட்டி
இமையோர் இகல்வெம் பகைகடக்கும்
சேந்தன் அளித்த திருமறையோர்
மூதூர் செல்வச் சேய்ஞலூர்."

பூம்- பல வகை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: வெள்ளைச் செவ்வந்திப்பூ, மஞ்சட் செவ்வந்திப்பூ, செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், ஆம்பல் மலர், அல்லி மலர், மகிழ மலர், மல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், நீலோற்பல மலர், குமுத மலர், பவள மல்லிகை மலர், தாழம்பூ, வேங்கை மலர், வாகை மலர், வேப்ப மலர், புளிய மலர், மா மலர், பூவரச மலர், வில்வ மலர், குருக்கத்தி மலர் முதலியவை. தண்-குளிர்ச்சியைப் பெற்ற. பொன்னி-பொன்னைக் கொழிக்கும் காவிரி ஆறு; "பொன்னி பொன் கொழிக்கும்." என வருதலைக் காண்க. எந்நாளும்-எந்தக் காலத்திலும். பொய்யாது-வற்றாமல். அளிக்கும்-பயிர்களையும் ஆடவர்களையும் பெண்மணிகளையும் பாதுகாக்கும். புனல் நாட்டு-நீர்வளம் மிக்க சோழநாட்டில். வாய்ந்த-அமைந்து ஓடும். மண்ணி-மண்ணி ஆற்றினுடைய. த்:சந்தி. தென்கரையில்-தெற்குக் கரையில். மன்ன-நிலை பெற்று விளங்கும் வண்ணம். முன்நாள்-முன்பு ஒரு காலத்தில். வரை-கிரௌஞ்ச மலை. கிழிய-கிழிந்து பொடியாகுமாறு; "கிழியும்படி அடற்குன்றெறிந்தோன்." என்று கந்தர் அலங்காரத்தில் வருவதைக் காண்க. ஏந்தும்-தான் தன்னுடைய திருக்கரத்தில் ஏந்தியிருக்கும். அயில்-கூர்மையாகிய. வேல்-வேலாயுதத்தை. நிலைநாட்டி-ஓர் இடத்தில் நட்டுவைத்து. இமையோர்-தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். இமையோர்-இமையில் விசேடம் உடையவர்கள்; என்றது இமை

களைக் கொட்டாதவர்கள் என்றபடி. இகல்-சூரபன்மன் முத லிய பகைவர்களினுடைய; திணை மயக்கம். வெம்-கொடுமை யாக இருக்கும். பகை-பகைமையை. கடக்கும்-போக்கி வெற்றியை அடையும். சேந்தன்-சேந்தனாகிய சுப்பிரமணியக் கடவுள். அளித்த-பாதுகாத்த. திரு-அழகிய. மறையோர்- வேதியர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். மூதூர்- பழமையாகிய சிவத்தலம். செல்வ-செல்வம் படைத்தவர்கள் வாழும்; திணை மயக்கம். ச்: சந்தி. சேய்ஞலூர்-சேய்ஞலூர் என்னும் தலம் ஆகும்.

சேய்ஞலூர்: இது சோழ நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் சத்தியகிரீசுவரர். அம் பிகை சகிதேவி அம்மை. தீர்த்தம் மண்ணியாறு. இது கும்ப கோணத்திற்கு வடகிழக்குத் திசையில் ஒன்பதரை மைல் தூரத்தில் உள்ளது. சேயாகிய சுப்பிரமணியக் கடவுள் தாம் தங்குவதற்கு நல்ல ஊர் என்று உவந்து ஏற்றதைக் கண்டு தேவர்கள் இந்தத் தலத்திற்குச் சேய்ஞலூர் என்னும் பெயரை வைத்தார்கள். சுப்பிரமணியக் கடவுள் சூரசங்காரம் செய்ய எழுந்தருளி வந்த போது சத்தியகிரீசுவரரை வழிபட்ட தலம் இது.

"சேய்அடைந்த சேய்ஞலூரிற் செல்வன்" என்று தேவா ரத்தில் வருவதைக் காண்க. சண்டேச நாயனார் திருவவ தாரம் செய்தருளி முத்தி பெற்ற தலம். சுப்பிரமண்ணிய ஆறு என்பது குறுகி மண்ணி ஆறு என்று வழங்கும்.

இதைப் பற்றிய பாசுரம் ஒன்று வருமாறு:

"பீரடைந்த பாலதாட்டப் பேணா தவன்தாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந்தான் றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமை வகுத்ததென்னே
சீரடைந்த கோயில்மல்கு சேய்ஞலூர் மேயவனே."

இந்தப் பாசுரம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் பழந்தக்கராகப் பண்ணில் பாடியருளியது. அவர் பாடி அருளிய மற்றொரு பாசுரம் வருமாறு:

"சேய்அடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பரவித்
தோயடைந்த வண்வயல் சூழ்தோணி புரத்தலைவன்
சாயடைந்த ஞானம்மல்கு சம்பந்தன் இன்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே."

பிறகு வரும் 2-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தச் சேய்ஞலூரில் வாழும் வேதியர்கள் சிறப்பைப் பெற்ற வெண்மையாகிய விபூதியைத் தங்களுடைய திருமேனி களில் பூசிக் கொள்ளும் ஒருமைப்பாட்டை உடையவர்கள்; உபநயனம் செய்வதற்குமுன் ஒரு பிறப்பையும் அதற்குப்பின் மற்றொரு பிறப்பையும் பெற்ற சிறப்பைக் கொண்ட துவிஜர்கள்; காருகபத்தியம், ஆகவனீயம், தாட்சிணாக்கினி என்னும் மூன்று பான்மையைப் பெற்ற நெருப்புக்களைப் பாது காத்து வரும் வழியில் விளங்குபவர்கள்; இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களை முறையாக அத்தியயனம் செய்து நிறை வேற்றி மெய், வாய், கண்கள், காதுகள், மூக்கு என்னும் ஐந்து இந்திரியங்களும் தங்களைப் பின்பற்றி உணரும் தகுதியைப் பெற்றவர்கள்; ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்னும் ஆறு தொழில்களைப் புரியும் உண்மை யான நல்லொழுக்கத்தை ஏழு உலகங்களில் வாழ்பவர்களும் வாழ்த்தி வணங்கும் வேதியர்களாகிய அவர்கள் வாழப் பெற்று விளக்கத்தைப் பெற்றிருப்பது அந்தச் சேய்ஞலூர் ஆகும்.' பாடல் வருமாறு:

"செம்மை வெண்ணீற் றொருமையினார்;
இரண்டு பிறப்பின் சிறப்பினார்;
மும்மைத் தழல்ஓம் பியநெறியார்;
நான்குவேதம் முறைப் பயின்றார்;
தம்மை ஐந்து புலனும்பின்
செல்லும் தகையார்; அறுதொழிலின்
மெய்ம்மை ஒழுக்கம் ஏழுலகும்
போற்றும் மறையோர் விளங்குவது."

செம்மை-சிறப்பைப் பெற்ற. வெண்-வெண்மை நிறத்தைக் கொண்ட. நீற்று-விபூதியைத் தங்களுடைய திருமேனிகளில் பூசிக்கொள்ளும். ஒருமையினார்-ஒருமைப்பாட்டை உடையவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். இரண்டு பிறப்பின்-உபநயனம் செய்வதற்கு முன் ஒரு பிறப்பையும் அதற்குப் பின் மற்றொரு பிறப்பையும் பெற்ற. பிறப்பு; ஒருமை பன்மை மயக்கம். சிறப்பினார்-அந்தச் சேய்ஞலூரில் வாழும் வேதியர்கள் சிறப்பைக் கொண்ட துவிஜர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மும்மைத் தழல்-காருக பத்தியம், ஆகவனீயம், தாட்சிணாக்கினி என்னும்மூன்று பான்மையைப் பெற்ற அக்கினிகளை. தழல்: ஒருமை பன்மை மயக்கம். ஓம்பிய-பாதுகாத்து வரும்; கால மயக்கம். நெறியார்-வழியில் விளங்குபவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். நான்குவேதம்-இருக்கு வேதம், யஜுர்வேதம், சாமவேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களை. வேதம்: ஒருமை பன்மை மயக்கம். முறை-முறையாக. ப்:சந்தி. பயின்றார்-அத்தியயனம் செய்து பழகி நிறைவேற்றியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தம்மை-தங்களை. ஐந்துபுலனும்-மெய், வாய், கண்கள், காதுகள், மூக்கு என்னும் ஐந்து இந்திரியங்களும். புலனும்: ஒருமை பன்மை மயக்கம். பின்செல்லும்-பின்பற்றி உணர்ந்து நடக்கும். ஐந்து இந்திரியங்களின் வழியில் அந்த வேதியர்கள் செல்லாமல் அவை அவர்களைப் பின்பற்றியே நடக்கும் என்பது கருத்து. தகையார்-தகுதியைப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அறு தொழிலின்-ஈதல், ஏற்றல், வேட்டல், வேட்பித்தல், ஓதல், ஓதுவித்தல் என்னும் ஆறு தொழில்களைப் புரியும். தொழில்: ஒருமை பன்மை மயக்கம். மெய்ம்மை-உண்மையாகிய. ஒழுக்கம்-நல்லொழுக்கத்தை. ஏழுலகும்-ஏழு உலகங்களில் வாழ்பவர்களும்; இட ஆகு பெயர். உலகு: ஒருமை பன்மை மயக்கம். போற்றும்-வாழ்த்தி வணங்கும். மறையோர்-வேதியர்களாகிய அவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். விளங்குவது-

வாழப் பெற்று விளக்கத்தை அடைந்திருப்பது அந்தச் சேய்ஞலூர் ஆகும்.

பிறகு வரும் 3-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஒரு குற்றமும் இல்லாத கிருஷ்ணாஜினத் தோல்களும், மூன்று புரிகளைப் பெற்ற பூணூல்கள் விளங்கும் மார்புகளையும், மென்மையான குடுமிகளையும், வேதங்களை அத்தியயனம் புரியும் வேத பாட சாலைகளினிடத்தில் இருந்து அத்தியயனம் புரியும் பிரமசாரிகளும், அவர்களுக்கு வேதங்களைக் கற்பித்து உதவி புரியும் குருநாதர்களும், இரவு நேரத்தில் வானத்தில் திகழும் நட்சத்திரங்களையும் சந்திரனையும் போலச் சேர்ந்து தங்கித் தங்கள் திருப்பணிகளைப் புரிந்து வரும் மடங்களும், வானத்தின் மேல் முழக்கத்தைச் செய்யும் மேகங்கள் அஞ்சி ஒதுங்கி நிற்கும் வண்ணம் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களை அந்தணர்கள் பாராயணம் செய்யும் கானங்கள் முழக்கத்தைப் புரிபவையாக அந்தச் சேய்ஞலூரில் விளங்கும்.' பாடல் வருமாறு:

"கோதில் மான்தோல் புரிமுந்நூல்
குலவு மார்பிற் குழைக்குடுமி
ஓது புடைசூழ் சிறுவர்களும்
உதவும் பெருமை ஆசானும்
போதின் விளங்கும் தாரகையும்
மதியும் போலப் புணர்மடங்கள்
மீது முழங்கும் முகில்ஒதுங்க
வேத ஒலிகள் முழங்குவன."

கோது-ஒரு குற்றமும். இல்-இல்லாத; கடைக்குறை. மான்தோல்-கிருஷ்ணாஜினத் தோல்களும்; ஒருமை பன்மை மயக்கம். இந்தத் தோலைப் பூணூலில் கட்டிக்கொள்வார்கள். புரிமுந்நூல்-மூன்று புரிகளைப் பெற்ற பூணூல்கள். புரி: ஒருமை பன்மை மயக்கம். நூல்: ஒருமை பன்மை மயக்கம். குலவு-விளங்கும். மார்பின்-மார்புகளையும்; ஒருமை பன்மை

மயக்கம். குழை-மென்மையான. க்:சந்தி. குடுமி-உச்சிக் குடுமிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். ஓது-வேதங்களை அத்தியயனம் புரியும். புடை-வேத பாட சாலைகளினிடத்தில். சூழ்-இருந்து கொண்டு. சிறுவர் களும்-இளைஞர்களாகிய பிரமசாரிகளும். உதவும்-அவர் களுக்கு வேதங்களைக் கற்பித்து உதவி புரியும். ஆசா னும்-அத்தியாபகர்களும்; ஒருமை பன்மை மயக்கம். போதின் -இரவு நேரத்தில். விளங்கும்-வானத்தில் திகழும். தாரகை யும்-நட்சத்திரங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். மதியும் போல-சந்திரனையும் போல. வேதங்களைக் கற்றுக் கொள் ளும் பிரமசாரிகளுக்கு நட்சத்திரங்களும், அவர்களுக்கு வேதத்தைக் கற்றுக் கொடுக்கும் அத்தியாபகருக்குச் சந்திர னும் உவமைகள். ப்:சந்தி. புணர்-சேர்ந்து தங்கித் தங்கள் கடமைகளைப் புரிந்து வரும். மடங்கள்-மடங்களும். மீது-வானத்தின்மேல். முழங்கும்-முழக்கத்தைச் செய்யும். முகில்-மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஒதுங்க-அஞ்சி ஒதுங்கி நிற்கும் வண்ணம். வேத-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங் களையும்; ஒருமை பன்மை மயக்கம். ஒலிகள்-அந்தணர்கள் பாராயணம் செய்யும் கானங்கள். முழங்குவன-அந்தச் சேய் ஞலூரில் முழக்கத்தைப் புரிபவையாக விளங்கும்.

பிறகு உள்ள 4-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தணர்கள் புரியும் வேள்விகள் நிலை பெற்று நடை பெறும் யாக சாலை ஒவ்வொன்றிலும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவர் களாகிய வேதியர்கள் யாக அக்கினியில் பெய்த ஹவிஸாகிய உணவாகிய பாகங்களை உண்ணும் பொருட்டு அங்கே எழுந்தருளி வரும் திருமாலும், பிரம தேவனும் ஏறிவரும் படர்ந்த சிறகுகளைப் பெற்ற கருடப் பறவையும், அன்னப்

பறவையும் ஆகாயத்தை விட்டு விட்டு வந்து தங்கியிருக்கும் இருப்பிடங்கள் என்று கூறுமாறும், தேவர்களினுடைய மன்ன னாகிய இந்திரனுடைய வாகனமாகிய வெள்ளை யானையும் வந்து அடையும் கட்டுத் தறிகள் என்று இயம்பும் வண்ணமும் நட்டு வைத்திருக்கும் யூபங்களின் கூட்டம் அந்தச் சேய்ஞலூரில் இருக்கின்றன.' பாடல் வருமாறு:

"யாகம் நிலவும் சாலைதொறும்
மறையோர் ஈந்த அவியுணவின்
பாகம் நுகர வரும்மாலும்
அயனும் ஊரும் படர்சிறைப்புள்
மாகம் இகந்து வந்திருக்கும்
சேக்கை எனவும் வானவர்கோன்
நாகம் அணையும் கந்தெனவும்
நாட்டும் யூப ஈட்டம்உள."

யாகம்-அந்தணர்கள் புரியும் வேள்விகள்; ஒருமை பன்மை மயக்கம். நிலவும்-நிலைபெற்று நடைபெறும். சாலைதொறும்-ஒவ்வொரு யாக சாலையிலும். மறையோர்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவர்களாகிய வேதியர்கள்: ஒருமை பன்மை மயக்கம். ஈந்த-யாக அக்கினியில் பெய்த. அவி உணவின்-ஹவிஸாகிய உணவு என்னும். பாகம்-பாகங்களை; ஒருமை பன்மை மயக்கம். நுகர-உண்ணும் பொருட்டு. வரும்-அங்கே எழுந்தருளி வரும். மாலும்-திருமாலும். அயனும்-பிரம தேவனும். ஊரும்-ஏறி வரும். படர்-படர்ந்த. சிறை-சிறகுகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. புள்-கருடப் பறவையும், அன்னப் பறவையும் ஆகிய இரண்டு பறவைகளும்; ஒருமை பன்மை மயக்கம். மாகம்-ஆகாயத்தை. இகந்து-விட்டு விட்டு. வந்து இருக்கும் -வந்து தங்கியிருக்கும். சேக்கை-இருப்பிடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எனவும்-என்று கூறுமாறும். என: இடைக்

குறை. வானவர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். கோன்-மன்னனாகிய இந்திரனுடைய. நாகம்-வாகனமாகிய வெள்ளை யானையும். அணையும்-வந்து அடையும். கந்து-கட்டுத் தறிகள்; ஒருமை பன்மை மயக்கம். எனவும்-என்று இயம்புமாறும். என: இடைக்குறை. நாட்டும்-நட்டு வைத்திருக்கும். யூப-யாகத் தூண்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஈட்டம்-கூட்டம். உள-அந்தச் சேய்ஞலூரில் இருக்கின்றன; இடைக்குறை.

பிறகு வரும் 5-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இனிமையான பால் தங்களுடைய மடிகளிலிருந்து ஒழுகும்வண்ணம் ஒவ்வொரு வேளையிலும் ஹோமங்களுக்குப் பால் முதலியவற்றை அளிக்கும் பசுமாடுகள் போகின்றவையும், தாங்கள் கானம் செய்த சாம வேத மந்திரங்களை எண்ணிக் கணக்குப் பார்க்கும் அந்தணர்கள் சமிதைகளைக் கட்டி வைக்க அவற்றைப் பசுமாடுகள் சுமந்து கொண்டு வருகின்றவையும், மலர்களும் பசுமையாகிய இலைகளும் உடைய செந்தாமரைக் கொடிகளும் வெண்டாமரைக் கொடிகளும், அல்லிக் கொடிகளும், ஆம்பற் கொடிகளும் வேறு கொடிகளும் படர்ந்திருக்கும் நீர் நிரம்பிய தடாகங்களில் முழுகி விட்டு வேதியர்களும், அந்தணப் பெண்மணிகளும், தங்கள் தங்கள் இரு மாளிகைகளுக்குள் நுழைபவையும், இவ்வாறு அமையும் தன்மையோடு திகழ்பவையாகிய அழகிய நீளமான வீதிகள் பலவும் அந்தச் சேய்ஞலூரில் இருக்கின்றன.' பாடல் வருமாறு:

"தீம்பால் ஒழுகப் பொழுதுதொறும்
ஓம தேனுச் செல்வனவும்
தாம்பா டியசா மம்கணிப்போர்
சமிதை இடக்கொண் டணைவனவும்
பூம்பா சடைநீர்த் தடம்மூழ்கி
மறையோர் மகளிர் புகுவனவும்

ஆம்பான் மையினில் விளங்குவன
அணிநீள் மறுகு பலவும்உள.''

தீம்-இனிமையாக இருக்கும். பால்-பால் தங்களுடைய மடிகளிலிருந்து. ஒழுக-ஒழுகும் வண்ணம். ப்:சந்தி. பொழுது தொறும்-ஒவ்வொரு வேளையிலும். ஓமதேனு-ஹோமங் களுக்குப் பால் முதலியவற்றை அளிக்கும் பசுமாடுகள். ஓம: ஒருமை பன்மை மயக்கம். தேனு: ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. செல்வனவும்-போகின்றவையாகிய வீதிகளும். தாம்-தாங்கள். பாடிய-கானம் செய்த. சாமம்-சாமவேத மந்திரங் களை; ஆகுபெயர். கணிப்போர்-எண்ணிக் கணக்குப் பார்க் கும் அந்தணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். சமிதை -அரசங்குச்சி முதலிய சமிதைகளை; ஒருமை பன்மை மயக்கம். இட-கட்டி வைக்க. க்:சந்தி. கொண்டு-அவற்றைப் பசு மாடு கள் சுமந்து கொண்டு. அணைவனவும்-அந்தணர்களின் இல்லங்களை அடைபவையாகிய வீதிகளும். பூம்-மலர்களை யும்; ஒருமை பன்மை மயக்கம். பாசடை-பசுமையாகிய இலைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-உடைய செந்தாமரைக் கொடிகளும், வெண்டாமரைக் கொடிகளும், அல்லிக் கொடிகளும், ஆம்பற் கொடிகளும், வேறு கொடிகளும் படர்ந்திருக்கும் புனல். த்:சந்தி. தடம்-தடாகங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மூழ்கி-முழுகி விட்டு. மறையோர்-வேதியர்களும்; ஒருமை பன்மை மயக்கம். மகளிர்-அந்தணப் பெண்மணிகளும்; ஒருமை பன்மை மயக்கம். புகுவனவும்-தங்கள் தங்கள் திருமாளிகைக்குள் நுழையும் வீதிகளும். ஆம்-இவ்வாறு அமையும். பான்மையினில்-தன்மையோடு; உருபு மயக்கம். விளங்குவன-திகழ்பவையாகிய. அணி-அழகிய. நீள்-நீளமான. மறுகு-வீதிகள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும் உள-பலவும் அந்தச் சேய்ஞலூரில் இருக்கின்றன. உள: இடைக்குறை.

பிறகு உள்ள 6-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தணர்களும், அவர்களுடைய பத்தினிமார்களும்

அவர்களுடைய புதல்வர்களும் வாழும் பொலிவைப் பெற்ற சிவத்தலமாகிய அந்தப் பக்கத்தில் ஓடும் மண்ணியாற்றில் வீசும் அலைகள் பாயும் வயல்களினுடைய வரம்புகள் உள்ள இடங்களுக்கு அருகில் இருக்கும் பள்ளமான இடங்களில் முத்துக்களைச் சங்குப் பூச்சிகள் உமிழும் அந்த மண்ணியாற்றினுடைய கரைகளின் பக்கங்களில் கட்டி வைத்த விசாலமான வேள்விச் சாலைகள் சூழ்ந்திருக்கும் பண்டங்களை வைக்கும் இடங்கள் நெருங்கி உள்ளன; தாங்கள் ஆரம்பித்த மங்கலச் சடங்குகளை நிறைவேற்றிவிட்டு யாகத் தலைவர்கள் ஏறும் பெருமையைப் பெற்ற இரதங்கள் தேவர்கள் ஏறிவரும் விமானங்களைப் போல அந்தச் சேய்ஞலூரில் இருக்கின்றன.' பாடல் வருமாறு:

''வாழ்பொற் பதிமற் றதன்மருங்கு
மண்ணித் திரைகள் வயல்வரம்பின்
தாழ்வில் தரளம் சொரிகுலைப்பால்
சமைத்த யாகத் தடஞ்சாலை
சூழ்வைப் பிடங்கள் நெருங்கியுள;
தொடங்கு சடங்கு முடித்தேறும்
வேள்வித் தலைவர் பெருந்தேர்கள்
விண்ணோர் ஏறும் விமானங்கள்.''

வாழ்-அந்தணர்களும், அவர்களுடைய பத்தினிமார்களும், அவர்களுடைய புதல்வர்களும் வாழும். பொன்-பொலிவைப் பெற்ற. பதி-சிவத்தலமாகிய. மற்று: அசைநிலை. அதன் மருங்கு-அந்தச் சேய்ஞலூருக்குப் பக்கத்தில் ஓடும். மண்ணி-மண்ணியாற்றில் வீசும். த்: சந்தி. திரைகள்-அலைகள். வயல்-பாயும் வயல்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வரம்பின்-வரப்புக்கள் உள்ள இடங்களுக்கு அருகில் இருக்கும். வரம்பு: ஒருமை பன்மை மயக்கம். தாழ்வில்-பள்ளமான இடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். தரளம்-முத்துக்களை; ஒருமை பன்மை மயக்கம். சொரி-சங்குப் பூச்சிகள் உமிழும். குலைப்பால்-அந்த மண்ணியாற்றினுடைய கரை

களின் பக்கங்களில். குலை: ஒருமை பன்மை மயக்கம். பால்: ஒருமை பன்மை மயக்கம். சமைத்த-கட்டி வைத்துள்ள. யாகத்தடம் சாலை-விசாலமாகிய வேள்விச் சாலைகள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சூழ்ந்திருக்கும். வைப்பு இடங்கள்-யாகங்களுக்கு உரிய சமித்துக்களையும் பாலையும் பாத்திரங்களையும் வேறு பண்டங்களையும் வைப்பவை யாகிய இடங்கள். வைப்பு: ஒருமை பன்மை மயக்கம். நெருங்கிஉள-ஒன்றை ஒன்று நெருங்கி இருக்கின்றன. உள: இடைக்குறை. தொடங்கு-தாங்கள் ஆரம்பித்த. சடங்கு-மங்கலச்சடங்குகளாகிய யாகங்களை; ஒருமை பன்மை மயக்கம். முடித்து-நிறைவேற்றி விட்டு. ஏறுப் வேள்வித் தலைவர்-யாகத் தலைவர்கள் ஏறும். தலைவர்: ஒருமை பன்மை மயக்கம். பெரும்-பெருமையைப் பெற்ற. தேர்கள்-இரதங்கள் விண்ணோர்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏறும்-ஏறிக் கொண்டுவரும். விமானங்கள்-விமானங்களைப் போல அந்தச் சேய்ஞலூரில் இருக்கின்றன.

பிறகு வரும் 7-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'வயல்களுக்கு மண்ணியாற்றிலிருந்து நீர்பாயும் மடைகளில் செங்கழுநீர்ப் பூக்கள் மலர்ந்திருக்கும்; செழுமையான புனல் சுற்றிப் பாயும் வயல்களில் நெற்பயிர்களினுடைய கதிர்களின் தொகுதி நிரம்ப வளர்ந்து நிற்கும்; பக்கங்களில் வண்டுகள் நெருங்கி மொய்க்கும் பாக்கு மரங்களும் மண்ணி நீர் பாய்வதால் பரவியுள்ள அழகிய பாளைகள் அந்தக் கமுகமரங்களில் காணப்படும்; இவைகளோடு விளங்கும் நீண்ட தாமரை மலரில் கயல் மீன்கள் உறங்கிக்கொண்டிருக்கும்; மக்கள் நடக்கும் வழிகளில் படர்ந்திருக்கும் மென்மையான முல்லைக் கொடியில் அரும்பி யிருக்கும் அரும்புகளோடு அந்த இடத்தில் கிளைகளைப் பெற்ற காஞ்சிமரம் விளங்கும். இத்தகைய காட்சிகளை அந்தச் சேய்ஞலூரில் காணலாம்.' பாடல் வருமாறு:

"மடையில் கழுநீர் செழுநீர்சூழ்
வயலில் சாலிக் கதிர்க்கற்றைப்
புடையில் சுரும்பு மிடைகமுகு
புனலில் பரம்பு பூம்பாளை
அடையில் பயிலும் தாமரைநீள்
அலரில் துயிலும் கயல்கள்வழி
நடையில் படர்மென் கொடிமௌவல்
நனையில் திகழும் சினைக்காஞ்சி."

மடையில்-வயல்களுக்கு மண்ணியாற்றிலிருந்து நீர் பாயும் மடைகளில்; ஒருமை பன்மை மயக்கம். கழுநீர்-செங்கழு நீர்ப்பூக்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். செழு-செழுமையான. நீர்-சேய்ஞலூரில் ஓடும் மண்ணியாற்றின் புனல். சூழ்-சுற்றிப் பாயும். வயலில்-வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். சாலி-நெற்பயிர் களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கதிர்க் கற்றை-கதிர்களின் தொகுதி. கதிர்:ஒருமை பன்மை மயக்கம். 'நிரம்ப வளர்ந்து நிற்கும்' என்பதை வருவித்துப் பொருளை முடிக்க. ப்:சந்தி. புடையில்-அந்த வயல்களினுடைய பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். சுரும்பு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். மிடை-நெருங்கி மொய்க்கும். கமுகு-மலர்கள் மலர்ந்திருக்கும் பாக்கு மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம் புனலில்-மண்ணியாற்றில் ஓடும் நீர் பாய் வதால். பரம்பு-பரவியுள்ள. பூம்பாளை-அழகிய பாளைகள் அந்தக் கமுக மரங்களில் காணப்படும். பாளை: ஒருமை பன்மை மயக்கம். அடையில்-இலைகளோடு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். பயிலும்-விளங்கும். தாமரை நீள் அலரில்-நீண்ட தாமரை மலரில். துயிலும் கயல்கள்-கயல் மீன்கள் உறங்கிக் கொண்டிருக்கும். வழி நடையில்-மக்கள் நடக்கும் வழிகளில். வழி: ஒருமை பன்மை மயக்கம். படர்-படர்ந்திருக்கும். மென்-மென்மையாகிய. கொடி மௌவல்-முல்லைக் கொடியில். நனையில்-அரும்பியிருக்கும்

அரும்புகளோடு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். சினை-அந்த முல்லைக் கொடி படரும் சினைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. காஞ்சி-காஞ்சி மரம். திகழும்-அந்தச் சேய்ஞலூரில் விளங்கும்.

பிறகு உள்ள 8-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சோழ மன்னனும் அபயனும் ஆகிய குலோத்துங்கச் சோழன், தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் அழகிய விமானத்தின் பரப்பைத் தங்கத்தால் வேய்ந்து தங்கமயமாகச் செய்த சோழ மன்னருக்குள் போர் புரியும் ஆண் சிங்கத்தைப் போன்ற அந்த மன்னன் எந்தக் காலத்திலும் இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்களைப் பாதுகாக்கும் அரசர் பெருமகனும் ஆகிய அநபாயச் சோழ மன்னன் பிறந்திருக்கும் பழைய பரம்பரையில் பிறந்த மன்னர்களுக்குக் கிரீடங்களை சூட்டும் பான்மை நிலாவும் ஊர்களாகிய காவிரிப்பூம்பட்டினம், கருவூர், திருவாரூர், உறையூர், சேய்ஞலூர் என்னும் ஐந்தில் ஒன்றாகி நெடுங்காலமாக விளங்கும் தகுதியைப் பெற்றது அந்தச் சேய்ஞலூர்.' பாடல் வருமாறு:

"சென்னி அபயன் குலோத்துங்கச்
சோழன் தில்லைத் திருவெல்லை
பொன்னின் மயமாக் கியவளவர்
போரே றென்றும் புவிகாக்கும்
மன்னர் பெருமான் அநபாயன்
வரும்தொல் மரபின் முடிசூட்டும்
தன்மை நிலவு பதிஐந்தின்
ஒன்றாய் நீடும் தகைத்தவ்வூர்."

சென்னி-சோழ மன்னனும். அபயன்-அபயகுலசேகரனும், குலோத்துங்கச் சோழன்-குலோத்துங்கச் சோழனும். தில்லை -தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் விமானத்தின்; இட ஆகு பெயர். த்:சந்தி. திரு-அழகிய. எல்லை-பரப்பை. பொன்னின் மயம் ஆக்கிய-தங்கத்தால்

வேய்ந்து தங்க மயமாகச் செய்த. வளவர்-சோழ மன்னர் களுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். போரேறு-போர் புரியும் ஆண் சிங்கத்தைப் போன்ற அந்த மன்னன்; உவம ஆகு பெயர். என்றும்-எந்தக் காலத்திலும். புவி-இந்தப் பூ மண்ட லத்தில் வாழும் மக்களை; இட ஆகு பெயர். காக்கும்-அர சாட்சி புரிந்து மக்களைப் பாதுகாக்கும். மன்னர் பெருமான்-அரசர் பெருமகனாகிய. அநபாயன்-அந பாயச் சோழ மன்னன். வரும்-பிறந்திருக்கும். தொல்-பழமையாகிய. மர பின்-பரம்பரையில் பிறந்த மன்னர்களுக்கு; ஆகு பெயர். முடி சூட்டும்-கிரீடங்களைத் தலைகளில் அணியும். முடி: ஒருமை பன்மை மயக்கம். தன்மை-பான்மை. நிலவு-நிலாவும். பதி-இராசதானிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். ஐந்தின்-காவிரிப் பூம்பட்டினம், கருவூர், திருவாரூர், உறையூர், சேய் ஞலூர் என்னும் ஐந்து ஊர்களில். ஒன்றாய்-ஒன்றாகி. நீடும் -நெடுங்காலமாக விளங்கும். தகைத்து-தகுதியைப் பெற்றது. அவ்வூர்-அந்தச் சேய்ஞலூர். திருச்சிற்றம்பலத்தைப் பொன் னால் வேய்ந்தவன் விக்கிரம சோழதேவன். இது அவனுடைய மெய்கீர்த்தியில் வரும் பின்கண்ட பகுதியால் விளங்கும்.

" வருமுறை முன்னே மன்னவர் சுமந்து
திறைநிறைத்துச் சொரிந்த செம்பொற் குவையால்
தன்குல நாயகன் தாண்டவம் பயிலும்
செம்பொனம் பலம்சூழ் திருமா ளிகையும்
கோபுர வாசல் கூடசா லைகளும்
உலகு வலங்கொண் டொளிவிளங்கு நேமிக்
குலவரை உதய குன்றமொடு நின்றெனப்
பசும்பொன் வேய்ந்த பலிவளர் பீடமும்
விசும்பொளி தழைப்ப விளங்கு பொன்வேய்ந்து
இருநிலம் தழைப்ப இமையவர் களிப்பப்
பெரிய திருநாட் பெரும்பெயர் விழாவெனும்
உயர் பூரட்டாதி உத்திரட் டாதியின்
அம்பலம் நிறைந்த அற்புதக் கூத்தர்

இம்பர் வாழ எழுந்தருளு வதற்குத்
திருத்தேர்க் கோயில் செம்பொன் வேய்ந்து.''

குந்தவைப் பிராட்டியும் திருச்சிற்றம்பலத்தைப் பொன்னால் வேய்ந்தார். இது பின் வரும் பாடலால் விளங்கும்.

''நானிலத்தை முழுதாண்ட சயதாற்கு
நாற்பத்து நாலாம் ஆண்டில்
மீனம்நிகழ் ஞாயிற்று வெள்ளிபெற்ற
உரோகிணிநாள் இடபப் போதால்
தேன்நிலவு பொழில்தில்லை நாயகர்தம்
கோயிலெலாம் செம்பொன் வேயந்தாள்
ஏனவரும் தொழு தேத்தும் இராச ராசன்
குந்தவைபூ விந்தை யாளே.''

பிறகு உள்ள 9-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பண்களினுடைய பிரயோசனம் ஆகும்நல்ல சங்கீதத்தையும், பசுமாட்டினுடைய பாலின் பயன் ஆகும் இனி சுவையையும், கண்களினுடைய பிரயோசனமாகும் பெருகிய பிரகாசமும், பக்தர்களின் திருவுள்ளங்களைப் பெற்றதனால் உண்டாகும் பிரயோசனமாகிய ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும், ஆகாயத்தினுடைய பிரயோசனமாகும் பொழியும் மாரியையும், வேதங்களின் பயனாகும் சைவத்தையும் போல மண்ணுலகத்தினுடைய பயனாக விளங்கும் அந்தச் சிவத்தலமாகிய சேய்ஞலூரில் உள்ள வளங்களினுடைய பெருமை ஓர் எல்லையை உடையதோ? எல்லை கடந்தது.' பாடல் வருமாறு:

''பண்ணின் பயனாம் நல்லிசையும்,
பாலின் பயனாம் இன்சுவையும்,
கண்ணின் பயனாம் பெருகொளியும்,
கருத்தின் பயனாம் எழுத்தஞ்சும்,
விண்ணின் பயனாம் பொழிமழையும்,
வேதப் பயனாம் சைவமும்போல்

மண்ணின் பயனாம் அப்பதியின்
வளத்தின் பெருமை வரம்புடைத்தோ?''

பண்ணின்-பல வகையான பண்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பயன் ஆம்-பிரயோசனமாக விளங்கும். நல்-நல்ல. இசையும்-சங்கீதத்தையும். பாலின்-பசு மாட்டினு டைய பாலின். பயனாம்-பிரயோசனம் ஆகும். இன்-இனிய. சுவையும் - சுவையையும். கண்ணின் - கண்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பயன் ஆம்-பிரயோசனமாகும். பெருகு-பெருகிய. ஒளியும்-பிரகாசத்தையும். கருத்தின்-பக்தர் கள் திருவுள்ளங்களைப் பெற்றதனால் உண்டாகும்; ஒருமை பன்மை மயக்கம். பயனாம்-பிரயோசனமாகும். எழுத்து அஞ்சும்-ந, ம, சி, வா, ய என்ற ஐந்து எழுத்துக்கள் அடங் கிய பஞ்சாட்சரத்தையும். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். விண்ணின்-ஆகாயத்தினுடைய. பயனாம்-பிரயோசனமாகும். பொழி-மேகங்கள் சொரியும். மழையும்-மாரியையும். வேத-வேதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பயன் ஆம்-பிரயோசனமாகும். சைவமும்-சைவ சமயத்தையும். வைதிக சைவம் என்று கூறுவது மரபு. போல்-போல. மண் ணின்-இந்த மண்ணுலகத்தினுடைய. பயனாம்-பிரயோசன மாக விளங்கும். அப்பதியின்-அந்தச் சிவத்தலமாகிய சேய்ஞ லூரினுடைய. வளத்தின்-நீர் வளம், நில வளம், செல்வ வளம், திருமாளிகைகளின் வளம், வீதிகளின் வளம், ஆலை யங்களின் வளம். நன்மக்கள் வளம் முதலிய வளங்களி னுடைய; ஒருமை பன்மை மயக்கம். பெருமை வரம்பு உடைத்தோ-வீடு ஓர் எல்லையை உடையதோ? எல்லை கடந்தது என்பது கருத்து.

அடுத்து வரும் 10-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஓர் எல்லைக்குள் அடங்காத பெருமையால் திகழும் அந்தச் சிவத்தலமாகிய சேய்ஞலூரில் வாழும் வேதியர்களுக் குள் பெரிய திருமாளிகை ஒன்றில் வாழும் அறங்கள் நின்று

விளங்கும் காசியப கோத்திரத்தில் தலைமைப் பதவி அமைந்த பரம்பரையில் அருமையான மாணிக்கத்தை வழங்கிய அந்தப் பிராணியே விடத்தையும் கொடுக்கும் பாம்பைப் போல புண்ணியம், பாவம் என்னும் இரண்டு தன்மைகளைப் பெற்ற வினைகளுக்கும் ஓர் உருவாகும் எச்சதத்தன் என்பவன் இருப்பவன் ஆனான்.' பாடல் வருமாறு:

"பெருமை பிறங்கும் அப்பதியின்
மறையோர் தம்முள் பெருமனைவாழ்
தருமம் நிலவு காசிபகோத்
திரத்துத் தலைமை சால்மரபில்
அருமை மணியும் அளித்ததுவே
நஞ்சும் அளிக்கும் அரவுபோல்
இருமை வினைக்கும் ஒருவடிவாம்
எச்ச தத்தன் உளனானான்."

பெருமை-ஓர் எல்லைக்குள் அடங்காத பெருமையால் பிறங்கும்-திகழும். அப்பதியின்-அந்தச் சிவத்தலமாகிய சேய்ஞலூரில் வாழும். மறையோர் தம்முள்-வேதியர்களுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். தம்:அசை நிலை. பெரு-பெரிய. மனை-திரு மாளிகையில். வாழ்-வாழ்ந்து வரும். தருமம்—அறங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நிலவு-நின்று விளங்கும். காசிபகோத்திரத்து-காசியப கோத்திரத்தில். த்:சந்தி. தலைமை-தலைமைப் பதவி. சால்-அமைந்த. மரபில்-பரம்பரையில். அருமை-அருமையான. மணியும்-மாணிக்கத்தையும். அளித்து-உமிழ்ந்து. அதுவே-அந்த ஊரும் பிராணியே. நஞ்சும்-விடத்தையும். அளிக்கும்-கக்கும். அரவு போல்-நல்ல பாம்பைப் போல. இருமை வினைக்கும்-புண்ணியம், பாவம் என்னும் இரண்டு தன்மைகளைப் பெற்ற வினைகளுக்கும். வினை: ஒருமை பன்மை மயக்கம். மை: ஒருமை பன்மை மயக்கம். ஒருவடிவாம்-ஓர் உருவம் ஆகும். எச்சதத்தன்—எச்சதத்தன் என்பவன். உளன் ஆனான்-இருப்பவன் ஆனான். உளன்: இடைக்குறை.

பிறகு உள்ள 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த எச்சதத்தன் என்னும் வேதியனுடைய அழகிய பத்தினி சிறப்பு வாய்க்கப் பெற்ற ஒரு பரம்பரையில் வந்து பிறந்தாள்; தம்முடைய உறவினர்கள் விழையும் இல்லற வாழ்க்கைக்கு உரிய தொழில்களால் இந்தப் பூ மண்டலத்தில் இரண்டு புதல்வர்களை ஈன்றெடுத்துத் திகழும் தவத்தை அவள் புரிந்தாள்; அந்தப் புதல்வர்களை ஈனும் பாக்கியத்தினுடைய வரம்பாகிய பிரயோசனத்தை அவள் பெற்று விளங்குவாள்; பாசபந்தத்தைப போக்கி விடும் பற்றுக்கோடு வருவதற்கு சார்பாகி இருக்கிற புனிதமானவள் ஆகும் அவள்.' பாடல் வருமாறு:

"மற்றை மறையோன் திருமனைவி
வாய்ந்த மரபின் வந்துதித்தாள்;
சுற்றம் விரும்பும் இல்வாழ்க்கைத்
தொழிலான் உலகில் துணைப்புதல்வர்
பெற்று விளங்கும் தவம்செய்தாள்;
பெறும்பே றெல்லைப் பயன்பெறுவாள்;
பற்றை எறியும் பற்றுவரச்
சார்பாய் உள்ள பவித்திரையாம்."

மற்றை: அசை நிலை. மறையோன்-அந்த எச்சதத்தன் என்னும் வேதியனுடைய. திரு-அழகிய. 'திருமகளைப் போன்ற' எனலும் ஆம். மனைவி-பத்தினி. வாய்ந்த-சிறப்பு வாய்க்கப் பெற்ற. மரபின்-ஒரு நல்ல பரம்பரையில். வந்து உதித்தாள்-வந்து பிறந்தாள். சுற்றம்-தன்னுடைய உறவினர்கள்; திணை மயக்கம். விரும்பும்-விழையும். இல்வாழ்க்கை-இல்லற வாழ்க்கைக்கு உரிய. த்:சந்தி. தொழிலான்-தொழில்களால்; ஒருமை பன்மை மயக்கம். உலகில்-இந்தப் பூ மண்டலத்தில். துணை-இரண்டு. ப்:சந்தி. புதல்வர்-புதல்வர்களை; ஒருமை பன்மை மயக்கம். பெற்று-ஈன்றெடுத்து. விளங்கும்-திகழும் தவம்-தவத்தை. செய்தாள்-முன்பிறவியில் அவள்

புரிந்தாள். பெறும்-அந்தப் புதல்வர்களை ஈனும். பேறு-பாக்கியத்தினுடைய. எல்லை - வரம்பாகிய. ப்:சந்தி. பயன்-பிரயோசனத்தை. பெறுவாள்-அவள் பெற்று விளங்குவாள். பற்றை-பாச பந்தத்தை. எறியும்-போக்கிவிடும். பற்று-பற்றுக்கோடு. வர-வருவதற்கு. ச்:சந்தி. சார்பாய்-சார்பாகிய. உள்ள-இருக்கின்றன. பவித்திரை ஆம்-அவள் புனிதமானவள் ஆகும்.

அடுத்து உள்ள 12-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'நல்ல செயல்களையே செய்யும் அந்த எச்சதத்தனிடமும் அவனுடைய பத்தினியிடமும் பலவகையான நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறும் வேதங்களினுடைய துறை விளக்கத்தை அடையும் வண்ணம் என்றைக்கும் வேதியர்களினுடைய குடும்பங்கள் தழைத்து பெருக்கத்தை அடையுமாறும் ஏழு உலகங்களில் வாழ்பவர்களும் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணமும் சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் சிற்சபையாகிய திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாருக்கு உரிய சைவ சமயத்தின் உண்மை வளருமாறும் பெரிய தவத்தைப் புரிந்த தவசிகள் தங்களுடைய மெய், வாய், மூக்கு, காதுகள், கண்கள் என்னும் ஐந்து இந்திரியங்களையும் வென்ற வெற்றி விளங்கு மாறும் அந்த எச்சதத்தனுக்குப் புதல்வராக வந்து திருவவதாரம் செய்தருளினார் விசார சருமனார் என்பவர்.'

பாடல் வருமாறு:

''நன்றி புரியும் அவர்தம்பால்
 நன்மை மறையின் துறைவிளங்க
என்றும் மறையோர் குலம்பெருக
 ஏழு புவனங் களும்உய்ய
மன்றில் நடம்செய் பவர்சைவ
 வாய்மை வளர மாதவத்தோர்
வென்றி விளங்க வந்துதயம்
 செய்தார் விசார சருமனார்.''

நன்றி-நல்ல செயல்களையே; ஒருமை பன்மை மயக்கம். புரியும்-செய்துவரும். அவர் தம்பால்-அந்த எச்சதத்தனிடமும் அவனுடைய பத்தினியிடமும். அவர்: ஒருமை பன்மை மயக்கம். பால்: ஒருமை பன்மை மயக்கம். நன்மை-பல வகையான நல்ல கருத்துக்களை எடுத்து கூறும்; ஒருமை பன்மை மயக்கம். மறையின்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். துறை விளங்க-துறை விளக்கத்தை அடையும் வண்ணம். என்றும்-என்றைக்கும். மறையோர்-வேதியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குலம்-குடும்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். 'சாதி' எனலும் ஆம். பெருக-தழைத்துப் பெருக்கத்தை அடையுமாறும். ஏழு புவனங்களும்-ஏழு உலகங்களில் வாழ்பவர்களும்; இட ஆகுபெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணமும். மன்றில்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் சிற்சபையாகிய திருச்சிற்றம்பலத்தில். நடம்-திருநடனம். செய்பவர்-புரிந்தருளும் நடராஜப் பெருமானாருக்கு உரிய. சைவ-சைவ சமயத்தினுடைய. வாய்மை-உண்மையான தன்மை. வளர-வளருமாறும். மாதவத்தோர்-பெரிய தவத்தைப் புரிந்த தவசிகள்; ஒருமை பன்மை மயக்கம். வென்றி-தங்களுடைய மெய், வாய், மூக்கு, காதுகள், கண்கள் என்னும் ஐந்து இந்திரியங்களையும் வென்ற வெற்றி. ''புலனைந்தும் வென்றான்றன் வீரமே வீரம்'' என வருவதைக் காண்க. விளங்க-திகழுமாறும். வந்து-அந்த எச்சதத்தனுக்குப் புதல்வராக வந்து. உதயம் செய்தார்-திருவவதாரம் செய்தருளினார். விசாரசருமனார்-விசார சருமர் என்பவர்.

அடுத்து உள்ள 13-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்த விசார சருமருக்கு ஐந்து பிராயங்கள் அடைய வேதங்களினுடைய அங்கங்களாகிய சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறையும்

அவற்றோடு நிரம்பியுள்ள சந்தங்களைப் பெற்ற இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும் அடங்க முன் காலத்தில் தலைவராகிய சிவபெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த சைவ ஆகமங்களை முன்பிறவியில் இருந்த ஞானத்தின் தொடர்பினால் அரும்பி மலரும் மலரினுடைய நறுமணத்தைப் போலத் தம்முடைய திருவுள்ளம் மலர்ச்சியை அடைய அதனோடு மலர்ச்சியை அடையும் பக்குவத்தைப் பெற்ற நல்லுணர்ச்சி சிறந்து விளங்கியது.' பாடல் வருமாறு:

" ஐந்து வருடம் அவர்க்கணைய
அங்கம் ஆறும் உடன்நிறைந்த
சந்த மறைகள் உட்படமுன்
தலைவர் மொழிந்த ஆகமங்கள்
முந்தை அறிவின் தொடர்ச்சியினால்
முகைக்கும் மலரின் வாசம்போல்
சிந்தை மலர உடன்மலரும்
செவ்வி உணர்வு சிறந்ததால்."

அவர்க்கு-அந்த விசார சருமருக்கு. ஐந்து வருடம்-ஐந்து பிராயங்கள். வருடம்: ஒருமை பன்மை மயக்கம். அணைய-அடைய. அங்கம் ஆறும்-வேதங்களினுடைய அங்கங்களாகிய. சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், சோதிடம், கற்பம் என்னும் ஆறு சாத்திரங்களையும். அங்கம்: ஒருமை பன்மை மயக்கம். உடன்-அவற்றோடு. நிறைந்த-நிரம்பியுள்ள. சந்த-சந்தங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மறைகள்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும். உட்பட-அடங்க. முன்-முன்காலத்தில். தலைவர்-தலைவராகிய சிவபெருமானார். மொழிந்த-தம்முடைய ஈசானம், தற்புருடம், அகோரம் வாம தேவம், சத்தியோ ஜாதம் என்னும் ஐந்து திருமுகங்களாலும் திருவாய் மலர்ந்

தருளிச் செய்த. ஆகமங்கள்-காரணாகமம், காரியாகமம், காமிகாகமம், பௌஷ்கராகமம், மிருகேந்திராகமம் முதலிய சைவ ஆகமங்களை. முந்தை-தமக்கு முன்பிறவியில் இருந்த. அறிவின்-ஞானத்தினுடைய. தொடர்ச்சியினால்-தொடர்பால். முகைக்கும்-அரும்பி மலரும். மலரின்-மலரினுடைய. வாசம்போல்-நறுமணத்தைப் போல. சிந்தை-தம்முடைய திருவுள்ளம். மலர-மலர்ச்சியை அடைய. உடன்-அதனோடு மலரும்-மலர்ச்சியை அடையும். செவ்வி-பக்குவத்தைப் பெற்ற. உணர்வு-நல்ல உணர்ச்சி. சிறந்தது-அவரிடம் சிறந்து விளங்கியது. ஆல்:ஈற்றசை நிலை.

பிறகு வரும் 14-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நடந்து வரும் முறையில் விசார சருமனாருக்கு ஏழு பிராயங்களும் நிறையும் பருவம் வந்து சேர புகழையும் பெருமையையும் பெற்ற ஒப்பு இல்லாத உபநயனம் என்னும் சடங்கை நிறைவேற்றி விட்டு அறிவினால் இகழ்ச்சி புரியும் வழியைப் பெற்றவை அல்லாத யாவும் பொருந்தியிருந்தன என்றாலும் தம்முடைய விளங்கும் பரம்பரைக்கு ஏற்ற விதத்தில் வேதங்களை ஓதுமாறு செய்விக்கும் செயலை அந்த நாயனாரைப் பெற்றவராகிய எச்சதத்தர் ஆற்றுமாறு செய்தார்.' பாடல் வருமாறு:

'' நிகழும் முறைமை ஆண்டேழும்
நிரம்பும் பருவம் வந்தெய்தப்
புகழும் பெருமை உபநயனப்
பொருவில் சடங்கு முடித்தறிவின்
இகழும் நெறிய அல்லாத
எல்லாம் இயைந்த எனினுந்தம்
திகழும் மரபின் ஓதுவிக்கும்
செய்கை பயந்தார் செய்வித்தார்.''

நிகழும்-நடந்து வரும். முறைமை-முறையில். ஆண்டு ஏழும்-விசார சருமருக்கு ஏழு பிராயங்களும். ஆண்டு: ஒருமை பன்மை மயக்கம். நிரம்பும்-நிறையும். பருவம் வந்து

எய்த-பருவம் வந்து சேர. ப்:சந்தி. புகழும்-புகழையும். பெருமை-பெருமையையும் பெற்ற. பொரு-ஒப்பு. இல்-இல் லாத; கடைக்குறை. உபநயன-உபநயனமாகிய பூணூலை அணிவிக்கும். சடங்கு-மங்கலமான செயலை. முடித்து-நிறை வேற்றி விட்டு. அறிவின்-அறிவினால். இகழும்-இகழ்ந்து பிறர் பேசும். நெறிய வழியைப் பெற்றவை. அல்லாத-அல்லாமல் உள்ள. எல்லாம்-எல்லாப் பண்புகளும்; ஒருமை பன்மை மயக்கம். இயைந்த-பொருந்தி இருந்தன. எனினும்-என்றால் லும்; இடைக்குறை. தம்-தம்முடைய. திகழும்-விளங்கும். மரபின்-அந்தணர்களினுடைய பரம்பரைக்கு ஏற்ற விதத் தில். ஓதுவிக்கும்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம் அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் அத்தி யாபகர் மூலமாக அத்தியயனம் புரிந்தருளுமாறு செய்விக்கும். செய்கை-செயலை. பயந்தார்-அந்த நாயனாரைப் பெற்றவ ராகிய எச்சதத்தர். செய்வித்தார்-ஆற்றுமாறு செய்தார்.

பிறகு வரும் 15-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தணர்களுக்கு உரியவை என்று கூறப்படும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும், பலவாகிய அறுபத்து நான்கு கலைகளையும் அந்த விசார சருமருக்குக் கற்பிப் பதற்கு முன்னாலேயே அவற்றைத் தெரிந்து கொண்டு அமைந்துள்ளதாக நிலாவும் அவருடைய ஞானத்தினுடைய திறமையைப் பார்த்து அவரை வேதங்களை அத்தியயனம் புரியும் தொழிலில் நிற்கச் செய்யும் வேதியராகிய அத்தியா பகர் அதிசயத்தை அடைந்தார்; ''கணக்கு இல்லாத கலை களினுடைய அர்த்தத்துக்கு வரம்பு சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளே.'' என்று மேற் கொண்ட கொள்கை மிகுதியாக அடைந்திருக்கும் தம்முடைய திருவுள்ளத்தில் அந்த இளைஞராகிய பெருமையையும் தகுதி

யையும் பெற்றவராகிய விசார சருமர் தெளிவாக அறிந்து கொண்டார்.' பாடல் வருமாறு:

" குலவு மறையும் பலகலையும்
கொளுத்து வதன்முன் கொண்டமைந்த
நிலவும் உணர்வின் திறம்கண்டு
நிறுவும் மறையோர் அதிசயித்தார்;
'அலகில் கலையின் பொருட்கெல்லை
ஆடும் கழலே.' எனக்கொண்ட
செலவு மிகுந்த சிந்தையினில்
தெளிந்தார் சிறிய பெருந்தகையார்."

குலவு-அந்தணர்களுக்கு உரியவை என்று கூறப்படும் மறையும்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். பல-பலவாகிய அறுபத்து நான்கு. கலையும் -கலைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். "ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்" என வருதலைக் காண்க. அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. கொளுத்துவதன் முன்-அந்த விசாரசருமருக்குக் கற்பிப்பதற்கு முன்னாலேயே. கொண்டு-அவற்றைத் தெரிந்து கொண்டு. அமைந்த-அவரிடம் அமைந்துள்ளதாக. நிலவும்-இருக்கும். உணர்வின்-அவருடைய ஞானத்தின். திறம்-திறமையை. கண்டு-பார்த்து. நிறுவும்-அவரை நான்கு வேதங்களையும் அத்தியயனம் புரியும் தொழிலில் நிலைத்து நிற்கச் செய்யும். மறையோர்-வேதியராகிய அத்தியாபகர். அதிசயித்தார்-வியப்பை அடைந்தார். அலகு-கணக்கு. இல்-இல்லாத; கடைக்குறை. கலையின்-அறுபத்து நான்குகலைகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பொருட்கு-அர்த்தத்துக்கு. எல்லை -வரம்பு. ஆடும்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும். கழலே-வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் நடராஜப் பெருமானாருடைய திருவடிகளே; ஆகுபெயர். என-என்று; இடைக்

குறை. க்:சந்தி. கொண்ட-மேற்கொண்டுள்ள. செலவு-கொள்கை. மிகுந்த-மிகுதியாக அடைந்திருக்கும். சிந்தையினில்-தம்முடைய திருவுள்ளத்தில். சிறிய-அந்த இளைஞராகிய; திணை மயக்கம். பெரும் பெருமையையும். தகையார்-தகுதியையும் பெற்றவராகிய விசார சருமனார். தெளிந்தார்-தெளிவாக அறிந்து கொண்டார். வேதங்களையும் கலைகளையும் கற்றுக் கொண்டதற்கு எல்லை நடராஜப் பெருமானாருடைய திருவடிகளை வணங்கி வாழ்வதே என்பதை அந்த விசாரசருமனார் தெரிந்து கொண்டார் என்பது கருத்து.

பிறகு உள்ள 16-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

"'சிதம்பரத்தில் உள்ள திருக்கோயிலில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்து விளங்கும் திருவடிகளைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானாரே எம்மை ஆட்களாக உடையவர்'' என்று எண்ணும் உண்மை அந்த விசாரசருமருக்கு ஏழு பிராயங்கள் நிரம்பியவுடனே உண்டாகும் உணர்ச்சியினிடத்திலிருந்து போகாமல் தம்முடைய திருவுள்ளத்தில் ஊறி எழும் வழியில் அமைந்த பக்தியினால் தம்முடைய கடமைகளையே இயல்பாகவே செய்து வரும் விருப்பம் மேலும் மேலும் எழுந்து விளங்கும் தம்முடைய திருவுள்ளத்தின் உறுதியில்நேர்மையோடு நிலைபெற்று நிற்கும் சிறப்பைப் பெற்றவராகிய அந்த விசாரசருமனார் இவ்வாறு விளங்கும் காலத்தில் அந்தச் சேய்ஞலூரில் ஒரு தினம்.' பாடல் வருமாறு:

"'நடமே புரியும் சேவடியார்
நம்மை உடையார்' எனும்மெய்ம்மை
உடனே தோன்றும் உணர்வின்கண்
ஒழியா தூறும் வழியன்பின்
கடனே இயல்பாய் முயற்றிவரும்
காதல் மேன்மேல் எழும்கருத்தின்

திடம்நேர் நிற்கும் செம்மலார்
திகழும் நாளில் ஆங்கொருநாள்.''

இந்தப் பாடல் குளகம். நடம்-சிதம்பரத்தில் உள்ள திருக்கோயிலில் விளங்கும் திருச்சிற்றம்பலத்தில் திரு நடனம். ஏ:அசை நிலை. புரியும்-புரிந்தருளும். சேவடியார்-செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்து விளங்கும் திருவடிகளைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானாரே. அடி: ஒருமை பன்மை மயக்கம். நம்மை-அடியேங்களை; இது சேக்கிழார் தம்மையும் விசாரசருமரையும் சேர்த்துக் கூறியது. உடையார்-ஆட்களாக உடையவர். எனும்-என்று எண்ணும்; இடைக்குறை. மெய்ம்மை-உண்மை. உடனே-அந்த விசார சருமருக்கு ஏழு பிராயங்கள் நிரம்பிய உடனே. தோன்றும்-உண்டாகும். உணர்வின்கண்-உணர்ச்சியினிடத்திலிருந்து. ஒழியாது-போகாமல். ஊறும்-தம்முடைய திருவுள்ளத்தில் ஊறி எழும். வழி அன்பின்-வழியில் அமைந்த பக்தியினால். கடனே-தம்முடைய கடமைகளையே; ஒருமை பன்மை மயக்கம். இயல்பாய்-இயல்பாகவே. முயற்றி வரும்-இடைவிடாமல் புரிந்து கொண்டு வரும். காதல்-விருப்பம். மேன் மேல்-மேலும் மேலும். எழும்-எழுந்து விளங்கும். கருத்தின்-தம்முடைய திருவுள்ளத்திற் கொண்ட. திடம்-உறுதியில். நேர் நிற்கும்-நேர்மையோடு நிலைபெற்று நிற்கும். செம்மலார்-சிறப்பைப் பெற்றவராகிய அந்த விசாரசருமனார். திகழும்-இவ்வாறு விளங்கும். நாளில்-காலத்தில். ஆங்கு-அந்தச் சேய்ஞலூரில். ஒரு நாள்-ஒரு தினம்.

அடுத்து உள்ள 17-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தாம் வேதங்களை அத்தியயனம் செய்யும் வேத பாடசாலையில் அத்தியயனம் புரியும் பிரமசாரிகளோடு செல்பவராகிய அந்த விசார சருமர் தம்முடைய ஊராகிய சேய்ஞலூரில் வாழும் வேதியர்களுக்குச் சொந்தமான பசுமாடுகளின் வரிசையோடு மேய்ச்சல் நிலத்துக்குச் சென்ற சமயத்தில் அந்த நிலத்தில் ஈன்றணிமையுள்ள ஒரு பசுமாடு தன்னைப்

பாதுகாக்கும் அந்த இடையன் மேல் தன்னுடைய கொம்பு களால் முட்ட சிறிதளவும் ஒன்றும் கூசாமல் அவன் தான் தன் கையில் வைத்திருந்த தடியைக் கொண்டு அந்தப் பசு மாட்டை அடிக்க, அப்போது விசாரசருமர் அவனிடம் போய் மிகுதியாக இருக்கும் இரக்கத்தால் கோபம் மூண்டு அவனை அந்தப் பசுமாட்டை அடிக்காமல் தடுத்து விலக்கி விட்டு உண்மையை அறிந்து கொண்டு.' பாடல் வருமாறு:

'' ஓது இடையின் உடன்போவார்
ஊர்ஆன் நிரையி னுடன்புக்க
போது மற்றங் கொருபுனிற்றா
போற்றும் அவன்மேல் மருப்போச்ச
யாதும் ஒன்றும் கூசாதே
எடுத்த கோல்கொண் டவன்புடைப்ப
மீது சென்று மிகும்பரிவால்
வெகுண்டு விலக்கி மெய்யுணர்ந்து.''

இந்தப் பாடல் குளகம். ஓது-தாம் வேதங்களை அத்தியயனம் செய்யும். இடையின் உடன்-வேத பாட சாலையில் அத்தியயனம் புரியும் பிரமசாரிகளோடு; இட ஆகு பெயர். போவார்-செல்பவராகிய அந்த விசார சருமர். ஊர்-தம்முடைய ஊராகிய சேய்ஞலூரில் வாழும் வேதியர்களுக்குச் சொந்தமான; இட ஆகு பெயர். ஆன் நிரையினுடன்-பசுமாடுகளின் வரிசையோடு. ஆன்: ஒருமை பன்மை மயக்கம். புக்க-மேய்ச்சல் நிலத்துக்குச் சென்ற. போது-சமயத்தில். மற்று: அசை நிலை. அங்கு-அந்த மேய்ச்சல் நிலமாகிய புல்வெளியில். ஒரு புனிற்றா-கன்றுக் குட்டியை ஈன்றணிமையைப் பெற்ற ஒரு பசுமாடு. போற்றும்-தன்னை மேய்க்க விட்டுப் பாதுகாக்கும். அவன் மேல்-அந்த இடையனுக்கு மேல். மருப்பு-தன்னுடைய கொம்புகளால்; ஒருமை பன்மை மயக்கம். ஓச்ச-குத்தி முட்ட. யாதும் ஒன்றும்-சிறிதளவும் ஒன்றும் கூசாது-கூசாமல். ஏ:அசை நிலை. எடுத்த-தன்னுடைய கையில் பிடித்துக் கொண்டிருந்த. கோல் கொண்டு-

தடியைக் கொண்டு. அவன்-அந்த இடையன். புடைப்ப-அந்தப் பசுமாட்டை அடிக்க. மீது-அவனிடம். சென்று-போய். மிகும்-தம்முடைய திருவுள்ளத்தில் மிகுதியாக எழும். பரிவால்-இரக்கத்தால். வெகுண்டு-சினம் மூண்டு. விலக்கி-அந்த இடையனை அந்தப் பசுமாட்டை அடிக்காமல் தடுத்து விலக்கி விட்டு. மெய்-பசு மாடுகளின் பெருமையாகிய உண்மையை. உணர்ந்து-அறிந்து கொண்டு.

அடுத்து உள்ள 18-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பரவி விளங்கும் அறுபத்து நான்கு கலைகளையும், சைவ ஆகமங்களாகிய சாத்திரங்களினுடைய பரப்பைப் பெற்ற தொகுதியைக் கற்றுத் தெரிந்து கொண்ட தன்மையால், பொருந்தியிருக்கும் பெருமையைப் பெற்றவையும், பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ளவையும் ஆகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களின் மூலமாக திகழும் இந்தப் பூ மண்டலத்தில் எல்லா நூல்களையும் தெளிவாகக் கற்று அறிந்து கொண்ட அர்த்தத்தின் நிலையை அடைவதற்குத் தெரிந்து கொண்ட தம்முடைய திருவுள்ளத்தினால் பசுமாட்டினுடைய பெருமையை உள்ளவாறு தெரிந்து கொண்டவராகிய அந்த விசாரசருமர் பசுமாட்டை அடித்த அந்த இடையனுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்வாரானார்.' பாடல் வருமாறு:

"பாவும் கலைகள் ஆகமநூற்
பரப்பின் தொகுதிப் பான்மையினால்
மேவும் பெருமை அருமறைகள்
மூல மாக விளங்குலகில்
யாவும் தெளிந்த பொருள்நிலையே
எய்த உணர்ந்த உள்ளத்தால்
ஆவின் பெருமை உள்ளபடி
அறிந்தார் ஆயற் கருள்செய்வார்."

பாவும்-பரவியிருக்கும். கலைகள்-அறுபத்து நான்கு கலைகளையும். ஆகம-சைவ ஆகமங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். நூல்-சாத்திரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பரப்பின்-பரப்பைப் பெற்ற. தொகுதி-தொகுதியைப் பெற்றவையும்; ஆகு பெயர். ப்:சந்தி. பான்மையினால் - தன்மையால். மேவும் - பொருந்தியிருக்கும். பெருமை-பெருமையைப் பெற்றவையும்; ஆகு பெயர். அரு-பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ளவையும்; ஆகுபெயர்.மறைகள்-ஆகிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களின். மூலமாக-வழியாக. விளங்கு-திகழும். உலகில்-இந்தப் பூ மண்டலத்தில். யாவும்-எல்லா நூல்களையும். தெளிந்த-தெளிவாகக் கற்று அறிந்து கொண்ட. பொருள்-அர்த்தத்தின். நிலை-நிலையை. என்றது அந்த அர்த்தமாக விளங்குபவர் நடராஜப் பெருமானார் என்ற உண்மையைத் தெரிந்து கொண்டதை. ஏ:அசை நிலை. எய்த-அடைவதற்கு. உணர்ந்த-தெரிந்து கொண்ட. உள்ளத்தால்-தம்முடைய திருவுள்ளத்தினால். ஆவின் பெருமை-பசு மாட்டினுடைய பெருமையை. உள்ளபடி-உள்ளவாறு. அறிந்தார்-தெரிந்து கொண்டவராகிய அந்த விசார சருமர். ஆயற்கு-அந்தப் பசு மாட்டை அடித்த அந்த இடையனுக்கு. அருள்செய்வார்-பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்வாரானார்.

அடுத்து உள்ள 19-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இந்தப் பூமண்டலத்தில் தங்கி வாழும் எண்பத்துநான்கு லட்சங்களாகிய எல்லா யோனிகளுக்கும் மேலாக விளங்கும் பெருமையையும் தகுதியையும் பெற்றவை பசுமாடுகள்; பொங்கி எழும் தூய்மையாக உள்ள தீர்த்தங்கள் யாவும் எந்தக் காலத்திலும் தம்முடைய உடம்புகளில் அமைந்திருப்பவை அந்தப் பசு மாடுகள்; பரிசுத்தர்களாகிய தேவர்களும், அழகிய முனிவர்களும், சிவகணங்களும் சேர்ந்திருந்து பிரியாத உறுப்புக்கள் எல்லாவற்றையும் தாங்கள் பெற்றவை

அல்லவோ இந்த நல்ல பசு மாடுகளின் கூட்டங்கள்?' பாடல் வருமாறு:

"தங்கும் அகில யோனிகட்கும்
மேலாம் பெருமைத் தகைமையன;
பொங்கு புனித தீர்த்தங்கள்
எல்லாம் என்றும் பொருந்துவன;
துங்க அமரர் திருமுனிவர்
கணங்கள் சூழ்ந்து பிரியாத
அங்கம் அனைத்தும் தாமுடைய
அல்ல வோநல் ஆனினங்கள்?"

இந்தப் பாடல் விசாரசருமர் அந்த இடையனுக்குப் பசு மாடுகளின் பெருமையை எடுத்துக் கூறியதைச் சொல்வது. தங்கும்-இந்தப் பூ மண்டலத்தில் தங்கி வாழும். அகிலயோனி கட்கும்-எண்பத்து நான்கு லட்சங்களாகிய எல்லா யோனி களுக்கும். யோனிகள்-பிறந்தவை. மேலாம்-மேலாக விளங் கும். பெருமை-பெருமையையும். த்:சந்தி. தகைமையென-தகுதியையும் பெற்றவை பசுமாடுகள். பொங்கு-பொங்கி எழும். புனித-தூய்மையாக உள்ள. தீர்த்தங்கள்-கங்கையாறு, காவிரியாறு, வடபெண்ணையாறு, தென்பெண்ணையாறு, துங்கபத்திரை, பிரமபுத்திரை, வையையாறு, தாமிரபருணி முதலிய தீர்த்தங்கள். எல்லாம்-யாவும். என்றும்-எந்தக் காலத்திலும். பொருந்துவன-தங்களுடைய உடம்புகளில் அமைந்திருப்பவை அந்தப் பசுமாடுகள். துங்க-பரிசுத்தர் களாகிய; திணை மயக்கம். அமரர்-தேவர்களும்; ஒருமை-பன்மை மயக்கம். திரு-அழகிய. முனிவர்-முனிவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். கணங்கள்-சிவகணங்களும். சூழ்ந்து-சேர்ந்திருந்து. பிரியாத அங்கம்-பிரியாத உறுப்புக் கள்; ஒருமை பன்மை மயக்கம். அனைத்தும்-எல்லாவற்றை யும். தாம்-தாங்கள். உடைய-பெற்றவை. நல்-இந்த நல்ல. ஆனினங்கள் அல்லவோ - பசுமாடுகளின் கூட்டங்கள் அல்லவோ?

பிறகு உள்ள 20-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'இவ்வாறு அமைந்த சிறப்பை உடைமையினால் கன்றுக் குட்டிகளை ஈன்ற அன்றைக்கே சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் சிற்சபையாகிய திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் தலைவராகிய நடராஜப் பெருமானாருக்குத் தங்கியுள்ள பிறைச்சந்திரனும், கங்கையாறும், சிரிக்கும் வெண்மையான கபாலங்களின் மாலையும் மேவிய சடாபாரத்தைப் பெற்ற தம்முடைய அழகிய முடியின்மேல் விருப்பத்தை அடைந்து அபிடேகத்தை ஏற்றருளுவதற்காகப் பரிசுத்தமாக உள்ள அபிடேகப் பொருள்களாகிய கோமேயம், கோஜலம், பால், நெய், தயிர் என்னும் பஞ்சகவ்வியங்களையும் வழங்கும் உரிமையைப் பெற்றவை அந்தப் பசுமாடுகள்.' பாடல் வருமாறு:

" ஆய சிறப்பி னாற்பெற்ற
அன்றே மன்றுள் நடம்புரியும்
நாயனார்க்கு வளர்மதியும் நதியும்
நகுவெண் டலைத் தொடையும்
மேய வேணித் திருமுடிமேல்
விரும்பி ஆடி அருளுதற்குத்
தூய திருமஞ் சனம்ஐந்தும்
அளிக்கும் உரிமைச் சுரபிகள்தாம்."

இந்தப் பாடலும் விசாரசருமர் பசுமாடுகளினுடைய பெருமையை அந்த இடையனுக்கு எடுத்துக் கூறியதைச் சொல்வது. ஆய-அவ்வாறு அமைந்த. சிறப்பினால்-சிறப்பை உடைமையினால். பெற்ற-கன்றுக்குட்டிகளை ஈன்ற. அன்றே -அன்றைக்கே. மன்றுள்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் சிற்சபையாகிய திருச்சிற்றம்பலத்தில். நடம்-திரு நடனம். புரியும்-புரிந்தருளும். நாயனார்க்கு-தலைவராகிய நடராஜப் பெருமானாருக்கு. வளர்-தங்கியுள்ள. மதியும்-பிறைச்சந்திரனும். நதியும்-கங்கை ஆறும். நகு-சிரிக்கும். வெண்தலை-வெண்மையான கபாலங்களின்; ஒருமை

பன்மை மயக்கம். தொடையும்-மாலையும். மேய-மேவிய. வேணி-சடாபாரத்தைப் பெற்ற. திரு-அழகிய. முடிமேல்-தலையின் மேல். விரும்பி-விருப்பத்தை அடைந்து. ஆடி அருளுதற்கு-அபிடேகத்தை ஏற்றருளுவதற்காக. த்:சந்தி. தூய-பரிசுத்தமாக உள்ள. திருமஞ்சனம்-அபிடேகப் பொருள்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். ஐந்தும்-கோமயம், கோஜலம், பால், நெய், தயிர் என்னும் பஞ்ச கவ்வியங்களையும். அளிக்கும்-வழங்கும். உரிமை-உரிமையைப் பெற்றவை; ஆகு பெயர். சுரபிகள்-அந்தப் பசு மாடுகள். தாம்: ஈற்றசை நிலை.

சிவபெருமான் ஆனைந்தில் ஆடுதல்: "ஆவினில் ஐந்து கந்தாட்டும் கூடல்.", "ஆனிற் பொலி வைந்தும் அமர்ந் தாடி.", "ஆவில் ஐந்தமர்ந்தவன்.", "ஆனஞ்சாடும் முடியான்.", "ஆனிலங்கினர் ஐந்தும் அவிர் முடி ஆடி.", "ஆனிலங்கிளர் ஐந்தும் ஆடுவர்.", "ஆனஞ்சாடிய சென்னி அடிகளுக்கிடம் அரசிலியே.", "ஆனஞ்சாடும் முடி அடிகள்.", "ஆனினல் ஐந்து கந்தாடுவர்." "ஆனிடை ஐந்து கந்தான்.", "ஆனமர் ஐந்தும் கொண்டாட்டுகந்த அடிகள்.", "ஆனிடை ஐந்து கந்தாடினானை." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "ஆவினுக் கருங்கலம் அரன் அஞ்சாடுதல்.", "அஞ்சு கொலாமவர் ஆடின தாமே.", "ஆனிடை ஐந்தும் வைத்தார் ஆட்டுவார்க் கருளும் வைத் தார்.", "ஆனகம் அஞ்சும் ஆடும் அடிகள்.", "ஆனிடை அஞ்சும் கொண்டு அன்பினால் அமர ஆட்டி.", "ஆன் திகழ் ஐந்து கந்தாடும் பிரான்.", "ஆனிடை ஐந்தும் ஆடுவர்.", "அளித்த ஆன் அஞ்சும் ஆடிய ஆனையார்.", "ஆனஞ்சாடிய ஆமாத்தூர் ஐயனே.", "ஆவின் மேவிய ஐந்தமர்ந்தாடுவான்.", "அஞ்சும் ஆடல் அமர்ந்து.", "ஆனஞ்சாடியை.", "ஆனஞ்சாடி உகந்த வாட் போக்கியார்.", "அஞ்சு மஞ்சுமோராடி.", "ஆனுற்ற

ஐந்தும் அமர்ந்தாய் நீயே.'', ''ஆவினில் ஐந்தும் அமர்ந்தாய் நீயே.'', ''ஆனஞ்சும் ஆடியை நான் அபயம் புக்கதாளானை.'', ''ஆவுற்ற ஐந்தும் உகந்தார்.'', ''ஆனகத்தஞ் சாடினான்.'', ''ஆனைந்தும் ஆடினான் காண்.'', ''ஆவினில் ஐந்து கந்தானை.'', ''ஆவினில் ஐந்து கந்தானை அமரர் கோனை.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''அஞ்சும் கொண்டாடுவர் ஆவினில்.'', ''நறுநெய் தயிர் பால் அஞ்சும் கொண்டாடிய.'', ''ஆனஞ்சின் தேனை ஆட்டு கந்தீர்.'', ''ஆனிடை ஐந்தமர்ந்தான்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''ஆனஞ்சாடும் சென்னி மேலோர் அம்புலி ஆடும் அரன்.'' என்று கண்டராதித்தரும், ''பால் நெய் ஐந்துடன் ஆடிய படர்சடைப் பால் வண்ணனே.'' என்று திருவாலி அமுதனாரும், ''ஆனைந்தும் ஆட்டி அமரர் கணம் தொழும் தானந்தம் இல்லாத் தலைவன்.'' என்று திருமூலரும், ''ஆனளிப்பன அஞ்சுகந்தாடு வார்க்கு.'', ''ஆவின் ஐந்து கந்தாடுவார் அறையணி நல்லூரை.'' என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 21-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நல்ல பண்பைப் பெற்ற பசுமாடுகளினுடைய கூட்டங்கள் சிறப்பை அடையும் தகுதியாகிய பான்மையைப் பெற்றவையாகி தேவர்களோடு காலம் முழுவதிலும் இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் அனைவரையும் பாதுகாக்கும் முதல்வரும் காரணரும் ஆக விளங்கும் நீலமான திருக்கழுத்தை உடையவரும், சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையில் பெற்றவருமாகிய நடராஜப் பெருமானார் அணிந்து கொள்ளும் விபூதியை வழங்கும் மூலமான விலங்கு திருவவதாரம் செய்தருளும் வடிவை உடைய விலங்கு என்று கூறினால் அவ்வாறு கூறுவதற்கு முடிவு ஏதுவோ? முடிவே இல்லை.' பாடல் வருமாறு:

''சீலம் உடைய கோக்குலங்கள்
சிறக்கும் தகைமைத் தேவருடன்

காலம் முழுதும் உலகனைத்தும்
காக்கும் முதற்கா ரணராகும்
நீல கண்டர் செய்யசடை
நிருத்தர் சாத்தும் நீறுதரும்
மூலம் அவதா ரம்செய்யும்
மூர்த்தம் என்றால் முடிவென்னோ?"

சீலம்-நல்ல பண்பை. உடைய-பெற்ற. கோ-பசுமாடுகளி னுடைய; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. குலங்கள்-கூட்டங் கள். சிறக்கும்-சிறப்பை அடைந்திருக்கும். தகைமை-தகுதி யாகிய பான்மையைப் பெற்றவையாகி. த்:சந்தி. தேவருடன்- தேவர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். காலம் முழுதும்- காலம் முழுவதிலும். உலகு-இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். அனைத்தும்-அனைவரையும்; திணை மயக்கம். காக்கும்-பாதுகாக்கும். முதல்-முதல்வரும். காரணர் ஆகும்-எல்லா உலகங்களையும் வேதங்களையும் உண்டாக்கும் காரண புருஷராக விளங்கும். நீல கண்டர்-ஆல கால விடத்தை விழுங்கியமையால் நீலமாகிய திருக்கழுத் தைப் பெற்றவரும். செய்ய-சிவந்த. சடை-சடாபாரத்தைத் தம்முடைய தலையில் பெற்றவருமாகிய; ஆகு பெயர். நிருத் தர்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் திருச்சிற்றம் பலத்தில் திருநடனம் புரிந்தருளுபவரும் ஆகிய நடராஜப் பெருமானார். சாத்தும்- அணிந்து கொள்ளும் நீறு-விபூதியை. தரும்-வழங்கும். மூலம்-மூலமான விலங்கு; ஆகு பெயர். அவதாரம் செய்யும்-திருவவதாரம் செய்தருளும். மூர்த்தம்- வடிவை உடைய விலங்கு. என்றால்-என்று கூறினால். முடிவு -அவ்வாறு கூறுவதற்கு முடிவு. என்னோ-எதுவோ? முடிவே இல்லை என்பது கருத்து.

யாரையும் முட்டாமல் சாதுவாக இருப்பதனால் பசு மாட்டைச் சீலம் உடையது என்றார். தேவர்களுக்கு யாகாக் கினியில் சொரியும் பால் முதலியவற்றைத் தருவதால் பசு மாடு தேவர்களைக் காப்பதாயிற்று, உலகத்தில் வாழ்பவர்

களுக்குப் பாலையும், தயிரையும், வெண்ணெயையும் நெய்யையும், கோமயத்தையும், கோஜலத்தையும் வழங்குவதனால் அவர்களைப் பாதுகாப்பதாயிற்று, சிவபெருமான் அணியும் விபூதியை உண்டாக்குவதற்கு உரிய கோமயத்தைத் தருவதனால்' நீறு தரும்' என்றார்.

பிறகு உள்ள 22-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'நினைக்கும் தகுதியாகிய பான்மை அந்தப் பசு மாடுகளுக்கு இருப்பதை இந்த அளவு எடுத்துக் கூறுவதை அல்லாமல் இனிமேல் வேறு வேறாகக் கூறுவதற்கு இருக்கின்றனவோ? உமையாகிய மான் மறிக் குட்டி துள்ளி எழும் கரத்தைப் பெற்ற நடராஜப் பெருமானார் அணிகின்ற பாம்புகளினுடைய ஒளி சூழும் மாணிக்கங்களும் தேவ நதியாகிய கங்கையாற்றின் புனலும் தெளிவாக விளங்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய அந்தப் பெருமானார் தேவர்களுடைய தலைவியாகிய சிவகாமசுந்தரியோடு சேர்ந்து அமரும் வண்ணம் தங்கள் மேல் ஏற்றிக் கொள்ளும் கோபத்தைக் கொண்ட திருமாலாகிய இடபதேவர் பிறந்த சாதி அல்லவோ இந்தப் பசு மாடுகளின் கூட்டம்?' பாடல் வருமாறு:

"உள்ளும் தகைமை இனிப்பிறவேறுளவே?
உமை மான் மறிக்கன்று
துள்ளும் கரத்தார் அணிபணியின்
சுடர்சூழ் மணிகள் சுரநதிநீர்
தெள்ளும் சடையார் தேவர்கள்தம்
பிராட்டி யுடனே சேரமிசைக்
கொள்ளும் சினமால் விடைத்தேவர்
குலமன் றோஇச் சுரபிகுலம்?"

உள்ளும்-நினைக்கும். தகைமை-தகுதியாகிய பான்மை. இனி-அந்தப் பசு மாடுகளுக்கு இருப்பதை இந்த அளவு எடுத்துக் கூறுவதை அல்லாமல் இனிமேல். ப்:சந்தி. பிறவேறு-வேறு வேறாக. உளவே-கூறுவதற்கு இருக்கின்றனவோ?

உழைமான்மறிக்கன்று-உழையாகிய மான் மறிக் குட்டி. துள்ளும்-துள்ளி எழும். கரத்தார்-திருக்கரத்தைப் பெற்ற நடராஜப் பெருமானார். அணி-அணிந்து கொள்ளும். பணியின்-பாம்புகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். சுடர்-ஒளி. சூழ்-சுற்றி வீசும். மணிகள்-மாணிக்கங்களும். சுரநதி நீர்-தேவநதியாகிய கங்கையாற்றின் புனலும். தெள்ளும்-தெளிவாக விளங்கும். சடையார்-சடா பாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய அந்தப் பெருமானார். தேவர்கள் தம்-தேவர்களுடைய. தம்: அசை நிலை. பிராட்டியுடனே-தலைவியாகிய சிவகாம சுந்தரியோடு. ஏ:அசை நிலை. சேர-சேர்ந்து அமரும் வண்ணம். மிசை-தங்கள் மேல். க்:சந்தி. கொள்ளும்-ஏற்றிக் கொள்ளும். சின-கோபத்தைப் பெற்ற. மால்-திருமாலாகிய. விடைத்தேவர்-இடப தேவர். குலம்-பிறந்த சாதி. இச்சுரபி குலம்-இந்தப் பசு மாடுகளினுடைய கூட்டம். அன்றோ-அல்லவோ? இடப தேவர் பசு மாட்டின் ஆண். அவர்மேல் நடராஜப் பெருமானாரும் சிவகாம சுந்தரியும் ஆரோகணித்து எழுந்தருளுவார்கள்.

பிறகு வரும் 23-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'விசாரசருமர் என இத்தகையவற்றையே பலவற்றையும் எண்ணிப் பார்த்து, "இதமான வழியிலேயே மேயச் செய்து இந்தக் கன்றுக்குட்டிகளோடு இருக்கும் பசுமாடுகளினுடைய வரிசையைப் பாதுகாக்கும் இந்தச் செயலுக்கு மேலாக வேறு கடமை அடியேனுக்கு இல்லை; இந்தச் செயலே சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் சிற்சபையாகிய திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் புரிந்தருளும் நடராஜப் பெருமானாருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை வணங்கும் வழியாக இருப்பதும் ஆகும்." என எண்ணி அங்கே நின்றுகொண்டிருந்த அந்த இடையனைப் பார்த்து, "நீ இனிமேல் இந்தப் பசுமாடுகளினுடைய வரிசையைப் புல்வெளியில் மேய்ப்பதை விட்டு விடுவாயாக." என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்வா

ரானார்.' பாடல் வருமாறு:

"என்றின் னனவே பலவும்நினைந்
'திதத்தின் வழியே மேய்த்திந்தக்
கன்று பயில்ஆன் நிரைகாக்கும்
இதன்மேல் இல்லை கடன்; இதுவே
மன்றுள் ஆடும் சேவடிகள்
வழுத்தும் நெறியா வதும்' என்று
நின்ற ஆயன் தனைநோக்கி,
'நிரைமேய்ப் பொழிகநீ.' என்பார்."

என்று-விசாரசருமர் என. இன்னனவே-இத்தகைய வற்றையே. பலவும்-பலவற்றையும் நினைந்து-எண்ணிப்பார்த்து. இதத்தின்-இதமாக இருக்கும். இதம்-ஹிதம்; சுகம். வழியே-வழியிலேயே. மேய்த்து-மேயச் செய்து. இந்தக் கன்று-இந்தக் கன்றுக் குட்டிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். பயில்-மேய்ந்து கொண்டிருக்கும். ஆன்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசையை. காக்கும்-பாது காக்கும். இதன்மேல்-இந்தச் செயலுக்கு மேலாக. இல்லை கடன்-அடியேனுக்கு வேறு கடமை இல்லை. இதுவே-இந்தச் செயலே. மன்றுள்-சிதம்பரத்தில் உள்ள ஆலயத்தில் விளங்கும் சிற்சபையாகிய திருச்சிற்றம்பலத்தில். ஆடும்-திரு நடனம் புரிந்தருளும். சேவடிகள்-நடராஜப் பெருமானா ருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை. வழுத்தும்-வணங்கும். நெறி-வழி. ஆவதும்-ஆக இருப்பதும் ஆகும். என்று-என எண்ணி. நின்ற-அங்கே நின்று கொண்டிருந்த. ஆயன்தனை-இடையனை. தன்: அசை நிலை. நோக்கி-பார்த்து. நீ நிரை-நீ இந்தப் பசுமாடு களினுடைய வரிசையை. மேய்ப்பு-புல்வெளியில் மேய்ப்பதை. ஒழிக-விட்டு விடுவாயாக. என்பார்-என்று திருவாய் மலர்ந் தருளிச் செய்வாரானார்.

பிறகு உள்ள 24-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'விசார சருமர் அந்த இடையனைப் பார்த்து, "நானே

இனிமேல் இந்தப் பசுமாடுகளினுடைய வரிசையைப் புல் வெளியில் மேயுமாறு செய்வேன்.'' என்று திருவாய் மலர்ந் தருளிச் செய்தார்; அந்த ஆயனும் அச்சத்தை அடைந்து அந்த விசாரசருமருக்கு நேரில் அவரை வணங்கிப் பசுமாடு களை மேய்ப்பதை விட்டு விட்டுப் போய்விட்டான்; அந்த விசாரசருமரும் சேய்ஞலூரில் வாழும் வேதியர்களினுடைய சம்மதத்தோடு பசுமாடுகள் செறிந்திருக்கும் பெரிய கூட் டத்தை மேய விட்டுப் பாதுகாப்பவராகிப் பசுமையாகிய பயிர்களுக்கு மேகம் பொழியும் மழை என்று கூறுமாறு அந்தப் பசுமாடுகளினுடைய வரிசையை மேய விட்டுப் பாது காக்கும் பொருட்டு தெய்வத் தன்மையைப் பெற்ற இளைய வேதியராகிய விசாரசருமர் புல்வெளிக்கு எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

> **'''யானே இனிஇந் நிரைமேய்ப்பன்'**
> **என்றார்; அஞ்சி இடைமகனும்**
> **தான்நேர் இறைஞ்சி விட்டகன்றான்;**
> **தாமும் மறையோர் இசைவினால்**
> **ஆனே நெருங்கும் பேராயம்**
> **அளிப்பா ராகிப் பைங்கூழ்க்கு**
> **வானே என்ன நிரைகாக்க**
> **வந்தார் தெய்வ மறைச்சிறுவர்.''**

யானே-விசாரசருமர் அந்த இடையனைப் பார்த்து 'நானே.' இனி-இனிமேல். இந்நிரை-இந்தப் பசுமாடுகளி னுடைய வரிசையை. மேய்ப்பன்-புல்வெளியில் மேயுமாறு புரிவேன். என்றார்-என்று திருவாய் மலர்ந்தருளிச் செய் தார். அஞ்சி-அச்சத்தை அடைந்து. இடை மகனும்-அந்த இடையனாகிய ஆடவனும். தான்: அசை நிலை. நேர்-அந்த விசாரசருமருக்கு நேரில். இறைஞ்சி-அவரை வணங்கிவிட்டு. விட்டு-அந்தப் பசுமாடுகளை மேய்ப்பதை விட்டு விட்டு. அகன்றான்-அந்தப் புல் வெளியிலிருந்து போய் விட்டான். 'தாமும்' என்றது 'விசாரசருமரும்' என்பதை. மறையோர்-

அந்தச் சேய்ஞலூரில் வாழும் வேதியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இசைவினால்-சம்மதத்தோடு: உருபு மயக்கம். ஆன்-பசுமாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். ஏ:அசை நிலை. நெருங்கும்-செறிந்திருக்கும். பேராயம்-பெரிய கூட்டத்தை. அளிப்பாராகி-மேய்ச்சல் புல்வெளியில் மேய விட்டுப் பாதுகாப்பாராகி. ப்:சந்தி. பைம்-பசுமையாக இருக்கும். கூழ்க்கு-பயிர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். வான்-மேகங்கள் பொழியும் மழை; ஆகு பெயர். ஏ:அசை நிலை. என்ன-என்று கூறுமாறு. நிரை-அந்தப் பசுமாடுகளி னுடைய வரிசையை. காக்க-மேய விட்டுப் பாது காக்கும் பொருட்டு. தெய்வ-தெய்வத் தன்மையைப் பெற்ற. மறைச் சிறுவர்-இளைய வேதியராகிய விசார சருமர். வந்தார்-புல்வெளிக்கு எழுந்தருளினார்.

அடுத்து உள்ள 25-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'விசார சருமர் தம்முடைய திருக்கரங்களில் ஒரு தடியை யும் கயிற்றையும் எடுத்துக் கொண்டு மெல்லியதாக இருக்கும் உச்சிக் குடுமி அசைந்து கொண்டிருக்க விளங்கும் கிருஷ்ணா ஜினமும் பூணூலும் தம்முடைய சிறிய திரு மார்பில் அசையத் தம்முடைய இடுப்பில் கௌபீனம் ஒளியை வீசப் பாலும், கோமயம், கோஜலம், வெண்ணெய், நெய் என்னும் பஞ்ச கவ்வியங்களாகிய பிரயோசனங்களும் பெருகி அமைய நடந்து வரும் பசுமாடுகளை மேயுமாறு செய்யும் தன்மையோடு வேண்டுமளவு இருக்கும் புல் வெளியில் முளைத்திருக்கும் புற் களில் அந்தப் பசுமாடுகள் வேண்டுமளவும் மேயும் இடத் துக்கு அந்த விசார சருமர் எழுந்தருளி.' பாடல் வருமாறு:

"கோலும் கயிறும் கொண்டுகுழைக்
குடுமி அலையக் குலவுமான்
தோலும் நூலும் சிறுமார்பில்
துவள அரைக்கோ வணம்சுடரப்
பாலும் பயனும் பெருகவரும்
பசுக்கள் மேய்க்கும் பான்மையினால்

காலும் புல்லின் அவைவேண்டுந்
தனையும் மிசையும் தலைச்சென்று.''

இந்தப் பாடல் குளகம். கோலும்-விசார சருமர் தம்முடைய திருக்கரங்களில் ஒரு தடியையும். கயிறும்-கயிற்றையும். கொண்டு-எடுத்துக் கொண்டு. குழை-மெல்லியதாகஇருக்கும். க்:சந்தி. குடுமி-உச்சிக் குடுமி. அலைய-காற்றில் அசைந்து கொண்டிருக்க. க்:சந்தி. குலவு-விளங்கும். மான் தோலும்-கிருஷ்ணாஜினமும். நூலும்-அதைக் கட்டியிருக்கும் பூணூலும். சிறு-தம்முடைய சிறிய. மார்பில்-திருமார்பில். துவள-அசைய. அரை-தம்முடைய இடுப்பில். க்:சந்தி. கோவணம்-கௌபீனம். சுடர-ஒளியை வீச; விளங்க. ப்:சந்தி. பாலும்-தங்களுடைய மடிகளில் சுரக்கும் பாலும். பயனும்-கோமயம், கோஜலம், வெண்ணெய், நெய், தயிர் என்னும் பஞ்ச கவ்வியங்களாகிய பிரயோசனங்களும்; ஒருமை பன்மை மயக்கம். பெருக-பெருகி அமைய. வரும்-நடந்துவரும். பசுக்கள்-பசுமாடுகளை. மேய்க்கும்-மேயுமாறு செய்யும். பான்மையினால்-தன்மையோடு; உருபு மயக்கம். காலும்-போதுமான அளவு இருக்கும். புல்லின்-புல் வெளியில் முளைத்திருக்கும் புற்களில்; ஒருமை பன்மை மயக்கம். அவை-அந்தப் பசு மாடுகள். வேண்டுந்தனையும்-வேண்டுமளவும். மிசையும்-மேயும். தலை-இடத்துக்கு. ச்:சந்தி. சென்று-அந்த விசார சருமர் எழுந்தருளி.

பிறகு வரும் 26-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'விசாரசருமர் புல்வெளியில் உரிய வேளைகளில் பசுமாடுகளை மேயச் செய்தும், அங்கே முளைத்திருக்கும் புற்களைப் பிடுங்கியும், அவற்றைப் பசுமாடுகளுக்கு வழங்கியருளியும், அந்தப் பசமாடுகளினுடைய துன்பத்தைப் போக்கியும், இதமாக அந்தப் பசு மாடுகளை நீரைக் குடிக்கும் மண்ணியாற்றினுடைய துறையில் நல்ல குளிர்ச்சியைப் பெற்ற புனலைக் குடிக்கச் செய்தும் அவற்றினுடைய அச்சத்தைத் தமக்கு எதிரில் போக்கி விட்டு நல்லவையாக இருக்கும் வழிகளில் தமக்கு முன்னால் அந்தப் பசு மாடுகள் நடந்து போக.

அவற்றை ஒரு மரத்தினுடைய நிழலில் அமரச் செய்தருளி அமுதத்தைப் போன்ற இனிய சுவையைப் பெற்ற பாலை அந்தப் பசுமாடுகள் தங்களுடைய மடிகளிலிருந்து வழங்கும் காலங்கள் தவறாமல் அவற்றை உடையவர்களாகிய சேய்ஞ லூரில் வாழும் வேதியர்களுடைய திருமாளிகைகள் ஒவ் வொன்றிற்கும் அழைத்துக் கொண்டு சென்று அவற்றை விட்டார்.' பாடல் வருமாறு:

" பதவு காலங் களில்மேய்த்தும்
பறித்தும் அளித்தும் பரிவகற்றி
இதம்உண் துறையுள் நற்றண்ணீர்
ஊட்டி அச்சம் எதிர்நீக்கி
அதர்நல் லனமுன் செலநீழல்
அமர்வித் தமுத மதுரப்பால்
உதவும் பொழுது பிழையாமல்
உடையோர் இல்லந் தொறும்உய்த்தார்."

பதவு-விசார சருமர் சேய்ஞலூரில் உள்ள புல்வெளியில். காலங்களில்-உரிய வேளைகளில். மேய்த்தும்-அந்தப் பசு மாடுகளை மேயச் செய்தும். பறித்தும்-அங்கே முளைத்திருக் கும் புற்களைப் பிடுங்கியும். அளித்தும்-அவற்றைத் தின்னு மாறு பசுமாடுகளுக்கு வழங்கியருளியும். பரிவு-அந்தப் பசு மாடுகளினுடைய பசியாகிய துன்பத்தை. அகற்றி-போக்கி யும். இதம்-ஹிதமாக. ஹிதம்-சுகம். உண்-அந்தப் பசு மாடுகளை நீரைக் குடிக்கும். துறையுள்-மண்ணியாற்றினு டைய துறையில். நல்-நல்ல. தண்- குளிர்ச்சியைப் பெற்ற. நீர்-புனலை. ஊட்டி-குடிக்கச் செய்தும். அச்சம்- அவற்றினுடைய பயத்தை. எதிர்-தமக்கு எதிரில் நீக்கி-போக்கி விட்டு. அதர் நல்லன-நல்லவையாக இருக்கும் வழிகளில். அதர்: ஒருமை பன்மை மயக்கம். முன்-தமக்கு முன்னால். செல-அந்தப் பசுமாடுகள் நடந்து போக; இடைக் குறை. நீழல்-ஒரு மரத்தினுடைய நிழலில். அமர்வித்து- அமரச் செய்தருளி. அமுத-அமுதத்தைப் போன்ற. மதுர-

இனிய சுவையைப் பெற்ற. ப:சந்தி. பால்-பாலை. உதவும்-அந்தப் பசு மாடுகள் தங்களுடைய மடிகளிலிருந்து வழங்கும். பொழுது-நேரங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பிழையாமல்-தவறாமல். உடையோர்-சேய்ஞலூரில் வாழ்பவர்களாகிய அவற்றை உடைய வேதியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இல்லம்தொறும்-திருமாளிகைகள் ஒவ்வொன்றிற்கும். இல்லம்: ஒருமை பன்மை மயக்கம். உய்த்தார்-அழைத்துக் கொண்டு சென்று அவற்றை விட்டார்,

பிறகு உள்ள 27-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சேய்ஞலூரில் ஓடும் மண்ணியாற்றினுடைய கரைகளில் பலவகை மரங்கள் வளரும் முல்லை நிலமாகிய காட்டின் பக்கங்களிலும், பள்ளங்களினுடைய பக்கங்களிலும், குளிர்ச்சியைப் பெற்ற முத்துக்களைச் சங்குப் பூச்சிகள் உமிழும் நீர் நிலைகள் விளங்கும் மருத நிலத்தில் உள்ள சோலைகளைச் சுற்றியிருக்கும் மண்ணியாற்றினுடைய கரைகளைச் சார்ந்த இடங்களிலும் கணக்கில் பெருகியிருக்கும் பசுமாடுகளினுடைய வரிசையைப் புற்களை மேயச் செய்து அந்த விசாரசருமர் சமிதைகளோடு மேலே எரியும் நெருப்பை எடுத்துக் கொண்டு எழுந்தருளி இரவு நேரத்துக்கு முன்னால் அந்தப் பசு மாடுகளை அழைத்துக் கொண்டு அவற்றை உடைய வேதியர்களினுடைய திருமாளிகைக்குள் நுழைந்தும் அவற்றை விட்டு விட்டும் நல்ல தினங்கள் பலவாக இருக்கும் அந்தக் காலத்தில்.' பாடல் வருமாறு:

"மண்ணிக் கரையின் வளர்புறவின்
மாடும் படுகர் மருங்கினிலும்
தண்ணித் திலநீர் மருதத்தண்
டலைசூழ் குலையின் சார்பினிலும்
எண்ணிற் பெருகும் நிரைமேயத்துச்
சமிதை யுடன்மேல் எரிகொண்டு
நண்ணிக் கங்குல் முன்புகுந்தும்
நன்னாள் பலவாம் அந்நாளில்."

இந்தப் பாடல் குளகம். மண்ணி-சேய்ஞலூரில் ஓடும் மண்ணியாற்றினுடைய. க்:சந்தி. கரையின்-கரைகளில்; ஒருமை பன்மை மயக்கம். வளர்-பலவகையான மரங்கள் வளர்ந்து நிற்கும். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், தமால மரம், தென்ன மரம், பன மரம், பல வகை வாழை மரங்கள், மருத மரம், நொச்சி மரம், விளா மரம், மா மரம், பலா மரம், வில்வ மரம், பவள மல்லிகை மரம், அசோக மரம், நெட்டி லிங்க மரம், மகிழ மரம், வேப்ப மரம், பூவரச மரம், அரச மரம், ஆல மரம் முதலியவை. புறவின்-முல்லை நிலமாகிய காட்டினுடைய. மாடும்-பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். படுகர்- பள்ளங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மருங்கினிலும்-பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். தண்-குளிர்ச்சியைப் பெற்ற. நித்தில-முத்துக்களைச் சங்குப் பூச்சிகள் உமிழும்; ஒருமை பன்மை மயக்கம். நீர்-நீர் நிலைகள்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகு பெயர். மருத-மருத நிலத்தில் உள்ள. த்:சந்தி. தண்டலை-சோலைகளை; ஒருமை பன்மை மயக்கம். சூழ்-சுற்றியிருக்கும். குலையின்-மண்ணியாற்றினுடைய கரைகளை; ஒருமை பன்மை மயக்கம். சார்பினிலும்-சார்ந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். எண்ணில்-கணக்கில். பெருகும்-பெருகியிருக்கும். நிரை-பசுமாடுகளினுடைய வரிசையை. மேய்த்து-புற்களை மேயச் செய்து. ச்:சந்தி. சமிதையுடன்-அந்த விசார சருமர் சமிதைகளோடு; ஒருமை பன்மை மயக்கம். சமிதை-அரசங்குச்சி முதலியவை. மேல்-மேல் நோக்கி. எரி-எரியும் நெருப்பை. கொண்டு-தம்முடைய கையில் எடுத்துக் கொண்டு; நண்ணி-எழுந்தருளி. க்:சந்தி. கங்குல்-இரவு நேரத்துக்கு. முன்-முன்னால். புகுந்தும்-அந்தப் பசு மாடுகளை அழைத்துக் கொண்டு அவற்றை உடைய வேதியர்கள் வாழும் திரு மாளிகைக்குள் நுழைந்தும். நல்-நல்ல. நாள்-தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலவாம்-அவற்றை விட்டு விட்டுப் பலவாக.

இருக்கும். அந்நாளில்-அந்தக் காலத்தில்.

அடுத்து வரும் 28-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அப்படியாக உள்ள பசுமாடுகளின் வரிசையில் உள்ள கூட்டங்கள் எல்லாவற்றையும் அழகோடு திகழ்ந்து மிகப் பல வாகப் பெருகி மேய்வதற்கு இனிமையாக உள்ள புற்களாகிய உணவுகளையும், அந்தப் பசுமாடுகள் விரும்பிக் குடிக்கும் தண்ணீரையும் அருந்துவதனால் பொருந்திய தங்களுடைய உள்ளங்களில் கொண்ட பெரிய உவகையை அடைந்து இரவு நேரத்திலும் உச்சி வேளையிலும் பரிசுத்தமாக உள்ள இனிய பாலைத் தங்களுடைய மடிகளிலிருந்து பெருகி வருமாறு பொழியும் வண்ணம் அவற்றினுடைய முலைகள் பொழிந் தன.' பாடல் வருமாறு :

"ஆய நிரையின் குலம்எல்லாம்
அழகின் விளங்கி மிகப்பல்கி
மேய இனிய புல்லுணவும்
விரும்பு புனலும் ஆர்தலினால்
ஏய மனம்கொள் பெருமகிழ்ச்சி
எய்தி இரவும் நண்பகலும்
தூய தீம்பால் மடிபெருகிச்
சொரிய முலைகள் சுரந்தனவால்."

ஆய-அவ்வாறு உள்ள. நிரையின்-பசுமாடுகளினுடைய வரிசையில். குலம்-கூட்டங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாவற்றையும். அழகின்-அழகோடு. விளங்கி-திகழ்ந்து. மிக-மிகுதியாக, ப்:சந்தி. பல்கி-பலவாகப் பெருகி. மேய-தாங்கள் மேய்வதற்கு. இனிய-இனிய சுவை யைப் பெற்ற. புல்-பசும் புற்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். உணவும்-தீனிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். விரும்பு-அந்தப் பசுமாடுகள் விரும்பிக் குடிக்கும். புனலும்-தண்ணீரையும். ஆர்தலினால்-அருந்துவதனால். ஏய-பொருந்திய. மனம்-தங்களுடைய உள்ளங்களில்; ஒருமை பன்மை மயக்கம். கொள்-கொண்ட. பெரு-பெரிய. மகிழ்ச்சி-

உவகையை. எய்தி-அடைந்து. இரவும்-இரவு நேரத்திலும். நண்பகலும்-உச்சி வேளையிலும். தூய-பரிசுத்தமாக உள்ள. தீம்-இனிய சுவையைப் பெற்ற. பால்-பாலை. மடி-தங்களுடைய மடிகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். பெருகி-பெருகி வருமாறு. ச்:சந்தி. சொரிய-பொழியும் வண்ணம். முலைகள்-அந்தப் பசுமாடுகளினுடைய முலைகள். சுரந்தன-பொழிந்தன. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 29-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தச் சேய்ஞலூரில் வாழும் வேதியர்கள் புனையும் தொழிலாகிய யாகமென்னும் சடங்கைச் செய்யும் பொருட்டு ஹோமத்திற்குப் பால் முதலியவற்றை வழங்கும் பசுமாடுகள் தோற்றும் தோற்றப் பொலிவில் முன்பு இருந்ததைக் காட்டிலும், பல மடங்குகள் பாலைத் தங்களுடைய மடிகளிலிருந்து பாலைக் கறக்குமாறு செய்பவையாகி விளங்கி தங்களைப் பாதுகாக்கும் தகுதியைப் பெற்ற அன்போடு இந்தப் பிரமசாரியாகிய விசாரசருமர் அந்தப் பசு மாடுகளைப் புல்வெளிக்கு அழைத்துச் சென்று அவற்றை அங்கே முளைத்திருக்கும் புற்களை மேயச் செய்ததற்குப் பிறகு மாட்சியைப் பெறும் திறங்களை உடையவை ஆகிவிட்டன என்று அந்தச் சேய்ஞலூரில் வாழ்பவர்களும் அந்தப் பசுமாடுகளை உடையவர்களும் ஆகிய வேதியர்கள் எல்லோரும் தங்களுடைய உள்ளங்களில் மகிழ்ச்சியை அடைந்தார்கள்.' பாடல் வருமாறு:

"'பூணும் தொழில்வேள் விச்சடங்கு
புரிய ஓம தேனுக்கள்
காணும் பொலிவின் முன்னையிலும்
அநேக மடங்கு கறப்பனவாய்ப்
பேணும் தகுதி அன்பால்இப்
பிரம சாரி மேய்த்ததற்பின்
மாணும் திறத்த வான'என
மறையோர் எல்லாம் மனம்மகிழ்ந்தார்."

பூணும்-அந்தச் சேய்ஞலூரில் வாழும் வேதியர்கள் தாங்கள் அணிகலன்களைப் போலப் புரியும். பூண்: ஒருமை பன்மை மயக்கம். தொழில்-தொழிலாகிய. வேள்வி-யாகம் என்னும். ச்:சந்தி. சடங்கு-புண்ணியச் செயலை. புரிய_ செய்யும் பொருட்டு. ஓம-ஹோமத்திற்குப் பால் முதலிய வற்றை வழங்கும். அவையாவன பால், தயிர், வெண் ணெய், நெய், அட்சதை, மலர்கள் முதலியவை. தேனுக் கள்-பசுமாடுகள். காணும் - தோன்றும். பொலிவின்-தோற்றப் பொலிவில். முன்னையிலும்-முன்பு பொலிந்து விளங்கியதைக் காட்டிலும். அநேக-பல. மடங்கு-தடவைகள்; ஒருமை பன்மை மயக்கம். கறப்பனவாய்-தங்களுடைய மடிகளிலிருந்து பாலைக் கறக்குமாறு செய்பவைகளாக விளங்கி. ப்:சந்தி. பேணும்-தங்களை விரும்பிப் பாதுகாக்கும். தகுதி-தகுதியைப் பெற்ற. அன்பால்-அன்போடு; உருபு மயக்கம். இப்பிரமசாரி-இந்தப் பிரமசாரியாகிய விசாரசருமர். மேய்த்ததற்பின்-அந்தப் பசுமாடுகளைப் புல் வெளிக்கு நடத்திக்கொண்டு சென்று அவற்றை அங்கே முளைத்திருக்கும் புற்களை மேயுமாறு செய்ததற்குப் பிறகு. மாணும்-மாட்சிமையைப் பெறும். திறத்தவான-ஆற்றல்களை உடையவை ஆகிவிட்டன. என-என்று; இடைக்குறை. மறையோர்-சேய்ஞலூரில் வாழும் வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம்-எல்லாரும். மனம்-தங்களுடைய திருவுள்ளங்களில்; ஒருமை டன்மை மயக்கம். மகிழ்ந்தார்-மகிழ்ச்சியை அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 30-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'எல்லா வகைகளிலும் பசுமாடுகளினுடைய கூட்டங்கள் அடைந்த உவகை ஓர் அளவு இல்லாமல் தாங்கள் இருக்கும் சேய்ஞலூரில் வாழும் அந்தணர்கள் தங்கியிருக்கும் திருமாளிகைகளில் தங்களுடைய கன்றுக்குட்டிகள் தங்களைப் பிரிந்தாலும் அந்த ஊரில் வாழும் சிறிய வேதியர்களின் புதல்

வரும் கன்றுக் குட்டியைப் போன்றவரும் ஆகிய விசார சருமரைப் பார்த்து அவருக்குச் சமீபத்தை அடைந்து உருக் கத்தைப் பெற்று தாய்களைப் போன்று அமையும் பான்மை யைப் பெற்ற நிலைமையை உடையவையாகிக் கனைத்துக் கொண்டு சுரந்து தங்களுடைய முலைகளில் உள்ள கண்கள் வழியே யாரும். கறக்காமலேயே பாலை மழையைப் போலப் பொழிந்தன.' பாடல் வருமாறு:

“அனைத்துத் திறத்தும் ஆனினங்கள்
அணைந்த மகிழ்ச்சி அளவின்றி
மனைக்கண் கன்று பிரிந்தாலும்
மருவும் சிறிய மறைக்கன்று
தனைக் கண்டருகு சார்ந்துருகித்
தாயாம் தன்மை நிலைமையவாய்க்
கனைத்துச் சுரந்து முலைக்கண்கள்
கறவா மேபால் பொழிந்தனவால்.”

அனைத்து-எல்லா. த்:சந்தி. திறத்தும்-வகைகளிலும்; ஒருமை பன்மை மயக்கம். ஆன்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். இனங்கள்-கூட்டங்கள்; பலவகை யான இனங்களைச் சேர்ந்த பசுமாடுகள் எனலும் ஆம். அணைந்த-அடைந்த. மகிழ்ச்சி-உவகை. அளவு-ஓர் அளவு. இன்றி-இல்லாமல். மனைக்கண்-சேய்ஞலூரில் தாங்கள் வளர்ந்துவரும் வேதியர்களினுடைய திருமாளிகைகளில். மனை: ஒருமை பன்மை மயக்கம். கன்று-கட்டியிருக்கும் தங்களுடைய கன்றுக் குட்டிகள்; ஒருமை பன்மை மயக்கம். பிரிந்தாலும்-தங்களைப் பிரிந்து அந்தத் திருமாளிகைகளில் கட்டப்பட்டிருந்தாலும். மருவும் - அந்தச் சேய்ஞலூரில் வாழும். சிறிய மறை-வேதியர்களினுடைய சிறிய புதல் வரும்; திணை மயக்கம், க்:சந்தி. கன்றுதனை- கன்றுக் குட்டியைப் போன்றவரும் ஆகிய விசாரசருமரை. தன்: அசை நிலை: க்:சந்தி. கண்டு-பார்த்து. அருகு-அவருக்குச் சமீபத்தை. சார்ந்து - அடைந்து. உருகி-உருக்கத்தைப்

பெற்று. த்:சந்தி. தாயாம்-தாய்மார்களைப் போல அமையும். தாய்: ஒருமை பன்மை மயக்கம். தன்மை-பான்மையைப் பெற்ற. நிலைமையவாய்-நிலைமையை உடையவை ஆகி. க்:சந்தி. கனைத்து-கனைத்துக் கொண்டு. ச்: சந்தி. சுரந்து-சுரப்பிவிட்டு. முலை-தங்களுடைய மடிகளில் இருக்கும் முலைகளில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கண்கள்-கண்களின் வழியாக. கறவாமே-யாரும் கறக்காமலேயே. பால்-பாலை. பொழிந்தன-மழையைப் போலச் சொரிந்தன. ஆல்: ஈற்றசை நிலை.

நாயனாருக்குக் கன்றுக் குட்டி உவமை: ''அவ்வரசன் மன்னுரிமைத் தனிக்கன்றும்.'', ''கன்று போற் கதறி.'', ''தெருட்கலை ஞானக் கன்றும்.'', ''தெய்வ ஞானக் கன்றினை.'', ''சிறிய மறைக் கன்றளித்த திருப்பதிக இசை.'', ''கண்ட கவுணியக்கன்றும்.'', ''கன்றணை ஆவின் கருத்து வாய்ப்ப.'', ''மழ விடையிளங் கன்று ஒன்று.'', ''கன்று தடையுண்டெதிரழைக்கக் கதறிக் கனைக்கும் புனிற்றாப் போல்.'', ''கன்று கோவினைக் கண்டணைந்ததுவென.'' என்று சேக்கிழார் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து உள்ள 31-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த விசார சருமர் தம்மை வந்து அடைந்த பசு மாடுகள் தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து பாலைத் தாங்களே யாரும் கறக்காமல் சொரிய, அதைப் பார்த்துத் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து நேர்மையாகிய வழியிலேயே செல்லும் தம்முடைய திருவுள்ளத்தில் அந்தப் பால் சிவபெருமானுக்கு அபிடேகப் பொருளாகும் கருத்தைத் தெரிந்து கொண்டு அடியேங்களை ஆட்களாகப் பெற்ற வள்ளலாராகிய சிவபெருமானாரை அடைவதற்கு எண்ணித் தெளிவை அடைந்து அந்தத் தெளிவினால் உண்மையாக உள்ள சிவபெருமானாருடைய பூசையை விழையும் விருப்பம் தம்மிடம் வேகமாக எழுந்தவுடன்.' பாடல் வருமாறு:

"தம்மை அணைந்த ஆன்முலைப்பால்
தாமே பொழியக் கண்டுவந்து
செம்மை நெறியே உறும்மனத்தில்
திருமஞ் சனமாம் குறிப்புணர்ந்தே
எம்மை யுடைய வள்ளலார்
எய்த நினைந்து தெளிந்ததனில்
மெய்ம்மைச் சிவனார் பூசனையை
விரும்பும் வேட்கை விரைந்தெழலும்."

இந்தப் பாடல் குளகம். தம்மை-அந்த விசார சருமர் தம்மிடம் வந்து. தம்மை: உருபு மயக்கம். அணைந்த-சேர்ந்த. ஆன்-பசு மாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். முலை-மடிகளில்உள்ள முலைகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி. பால்-பாலை. தாமே-யாரும் கறக்காமல் தாங்களே. பொழிய-சொரிய. க்:சந்தி. கண்டு - அதைப் பார்த்து. உவந்து-மகிழ்ச்சியை அடைந்து. செம்மை-நேர்மையாகிய. நெறியே-வழியிலேயே. உறும்-செல்லும். மனத்தில்-தம்முடைய திருவுள்ளத்தில். திருமஞ்சனம் ஆம்-அந்தப் பால் சிவபெருமானுக்கு அபிடேகப் பொருள் ஆகும். குறிப்பு-கருத்தை. உணர்ந்து-தெரிந்து கொண்டு. ஏ:அசை நிலை. எம்மை-அடியேங்களை; இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. உடைய-ஆட்களாகப் பெற்ற. வள்ளலார்-வள்ளலாராகிய சிவபெருமானாரை. எய்த-அடைவதற்கு. நினைந்து-அந்த விசாரசருமர் எண்ணி. தெளிந்து-தெளிவை அடைந்து. அதனில்-அந்தத் தெளிவினால்; உருபு மயக்கம். சிவனார்-சிவபெருமானாருடைய. மெய்ம்மை-உண்மையாகிய. ச்:சந்தி. பூசனையை-பூசையை. விரும்பும்-செய்ய விழையும். வேட்கை-விருப்பம். விரைந்து-வேகமாக அமைந்து. எழலும்-தம்முடைய திருவுள்ளத்தில் எழுந்தவுடன்.

பிறகு உள்ள 32-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த இடத்தில் முன் பிறவியில் தாம் புரிந்த அருச்ச-

ணையினுடைய அளவினது தொடர்ந்து வரும் உணர்ச்சியி னால் விளையாட்டாக அந்த விசார சருமர் தம்முடைய திரு வுள்ளத்தில் பொங்கி எழும் பக்தியினால் மண்ணியாற்றின் நடுவில் உள்ள குன்று போலக் குவிந்த மணலோடு கூடிய திட்டில் வளர்ந்து நின்ற ஓர் ஆத்தி மரத்தின் அடியில் சிவந்த கண்களைப் பெற்ற இடபவாகனத்தை ஓட்டுபவராகிய சிவ பெருமானாருடைய திருமேனியை அங்கே இருந்த மணல் களால் அமைத்துச் சிவபெருமானாருடைய திருக்கோயிலை யும் பரிசுத்தத்தைக் கொண்ட உயரமாக நிற்கும் கோபுரத் தையும் சுற்றுப் பிராகாரத்தையும் வகையாகச் செய்து கட்டினார்.' பாடல் வருமாறு:

"அங்கண் முன்னை அர்ச்சனையின்
அளவின் தொடர்ச்சி விளையாட்டாப்
பொங்கும் அன்பால் மண்ணிமணற்
புளினக் குறையில் ஆத்தியின்கீழ்ச்
செங்கண் விடையார் திருமேனி
மணலால் ஆக்கிச் சிவாலயமும்
துங்கம் நீடு கோபுரமும்
சுற்றாலயமும் வகுத்த மைத்தார்."

அங்கண்-அந்தச் சேய்ஞலூரில் முன்னை-முன் பிறவியில். அர்ச்சனையின்-தாம் புரிந்த அருச்சனையி னுடைய. அளவின்-அளவினது. தொடர்ச்சி-தொடர்ந்து வரும் உணர்ச்சியினால். விளையாட்டா-ஒரு விளை யாட்டாக. ப்:சந்தி. பொங்கு-தம்முடைய திருவுள் ளத்தில் பொங்கி எழும். அன்பால்-பக்தியினால். மண்ணி-சேய்ஞலூரில் ஓடும் மண்ணியாற்றினுடைய. மணற்புளின-நடுவில் உள்ள குன்று போலக் குவிந்த மணலோடு கூடிய. க்:சந்தி. குறையில்-திட்டில். ஆத்தியின்கீழ்-வளர்ந்து நின்றஓர் அத்தி மரத்தின் அடியில். ச்:சந்தி. செம்-சிவந்த. கண்-கண் களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவராகிய சிவபெருமானாருடைய. திரு

மேனி-விக்கிரகத்தை. மணலால்-அங்கே குவிந்திருந்த மணல் களால்; ஒருமை பன்மை மயக்கம். ஆக்கி-அந்த விசாரசருமர் உண்டாக்கி. ச்:சந்தி. சிவாலயமும்- சிவபெருமானாருடைய திருக்கோயிலையும். துங்கம்-பரிசுத்தத்தைக் கொண்ட. நீடு-உயரமாக நிற்கும். கோபுரமும்-கோபுரத்தையும். சுற்றா லயமும்-சுற்றியுள்ள பிரகாரத்தில் சூரியன் முதலிய தெய்வங் களுக்குத் திருக்கோயில்களையும்; ஒருமை பன்மை மயக்கம். வகுத்து-வகை வகையாகச் செய்து. அமைத்தார்-அவர் கட்டி யருளினார்.

செங்கண் விடை: "செங்கண் விடை அண்ணல்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "செங்கண் மால் விடையார்.", "செங்கண் மால்விடை ஏறிய செல்வனார் என்று திருநாவுக்கரசு நாயனாரும்." "செங்கண் மால்விடையாய் தெளிதேனே." என்று சுந்தர மூர்த்தி நாயனாரும், "செங்கண் ஏறுடையார் வைகும் திரு மலை", "செங்கண் வெள்விடையின் பாகர்.", "செங்கண் வெள்ளேற்றின் பாகன்.", "செங்கண் மால்விடையார்.", "செங்கண் மால்விடையார் திருக்காளத்தி.", "செங்கண் விடையார் திருமலர்க்கை.", "செங்கண் விடையார் திரு வானைக்கா.", "செங்கண் விடையார் திருவண்ணா மலை.", "செங்கண் மால்விடை அண்ணல் மேவு திருப்பருப் பதம்.", "செங்கண் விடையார் மன்னும் திருக்கானப்பேர்."! "செங்கண் ஏற்றவர் தில்லையே.", "செங்கண் ஏற்றவர் திருமுதுகுன்றினை.", "அரனெறி அமர்ந்த செங்கண் ஏற்றவர் சேவடி வணங்கி.", "செங்கண் ஏற்றவரே பொருள்.", "செங்கண் விடையார் திருப்பழனம்.", "செங் கண் விடையார் பதி கலவும் பணிந்து.", "செங்கண் விடை உகைத்தவரைத் திருப்பதிகம் பாடினார்.", "செங்கண் விடைக் கொடியார்.", "செங்கண் விடையார் தமைப் பணிந்து.", "செங்கண் மால்விடையார் பாதம் சேர்ந் தனர்.", "செங்கண் விடையார் திருக்கோயில்." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 33-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'ஆத்தி மரத்தில் மலர்ந்திருக்கும் மலர்களையும் செழுமையாகிய தளிர்களையும் முதலாக சமீபத்தில் மரங்கள் வளர்ந்து நிற்கும் முல்லை நிலமாகிய காட்டில் வளர்ந் திருக்கும் மரங்களில் மலர்ந்திருக்கும் மலர்களையும் அந்த விசாரசருமர் ஆராய்ந்து கொய்துகொண்டு வந்து பரிசுத்த ராகிய நடராஜப் பெருமானாருடைய அழகிய தலையின் மேல் அணிவதற்கு உரியதாக விளங்கும் திருப்பள்ளித் தாமத் துக்கு உரிய பல மலர்களையும் அந்த விசாரசருமர் பறித்துக் கொண்டு வந்து தைத்திருக்கும் இலைகளால் அமைத்துள்ள மலர்க் கூடையில் வைத்துக்கொண்டு அவற்றை அவர் கொண்டு வந்து நறுமணம் தங்கும் வண்ணம் இட்டருளி னார்.' பாடல் வருமாறு:

"ஆத்தி மலரும் செழுந்தளிரும்
முதலா அருகு வளர்புறவில்
பூத்த மலர்கள் தாம்தெரிந்து
புனிதர் சடிலத் திருமுடிமேல்
சாத்த லாகும் திருப்பள்ளித்
தாமம் பலவும் தாம்கொய்து
கோத்த இலைப்பூங் கூடையினிற்
கொணர்ந்து மணம்தங் கிடவைத்தார்."

ஆத்தி-ஆத்தி மரத்தில் மலர்ந்திருக்கும். மலரும்-மலர் களும்; ஒருமை பன்மை மயக்கம். செழும்-செழுமையாக இருக்கும். தளிரும்-தளிர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தளிர்-முற்றாத இலை. முதலா-முதலாக உள்ளவற்றை. அருகு-சமீபத்தில். வளர்-பல வகையான மரங்கள் வளர்ந்து நிற்கும். புறவில்-முல்லை நிலமாகிய காட்டில். அந்த மரங்க ளாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், நுணா மரம், மகிழ மரம், வேப்ப மரம், மா மரம், தென்ன மரம், பலா மரம், புளிய மரம், நெட்டிலிங்க மரம், அசோக மரம், பன மரம், பலவகையான வாழை மரங்கள், பலாச மரம், தமால மரம், முருங்கை மரம், கலியாண முருக்க மரம் முதலி

யவை. பூத்த-மலர்ந்திருக்கும். மலர்கள் - மலர்களை, அவையாவன: மாமலர், வாழைப்பூ, தாழம்பூ, வேங்கைமலர் வாகை மலர், அரளி மலர், செவ்வரளி மலர், நந்தியா வட்டை மலர், பவளமல்லிகை மலர், வெள்ளைச் செவ்வந்தி மலர், மஞ்சட் செவ்வந்தி மலர், மல்லிகை மலர், முல்லைமலர், இருவாட்சி மலர் முதலியவை. 'தாம்' என்றது விசாரசரு மரை. தெரிந்து-ஆராய்ந்து கொய்து கொண்டு வந்து. புனிதர்-பரிசுத்தராகிய நடராஜப் பெருமானாருடைய. சடில-சடாபாரத்தைப் பெற்ற. த்:சந்தி. திரு-அழகிய. முடிமேல்-தலையின் மீது. சாத்தலாகும்-அணிவதற்கு உரியவை ஆக விளங்கும். திருப்பள்ளித் தாமம்-திருப்பள்ளி எழுச்சியின் போது அணியும் மலர் மாலைக்கு உரிய. பலவும்- பல மலர் களையும், 'தாம்' என்றது அந்த விசார சருமரையே கொய்து-பறித்துக் கொண்டு வந்து. கோத்த-தாம் தைத்தி ருக்கும். இலை-இலைகளால் அமைத்துள்ள; ஒருமை பன்மை மயக்கம். பூங்கூடையினில்-மலர்க்கூடையில் கொணர்ந்து-வைத்துக்கொண்டு அவர் கொண்டுவந்து. மணம்-நறுமணம். தங்கிட-தங்கும் வண்ணம். வைத்தார்-நடராஜப் பெருமானாருடைய திருமுடிமேல் இட்டருளி னார்.

புனிதர்: "துங்கமிழலையீர்.", "தீர்த்தன்.", "தன் ஒப்பில்லாத் தூயவன்.", "தூயானைத் தூயவாயம் மறை ஓதிய வாயானை.", "தூநயம்கொள் திருமேனியில்.", "தூயவன் தூய வெண்ணீறு மேனிமேல் பாயவன்." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "துருத்தி மேய தூமணியை.", "தீர்த்தனைச் சிவனை.", "புனிதன் பொற் கழல் ஈசன் எனும் கனி.", "தூயானைத் தூவெள்ளை ஏற்றான் தன்னை.", "முப்புரங்கள் நீறா நோக்கும் தீர்த்தா.", "தூயானைச் சுடர்ப்பவளச் சோதியானை.", "பூதப் படையாள் புனிதா போற்றி.", "பொன்னிசையும் புரிசடை எம் புனிதன்.", "புரம் எரித்த புனிதன்.", "புரி

சடைமேற் புனல் கரந்த புனிதன்.", "புரங்கள் மூன்றும் பொடியாக எய்தானைப் புனிதன் தன்னை.", "புரிசடை மேற்புனலடைத்த புனிதன்.", "பூணநூற் புனிதர்.", "என்னைப்புறம் புறமே சோதித்த புனிதன்.", "தூயவன் காண் நீறுதுதைந்த மேனி துளங்கும் பளிங்கனைய சோதியான்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "தாரகனைப் பொன்றுவித்த பொருளினை முன் படைத்துகந்த புனிதன்.", "தூயார் சுடுபொடி ஆடிய மேனியர்." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "தூவணமேனி காட்டிய தொன்மையும்." என்று மாணிக்கவாசகரும், "புனிதன் அருள் புரிந்து.", "நந்திதூயன்.", "புண்ணியன் எந்தை புனிதன்.", "புனிதன் திரு மேனியைப் போற்றி செய்.", "தூய சொரூபத்தில்.", "தூய்மணி தூயன்.", "பொய் கலந்தார் முன் புகுதாப் புனிதனை.", "தூய பரஞ்சுடர்." என்று திருமூலரும், "தூயவன் பாதம் தொடர்ந்து." என்று நம்பியாண்டார் நம்பியும், "புற்றிடம் கொளும் புனிதரை.", "புகலூருறை புனிதனார்.", "புனிதனார் முன் புகழ்த்துணையார்க் கருளும் திறமும் போற்றிசைத்து.", "புனிதர் பொன் மேனியை நோக்கி.", "புனிதரவர் தமை நினையும் இன்பம்.", "பூங்கோயிலுண் மகிழ்ந்த புனிதர்.", "புற்றிடம் கொண்டிருந்த புனிதர்.", "திருப்புன் கூர்ப் புனிதர்.", "புக்கார் புனிதர் பூங்கோயில்.", "புனிதராம் தென்மதுரை மாறனார்.", "புனிதரடி நிழல் சேர்ந்தார்.", "தொண்டரை விளக்கத் தூயோன் அருள்செய்." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 34-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'நல்லவையாகிய புதிய குடங்களைப் பெறுவதற்காக அவற்றைத் தேடி எடுத்துக் கொண்டு வந்து அந்த விசாரசருமர் நாணற் செடிகளில் மலர்ந்த மலர்களைப் பெற்ற முல்லை நிலமாகிய காட்டின் இடத்திலும் மண்ணியாற்றில் நடுவில் உள்ள திட்டிலும், மறைவான இடங்களிலும் விரும்

பிப் புற்களை மேயும் பசுமாடுகளோடு கூட விரைவில் அவர் அடைந்து, பாலைத் தங்களுடைய மடிகளிலிருந்து சுரக்கும் பசுமாடுகள் ஒன்றுக்கு ஒன்று பின்பாக அவருக்கு எதிரில் நடந்து போக அந்தப் பசுமாடுகளும் கனைத்துக் கொண்டு தங்களுடைய முலைகளைத் தொட்ட மாத்திரத்தில் செழுமையான இனிய சுவையைப் பெற்ற பாலைச் சுரந்தன.' பாடல் வருமாறு:

"நல்ல நவகும் பங்கள்பெற
நாடிக் கொண்டு நாணற்பூங்
கொல்லை யிடத்தும் குறைமறைவும்
மேவும் கோக்கள் உடன்கூட
ஒல்லை அணைந்து பாலாக்கள்
ஒன்றுக் கொருகா லாகஎதிர்
செல்ல அவையும் கனைத்துமுலை
தீண்டச் செழும்பால் பொழிந்தனவால்."

நல்ல-நல்லவையாக உள்ள. நவ-புதிய. கும்பங்கள்—குடங்களை. பெற-பெறுவதற்காக. நாடி-அவற்றைத் தேடிச் சென்று. க்:சந்தி. கொண்டு-அவற்றை விசாரசருமர் தம்முடைய கைகளில் எடுத்துக் கொண்டுவந்து. நாணல்—நாணற் செடிகளில் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். பூம்—மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். கொல்லையிடத்தும்—முல்லை நிலமாகிய காட்டின் இடத்திலும். குறை-மண்ணியாற்றில் நடுவில் உள்ள திட்டிலும். மறைவும்-மறைவாக உள்ள இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். மேவும்—விரும்பிப் புற்களை மேய்ந்து கொண்டிருக்கும். கோக்கள் உடன்கூட-பசுமாடுகளோடு கூடவே. ஒல்லை-விரைவில். அணைந்து- புல் வெளியை அடைந்து. பால்-தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து இனிய சுவையைப் பெற்ற பாலைத்தரும். ஆக்கள்-பசுமாடுகள். ஒன்றுக்கு ஒருகாலாக—ஒன்றுக்கு ஒன்று பின்பாக. எதிர்-அந்த விசார சருமருக்கு எதிரில். செல்ல-நடந்து போக. அவையும்-அந்தப் பசுமாடு

களும். கனைத்து-கனைத்துக் கொண்டு. முலை-தங்களுடைய முலைகளை; ஒருமை பன்மை மயக்கம். தீண்ட-தொட்ட அளவிலேயே. ச்:சந்தி. செழும்-செழுமையாகிய இனிய சுவையைப் பெற்ற. பால்-பாலை. பொழிந்தன-சொரிந்தன. ஆல்: ஈற்றசை நிலை.

அடுத்து வரும் 35-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தப் பசுமாடுகள் பொழிந்த பாலை விசார சருமர் எடுத்துக் கொண்டு வந்து தாம் கொண்டு வந்திருந்த குடங்களில் நிரம்புமாறு ஊற்றி அந்தக் குடங்களை அவர் கொண்டு வந்து தாம் விழையும் எண்ணத்தின்படி எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகிய சிவபெருமானுக்குத் தாம் வெண்மையான மணல்களால் கட்டியிருந்த திருக்கோயிலுக்குள் அந்தக் குடங்களைச் சிவலிங்கத்துக்கு முன்னால்வைத்து விட்டு வண்டுகள் வந்து மொய்க்கும் திருப்பள்ளித் தாமத்துக்கு உரிய மலர்களைச் செடிகளிலிருந்தும் கொடிகளிலிருந்தும் மரங்களிலிருந்தும் பறித்து அவற்றைத் தம்முடைய கைகளில் எடுத்துக் கொண்டு வந்து வரன்முறைப் படியே முன்பு இருந்த பக்தியோடு தாம் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்கு அருச்சனையைப் புரிந்தருளித் தாம் குடங்களிற் கொண்டு வந்திருந்த பாலினால் அபிடேகம் செய்தருளி.' பாடல் வருமாறு:

"கொண்டு மடுத்த குடம்நிறையக்
கொணர்ந்து விரும்பும் கொள்கையினால்
அண்டர் பெருமான் வெண்மணல்ஆ
லயத்துள் அவைமுன் தாபித்து
வண்டு மருவும் திருப்பள்ளித்
தாமம் கொண்டு வரன்முறையே
பண்டைப் பரிவால் அருச்சித்துப்
பாலின் திருமஞ் சனம்ஆட்டி."

இந்தப் பாடல் குளகம். கொண்டு-அந்தப் பசு மாடுகள் பொழிந்த பாலை விசார சருமர் எடுத்துக் கொண்டு வந்து.

மடுத்த-தாம் கொண்டு வந்திருந்த. குடம்-குடங்களில்; ஒருமை பன்மை மயக்கம். நிறைய-நிரம்புமாறு ஊற்றி. க்:சந்தி. கொணர்ந்து-அந்தக் குடங்களை அவர் எடுத்துக் கொண்டு வந்து. விரும்பும்-தாம் விழையும். கொள்கையி னால்-எண்ணத்தின்படி; உருபு மயக்கம். அண்டர்-தேவர்க ளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பெருமான்-தலைவ னாகிய சிவபெருமானுக்கு. வெண்-வெண்மையாகிய. மணல்-மணல்களால் தாம் கட்டியிருந்த; ஒருமை பன்மை மயக்கம். ஆலயத்துள்-திருக்கோயிலுக்குள். அவை-அந்தக் குடங்களை. முன்-தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்கு முன்னால். தாபித்து-வைத்து விட்டு. வண்டு-வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். மருவும்-பறந்து வந்து மொய்க்கும். திருப் பள்ளித்தாமம்-திருப்பள்ளி எழுச்சியின் போது சாத்தும் மாலைகளுக்கு உரிய. தாமம்: ஒருமை பன்மை மயக்கம். கொண்டு-செடிகளிலிருந்தும், கொடிகளிலிருந்தும், மரங்களிலிருந்தும் பறித்து அவற்றைத் தம்முடைய கைகளில் எடுத்துக் கொண்டு வந்து செடிகளில் மலர்ந்த மலர்களாவன: நந்தியா வட்டை மலர்கள், தும்பை மலர்கள் முதலியவை, கொடிகளில் மலர்ந்த மலர்களாவன: மல்லிகை மலர்கள், முல்லை மலர்கள் இருவாட்சி மலர்கள் முதலியவை. மரங்களில் மலர்ந்த மலர்களாவன: வாகை மலர்கள், வேங்கை மலர்கள், கடம்ப மலர்கள், மகிழ மலர் கள், பவள மல்லிகை மலர்கள், வில்வ மலர்கள், நுணா மலர்கள் முதலியவை. வரன் முறையே-பழங்காலத்திலிருந்து வரும் முறைப்படியே. பண்டை-முன்பு இருந்த. ப்:சந்தி. பரிவால்-பக்தியோடு; உருபு மயக்கம். அருச்சித்து-தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமா னுக்கு அருச்சனையைப் புரிந்தருளி. ப்:சந்தி. பாலின்-தாம் குடங்களில் கொண்டு வந்திருந்த பாலினால். திருமஞ்சனம் ஆட்டி-அபிடேகம் செய்தருளி.

பிறகு வரும் 36-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மறுபடியும் மறுபடியும் இவ்வாறு வெண்மையான பாலைச் சொரிந்து தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்தருளத் தம்மை ஆளாகக் கொள்ள உடையவராகிய நடராஜப் பெருமானாருடைய பக்தராகிய அந்த விசார சருமர் பக்தியினிடம் இருப்பதாகித் தம்முடைய திருவுள்ளத்தில் மூளுமாறு அமைந்த இனிமையான பக்தி முதிர்ச்சியை அடைந்த பற்றுக் கோடு முழுவதும் சேர்ந்திருந்த உருண்டை வடிவமாகிய அந்தச் சிவலிங்கப் பெருமானிடத்தில் தம்முடைய திருவுள்ளத்தில் நிரம்பி எண்ணிய பூசையை மேற் கொள்கிற வரானார்.' பாடல் வருமாறு:

"மீள மீள இவ்வண்ணம்
வெண்பால் சொரிமஞ் சனம்ஆட்ட
ஆள உடையார் தம்முடைய
அன்பர் அன்பின் பாலுளதாய்
மூள அமர்ந்த நயப்பாடு
முதிர்ந்த பற்று முற்றச்சூழ்
கோளம் அதனில் உள்நிறைந்து
குறித்த பூசை கொள்கின்றார்."

மீள-மறுபடியும். மீள-மறுபடியும். இவ்வண்ணம்-இவ்வாறு. வெண்-வெண்மையாகிய. பால்-பாலை. சொரி-சொரிந்து. மஞ்சனம் ஆட்ட-தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்கு அபிடேகம் செய்தருள. ஆள-தம்மை ஆளாகக் கொள்ள. உடையார் தம்முடைய-உடையவராகிய நடராஜப் பெருமானாருடைய. தம்: அசை நிலை. அன்பர்-பக்தராகிய அந்த விசார சருமர். அன்பில் பால்-கொண்ட பக்தியினிடம். உளதாய்-இருப்பதாகி; இடைக்குறை. மூள-மேலும் மேலும் மூண்டு வருமாறு. அமர்ந்த-தங்கியிருந்த. நயப்பாடு-இனிமையான புத்தி.

முதிர்ந்த-முதிர்ச்சியை அடைந்த. பற்று-டற்றுக் கோடு. முற்ற-முழுவதும். ச்:சந்தி. சூழ்-சேர்ந்திருந்த. கோளம் அதனில் - உருண்டை வடிவமாகிய அந்தச் சிவலிங்கப் பெருமானிடத்தில். உள்-தம்முடைய திருவுள்ளத்தில். நிறைந்து-நிரம்பி. குறித்த-தாம் எண்ணிய. பூசை-பூசையை. கொள்கின்றார்-மேற்கொள்கிறவரானார்.

பிறகு உள்ள 37-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பீடு விளங்கும் அந்தச் சேய்ஞலூரில் திருவவதாரம் செய்தருளிய சிறுவராகிய விசாரசருமர் தம்முடைய திருவுள்ளத்தில் இருந்த ஒருமைப்பாடு உள்ள எண்ணத்தினால் எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகிய நடராஜப் பெருமான் மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும் பூசையினுடைய அங்கங்களாக உள்ள அபிடேகத்துக்குரிய பசுமாட்டின் பால், மண்ணியாற்றின் நீர், தேன், தயிர், நெய், மஞ்சள் நீர் முதலியவற்றில் தாம் தேட முடியாதவற்றைத் தம்முடைய திருவுள்ளத்தில் இருந்த பக்தியினால் நிரம்பும் வண்ணம் புரிந்தருளி வரும் அந்த வழியிலேயே அந்தச் சிவலிங்கப் பெருமானுக்கு அருச்சனையை அவர் புரிந்தருளி அந்தப் பெருமானைப் பணிந்து மகிழ்ச்சியை அடைகிறவரானார்.' பாடல் வருமாறு:

'' பெருமை பிறங்கும் சேய்ஞலூர்ப்
பிள்ளை யார்தம் உள்ளத்தில்
ஒருமை நினைவால் உம்பர்பிரான்
உவக்கும் பூசை உறுப்பான
திருமஞ் சனமே முதலவற்றில்
தேடா தனஅன் பினில்நிரப்பி
வரும்அந் நெறியே அர்ச்சனைசெய்
தருளி வணங்கி மகிழ்கின்றார்.''

பெருமை-பீடு. பிறங்கும்-விளங்கும். சேய்ஞலூர்-அந்தச் சேய்ஞலூரில் திருவவதாரம் செய்தருளிய. ப்:சந்தி. பிள்ளையார்-சிறுவராகிய விசார சருமர். தம்-தம்முடைய. உள்ளத்

தில்-திருவுள்ளத்தில் இருந்த. ஒருமை-ஒருமைப்பாடு உள்ள. நினைவால்-எண்ணத்தினால். உம்பர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரான்-தலைவனாகிய நடராஜப் பெருமான். உவக்கும்-மகிழ்ந்து ஏற்றுக் கொள்ளும். பூசை-பூசையினுடைய. உறுப்புஆன-அங்கங்களாக உள்ள. உறுப்பு: ஒருமை பன்மை மயக்கம். திருமஞ்சனம்-அபிடேகத்துக்குரிய பசுமாட்டின் பால், மண்ணியாற்றின் நீர், தேன், தயிர், நெய், மஞ்சள் நீர் முதலியவற்றில்; ஒருமை பன்மை மயக்கம். ஏ:அசை நிலை. முதலவற்றில்-முதலியவற்றில். தேடாதன-தாம் தேட முடியாதவற்றை. அன்பினில்-பக்தியினால்; உருபு மயக்கம். நிரப்பி-பாவனையாக நிரம்பும் வண்ணம் புரிந்தருளி. வரும்-தாம் புரிந்து வரும். அந்நெறியே-அந்த வழியிலேயே. அர்ச்சனை செய்தருளி-தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த அந்தச் சிவலிங்கப் பெருமானுக்கு அருச்சனையை அவர் புரிந்தருளி. வணங்கி-அந்தப் பெருமானைப் பணிந்து. மகிழ்கின்றார்-மகிழ்ச்சியை அடைகிறவரானார்.

பிறகு உள்ள 38-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'இறைவனாகிய அந்தச் சிவலிங்கப் பெருமானுடைய திருவடிகளின் கீழ் வேதியச் சிறுவராகிய அந்த விசாரசருமர் தம்முடைய கைகளில் எடுத்துக்கொண்டு அபிடேகம் புரிந்தருளும் எல்லாப் பண்டங்களும் நிரம்பியுள்ள பூசைக்கு குடங்களில் நிரப்பிய பாலை மிகுதியாகத் தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து பெருகிவருமாறு பொழிந்து பசுமாடுகளினுடைய வரிசையாக இருந்த கூட்டங்கள் ஒரு குறைவு படுதலும் இல்லாமல் தங்களுடைய மடிகளிலிருந்து பெருகுமாறு மிகுதியாக அமைந்த தங்களுடைய முலைகளிலிருந்து சுரக்கும் இனிய சுவையைப் பெற்ற பாலை ஒரு குறைவும் இல்லாமல் சேய்ஞலூரில் வாழ்ந்திருக்கும் வேதியர்கள் தங்கியிருக்கும் திரு மாளிகைகளினுடைய முன்னால் விசாரசருமர் கொண்டு போய் வழங்கும் வளங்கள் விளங்குமாறு அந்தப் பசுமாடுகள் தங்கியிருக்கும்.' பாடல் வருமாறு:

"இறையோன் அடிக்கீழ் மறையவனார்
எடுத்துத் திருமஞ் சனம்ஆட்டும்
நிறைபூ சனைக்குக் குடங்கள்பால்
நிரம்பச் சொரிந்து நிரைக்குலங்கள்
குறைபா டின்றிமடி பெருக்கக்
குவிந்த முலைப்பால் குறைவின்றி
மறையோர் மனையின் முன்புதரும்
வளங்கள் பொலிய வைகுமால்."

இறையோன்-இறைவனாகிய அந்தச் சிவலிங்கப் பெருமானுடைய. அடிக்கீழ்-திருவடிகளின் கீழே; ஒருமை பன்மை மயக்கம். மறையவனார்-வேதியச் சிறுவராகிய அந்த விசாரசருமர். எடுத்து-தம்முடைய திருக்கரங்களில் எடுத்துக் கொண்டு. த்:சந்தி. திருமஞ்சனம் ஆட்டும்-அபிடேகம் புரிந்தருளும். நிறை-எல்லாப் பண்டங்களும் நிரப்பியுள்ள அவையாவன; பசுமாடுகளின் பால், மண்ணியாற்றின் நீர், தேன், தயிர், நெய், மஞ்சள் நீர், மலர்கள் முதலியவை. பூசனைக்கு-தாம் புரியும் பூசைக்கு. க்:சந்தி. குடங்கள்-குடங்களில் தாம் நிரப்பிய. பால்-இனிய சுவையைப் பெற்ற பாலை. நிரம்ப-மிகுதியாக. ச்:சந்தி. சொரிந்து-தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து பொழிந்து. நிரை-பசுமாடுகள் வரிசையாக இருந்த. க்:சந்தி. குலங்கள்-கூட்டங்கள். குறைபாடு- குறைவுபடுதல். இன்றி-இல்லாமல். மடி-தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து; இடஆகு பெயர். பெருக்க-பெருகி வருமாறு. க்:சந்தி. குவிந்த-மிகுதியாக அமைந்த. முலை-தங்களுடைய முலைகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். ப்:சந்தி பால்-சுரக்கும் இனிய சுவையைப் பெற்ற பாலை. குறைவு-ஒரு குறைவும். இன்றி-இல்லாமல். மறையோர்-சேய்ஞலூரில் வாழ்ந்து வரும் வேதியர்கள் தங்கியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மனையின்-திருமாளிகைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். முன்பு-முன்னால். தரும்-விசாரசருமர் கொண்டுபோய் வழங்கும்.

வளங்கள்-பலவகை வளங்கள். அவையாவன: நீர் வளம், நில வளம், செல்வ வளம், நன்மக்கள் வளம் முதலியவை. பொலிய-விளங்குமாறு. வைகும்-அந்தப் பசுமாடுகள் தங்கி யிருக்கும். ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 39-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தாம் புரியும் செய்கை இந்த வண்ணமே பல தினங் களிலும் சிறப்பாக அமைந்த பூசையைப் புரிவதற்கு முயற்சி யைச் செய்து வந்து அந்தப் பூசையே ஒரு திருவிளையாட லாக அமைய மூன்று புரிகளைப் பெற்ற பூணூலை அணிந் திருந்த மார்பைப் பெற்றவராகிய அந்த விசாரசருமர் தமக்கு உரிய இயற்கையாகிய பண்போடு அந்த மணல்களைக் குவித் துத் தாம் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் புரிந் தருளிய இந்தப் பூசையைப் பார்த்து விட்டு இந்தப் பக்தியின் வகையைத் தெரிந்து கொள்ளாத அயலானாகிய வேறு ஒரு மனிதன் அந்தச் சிவத்தலமாகிய சேய்ஞலூரில் வாழ்ந்து வரும் வேதியர்களிடம் விசாரசருமர் புரிந்தருளும் பூசை யைப் பற்றித் தெரிவித்தான்.' பாடல் வருமாறு:

"செயல்இப் படியே பலநாளும்
சிறந்த பூசை செய்வதற்கு
முயல்வுற் றதுவே திருவிளையாட்
டாக முந்நூல் அணிமார்பர்
இயல்பில் புரியும் மற்றிதனைக்
கண்டித் திறத்தை அறியாத
அயல்மற் றொருவன் அப்பதியில்
அந்த ணாளர்க் கறிவித்தான்.''

செயல்-தாம் புரிந்துவரும் செய்கை. இப்படியே-இந்த வண்ணமாகவே. பல நாளும்-பல தினங்களிலும். நாள்: ஒருமை பன்மை மயக்கம். சிறந்த-சிறப்பாக அமைந்த. பூசை-தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் பூசையை. செய்வதற்கு-புரிவதற்கு. முயல் வுற்று-முயற்சியைச் செய்து. அதுவே-அந்தப் பூசையே.

திருவிளையாட்டாக-ஒரு திருவிளையாடலாக அமைய. முந்நூல்-மூன்று புரிகளைப் பெற்ற பூணூலை. அணி-அணிந்திருந்த. மார்பர்-திருமார்பைப் பெற்றவராகிய அந்த விசாரசருமர். இயல்பில்-தமக்கு உரிய இயற்கையாகிய பண்போடு; உருபு மயக்கம். புரியும்-செய்தருளும். மற்று: அசைநிலை. இதனை-அந்த மணல்களைக் குவித்துத் தாபித் திருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் புரிந்தருளிய இந்தப் பூசை யை. க்:சந்தி. கண்டு-பார்த்துவிட்டு. இத் திறத்தை-இந்தப் பக்தியின் வகையை. அறியாத-தெரிந்துகொள்ளாத. அயல்-அயலானாகிய; திணை மயக்கம். மற்ற ஒருவன்-வேறு ஒரு மனிதன். மற்றொருவன்: தொகுத்தல்விகாரம். அப்பதியில்-அந்தச் சிவத்தலமாகிய சேய்ஞலூரில் வாழ்ந்துவரும். அந்த ணாளர்க்கு-வேதியர்களுக்கு. அறிவித்தான் - விசாரசருமர் புரிந்தருளும் பூசையைப் பற்றித் தெரியப்படுத்தினான்.

பிறகு உள்ள 40-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த மனிதன் கூறிய அந்த வார்த்தைகளைக் கேட்ட வர்களும் பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர் வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவர்களும், அந்தச் சேய்ஞலூரில் வாழ்ந்து வருகிறவர்களும் ஆகிய வேதி யர்கள், "அந்தப் பசுமாடுகளை மேய்க்கும் இடையன் தெரி யாதவன் என்று எண்ணி அந்தப் பசுமாடுகளினுடைய விருப் பத்தின்படியே நான் அவற்றைப் புல்வெளியில் மேயுமாறு விடுவேன் என்றுகூறி எங்களுடைய பசுமாடுகளினுடைய மடி களில் இருக்கும் முலைகளிலிருந்து பாலைக் கறந்து பொய் யாக நடந்துவரும் பிரமசாரியாகிய இந்த விசாரசருமனு டைய பொல்லாத செயலைக்கூற அந்த விசாரசருமனுடைய தந்தையாகிய எச்சதத்தனை இங்கே அழைத்துக்கொண்டு வாருங்கள்." என்று அந்தச் சேய்ஞலூரில் உள்ள நியாய சபையில் அமர்ந்திருந்த வேதியர்கள் கூறினார்கள்.' பாடல்

வருமாறு:

" அச்சொற் கேட்ட அருமறையோர்
'ஆயன் அறியான் என்றவற்றின்
இச்சை வழியே யான்மேய்ப்பேன்
என்றெம் பசுக்கள் தமைக்கறந்து
பொச்சம் ஒழுகும் மாணவகன்
பொல்லாங் குரைக்க அவன்தாதை
எச்ச தத்தன் தனையழைமின்'
என்றார் அவையில் இருந்தார்கள்."

அச்சொல்-அயலானாகிய அந்த மனிதன் கூறிய அந்த வார்த்தைகளை. சொல்: ஒருமை பன்மை மயக்கம். கேட்ட-கேள்விப்பட்ட. அரு-பொருள் தெரிந்து கொள்வதற்கு அருமையாக உள்ள. மறையோர்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறை வேற்றியவர்களும், அந்தச் சேய்ஞலூரில் வாழ்ந்து வருகிற வர்களும் ஆகிய. மறையோர்-வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆயன்- அந்தப் பசுமாடுகளை மேய்த்துவரும் இடையன். அறியான்-அவற்றை மேய்க்கத் தெரியாதவன், என்று-என்று கூறிவிட்டு. அவற்றின்-அந்தப் பசுமாடுகளி னுடைய. இச்சைவழியே-விருப்பத்தின் படியே. யான்-நான். மேய்ப்பேன்-நான் அந்தப்பசுமாடுகளைப்புல்வெளியில் அழைத் துக் கொண்டு சென்று மேயுமாறு விடுவேன். என்று-என்று கூறி விட்டு. எம்-எங்களுடைய. பசுக்கள்தமைக் கறந்து-பசு மாடுகளினுடைய மடிகளில் இருக்கும் முலைகளிலிருந்து பாலைக் கறந்து; ஆகுபெயர். தமை:இடைக்குறை. தம்:அசை நிலை. பொச்சம்-பொய்யாக. ஒழுகும்-நடந்து வரும். மாண வகன்-பிரமசாரியாகிய இந்த விசார சருமனுடைய. பொல் லாங்கு-பொல்லாத செயலைப்பற்றி. உரைக்க-எடுத்துக் கூறு வதற்கு. அவன்-அந்த விசாரசருமனுடைய. தாதை-தந்தை யாகிய. எச்சதத்தன் தனை-எச்சதத்தனை. தனை: இடைக்

குறை. தன்: அசை நிலை. அழைமின்-இங்கே அழைத்துக் கொண்டுவாருங்கள். அவையில்-அந்தச் சேய்ஞலூரில் உள்ள நியாயசபையில். இருந்தார்கள்-அமர்ந்திருந்த வேதியர்கள். என்றார்-என்று கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 41-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த நியாயசபையினுடைய பக்கத்தில் நின்று கொண்டிருந்த மக்கள் அந்த வேதியனாகிய எச்சதத்தன் வாழ்ந்திருக்கும் அழகிய திருமாளிகையினுடைய பக்கத்திற்குப் போய் அந்த எச்சதத்தனைத் தங்களோடு கூட்டிக் கொண்டு வரப் புகழ் பரவி அமைந்த உயர்ச்சியைப் பெற்ற அந்த நியாய சபையில் அமர்ந்திருக்கும் வேதியர்கள் அந்த எச்சதத்தனை நோக்கி, "இந்தச் சேய்ஞலூரில் உள்ள பசுமாடுகளினுடைய வரிசையைப் புல்வெளியில் முளைத்திருக்கும் புற்களை மேயுமாறு செய்து உன்னுடைய புதல்வனாகிய விசார சருமன் புரியும் தீய செயலை நீ கேட்பாயாக.'' என்று நடந்த செயலைக் கூறுபவர்களானார்கள்.' பாடல் வருமாறு:

"ஆங்கு மருங்கு நின்றார்கள்
அவ்வந் தணன்தன் திருமனையின்
பாங்கு சென்று மற்றவனை
அழைத்துக் கொண்டு வரப்பரந்த
ஓங்கு சபையோர் அவனைப்பார்த்
'தூரான் நிரைமேய்த் துன்மகன்செய்
தீங்கு தன்னைக் கேள்' என்று
புகுந்த பரிசு செப்புவார்.''

ஆங்கு-அந்த நியாய சபையினுடைய. மருங்கு-பக்கத்தில். நின்றார்கள்-நின்று கொண்டிருந்த மக்கள். அவ்வந்தணன் தன்-அந்த வேதியனாகிய எச்சதத்தன் வாழ்ந்து வரும். திரு-அழகிய. மனையின்-திருமாளிகையினுடைய. பாங்கு-பக்கத்திற்கு. சென்று-போய். மற்று: அசை நிலை. அவனை-அந்த எச்சதத்தனை. அழைத்துக் கொண்டு-கூட்டிக் கொண்டு. வர-அந்த நியாய சபைக்கு வர. ட்: சந்தி. பரந்த-பரவலாக.

அமைந்த. ஓங்கு-உயர்ச்சியைப் பெற்று விளங்கும். சபையோர்-அந்த நியாய சபையில் அமர்ந்திருக்கும் வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவனை-அந்த எச்சதத்தனை. ப்:சந்தி. பார்த்து-நோக்கி. ஊர்-இந்தச் சேய்ஞலூரில் உள்ள. ஆன்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசையை. மேய்த்து-புல்வெளிக்கு அழைத்துக் கொண்டு சென்று அங்கே முளைத்திருக்கும் புற்களை மேயுமாறுசெய்து. உன்-உன்னுடைய. மகன்-புதல்வனாகிய விசார சருமன். செய்-புரியும். தீங்குதன்னை-தீய செயலை. தன்:அசைநிலை. க்:சந்தி. கேள்-நீ கேட்பாயாக. என்று-என. புகுந்த-நடந்த. பரிசு-செயலை செப்புவார்-கூறுபவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 42-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சேய்ஞலூரில் உள்ள நியாய சபையில் அமர்ந்திருக்கும் அழகிய குளிர்ச்சியைப் பெற்ற பார்வைகளைக் கொண்ட வேதியர்கள் ''வேள்வித் தீயில் சொரியும் ஆகுதிகளுக்காகத் தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து இனிய சுவையைப் பெற்ற பாலைக் கறக்குமாறு புரியும் பசுமாடுகள் ஆக உள்ளவை யாவும் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து அன்போடு கூட்டமாக இருக்க அந்தப் பசுமாடுகளை அழைத்துக் கொண்டு சென்று அவற்றைப்புல்வெளியில் முளைத்திருக்கும் புற்களை மேய்ப்பவனைப் போல இந்த விசார சருமன் நறுமணம் மித்தியாக வீசும் பலவகை மலர்கள் மிதந்து வரும் நீர் ஓடும் மண்ணியாற்றங் கரையில் உள்ள மணல்களில் அந்தப் பசுமாடுகளினுடைய மடிகளில் இருக்கும் முலைகளிலிருந்து பாலைக் கறந்து கொண்டு அந்தப் பாலைத் தரையில் சிந்தித் தாம் மகிழ்ச்சியை அடைந்த வகையிலேயே அந்த விசார சருமன் புரிகின்றான் என்று அந்த மனிதன் கூறினான்'' என அந்த வேதியர்கள் உண்மையைக் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

'' அந்தண் மறையோர் 'ஆகுதிக்குக்
கறக்கும் பசுக்க ளானவெலாம்
சிந்தை மகிழ்ந்து பரிவினால்
திரளக் கொடுபோய் மேய்ப்பான்போல்
கந்தம் மலிபூம் புனல்மண்ணி
மணலிற் கறந்து பாலுகுத்து
வந்த பரிசே செய்கின்றான்
என்றான்' என்று வாய்மொழிந்தார்.''

அம்-சேய்ஞலூரில் உள்ள நியாய சபையில் அமர்ந்திருக்கும் அழகிய. தண்-குளிர்ச்சியைப் பெற்ற பார்வைகளைக் கொண்ட; வினையாலணையும் பெயர். மறையோர்-வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆகுதிக்கு-தாங்கள் புரியும் வேள்வித் தீயில் சொரியும் ஆகுதிகளுக்காக; ஒருமை பன்மை மயக்கம். க்:சந்தி. கறக்கும்-தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து இனிய சுவையைப் பெற்ற பாலைக் கறக்குமாறு புரியும். பசுக்களான-பசுமாடுகளாக உள்ளவை. எலாம்-எல்லாம்; இடைக்குறை. சிந்தை-தம்முடைய உள்ளத்தில். மகிழ்ந்து-மகிழ்ச்சியை அடைந்து. பரிவினால்-அன்போடு; உருபு மயக்கம். திரள-கூட்டமாக இருக்க. க்:சந்தி. கொடு-அந்தப் பசு மாடுகளை அழைத்துக் கொண்டு. போய்-சென்று. மேய்ப்பான் போல்-அவற்றைப் புல்வெளியில் முளைத்திருக்கும் புற்களை மேயச் செய்பவனைப் போல. கந்தம்-நறுமணம். மலி-மிகுதியாக வீசும். பூம்-மலர்கள் மிதந்து வரும். அந்த மலர்களாவன: செந்தாமரை மலர்கள், வெண்டாமரை மலர்கள், அல்லி மலர்கள், ஆம்பல் மலர்கள், நீலோற்பல மலர்கள், குமுத மலர்கள், மகிழ மலர்கள், வேப்ப மலர்கள், பூவரச மலர்கள், தாழம் பூக்கள், வேங்கை மலர்கள், வாகை மலர்கள், கடம்ப மலர்கள், ஞாழல் மலர்கள், வில்வ மர மலர்கள், மா மரத்தின் மலர்கள், பவள மல்லிகை மலர்கள், முல்லை மலர்கள், இருவாட்சி மலர்கள், வெள்ளைச் செவ்வந்தி மலர்கள், மஞ்சட் செவ்

வந்தி மலர்கள், கொய்யா மலர்கள் முதலியவை. புனல்-நீர் ஓடும். மண்ணி-மண்ணியாற்றின் கரையில் உள்ள; இட ஆகு பெயர். மணலில்-மணல்களில்; ஒருமை பன்மை மயக்கம். கறந்து-அந்தப் பசு மாடுகளினுடைய மடிகளில் இருக்கும் முலைகளிலிருந்து பாலைக் கறந்து கொண்டு. பால்-அந்தப் பாலை. உகுத்து-தரையில் சிந்தி. உவந்த-தாம் மகிழ்ச்சியை அடைந்த. பரிசே-வகையிலேயே. செய்கின்றான்-அந்த விசார சருமன் புரிகின்றான். என்றான்-என்று அந்த மனிதன் கூறினான். என்று-என. வாய்-உண்மையை. மொழிந்தார்-அந்த நியாய சபையில் அமர்ந்திருந்த வேதியர்கள் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 43-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்தச் சேய்ஞலூரில் உள்ள நியாய சபையில் அமர்ந்து இருக்கும் வேதியர்கள் இவ்வாறு கூற அதனைக் கேட்டு அச்சத்தை அடைந்து, ''சிறிய பிரமசாரியும் என்னுடைய புதல்வனும் ஆகிய விசார சருமன் புரிந்த இந்த அடாத காரியத்தைச் சிறிதளவும் அடியேன் முன்பு தெரிந்து கொள்ள வில்லை; இதற்கு முன்பு நடந்ததை நிறைந்து விளங்கும் பெருமையைப் பெற்ற வேதியர்களே, தாங்கள் யாவரும் இந்த அடாத செயலைப் பொறுத்தருள வேண்டும்'' என்று அந்த எச்சதத்தன் கூறிவிட்டு தன்னுடைய உள்ளத்தில் அந்த மானக் குறைவாக உள்ள செயலை நினைத்துக் கொண்டு அந்த வேதியர்களை வணங்கி, ''இனிமேல் இத்தகைய அடாத செயல் நடந்தால் அதனால் உண்டாகும் குற்றம் அடியேனுடையதே ஆகும்'' என்று அந்த எச்சதத்தன் கூறினான்.' பாடல் வருமாறு:

"மறையோர் மொழியக் கேட்டஞ்சிச்,
'சிறுமா ணவகன் செய்தஇது
இறையும் நான்முன் பறிந்திலேன்;
இதற்கு முன்பு புகுந்ததனை

நிறையும் பெருமை அந்தணர்காள்,
பொறுக்க வேண்டும் நீங்கள்' எனக்
குறைகொண் டிறைஞ்சி, 'இனிப்புகுதிற்
குற்றம் எனதே யாம்' என்றான்.''

மறையோர்-அந்தச் சேய்ஞலூரில் உள்ள நியாயசபையில் அமர்ந்து கொண்டிருக்கும் வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மொழிய-இவ்வாறு கூற. க்:சந்தி. கேட்டு-அதைக் கேட்டு. அஞ்சி-எச்சதத்தன் அச்சத்தை அடைந்து. ச்:சந்தி. சிறு-சிறிய. மாணவகன் - பிரமசாரியும் அடியேனுடைய புதல்வனும் ஆகிய விசார சருமன். செய்த-புரிந்த. இது- இந்த அடாத காரியத்தை. இறையும்-சிறிதளவேனும். நான்-அடியேன். முன்பு-இதற்கு முன்னால். அறிந்திலேன்-தெரிந்து கொள்ளவில்லை. இதற்கு-இப்படி அவன் செய்த இந்தக் காரியத்திற்கு. முன்பு-முன்னால். புகுந்ததனை-நடந்த செயலை. நிறையும்-நிறைந்து விளங்கும். பெருமை-பெருந்தகைமையைப் பெற்ற. அந்தணர்காள்-வேதியர்களே. பொறுக்க வேண்டும் நீங்கள்-இந்த அடாத செயலைத் தாங்கள் எல்லோரும் பொறுத்தருள வேண்டும். என-என்று அந்த எச்சதத்தன் கூறிவிட்டு. க்:சந்தி. குறை-அந்த மானக் குறைவாக உள்ள செயலை. கொண்டு-நினைத்துக்கொண்டு. இறைஞ்சி-அந்த வேதியர்களை வணங்கிவிட்டு. இனி-இனிமேல். ப்:சந்தி. புகுதின்-இத்தகைய அடாத செயல் நடந்தால். குற்றம்-அதனால் உண்டாகும் குற்றம். எனதே-அடியேனுடையதே; இடைக்குறை. ஆம்-ஆகும். என்றான்-என்று அந்த எச்சதத்தன் கூறினான்.

பிறகு உள்ள 44-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தச் சேய்ஞலூரில் உள்ள நியாய சபையில் அமர்ந்து கொண்டிருக்கும் வேதியர்களிடம் அந்த எச்சதத்தன் விடையைப் பெற்றுக்கொண்டு மாலையில் சந்தியா வந்தனத்தைப் புரிந்துவிட்டு நடராஜப் பெருமானாரை வணங்கிப் பிறகு தன்னுடைய திருமாளிகைக்குள் நுழைந்து, ''நமக்கு உண்

டான பழி ஒன்று'' என்று எண்ணிக்கொண்டே தன்னுடைய புதல்வராகிய விசாரசருமருக்கு உண்மையைக் கூறாதவனாகி, ''இந்த அடாத செயலை என்னுடைய புதல்வனாகிய விசார சருமன் செய்யும் நிலையைத் தெரிந்து கொள்ளுவேன்'' என எண்ணி அன்று இரவு நேரம் கடந்து காலை வேளையில் பசுமாடுகளினுடைய வரிசையைப் புல் வெளியில் முளைத்திருக்கும் புற்களை மேயுமாறு புரியும் பொருட்டுத் தன்னுடைய புதல்வராகிய விசாரசருமர் சென்ற பிறகு மறைந்துகொண்டு அந்த முதிய வேதியனாகிய எச்சதத்தன் போனான்.' பாடல் வருமாறு:

'' அந்தணாளர் தமைவிடை கொண்
டந்தி தொழுது மனைபுகுந்து
'வந்த பழியொன் றெனநினைந்தே
மகனார் தமக்கு வாய்நேரான்
'இந்த நிலைமை அறிவேன்'என்
றிரவு கழிந்து நிரைமேய்க்க
மைந்த னார்தாம் போயினபின்
மறைந்து சென்றான் மறைமுதியோன்.''

அந்தணாளர்தமை-அந்தச் சேய்ஞலூரில் உள்ள நியாய சபையில் அமர்ந்து கொண்டிருக்கும் வேதியர்களிடம்; உருபு மயக்கம். தம்: அசை நிலை. விடைகொண்டு-விடையை எச்சதத்தன் பெற்றுக்கொண்டு. அந்தி-மாலை நேரத்தில். தொழுது-சந்தியா வந்தனத்தைச் செய்துவிட்டு நடராஜப் பெருமானாரை வணங்கிப் பிறகு. மனை-தன்னுடைய திரு மாளிகைக்குள். புகுந்து-நுழைந்து. வந்த-நமக்கு உண்டான. பழிஒன்று-ஒரு பழி. என-என்று; இடைக்குறை, நினைந்தே-எண்ணியபடியே. மகனார் தமக்கு-தன்னுடைய புதல்வராகிய விசார சருமருக்கு. தம்: அசைநிலை. வாய்-உண்மையை. நேரான்-கூறாதவனாகி; முற்றெச்சம். இந்த நிலைமை-இந்த அடாத செயலை என்னுடைய புதல்வனாகிய விசாரசருமன் செய்யும் நிலையை. அறிவேன்-

தெரிந்து கொள்ளுவேன். என்று-என எண்ணி. இரவு-அன்று இரவு நேரம். கழிந்து-கடந்து காலை வேளையில். நிரை-பசுமாடுகளினுடைய வரிசையை. மேய்க்க-புல்வெளியில் முளைத்திருக்கும் புற்களை மேயுமாறு புரியும் பொருட்டு. மைந்தனார் தாம்-தன்னுடைய புதல்வராகிய விசாரசருமர். போயின-அந்தப் புல்வெளிக்குச் சென்ற. பின்-பிறகு. மறைந்து-தன்னுடைய புதல்வருக்குத் தெரியாமல் மறைந்து கொண்டு. மறை முதியோன்-அந்த முதிய வேதியனாகிய எச்சதத்தன். சென்றான்-அந்தப் புல்வெளிக்குப் போனான்.

பிறகு வரும் 45-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு புல்வெளிக்குப் போன வேதியனாகிய அந்த எச்சதத்தன் தன்னுடைய அழகிய புதல்வராகிய விசாரசருமர் சிறப்புற்று விளங்கியவையும், சேய்ஞலூரில் வேதியர்களினுடைய திருமாளிகைகளில் இருக்கும் பசுமாடுகளினுடைய வரிசையை அழைத்துக்கொண்டு சென்று நறுமணம் பொருந்தி விளங்கும் முல்லை நிலமாகிய காட்டில் அந்தப் பசுமாடுகளைப் புல்வெளியில் முளைத்திருக்கும் பசும்புற்களை மேயச் செய்பவராகி மண்ணியாற்றின் நடுவில் மணல்கள் பரவியிருக்கும் திட்டில் அன்றைக்கு அந்தப் பசுமாடுகளைக் கூட்டமாகத் தம்மைப் பின்பற்றி வர அழைத்துக் கொண்டு போன அந்தச் செயலைத் தெரிந்து கொண்டு மறைந்து நின்று கொண்டு அந்தப் பக்கத்தில் வளர்ந்து நின்று இருந்த ஒரு குராமரத்தின் மேல் ஏறி நடப்பதைத் தான் தெரிந்து கொள்ளும் பொருட்டு மறைந்திருந்தான்.' பாடல் வருமாறு:

''சென்ற மறையோன் திருமகனார்
சிறந்த ஊர்ஆன் நிரைகொடுபோய்
மன்றல் மருவும் புறவின்கண்
மேய்ப்பார் மண்ணி மணற்குறையில்

அன்று திரளக் கொடுசென்ற
அதனை அறிந்து மறைந்தப்பால்
நின்ற குரவின் மிசையேறி
நிகழ்வ தறிய ஒளித்திருந்தான்.''

சென்ற-அவ்வாறு புல்வெளிக்குப் போன. மறையோன்-வேதியனாகிய அந்த எச்சதத்தன். திரு-தன்னுடைய அழகிய. மகனார்-புதல்வராகிய விசார சருமர். சிறந்த-சிறப்புற்று விளங்கியவையும்; வினையாலணையும் பெயர். ஊர்-சேய்ஞலூரில் வாழ்ந்து வரும் வேதியர்களினுடைய திருமாளிகைகளில் இருக்கும்; இடஆகு பெயர். ஆன்-பசுமாடுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிரை-வரிசையை. கொடு-தம்மோடு அழைத்துக் கொண்டு. போய்-சென்று. மன்றல்-நறுமணம். மருவும்-கமழ்ந்து விளங்கும். புறவின்கண்-முல்லை நிலமாகிய காட்டில். மேய்ப்பார்-அந்தப் பசுமாடுகளைப் புல்வெளியில் முளைத்திருக்கும் பசும்புற்களை மேயுமாறு புரிபவராகி; முற்றெச்சம். மண்ணி-மண்ணியாற்றின். மணற்குறையில்-நடுவில் மணல்கள் பரவியிருக்கும் திட்டில். மணல்: ஒருமை பன்மை மயக்கம். அன்று-அன்றைத் தினத்தில். திரள-பசுமாடுகளைக் கூட்டமாகத் தம்மைப் பின்பற்றி நடந்து வர. க்: சந்தி. கொடு-அழைத்துக் கொண்டு. சென்ற-போன. அதனை-அந்தச் செயலை. அறிந்து-தெரிந்து கொண்டு. மறைந்து-மறைந்து நின்று கொண்டு. அப்பால்-அந்தப் பக்கத்தில். நின்ற-வளர்ந்து நின்றிருந்த. குரவின் மிசை-ஒரு குரா மரத்தின் மேல். ஏறி-ஏறி அமர்ந்து கொண்டு. நிகழ்வது-நடப்பதை. அறிய-தான் தெரிந்து கொள்ளும் பொருட்டு. ஒளித்திருந்தான்-அந்த எச்சதத்தன் மறைந்திருந்தான்.

பிறகு உள்ள 46-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பக்தியைக் கொண்டு விளங்கும் பிரமசாரிகளாகிய அந்த விசார சருமரும் மண்ணியாற்றில் ஓடும் நீரில் முழுகி விட்டு அரனாராகிய தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானாருக்கு முன் நாள்களில் தாம்

புரிந்ததைப் போல் மணல்களால் ஆலயத்தைக் கட்டி அரும்புகள் விரிந்த மென்மையான பலவகையான கொடிகளிலும், செடிகளிலும், மரங்களிலும் மலர்ந்திருந்த மலர்களைப் பறித்துக் கொண்டு வந்து தமக்குப் பின்னால் நடந்து வரும் பசுமாடுகள் தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து பொழியும் இனிய சுவையைப் பெற்ற பால் பெருக நிறைத்திருக்கும் குடங்களைப் பாதுகாப்பாக உள்ள ஓரிடத்திற்குக் கொண்டு வந்து வைத்து விட்டு பூசைக்கு வேண்டியிருப்பவைகளாகிய வேறு பொருள்களையும் அமைத்து வைத்துக் கொண்டார்.' பாடல் வருமாறு:

"அன்பு புரியும் பிரமசாரிகளும்
மூழ்கி அர னார்க்கு
முன்பு போல மணற்கோயில்ஆக்கி
முகை மென் மலர்கொய்து
பின்பு வரும்ஆன் முலைபொழிபால்
பெருகும் குடங்கள் பேணுமிடம்
தன்பாற் கொணர்ந்து தாபித்துப்
பிறவும் வேண்டு வனசமைத்தார்."

அன்பு-பக்தியை. புரியும்-பெற்று விளங்கும். பிரமசாரிகளும்-பிரமசாரிகளாகிய அந்த விசார சருமரும். மூழ்கி-மண்ணியாற்றில் ஓடும் நீரில் முழுகி விட்டு. அரனார்க்கு-தாம் மண்ணியாற்றங் கரையில் பரவியுள்ள மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த ஹரனாராகிய சிவலிங்கப் பெருமானாருக்கு. ஹரன்-சங்காரம் செய்தருளுபவன். முன்புபோல-முன் தினங்களில் தாம் புரிந்ததைப் போல. மணல்-மணல்களால்; ஒருமை பன்மை மயக்கம். கோயில்-ஆலயத்தை. ஆக்கி-கட்டி. முகை-அரும்புகள் மலர்ந்த; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையாகிய. மலர்-பல வகையான கொடிகளிலும், செடிகளிலும், மரங்களிலும் மலர்ந்திருந்த மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். கொடிகளில் மலர்ந்திருந்த மலர்களாவன: வெண்டாமரை மலர், செந்தாமரை மலர், ஆம்பல்

மலர், அல்லி மலர், குமுத மலர், நீலோற்பல மலர், முல்லை மலர், மல்லிகை மலர், இருவாட்சி மலர் முதலியவை. செடிகளில் மலர்ந்திருந்த மலர்களாவன: நந்தியா வட்டை மலர், அரளி மலர், தும்பை மலர் முதலியவை. மரங்களில் மலர்ந்திருந்த மலர்களாவன: பவள மல்லிகை மலர், கடம்ப மலர், சண்பக மலர் முதலியவை. கொய்து-பறித்துக் கொண்டு வந்து. பின்பு-தமக்குப் பின்னால். வரும்-நடந்து வரும். ஆன்-பசுமாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். முலை-தங்களுடைய மடிகளில் உள்ள முலைகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். பொழி-பொழியும். பால்-இனிய சுவையைப் பெற்ற பால். பெருகும்-பெருக நிரம்பச் செய்திருக்கும். குடங்கள்-குடங்களை. பேணும்-பாதுகாப்பாக இருக்கும். இடம் தன் பால்-ஓரிடத்திற்கு. தன்: அசைநிலை. கொணர்ந்து-கொண்டு வந்து. தாபித்து-வைத்து விட்டு. ப்: சந்தி. பிறவும் வேண்டுவன-பூசைக்கு வேண்டியிருப்பவைகளாகிய வேறு பொருள்களையும். சமைத்தார்-பாவனையால் அமைத்து வைத்துக் கொண்டார். அந்தப் பொருள்களாவன: தேன், அரைத்த சந்தனம், அட்சதைகள், தயிர், வெண்ணெய், நெய், கற்பூரம், கற்பூரத்தட்டு, தூபக்கால், சாம்பிராணி, மட்டிப்பால், ஊதுவத்தி, நிவேதனத்திற்கு உரிய அன்னம், வடை, பாயசம், கறியமுதுகள், தயிர், வியஞ்சனங்கள் முதலியவை.

அடுத்து உள்ள 47-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த விசார சருமர் தம்மிடம் வந்தமைந்த தலைவிதியினுடைய திருவிளையாட்டினால் நிரம்பியுள்ள செய்வதற்கு அருமையாக விளங்கும் பூசையைப் புரிய ஆரம்பித்து ஒன்றி இருக்கும் தம்முடைய திருவுள்ளத்தினுடைய உண்மையாகிய பக்தியோடு தம்மை ஆளாக உடைய தலைவனாகிய அந்த மணல்களைக் குவித்துத் தாம் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுடைய அழகிய தலையின்மேல் நறுமணம் கமழும் திருப்பள்ளித் தாமத்தை அணிந்து அபிடேகத்துக்கு உரிய பொருளாக நன்றாக நிரம்பியிருந்த இனிய சுவையைப் பெற்ற

பாற்குடங்களை எடுத்துக் கொண்டு வந்து அவர் விருப் பத்தை அடைந்து அபிடேகம் புரிந்தவுடன்.' பாடல் வருமாறு:

" நின்ற விதியின் விளையாட்டால்
நிறைந்த அரும்பூ சனைதொடங்கி
ஒன்றும் உள்ளத் துண்மையினால்
உடைய நாதன் திருமுடிமேல்
மன்றல் விரவும் திருப்பள்ளித்
தாமம் சாத்தி மஞ்சனமா
நன்று நிறைதீம் பாற்குடங்கள்
எடுத்து நயப்புற் றாட்டுதலும்."

இந்தப் பாடல் குளகம். நின்ற-அந்த விசார சருமர் தம் மிடம் வந்து நிலைத்து நின்ற. விதியின்-தலை விதியினுடைய விளையாட்டால்-திருவிளையாட்டினால். நிறைந்த-நிரம்பி இருந்த. அரும்-செய்வதற்கு அருமையாக விளங்கும். பூசனை-பூசையை. தொடங்கி-புரிய ஆரம்பித்து. ஒன்றும்-ஒருமைப் பாட்டோடு விளங்கும். உள்ளத்து-தம்முடைய திருவுள்ளத் தினுடைய. உண்மையினால்-உண்மையாகிய பக்தியோடு; உருபு மயக்கம். உடைய-தம்மை ஆளாக உடைய. நாதன்-அந்த மணல்களைக் குவித்துத் தாம் தாபித்திருந்த தலைவ னாகிய சிவலிங்கப் பெருமானுடைய. திரு-அழகிய. முடிமேல் -தலையின் மீது. மன்றல்-நறுமணம். விரவும்-கமழும். திருப் பள்ளித் தாமம்-திருப்பள்ளியெழுச்சியின் போது சாத்தும் மாலையை. சாத்தி-அணிந்து. மஞ்சனமா-அபிடேகத்துக்கு உரிய பொருளாக. நன்று-நன்றாக. நிறை-தாம் நிரப்பி யிருந்த. பால்-இனிய சுவையைப்பெற்றபால் உள்ள. குடங்கள் -குடங்களை. எடுத்து-எடுத்துக் கொண்டு வந்து. நயப்புற்று-அவர் விருப்பத்தை அடைந்து. ஆட்டுதலும்-அந்தச் சிவலிங் கப் பெருமானுக்கு அபிடேகம் புரிந்தவுடன்.

பிறகு உள்ள 48-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த விசார சருமரிடத்தில் பரவலாக மேலும் மேலும்

பொங்கி எழும் பக்தியும்; பழைய பிறவியில் அமைந்திருந்த தன்மையால், மிக்கு விளங்கும் நற்பண்புகளும், பொருந்தி அமைய மேம்பாட்டையும் தகுதியையும் பெற்றவராகிய நடராஜப் பெருமானாரிடம் சேர்ந்து விளங்கும் பெருமையை வெளிப்படுமாறு செய்யும் பொருட்டு பாம்புகள் தங்கியிருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேல் பெற்றவராகிய நடராஜப் பெருமானார் வழங்கிய திருவருளாகும் என்று கூறுமாறு தன்னுடைய அறிவை இழந்து அந்தக் குராமரத்தின் மேல் ஏறி அமர்ந்திருந்த முதிய வேதியனாகிய எச்சதத்தன் சினம் மூளுமாறு விசாரசருமர் புரியும் பூசையைப் பார்த்தான்.' பாடல் வருமாறு:

'' பரவ மேன்மேல் எழும்பரிவும்
பழைய பான்மை மிகும்பண்பும்
விரவ மேதக் கவர்தம்பால்
மேவும் பெருமை வெளிப்படுப்பான்
அரவம் மேவும் சடைமுடியார்
அருளாம் என்ன அறிவழிந்து
குரவம் மேவும் முதுமறையோன்
கோபம் மேவும் படிகண்டான்.''

பரவ-அந்த விசாரசருமரிடத்தில் பரவலாக. மேன்மேல்-மேலும் மேலும். எழும்-பொங்கி எழும். பரிவும்-பக்தியும். பழைய-பழைய பிறவியில் அமைந்திருந்த. பான்மை-தன்மையால். மிகும்-மிக்கு விளங்கும். பண்பும்-நல்ல குணங்களும்; ஒருமை பன்மை மயக்கம். விரவ-பொருந்தி அமைய. மேதக்கவர் தம்பால்-மேம்பாட்டையும் தகுதியையும் பெற்றவராகிய நடராஜப் பெருமானாரிடம். தம்: அசை நிலை. மேவும்-சேர்ந்து விளங்கும். பெருமை-பெருமையை. வெளிப் படுப்பான்-வெளிப்படுமாறு செய்யும் பொருட்டு. அரவம்-பாம்புகள்; ஒருமை பன்மை மயக்கம். மேவும்-தங்கியிருக்கும். சடை-சடாபாரத்தை. முடியார்-தம்முடைய தலையின் மேல் பெற்றவராகிய. அருளாம்-

வழங்கிய திருவருள் ஆகும். என்ன-என்று கூறுமாறு. அறிவு அழிந்து-தன்னுடைய அறிவை இழந்து. குரவம்-குராமரத்தின் மேல். மேவும்-ஏறி அமர்ந்திருக்கும். முது-முதிய. மறையோன்-வேதியனாகிய எச்சதத்தன். கோபம்-சினம். மேவும்படி-தன்னிடம் மூளுமாறு. கண்டான்-விசாரசருமர் புரியும் பூசையைப் பார்த்தான்.

பிறகு உள்ள 49-ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'அவ்வாறு அந்த எச்சதத்தன் தன்னுடைய புதல்வராகிய விசாரசருமர் புரியும் பூசையைப் பார்த்த சமயத்திலேயே வேகமாகத் தான் ஏறி அமர்ந்திருந்த குராமரத்திலிருந்து இறங்கி வந்து வேகமாகப் போய் தன்னுடைய கையில் பிடித்திருந்த தடியை எடுத்துக்கொண்டு தன்னுடைய புதல்வராகியவிசாரசருமருடைய அழகிய முதுகில் அடித்து கொடுமையாக இருக்கும் வார்த்தைகளை அந்த எச்சதத்தன் சொல்ல திருத்தொண்டினைச் செய்தருளும் சிறியவரும் பெருமையைப் பெற்றவரும் ஆகிய அந்தப் பிள்ளையாருடைய பெருமானாகிய சிவலிங்கத்தின் மேல் மிகுதியாக அமைந்திருந்த விருப்பத்தை அந்தச் சிவலிங்கப் பெருமானுக்குத் தாம்புரியும் அருச்சனையில் வைத்தவராகிய அந்த விசார சருமர் வேறு ஒன்றையும் தெரிந்துகொள்ள வில்லை.' பாடல் வருமாறு:

"கண்ட போதே விரைந்திழிந்து
கடிது சென்று கைத்தண்டு
கொண்டு மகனார் திருமுதுகில்
புடைத்துக் கொடிதாம் மொழிகூறத்
தொண்டு புரியும் சிறியபெருந்
தோன்ற லார்தம் பெருமான்மேல்
மண்டு காதல் அருச்சனையின்
வைத்தார் மற்றொன் றறிந்திலரால்."

கண்ட-அவ்வாறு அந்த எச்சதத்தன் தன்னுடைய புதல்வராகிய விசாரசருமர் தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் பூசை புரிவதைப்

பார்த்த. போதே-சமயத்திலேயே. விரைந்து-வேகத்துடன். இழிந்து-தான் ஏறி அமர்ந்திருந்த குராமரத்திலிருந்து இறங்கி வந்து. கடிது-வேகத்தோடு. சென்று-போய். கை-தன்னுடைய கையில் பிடித்திருந்த. த்:சந்தி. தண்டு கொண்டு-தடியை எடுத்துக்கொண்டு. மகனார்-தன்னுடைய புதல்வராகிய விசாரசருமருடைய. திருமுதுகில்-அழகிய முதுகில். புடைத்து-அடித்துவிட்டு. க்:சந்தி. கொடிது ஆம்-கொடுமையானவை ஆகும்; ஒருமை பன்மை மயக்கம். மொழி-வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கூற-அந்த எச்சதத்தன் சொல்ல. த்:சந்தி. தொண்டு-திருத்தொண்டினை. புரியும்-செய்பவரும். சிறிய-சிறியவரும்; வினையாலணையும் பெயர். பெரும்-பெருமையைப் பெற்றவரும் ஆகிய; வினையாலணையும் பெயர். தோன்றலார் தம்-அந்தப் பிள்ளையாருடைய. தம்:அசை நிலை. பெருமான் மேல்-பெருமையைப் பெற்ற தலைவனாகிய சிவலிங்கப் பெருமான் மேல். மண்டு-மிகுதியாகத் தம்மிடம் அமைந்திருந்த. காதல்-விருப்பத்தை. அருச்சனையின்-அந்தச் சிவலிங்கப் பெருமானுக்குத் தாம் புரியும் அருச்சனையில். வைத்தார்-வைத்திருப்பவராகிய அந்த விசாரசருமர். மற்று-வேறு. ஒன்று-ஒன்றையும். அறிந்திலர்-தெரிந்து கொள்ளவில்லை. ஆல்: ஈற்றசை நிலை.

பிறகு வரும் 50-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'யாவரினும் மேம்பட்டவரும், பெருமையைப் பெற்றவரும் ஆகிய அந்த விசாரசருமர் பல தடவைகளும் சினம் மூண்டவனாகிய எச்சதத்தன் தன்னுடைய கையில் பிடித்துக் கொண்டிருந்த தடியினால் தம்மைப் புடைக்க வேறு எதையும் தெரிந்து கொள்ளாமல் இருந்த அந்த விசாரசருமர் பசு மாடுகளின் மடிகளில் உள்ள முலைகளிலிருந்து கறந்த பாலால் நிரம்பிய அபிடேகத்தைத் தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் புரியும் திருப்பணியில் சிறிதளவும் சலிக்காமல் இருப்பதைப் பார்த்து மயக்கத்தை அடைந்தவனாகும் வேதியனாகிய எச்சதத்தன்

மிகவும் சினம் மூண்டு அந்த விசாரசருமர் வைத்திருந்த அபிடேகத்துக்குரிய இடத்தில் நிரப்பியிருந்த பாலைத் தன்னுடைய காலினால் தள்ளிவிட்டுத் தரையில் சிந்துமாறு செய்தான், தன்னுடைய கைகளினால் கடமையில் தலை சிறந்து நின்றவனாகிய அந்த எச்சதத்தன்.' பாடல் வருமாறு:

" மேலாம் பெரியோர் பலகாலும்
வெகுண்டோன் அடிக்க வேறுணரார்
பாலார் திரு மஞ்சனம்ஆட்டும்
பணியிற் சலியா ததுகண்டு
மாலாம் மறையோன் மிகச்செயிர்த்து
வைத்த திருமஞ் சனக்குடப்பால்
காலால் இடறிச் சிந்தினான்
கையாற் கடமைத் தலைநின்றான்."

மேலாம்-யாவரினும் மேம்பட்டவராகும், பெரியோர்-பெருமையைப் பெற்றவராகிய அந்த விசாரசருமர். பல காலும்-பலதடவைகளும். காலும்: ஒருமை பன்மை மயக்கம். வெகுண்டோன்-கோபம் மூண்டவனாகிய எச்சதத்தன். அடிக்க-தன்னுடைய கையில் பிடித்துக்கொண்டிருந்த தடியினால் தம்மைப் புடைக்க. வேறு உணரார்-வேறு எதையும் தெரிந்து கொள்ளாமல் இருந்த அந்த விசாரசருமர். பால் ஆர்-பசுமாடுகளின் மடிகளில் உள்ள முலைகளிலிருந்து கறந்த பாலால் நிரம்பிய. திருமஞ்சனம்-அபிடேகத்தை. ஆட்டும்-தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் புரியும். பணியில்-திருப்பணியில். சலி யாதது-சிறிதளவும் சலிக்காமல் இருப்பதை. கண்டு-பார்த்து. மால் ஆம்-மயக்கத்தை அடைந்தவன் ஆகும்; ஆகுபெயர். மறையோன்-வேதியனாகிய எச்சதத்தன். மிக-மிகுதியாக. ச்:சந்தி. செயிர்த்து-சினம் மூண்டு. வைத்த-அந்த விசார சருமர் வைத்திருந்த. திருமஞ்சன-அபிடேகத்துக்கு உரிய. க்:சந்தி. குடப்பால்-குடத்தில் நிரப்பியிருந்த பாலை.

கையால்-தன்னுடைய கரத்தினால். கடமை-செய்யும் கடமையில். த்:சந்தி. தலை நின்றான்-தலைசிறந்து நின்றவனாகிய அந்த எச்சதத்தன், காலால்-தன்னுடைய காலினால். இடறி-உதைத்துத் தள்ளிவிட்டு. ச்:சந்தி. சிந்தினான்-தரையில் சிந்துமாறு செய்தான்.

பிறகு வரும் 51-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த எச்சதத்தன் தன்னுடைய காலால் விசார சருமர் பாலை நிரப்பி வைத்திருந்த குடங்களை உதைத்துத் தள்ளி விட்டு தரையில் சிந்தும் சமயத்தில் அதனைப் பார்க்கும் சிறுவராகிய அந்த விசார சருமர் சிறிதளவு நேரத்தில் கெட்டவனாகிய அந்த எச்சதத்தனைத் தம்முடைய தந்தை என்றே தெரிந்து கொண்டு அவனுடைய கால்களை ஒரு மழுவாயுதத்தினால் வெட்டித் தரையில் விழச் செய்யும் தக்க செயலால் தமக்கு முன்னால் பக்கத்தில் கிடந்திருந்த தடியை எடுத்த அந்த விசார சருமருக்கு அந்தத் தடியே முறைப்படி வந்து ஒரு மழுவாயுதமாக மாறிவிட அதைக் கொண்டு வெட்டியருளினார்; அந்த முதிய வேதியனாகிய எச்சதத்தனும் தரையின் மேல் விழுந்து விட்டான்.' பாடல் வருமாறு:

"சிந்தும் பொழுதில் அதுநோக்கும்
சிறுவர் இறையில் தீயோனைத்
தந்தை எனவே அறிந்தவன்தன்
தாள்கள் சிந்தும் தகுதியினால்
முந்தை மருங்கு கிடந்தகோல்
எடுத்தார்க் கதுவே முறைமையினால்
வந்து மழுவா யிடஎறிந்தார்;
மண்மேல் விழுந்தான் மறையோனும்."

சிந்தும்-அந்த எச்சதத்தன் தன்னுடைய காலால் விசார சருமர் பாலை நிரப்பி வைத்திருந்த குடங்களை உதைத்துத் தள்ளி விட்டுத் தரையில் சிந்தும். பொழுதில்-சமயத்தில். அது-அதனை. நோக்கும்-பார்க்கும். சிறுவர்-சிறுவராகிய

அந்த விசார சருமர். இறையில்-சிறிதளவு நேரத்தில். தீயோனை-கெட்டவனாகிய அந்த எச்சதத்தனை. த்:சந்தி. தந்தை-தம்முடைய தகப்பன். எனவே-என்றே; இடைக் குறை. அறிந்து-தெரிந்து கொண்டு. அவன் தன்-அவனுடைய. தன்:அசை நிலை. தாள்கள்-கால்களை. சிந்தும்-வெட்டித் தரையில் விழுமாறு புரியும். தகுதியினால்-தக்க செயலால். முந்தை-தமக்கு முன்னால். மருங்கு-பக்கத்தில். கிடந்த-தரையில் கிடந்திருந்த. கோல்-தடியை. எடுத்தார்க்கு-எடுத்த அந்த விசார சருமருக்கு. அதுவே-அந்தத் தடியே. முறைமையினால் வந்து-முறைப்படி தம்முடைய கையில் வந்து. மழுவாயிட-ஒரு மழுவாயுதமாக மாறி விட. எறிந்தார்-அதைக் கொண்டு வெட்டியருளினார். மண்மேல்-தரையின் மேல். மறையோனும்-அந்த முதிய வேதியனாகிய எச்சதத்தனும். விழுந்தான்-விழுந்து விட்டான்.

அடுத்து வரும் 52-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு எச்சதத்தனுடைய கால்களை வெட்டியருளிய அந்தச் செயலே தாம் மணல்களைக் குவித்துத் தாபித்த சிவலிங்கப் பெருமானாருக்குப் புரிந்தருளும் அருச்சனையில் வந்த இடையூற்றைப் போக்கும் ஆயுதமாக இறந்து கிடந்த தம்முடைய தந்தையினுடைய இரண்டு கால்களையும் வெட்டியருளிய அந்த எச்சதத்தனுடைய புதல்வராகிய விசார சருமர் அந்தச் சிவலிங்கப் பெருமானுக்குப் புரிந்தருளிய பூசையில் தாம் தெரிந்து கொண்ட இடையூற்றைப் போக்கினவராகி முன்பு புரிந்ததைப் போல அருச்சனையைப் புரியத் தொடங்கியவுடன் நெருங்கியுள்ள சடாபாரத்தைத் தம்முடைய உயரமான தலையில் பெற்ற நடராஜப் பெருமானாரும் தம்முடைய பத்தினியாகிய சிவகாம சுந்தரியோடும் இடப வாகனத்தின் மேல் ஏறிக் கொண்டு.' பாட்டு வருமாறு:

" எறிந்த அதுவே அர்ச்சனையில்
இடையூ றகற்றும் படையாக

மறிந்த தாதை இருதாளும்
துணித்த மைந்தர் பூசனையில்
அறிந்த இடையூ றகற்றினராய்
முன்போல் அருச்சித் திடப்புகலும்
செறிந்த சடைநீள் முடியாரும்
தேவி யோடும் விடையேறி.''

இந்தப் பாடல் குளகம். எறிந்த-அவ்வாறு எச்சதத்தனு டைய கால்களை வெட்டியருளிய. அதுவே-அந்தச் செயலே. அர்ச்சனையில்-தாம் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானுக்குப் புரிந்த அருச்சனையில். இடையூறு -வந்த தடையை. அகற்றும்-போக்கும். படையாக-ஆயுத மாக அமைய. மறிந்த-தரையில் இறந்து கிடந்த. தாதை-தம் முடைய தந்தையினுடைய. இரு-இரண்டு. தாளும்-கால் களையும்; ஒருமை பன்மை மயக்கம். துணித்த-வெட்டி அருளிய. மைந்தர்-அந்த எச்சதத்தனுடைய வலிமையைப் பெற்ற புதல்வராகிய விசார சருமர். பூசனையில்-அந்தச் சிவலிங்கப் பெருமானுக்குத் தாம் புரிந்தருளிய பூசையில். அறிந்த-தாம் தெரிந்து கொண்ட. இடையூறு-தடையை. அகற்றினராய்-போக்கினவராகி. முன்போல்-முன்பு புரிந் ததைப் போல. அருச்சித்திட-சிவலிங்கப் பெருமானுக்கு அருச்சனையைப் புரிய. ப்:சந்தி. புகலும்-தொடங்கியவுடன். செறிந்த-நெருங்கியுள்ள. சடை-சடாபாரத்தை. நீள்-தம்மு டைய உயரமாகிய. முடியாரும்-தலையில் பெற்றவராகிய நடராஜப் பெருமானாரும். தேவியோடும்-தம்முடைய பத்தி னியாகிய சிவகாம சுந்தரியோடும். விடை ஏறி-இடப வாக னத்தின் மேல் ஏறிக் கொண்டு.

பிறகு வரும் 53-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பூதங்களினுடைய கூட்டங்கள் தம்முடைய இரண்டு பக்கங்களிலும் சுற்றி வர, பழைய முனிவர்கள், தேவர்கள், வேத மந்திரங்களை எடுத்துக் கூறித் துதிக்க மலங்கள் அற்ற

மூர்த்தியாகிய நடராஜப் பெருமான் தன்னுடைய திருவுள்ளத்தில் விருப்பம் மிகுதியாக உண்டாக வெளிப்படக் காட்சியை வழங்கியருளியவுடன் அந்தப் பெருமானைத் தரிசித்து அவனை வணங்கித் தம்முடைய திருவுள்ளத்தில் உவகையை அடைந்து அந்தப் பெருமானுடைய திருவடிகளாகிய செந்தாமரை மலர்களின் மேல் பக்தி முதிர்ச்சியை அடைந்த சிறுவராகிய அந்த விசார சருமர் விழுந்து வணங்கினார்.' பாடல் வருமாறு:

"பூத கணங்கள் புடைசூழப்
புராண முனிவர் புத்தேளிர்
வேத மொழிகள் எடுத்தேத்த
விமல மூர்த்தி திருவுள்ளம்
காதல் கூர வெளிப்படலும்
கண்டு தொழுது மனம்களித்துப்
பாத மலர்கள் மேல்விழுந்தார்
பத்தி முதிர்ந்த பாலகனார்."

பூத-பூதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். கணங்கள்-கூட்டங்கள். புடை-தம்முடைய இரண்டு பக்கங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். சூழ-சுற்றி வர. ப்:சந்தி. புராண-பழைய முனிவர்-முனிவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். புத்தேளிர்-தேவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். வேத மொழிகள்-வேதத்திலுள்ள மந்திரங்களை. எடுத்து-எடுத்துக் கூறி. ஏத்த-துதிக்க. விமல-ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் அற்ற. மூர்த்தி-மூர்த்தியாகிய நடராஜப் பெருமான். மூர்த்தி-திருவுருவத்தைப் பெற்றவன். திருவுள்ளம்-தன்னுடைய திருவுள்ளத்தில். காதல்-விருப்பம்; 'வாத்ஸல்யம்' எனலும் ஆம். கூர-மிகுதியாக உண்டாக. வெளிப் படலும்-வெளிப்படுத்த தமமுடைய காட்சியை வழங்கியருளியவுடன். கண்டு-அவனைத் தரிசித்து. தொழுது-அவனை வணங்கி. மனம்-தம்முடைய திருவுள்ளத்

தில். களித்து-உவகையை அடைந்து. ப்:சந்தி. பாத-அந்தப் பெருமானுடைய திருவடிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். மலர்கள் மேல்-செந்தாமரை மலர்களின் மேல். பத்தி முதிர்ந்த-பக்தி முதிர்ச்சியை அடைந்த. பாலகனார்-சிறுவராகிய அந்த விசார சருமர். விழுந்தார்-விழுந்து வணங்கினார்.

விமலர்: "நின் மலனார் கலிக்கச் சிநெறிக் காரைக் காட்டாரே." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "நிருத்தனை நிமலன் தன்னை.", "நெய்யாடி நின்மலனே." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "மெய்யா விமலா போற்றி.", "நித்தா போற்றி நிமலா போற்றி.", "அரியாய் போற்றி அமலா போற்றி.", "நின்மலா போற்றி, போற்றி.", "நீசனேனை ஆண்டு கொண்ட நின்மலா.", "நண்ணுதற்கரிய விமலனே.", "குருந்தம் மேவிய சீர் அமலனே." என்று மாணிக்க வாசகரும், "மலக்கலப் பற்றான்.", "நின்மல மேனி நிமலன்." என்று திருமூலரும், "கீழ்வேளூர் விமலர்.", "நீல விட அரவணிந்த நிமலா.", "வென்றி வெள்ளே றுயர்த்தருளும் விமலர்." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 54-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'சுட்டிய கொன்றை மாலையைச் சுற்றி அணியும் சடா பாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்ற நடராஜப் பெருமானாருடைய இரண்டு திருவடிகளின் நிழலின் கீழ் விழுந்து வணங்கியவராகிய விசார சருமரைத் தரையிலிருந்து எடுத்து அந்தப் பெருமானார் பார்த்தருளி, "எம்முடைய பொருட்டினால் உன்னைப் பெற்ற தந்தையின் கால்களைத் தரையில் விழுமாறு மழுவால் வெட்டினாய்; அந்த படி உள்ள தந்தை இனிமேல் நினக்கு யாமே" எனத் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு அந்த விசார சருமரை அணைத் தருளி பொருந்திய கருணையினால் அவருடைய திருமேனியைத் தடவிக் கொடுத்து விட்டு அவருடைய உச்சியை

மோந்து மகிழ்ச்சியை அடைந்தருள.' பாடல் வருமாறு:

"தொடுத்த இதழி சூழ்சடையார்
துணைத்தாள் நிழற்கீழ் விழுந்தவரை
எடுத்து நோக்கி, 'நம்பொருட்டால்
ஈன்ற தாதை விழஎறிந்தாய்;
அடுத்த தாதை இனிஉனக்கு
நாம்.' என்றருள் செய்தணைத்தருளி
மடுத்த கருணை யால்தடவி
உச்சி மோந்து மகிழ்ந்தருள."

இந்தப் பாடல் குளகம். தொடுத்த-கட்டிய. இதழி-கொன்றை மாலையை; ஆகு பெயர். சூழ்-சுற்றி அணிந்த. சடையார்-சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய நடராஜப் பெருமானாருடைய. துணை-இரண்டு. த்:சந்தி. தாள்-திருவடிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நிழற்கீழ்-நிழலின் கீழ். விழுந்தவரை-விழுந்து வணங்கியவராகிய விசார சருமரை. எடுத்து-தரையிலிருந்து எடுத்து. நோக்கி-அவரைப் பார்த்தருளி. நம் பொருட்டால்-எம் பொருட்டினால். ஈன்ற-உன்னைப் பெற்ற. தாதை-தந்தையை. விழ-அவருடைய கால்களை ஒரு மழுவால் தரையில் விழுமாறு. எறிந்தாய்-வெட்டி விட்டாய். அடுத்த-அடுத்த படி உள்ள. தாதை-தந்தை. இனி-இனிமேல். உனக்கு-நினக்கு. நாம்-யாமே. என்று-என. அருள்செய்து-திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அணைத்தருளி-அந்த விசார சருமரை அணைத்துக் கொண்டருளி. மடுத்த-தம்மிடம் உண்டாகிய. கருணையால்-கருணையினால். தடவி-அவருடைய திருமேனியைத் தடவிக் கொடுத்து விட்டு. உச்சி-அவருடைய உச்சியை. மோந்து-மோந்து பார்த்து விட்டு. மகிழ்ந்தருள-மகிழ்ச்சியை அடைந்தருள.

பிறகு உள்ள 5்-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'சிவந்த கண்களைப் பெற்ற இடப வாகனத்தை ஓட்டுப

வராகிய நடராஜப் பெருமானாருடைய அழகிய செந்தா மரை மலர்களைப் போன்ற திருக்கரங்கள் தடவும் பாக்கியத் தைப் பெற்ற சிறுவராகிய அந்த விசார சருமர் அந்த இடத் தில் மாயையால் உண்டாகிய தம்முடைய திருமேனியோடு ஓர் அளவு இல்லாமல் உயர்ச்சியைப் பெற்ற சிவமயமே யாகி பொங்கிக் கொண்டு எழுந்த அந்த நடராஜப் பெரு மானார் வழங்கிய திருவருளாகிய கடலில் முழுகி தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் பிரம தேவன் முதலாக இருக்கும் பரிசுத்தமாகிய தேவர்கள் தோத்திரம் புரியுமாறு தம்மைச் சுற்றியுள்ள பிரகாசத்தினிடையில் அந்த விசார சருமர் தோற்றத்தை வழங்கினார்.' பாடல் வருமாறு:

"செங்கண் விடையார் திரு மலர்க்கை
தீண்டப் பெற்ற சிறுவனார்
அங்கண் மாயை யாக்கையின்மேல்
அளவின் றுயர்ந்த சிவமயமாய்ப்
பொங்கி எழுந்த திருவருளில்
மூழ்கிப் பூமேல் அயன்முதலாம்
துங்க அமரர் துதிசெய்யச்
சூழ்ந்த ஒளியில் தோன்றினார்."

செம்-சிவப்பாக இருக்கும். கண்-கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். விடையார்-இடப வாகனத்தை ஓட்டுபவராகிய நடராஜப் பெருமானாருடைய. திரு-அழகிய. மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கை-திருக்கரங்கள்; ஒருமை பன்மைமயக்கம். தீண்ட-தடவும் பாக்கியத்தை; வினையாலணையும் பெயர். ப்: சந்தி. பெற்ற-அடைந்த. சிறுவனார்-சிறுவராகிய அந்த விசார சருமர். அங்கண்-அந்த இடத்தில். மாயை-மாயை யால் உண்டாகிய. யாக்கையின் மேல்-தம்முடைய திருமேனி யோடு; உருபு மயக்கம். அளவு-ஓர் அளவு. இன்று-இல்லாமல். உயர்ந்த-உயர்ச்சியை அடைந்த. சிவமயமாய்-சிவமயமே

யாகி. ப்:சந்தி. பொங்கி-பொங்கிக் கொண்டு. எழுந்த திரு வருளில்-எழுந்த அந்த நடராஜப் பெருமானார் வழங்கிய திருவருளாகிய கடலில்; உவம ஆகு பெயர். மூழ்கி-முழுகி. ப்:சந்தி. பூமேல்-தாமரை மலரின்மேல் வீற்றிருக்கும். அயன்-பிரம தேவன். முதலாம்-முதலாக இருக்கும். துங்க-பரிசுத்த மான. அமரர்-தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். துதி செய்ய-தம்மைத் தோத்திரம் புரியுமாறு. ச்:சந்தி. சூழ்ந்த-சுற்றி வீசிய. ஒளியில்-பிரகாசத்தினிடையில். தோன்றினார்-அந்த விசார சருமர் தோற்றத்தைப் பெற்றவராக விளங்கி னார்.

பிறகு உள்ள 56-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'தேவர்களினுடைய தலைவனாகிய நடராஜப் பெருமா னும் அந்த விசார சருமரைத் தன்னுடைய திருத்தொண் டர்களுக்குத் தலைவனாகச் செய்தருளி, யாம் திருவமுது செய்யும் பாத்திரத்தையும், உடுக்கும் ஆடைகளையும், எம் முடைய தலையில் அணியும் கொன்றை மாலை, சடா பாரம், பிறைச்சந்திரன், கங்கையாறு முதலிய எல்லாவற் றையும் உனக்கு ஆகும் வண்ணம் வழங்கி உனக்கு சண்டீ சனும் ஆகும் பதவியை வழங்கினோம்'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு அந்த இடத்தில் அந்த விசார சருமருடைய பொலிவைப் பெற்ற விசாலமான தலையில் துண்டாக விளங்கும் பிறைச் சந்திரனையும், தம்மு டைய தலையில் உள்ள சடாபாரத்தில் சேர்ந்துள்ள கொன்றை மாலையையும் தம்முடைய தலையிலிருந்து எடுத்து அந்தச் சண்டீசுர நாயனாருடைய தலையில் அணிந் தருளினார்.' பாடல் வருமாறு:

'' அண்டர் பிரானும் தொண்டர்தமக்
கதிப னாக்கி, 'அனைத்தும்நாம்
உண்ட கலமும் உடுப்பனவும்
சூடுவனவும் உனக் காகச்

சண்டீ சனுமாம் பதந்தந்தோம்'
என்றங் கவர்பொற் றடமுடிக்குத்
துண்ட மதிசேர் சடைக்கொன்றை
மாலை வாங்கிச் சூட்டினார்.''

அண்டர்-தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரானும்-தலைவனாகிய நடராஜப் பெருமானும். தொண்டர் தமக்கு-அந்த விசார சருமரைத் தன்னுடைய திருத் தொண்டர்களுக்கு. தம்: அசை நிலை. அதிபன்-தலைவனாக. ஆக்கி-செய்தருளி. நாம்-யாம். உண்ட-திருவமுது செய்த. கலமும்-பாத்திரமாகிய பிரம கபாலத்தையும். உடுப்பனவும் -உடுப்பவை ஆகிய புலித் தோலையும் மான் தோலையும். சூடுவனவும்-எம்முடைய தலையில் அணிந்திருப்பவையாகிய பிறைச் சந்திரனையும், கொன்றை மாலையையும், கங்கை ஆற்றையும், பாம்புகள் முதலியவற்றையும். உனக்கு ஆக-உனக்கு உரியவை ஆகுமாறு. அனைத்தும்-மேலே கூறிய எல்லாவற்றையும் வழங்கி. ச்:சந்தி. சண்டீசனும் ஆம்-சண்டீசன் ஆகும். பதம்-பதவியை. தந்தோம்-உனக்கு வழங்கினோம். என்று-என அந்தப் பெருமானார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அங்கு-அந்த இடத்தில். அவர்-அந்தச் சண்டீசருடைய. பொன்-பொலிவைப் பெற்ற. தட-விசாலமாகிய. முடிக்கு-தலையில்; உருபு மயக்கம். த்:சந்தி. துண்ட-துண்டாக விளங்கும். மதி-பிறைச் சந்திரனையும். சேர்-தம்முடைய தலையில் சேர்ந்திருக்கும். சடை-சடாபாரத்தில் சூட்டியிருக்கும். க்:சந்தி. கொன்றைமாலை-கொன்றை மலர் மாலையையும். வாங்கி-தம்முடைய தலையிலிருந்து எடுத்து. ச்:சந்தி. சூட்டினார்-அந்தச் சண்டீசுர நாயனாருடைய தலையில் அணிந்தருளினார்.

பிறகு உள்ள 57-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'எல்லா உலகங்களிலும் வாழ்பவர்கள் ஆரவார ஒலியை எழுப்பவும், எல்லா இடங்களிலும் தேவர்கள் கற்பக மரத்தில்

மலர்ந்திருக்கும் மலர்களை மழைகளைப் போலச் சொரியவும், பல ஆயிரம் பேர்களாகிய சிவகணத் தலைவர்கள் பாடல்களைப் பாடியும் நடனம் ஆடியும் மகிழ்ச்சியோடு இருக்கவும், மந்திரங்களாகிய சொற்கள் நிரம்பியுள்ள இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும் தோத்திரங்களைக் கூறவும், சுற்றிலும் உள்ள பல வகையான வாத்தியங்களை அவற்றை உடையவர்கள் வாசிக்கவும், சைவ சமயமாகிய நல்ல வழி ஓங்கி விளங்கவும், திருத் தொண்டர்களுக்குத் தலைவரும், அடியேங்களுடைய தலைவருமாகிய சண்டீசர் நடராஜப் பெருமானாரை வணங்கிச் சிவலோக பதவியை அடைந்தார்.' பாடல் வருமாறு:

" எல்லா உலகும் ஆர்ப்பெடுப்ப
எங்கும் மலர்மா ரிகள்பொழியப்
பல்லா யிரவர் கணநாதர்
பாடி ஆடிக் களிபயிலச்
சொல்லார் மறைகள் துதிசெய்யச்
சூழ்பல் லியங்கள் எழச்சைவ
நல்லா றோங்க நாயகமாம்
நங்கள் பெருமான் தொழுதணைந்தார்."

எல்லா-உலகும்-எல்லா உலகங்களிலும் வாழ்பவர்கள்; இட ஆகு பெயர். உலகும்: ஒருமை பன்மை மயக்கம். ஆர்ப்பு-ஆரவார ஒலியை. எடுப்ப-எழுப்பவும். எங்கும்-எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். மலர்-தேவலோகத்தில் வாழும் தேவர்கள் அந்த லோகத்தில் வளர்ந்து நிற்கும் கற்பக மரத்தில் மலர்ந்துள்ள மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். மாரிகள்-மழைகளைப் போல; உவம ஆகு பெயர். பொழிய-சொரியவும். ப்:சந்தி. பல்-பல. ஆயிரவர்-ஆயிரம் பேர்களாகிய. கண-சிவகணங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாதர்-தலைவர்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பாடி-பல பாடல்களைப் பாடிக் கொண்டும். ஆடி-நடனம் ஆடிக் கொண்டும். க்:சந்தி. களி மகிழ்ச்சியோடு. பயில- இருக்கவும். ச்:சந்தி. சொல்-மந்திரங்களாகிய சொற்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆர்-நிரம்பி உள்ள. மறைகள்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும். துதி: ஒருமை பன்மை மயக்கம். துதி செய்ய-தோத்திரங்கள் கூறவும். துதி: ஒருமை பன்மை மயக்கம். ச்:சந்தி. சூழ்-சுற்றிலும் உள்ள. பல்-பலவாகிய, இயங்கள்-வாத்தியங்களை; அவையாவன நாகசுரம், ஒத்து, கஞ்சதாளங்கள், மத்தளம், முரசு, பேரிகை, வீணை, யாழ், முகவீணை, சல்லரி, தம்புரா, இடக்கை, தமருகம், ஜலதரங்கம், உடல் முதலியவை. எழ-அவற்றை உடையவர்கள் வாசிக்கவும். ச்:சந்தி. சைவ-சைவ சமயமாகிய. நல்-நல்ல. ஆறு-வழி. ஓங்க-தழைத்து ஓங்கி வளரவும். நாயகமாம்-திருத்தொண்டர்களுக்குத் தலைவரும்; திணை மயக்கம். நங்கள்-அடியேங்களுடைய. இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பெருமான்-தலைவராகிய சண்டேசுர நாயனார்; ஒருமை பன்மை மயக்கம். தொழுது-நடராஜப் பெருமானாரை வணங்கிவிட்டு. அணைந்தார் - சிவலோக பதவியை அடைந்தார்.

அடுத்து உள்ள 58-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இந்தப் பூ மண்டலத்தில் வாழும் மக்கள் தெரிந்து கொள்ளுமாறு தன்னுடைய புதல்வராகிய விசாரசருமர் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானைத் தன்னுடைய கால்களால் உதைத்துத் தள்ளி விட்டதாகிய குற்றத்தைச் செய்து நம்பராகிய நடராஜப் பெருமானார் வழங்கிய திருவருளினால், இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களில் கூறப் பெற்ற நற்குண நல்லொழுக்கம் பெற்று விளங்குபவரும், சேய்ஞலூரில் திருவவதாரம் செய்தருளியவரும், சிறுவருமாகிய விசார சருமருடைய அழகிய கையில்

ஏந்தியிருந்த அழகைப் பெற்ற மழுவாயுதத்தால் தன்னுடைய கால்கள் எறிந்து 'வெட்டப் பெற்று இறந்து போய்த் தான் புரிந்த குற்றம் அகன்று தன்னுடைய உறவினர்களோடு எல்லாப் பொருள்களுக்கும் மூலமும் முதல்வரும் ஆகியகைலாச பதியார் எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தை அந்த முதிய வேதியனும், விசாரசருமருடைய தந்தையுமாகிய எச்சதத்தன் அடையும் பாக்கியத்தைப் பெற்றான்.' பாடல் வருமாறு:

"ஞாலம் அறியப் பிழைபுரிந்து
நம்பர் அருளால் நான்மறையின்
சீலம் திகழும் சேய்ஞலூர்ப்
பிள்ளை யார்தம் திருக்கையில்
கோல மழுவால் ஏறுண்டு
குற்றம் நீங்கிச் சுற்றமுடன்
மூல முதல்வர் சிவலோகம்
எய்தப் பெற்றான் முது மறையோன்."

ஞாலம்-இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். அறிய-தெரிந்து கொள்ளுமாறு. ப்:சந்தி. பிழை-தன்னுடைய புதல்வராகிய விசாரசருமர் மணல்களைக் குவித்துத் தாபித்திருந்த சிவலிங்கப் பெருமானைத் தன்னுடைய கால்களால் உதைத்துத் தள்ளிவிட்டதாகிய குற்றத்தை. புரிந்து-செய்து. நம்பர்-தம்முடைய அடியவர்களுக்கு, 'இவரை வணங்கினால் நமக்குச் செல்வம் சேரும், நல்ல திருமாளிகை கிடைக்கும், பயிர்கள் வளரும் வயல்களைப் பெறலாம், சமயத்தில் உதவிபுரியும் உறவினர்களைப் பெறலாம், இடித்துக்கூறும் நண்பர்களை அடையலாம், நம்முடைய கன்னிகைக்கு நல்ல கணவனைத் திருமணம் புரிந்து கொள்ளும் நன்மையைப் பெறலாம், நம்முடைய புதல்வர்களுக்கு அழகும், நற்பண்புகளும் பெற்ற கன்னிகைகளைத் திருமணம் புரிவதற்கு அடையலாம்' என்பன போன்ற நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய நடராஜப் பெருமானார்.

அருளால்-வழங்கிய திருவருளால். நான்மறையின்-இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களிலும் கூறப் பெற்ற. சீலம்-நல்ல குணங்களும் நல்ல ஒழுக்கமும்; ஒருமை பன்மை மயக்கம். திகழும்-பெற்று விளங்கும். சேய்ஞலூர்-சேய்ஞலூரில் திருவவதாரம் செய்தருளிய. ப்:சந்தி. பிள்ளையார்-சிறுவ ராகிய விசாரசருமர். தம்-தம்முடைய. திருக்கையில்-அழகிய கையில் ஏந்தியிருந்த. கோல-அழகைப் பெற்ற. மழுவால்-மழு ஆயுதத்தால். ஏறுண்டு-தன்னுடைய இரண்டு கால்களும் எறிந்துவெட்டப்பெற்று இறந்து போய். குற்றம்-தான்புரிந்த மேற்சொன்ன பிழை. நீங்கி-அகன்று. ச்:சந்தி. சுற்றமுடன்-தன்னுடைய உறவினர்களோடு; திணை மயக்கம். மூல-எல்லாப் பொருள்களுக்கும் மூலகாரணரும்; திணை மயக்கம். முதல்வர்-முதல்வரும் ஆகிய கைலாசபதியார். சிவலோகம்-எழுந்தருளியிருக்கும் சிவலோகத்தை. முது. அந்த முதிய. மறையோன்-வேதியனும் விசார சருமருடைய தந்தையு மாகிய எச்சதத்தன். எய்த-அடையும். ப்:சந்தி. பெற்றான்-பாக்கியத்தைப் பெற்றான்.

பிறகு உள்ள 59-ஆம் கவியின் கருத்து வருமாறு:

'விசார சருமர் மணல்களைக் குவித்துத் தாபித்த சிவ லிங்கப் பெருமானுடைய ஆலயத்துக்கு வந்து எச்சதத்தன் தன்னுடைய கால்களினால் அந்தப் பெருமானுடைய திருவுரு வத்தை உதைத்துத் தள்ளி விட்டதாகிய அந்த விசார சருமர் புரிந்தருளிய பூசைக்கு இடையூற்றைப் புரிந்த தம்முடைய தந்தையாகிய எச்சதத்தனுடைய கால்களை ஒரு மழுவாயு தத்தால் வெட்டியருளிய சிறிய வேதியராகிய அந்த விசார சருமர் அந்தத் திருமேனியோடு அரனாராகிய கைலாச பதி யாருக்குப் புதல்வர் ஆனார்; இந்த அற்புதமாகிய நிலையைத் தெரிந்து கொண்டவர் யார் இருக்கிறார்? சொல்லப் புகுந் தால் முடிவு இல்லாதவராகிய நடராஜப் பெருமானாரிடம் பக்தியைக் கொண்டிருந்த சிவபெருமானுடைய அடியவர்கள்

புரிந்த செயல்களே தவம் ஆகும் அல்லவோ?' பாடல் வருமாறு:

" வந்து மிகைசெய் தாதைதாள்
மழுவால் துணித்த மறைச்சிறுவர்
அந்த உடம்பு தன்னுடனே
அரனார் மகனார் ஆயினார்;
இந்த நிலைமை அறிந்தார்ஆர்?
ஈறி லாதார் தமக்கன்பு
தந்த அடியார் செய்தனவே
தவமாம் அன்றோ சாற்றுங்கால்."

வந்து-விசார சருமர் மணல்களைக் குவித்துத் தாபித்த சிவலிங்கப் பெருமானுடைய ஆலயத்துக்கு வந்து. மிகை-எச்சதத்தன் தன்னுடைய இரண்டு கால்களினாலும் அந்தச் சிவலிங்கப் பெருமானுடைய திருவுருவத்தை உதைத்துத் தள்ளி விட்டதாகிய அந்த விசார சருமர் புரிந்தருளிய பூசைக்கு இடையூற்றை. செய்-புரிந்த. தாதை-தம்முடைய தந்தையாகிய எச்சதத்தனுடைய, தாள்-கால்களை; ஒருமை பன்மை மயக்கம். மழுவால்-ஒரு மழுவாயுதத்தினால். துணித்த-வெட்டியருளிய. மறைச் சிறுவர்-வேதியச் சிறுவராகிய அந்த விசார சருமர். அந்த உடம்பு தன்னுடனே-அந்தத் திருமேனியோடு. தன்:அசை நிலை. ஏ:அசைநிலை. அரனார்-அரனாராகிய கைலாச பதியாருக்கு. அரன்-ஹரன்; சங்காரம் செய்தருளுபவன். மகனார்-புதல்வர். ஆயினார்-ஆனார். இந்த நிலைமை-இந்த அற்புதமாகிய நிலையை. அறிந்தார்-தெரிந்து கொண்ட மனிதர். ஆர்-யார்இருக்கிறார்? ஒருவரும் இல்லை என்பது கருத்து. சாற்றுங்கால்-சொல்லுமிடத்து. ஈறு-முடிவு. இலாதார் தமக்கு-இல்லாதவராகிய நடராஜப் பெருமானாரிடம்; உருபு மயக்கம். இலாதார்: இடைக்குறை. தம்: அசை நிலை. அன்பு-பக்தியை. தந்த-கொண்டிருந்த. அடியார்-சிவபெருமானுடைய அடியவர்கள்; ஒருமை பன்மை

மயக்கம். செய்தனவே-புரிந்த செயல்களே. தவம் ஆம்-தவம் ஆகும். அன்றோ-அல்லவோ? இது வேற்றுப் பொருள் வைப்பணி.

இந்த சண்டேசுர நாயனார் புராணத்தில் உள்ள இறுதிப் பாடலாகிய 60-ஆம் கவி சுந்தர மூர்த்தி நாயனாருடைய துதியாக இருப்பது. அதன் கருத்து வருமாறு:

'பக்தி நிரம்பியிருந்த தம்முடைய திருவுள்ளத்தோடு நீல நிறம் நிரம்பி விளங்கும் நீல மணியைப் போன்ற திருக்கழுத்தைப் பெற்ற பரமேசுவரனுடைய அடியார்களுடைய பெருமைகளை எல்லா வகையாகிய உயிர்களும் வணங்குமாறு பாட எடுத்துக் கொண்டு இந்தப் பாரத நாட்டில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தை முன் ஒரு காலத்தில் பாடியருளிய திருவாளனாகிய சுந்தரமூர்த்தியினுடைய நறுமணம் கமழும் செந்தாமரை மலர்களைப் போன்ற மென்மையாகிய வெற்றிக் கழலைப் பூண்ட திருவடிகளைப் பணியும்படி அடியேங்களுக்கு உண்டாகிய இந்த மனிதப் பிறவியைப் பணிவோமாக.' பாடல் வருமாறு:

"நேசம் நிறைந்த உள்ளத்தால்
நீலம் நிறைந்த மணிகண்டத்
தீசன் அடியார் பெருமையினை
எல்லா உயிரும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத்
தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க
வந்த பிறப்பை வணங்குவாம்."

நேசம்-பக்தி. நிறைந்த-நிரம்பியிருந்த. உள்ளத்தால்-தம்முடைய திருவுள்ளத்தோடு; உருபு மயக்கம். நீலம்-ஆலகால விடத்தை விழுங்கியமையால் நீல நிறம். நிறைந்த-நிரம்பி விளங்கிய. மணி-நீலமணியைப் போன்ற. கண்டத்து-திருக்கழுத்தைப் பெற்ற. ஈசன்-பரமேசுவரனுடைய. அடி-

யார்-அடியவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம் பெருமையினை-பெருமைகளை; ஒருமை பன்மை மயக்கம். எல்லா உயிரும்-எல்லா உயிர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தொழ-வணங்குமாறு. எடுத்து-எடுத்துக் கொண்டு. த்:சந்தி. தேசம்-இந்தப் பாரத நாட்டில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். உய்ய-உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். த்:சந்தி. திருத் தொண்டத் தொகை-திருத் தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தை. முன்-முன் ஒரு காலத்தில். பணித்த-பாடியருளிய. திருவாளன்-திருபாபுரீசருடைய திருவருளாகிய செல்வத்தை உடையவனாகிய சுந்தரமூர்த்தி. வாச-நறுமணம் கமழும். மலர்-செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். மென்-மென்மையாகிய. கழல்-வெற்றிக் கழலைப பூண்ட திருவடிகளை; ஆகுபெயர். வணங்க-பணியுமாறு. வந்த-அடியேங்களுக்கு உண்டாகிய; இது சேக்கிழார் தம்மையும் வேறு தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பிறப்பை-இந்த மனிதப் பிறவியை. வணங்குவாம்-பணிவோமாக.

மணிகண்டம்: ''மணிபடுகறை மிடறனை.'', ''மணி கொள் கண்டர்.'', ''மணியார் மிடறொன்றுடையான்.'', ''மணிவளர் கண்டரோ.'', ''மணிநீல கண்டம் உடைய பிரான்.'', ''மணியார் திகழ் கண்டம் முடையான்.'', ''கருக்கு மணி மிடறன்.'', ''மணிகொள் மிடறினீர்.'', ''மணி நீலகண்டம் உடையாய்.'', ''கறையார் மணி மிடற் றான் காபாலி.'', ''மையினார் மணிபோல் மிடற்றனை.'', ''மணிமல்கு கண்டத்தீர்.'', ''மையார் மணி மிடறன்.'', ''நீலமாமணி மிடற்று நீறணி சிவன்.'', ''நஞ்சமுது செய்த மணி கண்டன்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனா ரும், ''செழுமணி மிடற்றினர்.'', ''நீலமாமணி கண்டத்தர்.'', ''மணி செய் கண்டத்து மான்மறிக் கையினான்.'', ''மணி நீல கண்டம் உடையார்.'', ''மையாரும் மணி மிடற்றாய்.'',

''கருமணி போற் கண்டத் தழகன்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''மணிப்படுகண்டனை.'', ''மைம்மான மணிநீல கண்டத் தெம் பெருமான்.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''திணமணி நீல கண்டத்தென் அமுதமே.'' என்று திருமாளிகைத் தேவரும், ''மையார் மணி மிடறு.'' என்று நக்கீர தேவநாயனாரும், ''குறியார் மணிமிடற்றுக்கோலம்.'' என்று பரண தேவ நாயனாரும், ''களம் கொண்ட மணிகண்டர் கழல் வணங்கி.'', ''மணியார் கண்டத்தெம் பெருமான்.'', ''மணிவளர் கண்டரோ.'', ''இருளாரும் மணிகண்டர்.'' என்று சேக்கிழாரும், ''மணிமிடற்றண்ணற்கு.'' **(பரிபாடல், 6:7)** என்று வேறு ஒரு புலவரும், ''நீலமணிமிடற்றொருவன்.'' **(புறநானூறு, 91:6)** என்று ஔவையாரும் பாடியருளியவற்றைக் காண்க.



சிறப்புப் பெயர் முதலியவற்றின்

அகராதி

(எண்—பக்க எண்)

அகநானூறு, 173
அக்கினீசுவரர், 144, 146
அக்கினி தீர்த்தம், 146
அங்கங்கள், 473
அங்கண்ண, 119
அசைநிலை, 8, 24, 31, 44, 49, 67, 75, 82, 102, 109, 117, 119, 120, 123, 128, 132, 133, 135, 137, 140, 143, 147, 152, 164, 175, 177, 187, 196, 199, 202, 210, 213, 217, 221, 227, 229, 257, 266, 269, 279, 283, 288, 294, 298, 300, 314, 319, 321, 327, 335, 336, 341, 343, 354, 358, 359, 361, 372, 377, 384, 385, 386, 401, 403, 407, 415, 425, 431, 432, 439, 443, 470, 471, 479, 480, 482, 489, 491-92, 511, 513, 516, 529, 531, 534
அஞ்சு, 21, 168
அஞ்சனாட்சி, 281
அஞ்சுகந்தாடுவார், 168
அஞ்சையப்பர், 236
அணை, 138
அண்ணலார், 80, 81, 142, 255, 312, 334, 423, 428
அத்திகிரி, 309
அதர்வண வேதம், 11, 151, 152, 156, 160, 169, 170, 219, 224, 228, 230—31, 277, 343, 374, 376, 407—8, 420—21, 456, 457, 458, 459, 460, 473, 474, 476, 481, 517
அந்தகேசம், 358, 413
அந்தணருக்குப் பிரமதேவனை உவமை, 175
அபிடேகப் பொருட்கள், 484
அபிராமீச்சரம், 413
அமரீசம், 358, 413
அம்பலத்து, 25, 217
அமரர், 66
அமைச்சர்கள், 119
அம்பலவர், 218, 228

அம்பிகை, 310
அம்மை, 161
அறையாரை, 164
அரமகளிர், 69, 256
அரம்பையர், 254-55
அரனார், 118
அரி, 138
அரிசாபபயம், 358
அரிவாட்டாய நாயனார், 8, 9, 29, 30
அரிவாட்டாய நாயனார் புராணம், 5
அருகந்தர், 106
அருணகிரிநாதர், 96
அலங்காரம், 158
அலவன், 182
அல்லிமலர், 37
அவரோகணம், 60
அவிர்பாகம், 408
அனந்தபத்மநாபேசம், 413
அன்பர், 30
அன்மொழித்தொகை, 27, 29, 240, 336
அனேகதங்காபதம், 358
ஆகவனீயம், 456
ஆகு பெயர், 10, 11, 12, 13, 16, 54, 59, 66, 75, 126, 137, 153, 156, 163, 164, 194, 204, 222, 225, 226, 228, 235, 256, 259, 278, 286, 291, 316, 321, 327, 332, 343, 363, 366, 373, 376, 380, 383, 398, 409, 415, 448, 455, 462, 467, 477, 482, 492, 496, 517
ஆகுதி, 131
ஆகுதிகள் மூவாயிரம், 210
ஆடிப்பூரம், 415
ஆண்டாள், 240, 394
ஆதனூர், 180, 181, 186, 187, 190, 199
ஆதிதேவனார், 341
ஆதிநாயகர், 176
ஆதிபிதேசம், 358
ஆதிபிதீசம், 413
ஆதிபுரீசுவரர், 295
ஆதிலிங்கம், 295
ஆயர், 40—41, 52
ஆயர்கள், 245
ஆரோகணம், 60
ஆவணிமூலத் திருவிழா, 415
ஆறு சாத்திரங்கள், 456
ஆறு தொழில்கள், 474
ஆனந்த தாண்டவ மூர்த்தியார், 227
ஆனாய நாயனார் புராணம், 32
ஆனாய நாயனார், 30, 31, 40, 43, 44, 47, 48, 49, 50-52, 55, 58, 60, 61, 63-65, 68, 71-72, 75-78
ஆனாயர், 56
ஆனித்திருமஞ்சனம், 415
ஆனைக்காப் புராணம், 244
ஆன், 21, 37, 53, 67, 168
இட ஆகுபெயர், 121, 122, 123, 126, 127, 177, 181, 202, 206, 210, 226, 240, 247-48, 257, 266, 274, 281, 298, 304, 308, 310, 316, 319, 351, 450, 457, 466—67, 473, 480, 486, 518, 525
இடபம், 60
இடைக்குறை, 9, 14, 17, 26, 30, 31, 33, 36, 45, 48, 56, 61, 79, 101, 117, 126, 133, 135, 167, 177, 187, 194, 198, 201, 207, 208, 210, 215, 219, 231, 235, 240, 248, 266, 301-2, 304-5, 6, 7, 312, 314, 316, 318, 319, 327, 329,

330, 335, 336, 342, 346, 347,354, 355, 357, 369,370, 375, 385, 386, 388, 416, 427,430, 435, 437, 438, 443, 444, 461, 464, 470, 477, 498, 511, 517, 520
இடைச்சுரநாதர், 255
இந்திரன், 406
இடையர்கள், 45
இட்டசித்தி தீர்த்தம், 360—61
இட்டசித்தீச்சரம், 358, 413
இமயமலை, 169
இயக்கர், 368
இரணியீசம், 358, 413
இரத்தினங்கள், 243
இரவாத்தானம், 359
இருக்குமொழி, 80
இருக்கு வேதம், 11, 151, 152, 156, 160, 169, 170, 219, 224, 228, 230-31, 277, 343, 374, 376, 407-8, 420, 421, 456, 457-58, 459-60, 473, 474, 476, 481, 517
இரேணுகீச்சரம், 413
இலக்கணக்கொத்து, 250
இழிந்த குலங்கள், 349
இளங்கோவடிகள், 337
இளம்பெருமான் அடிகள், 337
இறவாத்தானம், 413
இறவுளர், 248
ஈசர், 206
ஈசுவரர், 340
ஈற்றசை நிலை, 11, 25, 76, 116, 127, 142, 148, 149, 151, 226, 240, 272, 331, 340, 355, 357, 360, 363, 365, 369, 378, 381, 441, 498, 501, 509, 531
உத்தரகாண்டம், 87, 89, 212, 253, 264, 294, 344, 396, 404
உமாபதீசுவரர், 266
உமை, 175
உமைபாகர், 380
உமையம்மை, 266
உம்பர், 256, 326 330,
உருத்திரங்கண்ணனார், 243, 250
உருத்திர பசுபதி நாயனார், 164, 165, 169, 170, 173
உருத்திர பசுபதி நாயனார், புராணம், 166
உருத்திரம், 170, 175, 177
உருத்திராக்க மாலை, 134
உருபு மயக்கம், 55, 58, 97, 110, 159, 171, 174, 187, 195, 198, 199, 210, 227, 233, 262, 314, 319, 327, 332, 355, 358, 360, 385, 438, 502, 510, 516,541, 546
உயர்ந்த குலங்கள், 349
உலகாணி, 353
உவம ஆகுபெயர், 7, 8, 170, 245, 248, 290, 331, 336, 376-77, 384, 390, 407, 415, 432
ஊழிக்காலம், 141
எச்சதத்தர், 475
எச்சதத்தன், 470 - 71,517-18, 521, 524, 525, 529, 531-32, 533
எச்சத்திரிபு, 29
எட்டுத் திசைகள், 78, 429, 442
எந்தையார், 370
எம்பெருமான், 126, 207
எயிற்றியர், 304
எழுகடல், 74
ஏகம்பம், 324
ஏகம்பர், 343
ஏகாம்பரநாதர், 308
ஏகாம்பரம், 450
ஏகாம்பரேசுவரர், 308,311-12,

320, 332, 335, 338-39, 342, 343, 345, 348, 355, 358, 367, 369, 377, 379, 389, 409, 414, 415, 417, 425-26, 440, 441, 447, 449
ஏகாம்பரேசுவரர் கோயில், 413
ஏகாம்பரேசுவரன், 311-13, 317, 334, 346, 423, 433
ஏயர்கோன் கலிக்காம நாயனார், 200
ஏலவார் குழலி, 308
ஏழு கடல்கள், 332
ஏழு சுவரங்கள், 48, 70
ஏறு, 163
ஐங்குறுநூறு 19, 60, 250
ஐந்து இந்திரியங்கள், 75, 140, 456, 472
ஐந்து ஊர்கள், 467
ஐந்து எழுத்துக்கள், 48, 57, 61, 62, 65, 77, 159, 160, 161, 322-23, 467, 469
ஐந்து திருமுகங்கள், 474
ஐந்து துறைகள், 62
ஐம்பால், 7
ஐயரே, 219
ஐயர், 29
ஐயன் 134
ஐயன் ஆரிதனார் 379,
ஒருமை பன்மை மயக்கம், 5, 6, 7, 8, 9, 10, 11, 13, 14, 15, 16, 17, 18, 20, 21 26, 27, 29, 31, 32, 40, 44, 48, 50, 52, 57, 60, 62, 66, 70, 73, 80, 82, 90, 103 109, 115, 117, 121, 128, 148, 156, 167, 170, 174, 181, 187, 191, 197, 201, 213, 217, 221, 222, 225, 231, 235, 240, 242, 243, 245, 246, 249, 253, 255, 256, 259, 261, 262, 267, 271, 278, 286, 290, 298, 301, 305, 307, 312, 314, 325, 327, 332, 339, 342, 345, 347, 349, 351, 353, 355, 356, 361, 364, 365, 371, 374, 375, 380, 381, 382, 383, 387, 390, 397, 399, 401, 406, 410, 417, 418, 421, 424, 425, 429, 442, 444, 454, 457, 458, 462, 465, 467, 469, 470, 473, 474, 475, 477, 480, 482, 489, 490, 493, 496, 500, 502, 505, 509, 514, 518, 525, 526, 531, 539
ஒரே பொருளில் வரும் பல சொற்கள், 158
ஓதம், 128, 141
ஓமதேனு, 462
கச்ச பேசம், 413
கச்சி ஏகம்பம், 308
கச்சிக்காரோணம், 413
கச்சிமயானம், 413
கடியலூர் உருத்திரங் கண்ணனார், 264
கடைக்குறை, 12, 25, 40, 47, 70, 80, 102, 135, 154, 172, 228, 231, 241, 255, 266, 281, 310, 312, 317, 321, 324, 352, 370, 384, 426, 457
கடைஞர், 191, 194
கணநாதர், 78
கணமங்கல், 5
கண்டராதித்தர், 169, 263, 486
கண்ணீசம், 413

கண்ணுதலார், 77
கந்தருவர், 368
கபாலீசுவரர், 298
கபில தேவ நாயனார், 43, 86, 100, 444
கபிலர், 264
கபோலமதம், 123, 365-66, 409
கந்தர் அலங்காரம், 454
கம்பராமாயணம், 208
கமரில், 27
கம்பலை, 172
கம்பாநதி, 308, 332, 339
கம்பை, 328
கம்பையாறு, 356
கயல்கள், 153
கயிலாயம், 358, 413
கம்பர், 28, 80, 87, 96, 173, 175, 289, 312, 326, 327, 338, 339, 379, 382, 398, 415
கரம் தரும் பயன் பூசை புரிதல், 331
கரிகாற் பெருவளத் தான், 372
கருணைநாயகி, 281
கருந்தாழ் குழலியம்மை, 146
கரும்பிள்ளை பூதனார், 96
கருவூர்த்தேவர், 211, 389
கலித்தொகை, 19
கலிய நாயனார், 295
கழச்சியர்கள், 303
கவந்தரீசம், 413
கழல், 222, 228
கற்பகாம்பாள், 298
கற்புடைய மகளிருக்கு அருந்ததி உவமை, 19
கனகவரையில், 156
கனம் குழை, 333
கன்னமதம், 123, 365-66, 409
கன்னி, 356
காஞ்சி, 316, 375, 376
காஞ்சித் தானம், 356
காஞ்சீபுரம், 240,307-8, 309, 316, 351, 359, 365, 372, 429
காஞ்சி மாநகரம், 308, 372, 381
காஞ்சியாறு, 355
காணபத்தியம், 372
காந்தாரம்,60
காமர், 138
காமக்கோட்டம், 309, 353, 354, 358, 413
காமாட்சி அம்மை, 230, 309, 320, 323, 328, 329, 330, 333, 342, 346, 371, 375-76, 389
காமாட்சி அம்மையார், 308, 309, 310, 312
காமாட்சியம்மை, 308, 331, 335, 369
காருகபத்தியம், 456
காரோணம், 358
காரைக்கால் அம்மையார், 389
கார்காலம், 53
கார்த்திகை தீபத் திருவிழா, 415
காவிரி ஆறு, 5
காவாலி, 443
காலமயக்கம், 217, 259, 457
காளத்தி நாதர், 253
கின்னரர், 70
குடி, 83
குடிமக்கள், 40
குந்தவைப்பிராட்டி, 467
குபன், 281
குபேரன், 362, 412, 414
குமரக்கோட்டம், 309, 358, 413

குமாரமுனிவர், 255
குலோத்துங்கச் சோழன்,466
குவலயம், 177
குழை, 8
குளகம், 17, 21, 25, 46, 47, 49, 50, 51, 57, 58, 61, 64, 67, 103, 108, 110, 115, 123, 125, 126, 133, 138, 140, 156, 157, 169, 172, 196, 198, 206, 3 0, 314, 319, 342, 345, 431, 434, 479, 480, 493, 496, 502, 509, 528, 535, 538
குழக்கன்று, 37
குளம், 154
குறவர், 243
குறவர்கள், 242
குறிஞ்சி, 301
குறிஞ்சிப் பாட்டு, 264
குறிஞ்சி நிலம், 241, 248
குற்றியலிகரம், 308
கூடலூரர் பல் கண்ணனார், 382
கூத்தர், 227
கூத்தனார், 78
கொங்குவேளிர், 28, 59,87, 89, 96, 212, 241, 250, 264, 293, 333, 379, 382, 394, 404
கொங்கைக்கு மலை உவமை, 337
கொடிப்பாலை, 61
கொடியிடை நாயகி, 262
கொடுங்கோளூர், 235, 236
கொன்றை மலருக்குத் தங்கம் உவமை, 204
கோணப்பிரான், 146
கோமயம், 168
கோஜலம், 168
கௌமாரம், 372
சகிதேவி அம்மை, 455
சகோதர தீர்த்த தானம், 358
சங்கங்கள், 129
சங்கம், 92
சங்கரன், 117
சங்கநிதி, 7, 412, 414
சடாபாரம், 134, 139
சடை, 27, 61, 77, 82, 134
சடையவர், 281
சடையார், 74, 174
சச்சபேசம், 358
சடையான், 107, 108
சட்ஜம், 60
சங்கதீர்த்தம், 257
சமணர்கள், 132, 138
சமண், 108
சங்கவாத்தியங்கள், 129
சங்கிலிநாச்சியார், 295
சண்டேசர், 543
சண்டேச நாயனார் புராணம், 453
சத்ததானம், 358, 413
சத்தியகிரீசுவரர், 455
சந்தனக்காப்பு, 103
சந்தி, 8, 9, 11, 13, 14, 16, 17, 18, 19, 21, 24, 25, 27, 29, 30, 31, 32, 48,50, 54,57,60, 62, 66, 70, 73, 76, 79, 82, 90, 97, 103, 109, 116, 122, 126, 128, 130, 131, 132, 134, 137, 145, 154, 163, 167, 174 181, 187, 191, 199, 202, 206, 207, 211, 213, 218, 221, 222, 225, 231, 245, 254, 256, 259, 261, 268, 271, 278, 283, 285, 289, 295, 297, 300, 307, 311, 314, 319, 323, 325, 327, 331, 333, 335, 336, 339, 345, 347, 349, 351,

353, 355, 356, 361, 363, 366, 370, 374, 375, 376, 380, 382, 384, 385, 387 390, 397, 400, 401, 407, 409, 410, 412, 414, 415, 418, 423, 427, 429 433, 435, 440, 444, 445, 446, 455, 459, 462, 465, 466, 469, 470, 476, 478, 488 496, 499, 500, 502, 509, 510, 512, 514 522, 525, 531, 533, 539
சமயங்கள் ஆறு, 372
சமிதை, 462
சராசங்கரன், 48
சாக்தம், 373
சாதனம், 279
சாந்தாசயம், 358, 413
சாம வேதம், 11, 151, 152, 156, 160, 169-70, 219, 224, 228, 230-31, 277, 343, 374, 376, 407-8, 420-21, 456-60, 473-74, 476, 481, 517
சாம்பன், 362
சாரணர், 70
சாலி, 14
சிதம்பரம், 212, 213, 216, 308
சிவபெருமான் ஆனைந்தில் ஆடுதல் 485
சித்தர், 368
சித்திரா பௌர்ணமி திருவிழா, 414
சித்தீசம், 358, 413
சிலப்பதிகாரம், 19, 337
சிவகெங்கை, 308
சிவகாமசுந்தரி, 534
சிவத்தலங்கள், 358
சிவத்தலம், 90
சிவநேசச் செட்டியார், 298
சிவபெருமான், 234-5, 488
சிவபெருமான் அழகியவர், 388
சிவபெருமானார், 11, 14, 29 41, 175, 473
சிவபெருமான் ஆகமங்களை அருளிச் செய்தல், 315
சிவபுரி, 177
சிவமே, 132
சிவலோக நாதர், 199, 200, 201, 203
சிவலோகநாதன், 203, 204, 212
சிவாச்சாரியார், 203
சிவாத்தானம், 358, 413
சிறுத்தொண்ட நாயனார், 232
சிறுபாணாற்றுப்படை, 59, 264
சீவக சிந்தாமணி, 19, 59, 89, 92, 96, 212, 250, 264, 288, 293, 343, 395, 404,
சீறூர், 245
சுக்கிராச்சாரியன், 361
சுரும்பு, 5, 172
சுந்தரமூர்த்தி நாயனார், 80, 81, 82, 86, 88, 95, 98, 146, 150, 159, 169 200, 205, 263, 288, 295-6, 309, 327, 388, 392, 404, 441, 449, 452, 486, 504
சுந்தரேசப் பெருமானார், 137
சுப்பிரமணியக்கடவுள், 455
சுயம்பு மூர்த்தி, 299
சுரகரீசம், 358, 413
சுருதி, 156
செங்கண் விடை, 504
செங்கதிர், 119
செங்கமலம், 172

செஞ்சடை, 10
செஞ்சாலி, 16
செந்தாமரை மலருக்கு
நெருப்பு உவமை, 172
செந்நெல், 6
செல்வி, 352
சேக்கிழார், 18, 31, 59, 80, 81, 86, 88, 95, 97, 109, 142, 158, 164, 168, 169, 172, 175, 205, 228, 231, 236, 250. 293, 307, 315, 317, 323, 325, 329, 347, 350, 389, 404, 433, 441, 451, 479, 486, 501-2, 504, 507, 537
சேந்தனார், 80
சேய்ஞலூர், 453, 455, 466, 467
சேரமன்னர், 236
சேரமான் பெருமாள்
நாயனார், 86, 88, 234, 236, 337, 343, 392
சேரனார், 235
சேவடி, 171, 177
சைவ ஆகமங்கள், 475
சைவ ஆகமம், 328
சைவம், 133, 139, 372
சொக்கநாயகி, 299
சொக்கநாயகி அம்மை, 200
சோழச் சக்கரவர்த்தி, 373
சோதி, 27
சோலை, 168
சோமசுந்தரக் கடவுள், 125
சோமசுந்தரப் பெருமானார், 96
சோமசுந்தரன், 112
சோழர்கள், 144
சௌரம், 372
க்ஷேத்திரவெண்பா, 308
ஞானபுரீசர், 254, 255
தக்கன், 362
தக்கீசம், 358, 413
தக்கோலம், 266
தடாகம், 154
தணிகைப் புராணம், 243
தண்டமிழ், 90
ததீசி, 281
ததீசிமுனிவன், 361
தமிழ்நாடு, 105
தலைவர், 55
தவசியார், 439-40, 444, 446
தூட்சிணாக்கினி, 456
தாமம், 56
தாயனார், 9, 10, 12, 15, 16, 20, 24-26, 28, 29
தாரகாட்சன், 425-26
தாரம், 61
தாள், 101
தானம், 46
தான்தோன்றீச்சரம், 358, 413
திணை மயக்கம், 8, 27, 53, 82, 102, 108, 111, 117, 121, 122, 127, 129, 132, 138, 145, 162, 170, 187, 219, 220, 222, 224, 231, 232, 235, 246-48, 268, 285, 319, 320, 321, 323, 331, 336, 345, 354, 390, 397, 415, 417, 420, 434, 471, 483, 500, 516
தியாகேசர், 295
திருஊறல், 265-66
திருஏகம்பம், 358
திருக்கழுக்குன்றம், 257
திருக்காளத்தி, 253
திருக்குறள், 101, 264, 333
திருக்குறிப்புத்தொண்ட
நாயனார், 228-30, 309, 426-33, 436, 438-51

திருக்குறுந்தொகை, 284
திருச்சிற்றம்பலக்கோவை, 250
திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், 27, 41, 42, 85, 88, 94, 98, 150, 158, 160, 169, 172, 175, 211, 240, 250, 263, 278, 290, 293, 296, 298, 299, 310, 312, 315, 325, 378, 388, 392, 398, 404, 441, 444, 445, 485, 504, 506, 537
திருத்தக்கதேவர், 19, 59, 85, 89, 96, 212, 250, 264, 288, 293, 343, 404
திருத்தலையூர், 166-68
திருத்தாண்டகம், 296
திருத்தொண்டர், 201, 216
திருநாவுக்கரசு நாயனார், 28, 86, 95, 98, 146, 150, 158, 169, 205, 250, 263, 284, 288, 295, 299, 312, 325, 331, 392, 398, 404, 441, 448, 486, 504, 507, 537
திருநாளைப் போவார் நாயனார், 178, 200, 226, 227
திருநாளைப்போவார் நாயனார் புராணம், 180
திருநெறிக்காரைக்காடு, 413
திருப்பாசூர், 283
திருப்பள்ளித்தாமம், 153-54
திருப்பாட்டின், 150
திருப்புகலூர், 143, 145, 153
திருப்புன்கூர், 199
திருப்பெரும் மங்கலம், 201
திருமங்கலம், 39, 40
திருமங்கையாழ்வார், 28, 89, 211, 264, 290, 293, 325, 337, 343, 379, 381, 394, 404
திருமஞ்சனம், 485, 513
திருமழிசை ஆழ்வார், 88, 211
திருமன்றில், 224
திருமாற்பேறு, 281
திருமாலார், 9
திருமுருகாற்றுப்படை, 96, 250
திருமுல்லைவாயில், 261, 262
திருமூலர், 99, 169, 240 263, 338, 343, 389, 392, 441, 449, 507, 537
திருமேற்றளி, 358
திருமேனியர், 265
திருவரங்கமுதனார், 404
திருவல்லம், 278-79
திருவள்ளுவர், 264, 333
திருவள்ளூர், 298
திருவாசகம், 95, 197
திருவாலவாயுடையார், 96
திருவாலவாய், 136
திருவாவியமுதனார், 389
திருவாளன், 63
திருவான்மியூர், 297, 299
திருவிடைச்சுரம், 254, 255
திருவிளையாடற் புராணம், 290, 337
திருவெவ்வளூர், 283
திருவெங்கடமாலை, 337
திருவொற்றியூர், 294-95,
திருவோணகாந்தன் தளி, 358, 413
தில்லை, 178, 206, 208
தில்லைவாழ் அந்தணர்கள், 210, 216, 217-21, 223, 225, 226
தினகரமண்டலம், 184
தீர்த்ததானம், 358
துச்சருமேனன், 362

துடியிடை, 27
துணர், 10
துந்துபி, 222
துவிஜர்கள், 456
தேடும்கழலார், 137
தேர்வார், 120
தேவாரம், 282, 445
தேவர்பிரான், 197
தேன் நிறைந்த மலர் இதழி, 448
தைவதம், 60
தொகுத்தல் விகாரம், 124, 360, 516
தொண்டமான் சக்கரவர்த்தி, 262
தொண்டர், 21, 75, 126, 157
தொண்டைநாடு, 232, 235, 239
தொண்டையங்கனி, 325
தொண்டைவளநாடு, 256
நகரேஷு காஞ்சி, 309
நக்கீரதேவ நாயனார், 86, 250, 389, 392
நக்கீரர், 96, 250, 293, 393, 441, 507
நக்கீரனார், 212, 382
நங்கை, 325
நடராஜப் பெருமானார், 28, 76-78, 113-15, 214, 216, 218-20, 225, 482, 486, 488, 529
நடராஜப் பெருமான், 25, 128-29, 135
நதி ஓடும் நாடு, 32
நந்தனார், 193-95, 197, 198, 201-3, 206-10, 212, 214, 216, 218-23
நம்பியாண்டார் நம்பி, 95, 100, 200
நம்மாழ்வார், 28, 86, 264, 325, 394
நல்ல மங்கல தீர்த்தம், 360
நல்லூர் நத்தத்தனார், 59, 264, 337
நல்லோர், 118
நவக்கிரகீசம், 413
நவமணி, 398
நவரத்தினங்கள், 130, 396
நவராத்திரி விழா, 45
நற்றவ வேந்தர், 135
நற்றிணை, 173, 382
நாகராஜாக்கள், 353
நாதர், 279
நாயகர், 345, 408
நாயகன், 314
நாயனாருக்குக் கன்றுக்குட்டி உவமை, 501
நாரசிங்கீசம், 358, 413
நால்வர், 150
நான்கு சாதிகள், 417
நான்மறை, 278
நிஷாதம், 60
நீர் நாடு, 33
நீலி, 233
நீலோற்பல மலர்கள், 7
நீவா, 279
நீற்றற்ற, 346
நூல், 46
நெடுநல்வாடை, 212, 382
நெய்தல், 248
நெய்தல் நிலம், 248, 285
நெருப்புக்கள், 456
நேரிழை, 240
பங்கயமாநிதி, 7
பங்கனார், 170
பங்குனி உத்திரத் திருவிழா, 415
பசுபதி நாயகி அம்மை, 283
பசுபதியார், 165, 170

பஞ்சகவ்வியம், 21
பஞ்ச கவ்வியங்கள், 492
பஞ்சமம், 60
பஞ்சாட்சரம், 48, 160, 467
படம் பக்கநாதர், 295
படையார், 178
பட்டினத்துப் பிள்ளையார், 95, 100, 250, 295, 333, 389, 393, 404
பட்டினப்பாலை, 243, 264
பணாதரீச்சரம், 358, 413
பதிற்றுப்பத்து, 379
பதுமநிதி, 7, 412, 414
பதுமாட்சன், 282
பத்தினியார், 70
பயோதரம், 54
பரசிராமீச்சரம், 413
பரணதேவ நாயனார், 100, 337
பரமர், 159
பரமேசுவரர், 205
பரனே, 27
பராசரேசம், 358, 413
பரிபாடல், 250
பரிபாடல் திரட்டு, 91, 96, 333
பலபத்திர ராமீசம், 358, 413
பலவகையாகிய திருவிழாக்கள், 415
பலவகையான பறவைகள், 172
பலவகையான மரங்கள், 168
பவம் தீர்ப்பவர், 97
பழயவனே, 26
பழைய நூல், 232
பள்ளிகள், 35
பாசுரம், 146, 147
பாசூர் நாதேசுவரர், 282
பாடி, 246
பாண்டவ வீசம், 413
பாண்டி நாடு, 83, 84
பாரதியார், 57, 72, 90
பார்வதிதேவி, 26, 145
பாவை, 12
பிஞ்ஞகர், 221
பித்தன், 451
பிரமக் கபாலத்தை ஏந்தியவர், 444
பிரயோக விவேகம், 250
பிராட்டி, 327, 350
பிரான், 26, 48, 318, 350, 513
பிள்ளையார், 163
பிறவாத்தானம், 413
பிறைக்கண்ணி, 185
பீஜமதம், 123, 365-66, 409
புகலூர், 143, 152
புண்ணிய கோடீசம், 361, 413
புண்ணிய கோயசம், 358
புண்ணிய தீர்த்தம், 360-61
புண்ணியனார், 81
புராணன், 27
புலைச்சேரி, 187, 193
புலைப்பாடி, 188
புறப்பொருள் வெண்பா மாலை, 379
புறநானூறு, 19, 173
புனல், 110
புனிதர், 506
புன்கூர், 201
புன்னைமரம், 146
புன்னைப் பொன் அவிழ்த்தல், 290
பூதத்தாழ்வார், 289
பூம்பாவை திருப்பதிகம், 298
பூம்புகலூர், 144
பூசைக்கு வேண்டிய பொருட்கள், 329
பெண்களின் இடுப்புக்கு உடுக்கு உவமை, 27, 87, 89

பெண்களின் கண்களுக்கு மான் கண்கள் உவமை, 263
பெண்களின் திருவடிகளுக்குத் தளிர் உவமை, 327
பெண்களின் தோளுக்கு மூங்கில் உவமை, 85
பெண்களின் முகங்களுக்கும் குளங்களுக்கும் சிலேடை, 8
பெண்களின் வார்த்தைகளுக்குப் பண் உவமை, 88
பெண்களின் வார்த்தைகளுக்குத் தேன் உவமை, 293
பெண்ணி நல்லாள் அம்மை, 257
பெண்ணின் நல்லவள், 313
பெண்ணின் நெற்றிக்கு வில் உவமை, 338
பெண்மணிகளுக்கு மயில் உவமை, 249
பெண்மணிக்கு அமுதம் உவமை, 343
பெண்மணிக்குப் பாவை உவமை, 390
பெரிய கம்பர், 308
பெரிய சிவத்தலம், 358
பெரியவர், 30
பெரியாழ்வார், 333, 337
பெருங்கதை, 28, 59, 91, 96, 173, 212, 241, 264, 289, 293
பெருமாக்கோதையார், 235, 236
பெருமானார், 216
பெருமான், 45, 150, 163, 204, 218
பெரும் கௌசிகனார், 212, 379, 382
பெரும்பாணாற்றுப்படை, 19, 91, 172, 250
பெருங்கதை, 333, 379, 382, 394, 404
பேயுடன் ஆடுபிரான், 42
பேரிகை, 187
பொய்கை, 154
பொருநராற்றுப்படை, 250
பொன்னி, 5
போர்வை, 197
மகளிர் தங்கள் பாதங்களில் செம்பஞ்சுக் குழம்பைப் பூசிக்கொள்ளுதல், 403
மகளிர் பந்துகளைக் கொண்டு விளையாடுதல், 94
மகளிர் புருவத்துக்கு வில் உவமை, 398
மகாதேவர், 30, 31
மகாலிங்கேச்சரம், 413
மகிழமரம், 295
மங்கல வாத்தியங்கள், 135
மச்சீசம், 413
மடக்கொடியம்மை, 255
மணிகண்டம், 548
மணிகண்டீசம், 413
மணிகண்டீச்சரம், 358
மணிகண்டேசுவரன், 281-82
மண்ணியாறு, 453-55
மதிலுக்கு மலை உவமை, 378
மதுகரங்கள், 149
மதுரகவியாழ்வார், 211
மதுராபுரி, 97
மதுரை, 96, 127
மதுரைக் காஞ்சி, 59, 173, 212, 250, 264, 382, 394
மத்திமம், 60

மயிலாபுரி, 298
மயிலாப்பூர், 297-98
மருத நிலம், 248
மருதம், 248
மருந்தீசுவரர், 299
மலர், 167
மலைச் சொக்க
நாயகி, 257
மலைபடுகடாம்,
212, 379, 382
மலை மடந்தை, 320
மலையாள், 145
மழவிடை, 79
மள்ளர், 6
மறிகரத்தார், 441
மறை, 17, 175, 219
மறைகள், 161
மறையவர், 279
மறையவர்கள், 220
மறையோர்,152, 218
மன்றில், 14
மன்றுள், 29
மாங்குடி மருதனார்,
173, 212, 250, 264, 382
மாசாத்தன் தளி, 413
மாசிமகத்திருவிழா, 415
மாசிலாமணி ஈசுவரன்,
261-62
மாடு, 136
மாணிக்கங்கள், 412
மாணிக்க வாசகர்,
28, 41, 42, 80, 86,
95, 99, 150, 159,
205, 257, 263, 288,
294-95, 315, 337,
389, 392, 404, 444
மாதங்கம், 128
மாது, 341-42
மாமரம், 308
மாயனார், 171
மார்பர், 158
மால்மணங்கீசுவரர், 281
மாளிகைக்கு மலை
உவமை, 211
முக்கண், 108
முக்கண்ணர், 450
முடத்தாமரைக் கண்ணி
யார், 250
முடியார், 61, 204, 430
முதல் நிலைத் தொழிற்
பெயர், 111, 150, 210
முதல்வர், 12, 152
முதல்வனார், 31, 79
முதற்பண், 61
முத்தீசம், 358, 413
முப்புராரிக்கோட்டம்,
358, 413
முப்புரி, 217
முருகக் கடவுள், 309
முருக நாயனார், 142,
146, 151, 153-54, 157-60
முருக நாயனார்
புராணம், 144
முருகப் பெருமான், 262
முருகனார், 152, 165
முல்லை, 247
முல்லை நிலம், 37, 241, 248
முறுவல், 156
முற்றெச்சம், 69, 79,
123, 196, 201, 206,
207, 210, 321, 523, 525
முனைவார், 18
முன் பின்னாகத் தொக்க
தொகை, 409
மூதூர், 39, 92, 125, 147
மூர்க்கன், 119
மூர்த்தி நாயனார், 100-1,
109, 111-12, 116, 125-26,
131-32, 134-35, 141
மூர்த்தி நாயனார்

புராணம், 83
மூர்த்தியார், 139
மூன்று அசுரர்கள், 425-26
மூன்று அடையாளங்கள், 139-40
மூன்று உலகங்கள், 353, 449
மூன்று தமிழ்கள், 92
மூன்று மதங்கள், 123, 409
மூன்று மலங்கள், 437
மேதக்கவர், 529
மேலவர், 348
மேல்மழநாடு, 32
மேற்காநாடு, 180
மௌலி, 145
யஜுர் வேதம், 11, 151-52, 156, 160, 169-70, 219, 224, 228, 230-31, 277, 343, 374, 376, 407-8, 420-21, 456-60, 473-74, 476, 481, 517
யோகர், 132
யோகாச்சாரியர்தளி, 413
யோகியர்கள், 131
யோனி, 372
வடிவுடையம்மை, 295
வடுக்கறுநாடர், 104, 117
வடுவகிழ்கண்மங்கையர், 288
வடுவச்சேணீசம், 358, 413
வண்டுகள் தாதை உண்ணுதல், 59
வம்சம், 59
வயிரவீசம், 358, 413
வரதராஜப் பெருமான், 363
வரால், 172
வரால் மீன்கள், 172
வர்த்தமானேசுவரர், 161
வலம்புரி விநாயகர், 366
வலம்புரி விநாயகர் ஆலயம், 358, 413
வலைச்சியர்கள், 303
வலையர்கள் சுறாமீனி னுடைய கொம்பை நட்டு தெய்வத்தை வணங்குதல், 243
வல்ல நாதேசுவரர், 278-79
வல்லாம்பிகையம்மை, 279
வல்லாளன், 279
வளங்கள், 40
வளம், 181
வள்ளலார், 502
வன்மீகநாதர் ஆலயம், 358, 413
வாணன், 425-26
வாணீசம், 358, 413
வாயிலார் நாயனார், 298
வானவர், 358
விக்ரமசோழ தேவன், 467
விசாரசருமர், 473, 476, 478-81, 489, 490-93, 496, 498, 501-2,511, 514, 518, 523, 524, 529-31, 545
விசார சருமன், 521, 522, 526,
விஞ்சையர், 70, 368
விடை, 77
விடைமேல், 153
விடையார், 108, 253, 503, 539,
விடையாள், 170
விண்ணவர்கள், 80
வித்யுன்மாலி, 425-26
விபூதி, 41
விமலர், 537
விருதுவித்தலம், 308
வினையாலணையும் பெயர், 37, 172, 207, 272-73, 279, 307, 339, 363, 372, 387, 403, 406, 407, 417, 525, 531
வீதிக்கு ஆறு உவமை, 382
வீரராக வீசம், 358, 413
வீராட்டகாசம், 413

வேடவர்கள், 248
வேணி, 139, 145
வேணிமுடி, 222
வேணியார், 311
வேதகிரீசுவரர், 256-57
வேதங்களினுடைய
அங்கங்கள், 473
வேய், 46,52
வேழத்தரசு, 127
வேள்வியினால் மழை
பெய்தல், 278
வைணவம், 372
வையம், 134
ஹரிசந்திரபுரம், 281